உ

சிவமயம்.

ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர் அருளிச்செய்த

சிவஞானசித்தியார் சுபக்கம்

மூலமும்,

3226

இதற்கு

திருக்கைலாயபரம்பரைதிருவாவடுதுறைஆதீனத்துத்

திராவிட மாபாடியகர்த்தராகிய

மாதவச் சிவஞானயோகிகள் அருளிய

உரையைத் தழுவி

திருவாவடுதுறை ஆதீன சைவப் பிரசாரகரும்

தேவகோட்டைசிவாகமசித்தாந்தபரிபாலனசங்கத்துச்

சித்தாந்தசாத்திர போதகருமாகிய

தூத்துக்குடி

பொ. முத்தையபிள்ளை எழுதிய

பொழிப்புரை முதலியனவும்.

இவை

தேவகோட்டை திருவாளர்களாகிய மெ. வகைச்

சீரஞ்ஞோத்தாரண நிதியின் பொருளுதவி கொண்டு

ஷை போ. முத்தையபிள்ளையால்

காரைக்குடி ஊழியன் அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பெற்றன.

இரண்டாம் பதிப்பு.

 1926. [விலை ரூ 2—8—0.

பொருளடக்கம்.

க. இரண்டாம் பதிப்பு முகவுரை.

உ. முதற் பதிப்பு முகவுரை.

ங. உரிமையுரை.

ச. நூலாசிரியர் வரலாறு.

ரு. இயல் சூத்திர அகராதி.

சா. உரைப்பாயிரம்.

எ. நூல்.

அ. மாயாகாரியப் படம்.

கூ. தாத்துவிகப் படம்.

க0. அத்துவப்படம்.

கக. பாட்டு முதற் குறிப்பகராதி.

கஉ. விஷய அகராதி.

கங. அருஞ்சொற் பொருளகராதி.

கச. மத அகராதி.

கரு. மேற்கோளகராதி.

கசா. பிழை திருத்தம்.

உ

சிவமயம்.

இரண்டாம் பதிப்பு.

முகவுரை.

சிவபெருமான் றிருவருளால் முதற் பதிப்பை அன்பர்கள் ஏற்று என்னை ஊக்குவித்தமையால் இரண்டாம் பதிப்பு வெளிவர நேர்ந்தது. பண்டிதமணியாகிய திருவாளர் மு. கதிரேசச் செட்டியாரவர்கள் மிக அழகாக எழுதியுள்ள முதற்பதிப்பு முகவுரையே இதற்கும் முகவுரையாகுமாதலின், இப்பதிப்புச் சம்பந்தமான சில விஷயங்களை மாத்திரம் இங்கே முகவுரையாகத் தெரிவிக்கின்றேன்.

முதற் பதிப்பில் பொழிப்புரைமாத்திர மெழுதிச் சிற்சில இடங்களில் விசேடக்குறிப்பு எழுதியுள்ளேன். இப்பதிப்பில் ஒவ்வொருசெய்யுளுக்கும் மாதவச்சிவஞான யோகிகளருளிச்செய்துள்ள குறிப்புக்களனைத்தும் விளக்கப்பெற்றிருக்கின்றன.

அளவையிலக்கணத்து இறுதிச்செய்யுளில் கூறப்பட்ட அநுமானக்குற்றம் அறுபத்தைந்தும் உதாரணத்துடன் விளக்கப் பெற்றிருக்கின்றன.

பாதிவிருத்தமென்று பாராட்டப்பெற்ற ஸ்ரீ தாயுமான சுவாமிகளுக்கு இச்சிவஞான சித்தியே உபதேசிக்கப் பெற்றதென்பதும் பாதிவிருத்தமிதுவென்பதும் எட்டாஞ் சூத்திரத்து ௩௦-வது செய்யுளிற் காட்டப்பெற்றிருக்கின்றன.

பன்னிரண்டாஞ் சூத்திரத்துள்ள திருக்கோயிலுள்ளிருக்குமென்றற்றொடக்கத்துச் செய்யுளின் கருத்தைக் காட்டக்கூடிய திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்தையெடுத்துக்காட்டிச் சித்தியாருக்குந் தேவாரத்திற்குமுள்ள சம்பந்தம் விளக்கப் பெற்றிருக்கின்றது.

உ

முகவுரை.

மாயாகாரியப்படம், தாத்துவிகப்படம், அத்துவப்படம், விஷய அகராதி, அருஞ்சொற் பொருளகராதி, மத அகராதி மேற்கோளகராதி யென்னுமிவைகள் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

பிழை திருத்தத்திற்கண்ட சில முக்கிய விஷய [illegible]ளையேனும் முன்னரே திருத்திக்கொண்டு ஆராயும் வண்[illegible]மும், எழுதப் பெற்ற விஷயங்களில் பிழை காணப்படின் அத[illegible]த்தயவுசெய்து எனக்குத் தெரிவிக்கும்படிக்கும் அன்பர்க[illegible]ப் பன்முறையும் வேண்டுகிறேன்.

நன்றிகூறல்.

அநுமானக் குற்றம் அறுபத்தைந்தும் விளக்குதற்கான ஆராய்ச்சியில் துணையாயிருந்து உதவிபுரிந்த எனது ஆப்தரும் சிவாகம சங்கத்துச் சமஸ்கிருததருக்க பண்டிதருமாகிய பிரம்ம ஸ்ரீ நா. கிருஷ்ண சாஸ்திரிகளவர்கட்கும், [illegible]பதிப்பு அச்சிடு தற்குப் பொருளுதவிபுரிந்த தேவகோட்டை திருவாளர் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்கள், தி[illegible]ளர் அரு. அரு. சோம. அருணாசலஞ் செட்டியாரவர்கள், [illegible]ராம. மெ. சித. வயிரவன் செட்டியாரவர்கள், திருவாள[illegible]நகுத் தலைமை. இராமநாதன் செட்டியாரவர்கள், திருவாளர் பெ[illegible]ருங் கூறப்ப. அருணசலஞ் செட்டியாரவர்களாகிய இப்பெ[illegible]ண்மையார்க் எனது மனமார்ந்த வந்தனத்தைச் சமர்ப்பிக்கின்[illegible]ின்; [illegible]

இங்ஙனம்,

பொ. முத்தையா.

உ

கணபதி துணை.

முதற் பதிப்பு

முகவுரை.

இந்நிலவுலகத்திலுள்ள மக்கள் யாவரும் அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப்பொருள்கள் நான்கனுள் ஒவ்வொன்றையேனும் அன்றி ஒருங்கேனும் எய்தப்பெற்று இன்புறுதலில் மிக்க விருப்பத்தினையும் முயற்சியினையும் உடையாரென்பது, அவரவர் அநுபவவாயிலாக உணரத்தக்க தொன்றும். இவ்வுறுதிப்பொருள்க ணான்கனுள் முதலிறுதியொழித்து இடைப்பட்ட இரண்டை... பெற அவாவுவார் இவ்வுலகின் மிகப் பலராவர். முதற்கண் உள்ளதனைப்பெற விரும்புவார் சிலராவர். இம்மூன்றனையும் வெருவி, யிறுதிக் கண்ணுள்ள வீட்டினை விழையும் ... சிலரினுமிகச் சிலரேயாவர். இந்நால்வகைப் ...ம் பெறப்படும் பயன்களையாராயுங்கால், பொருளு...ய இம்மை மறுமையினும், இம்மையினும் நின் ... அறம் இருமையு முதவி வீட்டுக்குச் சாதனமாக ...டு தன்னை யெய்தப் பெற்றாரைப் பிறப்பிறப்புத் ... இரித்துப் பேரின்புறுத்தவல்லதாகலானும் இறுதியதாகிய ...யே உண்மையறிவுடையார் ஒரு தலையானெய்தவிரும்பு..., அதற்குரிய சாதனங்களைப் பெறுதற்குத் தக்க ...யே மேற்கொள்ளுவரென்பதும் போதரும். அச் ...களுண் முக்கியமானவை, தத்தஞ் சமய நூலுணர்ச்சி...யும், அந்நூனெறி யுணர்ந்தாங் கொழுகுதலுமேயாம். அங்ஙனமா...யின், நமக்குரிய சமயம் யாது? அதன் கட்கூறப்படும் பொருள்க...ளெவை? அவற்றை விளக்கும் நூல்களெவை? என்றின்னோரன்ன ...ப்ச்சியை மேற்கொள்ளுவேமாயின், உயர்ந்த மகாஞானிக...ளிந்து நிச்சயிக்கப்பட்ட பரம்பொருளாகிய சிவபிரானை ...டுசெய்யும் நம்மனோர்க்கு உரிய சமயம் சைவ சமயம் என்

பதும், அதன் கட்டெளியப்பட்ட பொருள்கள் அநாதியாகவுள்ள எண்ணிறந்த ஆன்மாக்களை அநாதியேபற்றி நிற்கு மூலமலமாகிய ஆணவ அழுக்கைக் கழீஇச் சிவப்பேறுதவிப் பேரின்புறுத்துங் கருணையே காரணமாக, அவ்வவற்றின் கன்மங்களுக்கு ஈடாகத் தநுகரணபுவன போகங்களை அளித்து இயங்கி யியக்கியும், அறிவித்தறிந்தும் விளங்குகின்ற சிவ பரம்பொருளாகிய பதியும், அப்பதியா லறிவிக்க அறிந்தும், கன்மப்பயனை நுகர்ந்தும், சார்ந்ததன் வண்ணமாந் தன்மை யெய்தப் பெற்றுள்ள எண்ணிறந்த ஆன்மாக்களாகிய பசுக்களும், அவை, தம் உண்மை நிலையுணர்ந்து தலைவனாகிய சிவபிரானைத் தரிசித்து இன்புறுதற்குத் தடையாக அநாதியே பற்றி நிற்கின்ற ஆணவமும், அதனை யொழித்தற்குப் போந்த கன்மமாயைகளும் ஆகிய பாசங்களும் என்னும் இம் முத்திறத்தனவாமென்பதும், இவ்வுண்மைகளைப் பொதுவகையானுஞ் சிறப்புவகையானும் ஐயந்திரிபறச் செவ்வனே விளக்கி நிலைப்படுத்து நூல்கள் வேத சிவாகமங்களும், அவற்றின் வழிப் போந்த வடமொழி தென்மொழிக்கண் உள்ள பிறநூல்களுமா மென்பதும் பெரியோர்களால் நன்கு தெளியப்பட்டனவாம்.

ஆயின், வேதத்தின்கண், பற்பல தேவர்களு[illegible] கேட்கப்படுதலானும், பலபல சமயக் கொள்கைக[illegible] கின்றமையானும் தலைவர் யாவர்? எக்கொள்கை உ[illegible] சிறந்தது? என்னும் ஐயப்பாடு எய்துமாலோவென[illegible] தொழித்தற்கே வேதம் பொதுநூலாயதென்க. உலகத்து[illegible] மக்கள் பலதிறப்பட்ட அறிவினையும், கொள்கையினையுமு[illegible] ராகலின், அவ்வெல்லாரையுங் காக்கவேண்டுமென்னுங் [illegible] வள்ளலாகிய சிவபெருமான், அவ்வவர் தகுதிக் கேற்பப் [illegible] கருத்துக்கள் தோன்ற வேதங்களை யருளிச்செய்தார். அவ்வே[illegible] ஆராய்ச்சியுடையார் பலரும், கீழ்க்கண்ட தத்துவங்களையே பர[illegible] பொருளென முன்னர்க்கண்டு பின்னர் அவையனைத்தும் அழிதன் மாலையவென்றெருவி மேற்சென்று சென்று முடிவில், தன[illegible] கொப்பாரு மிக்காரு மில்லாத சிவபிரானையே பரம்பொருளெ[illegible] தெளிதற்குரிய சிவாகம நெறிநின்று அப்பெருமான்றிருவடி எய்தியின்புறுவராதலின், பக்குவமிக்க ஆன்மாக்களின் பொ[illegible]டு

அருளப்பட்டனவாகிய சிவாகமங்கள், சிறப்பு நூல்களாகும். இதனால் வேதங்களிற் பிறதேவர்களுக்குக் கூறப்படுந்தலைமை உபசாரமென்பதும், சிவபிரானுக்குக் கூறப்படுந்தலைமை யுண்மையென்பதும் வெளியாம். இவ்வுண்மை, வேதங்களில் உபசாரமாகக் கூறப்பட்ட சமயங்களுக்கெல்லாம் வழிநூலாசிரியர்கள் பிறதேவர்கள் இருடிகளாகவிருப்ப, அவ்வேதங்களை யருளிச்செய்த முதலாசிரியராகிய சிவபிரானே உண்மையாகக்கூறப்பட்ட சைவசமயத்தைப் போதிக்குஞ் சிவாகமங்களுக்கு ஆசிரியராக உள்ளமையின், சிறிதும் ஐயமின்றித் தெளியலாம். இவ்விஷயமெல்லாம் தத்துவ ஞானிகளாகிய சைவாசிரியர்கள் இருமொழிக்கண்ணும் தருக்க நெறி பிறழாமல் அருளிச்செய்த சைவநூல்களின் மிக விளக்கமாக வுணரலாம்.

இனி, சைவவுண்மைகளை யறிவுறுத்துந் தமிழ்நூல்கள், சமயகுரவர்க ளருளிச்செய்தனவும், சிவபாத்துவமொன்றனையே கூறுவனவுமாகிய தேவார்முதலிய வேதங்களும், சந்தானகுரவர்க ளருளிச்செய்த சிவஞானபோத முதலிய பதினான்கு சாத்திரங்களும் பிறவுமாகிய ஆகமங்களுமாம். இப்பதினான்கனுள் ஒன்றும், நம்மனோர் தவப்பேற்றால், தமிழ்நாட்டில், திருவெண்ணெய்நல்லூரில், சைவவேளாண்மரபில் அவதரித்தருளிய ஸ்ரீ மெய்கண்டதேவர் அருளிச் செய்ததுமாகிய சிவஞானபோதமே முப்பொருள்களைத் தெளிவுறுத்துஞ் சித்தாந்த சைவநூல்களுட் சிறந்த முதனூலாகும். அது, சூத்திரங்களாகவும், வாத்திகப் பொழிப்பாகவும் அருளிச் செய்யப்பட்டிருத்தலான், அந்நுண்பொருள்களை விரிவாக விளக்கி யாவருக்குந் தெளிவுறப் போதிக்க வேண்டுமென்னுங் கருணையே காரணமாக, அம்முதனூலாசிரியராகிய ஸ்ரீ மெய்கண்டதேவர் மாணுக்கரும், அந்தணர் குலத்திலவதரித்தவருமாகிய ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார் சிவஞானசித்தியார் என்னும் வழிநூலையருளிச்செய்தார்கள். அந்நூல், பரபக்கம், சுபக்கம் என விருபகுதித்தாக. பரபக்கத்தில், புறப்புற முதலிய சமயங்களை, அவ்வச் சமயப் பார்வையாற் கண்டித்தும், சுபக்கத்திற் சித்தாந்தப் பார்வையால் ஏனைச் சமயவாதிகள் ஆசங்கைகளை மறுத்துச் சித்தாந்த சைவவுண்மைகளைப்

புலப்படுத்தி நிரூபணஞ் செய்தும் அமிழ்தினுமினிய மதுரம் பழுத்தொழுகுஞ் செய்யுள் வடிவினதாக யாக்கப்பட்டுள்ளது. சுபக்கப்பகுதி கடவுள் வாழ்த்துள்பட ருஉஅ செய்யுட்களை யுடையதாகும். இது, முதனூன் முறைப்படி பன்னிரு சூத்திரப் பிரிவாகவுள்ளது. ஒவ்வொரு சூத்திரக் கருத்துக்களையும் சிலபல செய்யுட்களால் இவ்வாசிரியர் விளக்கியிருக்கின்றனர்.

இந்நூலிலுள்ள முன்னாறு சூத்திரங்கள் பொதுவதிகாரம் எனவும், பின்னாறு சூத்திரங்கள் சிறப்பதிகாரமெனவும் பெயர் பெறும். அவை மும்மூன்று சூத்திரங்களையுடைய இயல்களாகப் பகுக்கப்பட்டு முறையே, பிரமாணவியல், இலக்கணவியல் எனவும், சாதனவியல், பயனியல் எனவும் பெயர் பெறும். பிரமாணவியலிலுள்ள மூன்று சூத்திரங்கள் முறையே பதியுண்மை, பாசவுண்மை, பசுவுண்மைகளையும், இலக்கணவியலிலுள்ள மூன்று சூத்திரங்கள் பசுவிலக்கணம், பாசவிலக்கணம், பதியிலக்கணங்களையும், சாதனவியலிலுள்ள மூன்று சூத்திரங்கள், சாதிக்கும் பொருளதியல்பும், சாதிக்கப்படும் பொருளதியல்பும், சாதிக்குமுறையும், பயனியலிலுள்ள மூன்று சூத்திரங்கள், பாசக்ஷயமும், சிவப்பேறும், அப்பேற்றையுடைய சீவன் முத்தர் செயலுங்கூறுவனவாம். இம்முறைகள் முதனூற்குள்ளவாறே இந்நூற்கும் அமைந்துள்ளன. இந்நூலிலுள்ள செய்யுட்களெல்லாம் அழகிய செவ்விய சுருங்கிய சொற்களாற் றெடுக்கப்பட்டனவாய் விழுமிய இனிய ஓசையுடையனவாய், ஆயுந்தோறும், ஆயுந்தோறும் மேன்மேற் கிளைக்கும் நுண்பொருட் பெருக்கத்தை யுடையனவாயுள்ளன.

இப்பெருமை நோக்கியன்றே! பெரியாரும்,

"பாரிலுள்ள நூல்களெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
யோர்விருத்தப் பாதிபோதும்" எனவும்,

"பாதிவிருத் தத்தாலிப் பார்விருத்த மாகவுண்மை
சாதித்தார் பொன்னடியைச் சாருநா ளெந்நாளோ" எனவும் பாராட்டிப் போற்றுவாராயினர்.

இத்தகைய் மாட்சிமிக்க சிவஞான சித்தியார் சுபக்கத்துக்கு ஸ்ரீ மறைஞான தேசிகர், ஸ்ரீ சிவாக்கிரயோகியார், ஸ்ரீ ஞானப்பிர

காசர், ஸ்ரீ சிவஞான யோகியார், ஸ்ரீ நிரம்பவழகியார், ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் ஆகிய இவ்வறுவர்களாலும் சிற்சில கருத்து வேறுபாடுகளுடன் தனித்தனி செய்யப்பட்டவுரைகள் வெளிப்பட்டிருக்கின்றன. இன்னும் வெளிப்படாத வேறுரைகளிருப்பினுமிருக்கலாம். வெளிவந்த இவ்வுரைகளுள் ஸ்ரீ சிவாக்கிரயோகியாருரையும், ஸ்ரீ சிவஞான யோகியாருரையும், அதனைப்பதப்பொருளோடு வைத்தாராய்தற் குபகாரமாக ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் செய்தவுரையும் மிகஉபயோகங்களாகவுள்ளன. ஏனைய உரைகளிலும் ஆங்காங்குச் சிற்சில நயங்களைக் காணலாம். பல செய்யுட்களில், ஸ்ரீ சிவஞான யோகிகள் கொண்டு கூட்டு வேறுபட்டிருக்கும். அது பொருணயங்கருதியதாகும். ஸ்ரீ ஞானப்பிரகாசர் உரை சித்தாந்த சைவத்துக்கு முரணுகச் சிவசமவாதம் போதிப்பதாகலின், அது பொருந்தாதென நியாயவாயிலாக எடுத்து ஸ்ரீ சிவஞான யோகிகளாற் கண்டிக்கப்பட்டுள்ளது. ஏனையவை பெரும்பாலுந் தம்முண் மாறுபாடுடையனவாகா.

இவ்வுரைகள், பெரும்பாலும் வடசொற்களாலும் உயர்ந்த செந்தமிழ்ச் சொற்களாலும் எழுதப்பட்டிருத்தலாலும், சிற்சில விஷயங்கள் வேறு சைவ நூல்களிற் றெளிந்துகொள்ளுமாறு சுருங்கக்கூறுதலாலும், வடமொழிப் பயிற்சியும் தமிழிற் பேரிலக்கிய இலக்கணவாராய்ச்சியுமின்றிச் சிற்றிலக்கிய இலக்கணந்தெரிந்த ஏனையோரும் எளிதில் விஷயங்களை யுணர்ந்துகொள்ளும் வண்ணம் முன்னோர் கருத்துக்கு மாறுபாடின்றி, திருவாவடுதுறையாதீன சைவப்ரசாரகராகிய தூத்துக்குடி ஸ்ரீ பொ. முத்தையபிள்ளையவர்கள் புதியதாக ஒருரை யெழுதி முடித்திருக்கின்றனர். இவ்வுரைப் பிரதியொன்று என்பார்வைக்கு அனுப்பினார்கள். ஆங்காங்குச் சிற்சில செய்யுட்களுக்கு விசேட்மாக எழுதப்பட்டவுரைக்குறிப்புக்களைப் பார்த்தேன். ஒவ்வொரு செய்யுட்களின் தலைப்பில் அச்செயுளின் கருத்துறுபொருளைத் தெரித்துக்காட்டும் வாக்கியங்களுள்ளன. செய்யுளின்பின் ஸ்ரீ சிவஞான சுவாமிகள் கருத்துப்படி கொண்டுகூட்டுத் தனித்தனியே எழுதப்பட்டுள்ளது; இது, கற்பார்க்கு, செய்யுள் இவ்வாறு அந்நுவயஞ் செய்யப்பட்டதென்று இலகுவிலுணர்தற் குபயோகமாம். இவ்வுரை

ஸ்ரீ சிவஞான சுவாமிகள் பொழிப்புரையையும், ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் பதவுரையையும் சிறிதும் பிறழாமல் எடுத்து விளக்கமான எளிய சொற்றொடைகளால் எழுதப்பட்டுள்ளது. ஸ்ரீ சிவஞான சுவாமிகள் மிகச்சுருக்கமாக வரைந்த சில விஷயங்கள் இதன்கண் விளக்கப்பட்டிருக்கின்றன. சிவஞானபோத மாபாடியம் சிற்றுரைகளின் ஆராய்ச்சியிற்கண்ட சில விஷயங்களும் ஆங்காங்கு இதன் கட்காணலாம். இவ்வுரை, பெரும்பான்மை முன்னுரை யாசிரியர்கள் கருத்தைத்தழுவிச் சிறுபான்மை விளக்க விசேடங்களை யுடையதாயினும் அரிய விஷயங்கள் எளிய நடையில் விளக்கப் படுதல், கற்பார்க்கு மிக உபயோகமாதலின், இதுவுந் தமிழ்நாட்டார்க்குப் பயன்படுமென்பது என் கருத்து.

இவ்வுரையாசிரியராகிய ஸ்ரீ பொ. முத்தைய பிள்ளையவர்கள், தம் பாலப்பருவமுதல் சிவஞானபோத முதலிய சைவசாத்திரங்களை இடைவிடாது ஆராய்ந்து தமிழ் நாட்டிலுள்ள சபைகளிலும், பிறவிடங்களிலும் சைவசித்தாந்த சம்பந்தமான பல அரிய உபந்யாஸங்கள் செய்து வருகின்றனர். உபந்யாசஞ் செய்யுங்கால், எடுத்துக் கொண்ட விஷயத்துக்கு இயைபில்லாத வற்றிற் பிரவேசியாமல் மேற்கொண்ட விஷயத்தைத் தொகை வகை விரிகளால் விளக்கி நூற்பிரமாணங்களை இன்றியமையாத விடங்களிற் காட்டி விளக்கமான செஞ் சொற் சிறப்புடன் இறுதியிற் றொகையுரை யுரைத்து முடித்துக்காட்டுவதில் மிக்க திறமை வாய்ந்தவர்.

திருவாவடுதுறையாதீனத்தில் இப்பொழுது மஹா சந்நிதானமாக எழுந்தருளியிருப்பவர்களும், வரையாது கொடுக்கும் வள்ளன்மையும், கூர்ந்த அறிவும், தேவார முதலிய தமிழ் மறைகளில் நுணுகிய ஆராய்ச்சியும் உடையவர்களும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள், இவ்வுரையாளராகிய பிள்ளையவர்களின் சைவசித்தாந்த நூலாராய்ச்சியையும், உபந்யாஸ ஆற்றலையுங் கண்டு மகிழ்ந்து தம் ஆதீனத்துச் சைவப்பிரசாரகராக விருந்து பற்பல நகரங்களினும் சைவசித்தாந்த உபந்யாசங்கள் புரிந்து வரும்படி கட்டளையிட்டருளினார்கள். பிள்ளையவர்களும்

அக்கட்டளையை மிக்க சிரத்தையுடன் ஏற்று நடாத்தி வருகின்ற னர். இவர்களுக்கு மேன் மேலும் ஓங்கும் வண்ணம் சிவ ஞானச் செல்வத்தையும், இன்னோரன்ன ஞானசாத்திர வாராய்ச்சியிலும், உரை யெழுதுவதிலும், உபந்யாசஞ் செய்வதிலும், மிகுந்த விருப் பத்தையும் முயற்சியையும், நீண்ட வாணாளையும் பிற நலன்களை யும் பரமகருணா நிலயமாகிய சிவபிரான் அருளிக்காப்பாராக.

இவ்வுரையை திராவிட மாபாடிய கர்த்தராகிய ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் திருவடித்தாமரை மலர்கட்கு உரிமைப்படுத் தியிருப்பதால் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீ னத்தின் மீதும் ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் மீதும் இப்பிள் ளையவர்கள் கொண்டுள்ள மெய்யன்பு தெற்றென விளங்கும். இந்நூலாசிரியர் சரித்திரமும், அவதாரிகையின் அகராதியும், விசேடவுரையிற் கண்ட விஷய அகராதியும், செய்யுண் முதற் குறிப்பு அகராதியும் ஆகிய இவைகள் கற்பவர்க்குப் பெரிதும் உபகாரமா மென்பதொருதலை.

சிவ தருமமும், சைவசித்தாந்தமும், தமிழ் மொழியும் நீடு வாழ்க.

மகிபாலன் பட்டி,
5—7—14

இங்ஙனம்,
மு. கதிரேசன்.

உ

சிவமயம்.

உரிமையுரை.

தென்மொழியும் வடமொழியுந் தேர்ந்துபரம்
பொருள்சிவமென் றதனைச்சாரு
நன்மையெனும் வீடருளுந் துறைசைநமச்
சிவாயகுரு நற்றாள் பேணி
வன்மலவே ரைக்கெடுத்துச் சிவஞான
பாடியஞ்செய் தருளும் வள்ளல்
சின்மயமாஞ் சிவஞான முனிவரிரு
திருவடிகள் சிந்தை செய்வாம்.

சைவசித்தாந்த சாத்திரங்கள் பலவற்றுள்ளும் பல அரிய விஷயங்களைத் தன்னுட் கொண்டு விளங்குவது சிவஞான சித்தியாரென்னும் நூலேயாம். இதற்கு முதனூலாகிய சிவஞான போதத்தில் குறிப்பால் உணரக்கிடந்த பல விஷயங்கள் இச்சிவ ஞான சித்தியாரில் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலுக்கு ஆறு ஆசிரியர்கள் உரையருளிச்செய்திருக்கின்றனர். அவ்வுரைகளுள் தருக்க முறை இலக்கண முறைகளோடு சொல் நயம் பொருள் நயம் தோன்ற விளங்குவது ஸ்ரீ மாதவச் சிவ ஞான யோகிகள் உரையேயாம். இவ்வுரை பொழிப்பாயிருந்தமையால் அதனை அநுசரித்து ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் பதவுரை யருளிச் செய்தார்கள். திருவருட்டோன்றலாகிய இச் சிவஞான யோகிகள் திரு அவதாரஞ் செய்திலரேல் சித்தாந்த சைவச் செந்நெறி இதுவெனத் திகைப்பின்றித்துணிந்து கூற எவர்க்கும் இயலாதென்பது என் அபிப்பிராயம். இவர்கள் பல அரிய பெரிய விஷயங்களைச் சிவஞானமா பாடியத்தில் விரிவாக அருளிச் செய்திருக்கின்றமையால் சிவஞான சித்தியாருக்குச் சுருக்கமான பொழிப்புரை அருளிச்செய்தார்கள் போலும். சித்-

தியாரில் சுருக்கமாகக் கூறியுள்ள பலவிஷயங்கள் பாஷியத்தில் தெளிவாகக் காணலாம். ஸ்ரீ சிவாக்கிர யோகிகளும் அநேக விஷயங்கள் சித்தியார் உரையில் அருளிச் செய்திருக்கின்றார்கள்.

ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் திருவடியைச் சிரமேற் கொண்டு அவ்வுரைகளையும் பிறநூல்களையும் என் சிற்றறிவிற் கெட்டியவாறு ஆய்ந்த பொழுது தோன்றிய கருத்துக்களைத் திரட்டிப்பலருக்கும் உபயோகமாகும் வண்ணம் இவ்வுரை எழுதி அச்சிற்பதிப்பித்தேன். இதில் தவறு காணப்படின் அது என் சிற்றறிவின்பால் நிகழ்ந்ததாகும். அதனைப் பொறுத்தருளும்படி பெரியோர்களைப் பிரார்த்திக்கின்றேன். நயம் காணப்படின் அது ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள் திருவருட் பெருக்கால் விளங்கியதாகும். ஆலலால் இவ்வுரையை ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் திருவடித்தாமரைகட்குச் சமர்ப்பிக்கின்றேன்.

இங்ஙனம்,

பொ. முத்தையா.

உ

சிவமயம்.

நூலாசிரியர் வரலாறு.

அருணந்தி சிவாசாரியர்.

பொன்னாடதனினும் சிறந்த தென்னாடதனுள் நடுநாட்டில் திருத்துறையூர் என்னும் திவ்யதலத்தில் ஆதி சைவப்பிராமணர் குலத்தில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளின் மாமனாராகிய ஸ்ரீ சடங்கவி சிவாசாரியருடைய இருபத்தொன்றாவது பரம்பரையில் சாலிவாகன சகாப்தம் ௧௧௭௫-ல் அதாவது இற்றைக்கு ௬௭௪ வருடங்கட்குமுன் சிவாகமப்பொருள் இனிது விளங்குதற்பொருட்டு ஒருவர் அவதாரஞ் செய்தார். இவர் ஆதி சைவ மரபிற் கேற்றவாறு வேதாகமங்களில் வல்ல பெரியோரால் சாதகன்மம், நாமகரணம் முதலிய செய்யப்பெற்று காயத்திரி மந்திரமும் உபதேசிக்கப் பெற்றனர். பின்னர் பொதுநூலாகிய வேதத்தின் கன்மகாண்டம், பக்திகாண்டம, ஞானகாண்டங்களையும் வேதாங்கமாகிய கற்பம், சிக்ஷை முதலியவற்றையுங் கற்று அதன்பின்னர்ச் சிறப்புநூலாகிய காமிக முதலிய இருபத்தெட்டுச் சிவாகமங்களின் சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்கு பாதப்பொருள்களையும் நன்கு கற்றனர். அம்மட்டோ! தமிழினும் மிக வல்லுநராய்த் தமிழ்நூல்களுங் கற்றனர். இவ்வாறு சகல ஆகமங்களினும் வல்லுநராய் இருக்குஞ் சிறப்புநோக்கி இவருக்குச் சகலாகம பண்டிதரென்னுந் திருநாமம் பெரியோரால் இட்டுவழங்கப்பெற்றது.

இவ்வாறு சகலகலையினும் வல்லுநராய் விளங்கும் நாளில் பொய்ச்சமயமாகிய புறச்சமய இருள் நீங்கவும் மெய்ச்சமயமாகிய சைவ சமய ஒளி மேவிடவுங்கருதி சகல ஆகமங்களையும் சகடத்

தின்மேல் ஏற்றிக்கொண்டு சிதம்பரம், திருவண்ணாமலை, காசி, நேபாளம் முதலிய பல இடங்களினுஞ்சென்று தருக்கமுறையில் எவரும் தன் கீழ் அடங்க சைவஸ்தாபனஞ் செய்வாராயினர். செய்யுங்கால் தம்முடைய அருளுபதேசத்தைக் கடைப்பிடித்துச் சைவநெறியில் ஒழுக விருப்பமுடையாராய் வரும் பக்குவருக்குச் சிவாகம விதிப்படி தீக்ஷைபுரிந்து அவருடைய மும்மல அழுக்கைப் போக்குவர்.

இவருடைய மாணாக்கர் பலருள் திருப் பெண்ணாகடத்தில் வசிக்கும் பாரம்பரைச் சைவ வேளாள குலதிலகராகிய அச்சுத களப்பாளரும் ஒருவர். இவருக்குப் பிள்ளைப்பேறின்மையால் தம் ஆசியரை யடைந்து அக்குறையை விண்ணப்பஞ்செய்தனர். அதனைக்கேட்ட சகலாகம பண்டிதர் தமிழ்வேதமாகிய தேவாரத் திருமுறையைத் திவ்ய ஆசனத்தில் எழுந்தருளச் செய்து அர்ச்சனை தூபதீப ஆராதனைகள் சமர்ப்பித்து அத்திருமுறையில் கயிறு சாத்தும்படி கட்டளையிட்டனர். உத்தரவின்படி அச்சுதகளப்பாளர் திருமுறையை நமஸ்கரித்துக் கயிறு சாத்தினர். திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவெண்காட்டுப் பதிகத்துள்,

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வவாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

என்னும் திருப்பாசுரம் உதயமாயிற்று. அப்பாசுரத்தின் பொருளைச் சகலாகமபண்டிதர் உற்றுநோக்கி மிகமகிழ்வெய்தி அச்சுத களப்பாளரைத் திருவெண்காட்டில் வசிக்கும்படி உத்தரவுசெய்தனர். அவர் அவ்வாறே வசித்து அங்குள்ள சோமசூரிய அக்கினி தீர்த்தங்களில் முழுகிச் சுவேதவனப் பெருமானை வணங்கி ஓர் பிள்ளையைப் பெற்றனர்.

அப்பிள்ளையார் இரண்டு வயதில் பரஞ்சோதி முனிவரால் சிவஞான போதம் உபதேசிக்கப் பெற்று மெய்கண்டதேவர்

என்னும் தீக்ஷாநாமத்தையும் ஆசாரியாராற் பெற்றுப் பலருக்கும் சிவஞான போத உபதேசஞ் செய்வாராயினர். செய்து வரும் நாளில் சகலாகமபண்டிதர் அவ்வரலாற்றைக் கேள்வியுற்று தம் முடைய மாணுக்கராகிய இவர் நம்மை வந்து பார்க்கவில்லையே யென்றெண்ணி, ஆயினும் நாம் அவரைப் பார்ப்போமென்று அவ ரிருக்கு மிடஞ் செல்ல விரும்பி அக்கருத்தைத் திருவெண்ணெய் நல்லூர் வாசிகளாகிய தம் மாணுக்கர்கட்குத் தெரிவித்தனர்.

அதனைக் கேட்ட திருவெண்ணெய் நல்லூரார் தம் குல குருவின் வரவுக்காக மிக மகிழ் வெய்தி நகர மெங்கும் அலங்கரித் தனர். ஆகமங்கள் ஏற்றிய சகடையுடனும், விருதுகளுடனும் சகலாகமபண்டிதர் திரு வெண்ணெய் நல்லூரை நோக்கிச் சென் றனர். நகரை அடுத்து வரும் பொழுது அங்குள்ளாரனைவரும் எதிர் வந்து வணங்கிச் சிவாகப் பொருளை உபதேசிப்பதற்காகத் திருவவதாரஞ் செய்தருளிய எம் குருநாத! தேவரீரது நல்வர வால் நாங்கள் உய்ந்தோம் உய்ந்தோம் என்று பலவாறு துதித் துத் திருவெண்ணெய் நல்லூருக்கு அழைத்துச் சென்றனர். சென்றதும் வீதி வலம் வந்து திருக்கோயிலை யடைந்து சுவாமி தரிசனஞ் செய்து திருமடம் போய்ச் சேர்ந்தனர். சேர்ந்த பின் னர் மாணுக்கர்கள் அனைவரும் வணங்கித் திருவமுது செய்வித் தனர். சிவபெருமான் றிருவடிக் கமலத்திற் பதிந்த சிந்தையை யுடைய மெய்கண்டதேவர் தம் குல குருவாகிய சகலாகம பண் டிதரைப் பார்க்கவில்லை.

சகலாகமபண்டிதர் மெய்கண்டதேவர் வாராமையை உணர் ந்து நாமே போய்ப் பார்ப்போமென்றெண்ணி அவரிருக்குமிடஞ் சென்று உலாவிக்கொண்டு நின்றார். நிற்குங்கால் மெய்கண்ட தேவர் தம் மாணுக்கருக்குச் சிவஞானபோதம் பாடஞ் சொல் லிக் கொண்டிருக்கின்றார். பாடத்தில் ஆணவமலத்தின் தன்மை யைப்பற்றி ஆராயத் தொடங்குஞ் சமயமாயிருந்தது. உலாவிக் கொண்டிருந்த சகலாகமபண்டிதர் மெய்கண்டதேவரை நோக்கி

ஆணவமலத்தின் இலக்கணம் என்னையென்று வினவினர். மெய்கண்டதேவர் தம்முடைய சுட்டுவிரலால் சகலாகம பண்டிதரைச் சுட்டிக்காட்டினர். உடனே சகலாகம பண்டிதர் நானென்னு முனைப்போடு வணங்காதிருக்கும்படி செய்ததே ஆணவமலத்தின் இலக்கணமென வுணர்ந்து மெய்கண்ட தேவரை வணங்கினர். வணங்கவே தங்குருமாபிற்கு முதற்குருவாகிய நந்திதேவர் திருநாமத்தையே இச் சக்லர்கம பண்டிதருக்குச் சூட்டவெண்ணி அருணந்தி எனத் தீக்ஷாநாமஞ் சூட்டிச் சிவஞானபோதத்தையும் உபதேசித்து மனவாசகங்கடந்தார் சிற்றம்பல நாடிகள் முதலான நாற்பத்தொன்பது மாணுக்கருள் முதல் மாணுக்கராக ஏற்றருளப் பெற்றனர்.

இவ்வாறு மெய்கண்ட தேவருடைய அருளுபதேசம்பெற்ற அருணந்தி சிவாசாரியார் திருப்பெண்ணுகடத்தில் வேதியர் குலத்தில் அவதரித்த மறைஞானசம்பந்த சிவாசாரியருக்குச் சிவஞானபோதப் பொருளையுபதேசித்து, அந்நூற்பொருள் பிற்காலத்துள்ளார்க்கு இனிது விளங்குதற்பொருட்டு உபதேச முறையிற் சொல்லப்பட்டுவந்த பொருள்களனைத்தையும் நன்கு விளக்கித், தொகுத்தல் முதலிய நால்வகையாப்பினுள், விரித்தல் யாப்பால் சிவஞானபோதத்திற்கு ஒரு விருத்தியுரையாக இனிய தமிழ்ச்செய்யுளால் பரபக்கம் சுபக்கமென இருபகுதிப்படத் தனித்தனி பாயிரத்துடன் சிவஞானசித்தியாரென்னு நூலும், பாசலட்சணங்களைப் பகுத்து வினவிடையாக இருபா இருபஃது என்னும் நூலும் அருளிச்செய்தனர்.

இவ்வாறு உலகோபகாரமாக இருபெரும் நூல்களை அருளிச்செய்து நெடுங்காலம் சிவானந்த நிட்டையில் வீற்றிருந்து திருத்துறையூரென்னும் பதியில் புரட்டாசி மாதத்துப் பூரநட்சத்திரத்தில் சின்மயானந்த சிவசொரூபத்தில் இரண்டறக்கலந்தனர்.

நூலாசிரியர் வரலாறு முற்றுப்பெற்றது.

இயலகராதி.

இயல்.	பக்கம்.
பாயிரம்	எ
அளவை	கரு
பிரமாணவியல்	சரு
இலக்கணவியல்	உசகூ
சாதனவியல்	௬உக
பயனியல்	சகூஉ

சூத்திர அகராதி.

முதற்சூத்திரம் பதி உண்மை	சரு
இரண்டாஞ்சூத்திரம் பாச உண்மை	கஉஅ
மூன்றாஞ்சூத்திரம் பசு உண்மை	உகூசு
நான்காஞ்சூத்திரம் பசு இலக்கணம்	உசகூ
ஐந்தாஞ்சூத்திரம் பாச இலக்கணம்	உகூகூ
ஆறாஞ்சூத்திரம் பதி இலக்கணம்	கூ0சு
ஏழாஞ்சூத்திரம் சாதிக்கும் அதிகாரி இயல்பு	கூஉக
எட்டாஞ்சூத்திரம் சாதனமும் அது வரும்வழியும்	கூஉஅ
ஒன்பதாஞ்சூத்திரம் சாதிக்கும் முறை	ச0கூ
பத்தாஞ்சூத்திரம் பாசநீக்கம்	சகூக
பதினொராஞ் சூத்திரம் சிவப்பேறு	சசரு
பன்னிரண்டாஞ் சூத்திரம் சீவன்முத்தர் இயல்பு	சஎக

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம். 3226

அருணந்தி சிவாசாரியர் அருளிச்செய்த சிவஞான சித்தியார் *சுபக்கம் மூலமும்

இதற்கு

மாதவச்சிவஞான யோகிகள் அருளிய உரையைத் தழுவி

பொ. முத்தையபிள்ளையியற்றிய பொழிப்புரையும்.

உரையாசிரியராகிய மாதவச்சிவஞானயோகிகளருளிச்செய்த

உரைப்பாயிரம்.

குரு வணக்கம்.

பண்ணிசைவெம் பரிதிமதி திலதயிலந்
தீயிரும்பு பாணி யுப்பு
விண்ணநில முடலுயிர்நீர் நிழலுச்சிப்
பளிங்குபகல் விளக்குப் பானீர்
கண்ணிரவி யுணர்வொளிபோற் பிரிவரிய
வத்துவிதக் கலவி காட்டித்
தண்ணளிவைத் தெனையாண்ட துறைசைநமச்
சிவாயகுரு சரணம் போற்றி.

* சுபக்கம்—தன் பக்கம்.

[பொழிப்புரை] பண்ணும்(இராகமும்)ஓசையும் போலவும், சூரிய னொளியும் பகற்காலத்துக் காணப்படுஞ் சந்திர னொளியும் போலவும், எள்ளும் அதனுள்ளிருக்கும் நெய்யும் போலவும், தீயும் அதனாற் காய்ச்சப்பட்ட இரும்பும் போலவும், தண்ணீரும் அதனோடு சேர்ந்த உப்பும் போலவும், ஆகாயமும் காற்றும் போலவும், உடலும் உயிரும் போலவும், 0நீரும் அதனிழலும் போலவும், மத்தியான வேளையிலுள்ள சூரியனொளியும் பளிங்கின் ஒளியும் போலவும், சூரியனொளியும் பகற்காலத்து விளக்கொளியும் போலவும், பாலும் அதனுடன் சேர்ந்த நீரும் போலவும், கண்ணொளியும் அதற்குப் பொருளைக் காட்டியும் கண்டும் உடனாய் நிற்கும் சூரியனொளியும் போலவும், ஆன்மாவின் அறிவும் அவ்வறிவாற் பொருளையறியும் கண்ணொளியும் போலவும் பிரிக்கமுடியாத சிவ சீவர்களின் அத்துவிதமாகிய கலப்பைக் கிருபையினால் அநுபவமாய் அறியும்படி செய்து அடியேனை ஆட்கொண்டருளிய திருவாவடு துறையின்கண் எழுந்தருளியிருக்கும் நமச்சிவாய தேசிக குரு மூர்த்திகளின் திருவடிகளைத் துதிப்பாம் என்றவாறு.

சிவனும் சீவனும் பொருட்டன்மையில் இரண்டாயினும் பிரிக்க முடியாவாம். இவ்வாறு பிரிக்க முடியாத கலப்பின் சம்பந்தத்தையே அத்துவிதமென நூல்கள் கூறும். இவ் வத்துவித சம்பந்தம் எதுபோலுமென்ப தறிவித்தற்குப் பதின்மூன்று உவமை கூறினார். அப்பதின்மூன்றுவமைகட்கும் பதின்மூன்று பேதங்களுளவாகலின் மிகைபடக் கூறலென்னுங் குற்றமின்றாம். அப்பேதங்கள் வருமாறு:—

அத்துவிதமாகிய கலப்பை ஒன்றாய் நிற்றலென்பேமா? வேறாய் நிற்றலென்பேமா? ஒருவாற்றால் ஒன்றும் ஒருவாற்றால் வேறுமான உடனாய் நிற்றலென்பேமா? எனின், இம்மூன்றுமாய் நிற்றலே அத்துவிதமாமென்க. மூன்றுமாய் நிற்றற்குப் பயன் யாதெனின், உயிர்கள் நிலைத்தற்கு இறைவன் ஒன்றாய் நிற்றலும், பொருள்களை உயிர்கள்

0நீருக்கு நிழலுண்டென்பது சிவஞானபோதம் எட்டாஞ் சூத்திரம், இரண்டாம் அதிகரணத்தில் " நீர் நிழல்போல் இல்லா அருவாகி நின்றானை " என்னும் வெண்பாவானும் உரையானும் அறிக.

அறியும்படி அறிவித்தற்கு இறைவன் வேருய் நிற்றலும், அறியினும் அறிந்தவாறே அநுபவிக்கும் சுதந்திரமின்மையின் அநுபவிக்கும் வண்ணம் செலுத்துதற்கு இறைவன் உடனுய் நிற்றலும் வேண்டப்படுதலின் நிலேத்தல், அறிதல், அநுபவித்தல் என்னும் மூன்றும் பயனும். இம் மூன்றனுள் எப்பயனும் அடங்கும். இவ்வாறு நிற்கும் முத்திறத்துள் ஒன்ருய் நிற்றற்கு மூன்றுவமையும், வேருய் நிற்றற்கு மூன்றுவமையும், உடனுய் நிற்றற்கு ஏழுவமையும் முறையே கூறினுர். அவற்றுள்,

பண் என்பது ஒலியின் பேதம். ஒலியைவிடப் பண் வேறன்று. ஆயினும், ஒலி எல்லாம் பண்ணுகாமையின் ஒலியுமன்று. இவ்வாறு ஒலியுமன்ருய் ஒலியின் பேதமேயாகிய பண் ஒலியைவிட்டுத் தனித்து நில்லாதவாறுபோலச் சித்தின் பேதமாகிய சீவன், சிவனுகிய சித்தன்ருய் சிவனேயின்றித் தனித்து நில்லாமையை உணர்த்த "பண் இசை" என்ருர். இதனேயே "யானெனுந்தன்மை நினேயின்றி இல்லாத் தன்மையால் வேறலேன்" எனத் தாயுமான சுவாமிகள் அருளிச் செய்வாராயினர்.

ஒலியின் பேதமே பண்ணென்ருற்போலச் சிவபேதமே சீவனென்னலாமோ என்பார்க்கு, சூரியன் ஒளியையின்றிச் சந்திரனுக்கு ஒளியில்லேயாயினும், பொருளால் வேறு காணப்படுமாறுபோல, சிவனேயின்றிச் சீவன் தனித்து நிற்றலில்லேயாயினும் பொருளால் வேறுண்டென்பதுணர்த்த "வெம்பரிதிமதி" என்ருர்.

சூரியனும் சந்திரனும் வேறு வேறு பிரித்தறியப்படுமாறு போலச் சிவனும் சீவனும் வேறு வேறு பிரித்தறியப்படுமோ என்பார்க்கு, நெய்யைவிட்டு வேறு பிரித்தறிய முடியாத எள்ளுப்போல, சிவனேவிட்டுச் சீவனே வேறு பிரித்தறிய முடியாதென்பதுணர்த்துதற்கு "திலதயிலம்" என்ருர். எள்ளினின்றும் நெய் வேறு பிரிக்கவும் படுகின்றதே எனின், நெய் உள்ளளவுந்தான் எள்ளெனப்படுவதேயன்றி நெய் பிரிந்த பின்னர் எள்ளென்பதின்ருதலின் அதன் கண் ஆசங்கையின்மை யறிக. இம் மூன்றுவமைகளும் ஒன்ருய் நிற்றலே விளக்கியவாறும்.

இனி நெய்யைவிட்டு எள்ளுத் தனித்து நில்லாதவாறு போலச் சிவனேவிட்டு உயிர் தனித்து நிற்றலில்லே எனப்பட்டு அவ்வாறு தனித்து நில்லாத பொருளுக்கு அறிவிக்கமுடியாதாகுமே என்பார்க்கு, தீயினுற் காய்ச்சப்பட்ட இரும்பு தீயேயாயினும் தீயின்வேருய் இரும்பு நிற்றல்

காணப்படுதல் போல, சிவனின் வேறாய்ச் சீவன் நிற்பன் என்பது உணர்த்துதற்கு "தீ இரும்பு" என்றார்.

தீயின் வேறாய் இரும்பு தனித்து நிற்பினும், இரும்பொடியைந்ததீ, தனித்துக் காணப்படாதவாறுபோல, இறைவன் வேறு காணப்படானோ என்பார்க்கு, நீரோடு கூடிய உப்பு நீரேயாயினும், நீரில் நின்றும் உப்புத் தனித்து நிற்கவும் படுமாறுபோல, இறைவனும் தனித்து நிற்பனென்ப துணர்த்துதற்கு "பாணி உப்பு" என்றார்.

நீரும் உப்பும் ஒரு காலத்துப் பிரிந்திருப்பது போல, உயிரும் இறைவனும் ஒரு காலத்துப் பிரிந்திருக்குமோ என்பார்க்குக், காற்று ஆகாயத்தையின்றி எக்காலத்தும் பிரிந்திராதவாறுபோல உயிர் எக்காலத்தும் இறைவனைவிட்டுப் பிரிந்திராதென்ப துணர்த்துதற்கு "விண்ணநிலம்" என்றார். இம்மூன்றுவகைகளும் வேறாய் நிற்றலை விளக்கியவாறும்.

காற்றுக்கு ஆகாயம் இடங்கொடுத்தலேயன்றிக் காற்றை அசையும்படி செய்வதில்லை; அதுபோல உயிர்க்கு இறைவன் ஆதாரமாய் நிற்றலேயன்றி உயிரைச் செலுத்துதல் இல்லையோ என்பார்க்கு, உடலிருத்தற்காதாரமாகிய உயிர், உடலை உடனின்று செலுத்துவதுபோல இறைவனும் உயிருடனின்று செலுத்துவ னென்பதுணர்த்துதற்கு "உடலுயிர்" என்றார்.

உடலை உயிர் இயக்கும் முறையில் சாக்கிரத்தில் தூல உடலையும், சொப்பனத்தில் தூல உடலைவிட்டுச் சூக்கும உடலையும், சுழுத்தியில் தூல சூக்குமம் இரண்டையும் விட்டுக் காரண உடலையும் இயக்குவது போல, இறைவன் உயிரை இயக்கும் முறையில் கூடியும் பிரிந்தும் நிற்பானோ என்பார்க்கு நீரினிடத்து நிழல் எக்காலத்தும் பிரிப்பின்றி விரவி நிற்றல் போல உயிரினிடத்து இறைவன் எக்காலத்தும் பிரிப்பின்றி விரவி நிற்பனென்பதுணர்த்துதற்கு "நீர்நிழல்" என்றார்.

நிழலின் உபகாரமின்றியே நீர் எக்காலத்தும் உவர்ப்பு, கைப்பு முதலிய ரசங்களைப்பற்றி அதுவதுவாய் நிற்பதுபோல, இறைவன் உபகாரமின்றியே உயிர் எக்காலத்தும் விடயங்களைப்பற்றி அதுவதுவாய் நிற்குமோ என்பார்க்கு, சூரியனொளி பக்கத்திலிருக்கும்பொழுது அவ்வொளியைக்கொண்டே பளிங்கினொளி பஞ்ச வன்னங்களைப் பற்றுதலும், சூரியனொளி உச்சியிலிருக்கும்பொழுது பளிங்கினொளி அச்சூரியனொளியோடு கலந்து ஒரு வன்னங்களையும் பற்றாமலும் இருத்தல்போல,

பெத்தகாலத்து இறைவன் மறைந்து நிற்க அவ்விறைவன் துணையைக் கொண்டே உயிர்கள் விடயங்களை அறிதலும், முத்திக்காலத்து இறைவனோடு உயிர் கலந்து ஒரு விடயங்களையும் அறியாதிருத்தலும் கூடுமென்பதுணர்த்துதற்கு "உச்சிப்பளிங்கு" என்றார்.

உச்சிக்காலத்து எதிர்ப்பட்ட பளிங்கு தன் ஒளி மழுங்காதவாறு போல, முத்திக்காலத்து உயிர்க்குத் தற்போதங் கெடுதலில்லையோ என்பார்க்கு, பகற்காலத்து விளக்கின் ஒளி சூரியன் ஒளியில் அடங்கி நிற்பதுபோல முத்திக்காலத்து உயிர் தற்போதங்கெட்டு நிற்குமென்பதுணர்த்துதற்கு "பகல் விளக்கு" என்றார்.

பகற்காலத்து விளக்குச் செயலற்றிருத்தல்போல முத்திக் காலத்து உயிர்க்கு இன்பாநுபவம் இல்லையோ என்பார்க்குப், பால் தன் சுவை முழுதும் தன்னோடு கலந்த நீருக்காக்கி நீரைத்தன்னுள் அடங்கி நிற்கச் செய்யுமாறுபோல, இறைவனும் முத்திக்காலத்து தன் இன்பம் முழுதும் உயிர்க்காக்கித் தன்னுள் அடங்கி நிற்கச்செய்வனென்பதுணர்த்துதற்கு "பால் நீர்" என்றார்.

நீர் பாலோடு கூடியவழி பாலின் சுவையாயும், பாலோடு கூடாதவழி தன்சுவையாயும் நிற்குமாறுபோல உயிர் இறைவனோடு கூடியவழி இறைவனுக்குரிய இன்பமயமாயும், இறைவனோடு கூடாதவழி தனக்குரிய இன்பமயமாயும் நிற்குமோ என்பார்க்கு, கண் ஒளியுடைப் பொருளாயினும், அக்கண்ணொளி, சூரியன் முதலிய பிற ஒளியின் துணையின்றி எக்காலத்தும் பிரகாசிக்கமாட்டாதவாறுபோல, உயிர் அறிவுடைப் பொருளாயினும் இறைவனையின்றி எக்காலத்து மறியமாட்டாதென்பதுணர்த்துதற்கு "கண்ணிரவி" என்றார்.

கண்ணொளியும் சூரியனொளியும் கலந்து நிற்பினும் கண்ணும் சூரியனும் வேறு வேறு இடத்திருத்தல்போல, உயிரின் அறிவும் இறைவன் அறிவும் கலந்து நிற்பினும் உயிரும் இறைவனும் வேறு வேறு இடத்தில் இருத்தல் கூடுமோ என்பார்க்கு, கண்ணொளியின் உள்ளீடாய் விரவி நிற்கும் உயிரையின்றிக் கண்ணொளி விடயத்தை அறியாதவாறுபோல உயிரின் உள்ளீடாய் உயிர்க்குயிராய் நிற்கும் இறைவனையின்றி உயிர் ஒன்றனையும் உணராதாகலின் உயிரும் இறைவனும் வேறு வேறிடத்திலிருப்பதில்லை எனவும், ஓரிடத்தில் கலந்து நிற்கும் எனவும் உணர்த்துதற்கு "உணர்வொளி" என்றார்.

இவ் வேழுவமைகளும் உடனாய் நிற்றலை விளக்கியவாறும்.

உரைப்பாயிரம் முடிந்தது.

நூல்.

பாயிரம்.

காப்பு.

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த
னால்வாயைங் கரத்த னாறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
றருமொருவா ரணத்தின் றாள்க
ளுருகோட்டன் பொடும்வணங்கி யோவாதே
யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமால் செல்வமுமொன்
றோவென்னச் செய்யுந் தேவே.

(கொண்டுகூட்டு) ஆறுதருகோட்டு அம்பிறை யிதழித்தாழ்சடையான்றரும் ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன் நால்வாய் ஐங்கரத்தன் ஒருவாரணத்தின் தாள்கள் உருகு ஓடும் அன்பொடும் ஓவாதே வணங்கி இரவுபகல் உணர்வோர் சிந்தைத்திருகு ஓட்டும் அயன்திருமால் செல்வமும் ஒன்றோ என்னத் தேவேசெய்யும்.

(பொ-ரை) கங்கையையும், இயல்பாலுண்டாகிய வளைவால் அழகுபெற்ற பிறையையும், கொன்றை மாலையையும் அணிந்த தாழ்ந்த சடையையுடைய சிவபெருமான் தந்தருளிய ஒற்றைக் கொம்பையுடையனும், முறம்போலும் இரண்டுசெவிகளையுடையனும், ०மூன்று மதங்களையுடையனும், தொங்கிய வாயையுடையனும், ஐந்து கரங்களையுடையனுமாகிய ஒப்பற்ற யானை முகத்தானுடைய திருவடிகள், உருகுதலுடன் ஓடப்பெற்ற பேரன்பால் இடையறாது தம்மை வழிபட்டு இரவும் பகலும் தியானிப்போரறிவின் கண்ணதாகிய மலச்சேட்டையை ஓட்டும். அதுவேயுமன்றி அயனரிமுதலியோர்வாழ்வும் ஒருபொருளன்றென வெறுப்பச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வையுந் தரும். (எ-று)

---

० மூன்று மதம்—கன்னமதம், கபோலமதம், கோசமதம்.

இத்தகைய திருவடிகளுக்கு இடையூற்றை ஒட்டி இந்நூல் முடிவு பெறச் செய்தல் அருமையன் றென்பது கருத்து. மலக்கோணலை நீக்கி உயிருக்குச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வைச் செய்விக்கு மென்பதற்கேற்பக் கங்கையின் செருக்கடக்கிப் பிறையை வாழ்வித்த பெருமான் மகனென்றுணர்த்தவேண்டி "ஆறுதருகோட்டம் பிறை யிதழித் தாழ்சடையான் றருமொரு வாரண" மென்றார்.

அங்ஙனமாயின், இதழியைக் கூறுவானேனெனின், திருவடையாளமாலையாதலின் உடன் கூறினர்.

அல்லது, உவமைத் தொகையாகக்கொண்டு இதழிக் கொத்துப் போலத் தாழ்ந்த சடையான் என உரைப்பினு மமையும்.

தருகோட்டம்பிறை என்றது இயல்பாகவே வளைந்திருக்கின்ற அழகிய பிறை என்பதாம்.

ஒரு கோடு முதலியன விநாயகப்பிரானுக்கே விசேடணமாதல் போல, இருசெவியனென்பதும் ஆமோவெனின், இசை யெச்சத்தால் இரண்டு முறம்போலுஞ் செவியனெனப் பொருடந்து நிற்றலின் ஆமென்க.

யானையுறுப்புக் கழுத்துக்கு மேலேயுள்ளதால், மும்மதத்தனெனல் எவ்வாறு கூடுமெனின், மும்மதம் யானைக்கு அடையென்பர். ஒரு கோடு முதலிய ஏனையவெல்லாம் விநாயகப் பிரானுக்கே அடையாயிருக்க இது மாத்திரம் யானைக் கடையாதல் செல்லாதென மறுக்க, மும்மதங்களும் இச்சாஞானக் கிரியைகளைக் குறித்த உருவகமென்பர். அங்ஙனமாயின், கந்தன் முதலியோரையும் மும்மதத்தனென வழங்க வேண்டும். அங்ஙனம் வழங்குவதின்மையானும், ஒருகோடு முதலிய ஏனையவெல்லாம் உறுப்பினையே விசேடித்து நிற்க, இதுமாத்திரம் உருவகமாதல் செல்லாமையானும் அதுவும் பொருந்தாது. மற்றென்னையோவெனின், ஐந்தெழுத்தின் பேதமாகிய நாலெழுத்து மூன்றெழுத்து முதலியனவும் ஐந்தெழுத்தெனவே வழங்கப்படுமாறுபோல, மும்மதத்தின் பேதமாகிய ஒருமதம் இருமதமும் மும்மதமெனப் படுமென்க.

வாரணமென்பது யானை முகத்தையுடைய விநாயகப்பிரானையும் சிந்தை என்பது அறிவையுங் குறித்தலின் ஆகுபெயர்.

திருகு என்பது திருகுதல் என்னும் பொருள்பட தல் விகுதி குறைந்து நின்றது. ஒன்றோ என்பதில் ஓகாரம் ஒன்றன்று என்னும்

பொருளில் வந்த எதிர்மறை. ஒன்றுமுதல் ஆறுவரை எண்ணுப்பெயர் வருதலின் இச்செயயுள் எண்ணலங்கார மெனப்படும்.

மங்கலவாழ்த்து.

மங்கலமென்பது ஈண்டு நூலின் மாட்சியாம். அதனைக் கடவுள் வாழ்த்தில் அடக்கிக் கூறுதலின் மங்கல வாழ்த்தெனப் பட்டது.

சிவபெருமான் வணக்கம்.

அறுவகைச் சமயத் தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறுங்
குறியது வுடைத்தாய் வேதா கமங்களின் குறிபி றந்தங்
கறிவினி லருள்ள மன்னி யம்மையோ டப்ப னாகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்.

(கொ-டு) அறுவகைச் சமயத்து ஓர்க்கும் எனவும், அங்கு அம்மை யோடப்பனாகி எனவுங்கூட்டுக.

(பொ-ரை) புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்னும் சமயம் நான்கனுள் அகச்சமயம் ஒழித்து ஒழிந்த முக்கூற்றுப் புறச் சமயங்களிலே நின்றுகொண்டு, அவற்றுள்ளும் பலவேறு வகைப்பட ஆராய்ந்தறிகின்ற அவரவர்கொண்ட முதற் பொருளாய், அவரின் வேறாகிய அகச்சமயத்தார்க்கு இலயம், போகம், அதிகாரம் என்னும் மூன்றவத்தையின், முறையே சத்தியும், உத்தியோகமும், பிரவிர்த்தியும் என்னும் தொழில் வேறுபாடுபற்றிச் சிவன், சதாசிவன், மகேசன் என்னும் பெயருடைய அருவம், அருவுருவம், உருவம் என்னும் ° தடத்தக்குறியே குறியாக வுடைத்தாய்ச், சித்தாந்த சைவர்க்கு அத்தடத்தக்குறியே யன்றி வேதாகமங்களின் கருத்துக்கதீதமாய், உயிர்க்குயிராய், உயிர்கட்கெல்லாம் அறிவைப் பிறப்பிக்கும் அம்மையப்பனுமாகி, எங்கணும் எக்காலமும் கலந்து வியாபகமாய் நின்ற சிவபெருமான் றிருவடியைச் சிரமேற் கொள்வாம். (எ-று)

°தடத்தம்—தூலம்.

ஞானக் கண்ணால் இறைவனுடைய சொரூபத் திருமேனியையும், ஊனக்கண் சிவகரணமாய் நின்று தடத்தத் திருமேனியையுங் காணப் பெறுது, தத்தங்கருத்திற் கேற்றவாறு பொருளின் முதன்மை கொள்கின்றாராதலின், ஓர்க்குமெனப் பிரிக்கப்பட்டது. விசேடியம் "அடி" யாகலின் உடைத்தாயென அஃறிணை முடிபாகக் கூறினார்.

சிவனருளைச் சிவனடி என்றது உபசாரம்.

இதனுள், அறுவகைச் சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளாய் எனவே, மேற்கூறிப்போந்த பரபக்கத்துப் பொருளும், வேறாங் குறியதுவுடைத்தாயெனவே, சுபக்கத்து முதற் சூத்திர முதலிய ஐந்து சூத்திரத்திற் பெறப்படுந் தடத்தப் பொருளும், வேதாகமங்களின் குறியிறந்தெனவே, பரபக்கத்துப் பொருளும் தடத்தப் பொருளுமன்றி எனைச் சொரூப லக்கணங் கூறும் ஆறாஞ் சூத்திரப் பொருளும், அறிவினிலெனவே, அறிவு வடிவாயுள்ள ஆன்ம சொரூபங்கூறும் ஏழாஞ் சூத்திரப் பொருளும், அருளான் மன்னியெனவே, இறைவன் குருவாய் வந்தனுக்கிரகஞ் செய்தலென்னும் ஞானதரிசனங் கூறும் எட்டாஞ் சூத்திரப் பொருளும், அம்மையோடப்பணுகி எனவே, சாதனஞ் செய்யுங் காலத்து ஞானமு ஞேயமு ஞாதிருவுமாகக் காணப்படும் ஒன்பதாஞ் சூத்திரப் பொருளும், செறிவொழியாது நின்ற எனவே, ஏகனாகி நிற்றல் கூறும் பத்தாஞ் சூத்திரப் பொருளும், சிவனடி சென்னிவைப்பாமெனவே, அரன் மலரடிக் கீழிருத்தல் கூறும் பதினொராஞ் சூத்திரப் பொருளும், சென்னி வைப்பாம் என்னுஞ் சொல்லியல்பான், வைத்தவராகிய அணைந்தோர் தன்மை கூறும் பன்னிரண்டாஞ் சூத்திரப் பொருளுங் குறிப்பானறியக் கிடந்தன. இங்ஙனந் தொகுத்துக் காட்டுதல் மங்கல வாழ்த்துக்கு இலக்கணமென உணர்க.

இனி, இச்செய்யுளிற் கூறப்படும் அறுவகை வினையெச்சங்களாலும் முதல்வனுடைய அறுவகைக் குணங்களும் கூறப்பட்டன வென்றுரைத்தலு மொன்று. அவ்வினையெச்சம் வருமாறு. அவ்வவர் பொருளாய், வேறாங்குறியதுவுடைத்தாய், வேதாகமங்களின் குறியிறந்து, அறிவினி லருளான் மன்னி, அம்மையோடப்பணுகி, செறிவொழியாது என்பன.

இவ்வினை யெச்சங்கள் ஆறும், தனித்தனி நின்ற என்னும் பெயரெச்சவினைகொண்டு முடிந்தவாறு காண்க.

இவ்வெச்சங்களுள், அவ்வவர் பொருளாய் என்றதனுல், அவ்வாறு பலவேறு வகைப்பட நிற்கும் அநந்த சத்தியாகிய அளவிலாற்றலுடைமை கூறப்பட்டது.

வேறுங்குறியது வுடைத்தாய் என்றதனுல், அக்குறியனைத்தும் சத்தியினிடத்து நினைந்த மாத்திரத்திற் கொள்ளுதலால் நினைந்தவாறு செய்யவொட்டாது தடுக்கும் மலமில்லாமையாகிய அநாதிபோதம் அநாதி முத்தத் தன்மை யெனப்படும் இயல்பாகவே பாசங்களினீங்குதல் கூறப் பட்டது. இதனுள் நிராமயான்மா எனப்படும் இயற்கையுணர் வினனுதலு மடங்கும்.

வேதாகமங்களின் குறியிறந்து என்றதனுல், அவற்றின் கருத்திற்க தீதமாய் நிற்கும் சுதந்திர மெனப்படுந் தன்வயத்தனுதல் கூறப்பட்டது.

அறிவினி லருளான் மன்னி என்றதனுல், அனைத்துயிர்களிடத்தும் பிரிப்பின்றிநின்று அவரவர் பக்குவ அபக்குவங்களை யறியும் சர்வஞ்ஞத் துவம் எனப்படும் முற்றுமுணர்தல் கூறப்பட்டது.

அம்மையோ டப்பனுகி என்றதனுல், அலுப்த சத்தி எனப்படும் பேரருளுடைமை கூறப்பட்டது. இதனுள், விசுத்ததேக மெனப்படுந் தூயவுடம்பின னுதலுமடங்கும்.

செறிவொழியாது என்றதனுல், பூர்த்தி எனப்படும் வரம்பிலின்ப முடைமை கூறப்பட்டது.

இவ்வாறு எண்குணங்களும் ஆறுகுணங்களி லடக்கிக் கூறப்பட் டமை காண்க. (க)

இந்நூற்குவழியாகிய சிவஞானபோதமென்னும் முன்னூற் சிறப்பு

என்னையிப் பவத்திற்சேரா வகையெடுத் தென்சித் தத்தே
தன்னைவைத் தருளி னுலே தாளிணை தலைமேற் சூட்டு [ல்
மின்னமர்பொழில்சூழ்வெண்ணெய்மேவிவாழ்மெய்கண்டானூ
சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்க லுற்ரும்.

(கொ-டு) என்னையிப்பவத்திற் சேராவகை அருளினுலேஎடுத்து என்சித்தத்தே தன்னைவைத்து தாள்இணை தலைமேற்சூட்டும்.

(பொ-ரை) பிறப்பு இறப்பாகிய கடலில் அமிழ்ந்துகின்ற என்னை அதன்கண் அழுந்தாத வண்ணம் கருணைக்கையா லெடுத்து, என் அறிவின் கண்ணை தற்சொரூபத்தை விளக்குதற்கெழுந்தருளிவந்து, திருவடிகளைச் சிரமேற் சூட்டித் தீக்கை செய்தருளிய, மின்னலையுடைய மேகந்தங்குதற் கிடமாகிய சோலைகள் சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூர் என்னுந் திருப்பதியில் விருப்பமுற்று வாழ்கின்ற மெய்கண்ட தேவன் மொழிபெயர்த்துரைத் தருளிச் செய்த சிவஞான போதநூலை, ஏனை ஆசிரியன்மார் செய்த பிரமாண நூல்கட்கெல்லாஞ் சிரத்தானமாகக்கொண்டு, அதனிற் கூறப்படும் சைவாகமப் பொருட்கூற்றை விளக்குவாம். (எ-று)

எடுத்து என்றது பவத்தைக் கடலாகவும், கருணையைக் கையாகவும் குறிப்பாக உருவகஞ் செய்ய நின்றமையின் குறிப்பு ருவகம்.

தான் என்றும் பிரிப்பின்றி நிற்கவும், விளங்கித் தோன்றுதலை உபசாரத்தால் வைத்தென்றார். ⁰ அன்போடியைந்த வழக்கென்றாற் போல. சென்னியின் என்றவிடத்து இன் உவம உருபு. (உ)

இந்நூலில் சொல்லப்படும் பொருளும், அதிகாரியும், பயனும்.

பண்டைநற் றவத்தாற் றோன்றிப் பரமனைப் பத்தி பண்ணுந்
தொண்டரைத் தானே தூய கதியினிற் றொகுப்பன் மார்க்கர்
கண்டநா லோதி வீடு காதலிப் பவர்கட் கீசன்
புண்டரி கத்தாள் சேரும் பரிசினைப் புகல லுற்றாம்.

(பொ-ரை) முற்சென்மத்தில் சாதனம் முற்றுப் பெற்றவராகிய சாமுசித்தரும், நித்த அநித்த வேறுபாடுணர்ந்து அநித்தத்தை வெறுத்து நித்தத்தை நாடும் வினையராகிய வைநைகரும், காணப்படும் பிரபஞ்சத்தைத் தவிர வேறு பொருளுண்டென்றறியாத மூடராகிய பிராகிருதரும் என மனித வர்க்கத்திற் பிறந்தார் முத்திறப்படுவர். அவருள், முற்செய்தவ விசேடத்தால்

⁰ திருக்குறள் அன்புடைமை செ- ௩.

சாமுசித்தராய்ப் பிறந்து வீடு காதலித்து முதல்வனிடத்தே பத்தி பண்ணுகின்ற சிவபத்தரை, விஞ்ஞானகலர் பிரளயாகலரைப்போல நூல் வழியாலன்றித் தானே சிவகதியிற் சேர்ப்பன். ஆகலின், அவர்க்கு நூல் வேண்டாம். முத்திபெற விரும்பும் வைனைகராயினர் ஞானிகளெல்லாம் பிரமாண மென்றறிந்து கைக்கொண்ட நூலை ஓதி அதன் வழியான் வீடடைய வேண்டுவது முறைமையாகலின், அவ்வைனைகராயினர்க்குச் சிவபெருமானுடைய செந்தாமரை மலர்போன்ற திருவடி கூடும் முறைமையினை இந்நூலில் வகுத்துக் கூறுகின்றாம். (எ-று)

சன்மார்க்கரை மார்க்கரென்றது தலைக்குறை. சன்மார்க்கர் ஞானிகள். இதனால், பிராகிருதராகிய மூடருக்கு இந்நூல் பயன்படாதென்பதறிக. சொல்லப்படும் பொருள் திருவடி கூடும் முறைமை. அதிகாரி வைனைகர். பயன் திருவடி கூடுதல். (ந)

அவையடக்கம்.

மறையினா னயனான் மாலான் மனத்தினான் வாக்கான் மற்றுங்
குறைவிலா வளவி னானுங் கூறொணா தாகி நின்ற
விறைவனார் கமல பாத மின்றியா னியம்பு மாசை
நிறையினார் குணத்தோர்க் கெல்லா நகையினை நிறுத்துமன்றே.

(பொ-ரை) வேதங்களினாலும், பிரமாவினாலும், விட்டுணுவினாலும், மனத்தினாலும், வாக்கினாலும், வேறுங் குறைவில்லாத அநுமானப் பிரமாணத்தினாலும் அறிதற்கரிதாய் நின்ற முதல்வனது செந்தாமரை மலர்போலும் திருவடியென்றுபசரித்துக் கூறப்படுமியல்பை, இன்று யான் சொல்வதென்றெழுந்த எனது புல்லிய ஆசையானது, நிறைந்த குணத்தினையுடையாரெல்லாருக்கும் இவனறிவு இவ்வளவுதானோ என்று எள்ளி நகையாடுதற் கேதுவாம். (எ-று)

இச்செய்யுளுக்கு இவ்வாறன்றி வேதங்களாலும், அவ்வேதத்திற்கங்கமாய் பிரமாவினாற் செய்யப்பட்ட பதினெண் புராணங்களாலும், மாயோனவதாரமாகிய வியாசனாற் செய்யப்பட்ட இதிகாசங்களாலும்,

மநு முதலியோரால் மனத்தால் நினைந்து செய்யப்பட்ட மிருதிகளாலும், வேதத்தின் கருமகாண்டம் ஞானகாண்ட மென்னும் பூருவமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சைகளாலும், வேறுங் குறைவில்லாத தருக்க சாஸ்திரங்களாலும் சொல்லுதற்கரிதாய் நின்ற சிவபிரான் கமலபாதத்தை யான் சொல்லுவேனென்றெழுந்த எனது ஆசை அறிவுடையார் நகையாடுதற்கேதுவாம் என்றலுமொன்று.

அயனல் மாலால் என்றவிடத்து ஆல் உருபு கருத்தாப் பொருளிலும், மனத்தினல் வாக்கால் என்றவிடத்து ஆல் உருபு கருவிப்பொருளிலும் வந்தன. "சாத்தனற் கண்ணேக்கப்பட்டது" என்றாற்போல.

கூறொணு தென்றது வரையறுத்துக் கூறமுடியாதென்பதாம். (ச)

ஒன்றனும் அறியக்கூடாதோ என்னும் ஆசங்கையை நீக்கல்.

அருளினு லாக மத்தே யறியலா மளவி னுலுந்
தெருளலாஞ் சிவனை ஞானச் செய்தியாற் சிந்தை யுள்ளே
மருளெலா நீங்கக் கண்டு வாழலாம் பிறவி மாயா
விருளெலா மிரிக்க லாகு மடியரோ டிருக்க லாமே..

(கொ-டு) சிவனை ஆகமத்தே அருளினலறியலாம். அளவினலுந் தெருளலாம். சிந்தையுள்ளே ஞானச்செய்தியால் மருளலாம் நீங்கக்கண்டும்வாழலாம். பிறவிமாயா இருளெலாம் இரிக்கலாகும், அடியரோடிருக்கலாமே.

(பொ-ரை) இறைவனியல்பு மேற்கூறியவாறு ஒன்றானு மறியப்படாதாயினும், அவ்விறைவனை அவனருளிய வேதசாரமாகிய சிவாகமத்தின் வழிநின்ற அநுபவமுடைய தேசிகாருளிச்செய்யும் உபதேசத்தால் கேட்டுமறியலாம். உபதேசப் பொருளைப் பிரமாணத்தாற் சிந்தித்து மறியலாம். சிந்தித்ததனைச் சிவஞானத்தால் தன் அறிவின் கண்ணே மாசறத் தெளிந்து மறியலாம். அத்தெளிதலினல் பிறவிமாயாமைக் கேதுவாகிய பாசத்தையுங் கெடுக்கலாம். அப்பாசக்கேட்டால் அச்சிவனடியாரோடு கலந்து நிட்டை கூடிச் சிவானந்த அநுபூதியும் பெற்றிருக்கலாம். (எ-று)

அளவினுலும் கண்டும் என்ற உம்மை எண்ணின்கண் வந்தது.

"அறுவகைச் சமயத்து" என்னுஞ் செய்யுளில் கடவுள் வணக்கங் கூற்முறையில் சுபக்கமாகிய தன் பக்கத்திற்குரிய இறைவன் சிவன் என்பதும், "மறையினுல்" "அருளினுல்" என்னும் இரண்டு செய்யுளினும் அவ்விறைவனுலியம்பப்படும் நூல் வேதாகம மென்பதும், அவற்றுள் வேதம் பொது நூலும், ஆகமம் சிறப்பு நூலுமாமென்பதும் கூறப்பட்டன. வேதாகம மிரண்டும் பொதுநூலும் சிறப்புநூலு மாதல் அ-ஞ்சூத்திரத்து கடு-வது செய்யுளிற் காண்க. (ரு)

பாயிரம் முடிந்தது.

ஆகத் திருவிருத்தம் சு.

அளவை இலக்கணம்.

அளவை எனினும் பிரமாணமெனினும் ஒக்கும். அஃதாவது, பொருள்களை அளக்குங் கருவியாம். பொருள் கண்ணுற் காணப்படும் உலகப் பொருளும், அங்ஙனங் காணப்படாத பதி, பசு, பாசப்பொருளும் என இருவகைப்படும். அவற்றுள், கண்ணுற் காணப்படும் பொருளை எண்ணல், நிறுத்தல், ‡ நீட்டல் 0 முகத்தல் என்னும் நான்கு கருவிகளான் அளக்கலாம். கண்ணுற் காணப்படாத பதி, பசு, பாசப்பொருள்களை அக்கருவிகளான் அளக்கமுடியாது. அதனை, ஆகமம், அநுமானம் என்னுங் கருவியைக் கொண்டு ஆன்ம சிற்சத்தியால் அளத்தல் கூடும். ஆகலின், அளவை இலக்கணம் முதற்கட் கூறுகின்ருர். இதனுல், ஆன்மசிற் சத்தியே பிரமாணமென்பதும், கருவிகளும் உபசாரத்தாற் பிரமாணம் எனப்படும் என்பதும் அறிக.

0 நீட்டல்-கோலாலளத்தல். 0 முகத்தல்-படியாலளத்தல்.

எல்லாப் பிரமாணங்களும் மூன்றில் அடங்கும் என்பது.

அளவைகாண்டல்கருதலுரையபாவம்பொருளொப்பாறென்ப
ரளவைமேலு மொழிபுண்மை யைதி கத்தோ டியல்பெனநான்
களவை காண்ப ரவையிற்றின் மேலு மறைவ ரவையெல்லா
மளவை காண்டல் கருதலுரை யென்றிம் மூன்றினடங்கிடுமே.

(பொ-ரை) பிரமாணமாவது காட்சி, அநுமானம், ஆகமம், இன்மை, அருத்தாபத்தி, உவமை என ஆறுவகைப்படும் என்பாரும், அவ்வறுவகைப் பிரமாணங்கட்கு மேலும் பாரிசேடம், சம்பவம், உலகவாதம், சகசம் என நான்கு பிரமாணமுளவென்பாரும், அப்பத்துக்குமேலும் பிரமாணங்களுள வென்பாரு முளர். அவை யெல்லாம் பிரமாணமேயாயினும் காட்சி, அநுமானம், ஆகமம் என்ற இம்மூன்றில் அடங்குவனவாம். (எ-று)

இன்மை என்பது:—என்றுமின்மை, ஒன்றி னொன்றின்மை, இல்லதினின்மை, உள்ளதினின்மை, அழிவுபாட்டின்மைஎனஐவகைப்படும். அவை, முறையே முயற்குக்கோடில்லை, கடத்திற்படமும் படத்திற்கடமுமில்லை, பெரியோர்வாயிற் பொய்யில்லை, யானையைப்0 பந்தியிற் கண்டிலம், கடம் உடைந்தால் அஃதில்லை என்பனவாம்.

அருத்தாபத்தி:—இவ்வூரிற் கொடுப்பவனிவனெனின், கொடாருமுண்டு என்பது.

உவமை:—கண்ணன் கருமுகில் போலென்பது.

பாரிசேடம்:—மூவரிலிருவர் கள்வரல்லரெனின், மற்றவன் கள்வனென்பது.

சம்பவம்:—நூற்றிலே தொண்ணூறுண்டென்பது.

ஐதிகம்:—இம்மரத்திற் பேயுண்டென்பது.

சகஜம்:—மாப்பூத்ததெனில் மரம்பூத்ததென்பது.

காட்சி, அநுமானம், ஆகமம் என்னும் இம்மூன்றனுள் யாவும் அடங்கும் முறை வருமாறு:—

---

0 பந்தி—யானை கட்டுமிடம்.

அபாவம், பொருள், ஒப்பு, ஒழிபு, உண்மை, இயல்பு அநுமானத்தி லும், ஐதீகம் ஆகமத்திலும் அடங்கும் என்க. அபாவம் காட்சியி லடங்குமென்பாருமுளர்.

ஏனைய வெல்லாம் மூன்றனுளடங்குமென்னும் இம்முறைபற்றி ஆகமமும் அநுமானத்திலடங்குமெனப் புத்தர் முதலாயினோர் கூறுவர். அஃததனுளடங்காதென்பது ◯ "நூலுரைத்தா னொருவனுளன்" என் னும் பரபக்கத்துச் செய்யுளிற் காட்டப்பட்டுள்ளது- அஃதாவது, காட்சி அநுமானங்களிலடங்காத பரலோக பாதாள லோகமுதலியவற்றை உணர்த்துவது ஆகமம். அவற்றை அநுமானத்தால் உணர்த்த முடியா தாகலான், ஆகமம் அநுமானத்துள் அடங்காதென்பதாம்.

காட்சியநுமானங்களா லளக்கப்படாத பரலோக பாதாளலோகங் களை அளத்தற்கு ஆகமும், காட்சியால் அளக்கப்படாத பதி, பசு, பாசப் பொருள்களை யளத்தற்கநுமானமும், அநுமிதி யுணர்விற்குக் காரணமா கிய அநுமான மெனப்படும் ஏது காட்சிப்பொருளா யிருக்கவேண்டுத லின் காட்சியும் இன்றியமையாது வேண்டப்படுவன வென்றறிந்து கொள்க. காட்சி, அநுமானம், ஆகமம் மூன்றும் முன்னர்க் கூறப் படும். (௧)

காட்சி முதலிய மூன்றின் இலக்கணம்.

மாசறு காட்சி யையந் திரிபின்றி விகற்ப முன்னா
வாசற வறிவதாகு மனுமான மவினாபாவம்
பேசுறு மேதுக்கொண்டு மறைபொருள் பெறுவதாகுங்
காசறுமுறையிம்மானத் தடங்கிடாப் பொருளைக்காட்டும்.

(கொ-டு) விகற்பமுன்னா ஐயந்திரிபு இன்றி ஆசு அறஅறிவது மாசு அறு காட்சியாகும். மறைபொருள் அவினாபாவம் பேசுறு மேதுக்கொண்டு பெறுவது அனுமானமாகும். இம்மானத்து அடங்கி டாப் பொருளைக் காட்டும் காசு அறும் உரை.

(பொ-ரை) காட்சி, அநுமானம், ஆகமம் என்னும் அம் மூன்றனுள், பெயர், சாதி முதலிய விகற்பமின்றி, நிருவிகற்ப வுணர்வைத் தனக்கு முன்னாகக்கொண்டு, ஐயவுணர்வும், விப

◯ இருநூற்பரபக்கம், சௌத்திராந்திகன் மறுதலை, செ-கஉ.

ரீத உணர்வுமின்றி, விடயங்களை நேரே யறிவதாகிய ஆன்மாவினது ஞானசத்தி குற்றமற்ற காட்சியளவை யெனப்படும். அவ்வாறு நேரே யறியப்படுவதன்றி, மறைந்து நின்ற பொருளை அதனை விட்டு நீங்காது எக்காலத்தும் உடனாய் நிகழும் ஏதுவைக்கொண்டு நிருவிகற்ப உணர்வை முன்னாகக்கொண்டு ஐயவிபரீதக் குற்றமின்றி அறிவதாகிய ஆன்மாவினது ஞானசத்தி அநுமான அளவையெனப்படும். இவ்விரண்டு பிரமாணங்களாலும் அறியப்படாத பரலோக பாதாள்லோக முதலிய பொருள்களை அறிவுடையோர் வாக்கியங்கொண்டு நிருவிகற்ப உணர்வை முன்னாகக்கொண்டு ஐய விபரீதக் குற்றமின்றி அறிவதாகிய ஆன்மாவினது ஞானசத்தி குற்றமற்ற ஆகம அளவையெனப்படும். (எ-று)

நிருவிகற்பம் என்பது விகற்பம் எனத்தலைக்குறைந்துநின்றது. விகற்பமுன்னா ஐயந்திரிபின்றி என்பதனை அனுமானத்தோடும் உரையோடுங் கூட்டிஉரைக்க.

காட்சி அநுமானங்களில் அடங்கிடும் பொருளையும் ஆத்தவாக்கியங் கொண்டறியின், அது, உரையளவை யாகாது பொருளை விளக்கும் வாக்கியம் எனப்படும். (உ)

காட்சி முதலிய மூன்றினுஞ் சேரக்கூடிய நிருவிகற்பம் முதலிய நான்கின் இலக்கணம்.

கண்டபொருளை யிரட்டுறவே கருத லையந் திரியவே
கொண்டறிரிபாம்பெயர்சாதிகுணமேகன்மம்பொருளெனவைந
துண்டவிகற்பவுணர்வினுக்குப்பொருளினுண்மைமாத்திரத்தின்
விண்ட லில்லா வறிவாகும் விகற்ப மில்லாக் காட்சியே.

(கொ-டு) விண்டல் இல்லா பொருளின் உண்மை மாத்திரத்தின் அறிவு விகற்பமில்லாக் காட்சியே ஆகும். கண்டபொருளை இரட்டுறவே கருதல் ஐயம். திரியவே கொண்டல் திரிபாம். பெயர் சாதி குணமே கன்மம் பொருள் என ஐந்து அவிகற்ப வுணர்வினுக்கு உண்டு.

(பொ-ரை) மேற்கூறிப்போந்த நிருவிகற்பம், ஐயம், விபரீதம், உள்ளவாறு அறிவதாய சவிகற்பமென்னும் காட்சி நான்கனுள், பெயர் முதலியவற்றால் பகுத்தறிதலின்றி, இஃதொன்று தோன்றுநின்றதெனப் பொருளுண்மை மாத்திரையே யறியும் ஞானசத்தி நிருவிகற்பக் காட்சி எனப்படும். அங்ஙனம் நிருவிகற்பமா யறிந்தபொருளை இஃது யாதோவென ஒன்றிற்றுணிவு பிறவாது ஆராயும் ஞானசத்தி ஐயக்காட்சி எனப்படும். அப்பொருளை அதனோடொப்புமையுடைய வேறு பொருளாக மயங்கி நிச்சயிக்கும் ஞானசத்தி திரிபுக்காட்சி யெனப்படும். ० பெயர், சாதி, குணம், கன்மம், பொருள், என்னும் ஐந்தும் அப்பொருட்கணுள்ளவாறு இனிது விளங்க உணரும் ஞானசத்தி சவிகற்பக்காட்சி யெனப்படும். (எ-று)

சவிகற்பம் என்பது விகற்பத்தோடு கூடியது எனப் பொருள்பட்டு மனக்காட்சி எனப்படும். ஆயின், முன்கண்ட வாதனைபற்றித் தோற்றுவதாகிய நினைவுணர்வும் மனக்காட்சியே யாதலின், அதுவும் சவிகற்பம் எனப்படுமோ வெனின், அந்நினைவுணர்வு இவ்விடத்து இந்திரியத்தாற் கண்ட பொருளின்கண் நிகழ்வதில்லை யாகலின், அது சவிகற்பக் காட்சியாகாது. ஆதலின், அதனை இவ்விடத்தெடுத்தோதி விலக்கவில்லை.

நிருவிகற்பம் முதலிய நான்கும் காட்சி முதலிய மூன்றினுஞ் சேரும். அவற்றுள், காட்சியிற் சேருமாறு "மாசறுகாட்சியையந்திரிபின்றி விகற்பமுன்னா ஆசற வறிவதாகும்" என்றதனால் பெறப்பட்டது. அநுமானத்தில், இம்மலை நெருப்புடைத்து எனப் பிண்டமாக அறிதல் நிருவிகற்பம். நெருப்புடைத்தோ, அன்றோ என்பது ஐயம். நெருப்புடைத்தன்று என்பது விபரீதம். புகையாகிய ஏதுவினும், அடுக்களையாகிய எடுத்துக் காட்டாலும் நெருப்புடைத்து என்று துணிதல் சவிகற்பம்.

ஆகமத்தில், இந்நூல் முப்பொருள்களை உணர்த்தும் எனப் பிண்டமாக அறிதல் நிருவிகற்பம். உணர்த்துமோ, உணர்த்தாதோ என்பது

० பெயர்-மாவென்பது. சாதி-மாவினதுதன்மை, குணம்-வண்ணம் வடிவு முதலாயின, கன்மம்-அசைதல் நிற்றல் முதலியன, பொருள்-மரம்.

ஐயம். உணர்த்தாது என்பது விபரீதம். பூருவபக்க சித்தாந்தங்களின் ஒல் உணர்த்துமென்று துணிதல் சவிகற்பம். (ந)

காட்சி, அநுமானம், ஆகமம் என்னும் மூன்றின் பாகுபாடும், அவற்றனளக்கப்படும் பொருளின் பாகுபாடும்.

காண்டல் வாயின் மனந்தன்வே தனையோ டியோகக் காட்சியென
வீண்டு நான்கா மனுமானந் தனக்கும் பிறர்க்குமென் றிரண்டா
மாண்ட வுரைதந் திரமந்திரத் தோ டுபதேசச்சொல் லெனமூன்றாம்
பூண்டவளவைக் கெதிர்புலன் றன்னியல்பு பொதுவென் றிரண்டாமே

(பொ-ரை) காட்சி, அநுமானம், ஆகமம் என்னும் அம்மூன்றனுள், காட்சிப் பிரமாணமாவது இந்திரியக்காட்சி, மானதக்காட்சி, தன்வேதனைக்காட்சி, யோகக்காட்சி என இங்ஙனம் நான்கு வகைப்படும். அநுமானப் பிரமாணமாவது தானறிதற் பொருட்டநுமானமும், பிறர்க்கறிவித்தற் பொருட்டநுமானமும் என்றிரு வகைப்படும். மாட்சிமைப்பட்ட ஆகமப் பிரமாணமாவது தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலை என மூன்று வகைப்படும். பொருந்திய இப்பிரமாணங்களான் அறியப்படும் பொருள்களது இயல்பு சிறப்பியல்பு, பொதுவியல்பு என இரண்டு வகைப்படும். (எ-று.)

மேல், நிருவிகற்பமுன்னாக என்றதனால் இந்திரியக் காட்சியும், ஆசற அறிவது என்றதனால் மானதக் காட்சியும் பெறப்பட்டிருப்பவும் அவ்விரு காட்சிகளை ஈண்டுங் கூறியதெற்றுக்கெனின், காட்சி யிலக்கணங் கூறுமுறையில் நிருவிகற்பக் காட்சியை முன்னாகக்கொண்டு சவிகற்பம் நிகழும் என மேற்கூறினார். காட்சியின் வகை கூறுமுறையில் இங்கே கூறினார் என்க.

எனவே, நிருவிகற்ப முதலிய நான்கும் தொகையால் காட்சியெனப்படும் ஒன்றற்கே உரியனவன்றி, வகையாற் காட்சி யெனப்படும் நான்கிற்கு முரியனவல்ல வென்பதறிந்து கொள்க. (சு)

சிறப்பியல்பு பொதுவியல்பின் இலக்கணம்.

அன்னியசாதி யுந்தன் சாதியுமகன்று நிற்ற
றன்னியல் பன்னி யத்தைத் தவிர்ந்துதன் சாதிக் கொத்த
றுன்னிய பொதுவி யற்கை சொன்னவிவ் விரண்டி னுள்ளே
மன்னிய பொருள்க ளியாவு மடங்கிடு மானமுற்றுல்.

(கொ-டு) அன்னியசாதியுந்தன் சாதியுமகன்று நிற்றல் தன்னியல்பு. அன்னியத்தைத் தவிர்ந்து தன்சாதிக்கொத்தல் துன்னிய பொது வியற்கை. மானம் மன்னிய பொருள்கள் உற்றுல் யாவும் சொன்ன இவ்விரண்டி னுள்ளே அடங்கிடும்.

(பொ-ரை) சிறப்பியல்பு, பொதுவியல்பு என்ற இரண்ட னுள் ஒரு பொருட்கு வேற்றுச் சாதிப் பொருளினும், தன் சாதிப் பொருளினும் அஃதாவது, தேமா என்றவிடத்துப் பலா முதலிய வேற்றுச்சாதிப் பொருளினும், புளி மா முதலிய தன் சாதியினுஞ் செல்லாது, தனக்கு மாத்திரையே நிலைபெறுந் தன்மை சிறப்பியல்பு. வேற்றுச்சாதிப் பொருண்மாத்திரையிற் செல்லாது, தன் சாதிப் பொருட்கெல்லாம் அஃதாவது, மா வென்ற பொழுது பலா முதலியவற்றை நீக்கி, தே மா முதலிய தன் சாதிக்கெல்லாம் ஒப்ப நிலை பெறுந்தன்மை பொருந்தியது பொதுவியல்பு. காட்சி முதலிய பிரமாணங்களால் பொருந்திய பிரமேயப் பொருள்களை அறியுமிடத்து, அப்பொருள்க ளெல் லாம் சிறப்பியல்பு, பொதுவியல்பு என்னும் இவ்விடத்துக்கூறிய இவ்விரண்டியல்பினுள் ஒன்றுபற்றியறியப்படும். (எ-று)

எனவே, பொதுவியல்பு, சிறப்பியல்பென்னும் இவ்விரண்டின் வேருகிய வேற்றியல்பு பற்றி ஒரு பொருள் அறியப்படுமாயின், அங்ங னம் அறியும் அறிவு பிராமாணியமாகாது. அஃதாவது, ஒரு மாமரம், மா வென்னும் பொதுவியல்பு பற்றியாவது, தேமா வென்னும் சிறப் பியல்பு பற்றியாவது அறியப்படுமாயின், அங்ஙனம் அறியும் அறிவு பிராமாணியமாகும். அவ்வாறின்றி, வேம்பு முதலிய வேறு மரங்களாக அறியப்படுமாயின், அங்ஙனம் அறியும் அறிவு பிராமாணியமாகாது. பிராமாணியம் என்பது, பிரமாணத் தன்மையுடையது. அல்லது, பிர மாணம் என அங்கீகரிக்கப்படுவது.

இவ்வாறு, பொருளினியல்பை யுள்ளவாறு அறியும் அறிவு பிராமாணியம் என அறிவதும் அவ்வறிவேயாகும். பிராமாணியம் இல்லாத அறிவை, இல்லாதது என அவ்வறிவு அறிதல் கூடாது. அது, பிறிதொன்றினாலேயே அறியப்படும். இவ்வாறன்றித் தனது பிராமாணியமும் பிறிதொன்றானறியப்படும் என்பர் தார்க்கிகர் முதலாயினோர். அவர், காண்டல் முதலியவற்றையே பிரமாணமெனக் கொண்டாராதலின் அவை பிராமாணியமாதலே உயிரினறிவு அறியுமென்பர். உண்மையில் உயிரினறிவே பிரமாணமாதலின் அவர் கருத்துப் பொருந்தாது.

தன்னாலறியப்படுவதை சுதத்துவம் எனவும், பிறிதொன்றானறியப் படுவதைப் பாதத்துவமெனவும் வடநூலார் கூறுவர்.

சாதி என்பது அந்தணர் முதலிய வருணத்தாரைக் குறித்த தன்று. ஒன்று போலுள்ள பல பொருட்குப் பொதுவாயதோர் தன்மையைக் குறித்தது. அஃதாவது பலவேறு வகைப்பட விளங்கும் மனிதர்களிடத்து மனிதத் தன்மைச் சாதி பொதுவாயிருப்பது போலாம். இது சூசி கடாகநயம். அதாவது, ஊசியும் கடாரமும் செய்யப் பொருள்கொடுப்பின், வாங்கியவன் கடாரத்திற்கு முன்னும், ஊசிக்குப் பின்னும் பொருள் வாங்கிய பொழுதினும், ஊசி சிறுவேலையாதலின், முன்னர்க் கொடுப்பதுபோல, பிரமாணங்களி னிலக்கணம் பொருள்களி னிலக்கணம் என்னுமிரண்டினுள், பின்னையது சுருங்கியதாகலின், முன்னர்க் கூறப்பட்டது. (ரு)

இந்திரியக்காட்சி, மானதக்காட்சிகளின் இலக்கணம்.

உயிரினோ டுணர்வு வாயி லொளியுரு வாதி பற்றிச்
செயிருறு விகற்ப மின்றித் தெரிவதிந் திரியக்காட்சி
யயர்விலிந் திரிய ஞான மைம்புலன் சார்ந்து யிர்க்கண்
மயர்வற வந்த ஞான மானதக் காண்ட லாமே.

(கொ-டு) ஐம்புலன் சார்ந்து அயர்வி லிந்திரிய ஞானம் மயர்வற உயிர்க்கண் வந்த ஞானம் மானதக்காண்டலாமே.

(பொ-ரை) மேற்கூறிய இந்திரியக்காட்சி முதலிய நான்கனுள், ஆன்மாவினின்றும் விடயங்களை நோக்கி ஓடும் அறிவாகிய சிற் சத்தி, கண் முதலிய பொறிகளையும், அப்பொறிகட்குத் துணைசெய்து உடனிற்கும் தேயு முதலிய பூதங்களையும்,

அப்பூதங்கட்கு முதற்காரணமாய் அவற்றை விட்டு நீங்காது உருவம் முதலிய தன்மாத்திரைகளையும் ஆதாரமாகக் கொண்டு, ஐயவிபரீதக் குற்றங்களும், பொருந்திய பெயர் சாதி முதலிய விகற்பமுமின்றி, உருவம் முதலிய விடயங்களை நிருவிகற்பமாய் அறியும் அறிவு இந்திரியக்காட்சி யெனப்படும். அவ்வாறு ஐம்புலன்களைச் சார்ந்து அறிந்த பின்னர், அக்காட்சியை மீள மறத்தலின்றி, சித்தத்தாற் சிந்திக்கப்பட்டு நிலைபெறும் அவ்விந்திரியக்காட்சியறிவு பெயர், சாதி முதலியவற்றால் விபரீதமாதலின்றி உள்ளவாறு நிச்சயமாப் புத்தி தத்துவத்தின்கண் வருதலாகிய சவிகற்பவுணர்வு மானதக்காட்சி யெனப்படும். (எ-று)

ஓடுணர்வு என்பது ஓடும் உணர்வு என்னும் பொருள் குறித்தலின் வினைத்தொகை. ஒளி என்பது ஒளியையுடைய தேயுவைக் குறித்தலின் ஆகுபெயர். ஆதி என்பதனை ஒளியோடுங் கூட்டுக.

சார்ந்தபின் என்றிருக்கவேண்டியது சார்ந்து எனத்திரிந்து, சார்தல் காரணமாக உண்டாகும் அறிதல் என்னுங்காரியத்தின் மேனின்றது. உயிர் என்பது புத்திதத்துவத்தைக் குறித்தது.

வந்தஞானம் என்பது, "ஆறுசென்றவெயர்" என்ற விடத்து, வழிச்சேறலால் உண்டாகிய வெயர்வை யென்பது போல, வருதலாகிய ஞானம் என்னும் பொருள்பட நின்றது.

புத்தியையின்றி இந்திரியம் தொழிற்படாதாயினும் புத்தி துணையாக உள்நிற்ப, இந்திரியம் முற்பட்டுத் தொழிற்படுதல்பற்றி இந்திரியக்காட்சி எனவும், மனம் தொழிற்படுங்கால் இந்திரியமும் தொழிற்படினும், மனத்தின் தொழிலாகிய பகுத்தறிவு முற்பட்டும், இந்திரியத்தின் தொழிலாகிய பொருள் மாத்திரையான அறிவு உட்பட்டும் நிற்றலின் மானதக்காட்சி யெனவும் வகுத்தவாறு உய்த்துணர்க. (௬)

தன்வேதனைக்காட்சி, யோகக்காட்சிகளின் இலக்கணம்.

அருந்தின்பத் துன்ப முள்ளத் தறிவினுக் காரகமாதி
தருந்தன்வே தனையாங் காட்சி சமாதியான் மலங்கள்வாட்டிப்
பொருந்திய தேசகால வியல்பகல் பொருள்க ளெல்லா
மிருந்துணர் கின்ற ஞான மியோகறக் காண்டலாமே.

(கொ-டு) தன் வேதனைக்காட்சியாம். மலங்கள் சமாதியால்வாட்டி இருந்து பொருந்திய தேசகால இயல்பு அகல் பொருள்களெல்லாம் உணர்கின்ற ஞானம் நல்யோகக் காண்டலாமே.

(பொ-ரை) அம்மானதக் காட்சியால் பகுத்தறியப்பட்ட பொருளில், மனத்தின் குணமாகிய சத்துவ குண விளக்கத்தால் நுகரப்படும் இன்பமும், இராசதகுணவிளக்கத்தால் நுகரப்படுந் துன்பமும், தமோகுண விளக்கத்தால் நுகரப்படும் மோகமும், புருடனது அறிவிற்கு விடயமாகும்படி காலம், நியதி, கலை, வித்தை, அராகம் முதலிய ஐந்து தத்துவங்களானும் சேர்க்கப் படும். அவ்வின்பத் துன்பங்களை யறியும் ஞானசத்தி தன் வேதனைக்காட்சி எனப்படும். தானாகிய ஆன்மா சுகதுக்கமாகிய வேதனையு ளழுந்துதலால் தன்வேதனைக்காட்சி எனப்பட்டது. இவ்வாறு, சுகதுக்க வசப்படாது அங்ஙனம் வசப்படுதற் கேது வாய்த் தடைசெய்து நின்ற மலசத்திகளை, இயமம், நியமம் முத லியயோக சமாதியாற் கெடுத்து,ஓரிடத்து ஒருகாலத்து இருந்த படி இருந்து, பொருந்தப்பட்ட மூவிடத்து முக்காலத்து மியல் பாக விரிந்த பொருள்களெல்லாவற்றையும் காண்கின்ற காட்சி யாகிய ஞானசத்திநன்மையாகிய யோகக்காட்சி எனப்படும். (எ-று) (எ)

இருவகை அநுமானங்களின் இலக்கணம்.

**பக்கமூன்றின் மூன்றேது வுடைய பொருளைப் பார்த்துணரத்
தக்கஞானந் தன்பொருட்டாம்பிறர்தம் பொருட்டாமநுமானந்
தொக்கவிவற்றாற் பிறர் தெளியச் சொல்லலாகு மச்சொல்லு
மிக்க வந்நுவயத்தினொடு வெதிரேகச்சொல் லெனவிரண்டாம்**

(கொ-டு) மூன்று ஏதுவுடைய பொருளை பக்கமூன்றின் பார்த் துணரத் தக்கஞானம் தன் பொருட்டாம். தொக்க இவற்றால் பிறர் தெளியச் சொல்லல் பிறர் தம் பொருட்டநுமானமாம். ஆகும் அச்சொல் லும் மிக்க அந்நுவயத்தினொடு வெதிரேகச் சொல்லென இரண்டாம்.

(பொ-ரை) இயல்பு முதலிய மூன்றேதுவினுள், ஒரு ஏதுவுடைய பொருளைப் பக்கம் முதலிய மூன்றின் வைத்துப்

பொருளைவிட்டு நீங்காத ஏதுவாகிய அவினாபாவம்பற்றி ஆராய்தற்குரிய ஞானசக்தி தன் பொருட்டநுமானம். பொருந்திய அவ்வேதுக்களானே தானறிந்ததனைப் பிறர் அறியப்போதிப்பதாகிய ஞானசத்தி பிறர் பொருட்டநுமானம். அங்ஙனம், பிறரறியப் போதிப்பதாகிய அநுமானச்சொல் மேலாகிய உடம்பாட்டுச் சொல்லும், எதிர்மறைச் சொல்லும் என இரண்டு வகைப்படும். (எ-று) (அ)

பக்க மூன்றின் பெயரு மிலக்கணமும்.

மூன்று பக்கம் பக்கநிகர் பக்க நிகரில் பக்கமெனத்
தோன்றும் பக்கந்துணிபொருளுக் கிடமா முவமை நிகர்பக்க
மான்ற பொருள்சென் றடையாத விடமா நிகரில் பக்க முத
லேன்ற விரண்டும் பொருளுண்மைக் கிடமா மொன்று பொருளின்றாம்

(பொ-ரை) பக்கமூன்றுவன:—பக்கமும், சபக்கமும், விபக்கமும் என்பனவாம். சபக்கம் என்பது சமானமானபக்கம். விபக்கம் என்பது சமானமில்லாத பக்கம். அவற்றுள் ஐயுற்றுத் துணிபற் பாலதாய பொருளிருக்குமிடம் பக்கமெனப்படும். அப்பொருளுக்குவமையாய் எடுத்துக் காட்டப்படுவதாய்த் துணிபப்பட்ட பொருளிருக்கு மிடம் சபக்கமெனப்படும். மாட்சிமையாகிய அப்பொருளில்லாதவிடம் விபக்கமெனப்படும். இம்மூன்றனுள் முதற்கட் பொருந்திய பக்கம், சபக்கம் இரண்டும் பொருள் உண்டென அறிதற்கிடமாம். ஏனை விபக்கம் பொருளில்லை யென்றறிதற்கிடமாம். (எ-று)

துணிபொருள் என்பது துணியும் பொருள் என எதிர்காலவினைத்தொகையாயிற்று. இம்மலை நெருப்புடைத்து, விட்டு நீங்காத புகையுடைமையால் என்னுமிடத்து, நெருப்புக்கும் புகைக்கும் விட்டு நீங்காமை உண்டோ என்னும் ஐயத்தை நீக்குதற்பொருட்டு, சபக்கம், விபக்கம் இரண்டும் வேண்டப்படுமென்று கூறவேண்டி, பக்கமும் சபக்கமும் பொருளுண்மைக் கிடமென்றும், விபக்கம் பொருளின்மைக்கிடமென்றுங்கூறினர், கூறவே, பக்கத்தில் காணப்படும் விட்டு நீங்காமைக்கு, சபக்கம் உடன்பாட்டு முகத்தாலும், விபக்கம் எதிர் மறைமுகத்தாலும் எடுத்துக்காட்டாகி ஐயம் நீக்கியவாறும்.

புகை காணப்படுகின்ற மலையில் அக்கினி உண்டென்றறிதலால் மலை பக்கமும், புகையிருக்கும் அடுக்களையில் அக்கினியிருத்தல்போல வென்றறிதலால், அடுக்களை சபக்கமும், அக்கினியில்லாத தடாகத்தில் புகையில்லை யென்றறிதலால், தடாகம் விபக்கமுமாகும். (கூ)

ஏது மூன்றின் பெயரு மிலக்கணமும்.

ஏது மூன்றுமியல்புகா ரியத்தோட நுபலத்தி யிவை
யோதி னியல்பு மாமரத்தைக் காட்ட லுறுகா ரியம்புகைதன்
ஞுதி யாய வனல் காட்ட லாகு மநுப லத்தியது
சீத மின்மை பனியின்மை காட்டல் போலுஞ் செப்பிடினே.

(பொ-ரை) மேல் எடுத்துக்கொண்ட மூன்றேதுவாவன இயல்பும், காரியமும், அநுபலத்தியுமாம். இவற்றிற்கு இலக்கணங் கூறுமிடத்து, மா முதலிய சொற்கள், மா முதலிய பொருளை யுணர்த்துமிடத்து, அச் சொற்களில் இயல்பால் உளதாகிய ஆற்றல் இயல்பு ஏதுவெனப்படும். புகை முதலிய காரியங்கள், நெருப்பு முதலிய தத்தம் காரணங்களை யுணர்த்துமிடத்து, அக்காரியங்கள் பொருந்திய காரிய ஏதுவெனப்படும். சொல்லுமிடத்து, குளிரில்லாமை முதலிய காரியத்தின் இன்மைகள், பனியில்லாமை முதலிய காரணத்தின் இன்மைகளை யுணர்த்துமிடத்தும், பனியில்லாமை முதலிய காரணத்தின் இன்மைகள், குளிர் வாராமை முதலிய காரியத்தின் இன்மைகளை யுணர்த்துமிடத்தும், அவ் வின்மைகள் அநுபலத்தி ஏது வெனப்படும். (எ-று

சொற்களினிடத்துப் பொருள்களை யுணர்த்துஞ் சத்தியுண்டு. அந்தச் சத்தி இயல்பேது வெனப்படும். சொற்கள், ஒரு பொருளை யுணர்த்தும் ஒரு சொல், பல பொருளை யுணர்த்தும் ஒரு சொல் முதலியனவாய்ப் பல திறப்படும். படவே, பல பொருளை யுணர்த்தும் ஒரு சொல், தன்னிடத்துள்ள சத்தியால் பொருளை யுணர்த்துதல் கூடாது அச்சொல்லுடன் இணைந்து நிற்கும் வினையே அச் சொற்பொருளை யுணர்த்தும். எதுபோலுமெனின், மா வென்னுஞ் சொல், மரம், வண்டு, குதிரை, இலக்குமி முதலிய பல பொருளை யுணர்த்துமேனும், மாப் பூத்தது என்றவிடத்து, பூத்தல் வினை மாத்திற்கியல்பே யன்றி, ஏனையவற்

றிற் கியல் பன்மையின், மரம் பூத்த தென்றுணர்த்துதல் போலாம். இதனை, "வினை சார்பினமிடமேவி விளங்காப் பல பொருளொரு சொல்" என்னும் நன்னூலானுமுணர்க. எனவே, சொற்கள், வினையைக்கொண்டு வினை முதலை யுணர்த்துங்கால், அவ்வினையும் இயல்பேது வெனப்படும். இவ்வுண்மையுணர்த்துதற் பொருட்டே "மா மரத்தைக் காட்டல் இயல்பு" என்றார் ஆசிரியர். ஆகவே, வினையைக்கொண்டு வினை முதலை யறிதலும், காரிய உண்மையைக்கொண்டு காரண உண்மையை யறிதலும், காரிய இன்மையைக்கொண்டு காரண இன்மையை யறிதலும் என அநுமான உணர்ச்சி மூவகைப்படும். இவற்றிற்கு, முறையே இயல்பு, காரியம், அநுபலத்தி என்னும் மூன்றும் ஏதுவாயின. காரியம் எனினும் உபலத்தி எனினும் ஒக்கும். உள்ளதென்னும் உணர்வு உபலத்தி; இல்லதென்னும் உணர்வு அநுபலத்தி; இவை முறையே புகை உள்ளதால் அக்கினி உண்டு, சீதமின்மையால் பனியில்லை என்றறிவது போல்வன.

காரிய ஏதுக் கூறவே, ஒற்றுமைபற்றிக் காரண ஏதுவுங் கொள்ளப்படும். அதாவது, இடித்து மின்னி இருண்டெழுந்த மேகம் மழை பெய்தலைக் காட்டுதல் போல்வது.

சீதமின்மை பனியின்மை காட்டலென்பது, புகையுண்மை தன்னின் வேறாகிய நெருப்புண்மையைக் காட்டுவது போல, பனியின்மையை வேறு பிரித்துக் காட்டுவதன்று. ௦வாளைமீன் நினைத்தலே கூடுதலாகும். அதுபோலச் சீதமின்மையே பனியின்மையைக் காட்டுமென்பதாம். போலும் என்பது அசை. (௯௦)

உடம்பாட்டுச்சொல், எதிர்மறைச் சொற்களின் இலக்கணம்.

புகையா லனலுண் டடுக்கலைபோ லென்னப்புகற லந்நுவயம்
வகையா மனலி லாவிடத்துப் புகையின் றுகு மலரினொடு
முகையார் நீரிற் போலென்று மொழிதல்வெ திரேகச்சொலிவை
தொகையா ருருப்பைந் தொடங்கூடச் சொல்லுவாருமுளர் துணிந்தே.

---

௦ வாவ மீனுள்ள றலைப்படலு மாளல்லான்
செல் வக்குடியிற் பிறத்தலும்— பல்லவையு
ளஞ்சுவான் கற்றவநூலு மிம் மூன்றுந்
துஞ்சுமன் கண்ட கனா (திரிகடுகம் ௬—எ.)

(பொ-ரை) மேல் எட்டாவது செய்யுளில் கூறிய உடம்பாடு, எதிர்மறை யென்னும் சொல்லிரண்டினுள், புகையுள்ள விடத்தே நெருப்புண்டென்பதும், அதற்குப் புகையிருக்கும் அடுக்களையை உவமை கூறுவதும் உடன்பாட்டுச் சொல்லாம். விளக்கமாகிய நெருப்பில்லாவிடத்துப் புகையில்லை யென்பதற்கு மலரும் அரும்பும் நிறைந்த தாமரை ஓடையை உவமை கூறுஞ் சொல் மறுதலைச் சொல்லாம். இவ்விருவகைச் சொற்களையும் தனித்தனி மேற்கோளும், ஏதுவும், உவமானமும், உபநயமும், நிகமனமும் என்னும் தொகை பொருந்திய ஐவகை உறுப்புக் களால் இணங்க வைத்துத் தெளியக் கூறுவாருமுளர். (எ-று)

அது காட்டுதும் ; உடம்பாடு:—

மேற்கோள் :—இம்மலை தீயுடைத்து. ஏது :—புகையிருத்தலினால். உவமானம் :—புகையிருக்கும் அடுக்களைபோல். உபநயம் :—இம்மலையும் புகையுடைத்து. நிகமனம் :— ஆதலால் தீயுடைத்து.

எதிர்மறை:—மேற்கோள் :— இம்மலையிற் புகையில்லை. ஏது :—நெருப்பில்லாமையால். உவமானம் :—நெருப்பில்லாத தடாகம்போல் உபநயம் :— இம்மலையினும் நெருப்பில்லை. நிகமனம் :—ஆதலால் புகையில்லை என்பதாம். இங்ஙனங் கூறுவோர் தார்க்கிகர். (கக)

அநுமானத்தின் அடங்கும் பிற அளவைகளின் இலக்கணம்.

போது நாற்றத் தாலறிதல் பூர்வக் காட்சி யனுமான
மோது முரையா லறிவினள வுணர்தல் கருத லனுமான
நீதியான் முற் கன்மபல நிகழ்வதிப்போ திச்செய்தி
யாதியாக வரும் பயனென் றறிதலுரையா லனுமானம்.

(கொ-டு) நீதியான் இச்செய்தி முன் கன்மபலம். இப்போது நிகழ்வது ஆதியாகவரும் பயன் என்று அறிதல் உரையாலனுமானம்.

(பொ-ரை) முதலாவது செய்யுளில் மேலும் பிரமாணங்களுள வென்பாருமுளர் என்றமையால், அப்பிரமாணங்கள் எவையோ வென்னும் சந்தேகத்தை நீக்குதற்கு இவ்விடத்துச்

சில பிரமாணங்களின் இலக்கணங் கூறுகின்றார். அவை வருமாறு:—வாசனை முதலிய ஏதுவைக்கொண்டு காட்சிக்குவிஷயமாகும் வாசனையுடைய புட்பத்தை முன் கண்ட வுணர்ச்சியினால், இவ்விடத்துப் புட்பமுண் டென்றறிதல் பூர்வக்காட்சியநுமானம். சொல்லப்பட்ட வார்த்தை முதலிய ஏதுவைக்கொண்டு கருத்திற்கு விஷயமாகும், சொல்லிய அவனறிவின் அளவு முதலியவற்றை யறிவது கருதலநுமான மெனப்படும். இவ்விரண்டினும் வேறாய், முறைமையினால் முன்வினையெனப்படும் இதமகிதங்களாவன, முற் பிறவியிற் செய்யப்பட்ட முயற்சியே யானால், இப்பொழுதும் அம்முயற்சிகளைச்செய்தால் மேலைக்கு வினையாகுமென்றாற்போல், நூல்களுள் சொல்லியதுகொண்டு சொல்லாத பொருளையும் ஒப்புமைபற்றி யூகித்துத் துணிதல் உரையநுமான மெனப்படும். (எ-று)

பதிமுதலிய பொருள்களை அளத்தற்கு ஆகமத்திற் கூறப்படும் அநுமானம், அவ்வாகமத்தா லறியப்படுதலின், அதனையும் உரையநுமானமென்பாருமுளர்.

இதனானே, அவையிற்றின் மேலுமறைவர் எனப்பட்ட அளவைகள், பூர்வங்கண்ட காட்சிபற்றி அநுமானத்தில் வைத்தறியப்படுங்காட்சியநுமானம்போல, ஏனைய விரண்டும் முன்கண்டதுபற்றி யறியப்படுதலின், அந்தப் பூர்வக்காட்சி யநுமானத்தோடொப்பவைத்து அநுமானத்து ளடக்கிக் காட்டப்பட்டன. (கஉ)

ஆகமப் பிரமாணம் மூன்றின் இலக்கணம்.

அநாதியே யமலனாய வறிவனா லாக மந்தான்
பினாதிமா றின்றிப் பேணா றந்திர மந்தி ரங்கண்
மனாதிக ளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மை யாகுந்
தனாதியீ றிலாதான் றன்மை யுணர்த்துத லுபதேசந்தான்.

(பொ-ரை) அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனருளிச்செய்த நூல்களெனப்படும் வேதாகமங்கள் கருமகாண்டம், உபாசனா காண்டம், ஞானகாண்டம் என மூவகைப்படும். அவற்றுள், கரும காண்டம்பற்றிப் பின்னைய உபாசனாகாண்டம்

ஞானகாண்டங்கட்கு மாறுபாடின்றி யநுட்டித்தலையறிவது தந்திரகலையாகிய உரையளவை யெனப்படும். உபாசனா காண்டம் பற்றி மன முதலிய கருவிகளை யடக்கித் தெய்வத்தை வழிபடும் உண்மையை யறிவது மந்திரகலையாகிய உரையளவை யெனப் படும். ஞானகாண்டம்பற்றித் தனக்கு முதலு முடிவுமில்லாத இறைவன் தன்மைகளைத் தானுணருமாறும், பிறர்க் குணர்த்து மாறும் அறிதல் உபதேச கலையாகிய உரையளவை யெனப் படும். (எ-று)

வேதமும் ஆகமமெனப்படுமாதலின் ஆகமம் என்பதற்கு வேதாகமங்கள் என உரை கூறப்பட்டது.

உண்மை யுணர்த்துதற்குரியவன் என்பதுணர்த்துதற்கு அநாதியே யமலனாய அறிவனென்றார். மல சகிதனுயுள்ளவன் உண்மை யுணரானாதலின், அவன் வாக்கியம் ஆப்த வாக்கியமாகாது. அறிவனால் என்றவிடத்து அறிவனது நூல் என்னும் பொருள்பட ஆறும் வேற்றுமையுருபு தொக்கு நின்றது. அவ்வுருபு செய்தலுரிமைக்கண் வந்தது. எனவே, அறிவன் அருளிச் செய்த நூல் என விரியுமாறு காண்க.

இறைவன் றன்மை :—எவ்வாற்றானுந் தன்னின் வேறல்லாத எண் குணமுடையனாதல், பொருட்டன்மைபற்றித் தன்னின் வேறாகிய பசு, பாசங்களை அடிமையும், உடைமையுமாக உடையனாதல் முதலியன.

இனி, ஞானகாண்டத்துள்ள பிரமாணவியலும், இலக்கணவியலும் தந்திரகலை யெனவும், சாதனவியல் மந்திரகலை யெனவும், பயனியல் உபதேச கலையெனவும், இவ்வாறு ஞானகாண்ட மொன்றனையே மூவகைப்படுத்துக் கூறுவாருமுளர். அவர்க்கு ஏனை உபாசனா காண்டம் கன்மகாண்டங்கள் பிரமாணத்துளடக்கப்படாமையின் அது பொருந்தாது. சரியை முதலிய நான்கு பாதத்துள்ளும், தனித்தனி நான்கு பாதமுளவாமாறுபோல, தந்திரகலை முதலிய மூன்றனுள்ளும், தனித்தனி மூன்று கலையுளவெனக் கொள்ளுதலே யமையும். அவ்வாறு கொள்ளுமுறையில், ஞானகாண்டத்தை மூவகையாகக் கூறுதலும் பொருந்தும்.

இனி, தார்க்கிகர் முதலியோர் சொற்களைக் கொண்டு பொருளையுணர்தலால், அச் சொற்களும் உரையளவை யென்பர். அவை, பர

லோக பாதாள லோகங்களைக் காட்டுதல் கூடாமையின், சொற்களினி டத்துள்ள ஆற்றலாகிய இயல்பேதுப்பற்றி யறிவதாகிய அநுமான விசேடமாவனவன்றி உரையளவை யாகாமை யறிக.

சொல்லாலறிந்தேன் என்றநுபவம் நிகழ்தலின், அச்சொல் அநுமா னத்தின் வேறான வேறளவையாவதன்றி அநுமானத்துளடங்கா தென் பரேல், குளிரின்மை பனியின்மை முதலியன, அநுபலத்தியாலறிந் தேன் என்றநுபவம் நிகழ்தலின் இவ்வநுபலத்தியைக் காட்சி முதலிய வற்று ளடக்குதல் அவர்க்குக் கூடாது. எனவே, அநுபலத்தியைக் காட்சி முதலியவற்று ளவரடக்குமாறு போல, சொல்லாற் பொருளை யுணர்தலும் அநுமானத்துளடங்கு மென்றறிந்துகொள்க (கரு)

அநுமான அளவையை உபயோகிக்குமிடத்து உண்டாம் குற்றங்களின் பாகுபாடு.

வேறு.

ஈண்டு பக்கப் போலிநான் கேதுப் போலி யொருமூன்றாய்
வேண்டுமெழுமூன்றாகும்விளங்குவமைப்போலியீரொன்பான்
காண்டிந்தோல்வித்தானமிரண்டிருபத்திரண்டாங்கருதிலிவை
யாண்டுமொழிவ ரவையெல்லா மளக்கி லறுபத்தைந்தாகும்.

(பொ-ரை) மேற் கூறிப்போந்த அநுமானத்திற்குரிய பக்க முதலிய துணைகளுள், துணிபொருட் கிடனாதலாகிய பக்க இலக்கணத்திற் குறைபாடுடைத்தாயும், ஒருபக்க மொத்துப் பக்கம் போலத் தோன்றுவதாகிய பக்கப்போலி, துணியும் பொருட்கு இடனாகாததூஉம், அதற்கு ஒரு பக்கம் இட னாகாததூஉம், துணிந்த பொருட்கு இடனாவதூஉம், அதற்கு ஒரு பக்கம் இடனாவதூஉம் என நான்குவகைப்படும். ஏது விலக்கணத்திற் குறைபாடுடைத்தாயும், ஒரு பக்கம் ஒத்து ஏதுப்போலத் தோன்றுவதாகியஏதுப்போலி, துணியப்படாததூ உம், மறுதலைக்கட்படுவதூஉம், ஒருதலைப்படாததூஉமென மூவகைப்பட்டு, விரியான் இருபத்தொன்றாம். உவமை இலக் கண மின்றியும் உவமைபோலத் தோன்றுவதாகிய உவமைப் போலி, உடம்பாடு பற்றியும், எதிர்மறைபற்றியும் இருவகைப்

பட்டு, விரியால் பதினெட்டுவகைப்படும். இனி, தர்க்க வாதத்தின் கண் பேசத்தெரியாமையாகிய தோல்வித்தானம், மயங்கப்பேசுதலும், சும்மாவிருத்தலும் என இருவகைப்பட்டு, விரியான் இருபத்திரண்டாம். அவையெல்லாம் அளக்குமிடத்து அறுபத்தைந்தாம். இவைகளை விசாரிக்கில் அநுமான அளவைக்கு எவ்விடத்திலும் குற்றங்களாமென்று விடுப்பர். (எ-று)

இவ்வறுபத்தைந்தும் குற்றமாதலின் ஆகம அளவைக்கு முன்னாக அநுமானத்தோடுவையாது இறுதிக்கண் வைத்தார்.

பக்கப்போலி நான்கிற்கும் உதாரணம்:—

(1) துணியும்பொருட்கு இடனாகாதது. "ஆகாயத்தாமரை மணமுடைத்து, தாமரைத்தன்மையுடைமையால், தடாகத்தாமரைபோலும்" என்பது. இங்கே மணமுடைத்து என்னுந் துணிபொருட்கு இவ்பொருளாகிய ஆகாயத்தாமரை இடமாகாமை காண்க.

(2) துணியும் பொருட்கு ஒரு பக்கம் இடனாகாதது. "சத்தம் அநித்தியம், கண்ணாற் காணப்படுதலால், குடம்போலும்" என்பது. இங்கே அநித்தியமாகிய துணிபொருளுக்குச் சத்தமாகிய பக்கம் இடமாகிக் கண்ணாற் காணப்படுதலென்னும் ஏதுவிற்கு இடமாகாமை காண்க.

(3) துணிந்தபொருட்கு இடனாவது. "அடுக்களையில் அக்கினி உண்டு, புகையுடைமையால், புகைகாணப்படும் இடங்கள்போல" என்பது. இங்கே அடுக்களையில் அக்கினியுண்டென்பது துணிந்தபொருள். ஐயுற்றுத்துணியும் பொருட்கிடமாவது பக்கமேயன்றித் துணிந்த பொருட்கிடமாவது பக்கமாகாமையின் அடுக்களை பக்கப்போலியாயிற்று

(4) துணிந்த பொருட்கு ஒருபக்கம் இடனாவது, "இம்மது சாத்தனாற் பானம்பண்ணப்பட்டது, திரவகத்திரவியமாகலான், பால்போலும்" என்பது. இங்கே பானம் பண்ணப்பட்டமது இதுவெனச் சுட்டியறியவாராமையின் பானம் பண்ணப்பட்டது என்னுந் துணிந்த பொருட்கு மது இடமாகாமல் திரவகத்திரவியம் என்னும் ஏதுவிற்கு இடமாதல் காண்க.

ஏதுப்போலி இருபத்தோன்றவன:—

(1) சார்பில்லது.
(2) சார்புண்மை யறியப்படாதது எனச்சார்பு பற்றிய குற்றம் இரண்டு.
(3) சொரூப மில்லது,
(4) சொரூபமுண்மை யறியப்படாதது,
(5) சொரூபத்தின் விசேடணமில்லது,
(6) சொரூபத்தின் விசேடண முண்மை யறியப்படாதது,
[7) சொரூபத்தின் விசேடியமில்லது,
(8) சொரூபத்தின் விசேடியமுண்மை யறியப்படாதது,
(9) சொரூபம் ஒருபக்க மில்லது,
(10) சொரூபம் ஒருபக்க முண்மையறியப்படாதது,
(11) சொரூபம் பரனுக்குடன்பாடில்லது எனச் சொரூபம் பற்றிய குற்றம் ஒன்பது.
(12) சாத்தியத்தோடு வியாத்தியுண்மை யறியப்படாதது,
(13) செயற்கைபற்றி வியாத்தி யுடையது என வியாத்தி பற்றிய குற்றம் இரண்டு.

இவ்வாறு பக்கவிருத்தி துணியப்படாத ஏதுப்போலி பதின்மூன்று.

(14) மறுதலைப்பொருள் சாதிப்பது,
(15) மறுதலைப்பொருள் சாதிப்பதாய்ப் பிறிதோரேதுவை உடன் கொண்டு வருவது,
(16) காட்சியளவையால் மறுக்கப்பட்டுக் கொண்டுவருவது,
(17) கருதலளவையால் மறுக்கப்பட்டுக்கொண்டுவருவது,
(18) உரையளவையால் மறுக்கப்பட்டுக்கொண்டு வருவது என மறுதலைத்தலையுடைய ஏதுப்போலி விரி ஐந்து.
(19) பக்க சபக்க மாத்திரையினன்றி விபக்கத்துஞ் சேறலுடையது,
(20) சபக்கத்திற் சேரலின்றிப் பக்க மாத்திரையிலுள்ளது,
(21) சபக்க விபக்கங்கள் கிடைக்கப்பெறாதது என ஒருதலைப்படாத ஏதுப்போலி விரி மூன்று.

ஆக இருபத்தோன்றிற்கும் உதாரணம்:—

(1) சார்பில்லது. "ஆகாயத்தாமரை மணமுடைத்து, தாமரைத் தன்மையுடைமையால், பொய்கைத்தாமரை போலும்" என்பது. இங்கே

தாமரைத்தன்மை யென்னும் ஏதுவிற்கு இல்பொருளாகிய ஆகாயத் தாமரை சார்பில்லாமை காண்க.

(2) சார்புண்மையறியப்படாதது. "கடமுதலியன பரமாணு ரூபம், நித்தியமாகையால், பாஞ்சராத்திர மதத்தில் ஆன்மாவைப்போல" என்பது. இங்கே நித்தியம் என்னும் ஏது கடமுதலியவற்றில் அறியப்படாமை காண்க.

(3) சொரூபமில்லது. "சத்தம் அநித்தியம், காணப்படுகையால்" என்பது. இங்கே காணப்படுகை என்னும் ஏதுவின் சொரூபம் சத்தத்திலில்லாமை காண்க.

(4) சொரூபமுண்மையறியப்படாதது. "புகையோ பனியோ வென்னும் சந்தேகமுள்ளவிடத்தில் புகையென்றெண்ணி இம்மலை நெருப்புடையது, புகையுடைமையால்" என்பது. இங்கே புகையுடைமை என்னும் ஏதுவின் சொரூபம் நிச்சயிக்கப்படாமை காண்க.

(5) சொரூபத்தின் விசேடணமில்லது. "சத்தம் அநித்தியம், கண்ணுக்குத் தெரியுங் குணமாகையால்" என்பது. இங்கே குணத்திற்கு விசேடணமான கண்ணுக்குத் தெரியும் என்பது சத்தத்தினிடத்து இல்லாமை காண்க.

(6) சொரூபத்தின் விசேடணமுண்மை யறியப்படாதது. "கபிலர் இப்பொழுது விருப்பு வெறுப்புடன் கூடினவர், தத்துவ ஞானமில்லாத புருடராகையால்" என்பது. இங்கே தத்துவஞானமில்லாமை என்னும் விசேடணம் ஐயத்திற்கிடமாதலின் விசேடணத்தின் உண்மை யறியப்படாதாயிற்று.

(7) சொரூபத்தின் விசேடியமில்லது. "சத்தம் அநித்தியம், அறிவிற்கு விடயமான திரவியமாகலின், கடம்போல" என்பது. இங்கே விசேடியமான திரவியத்தன்மை சத்தத்தினிடத்தில்லாமை காண்க.

(8) சொரூபத்தின் விசேடியமுண்மை யறியப்படாதது. "கபிலர் இப்பொழுது விருப்பு வெறுப்புடன் கூடியவர், புருடத்தன்மையோடு கூடிய தத்துவ ஞானமில்லாதவராகையால்" என்பது. இங்கே தத்துவஞானமில்லாமை என்னும் விசேடியம் ஐயத்திற் கிடமாதலின் விசேடிய உண்மை யறியப்படாமை காண்க.

(9) சொரூபம் ஒருபக்கமில்லது. "சீவனும் தேகமும் அநித்தியம், காரியமாகலின், கடம்போலும்" என்பது. இங்கே சீவன் என்னும் ஒருபக்கத்தில் காரியமாகலின் என்னும் ஏது இல்லாமை காண்க.

(10) சொரூபம் ஒருபக்கமுண்மையறியப்படாதது. "சீவனும் தேகமும் நித்தியம், காரியமாகாமையின்" என்பது. இங்கே தேகத்

தினிடத்து காரியமாகாமை ஐயத்திற் கிடனாதலின் ஒருபக்கம் உண்மை அறியப்படாமை காண்க.

(11) சொரூபம் பாதுக்குடன்பாடில்லது. "சத்தம் அநித்தியம், செய்யப்படுதலின், கடம்போலும்" என்பது. இங்கே சத்தம் செய் யப்படுவதென்பது மீமாஞ்சகமதத்தில் உடன்பாடின்மை காண்க.

(12) சாத்தியத்தோடு வியாத்தி யுண்மையறியப்படாதது. "எல் லாம் க்ஷணிகம், அசத்தாகையால், நீர்க்குமிழி போல" என்பது. இங்கே அசத்திற்கும் க்ஷணிகத்திற்கும் உடனிகழ்ச்சி யறிவிக்கும் பிரமாண மின்மை காண்க. க்ஷணிகம் என்பது தோன்றின மறுக்ஷணத்தில் அழி வது. அசத்தெல்லாம் அவ்வாறழிவதில்லை. ஆதலின், உடனிகழ்ச்சி யறிவிக்கும் பிரமாணமில்லையென்ப தறிந்துகொள்க.

(13) செயற்கைபற்றி வியாத்தியுடையது.
மாம்பழம் ருசியுடையது,மிருதுவாயிருத்தலால், வாழைப்பழம் போலும்" என்பது. இங்கே மிருதுத் தன்மைக்கும் ருசித்தன்மைக்கு முள்ள உடனிகழ்ச்சி பாகத்தின் செயற்கையால் நிகழ்ந்தமை காண்க. பாகம் - பக்குவப்படுத்தலாலுண்டாவது.

(14) மறுதலைப் பொருள் சாதிப்பது. "சத்தம் நித்தியம், காரி யமாதலின்" என்பது. இங்கே காரியமென்னும் ஏது நித்தத்தின் மறு தலையாகிய அநித்தத்தைச் சாதித்தல் காண்க.

(15) மறுதலைப்பொருள் சாதிப்பதாய்ப் பிறிதோரேதுவைஉடன் கொண்டுவருவது. "சத்தம் நித்தியம், செவிக்குப் புலனாதலின்" என் பதும், "சத்தம் அநித்தியம், காரியமாதலின்" என்பதுமாம். இங்கே முன்னர்ச் சாதித்த நித்தியத்திற்கு மறுதலையான அநித்தியத்தைச்சாதிப் பதற்குக் காரியமென்னும் பிறிதோரேதுவை சத்தம் உடன்கொண்டு வந்தமை காண்க.

(16) காட்சியளவையால் மறுக்கப்பட்டுக்கொண்டு வருவது. "நெருப்புச்சூடில்லாதது, பதார்த்தமாகையால், ஜலத்தைப்போல" என் பது. இங்கே சூடுண்மை காட்சியளவையால் அறியப்படுதலின் பதார்த்த மென்னும் ஏது சூடின்மையைச் சாதிக்கமாட்டாததாய்க் காட்சியளவை யால் மறுக்கப்பட்டவாறு காண்க.

(17) கருதலளவையால் மறுக்கப்பட்டுக் கொண்டு வருவது. "கன்மம் நித்தியம், அநாதியாதலால், ஆன்மாவைப்போலும்" என் பது. இங்கே கன்மம் அநித்தியம், மனோவாக்குக்காயங்களாற் செய்

யப்படுதலின், கடம்போலும் என்று பிறிதொரு அநுமானத்தால் அநாதியாதல் என்னும் ஏது மறுக்கப்படுமாறு காண்க.

(18) உரையளவையால் மறுக்கப்பட்டுக்கொண்டுவருவது. "காரியமெல்லாம் முதற்காரணமற்றது, இடையே தோன்றியதாகையால்" என்பது. இங்கே காரியங்களுக்கு முதற்காரணமுண்டென்பது நூல்களிற் கேட்கப்படுதலால் இடையே தோன்றியது என்னும் ஏது முதற்காரணமற்றது என்னும் சாத்கியத்தைச் சாதிக்கமாட்டாததாய் மறுக்கப்பட்டவாறு காண்க.

(19) பக்க சபக்க மாத்திரையினன்றி விபக்கத்துஞ் சேறலுடையது. "இம்மலை தீயுடைத்து, அளவையானளக்கற்பாலதாகலின்" என்பது. இங்கே அளவையானளக்கற்பாலதாந் தன்மை தீயுடைய பக்க சபக்கங்களேயன்றித் தீயில்லாத நீர்த்தடாகமாகிய விபக்கத்தும் சேறல் காண்க.

(20) சபக்கத்திற் சேறலின்றிப் பக்க மாத்திரையினுள்ளது. "சத்தம் நித்தியம், சத்தத் தன்மையுடைமையால்" என்பது. இங்கே சத்தத்தன்மை என்னும் ஏது நித்தப்பொருளாகிய சபக்கத்திற் சேறலின்றிச் சத்தமாகிய பக்கத்தில் மட்டுமிருத்தல் காண்க.

(21) சபக்க விபக்கங்கள் கிடைக்கப்பெறுதது. "எல்லாப் பொருளும் அநித்தம், அளவையானளக்கற்பாலதாகலின்" என்பது. இங்கே முழுவதும் பக்கமாயிருத்தலின் சபக்க விபக்கங்கள் கிடைக்கப்பெறுமை காண்க.

உவமைப் போலி.

ஏது சாத்தியங்களுக்கு உடனிகழ்ச்சி நிச்சயித்தற் கிடனுவது உவமை. உவமையிலக்கணமின்றியும் உவமைபோலத் தோன்றுமாயின் அங்ஙனந் தோன்றுவது உவமைப்போலி யெனப்படும். அந்த உவமைப் போலி உடன்பாடு,எதிர்மறையென இருதிறப்பட்டு விரியால் ஒவ்வொன்றும் ஒன்பதாய்ப் பதினெட்டு வகைப்படும். அவற்றுள்,

உடன்பாடு பற்றிய ஒன்பதாவன :—

(1) சாத்தியமுடைத்தாகாதது,
(2) சாத்தியமுடைமை நிச்சயிக்கப் படாதது,
(3) ஏதுவுடைத்தாகாதது,
(4) ஏதுவுடைமை நிச்சயிக்கப்படாதது,
(5) சாத்தியமும் ஏதுவும் உடைத்தாகாதது,

(6) சாத்தியமுடைமையும் ஏதுவுடைமையும் நிச்சயிக்கப்படாதது,
(7) சொரூபமில்லது,
(8) சொரூபமுண்மை பரனுக்குடன்பாடாகாதது,
(9) செயற்கையான வியாத்தியுடையது என்னுமிவை.

எதிர்மறை பற்றிய ஒன்பதாவன :—

(1) சாத்தியமின்மை யுடைத்தாகாதது,
(2) சாத்தியமின்மை யுடைத்தென்பது நிச்சயிக்கப்படாதது,
(3) ஏதுவின்மையுடைத்தாகாதது,
(4) ஏதுவின்மை யுடைத்தென்பது நிச்சயிக்கப்படாதது,
(5) சாத்தியமின்மை ஏதுவின்மை யென்னும் இரண்டின்மையும் உடைத்தாகாதது,
(6) இரண்டின்மையும் உடைத்தென்பது நிச்சயிக்கப்படாதது,
(7) சொரூபமில்லது,
(8) சொரூபமுண்மை பரனுக்குடன்பாடாகாதது,
(9) வெதிரேக வியாத்தி செயற்கையானுடையது என்னுமிவை.

உடம்பாடு பற்றிய உவமைப்போலி ஒன்பதிற்குதாரணம்:—

(1) சாத்தியமுடைத்தாகாதது. "மனம் அநித்தியம், மூர்த்தமுடைமையால், பரமாணுப்போல" என்பது. இங்கே பரமாணு உவமையில் சாத்தியமாகிய அநித்தியமில்லாமை காண்க. தார்க்கிக மதத்தில் பரமாணு நித்தியம்.

(2) சாத்தியமுடைமை நிச்சயிக்கப்படாதது. "இவன் அரசனாய் வருவான், சந்திரகுலத்துதித்தவனாதலின், அரசியற்குரிய அரசகுமாரன்போல" என்பது. இங்கே அரசகுமாரனிடத்தில் அரசனாய் வருதலென்னுஞ் சாத்தியம் ஐயத்திற் கிடமாதலின் நிச்சயிக்கப்படாமை காண்க.

(3) ஏதுவுடைத்தாகாதது. "மனம் அநித்தியம், உருவமுடைமையால், கன்மம் போல" என்பது. இங்கே கன்மமென்னுமுவமையில் உருவமுடைமையென்னும் ஏதுவில்லாமை காண்க.

(4) ஏதுவுடைமை நிச்சயிக்கப்படாதது. "தேவதத்தன் முற்றுமறியாதவன், விருப்பு வெறுப்புடைமையால், தெருவிற் செல்லும் புருடன் போல" என்பது. இங்கே தெருவிற் செல்லும் புருடனிடத்தில் விருப்பு வெறுப்புண்டா? இல்லையா? என்பது ஐயத்திற்கிடமாய் நிச்சயிக்கப்படாமை காண்க.

(5) சாத்தியமும், ஏதுவும் உடைத்தாகாதது. "மனம் அநித்தியம், உருவமுடைமையால், ஆகாயம் போல" என்பது. இங்கே ஆகாயமென்னு முவமையில் சாத்தியமாகிய அநித்தியமும், ஏதுவாகிய உருவுடைமையும் இல்லாமைகாண்க. தார்க்கிகமதத்தில் ஆகாயம் நித்தம்.

(6) சாத்தியமுடைமையும், ஏதுவுடைமையும் நிச்சயிக்கப்படாதது. "இவன் தேவ உலகம் புகுவான், பூர்வ புண்ணியமுடையவனாதலால், தேவதத்தன் போல" என்பது. இங்கே தேவதத்தனென்னு முவமையில் தேவ உலகம் புகுதலென்னுஞ் சாத்தியமும், பூர்வ புண்ணியமுடைமை என்னும் ஏதுவும்ஐயத்திற்கிடமாய் நிச்சயிக்கப்படாமை காண்க.

(7) சொரூபமில்லது. "மனம் அநித்தியம், உருவுடைமையால், ஆகாயப்பூப்போல" என்பது. இங்கே ஆகாயப்பூ இல்பொருளாதலின் உவமையின் சொரூபமின்மை காண்க.

(8) சொரூபமுண்மை பரனுக் குடன்பாடாகாதது. "இவன் முற்றறிவில்லாதவன், முற்றுணர்வுடைமையில் ஐயமிருத்தலால், வரப்போகிற தேவதத்தனைப் போல" என்பது. இங்கே தேவதத்தன் வருதலும், அவனிடத்தில் முற்றுணர்வுடைமையில் ஐயமாதலும் துணியப்படாமையின் பரனுக்குடன்பாடாகாமை காண்க.

(9) செயற்கையானுகிய வியாத்தியுடையது. "இந்தப் பழம் ருசியுடையது, மிருதுவாயிருத்தலால், வாழைப்பழம்போல" என்பது. இங்கே வாழைப்பழத்தில் ருசியுடைமையும், மிருதுவாயிருத்தலும் பாகமென்னுஞ் செயற்கையாலுண்டாயினமை காண்க.

எதிர்மறை பற்றிய உவமைப்போலி ஒன்பதற்குதாரணம் :—

(1) சாத்தியமின்மையுடைத்தாகாதது. "ஆன்மா நித்தியம், விபுவாகையால், யாது நித்தியமன்று அது விபுவுமன்று, ஆகாயம்போல" என்பது. இங்கே ஆகாயம் நித்தியமாயுள்ளதென்பது தார்க்கிகர்மதமாதலின் நித்தியமன்னும் சாத்தியமின்மையில்லாமை காண்க. விபு - வியாபகம்.

(2) சாத்தியமின்மை யுடைத்தென்பது நிச்சயிக்கப்படாதது. "இவன் பெரிய அரசாட்சி செய்வான், சந்திரகுலத்துதித்தவனாதலின், எவன் பெரிய அரசாட்சி செய்யவில்லையோ அவன் சந்திரகுலத்துதியாதவன், வேறொரு அரசகுமாரன் போல" என்பது. இங்கே வேறொரு அரசகுமாரன் பெரிய அரசாட்சி செய்யவில்லை யென்பது நிச்சயிக்கப்படாமை காண்க.

(3) ஏதுவின்மை யுடைத்தாகாதது. "மனம் அநித்தியம், உருவுடைமையால், யாது அநித்தமன்று அது உருவுடையதுமன்று, பரமாணுப்போல" என்பது. இங்கே பரமாணு உருவுடையதாகலின் உருவுடையதன்று என்னும் ஏதுவின்மை யுடைத்தாகாமை காண்க.

(4) ஏதுவின்மை யுடைத்தென்பது நிச்சயிக்கப்படாதது. "இவன் முற்றறிவில்லாதவன், விருப்பு வெறுப்புடையவனாதலின், எவன் முற்றறிவுடையவன் அவன் விருப்பு வெறுப்பில்லாதவன், சகல சாஸ்திர பண்டிதன் போல" என்பது. இங்கே சகல சாஸ்திர பண்டிதனிடத்தில் விருப்பு வெறுப்பின்மை நிச்சயிக்கப்படாமை காண்க.

(5) சாத்தியமின்மை ஏதுவின்மையென்னும் இரண்டின்மையு முடைத்தாகாதது. "மனம் அநித்தியம், உருவுடைமையால், யாது அநித்தியமன்று அது உருவுடையதுமன்று, குடம்போல" என்பது. இங்கே குடம் என்னு முவமையில் அநித்தியமும் உருவுடைமையும் காணப்படுதலால் அநித்தியமன்று என்னும் சாத்தியமின்மையும், உருவுடையதன்று என்னும் ஏதுவின்மையும் இல்லாமை காண்க.

(6) இரண்டின்மையு முடைத்தென்பது நிச்சயிக்கப்படாதது. "மனம் நித்தியம், உருவமின்மையால், எது நித்தியமன்று அது உருவமில்லாததுமன்று, ஆகாயம்போல" என்பது. இங்கே ஆகாயமென்னு முவமையில் நித்தமன்று என்னுஞ் சாத்தியமும், உருவமில்லாததுமன்று என்னும் ஏதுவும் இல்லாமை காண்க. தார்க்கிக மதத்தில் ஆகாயம் நித்தப்பொருள்.

(7) சொரூபமில்லது. "மனம் அநித்தியம், உருவுடைமையால், யாது அநித்தமன்று அது உருவுடையதுமன்று, ஆகாயப்பூப் போல" என்பது. இங்கே ஆகாயப்பூ இல்பொருளாதலின் உவமையின் சொரூபமின்மை காண்க.

(8) சொரூபமுண்மை பாஹுக்குடன்பாடாகாதது. "இவன் முற்றுணர்வுடையவன், விருப்பு வெறுப்பின்மையால், எவன் முற்றுணர்வில்லாதவன் அவன் விருப்பு வெறுப்பில்லாதவனல்லன், பிறக்கப்போகிற தேவதத்தனைப் போல" என்பது. இங்கே தேவதத்தன் பிறத்தல் முதலியன ஐயத்திற்கிடமாதலின் பாஹுக்குடன்பாடாகாமை காண்க.

(9) வெதிரேக வியாத்தி செயற்கையானுடையது. "தண்ணீர் ருசி மாறுதலில்லாதது, பாகமின்மையால், எது ருசி மாறுதலையுடையது அது பாகமுடையது, பழம்போல" என்பது. இங்கே பழத்திற்கு ருசி மாறுதலுடைமையும் பாகமுடைமையுமாகிய வியாத்தி சூட்டின் செயற்கையாலாயினமை காண்க.

தர்க்கவாதத்தின்கட் பேசத்தெரியாமையாகிய தோல்வித் தானம் மயங்கப்பேசுதலும், வாளாவிருத்தலும் என இருதிறப் பட்டு விரியால் இருபத்திரண்டாம். அவையாவன

(1) தானெடுத்துக்கொண்ட மேற்கோளைச் சாதிக்கமாட்டாது அதற்குக் கேடுவரப் பேசுதல்.
(2) பிறிதொரு மேற்கோளைக் கூறுதல்.
(3) மேற்கோளுக்கு மறுதலைப்படப் பேசுதல்.
(4) மேற்கோளை விட்டுவிடுதல்.
(5) தான் கூறிய ஏதுவிற்குக் குற்றம் வந்துழி வேறோராற்றானேதுக் கூறுதல்.
(6) தனக்கு வருந்தோல்வியைப் பிறிதொன்று பேசி மறைத்தல்.
(7) பயனொடு படாதன பேசுதல்.
(8) பொருளினிது விளங்காத சொற்களை யெடுத்துக்கொண்டு பேசுதல்.
(9) அவாய்நிலை தகுதி அண்மை இல்லனவாய்ப் பேசுதல்.
(10) மேற்கோள் முதலிய ஐந்தினையும் முறை பிறழப் பேசுதல்.
(11) அவற்றுட் சில குறையப் பேசுதல்.
(12) ஒன்றற்குப் பல கூறுதல்.
(13) சொல்லை இரட்டித்துச் சொல்லுதல்.
(14) பொருளை இரட்டித்துச் சொல்லுதல்.
(15) பிறன் கூறிய பொருளை அநுவதிக்கமாட்டாமை.
(16) பிறன் கூறிய பொருளை அறிந்தும் அறியான்போன்று வினுதல்.
(17) விடை சொல்லத் தெரியாது வேறொரு கருத்துடையான் போன்றிருத்தல்.
(18) வாதத்தை விட்டுப் பிறிதொன்றனைச் சொல்லிப் பொழுது போக்கல்.
(19) சுபக்கத்துக்குச் சொல்லிய குற்றத்தைப் பரிகரியாதுடம்பட்டுப் பரபக்கத்துக்குக் குற்றம் பேசுதல்.
(20) தோல்வித்தான மெய்தினோனைத் தோல்வித்தான மெய்தினு னென்றறிந்து கூறாதிருத்தல்.
(21) தோல்வித்தான மெய்தாதானை எய்தினுனென்று கூறுதல்.
(22) தன் சித்தாந்தத்திற் கிணங்காதவற்றைச் சொல்லிச் சித்தாந்தஞ் சாதித்தல் என்பன.

இவற்றிற்கு உதாரணம் :—

(1) தானெடுத்துக்கொண்ட மேற்கோளைச் சாதிக்கமாட்டாது அதற்குக் கேடுவரப் பேசுதல். "சத்தம் அநித்தியம், இந்திரியத்தாலறியப்படுதலின், குடம்போலும்" என்றவிடத்துக் குடம் இந்திரியத்தாலறியப்படுதல்போலவே குடத்தன்மைச் சாதியும் இந்திரியத்தா லறியப்படுகின்றது. அந்தச்சாதி அநித்தியமில்லை என்று வாதி குற்றங்கூற, அதன்மேல் குடமும் இந்திரியத்தாலறியப்படுதலின் நித்தியமாகுமென்றல். இதனால், அநித்தியமென்னும் தனது மேற்கோளைச் சாதிக்கமாட்டாமல் அதற்குக் கேடுவரப் பேசினமை காண்க.

(2) பிறிதொரு மேற்கோளைக் கூறுதல். "சத்தம் அநித்தியம், செவிக்குப் புலப்படுதலால்" என்றவிடத்துச் சங்கின் சத்தமுதலியனவும் செவிக்குப் புலனாதலின் அவை அநித்தியமென்பது நிச்சயமாகையால் சாதிக்கவேண்டாமென்று வாதி கூற, எழுத்து ரூபமான சத்தம் அநித்தியமென்று பிறிதொரு மேற்கோள் கூறுதல்.

(3) மேற்கோள்களுக்கு மறுதலைப்படப் பேசுதல். "திரவியம் குணத்தை விட வேறாயுள்ளது, உருவமுதலியவற்றின் வேறாயறியப்படாமையால்" என்பது திரவியம் குணத்தினும் வேறாயுள்ளது என்னும் மேற்கோளுக்கு விரோதமாய் வேறாயறியப்படாமையை ஏதுவாகக் காட்டினமை குற்றமாதல் காண்க.

(4) மேற்கோளை விட்டுவிடுதல். "சத்தம் அநித்தியம், இந்திரியத்திற்குப் புலப்படுவதால்" என்றவிடத்துச் சத்தத்தன்மையும் இந்திரியத்திற்குப் புலப்படுகின்றது. அது அநித்தியமில்லையே என்று வாதி குற்றங் கூற நான் சத்தம் அநித்தியமென்று கூறவில்லையென்றல்.

(5) தான் கூறிய ஏதுவிற்குக் குற்றம் வந்துழி வேறோராற்றானேதுக்கூறல். "சத்தம் அநித்தியம், இந்திரியத்திற்கு விஷயமாதலின்" என்றவிடத்து நித்தியமாகிய சத்தத்தன்மையும் இந்திரியத்திற்கு விஷயமாதலின்" இந்த ஏது குற்றமுடையதென்று வாதி கூற, பொருள்தோறுமுள்ள பொதுவான சாதியோடு கூடிய இந்திரியத்திற்கு விஷயமாதலின் என்று விசேடண வழியாய் வேறோரேதுக் கூறல்.

(6) தனக்கு வருந்தோல்வியைப் பிறிதொன்று பேசி மறைத்தல். "சத்தம் அநித்தியம், இந்திரியத்திற்கு விஷயமாதலின், கடம்போலும்" என்றவிடத்துக் கடத்தன்மைச் சாதியும் இந்திரியத்திற்கு விஷயமாதலின் இந்த ஏது குற்றமுடைத்தென்று வாதி கூற, அதன்மேல் சத்தம்

ஆகாயத்தின் குணம், ஆகாயத்தில் சமவாய சம்பந்தமாயிருத்தலின், அந்தச் சம்பந்தம் அநித்தியமாதலின் சத்தம் அநித்தியமெனப் பிறிதொன்று பேசி முன் சொன்னதை மறைத்தல்.

(7) பயனொடு படாதன பேசுதல். "சத்தம் அநித்தியம், எழுத்து ரூபமாயிருத்தலால்" என்பது எழுத்து ரூபமே சத்தமாகையால் அதனை ஏதுவாகக்கூறியது பயனொடு படாமையாயினமை காண்க.

(8) பொருள் இனிது விளங்காத சொற்களை எடுத்துக்கொண்டு பேசுதல். எழுவாய் பயனிலைகளைச் சிரமப்பட்டுக் கொண்டுகூட்டக் கூடியதாயும், விரைவாயும், பெருவழக்கில்லாத மொழிகளைச் சேர்த்தும் பேசுதல்.

(9) அவாய்நிலை தகுதி அண்மை இல்லனவாய்ப் பேசுதல். "ஆ குதிரை, ஆண்மகன் யானை" எனபன முன்மொழி பின்மொழியை அவாவிநில்லாமை காண்க. "நெருப்பால் நனை" என்றவிடத்து நனைக்குந்தகுதி நெருப்பிற்கில்லாமை காண்க. "ஆவைக்கொணு" என்று ஒரு தொடராகக் கூருது, ஒவ்வொரு எழுத்தாக இடைவிட்டுக் கூறின் பொருள்படாமை காண்க.

(10) மேற்கோள் முதலிய ஐந்தினையும் முறை பிறழப் பேசுதல். "காரியமாகையால், சத்தம் அநித்தியம், அவ்வாறே இதுவும், கடம் போல், ஆதலால் அநித்தியம்" என்று கூறுதல்.

(11) மேற்கோள் முதலியவற்றுள் சில குறையப் பேசுதல். "இம்மலை நெருப்புடையது, புகையுடைமையால், அடுக்களை போல" என்பது. இங்கே யாண்டுப்புகை ஆண்டு நெருப்பு அடுக்களைபோல என்று சொல்லாததும், இம்மலையும் புகையுடைத்து, ஆதலின் நெருப்புடைத்து, என்று கூருததும் குறையாதல் காண்க.

(12) ஒன்றற்குப் பல கூறுதல். "இம்மலை நெருப்புடைத்து, புகையினையும் பிரகாசத்தையுமுடைத்தாகலான், அடுக்களையும் கொல்லனுலையும் போல" என்பது. இங்கே பல ஏதுவும் பல உவமையும் வேண்டாது கூறியவாறு காண்க.

(13) சொல்லை இரட்டித்துச் சொல்லுதல். "சத்தமநித்தியம் சத்தமநித்தியம்" என்று கூறுதல்.

(14) பொருளை இரட்டித்துச் சொல்லுதல். "சத்தமநித்தியம் நாசமுடையது" என்பது. அநித்தியமும் நாசமுடையதும் ஒரு பொருட் சொற்களாயினமை காண்க.

(15) பிறன்கூறிய பொருளை அநுவதிக்கமாட்டாமை. வாதியினுலே சொல்லப்பட்டுச் சபையாரால் அறியப்பட்டிருப்பதை பிரதிவாதி மறுக்குங் காலத்துத் தானெடுத்துக்கூறி அநுவாதஞ் செய்யத் தெரி

யாமை. வாதி கூற்றைத்தானெடுத்துக்கூறி அது பொருந்தாதென மறுப்பது முறைமை.

(16) பிறன் கூறிய பொருளை அறிந்தும் அறியான்போன்று வினுதல். வாதியால் மூன்றுமுறை சொல்லப்பட்டுச் சபையார் அறிந்திருப்பவும் வாதியினுடைய வெளிப்படையான பொருள் நிச்சயமாய்த் தெரியவில்லை; அப்பொருளென்னை? என்று கேட்டல்.

(17) விடை சொல்லத் தெரியாது வேறொரு கருத்துடையான் போன்றிருத்தல். வாதி மூன்றுமுறை சொல்லியும் சபையாரறிந்திருப்பவும் தெய்வோபாசனை செய்வான்போன்றிருத்தல்.

(18) வாதத்தை விட்டுப் பிறிதொன்றனைச் சொல்லிப் பொழுது போக்கல். வாதம் ஆரம்பித்த பின்னர்க் காலத்தை நீட்டித்துக் கழிக்கக் கருதி மத்தியஸ்தராயுள்ள வித்துவான்கள் சிலர் வரவில்லை யென்றும் சபைக்கு நாயகராயிருத்தற்குரிய அரசர் வரவில்லையென்றும் சொல்லிக் காலங்கழித்தல்.

(19) சுபக்கத்துக்குச் சொல்லிய குற்றத்தைப் பரிகரியாதுடம் பட்டுப் பரபக்கத்துக்குக் குற்றம் பேசுதல். தன் பக்கத்துக்குக் குற்றங் கூறியவிடத்து அக்குற்றத்தைப் பரிகரித்துவிட்டு எதிரி பக்கத்திற் கேள்வி கேட்டு அக்கேள்விக்குக் கூறும் விடையிற் குற்றங் கூறல் வேண்டும். தன் பக்கத்துக்குக் கூறிய குற்றத்தைப் பரிகரியாமல் என் பக்கம் குற்றமுடையதாகவே இருக்கட்டும்; உன் பக்கமுங் குற்ற முடையது தானென்றல்.

(20) தோல்வித்தானம் எய்தினேனைத் தோல்வித்தானமெய்தினு யென்று அறிந்து கூறுதிருத்தல். இது வெளிப்படை.

(21) தோல்வித்தானம் எய்தாதானை எய்தினு யென்று கூறுதல் இதுவும் வெளிப்படை.

(22) தன் சித்தாந்தத்திற் கிணங்காதவற்றைச் சொல்லிச் சித் தாந்தத்தைச் சாதித்தல். ஒரு சித்தாந்தத்தைப்பற்றி வாதம் நடந்து கொண்டிருக்கும் பொழுது அதற்கு மாறுன சித்தாந்தத்தை மேற்கொள்ளுதல். இது அவசித்தாந்தமெனப்படும். உதாரணம்:— "வெளிப் பட்ட பொருள்களெல்லாம் ஒரு பொருளை முதற்காரணமாகவுடையது, வேற்றுமைப்பட்ட பொருள்களாதலின், ஒரே மண்ணை முதற் காரணமாகவுடைய குடம் பானை முதலிய வேற்றுமைப்பட்ட பொருள்கள் போலும்; எனச் சாங்கியர் மதத்தை மேற்கொண்டு நடக்கும் வாதத்தில் முதற் காரணமென்பது எது? வேற்றுமை என்பது எது? என்று பிரதிவாதி கேட்க, தோன்றுதலழிதலில்லாதது முதற்காரணம். அது பிரகிருதி. தோன்றுதலழிதலை யுடையது வேற்றுமை, என வாதி

விடை கூற, மீண்டும் பிரதிவாதி உள்ளது போகாது, இல்லது தோன் றாது ஆதலின் உள்ள பொருள் காரண ரூபமாய் ஒடுங்குதலே அழிதல். காரிய ரூபமாய் வெளிப்படுதலே தோன்றுதல், எனச் சற்காரிய வாதம் பற்றி வாதியை மறுத்தல் அவசித்தாந்தமாகும்.

ஆக அறுபத்தைந்திற்கும் இவ்வாறு உதாரணங் கூறிக் கண்டு கொள்க.

இந்தப் பக்கப்போலி, ஏதுப்போலி, உவமைப்போலிகள், சொல்லு மிடத்து உண்டாம் சொற் குற்றமாதலின் தோல்வித்தானத்துளடங்கும். இவ்வாறன்றிப் பக்கப் போலி, உவமைப் போலிகள் ஏதுப்போலியில டங்குமெனத் தார்க்கீகர் கூறுவர். பக்க இலக்கணம் உவமை யிலக்க ணத்தை நோக்கிக் காணுமிடத்து அவை பக்கப்போலி உவமைப்போலி எனப்படுவனவன்றி ஏதுப்போலி எனப்படாமையின் ஏதுப் போலியுள் அவ்விரண்டு மடங்கு மென்றல் பொருந்தாமை காண்க. (கச)

அளவை இலக்கணம் முற்றிற்று.
ஆசத் திருவிருத்தம் உ௦.

பிரமாணவியல்.

பிரமாணத்தால், பதி, பசு, பாசமென்னுமூப்பொருள்கள் உண்டென்று சாதித்தலில், முதல்மூன்று சூத்திரமும் பிரமாண வியலென்னும் பெயராயிற்று. பலசூத்திரங்களின் தொகுதி இயல்.

முதற்சூத்திரம்.

பதி உண்மை.

காட்சி, அநுமானம், ஆகமம் என்னும் பிரமாணம் மூன்றனுள், காட்சி கண்ணாற்காணப்படும் பொருளையும், அநுமானம் ஆகமம் இரண்டும் கண்ணாற் காணப்படாத பொருளையும் அளத்தற்குக் கருவியாகலின், கண்ணாற் காணப்படாத பதி,பசு,பாசங்கள் உண்டென்பதை ஆகமத்தை ஒப்புக்கொள்ளாதாரும் எற்குமாறு அநுமானப் பிரமாணத்தா லறிவிக்கத் தொடங்கி, இயல்பு, காரியம், அநுபலத்தி யென்னும் மூன்றேதுக் கொண்டு, மறைந்து நின்ற பொருளை யுணர்த்துவது அநுமானமாதலின், அவற்றுள், குடத்தைக் கண்டபொழுது செய்வோனாகிய குயவனுண்டெனக் கொள்ளும் இயல்புபோலத், தோன்றிநின்றழியும் பிரபஞ்சத்தைக் கண்டமாத்திரத்தே, அத்தொழிலைச் செய்யுங் கடவுள் உண்டென நாட்டுகின்ற இயல்பு எதுவெனப்படும் அநுமானப் பிரமாணம் முதற் சூத்திரத்தாற் கூறுகின்றார்.

உலகம், தோன்றி நின்றொடுங்குதலின் ஒரு கருத்தாவை உடையதெனச் சூத்திரப்பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது.

ஒருவனோ டொருத்தி யொன்றென் றுரைத்திடு முலகமெல்லாம்
வருமுறை வந்து நின்று போவது மாத லாலே
தருபவ னொருவன் வேண்டுந் தான்முத லீறுமாகி
மருவிடு மநாதி முத்த சித்துரு மன்னி நின்றே.

(கோ -) ஆதலால் தருபவனொருவன் வேண்டும். ஈறுமாகியே அநாதி;முத்த சித்துருமன்னி நின்றே மருவிடும். தான் முதல்.

(போ - ரை.) அவனென்றும், அவளென்றும், அதுவென்றுந் தனித்தனி வேறுபாடுடைத்தாய்க் கூறப்படும் பிரபஞ்சக் கூட்டம், உள்ளதாகிய காரணத்தினின்று, தோன்றுதற்குரிய சற்காரிய முறையால் தோன்றி நின்று அழிதலையுடையது. ஆதலால், அப்பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பதற்கு ஒரு கருத்தா வேண்டப்படும். அக் கருத்தா முன்னொடுங்குதற் கேதுவாய் நின்ற சங்கார காரணனேயாகும். அக்காரணன், பிரபஞ்சம் ஒடுங்கிய பின்னும் அநாதி முத்த சித்துருவாய் நிலைபெற்று நின்று, அநாதிபெத்த சித்துருவின் பொருட்டு, மீளவும் அப்பிரபஞ்சத்தை முன்போலவே தோற்றுவிப்பன். இவ்வாறு, ஒடுக்கியும் தோற்றுவித்தும் செய்வதனால் அச்சங்கார காரணனே உலகிற்கு முதற்கடவுள். (எ-று.)

போவது என்னுமொருமை போதல் என்னுந் தொழில்மேல் நின்றது. 0 "கொள்ளப்படாது மறப்பதறிவிலேன் கூற்றுக்களே" என்பதனுள் கொள்ளப்படாது என்பது போல. போவதும் என்னும் உம்மை வந்து நிற்றலே யன்றி என இறந்தது தழுவிற்று. ஒருவன் என்றவிடத்து ஒருவனை என்னும்பொருள்பட ஐ உருபும், தான் என்றவிடத்து பிறிதொன்று முதலாகாது எனப் பிரிக்கும் பிரிநிலை ஏகாரமுந் தொக்கு நின்றன.

ஈறு :—சங்காரம். அது, சங்கார காரணனைக் குறித்தலின் ஆகுபெயர். ஈறும் என்ற உம்மை, சங்கார காரணனும் என்ற உயர்வு சிறப்பு. ஈறுமாகி என்பது சங்கார காரணன் என்னும் பொருள் குறித்து வந்த பெயர். ஆகி - ஆனவன்.

மருவிடும் என்றவிடத்து மருவு வித்திடும் என்னும் பொருள்பட வீவ்விகுதி தொக்கு நின்றது. * "குடிபொன்றிக் குற்றமுமாங்கே தரும்." என்றாற்போல. அநாதிமுத்த சித்துரு என்றவிடத்து ஆய் என்னும் ஆக்கச்சொல் வருவித்துரைக்க. அநாதிபெத்த சித்துருவென்பதும் அதன்பொருட்டு மீள மருவு வித்திடுமென்பதும் அநாதிமுத்த சித்துருவென்பது பற்றி வருவிக்கப்பட்டன. அநாதி பெத்த சித்துருவின் பொருட்டு மீளத்தோற்றுவிப்பன் என்னுமிக் கருத்துப்பற்றியே ? "மலத்துளதாம்" என்றார் முதனூலாசிரியரும்.

---

0 திருச்சிற்றம்பலக்கோவையார், செ - அஎ.

* திருக்குறள். வெஃகாமை, செ – க.

? சிவஞானபோதம், சூ - க.

உலகம் வந்து நின்று போவதால், தருபவன் ஒருவனே வேண்டும் எனச் சாதிக்கப்பட்டது. வந்து நின்று போவதில் ஐயம் நீக்குதற்கு, ஒருவனேடொருத்தி யொன்று என்னும் அடைமொழியை உலகம் என்பதனேடு சேர்த்துக் கூறினர். கூறவே அவ்வடைமொழி குறிப்பேதுவாய் நின்று, ஒருவனேடொருத்தி யொன்று என்னும் அவயவப் பகுப்புண்மையால், தோன்றிநின்றழியும் எனச்சாதித்து, அதனற் கருத்தா வுண்மை சாதித்தவாறும்.

இச்செய்யுள், உலகம், ஈறுமாகி, தான் என்ற மூன்று எழுவாயும், இவற்றிற்கு முறையே, வேண்டும், மருவிடும், முதல் என்ற மூன்று பயனிலையு முடையது. அநாதி முத்த சித்துரு வென்பது, அநாதியே அதாவது இயல்பாகவே பாசங்களினின்றும் விடுபட்ட ஞானவடிவினன். அநாதிபெத்த சித்துருவென்பது இயல்பாகவே பாசத்தோடுகூடிய ஞானவடிவினன். முன்னையது கடவுள். பின்னையது உயிர்.

இச் செய்யுள் முதனூற் சிவஞானபோதம் முதற் சூத்திரம் போல மூன்று கூற்றையுடையது. அவற்றுள்,

முதற்கூறு :—ஒருவனே டொருத்தி...........தருபவ னெருவன் வேண்டும். இரண்டாங்கூறு :—ஈறுமாகி அநாதிமுத்த சித்துருவாய் மன்னி நின்று மருவு வித்திடும். மூன்ருங்கூறு :—தானே முதல். (க)

முத ० லதிகரணம்.

"ஒருவனேடொருத்தி.................தருபவ னெருவன் வேண்டும்" என்பது. இம் முதலதிகாணம், வருமுறை என்பது ஒரு கூறும், வந்து நின்று போவது என்பது ஒரு கூறும், தருபவனெருவன் வேண்டும் என்பது ஒரு கூறுமாக முக் கூற்றையுடையது.

உலகாயதர் மதம்பற்றி உலகந்தோன்றி யழிதலில்லை யென்பாரை மறுத்து, வந்துநின்று போவதை வலியுறுத்துகின்றது.

உதிப்பது மீறுமுண்டென் றுரைப்பதிங் கென்னை முன்னோர்
மதித்துல கநாதி யாக மன்னிய தென்ப ரென்னி
னிதற்கியா னநுமா னுதி யெடேனிப் பூதாதி யெல்லாம்
விதிப்படி தோற்றி மாயக் காணலான் மேதினிக்கே.

(கோ-டு) முன்னோர் மதித்து உலகு அநாதியாக மன்னியது என்பர். உதிப்பதும் ஈறும் உண்டு என்று உரைப்பது என்னை என்னின்,

---

० அதிகரணம் - கூறு.

இங்கு விதிப்படி இம் மேதினிக்கே பூதாதி எல்லாம் தோற்றி மாயக் காணலான் யான் இதற்கு அநுமானந் தி எடேன்.

(பொ-ரை.) உலகாயத நூலுணர்ந்தோர் காட்சிப் பிரமாணத்திற் கெய்தாதன பிரமாணமாகா வென மதித்து உலகம் நித்தமாக நிலைபெறுதலேயன்றித் தோற்றமும் நாசமும் உண்டெனக் கூறுவது பொருந்தா தென்பர். இவ்விடத்து அவர் கூறிய நிலைத்தொழில் போலவே, இவ்வுலகின் கண்ணே பஞ்சபூதமாகிய முதற் காரணத்தின்கண் தோன்றிய எல்லாவற்றிற்கும் தோற்ற நாசங்களாகிய ஏனை இரண்டு தொழிலும் உடனிகழ்ச்சியாய்க் காண்டல் கூடும். அதாவது, ஒரு பொருளும் என்றும் நிலைத்திருப்பதில்லை. ஒரு காலத்தில் தோன்றவும், மற்றொரு காலத்தில் நிற்கவும், பிறிதொரு காலத்தில் அழியவுங் காண்டல் பிரத்தியட்சம். ஆதலின் இவ்வுலகம் முத்தொழிற்படும் என்பதைச் சாதித்தற்கு அவர் கொண்ட காட்சியளவை ஒன்றே அமையுமாதலின், அநுமானம் முதலிய வேறு பிரமாணங்கள் எடுத்துக்காட்டுவே னல்லேன். (எ - று.)

முன்னோர் என்பது தாழ்ந்தாரின் முதன்மை பற்றியும், முன்னிலையான உலகமே பொருளென உணர்தல் பற்றியும் உலகாயதரைக் குறித்தது. விதிப்படி என்பதில் படி என்பதுபோல் என்னும் பொருளில் நின்றது. () "தோற்றமு மீறும் உள்ளதபாலே கிடத்தலின்" என்றார் முதனூலாசிரியரும். மேதினிக்கு என்பது மேதினிக்கண் என்னும் பொருள் குறித்தது. பரபக்க மறுப்பு, இந்நூல் பரபக்கம் சுபக்கம் இரண்டிலும் உள்ளனவாதலின் அது கூறியது கூறலாகாது. என்னை? சித்தாந்தப் பார்வையால் பரபக்கத்துள் அவரை மறுத்தார். சித்தாந்தத்தை நாட்டுதற் பொருட்டு பரபக்கப் பார்வையால் சுபக்கத்தில் அவரை மறுத்தாராகலினென்க. எனவே, பரபக்கத்தை மறுத்தலும், சித்தாந்தத்தை நாட்டுதலும் வேற்றுமையாதல் காண்க. (உ)

உலகாயதர் மதம் பற்றித்தோன்றியழித லியல்பென்பாரை மறுத்துத் தருபவன் ஒருவன் வேண்டும் எனக் கூறுகின்றது.

இயல்புகாண் டோற்றி மாய்கை யென்றிடி னியல்பினுக்குச்
செயலதின் றியல்பு செய்தி;செய்தியே லியல்ப தின்று
மியல்பதாம் பூதந் தானே யியற்றிடுஞ் செய்தி யென்னிற்
செயலசெய்வா னொருவன் வேண்டுஞ்செயற்படு மசேதனத்தால்.

() சிவஞானபோதம், க-ம் சூ-ம், க-ம் அதி.

(கோ - ௫.) தோற்றிமாய்கை இயல்புகாண் என்றிடின் செய லது இயல்பினுக்கு இன்று. செய்தி இயல்பேல், செய்தி இயல்ப தினாலும. பூதந்தானே இயல்பதாம் செய்தி இயற்றிடும் என்னின் செயற்படும் அசேதனத்தால் செயல் செய்வா னொருவன் வேண்டும்.

(போ - ௬) உலகம் தோன்றி அழியினும் அத்தோற் றக்கேடுகள் உலகிற் கியல்பாகலின், அததொழில் கொண்டு ஒரு கருத்தா வேண்டப்படுவதன்று என்பர் உலகாயதரில் ஒரு சாரார். தோன்றலுங் கெடுதலும் வேற்றுமையாதலின், இயல பிற்கு வேற்றுமையாதல் கூடாது. அவ்வாறு வேற்று மையாதலே உலகிற்கு இயல்பு என்று சொல்லில், அவ் வாறு சொல்லுவாருக்கு வேற்றுமையின் வேறாய் இயல்பு என் பது ஒன்றில்லை என ஒப்புக்கொள்ள வரும் வரவே, தோற்றி மாய்கை இயல்பென்று முன்சொன்னது விட்டுப்போய்த் தோல வித்தானமாய் முடியும். இனி, இயல்பும் வேற்றுமையும் வே றெனவே கொண்டு, பூதநான்கும் இயல்பாய் உள்ளனவாம்; அவை தோற்றி மாய்தலாகிய விகாரத்தைச் செய்யுமென்று சொலலில், நன்று சொன்னாய்! அப்பூதங்கள் அவ்வாறு தோன் றியழிதலாகிய தொழிலைப் பொருந்தி நிற்கின்ற காரியப்பொரு ளாகலின், அக்காரியப் பொருளாகிய செயபபடு பொருட்குத் தோன்றியழிதலென்னுந் தொழிலைத் தானே செய்தல் கூடா மையின், அத்தொழிலைச் செய்வதற்கு அப்பூதத்தின் வேறாய் ஒரு கருத்தா வேண்டப்படும். (எ - று.)

செயற்படும் என்பதில் படும் என்பது முற்றன்று; பெயரெச்சம். அது, அசேதனம் என்னும் பெயர்கொண்டு முடிந்தது. அசேதனம் என்பது செயப்படுபொருள் என்னும் பொருளில் நின்றது.

இதனால், செயப்படுபொருளும், வினைமுதலும் எவ்விடத்தும் ஒன்று மாறில்லை யென்பதறிக. தன்னைக் குத்தினான் என்றவிடத்துக், குத் திய வினைமுதல் கையும், குத்தப்பட்ட செயப்படுபொருள் பிறிதோ ருறுப்பும் எனவும், தன்னைத்தானறிந்தான் என்றவிடத்து, அறிந்தது தன்னறிவும், அறியப்பட்டது தன் வடிவம் எனவுங் கண்டு கொள்க. (௫)

உலகாயதர் மதம்பற்றிப் பூதங்களே செயப்படுபொருளுங் கருத்தாவுமா மென்பாரை மறுத்துரைக்கின்றது.

நிலம்புன லனல்கால் காண நிறுத்திடு மழிக்கு மாக்கும்
பலந்தரு மொருவ னிங்குப் பண்ணிட வேண்டா வென்னி
னிலங்கிய தோற்ற நிற்ற லீறிவை யிசைத லாலே
நலங்கிளர் தோற்ற நாசந் தனக்கிலா நாதன் வேண்டும்.

(கோ - டு) கால் காணநிறுத்திடும். அனல் அழிக்கும். புனல் ஆக்கும். நிலம் பலந்தரும். ஒருவன் இங்குப் பண்ணிடவேண்டா என்னின், இலங்கிய இவை தோற்றம் நிற்றல் ஈறு இசைதலாலே, தோற்றம (நிற்றல்) நாசம தனக்கு இலா நலம் கிளர்நாதன் வேண்டும்.

(பொ-ரை.) நான்கு பூதங்களுள் வாயு, ஏனைய மூன்று பூதங்களையும் காணும்படி நிலைக்கச்செய்து தான் அவற்றது சமுகத்தில் நிலைபெறும். அக்கினி ஏனைய மூன்று பூதங்களை அழித்துத்தான் அவற்றது சமுகத்தில் அழியும். அப்பு ஏனைய மூன்று பூதங்களைத் தோற்றுவித்துத்தான் அவற்றது சமுகத்தில் தோன்றும். பூமி ஏனைய மூன்று பூதங்களினின்று நுகரப்படும் பயனைப் பயப்பித்துத் தான் அவற்றது சமுகத்தில் பயன்படும். இவ்வாறு செயப்படுபொருளும், கருத்தாவும் பூதங்களுக்குள்ளே அமைந்து கிடக்கின்றமையின், வேறு இறைவன் வேண்டாமென்று நீ சொல்லில், விளங்கிய இப்பூதங்கள் ஒவ்வொன்றும் உன் கூற்றானே தனித்தனி முத்தொழிற்படுதலின், அத்தொழிலைச் செய்விக்க முத்தொழிற்படாத மேம்பாடுடைய இறைவன் வேறு வேண்டப்படும். (எ-று)

இச்செய்யுளுக்கு இவ்வாறன்றி நான்கு பூதங்களும் வினைமுதலாய் தோன்றுதல் முதலிய காரியங்களைச் செய்யுமென மேலைச் செய்யுளின் பொருளே பொருளாகக்கொண்டு கூறியது கூறலென்னுங் குற்றம் படவுரைப்பர்.

இச்செய்யுளாற் கூறப்பட்டது என்னையோவெனின், தண்ணீரில்லாதபோது ஒன்றுந் தோற்றாதாதலின், அது ஏனையவற்றைத் தோற்றுவிக்குமெனவும், காற்றில்லாதபோது ஒன்றும் நிலையாதாதலின், அது நிலைப்படுத்து மெனவும், அக்கினி எவற்றையும் அழிக்குமாதலின், அது சங்கரிக்குமெனவும், இவ்வாறு முத்தொழிலையும் மூன்று பூதங்களே செய்யுமெனவும், கன்மமின்றிப் பிருதிவியே பயன்றருமெனவுங் கூறியதை, தண்ணீர் ஏனையவற்றைத் தோற்றிவிக்கு முகத்தால் தான் தோன்றி, வாயுவினால் நிலைத்து, அக்கினியால் அழிக்கப்படுதல் போல ஒவ்வொன்றும் முத்தொழிற்படும் என்று மறுத்தவாறும். (௪)

சௌத்திராந்திகர் மதம்பற்றி ஒன்றன்கேட்டில் ஒன்று தோன்று மென்பதை மறுத்து வருமுறையில் தருபவனொருவன் வேண்டுமெனக் கூறுகின்றது.

சார்பினிற் றோன்று மெல்லாந் தருபவ னில்லை யென்னிற்
றேரினில் லதற்கோ தோற்ற முள்ள தற் கோநீ செப்பா
யோரினில் லதுவுந் தோன்றா துள்ளதே லுதிக்க வேண்டா
சோர்விலா திரண்டு மின்றி நிற்பது தோன்று மன்றே.

(கோ-டு.) எல்லாம் சார்பினிற் றோன்றும். தேரின் தருபவன் இல்லையென்னின், தோற்றம் இல்லதற்கோ உள்ளதற்கோ நீ செப்பாய். ஓரின் இல்லதுவுந் தோன்றாது. உள்ளது உதிக்கவேண்டாவேல் இரண்டுமின்றிச் சோர்விலாது நிற்பது தோன்றும் அன்றே.

(போ-ரை.) கணந்தோறும் மாறுதலையுடைய எல்லாப் பொருள்களுள்ளும் முற்கணத்திற் றோன்றிய பொருள் பிற் கணத்திற் றோன்றும் பொருட்குச் சார்பாய் மேம்படுதலின், வித்தின் கேட்டின் முளைபோல, எல்லாப் பொருள்களும் அவ் வச் சார்பிலே தோன்றுமெனச் சௌத்திராந்திகர் முதலியோர் மதம் பற்றிக் கூற அமையுமாதலில், ஆராயுமிடத்து, இப்பிர பஞ்சத்திற்குத் தோற்ற நாசமில்லாத மேம்பாடுடைய ஒரு கருத்தா வேண்டுமென்றல் கூடாதெனின், அப்படியன்று; ஒன் றன் சார்பில் ஒன்று தோன்றுமென்று நீ கூறியது இல்பொ ருட்கோ உள்பொருட்கோ கூறுவாயாக உணருமிடத்து இல்பொ ருட்கென்பையாயின், அது முயற்கோடு போல ஒரு காலத்தும் தோன்றுமாறில்லை. உள்பொருட்கெனின், உதிக்க வேண்டுவ தில்லையென மறுத்தவிடத்து, மாத்துமிகர் மதம்பற்றி, இல்லது மன்றி உள்ளதுமன்றி அநிர் வசனமாகிய சூனியமாய் மெலி வின்றி நிற்கும் பொருள் தோன்றுமெனக்கொள்வேன். (எ-று)

இல்லதும் என்பது வகர உடம்படுமெய் பெற்று இல்லதுவும் என நின்றது. உம்மை இழிவு சிறப்பு. (ரு)

மாத்துமிகர் முதலியோர் மதம்பற்றி இல்லதும் உள்ளது மல்லாதது தோன்றுமென்பாரை மறுத்து வருமுறையில் தரு பவனொருவன் வேண்டுமெனக் கூறுகின்றது.

உள்ளது மிலது மின்றி நின்றதொன் றுளதே லுண்டா
மில்லதே லில்லை யாகுந் தோற்றமு மிசையா தாகு
முள்ளகா ரணத்தி லுண்டாங் காரிய முதிக்கு மண்ணி
லில்லதாம் படங்கடாதி யெழிறரு மியற்று வானல்.

(கோ-டு) இயற்றவானால் மண்ணில் படம் இல்லதாம். கடாதி எழில்தரும். உள்ள காரணத்தில் உண்டாங்காரியம் உதிக்கும்.

(பொ - ரை) அவ்வாறு உள்ளது மன்றி, இல்லதுமன்றி அநிர்வசனமாய்க் கூறப்படும் பொருள்தான் உண்டோ இல்லையோ என வினவினார்க்கு, உண்டென்று கூறில் உள் பொருளேயாம். இல்லை என்று கூறில் இஃபொருளேயாம். இவ்வாறாகவே, முன்னர் அநிர்வசனம் என்றது போலியாயொழியும். அதுவன்றியும், அநிர்வசனப் பொருள் சூனியமாதலின் அதற்குத் தோற்றமுங்கூடாது. இவ்வாறு, சௌத்திராந்திகர்முதலியோர் கூறும் சார்பிற்றோற்றமாகிய இல்பொருட்கும், மாத்துமிகர் முதலியோர் கூறும அநிர்வசனபபொருட்கும் தோற்றம் கூடாமையால், பாரிசேட அளவையால், திகிரிமுதலிய துணைக் காரணங்களை மண்ணாகிய முதற்காரணத்தின் கண் செலுத்தும் குயவனால் அப மண்ணினின்றும் ஆடை முதலிய காரியந் தோன்றாது, குடம், பானை, கலசம் முதலிய காரியமே வெளிப்பட்டுத் தோன்றுவதுபோல, அவ்வெதிர்மறை முகத்தானும், உடன்பாட்டு முகத்தானும், உள்பொருளாகிய காரணத்தினின்றும், உள்பொருளாகிய காரியம் ஒரு கருத்தாவால் வெளிப்பட்டுத் தோன்றும். (எ - று)

" சோர்விலாதிரண்டுமின்றி நிற்பது, என்று மேலைச் செய்யுளிற் கூறியதை, அங்ஙனம் நிற்பதொரு பொருள் உண்டோ, இல்லையோ என்பார்க்கு உண்டென்று கூறில் உள் பொருளேயாம்; இல்லையென்று கூறில் இல்பொருளேயாம் என்பது கூறுதற்பொருட்டு, ஈண்டு "உள்ளது மிலது மின்றி நின்றதொன்றுளதேல்" என 0 அநுவாதமாக எடுத்துக்கொண்டு கூறினார். [௬]

சமணர் மதம் பற்றி உள்ளதும் இல்லதுமானது தோன்றுமென்பாரை மறுத்து வருமுறையில் தருபவனொருவன் வேண்டுமெனக் கூறுகின்றது.

ஒருபொரு ளொருவ னின்றி யுள திலதாகு மென்னிற்
றருபொரு ளுண்டே லின்றுந் தன்மையின் றின்றே லுண்டாய்
வருதலின் றிஃது காரிய முதலுள தாகு மென்னிற்
கருது காரியமு முண்டாய்த் தோற்றமுங் கருத்தா வாலாம்.

---

0 அநுவாதமாவது:—முன்னர்ப் பெறப்பட்ட தொன்றனைப் பிறிதொன்று கூறுதற் பொருட்டுப் பின்னரு மெடுத்தோதுதல்.

(கோ - 6) ஒரு பொருள் உளது இலது ஒருவன் இன்றி ஆகும் என்னின், தருபொருள் உண்டேல் இன்றாந்தன்மையின்று. இன்றேல் உண்டாய்வருதல் இன்று. முதல் உளதாகும் காரியம்இலது என்னின், கருது காரியமும் உண்டாய் தோற்றமுங் கருத்தாவால் ஆம்.

(போ - ரை) இப்பொருட்கும், அசிர் வசனப் பொருட்கும் தோற்றம் உண்டென்றல் கூடாமையின், சமணர்மதம் பற்றிக் காரியப்படுவதொரு பொருள் உண்டுமாய் இல்லையுமாய் நிற்கும் ஈரியல்புடையதாகலின், இதற்கொரு கருத்தா வேண்டப் படுவதின்றியே உண்டாமெனக் கொள்ளேவமெனின், பொருந் தியபொருள் உள்ளதாயின் இல்லையாந் தன்மையின்றி உள்ளதே யாம்; இல்லையாயின் உண்டாய் வருதலின்மையான் இல்லதே யாம்; ஆகலின், உண்டுமாம் இல்லையுமாம் என மாறுபட்ட இரண்டு தன்மை ஒரு பொருளுக்கிசைதல் கூடாது; என மறுக்கச், சித்தாந்தக் கொள்கைப்படி காரணரூபமாயுண்டு, காரிய ரூபமாயில்லை என்பதே உண்டு மில்லையு மென்றதற்குப் பொரு ளென்று கூறின், நன்று கூறினாய்! காரணகாரியங்கட்குத் தம் முண் வேற்றுமையின்மையான் காரணம் உள்பொருளாயின், கருதுகின்ற காரியமும் அதன்கட் சூக்கும ரூபமாய் உள்ளதே யாகும். அது பின்னர்த் தூலரூபமாய் விளங்கித் தோன்றுதல் ஒரு கருத்தாவினாலாம் என்பது தானே விளங்கும். (எ - று)

இது வரையும், வந்து நின்று போவது என்றதும், வருமுறை என்றதும், அதாவது உள்ளது தோன்றுமென்னுஞ் சற்காரியமுறையும், தருபவனொருவன் வேண்டும் என்றதும்வைதிகப்புறத்தாராகிய உலகாயதர், சௌத்திராந்திகர், மாத்துமிகர், சமணர் முதலியோர் மதம் பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து இகந்து படாமைக்காத்தார். இனி, வைதிகத் துட்பட்ட மீமாஞ்சகர், தார்க்கிகர், சாங்கியர் முதலியோர் மதத்தானும் முறையே அம்மூன்றும் இகந்து படாமைக் காக்கின்றார். (எ)

மீமாம்சகர் மதம்பற்றி உடலழியுமன்றி உலகமழியாதென் பாரை மறுத்து உலகமும் அழியும் எனக் கூறுகின்றது.

காயத்தி னழிவு தோற்றங் கண்டன முலகிற் காணா
மீயித்தை யுரைத்த வாறிங் கென்னெனி னிகழ்த்து முண்மை
மாயத்த வுலகம் பூ நீர் தீ வளி வானமாதி
யாயித்தா னென்றி னென்று தோன்றி நின் றழிதலாலே.

(கோ - ௫.) தோற்றம் அழிவு காயத்திற் கண்டனம். உலகிற் காணும் இங்கு நீ இத்தை உரைத்தவாறு என்னெனின் மாயத்த உலகம் பூநீர் தீவளிவானம் ஆதி ஆய இத்தான் உண்மை ஒன்று ஒன்றின் தோன்றி நின்றழிதல் ஆலே நிகழ்த்தும்.

(பொ - ரை.) உடலும், உலகும் என்னும் இரு கூற்றுப் பிரபஞ்சத்துள் ஆண், பெண, அலி என மேற்கூறிய அவயவப் பகுப்பு உடலுக்கேயன்றி ஏனை யுலகத்திற் கின்மையால், தோற்றமும் அழிவும் காயத்திற் கண்டனம்; அன்றி, உலகத்திற் காணுமெனபது நிச்சயமாயிருக்க, இவ்விடத்து இரண்டற்கும் ஒப்பத் தோற்றக் கேடுகள் கூறுதல் அமையாதென்று சொல்லில், இவ்வாறு மயக்கத்தைச் செய்வதாகிய உலகமும் நிரவயவம் (அவயவமின்மை) இன்றி மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்றது முதலான அவயவப் பகுப்புடைத்தாகிய இதனுன், அவ்வவயவப் பகுப்புண்மையே இரு கூற்றுப் பிரபஞ்சத்திலொன்றாகிய உலகமும், ஏனைக் காயம் போலத் தோன்றி நின்றழிதலை உணர்த்தும். (எ - று.)

ஆயித்தானென்பதில் ஆய இதனுல் என்னும் பொருள்பட அகரமும், அன்சாரியையும் தொக்குநின்றன. * "பெறறத்தாற் பெற்ற பயன்" என்றாற்போல. இனி, ஆயிற்றுனென்று பாடமோதில், ஆய இத்தன்மையாலென் றுரைத்துக் கொள்க. ஒன்றின் என்றவிடத்து இன் ஒன்றுபோல என்னும் பொருள்பட வந்த உவமவுருபு.

அழிதல் என்றவிடத்து இறுதிக்கண் ஐ யுருபு தொக்கு நின்றது. "இரண்டாம் வேற்றுமைப் பொருளும், ஏழாம் வேற்றுமைப் பொருளும் அல்லாத பிற பொருளின் மேல் நின்ற உருபு மொழியிறுதியிற் ருெக்குநில்லா" என்னுந் தொல்காப்பியச் சூத்திரவிதியால் இரண்டாம் வேற்றுமையுருபும், ஏழாம் வேற்றுமையுருபும் மொழியிறுதியில் தொக்குநிற்கும் என்பது பெறப்படுதல் காண்க. அழிதலாலே என்றவிடத்து ஆல், ஏ இரண்டும் அசை. ஒன்றினென்று தோன்றி நின்றழிதலால் என்பதற்கு வானம் முதலியவைந்தும் முறையே ஒன்றினென்று தோன்றிநின்றழியு மென்னுஞ் சுருதி உனக்குப் பிரமாணமாதலாலென் றுரைப்பாருமுளர்; வேதத்துள் விதிவாக்கிய மொழித்தொழிந்தன வெல்லாம் உபசார வகையானன்றிப் பிரமாணமாகாவெனக் கொண்ட மீமாஞ்சக மதத்தார்க்கு அவ்வுபநிடதச் சுருதி பிரமாணமன்ற

* திருக்குறள் சுற்றந்தழால் செ, ௪,

கலானும், ஈண்டுக் கூறுவனவெல்லாம் யுத்திபற்றியன்றி ஆகம அளவை பற்றியன்றாகலானும் அவ்வுரை போலியாதலறிக. (அ)

மீமாம்சகர் மதம்பற்றி உலகம் ஒருசேர அழியாதென்பாரை மறுத்து உலகம் ஒருசேர அழியுமெனக் கூறுகின்றது.

ஓரிடமழியப் பின்னு மோரிட நிற்குமொக்கப்
பாரிட மழிவ தின்று மென்றிடிற் பயில்வித்தெல்லாங்
காரிட மதனிற் காட்டுமங்குரங் கழியும் வேனிற்
சீருடைத் துலகு காலஞ் சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும்.

(கோ - ரு) பாரிடம் ஒக்க அழிவது இன்றும். ஓரிடம் அழியப் பின்னும் ஓரிடம் நிற்கும் என்றிடின், பயில்வித்து எல்லாம் காரிடமதனில் அங்குரங் காட்டும்; வேனிற் கழியும். சீருடைத்து உலகு காலம் சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும்.

(பொ - ரை.) நிலம், மலை, கடல் முதலிய வடிவிற்றாகிய உலகமும் காயம்போல அவயவப் பகுப்புடைமையால், அது போலத் தோன்றிநின்றழிதல் பெறப்படுமென்ற தொக்கும். அங்ஙனமாயினும், பார்த்தறியப்படும் உலகமெல்லாம் ஒருசேர அழியுமென்று கூறின், உலகம் அநாதி என்னுஞ் சுருதியோடு முரணுமாதலானும், அழிந்தது மீளத் தோன்றுதற்கோர் சம்பந்தமின்றாய் முடியுமாகலானும், அவ்வாறன்றி உலகத்தில ஒரு பக்கம் அழியினும் பிறிதொரு பக்கம் நிற்கும் என்றலே பொருத்தமுடையதெனின், அப்படியன்று. ஒருசாதிப் பலபொருளாகிப் பழகி வருகின்ற வித்து முதலிய சடங்கள், கார்காலமாகிய ஓர் காலவிசேடத்தில் ஒருசேர முளைதோன்றும்; வேனிற் காலமாகிய ஓர் காலவிசேடத்தில் ஒருசேர அழியும்; ஆதலில், அவ்வாறு சடத்தன்மையுடைய உலகமும் அவ்வக்காலம் வந்துவிடத்து முழுவதும் ஒருசேரத் தோன்றி ஒருசேர அழியும். (எ - று)

பாரிடம் என்பது பார்த்தறியப்படுமிடம் என்னும் பொருளில் நின்றமையின் வினைத்தொகை. உலகம் சூக்கும ரூபமா யொடுங்கியுந் தூலரூபமாய் வெளிப்பட்டும் என்றும் உள்ளதாதலின் அநாதியாமாறு காண்க. சீர் உவம உருபு. அச்சீரென்றாற்போல. (கூ)

மீமாம்சகர் மதம்பற்றிக் காலமே கடவுள் என்பாரை மறுத்துக் காலம் துணைக்காரணமெனக் கூறுகின்றது.

காலமே கடவுளாகக் கண்டனந் தொழிலுக் கென்னிற்
காலமோ வறிவின்றாகு மாயினுங் காரியங்கள்
காலமே தரவே காண்டுங் காரணன் விதியினுக்குக்
காலமுங் கடவுளேவ லாற்றுணைக் காரணங்காண்.

(கோ - டு) தொழிலுக்குக் காலமே கடவுளாகக் கண்டனம் என்னின், ஆயினும் காலமோ அறிவு இன்றாகும். காரியங்கள் காலமே தரவே காண்டும். கடவுள் ஏவலால் காரணன் விதியினுக்கு காலமும் துணைக்காரணங்காண்.

(போ - ரை.) மேற்கூறியவாறு காலம் வந்தவிடத்துத் தோன்றியழிதலால், அத்தோற்றக் கேடுகட்குக் காலமே கருத்தாவாய் முடியுமென்று (காலேசுவர வாதிகள்) கூறுவர். அஃதொக்குமாயினும், அக்காலம் அறிவில்லாத சடமாதலால், கருத்தாவாகாது. ஆனால், தோற்றக் கேடுகளைக் காலமே தரல் காண்டலின், அறிவுடைய கருத்தாவினது ஏவலால் அக்கருத்தா செய்யும் தோற்றக் கேடுகட்குக் காலமும் துணைக்காரணமாமென்றறிவாயாக. (எ - று.)

இச்செய்யுளில் முன்சொன்ன சொல்லும், பொருளும் பின்னும் வருதலால், இது சொற்பொருட் பின்வருநிலை யென்னும் அலங்காரம். காலமோ என்பதில் ஒகாரம் இழிவு சிறப்பு. காலமே என்பதிலுள்ள ஏகாரம் காலமின்றி மற்றவை தருதல் கூடாதென ஏனையவற்றைப் பிரித்துப் பிரிநிலைக் கண்ணும், தரவே என்பதிலுள்ள ஏகாரம் நிச்சயமாய்த் தரக்காண்டலான் எனத் தேற்றத்தின் கண்ணும் வந்தன. (கo)

தார்க்கிகர் மதம்பற்றி அணுக்கள் தாமே உலகமாய்த் தோன்றிநின்றழியுமென்பாரை மறுத்துரைக்கின்றது.

அழிந்தபி னணுக்கடாமே யகிலமாய் வந்து நின்று
கழிந்திடுங் கன்மத் தென்னிற் கன்மமு மணுவுங்கூட
மொழிந்திடுஞ் சடமேயாகி முடிதலான் முடியா செய்தி
யொழிந்திடு மணுருபங்க ளுலகெலா மொடுங்கு மன்றே.

(கோ - ள்.) அழிந்தபின் அணுக்கள்தாமே கன்மத்து அகிலமாய் வந்து நின்று கழிந்திடும் என்னின், மெழிந்திடுங் கன்மமும் அணுவும் சடமாகியே முடிதலான் செய்தி முடியா. உலகு எல்லாம் ஒடுங்கும் அன்றே அணு ரூபங்கள் கூட ஒழிந்திடும்.

(பொ - ரை) உலகம் அழிந்தபின்னர் அணுக்களாய் ஒடுங்கி, மீள அப்பரமாணுக்கள் தாமே உயிரின் கன்மமேதுவாகப் பிரபஞ்சமாய்த் தோன்றிநின்றழியும். கன்மமும், காலமும் போல இறைவனிச்சையும் ஒரு துணைக்காரணமாம்; அத்தனையே யன்றிப் பிறிதில்லையெனின், அவ்வாறன்று. சொல்லப்பட்ட கன்மமும், அணுவும் சடமாகவே முடிதலின், அவை தம்முட் கூடித் தொழிற்படுதல், அதாவது பிரபஞ்சமாகத் தோன்றிநின்றழிதல் அறிவுடைய முதல்வன் தொழிலையின்றிக் கூடாது அஃதன்றியும், உலக முழுதும் ஒடுங்கும்போது அணுவுங் கூடவே ஒடுங்குமாகலான், அவ்வணு பின் உலகமாய் வந்துநின்றழியு மென்பது யாங்ஙனம் கூடும். (எ - று.)

இவ் வணுகாரண வாதம் சௌத்திராந்திகர், வைபாடிகர், ஆசீவகர் மதங்கட்கும் ஒக்கும். (கக)

அணுவே காரணமென்று கூறுந் தார்க்கிகரை மறுத்து, அணு, காரியமாதலால் காரணமாகாதெனக் கூறுகின்றது.

காரண வணுக்கள் கெட்டாற் காரிய வுலகின்றென்னிற்
காரண மாயையாகக் காரியங் காணலாகுங்
காரண மாயை யென்னை காண்பதிங் கணுவே யென்னிற்
காரண மாயை யேகாண் காரிய மணுவிற் கண்டால்.

(கோ - ள்.) காரண வணுக்கள் கெட்டாற் காரிய உலகு இன்று என்னின், மாயை காரணமாகக் காரியங் காணலாகும். அணுவே இங்குக் காண்பது. மாயை காரணம் என்னை என்னின், அணுவிற் காரியங் கண்டால் மாயையே காரணங்காண்.

(பொ - ரை.) அணுக்களும் ஒடுங்குமாயின், காரணமாகிய அணுக்கள் அழிந்தால் காரியமாகிய பிரபஞ்சம் இல்லையாகுமே எனின், பிரபஞ்சத்திற்கு முதற்காரணம் சத்திவடிவக் கூட்டமாய் நிலைபெற்றிருக்கும் மாயையே யாகும். ஆதலால், அணுக்

கள் அழிந்தமை பற்றி உலகம் மீளத் தோன்றுதற் கிழுக் கில்லை. ஆனால், அணுவே இவ்விடத்திற்கு முதற்காரணமாய்க் காணப்படுவதன்றி மாயை முதற்காரணமென்று கூறுதல் பெறப் படாதெனின், அணுக்களிடத்துத் தோன்றி யழிதற்றன்மை காணப்படுதலான், அவ்வணுக்கள் உலகிற்கு முதற்காரணமா தல் செல்லாதாகலின், தோன்றியழிதலில்லாத மாயையே உல கிற்கு முதற்காரணமாமென உணர்க. (எ - று.)

இச்செய்யுள் சொற்பொருட் பின்வருநிலை. காண்டலால் என்றி ருக்க வேண்டுவது கண்டு எனத் திரிந்து நின்றது. * "மயலாகு மற்றும் பெயர்த்து" என்றாற் போல. கண்டால் என்பதில் ஆல் அசை. (கஉ)

அணு காரியமாகாதெனக் கூறும் தார்க்கிகரை மறுத்து அவயவமுடைமையால் காரியமாகுமெனக் கூறுகின்றது.

காரிய மென்ப தென்னை காரண வணுவை யென்னிற்
காரிய மவய வத்தாற் கண்டனங் கடாதி போலக்
காரிய வுருவ மெல்லா மழிதருங் கார ணத்தாற்
காரிய வுறுப்பின் மாயை தருமெனக் கருதி டாயே.

(கோ - டு.) காரண அணுவை காரியம் என்பது என்னை என் னின், காரியம் கடாதிபோல அவயவத்தாற் கண்டனம்.

(போ - ரை.) காரணமாகிய அணுவைக் காரியமென் றல் எவ்வாறு பொருந்தும் எனின், மண்ணாகிய காரணத்தி னின்று தோன்றும் காரியமாகிய் குடம் முதலியன போலப் பல வேறு வகைத்தாகிய அவயவத் தன்மையுடைமையால் அணுக் கள் காரியமாகும. அங்ஙனம் பலவேறு வகைத்தாகிய காரிய மெல்லாம் அழிதற்றன்மைய வாகலின், காரியப் பொருளெனப் படுதற்குரிய பலவேறு வகைத்தாய் அவயவத் தன்மையில்லாத மாயையே முதற்காரணமென அறிவாயாக (எ - று)

இதுவும் சொற்பொருட் பின்வருநிலை. அணுக்களுக்கு அவயவத் தன்மையுண்டென்பது, பரமாணு இரண்டுகூடித் துவியணுகந்தோன் றும். துவியணுகம் மூன்று கூடித் திரியணுகந் தோன்றும் என்பது முதலியவற்றாற் பெறப்படும்.

இதனால், காரணம் ஒன்றாய்த் தோன்றியழிதலின்றி நிலைபெற்றி ருக்குமென்றும், காரியம் பலவாய்த் தோன்றியழிதலையுடையதாயிருக்கு

* திருக்குறள். துறவு. செச.

மென்றும் அறிக. ஆயின், பலவாகிய ஆன்மா, காரியமெனப்பட்டுத் தோன்றியழியும் என்னலாகுமே எனின், அன்று. பலவாயும், சடமாயும் இருப்பது தோன்றியழியும். அதுவே காரியமெனப்படும். பலவாயும் சித்தாயுமிருப்பது தோன்றியழியமாட்டாது. ஆதலின், அது காரிய காரணங்கட்குட்பட்டதன்றெனக. (கங)

மாயையே முதற்காரணமென்பதை வேதமொழி உலக மொழிகளால் வற்புறுத்துகின்றது.

தோற்றமு நிலையு மீறு மாயையின் றொழிலதென்றே
சாற்றிடு முலகம் வித்துச் சாகாதி யணுக்க ளாக
வேற்றதே லீண்டு நிற்கு மில்லதே லியைவ தின்று
மாற்றநீ மறந்தா யித்தான் மாயையை மதித்திடாயே.

(போ - ரை.) அன்றியும் தோற்றம், நிலை, இறுதி என்னும் முத்தொழிலும் மாயை தருமென்பதற்கு மாயையே பிரகிருதி என்றறிக வென்று கூறுகின்ற வேதமொழியும், வித்தின் கண்ணே சாகை முதலியன சூக்கும ரூபமாய் அடங்கி நின்றன வாயின் அவை தூலரூபமாக வெளிப்படும் என்று கூறும் உடம்பாட்டானும், வறுத்த வித்தின்கண் சூக்கும ரூபமாய் அடங்கி நிற்றலில்லையாயின், அவை தூலரூபமாக வெளிப்படுதலுமின்றாமென்று கூறும் எதிர்மறையானும் வழங்குகின்ற உலக மொழியுஞ் சான்றாதலின், அதனை நீ மறந்தாய். அவயவமாகிய உறுப்பில்லாமை மாத்திரையே யன்றி, வேதமொழி, உலகமொழி சான்றாதலாகிய இதனானும் அணுகாரண வாதத்தை விட்டு மாயையே முதற்காரணமென்றறிவாயாக. (எ - று)

மாயை முதற்காரணமென்பது வேதமொழி, உலகமொழிகளாகிய பிரமாணங் கூறி வலியுறுத்தப்பட்டது. மாற்றம் என்பது உலகம் என்பதனோடுங் கூடி, உலகமாற்றமென்றாகி, உலகம் என்பது உயர்ந்தோர் என்னும் பொருள் குறித்து, வேதத்தின்றொழிலாகிய மொழி, அதனையுணர்ந்த உயர்ந்தோர்மேலேற்றிக் கூறப்பட்டது. அதாவது, உயர்ந்தோர் மொழி, வேதமொழியெனப்பட்டது. மாற்றம் என்றவிடத்து உலகம் என்பது வருவித்து உலகமொழி என உரைக்கப்பட்டது. "மாயையின் றொழிலதென்றே" என்றவிடத்து ஏகாரம் ஏனையவற்றைப் பிரித்தமையின் பிரிநிலைக்கண் வந்தது. இத்தால் என்றவிடத்து அன் சாரி

யையும் உம்மையும் தொக்குநின்றன. அவ்வும்மை காரியவுறுப்பின்மை மாத்திரையேயன்றி என இறந்தது தழீஇற்று. பிரகிருதி என்பதன் பொருள் முதற்காரணம். (கசு)

காரணத்திற் சூக்கும ரூபமாயொடுங்கியிருந்த காரியமே தூலரூபமாய்த் தோன்றுமெனச் சற்காரிய வாதத்தியல்பு கூறுகின்றது.

மாயையி னுள்ள வஞ்சம் வருவது போவ தாகு
நீயதிங் கில்லை யென்னி னிகழ்ந்திடு முயலிற் கோடு
போயுகு மிலைக ளெல்லா மரங்களிற் புக்குப் போதி
னுயிடு மதுவு மென்னிற் காரணங் கிடக்க வாமே

(கொ - டு.) நீ அது இங்கு இல்லை என்னின் முயலிற்கோடு நிகழ்ந்திடும். உள்ள வஞ்சம்மாயையின் போவது வருவதாகும். மரங்களின் உகும் இலைகளெல்லாம் போய்ப்புக்குப் போதின் ஆயிடும் என்னின் காரணங் கிடக்க அதுவும் ஆமே.

(பொ - ரை) அது வன்றியும் உள்ளதாகிய காரணத்தில் உள்ளதாகிய காரியந் தோன்றுமென்று கொள்ளாது, இல்லது உற்பத்தியாம் என்பையாயின், முயலின் கண்ணும் கோடுள தாதல் வேண்டும் அவ்வாறுபின், உள்ள பிரபஞ்சமே மாயையில் ஒடுங்கி மீளத்தோன்று மென்பார்க்கும், அவ்வாறே மரத்தினின்றும் உதிர்ந்த இலைகளெல்லாம் தானே மரத்தில் ஒடுங்கி அதற்குரிய காலத்தில் மீளத் தோன்றுதல் வேண்டுமென்று அவர் கூற அஃதொக்கும். அங்ஙனம் உதிர்ந்த இலைகளெல்லாம் சத்திரூப காரணமாய் நிலைபெற்றிருக்கு மாதலின், அச்சத்தி, மீளத்தோன்றுதற்குரிய கன்மம், காலம் முதலிய பிற காரணங்களெல்லாம் அதனோடு ஒருங்கு கூடியவிடத்து அவ்வாறே தோன்றும். கூடாதவிடத்துத் தோன்றாது. ஆதலின், அதுபற்றி என்ன ஆசங்கை? (எ - று.)

இல்லது தோன்றுமாயின், முயலின் கண்ணும் கோடு உளதாதல் வேண்டும் என்னுந் தருக்கங் கூறி, மாயை முதற்காரணம் என்பது வலியுறுத்தப்பட்டது.

பிரவஞ்சம் வஞ்சம்எனக் குறைந்துநின்றது. அதுவும் என்பதில்உம்மை அசை. பிற காரணங்களாவன:—கன்மம், காலம் முதலியன. கிடத்

தல் என்பது முதற்காரணத்தோடு பிரிப்பின்றி நிற்றல். கிடக்க ஆம் என்பது கிடத்தலால் ஆம் என்னும் பொருள் தோன்ற நின்றது. "மழை பெய்யக் குளம் நிறையும்" என்றாற்போல.

மரத்தில் நின்று உதிர்ந்த இலை முதலியன சத்திரூபமாய் மரத்தில் ஒடுங்குதல் எவ்வாறெனின், அவ்விலை முதலியன தன் தன்மைகெட்டு உரமாக மரத்தின் கண்ணடங்கி மீளத் தோன்றுமென்க. அவ்வா றொடுங்குதற்கு முன் வேறு இலை முதலியன தோன்றுதற்கு மரத்தின் கண் அவ்வாறு பல சத்திகள் உளவென்பதும், உதிர்ந்த இலை முதலியன வும் மரத்தின் கண்ணன்றி ஏனைய பயிருக்கு உரமாக உபகாரப்படின், அப்பயிருக்குரிய இலை முதலியனவாய்த் தோன்றுமாதலின், அதுபற்றி இழுக்கில்லை என்பதுமறிக. (கரு)

உள்ளது தோன்றுமென்றதனால் உலகம் அழிபொருளென் றல் கூடாதெனபார்க்குச் சமாதானங் கூறுகின்றது.

கருதுகா ரணமுண் டாகக் காரிய முள்ளதாகி
வருதலா லநாதி வைய மற்றொரு கடவு ளித்தைத்
தருதலா லாதி யாகச் சாற்றலுமாகு மாயைக்
கொருவனு ரென்னிங் கென்னி னுள்ளவா றுரைப்பக்கேணீ.

(போ - ரை.) மேற்கூறியவாறு சற்காரிய வாதம், அதா வது உள்ளது காரியப்படும் என்று சொல்லுவானுடையார்க்கு, உலகம் அழிபொருளென்று கூறுதல் பொருந்தாதாய் முடியு மெனின், அவ்வாறன்ற. கருதகின்ற காரணம் உள்பொரு ளாக, அதனகட் டோனறுங்காரியமும் உள்பொருளே என்பது மேற்கூறியவாற்றான் இனிது விளங்குதலின், காரியமாகிய பிர பஞ்சமும் நித்தப்பொருளேயாம். இப்பிரபஞ்சம் ஒரு கருத் தாவால் ஒரு காலத்து விளங்குதலும் ஒருகாலத்து மறைதலு மாகிய அவத்தை வேறுபாடுபற்றி அழிபொருளென்றுஞ் சொல் லப்படும். அழிபொருளென்றும் என்றதிலுள்ள உம்மையால் அவத்தை வேறுபாடு கருதாதவிடத்து நித்தப்பொருளென்பதே துணிவு. (எ - று.)

மாயை என்பது முதல் கேணீ என்பதுவரை அடுத்துவருஞ் செய்யு ளிற் சேர்த்துப் பொருளுரைக்கப்படும். "அழிந்தபி னணுக்கடாமே" என்னுஞ் செய்யுள் முதல் இச்செய்யுளில் "சாற்றலுமாகும்" என்பது

வரை தார்க்கிகர் மதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து வருமுறை என்பதனாற் பெறப்பட்டசற்காரியவாதத்தினியல்புவலியுறுத்தப்பட்டது. கசூ

சாங்கியர் மதம்பற்றி மாயையே தன் காரியத்தைத் தோற்றுவிக்கும் என்பாரை மறுத்துத் தருபவனொருவன் வேண்டுமெனக் கூறுகின்றது.

புத்திமற் காரி யத்தாற் பூதாதி புருடன் றானு
மத்தனு கரணம் பெற்று லறிதலா லவற்றை மாயை
யுய்த்திடு மதனுன் மாயைக் குணர்வொன் று மில்லையென்றே
வைத்திடு மதனு லெல்லாம் வருவிப்பா னொருவன் வேண்டும்.

(கோ - டு.) இங்கு மாயைக்கு ஒருவன் ஆர் என் என்னின், உள்ளவாறு உரைப்ப நீ கேள். பூதாதி புத்தி மற் காரியத்தால் புருடன் றானும் அத்தனு கரணம் பெற்றால் அறிதலால் மாயை அவற்றை உய்த்திடுமதனுல் மாயைக் குணர்வொன் றுமில்லையென்றே வைத்திடுமதனுல் எல்லாம் வருவிப்பா னொருவன் வேண்டும்.

(பொ - ரை.) இவ்விடத்துக் கூறியவற்றுள் ஏனையவெல்லாம் ஒக்கும். மாயையே தன் காரியத்தைத் தருமாகலின், மற்றொரு கடவுள் மாயையினின்றுந் தருமென்றல் பொருந்தாதென்னின், அறியாது கூறினாய். அதனை உள்ளவாறு கூற நீ கேட்பாயாக குடம் முதலியன மண்ணினின்றுங் குயவனாற் செய்யப்படுங் காரியமானாற்போல, பூதம் முதலிய பிரபஞ்சமெல்லாம் ஒரு சேதனப் பொருளால் மாயையினின் றுஞ் செய்யப்படுங் காரியமேயாம். ஆன்மா சேதனப்பொருளாதலால் அதுவே தோற்றுவிக்குமென்னலாகாதோ வெனின், அவ்வான்மா அப்பூதாதியாலாகிய தனுகரணாதிகளைப் பெற்ற பின்னரே அறிதற்றொழிலைச் செய்தலானும், மாயை, தனு கரணாதிகளுக்கு முதற்காரணமாய் நின்று அவற்றைத் தோற்றுவித்தவினால், அம்மாயைக்கு உணர்ச்சி சிறிதும் இல்லையென்றே கூறியிருத்தலானும், இவ்வாறு ஆன்மாவிற்கும் மாயைக்கும் பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பதில் அதிகாரமில்லாமை பெறப்படவே, பாரிசேட அளவையால், இவ்விரண்டினும் வேறாய், மாயையினின்றும் பூதம் முதலிய பிரபஞ்சம் எல்லாவற்றையும் தோற்றுவிப்பதற்கு ஒரு கடவுள் வேண்டப்படும். (எ - று.)

• புத்திமற்காரியம்—புத்திமானது காரியம். அவ்விடத்துத் தொக்கு நின்ற அது என்னும் ஆறும் வேற்றுமை யுருபு செய்விக்கிறதென னும் பொருளில் வந்தது. புத்திமத்காரியமென்பது வடநூல் முடிபுப்படி புத்திமற் காரிய மென்றாயிற்று. தமிழ் முடிபாயின் புத்திமான் காரிய மென்றிருத்தல் வேண்டும். புத்திமான்,சேதனன் என்பன ஒரு பொருட் சொற்கள். உய்த்திடுமென்பது, உண்டு பண்ணுமென்னும் பொருளில் வந்தது. உணர்வு ஒன்றும் என்பதில் ஒன்றும் என்பது சிறிதும் என் னும் பொருள்பட நின்றது. உணர்வில்லாத தநுகரணாதிகளை முதற் காரணமாய் நின்று தோற்றுவித்தலால் மாயைக்கு உணர்ச்சியில்லை யென் பது பெறப்பட்டது. இல்லை யென்றே என்பதில் ஏகாரம்தேற்றம். (கஎ)

ஒரு காரியத்திற்கு மூன்று காரணம் இன்றியமையாது வேண்டப்படு மெனக் கூறுகின்றது.

காரிய காரணங்கண் முத றுணை நிமித்தங் கண்டாம்
பாரின் மண்டிரிகை பண்ணு மவன் முதறுணை நிமித்தந்
தேரின் மன் மாயையாகத் திரிகைதன் சத்தியாக
வாரியன் குலாலனாய் நின் றாக்குவ னகில மெல்லாம்.

(கோ - டு.) காரிய காரணங்கள் முதல்துணை நிமித்தம். பாரின் மண் திரிகை பண்ணுமவன் முதல்துணை நிமித்தங் கண்டாம். தேரின் அகிலம் எல்லாம் மாயை மண்ணாக, தன் சத்தி திரிகையாக, ஆரியன் குலாலனாய் நின்று ஆக்குவன்.

(பொ - ரை.) அன்றியும், ஒரு காரிய நிகழ்ச்சிக்கு வேண்டுங்காரணங்கள் முதற்காரணம், துணைக்காரணம்,நிமித்த காரணம் என மூவகைப்படும். அக்காரணங்கள் தம்முள் ஒன் றேனு மின்றிக் காரியம் தோன்றாதென்பதும், அக்காரணங்கள் தம்முள் வேறாம் என்பதும், இவ்வுலகில் குடம் முதலிய காரி யத்தில் மண் முதற்காரணமாகவும், திரிகை துணைக்காரணமாக வும், குலாலன் நிமித்தகாரணமாகவும் காண்டலால் அறிந்தாம். ஆராயுங்கால், பிரபஞ்சக் கூட்டமாகிய காரியத்திற்கும் அவ் வாறே மண்போல மாயை முதற்காரணமாகவும், திரிகைபோல இறைவன் சத்தி துணைக்காரணமாகவும், குலாலன்போல அவ் விரு காரணங்களின் வேறாய் சிவபிரான் நிமித்த காரணமாகவும் நின்று அப்பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பன். (எ - று.)

காரிய காரணங்கள் என்பது காரியத்தினது காரணங்கள் என்னும் பொருளில் வந்த ஆறும் வேற்றுமைத் தொகைச் சொல். அது, தமிழ் நூல் முடிபுப்படி மரக்கோடு என்பது போல, காரியக்காரணம் என்றிருத்தல வேண்டும். இருமொழியும் வடமொழியாதலின், அவ்வாறின்றி வடநூல் முடிபுப்படி காரிய காரணம் என நின்றது. இருகாரணங்களின் வேறாய் இறைவன் நிற்பன் என்றது, அக்காரணங்களின் தன்மையின் வேறாய் என்பதேயாம். இவ்வாறன்றி, திருட்டாந்தம் போல வேறு வேறாய் நிற்குமென்றல் வியாபகப் பொருட்குப் பொருந்தாது. இதனை, வருகின்ற உஎ-வது செய்யுளில், "ஒருவனே யெல்லாமாகி யல்லவா யுடனுமாவன்" என்பதனானுங் காண்க.

மாயைக்கொருவனு ரெண்பதளப்பட இவை இரண்டு செய்யுளானும், சாங்கியர் மதம் பரிகரித்துத் தருபவனொருவன் வேண்டுமென்பது சாதிக்கப்பட்டது. இவ்வாறு உதிப்பது மீறும் என்பதுமுதல் இது வரையும், வேதத்தை ஒப்புக்கொள்ளாத உலகாயதர், புத்தர், சமணர் முதலியோர் மதம்பற்றியும்; வேதத்தை ஒப்புக்கொள்ளுகின்ற மீமாஞ்சகர், தார்க்கிகர், சாங்கியர் முதலியோர் மதம்பற்றியும் ஆசங்கை நிகழாத வண்ணம், வருமுறை வந்து நின்று போவதுமாதலாலே தருபவனொருவன் வேண்டும, என்பதை வலியுறுத்திக் காத்துக் கொண்டு, இனி, அக்காரணத்தினின்றுங் காரியங்கள் தருபவனொருவனாற் றரப்படுமாறும், அக்காரண காரியங்களினியல்பும் எவ்வாறு என்பார்க்கு, ஆரியன் குலாலனாய் நின்றாக்குமாறு ஒன்பது செய்யுளாற் கூறுகின்றார். (கஅ)

தருபவன் தருமுறைபைத் தொகுத்துக் கூறுகின்றது.

விந்துவின் மாயையாகி மாயையி னவ்வி யத்தம்
வந்திடும் விந்துத் தன்பால் வைகரி யாதி மாயை
முந்திடு மராகமாதி முக்குண மாதிமூலந்
தந்திடுஞ் சிவனவன்றன் சந்நிதி தனினின்றே.

(கோ - டு.) விந்துத் தன்பால் வைகரியாதி முந்திடும் மாயை அராகமாதி (முந்திடும்). மூலம் முக்குணம் ஆதி (முந்திடும்). சிவனவன்றன் சந்நிதி தன்னின் நின்றே தந்திடும்.

(போ - ரை.) சுத்தப் பிரபஞ்சம் சுத்தாசுத்தப் பிரபஞ்சம், அசுத்தப் பிரபஞ்சம் எனக் காரியப் பிரபஞ்சம் முத்திறப்படுதலின், அவற்றிற்கு முதற்காரணங்களுந் தம்முள் வேறுதல் வேண்டும். அவற்றுள், மலகன்மங்களோடு விரவாது

முதற்காரணமாய் நிற்பது சுத்தமாயை. அஃது ஏனை அசுத்த மாயை, பிரகிருதி மாயை இரண்டனையும் வியாபித்து மேலாய் நின்று சுத்தப் பிரபஞ்சத்திற்குக் காரணமாம். அச் சுத்த மாயையின்கீழாயடங்கி மலகன்மங்களோடு விரவி முதற்காரணமாய் நிற்கின்ற அசுத்த மாயை, சுத்தா சுத்தப் பிரபஞ்சத்திற்குக் காரணமாம். அவ்வசுத்த மாயையினது தூல பரிணாமமாய்த் தோன்றி நிற்கின்ற பிரகிருதி மாயை, அசுத்தப் பிரபஞ்சத்திற்குக் காரணமாம். அக்காரணம் மூன்றனுள், சுத்த மாயையினின்றும் ஒடுக்க முறைபற்றி வைகரி முதல் வைத்தெண்ணப்படும் சுததப் பிரபஞ்சமாகிய நாலுவாக்குந் தோன்றும். அசுத்தமாயையினின்றும் ஒடுக்க முறைபற்றி அராகம் முதல்வைத்தெண்ணப்படும் சுத்தாசுத்தப் பிரபஞ்சமாகிய ஐந்து தத்துவங்களுந் தோன்றும். பிரகிருதி மாயையினின்றும் தோற்றும் முறைபற்றிக் குணதத்துவம் முதல்வைத்தெண்ணப்படும் அசுத்தப் பிரபஞ்சமாகிய இருபத்துநான்கு தத்துவங்களுந் தோன்றும். இவ்வாறு சடரூபமான சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என்ற மூன்றும் தத்தம் காரியங்களைச் சிவசத்தியின் சங்கற்ப ரூபமாகிய சந்நிதியினின்றும் தோற்றுவிக்கும். (எ - று.)

சுத்தமாயை மலகன்மங்களோடு விரவாமையாவது, மலத்தின் காரியமாகிய மோகாதிகளுக்கும், கன்மத்தின் காரியமாகிய விருப்பு வெறுப்புக்கும் முன்னிலையாகிய காரியப் பொருளைத் தோற்றுவிக்காமை. சுத்தமாயா புவனத்தில் வசிக்கும் விஞ்ஞானகலர்கட்கு ஆணவமலமிருப்பது அதிகாரமாத்திரைக்கேயெனவும், மோகாதிகளைத் தோற்றுவிக்காதெனவும் அறிந்துகொள்க. விந்துவின் மாயையாகி என்றவிடத்து இன் சாரியை. அவ்விடத்துக் கீழ் என்னும் பொருள்தரும் கண்ணுருபு விரித்து, விந்துக்கீழ் மாயையென உரைக்க. அதோ மாயை என்றதும் கீழ் என்னும் இப்பொருள்பற்றியேயாம். இவ்வாறன்றி, இன் உவமருபு எனக்கொண்டு விந்துவைப் போல மாயையாகி எனவும், இன் ஐந்தாம் வேற்றுமை உருபெனக் கொண்டு விந்துவினின்று மாயையாகி எனவும் உரைப்பர். அவ்விரண்டினையும், இரத்தினத் திரயம் என்னும் நூலில் பிறர் கருத்தாகக் கூறுதலின், அவை பொருந்தாமை காண்க.

அசுத்த மாயைக்கு அனந்தரும், பிரகிருதி மாயைக்கு சிகண்டரும் கருத்தாவாயினும், அவர்கள் செய்யுந் தொழிலும், சிவசந்நிதியையின்றி அமையாமையின், சுத்தம், அசுத்தம், பிரகிருதி என்னும் மூன்றும் சிவ சந்நிதியிற்றந்திடும் என்றார். சிவனவன் என்றவிடத்து அவன் என்பதற்குச் சிவனையின்றி வேறு பொருளின்மையின், அவன் என்பது பகுதிப்பொருள் விகுதி.

இச் செய்யுளால் சுத்தமாயை, அசுத்தமாயை; பிரகிருதிமாயை என முதற் காரணங்கள் மூன்று எனவும். அவை, தத்தங் காரியங்களைச் சிவ சத்தியினால் தோற்றுவிக்கு மெனவும், அச்சத்தி சிவனையின்றி அமை யாதெனவுந் தொகுத்துக் கூறியவாறும்.

பிரபஞ்சமென்பது தத்துவத்துளடங்குதலின், தத்துவம் முப்பத் தாறுக்கும் முதற்காரணமாகிய சுத்தம், அசுத்தம், பிரகிருதி என்னும் மாயை மூன்றின் வைத்து, முறையே சுத்தம், சுத்தாசுத்தம், அசுத்தம் எனப் பிரபஞ்சம் முத்திறப்படுமென்று கூறியவாறும். பரிணமம் ஒன்று பிறிதொன்றாதல். அது தூலம், சூக்குமம் என இருவகைப் படும். தூலம், முற்றும் பரிணமம், ஏகதேச பரிணமம் என இரு வகைப்படும். பால் தயிராதல் முற்றும் பரிணமம்; நெய்யிற் புழுவுண் டாதல் ஏகதேசபரிணமம். ஆடை கூடாரமாதல் சூக்கும பரிணமம். இவற்றுள், சூக்குமபரிணமம் சுத்தமாயைக்கும், தூலத்தில் ஏகதேசம் அசுத்தமாயைக்கும், முற்றும் பிரகிருதிமாயைக்குங் கொள்ளப்படும். உரையில்,அசுத்தமாயை என்றது சுத்தாசுத்தமாயை யெனவும்,பிரகிருதி மாயை என்றது அசுத்தமாயை யெனவும் கொள்க. ஒடுக்கமுறை - கடைசியிலிருந்து எண்ணுதல். தோற்றமுறை - ஆரம்பத்திலிருந்து எண்ணுதல். (௧௧)

தருபவன் தருமுறையை வகுத்துக் கூறத் தொடங்கிச் சுத்தமாயா காரியமாகிய வைகரி வாக்கின் இலக்கணங் கூறு கின்றது.

வைகரிசெவியிற் கேட்பதாயத்த வசனமாகி
மெய்தருமுதான வாயுமேவிட விளைந்தவன்னம்
பொய்யறவடைவு டைத்தாய்ப் புந்திகாரணமதாகி
யையமில்பிராண வாயுவடைந்தெழுந் தடைவுடைத்தாம்.

(கோ - ௫) வைகரி செவியிற்கேட்பதாய் அத்தவசனமாகி புந்தி காரணமதாகி மெய்தரும் உதானவாயு மேவிடவிளைந்த வன்னம் ஐயம்

இல் பிராணவாயு அடைந்து எழுந்து பொய்அற அடைவு உடைத்தாய் அடைவு உடைத்தாம்.

(போ - ரை.) மேற்கூறிய வைகரியாதி வாக்கு நான்கனுள் வைகரிவாக்காவது, தன்செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்கப் படுவதாய், நினைந்த பொருளைச் சொல்லுஞ் சொல்லாய், அச் சொல்லு வானுக்கும் கேட்பானுக்கும் பகுத்துணர் வுண்டாதற் கேதுவாயும், உடம்பின் கண் எழும் உதானன் என்னுங்காற்றால் தள்ளப்பட்டு மத்திமைத் தானத்துச் சூக்கும ரூபமாய்ப் பிரிந்து தோன்றிய அக்கரங்கள் அகங்காரத்தாற் செலுத்தப்படும் பிராண னென்னுங் காற்றால் தள்ளப்பட் டெழுந்து மனத்தின் றொழிற்பாடாகிய ஐயமின்றாதற் கேதுவாய் விபரீதம் அறப் புறத்தே அடைத லுடைத்தாகியும், சொல்லா நின்ற இவ்விரு வகை இலக்கணத்தையுடையதாம். (எ - று.)

தனக்கும் பிறர்க்கும் பகுத்துணர்வைத்தரும் வண்ணங் கேட்கப்படு வதாயும், வாயின் வழியாய் வெளியே வருவதாயும் உள்ள ஒலிவைகரிவாக்கு என்பதாம். மெய்தரு முதான வாயுமேவிட விளைந்தவன்னம் என்றது அநுவாதம். இங்கே வைகரி வாக்குத்தான் முதலாவதாகக் கூறப்படுகிறது. ஆயினும், தோற்றுமுறையில் சூக்குமை பைசந்தி, மத்திமை, வைகரி எனக் கூறப்படுமாதலின், வைகரிக்கு முற் பட்ட மத்திமையினிலக்கணமாகிய மெய்தரு முதானவாயு மேவிட விளைந்தவன்னம் என்றது அநுவாதமாயிற்று. விளைந்தவன்னம் என்ற விடத்து, விளைதல் அக்கரங்களின் வடிவமனைத்தும் பிரிந்து தோன்றல்.

மெய் - உடம்பு. பொய் - விபரீதம். ஐயமில் பிராணவாயு என் றது ஐயமில்லாத பிராணவாயுவென்ற படியாம். அது மனத்தின் றொழிற்பாடாகிய ஐயமில்லை யாதற்கேதுவாய், அகங்காரத்தாற் செலுத்தப்படும் பிராணவாயு என்னும் பொருள் குறித்தது. அவ் விடத்து, இல்லாத என்னும் குறிப்புவினைப்பெயரெச்ச அகர விகுதி தொக்கு நின்றமையானும், இல்லாத என்றது இல்லையாதற்கு ஏதுவாகிய பிராணவாயுவைக் கொண்டு முடிதலானும், இல் பிராணவாயு என்பது ஏதுப்பெயர் கொண்ட குறிப்பு வினைத்தொகை.

எழுந்து என்பதை பொய்யறவடை வுடைத்தாய் என்பதன் மேலே கூட்டி, எழுந்து பொய்யறவடை வுடைத்தாய் என உரைத்துக் கொள்க. அடைவு இரண்டனுள், முன்னையது அடைதல் என்னும் பொருளிலும் பின்னையது இலக்கணம் என்னும் பொருளிலும் நின்றன. 4 திங், என்

பது எற்புழிக் கோடல் என்னும் உத்தியால் பிறர்க்குரிய சவிகற்பவுணர் வின் மேல் நின்றது. தனக்குரிய சவிகற்ப வுணர்வு மத்திமை வாக்கினு லேயே உண்டாகின்றமை காண்க. (உ0)

மத்திமை வாக்கின் இலக்கணங் கூறுகின்றது.

உள்ளுணர் ரோசையாகிச் செவியினி லுறுதல் செய்யா
தொள்ளிய பிராண வாயு விருத்தியை யுடைய தன்றித்
தெள்ளிய வக்கரங்கள் சிந்திடுஞ் செயலதின்றி
மெள்ளவே யெழுவதாகு மத்திமை வேறதாயே.

(கோ - டு.) மத்திமை வேறதாயே உள் உணர் ஓசையாகி செவி யினில் உறுதல் செய்யாது மெள்ளவே எழுவது. (உள்உணர் ஓசையாகி) ஒள்ளிய பிராணவாயு விருத்தியை உடையது அன்றி சிந்திடுஞ் செயலது இன்றி தெள்ளிய அக்கரங்கள் ஆகும்.

(பொ - ரை.) மத்திமை வாக்காவது பைசந்திக்கும், வைகரிக்கும் வேருய், அதாவது நடுவாய் சொல்லுவான் தன் னுள்ளே உணரும் சவிகற்ப உணர்விற் கேதுவாய், செவியிற் கேட்கப்படாததாய் மெல்லோசையாய்க் கண்டத்திலே விளங்கு வதால் உள்ளே உணரப்படும் ஓசையாகியும், விளங்கிய பிராண வாயுவின் ருெழிற்பாடின்றி உதானவாயுவின் ருெழிற்பாடு மாத் திரையால், பல், இதழ், நா, அண்ணங்களிற்பட்டு வெளியே சிதறிப்போதலின்றி உள்ளே சூக்கும ரூபமாய் அக்கரங் களின் வடிவுபிரிந்து தோன்றி;விளங்குதலுமாகிய இவ்விருவகை இலக்கணத்தை உடையது. (எ - று.)

தன்னுள்ளே உணரும் ஓசையாயும், உள்ளே அக்கரங்களின் வடிவு பிரிந்து தோன்றுவதாயுமுள்ள ஒலிமத்திமை வாக்கென்பதாம். இரட்டுற மொழிதல் என்னும் உத்தியால் உள்ளுணரோசையாகி என்பது இரட் டித்தது. உணரோசை என்பது உணரும் ஓசைஎன விரிந்து முன்னை யது உணர்தற்கேதுவான ஓசையென எதுவினும், பின்னையது உணரப் படு மோசையெனச் செயப்படுபொருளினும் நின்றது. தெள்ளிய வக் கரங்கள் என்ற விடத்து தெள்ளுதல் வடிவு விளங்குதல். செயலது, வேறது என்ற ஈரிடத்துமுள்ள அது இரண்டும் பகுதிப்பொருள்விகுதி. அஃதாவது விகுதிக்கு வேறு பொருள் இல்லை. (உக.)

பைசந்தி வாக்கின் இலக்கணங் கூறுகின்றது.

வேற்றுமைப்பட்ட வன்னம் வெவ்வேறு விபாகமாகித்
தோற்றுத லடைவொடுக்கிச் சொயம் பிரகாசமாகிச்
சாற்றிய மயிலினண்டந் தரித்திடுஞ் சலமேபோன்றங்
காற்றவே யுடையதாகிப் பைசந்தி யமர்ந்து நிற்கும்.

(கோ - டு.) பைசந்தி சாற்றியமயிலின் அண்டந் தரித்திடுஞ் சலமேபோன்று வேற்றுமைப்பட்டவன்னம் வெவ்வேறு விபாக மாகி தோற்றுதல் அடைவு ஒடுக்கி அங்கு ஆற்றவே சொயம் பிரகாசமாகி உடையதாகி அமர்ந்து நிற்கும்.

(பொ - ரை) பைசந்தி வாக்காவது, பின்னர் விளங்கித் தோன்றுவன வாய பஞ்சவன்னங்களையும் சூக்கும ரூபமாக ஒடுக்கி நிற்பதாய்க் கூறுகின்ற மயில் முட்டையில் தரித்திடும் நீர்போல, பலவகைப்பட்ட எழுத்துக்கள் மத்திமைத்தானத்து வேறு வேறாகப் பிரிவுபட விளங்கித் தோன்று முறைமையினை அடக்கி அங்கே மிகவும் சூக்கும ரூபமாய்க்கொண்டு சிந்தையின் அமர்ந்து நிற்றலும், நிருவிகற்ப உணர்விற்கு ஏதுவாதலு மாகிய இரண்டிலக்கணத்தை உடையது (எ - று)

மயிலின் முட்டைக்குள்ளிருக்கும் சலத்திலே மயிலின் பஞ்சவன்னம் ஒடுங்கிநிற்குமாறுபோல அக்காங்கள் சூக்கும ரூபமாய்ச் சித்தத்தில் நிற்றலும், நிருவிகற்ப உணர்விற் கேதுவாதலும் ஆகிய ஒலி, பைசந்தி வாக்கென்பதாம். விபாகம் என்பது பிரிவு. சொயம் பிரகாசம்—சூக்குமம். சிந்தைஎன்பது வருவிக்கப்பட்டது. (உஉ.)

சூக்குமவாக்கின இலக்கணங் கூறுகின்றது.

சூக்கும வாக்கதுள்ளோர் சோதியா யழிவதின்றி
யாக்கிடு மதிகாரத்திற் கழிவினை தன்னைக்கண்டா
னீக்கமிலறிவானந்த முதன்மைநித் தியமுடைத்தாய்ப்
போக்கொடு வரவிளைப்பும் விகாரமும் புருடனின்றும்.

(கோ - டு.) சூக்கும வாக்கது உள்ஓர் சோதியாய் அதிகாரத்திற்கு அழிவினை ஆக்கிடும். அழிவது இன்றி தன்னைக்கண்டால் புருடன் நீக்கம் இல் அறிவு ஆனந்தம் முதன்மை நித்தியம் உடைத்தாய் ஆம். போக்கொடு வரவு இளைப்பும் விகாரமும் இன்று.

(போ - ரை.) சூக்குமவாக்காவது, காரண சரீரத்தின் உள்ளாக நாதமாத்திரையாய் விளங்குதலும், ஞான மாத்திரைக் கேதுவாதலும் ஆகிய இலக்கணத்தை உடையது. அது, பைசந்தி, மத்திமை, வைகரியாய் விருத்திப்படுவதாகிய தன்னதிகார மாத்திரைக்கே அழிவை யுண்டுபண்ணித் தான் சுத்தமாயாரூபமாய்க் கேடின்றி நிலைபெறுவதாம். தவவிசேடத்தால் அதனை உள்ளபடி காணப்பெற்றால், அப்புருடன் நீங்காத பேரறிவும், ஆனந்தமும், சுதந்தரமும், நித்தியத்துவமும் உடையதாய் அவனுக்குச் சுத்தமாயாபுவனத்தின் கண்ணதாகிய அபரமுத்திப் பெரும்போகம் உண்டாம். நாசோற்பத்தியான் வரும் இளைப்பும், விகாரமுறுதலும் இல்லையாம். (எ - று)

சோதியாய் அழிவதின்றி அதிகாரத்திற் கழிவினையாக்கிடும் எனவும், தனைக்கண்டால் நித்திய முடைத்தாய் விகாரமு மின்றாம் எனவும் வேறு வேறு வினைமுடிபு செய்க. அழிவினை என்பது அழிகின்ற தொழிலை எனப் பொருள் தரும் நிகழ்கால வினைத்தொகை. புருடன் என்பது * "காலமுலகம்" என்னுந் தொல்காப்பியச் சூத்திர விதியால் அஃறிணைச் சொல்லாய் நின்று, உடைத்தாய் என்னும் அஃறிணை முடிபுகொண்டது. நீக்கமிலறிவானந்த முதன்மை நித்திய முடைத்தாய் என்றதால், சுத்த மாயாபுவனத்திலுள்ள அபரமுத்திப் பெரும்போகத்தினியல்பு இதுவெனக்காட்டி அதன் பெருமை கூறியவாறு.

சூக்குமவாக்கு தானழிவதின்றி, பைசந்தி முதலிய தன்னதிகார மாத்திரைக்கே அழியுந் தொழிலைச் செய்யு மென்றதனால், அந்தச் சூக்குமைவாக்கு, சிவதத்துவம் போலச் சுத்தமாயையின் வேறன்றென்பது பெறப்பட்டது. அச் சூக்குமவாக்கை உள்ளபடி காண்டலாவது, அதனை வைகரி முதலிய துணையோசைபற்றித் தூலமாகக் காணும் நம்மனோர் போலன்றி நம்மனோர்க்குக் குடம் பட முதலியன காட்சிப் படுமாறு போல அதனியல்பால் இனிது விளங்கக் காண்டல். கண்டால் என்றதனால் அவ்வாறு காண்டல் அரிதென்பது பெறப்படும்.

---

* காலமுலக முயிரே யுடம்பே, பால்வரை தெய்வம் வினையே பூத, ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉ, மாயீரைந்தொடு பிறவுமன்ன, வாவயின்வரூஉங் கிளவியெல்லாம், பால்பிரிந்திசையா வுயர்திணைமேன.

(தொல்காப்பியம், கிளவியாக்கம், சூ-டுஎ)

இவ்வாறன்றி, "ஒவிட விந்து ஞானமுதிப்பதோர் ஞானமுண் டேற் சேவுயர் கொடியினுன்றன் சேவடி சேரலாம்" என்பதே இச் செய்யுளுக்கும் பொருளாகக்கொண்டு, கண்டால் ஆக்கிடும் எனக் கூட்டிப் பொருள் கூறுவர். தன்னைக்கண்டால் தானழிவதின்றித் தன்னதிகாரத்திற் கழிவினையாக்கிடு மென்பது பொருட் பொருத்தமின்மையின் அவ்வுரை பொருந்தாது. அன்றியும், பின்னர்க் கூறப்படும் பொருளை முன்னர்க் கூறுவது கூறியது கூறலாகும். சேவுயர் கொடியினுன் றன்சேவடி சேரல் உண்மை யதிகாரத்திற் கூறப்படும் பரமுத்தி யிலக்கணமாதலின், அதனைப் பொது வதிகாரமாகிய இவ்விடத்து நீக்கமிலறிவானந்த முதலியனவாக வகுத்துக்கூற இயைபுமில்லை. ஆயின், உசுவது செய்யுளில் அவ்வாறு கூறிய கருத்தென்னையெனின், ஒருவனுக்குப் பேரறிவு விளங்குமாயின் பரமுத்தி கூடும்,இவ்வாக்குக்களால் உண்டாகும் அறிவு பேரறிவாகாதெனக் காட்டுதற்கு ப்பரமுத்தி தொகுத்துக் கூறப்பட்டதேயன்றிப் பிறிதில்லையென்க. இச் செய்யுளிற் கூறப்படும் நீக்கமில் அறிவானந்தம் என்பது முதலியன, அபரமுத்திப் பெரும் போகத்தினியல்பேயன்றிப் பரமுத்தியினியல்பன்று.

காரண சரீரமாவது, கேவலமாகிய அறியாமையினின்று நீங்கியும், தத்துவங்களோடு கூடிப் பகுத்தறிதலின்றியும், தத்துவத்தோற்றத்திற்குக் காரணமான மாயையோடு கூடிநிற்கும் நிலை. (உகூ.)

வாக்குநான்கும் நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகளைப்பற்றுக் கோடாகச் சார்ந்து சிவதத்துவம் ஐந்தில் இருக்குமெனக் கூறுகின்றது.

நிகழ்ந்திடும் வாக்குநான்கு நிவிர்த்தாதி கலையைப்பற்றித்
திகழ்ந்திடு மஞ்சதாகச் செயல்பரி ணாமமன்று
புகழ்ந்திடும் விருத்தியாகும் படங் குடிலாணுற்போல
மகிழ்ந்திடும் பிரமமன்று மாமாயை யென்பர் நல்லோர்.

(கோ. டு.) நிகழ்ந்திடும் நான்கு வாக்கும் நிவிர்த்தி ஆதிகலையைப்பற்றி அஞ்சதாகத்திகழ்ந்திடும். படம் குடிலாணுற்போல புகழ்ந்திடும் விருத்தியாகும் செயல் பரிணாமமன்று. மகிழ்ந்திடும் பிரமம் (என்பர்) நல்லோர் (பிரமம்) அன்று மாமாயை (ஆகும்) என்பர்.

(பொ-ரை.) மேற்கூறிப் போந்தவைகரி முதலிய நான்கு வாக்குக்களும் நிவிர்த்தி, பிதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் பஞ்சகலைகளைப் பற்றுக்கோடாகச் சார்ந்து ஐவ

கைப்பட்டுச் சிவம், சத்தி, சாதாக்கியம், மகேசுவரம், சுத்த வித்தை என்னும் பஞ்சதத்துவங்களிலிருக்கும். இவ்வாக்குக்கள் சுத்தமாயையினின்றும் படமேகுடிலாயினாற்போலப்புகழத்தக்க விருத்தியாய்க் காரியப்படுவனவாம். அசுத்தமாயாகாரியம்போலப் பரிணாமமாய்க் காரியப்படுவனவல்ல. இவ் வாக்குக்களைச் சத்தப்பிரமவாதிகள் மகிழத்தக்க பிரமம் என்பர் சைவ சித்தாந்திகள் பிரமமாதலின்றிப் பிரமத்திற்கு நேரே பரிக்கிரக சத்தியெனப்படும் சுத்தமாயாரூபமாகுமென்று கூறுவர். எ-று.

உலகமாகிய காரியம் தோன்று முறையைப்பற்றி, * எள்ளாகிய குப்பைபோல, அணுக்களின் கூட்டமே உலகம் என்று சமுதாய வாதங் கூறுவர் புத்தர் சமணர். நூலாகிய ஆடைபோல, அணுக்களின் கூட்டங்களால் இடையே தோன்றுவது உலகம் என ஆரம்பவாதங் கூறுவர் தார்க்கிகர். கானலினாலாகிய நீர்த்தோற்றம்போல, பிரமத்தினிடத்தில் உலகந்தோன்றும் என விவர்த்தன வாதங் கூறுவர் மாயாவாதிகள். இவை அனைத்தும் சித்தாந்தத்திற் கேலாமையின், அவற்றை யொழித்தனர். சித்தாந்தத்திற் கொள்ளப்படுவன, பரிணாமவாதம், விருத்திவாதம் என்று மிரண்டுமேயாம். சுத்த மாயையினின்றுங் காரியந்தோன்றுதல் இவ்விரண்டனுள் யாதோ வென்னும் ஐயநீக்குதற் பொருட்டுப் பரிணாமமன்று, விருத்தியாகு மென்றும், விருத்தியாயின், இவ்வாக்குக்கள் பிரமமெனக் கூறும் சத்தப் பிரமவாதிகளை மறுத்துப் பிரமமன்று மாமாயை யாகும் என்றுங் கூறினர்.

பிரமமன்றி என்றிருக்கவேண்டிய வினையெச்சம் அன்று எனத் திரிந்து நின்றது. விருத்தியாகும் என்ற விடத்துள்ள ஆகும் என்றது, மாமாயை என்ற விடத்துங்கூடி மாமாயையாகுமென நின்றது. பரிணாமம் இருவகைப்படு மென்பதும், அவை அசுத்தமாயைக்கும், பிரகிருதி மாயைக்கும் உரியனவென்பதும்,மேலே ககுவதுசெய்யுளுரையிற் கூறியிருத்தலின் ஆண்டுக் காண்க. விருத்தி ஆடை கூடாரமாதல் விருத்தி எனினும் சூக்கும பரிணாமம் எனினும் ஒக்கும். பரிக்கிரக சத்தி என்பது வைப்புச்சத்தி. அதாவது, வேண்டும்பொழுது உபகாரப்படுவதாய்த் தன்னுள் அடங்கிநிற்பது.

வாக்கு நான்கும் பஞ்சகலைகளைச் சார்ந்து ஐவகைப்பட்டு நிற்றலாவது :—சாந்தியதீத கலையைச்சார்ந்து சூக்குமையும், சாந்திகலையைச் சார்ந்து பைசந்தியும், வித்தியாகலையைச் சார்ந்து மத்திமையும், பிரதிட்டாகலையைச் சார்ந்து தன் செவிக்குக் கேட்கப்படுவதான சூக்கும வைகரியும், நிவிர்த்தி கலையைச்சார்ந்து தன் செவிக்கும் பிறர் செவிக்கும்

---

* எள்—சிறுதவள். குப்பை என்பது அதன் கூட்டம்.

கேட்கப்படுவதான தூலவைகரியுந் தோன்றி ஐவகைப்பட்டு நிற்கும். இவ்வாறு, பஞ்சகலையைச் சார்ந்துநிற்கும் வாக்கினுள், சூக்குமை சிவ தத்துவத்தினும், பைசந்தி சத்திதத்துவத்தினும், மத்திமை சாதாக்கிய தத்துவத்தினும், சூக்குமவைகரி மகேசுவர தத்துவத்தினும், தூலவை கரி சுத்தவித்தை என்னுந் தத்துவத்தினும் நின்று தொழிற்படு மாத லால், நான்கு வாக்கும் பஞ்சகலைகளைப்பற்றுக் கோடாகச் சார்ந்து ஐந்து தத்துவங்களிலிருக்குமெனக் கூறப்பட்டது. இனி இவ்வா றின்றி நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் பஞ்சகலைகளிலுள்ள புவன வாசிகளுக்கு முறையே தூலதமமாயும், தூலதரமாயும், தூலமாயும், சூக்குமமாயும், சூக்குமதரமாயும் இவ்வாறு நால்வகைவாக்கும் ஐவகைப்பட்டு விளங்கும் என்றுரைத்தலு மொ ன்று. (உச.)

சுத்த மாயாகாரியமே மந்திரேசுவரர் முதலிய அபரமுத் தர்களின் தநுகரணாதிகளெனக் கூறுகின்றது.

வித்தைகள் வித்தையீசர் சதாசிவ ரென்றிவர்க்கு
வைத்துறும் பதங்கள் வன்னம் புவனங்கண் மந்திரங்க
டத்துவஞ் சரீரம்போகங் கரணங்க டாமெலாமு
முய்த்திடும் வயிந்தவந்தா னுபாதான மாகிநின்றே.

(கோ-டு.) உபாதானமாகி நின்றே உய்த்திடும் வயிந்தவந்தான்.

(போ-ரை) மேற்கூறிப்போந்த வாக்கு மாத்திரைக்கே யன்றி, மந்திரேசுவரர், மந்திரமகேசுவரர், அணுசதாசிவர் முதலிய அபர முத்தர்களுக்கு வேண்டப்படும் பதங்களும், அக்கரங்களும், புவனங்களும், மந்திரங்களும், தத்துவங்களும் சரீரங்களும், போகங்களும், கரணங்களுமாகிய சுத்தாத்து வாக்கள் எவற்றினுக்கும் முதற்காரணமாய் நின்று அவற்றைத் தோற்றுவிப்பது சுத்தமாயையாகும். (எ-று)

தத்துவம் என்றது கால முதலிய வித்தியா தத்துவத்தை; கரணம் என்றது அந்தகரணம் முதலிய ஆன்ம தத்துவத்தையென வறிக. வைந்தவம் என்றது விந்து என்னும் பகுதியடியாகப் பிறந்து விந்து வையே குறித்த நின்றது. (உரு.)

சுத்தமாயா காரியமாகிய வாக்கை இன்றி எவர்க்கும் அறிவு விளங்காதென்று கூறுகின்றது.

மூவகை யணுக்களுக்கு முறைமையின் விந்துஞான
மேவின தில்லையாகி விளங்கிய ஞானமின்று
மோவிட விந்துஞான முதிப்பதோர் ஞானமுண்டேற்
சேவுயர் கொடியினுன்றன் சேவடி சேரலாமே.

(கோ-டு) விந்துஞானம் மூவகை யணுக்களுக்கும் முறைமையின் மேவினது இல்லையாகில் விளங்கிய ஞானமின்றாம். விந்து ஞானம் ஒவிட ஓர்ஞானம் உதிப்பது உண்டேல், சேவுயர் கொடியினன்றன் சேவடி சேரலாமே

(போ-ரை) மேற்கூறிப்போந்த வாக்குக்கள் பகுத்துணர்வதாகிய சவிகற்ப ஞானத்திற் கேதுவாதலால், இவ்விடத்துக் கூறிய மந்திரேசுவரர் முதலிய அபர முத்தர்க்கும், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்க்கும் இன்றியமையாது வேண்டப்படும். துணையாகிய சரீர வேறுபாடுபற்றி விஞ்ஞானகலருக்குத் தூலமாயும், பிரளயாகலருக்குத் தூலதரமாயும், சகலருக்குத் தூலதமமாயும் பொருந்தி நிற்கும். இவ்வாக்கு இல்லையாயின், விளங்கிய ஞானமில்லையாம். இதனாலுண்டாம் ஞானம் உலகப்பொருளை அறியும் ஞானமாம். ஆதலின், சவிகற்பவுணர்விற் கேதுவாகிய இவ்வாக்குக்கள் மேலான பந்தமாம். ஆதலின், இவ்வாக்குக்களைத் தன்னின் வேறாகக் கண்டு நீக்கி அவற்றிற்கு மேலாகிய பேரறிவு ஒருவனுக்கு விளங்குமாயின் அப்பொழுதே இடபக்கொடியை உயர்த்திய சிவபெருமான் திருவடியாகிய பரமுத்தியை அவன் தலைப்படுவன். (எ-று)

விந்துஞானம் என்றவிடத்து விந்து என்றது வாக்குக்களைக் குறித்தது. குறிக்கவே, வாக்குக்களே ஞானம் என எண்ணும்படி நின்றது. வாக்குக்கள் ஞானத்திற் கேதுவாகும். அவற்றை அவ்வாறு கூறியது உபசாரம். இரண்டனுள் ஒன்றைக் குறிப்பது தரம். பலவற்றுள் ஒன்றைக் குறிப்பது தமம்.

இதனானே நான்கு வாக்குக்களும் விஞ்ஞானகலர்க்குத் தூலமாய்ப் பொருந்தி நிற்குமெனவும், பிரளயாகலர்க்கு அதனினுந் தூலமாய்ப் பொருந்தி நிற்குமெனவும், சகலருக்குப் பிரளயாகலரினும் தூலமாய்ப் பொருந்தி நிற்குமெனவும் அறிக. மந்திரேசுவரர் முதலியோர் விஞ்ஞானகலரேயாயினும், பதித்தன்மை யடைந்துளாராதலின் அவருக்குச் சூக்குமமாய்ப் பொருந்தும். பிரளயாகலர், விஞ்ஞானகலருக்குச் சரீரமில்லையென்று கூறுவாருமுளர். அஃது ஆகம வசனங்களோடு முரணுதலாற் பொருந்தாது.

விந்துவின் மாயையாகி என்பதுமுதல் இவ்வேழு செய்யுளானும் சுத்தமாயையிற் றோன்றும் காரியங்களாகிய வாக்குக்களும், சுத்தாத்துவாக்களும், அவற்றினியல்பும் வகுத்துக் கூறப்பட்டன. (உகூ)

சுத்தமாயா காரியங்கூறி நிறுத்தமுறையானே தருபவன் தருமுறை வகையில் அசுத்தமாயா காரியத்தைத் தொகுத்துக் கூறுகின்றது.

அருவினி லுருவந் தோன்றி யங்காங்கி பாவமாகி
யுருவினி லுருவமாயே யுதித்திடு முலக மெல்லாம்
பெருகிடுஞ் சுருங்கும் பேதா பேதமோடபேத மாகு
மொருவனே யெல்லாமாகி யல்லவா யுடனு மாவன்.

(கோ-டு.) அருவினில் உருவம் தோன்றி உருவினில் உருவமாயே உதித்திடும். உலகமெல்லாம் அங்காங்கி பாவமாகி பெருகிடுஞ் சுருங்கும் பேதா பேதமோடு அபேதமாம். ஒருவனே எல்லாமாகி அல்லவாய் உடனுமாவன்.

(பொ-ரை.) சூக்குமமாகிய மாயையினின்றும் தூலமாகிய கலை முதலிய தத்துவங்களும், அவற்றினும் தூலமாகிய மூலப்பகுதியும், அதனினுந் தூலமாகிய குணதத்துவ முதலாயினவுந் தோன்றும். அத்தூலங்களினின்றுந் தோன்றுங் காரியம் அவற்றினுந் தூலமேயாம். இவ்வாறே காரியப் பிரபஞ்சமெல்லாந் தோன்றி நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், ஆண், பெண், அலி என்றது முதலான அவயவப் பகுப்புடையனவாய் வளர்ந்தும், தேய்ந்தும் பரிணமித்துவரும். இத்தன்மையவாகிய காரிய காரணங்கட்குத் தம்முட் பெரும்பாலும் வேற்றுமை கூறுவர் நையாயிகர் முதலியோர். அவர் மதம் அடாது. வேறு என்னெனின், ஒன்று பிறிதொன்றுதலை நோக்கிற் பேதாபேதமாம். அதாவது, ஒன்றே பிறிதொன்றுவதில் அபேதமும், முன்னையதிற் பின்னையது வேறுதலிற் பேதமுமாம். உள்ளது காரியப்படுதலை நோக்கி அபேதமாம். இவ்வாறு, அபேதமாயும், பேதாபேதமாயும் விளங்கும் காரியங்களை அநந்தர், சீகண்டர் வாயிலாக முதற்காரணமாகிய மாயையில் நின்றுந் தோற்றுவிக்குங்கால், நிமித்தகாரணனாகிய முதல்வனே, அக்காரணத்தோடு கலப்பினால் ஒன்றாயும், பொருட்டன்மையால் வேறாயும், செலுத்துதலால் உடனாயும் நிற்பன். (எ-று.)

நையாயிகர் காரணம் நித்தம், காரியம் அநித்தம் என்பர். சற்காரியவாதத்தில் காரண காரியங்களிரண்டும் சூக்குமம், தூலம் என்னும் வேறு

பாடுடையனவன்றி, நித்தம் அநித்தம் என்னும் வேறுபாடுடையனவல்ல. உலகமெல்லாம் என்றமையால், சுத்தமாயா காரியமாகிய விருத்தியினும் இறைவன் எல்லாமாயல்லவாயுடனுமாவன் என்பது பெறப்படும். உருவினிலுருவமாயே என்றவிடத்து ஏகாரம் அருவாய்த் தோன்றுதெனப் பிரித்தமையின் பிரிநிலைக்கண் வந்தது. ஒருவனே என்றவிடத்து ஏகாரம் தேற்றம்.

அருவினிலுருவந் தோன்றி என்றதனல் மாயை அநிர்வசனமெனவும் அதனினின்றும் உலகந் தோன்றும் எனவும் கூறும் மாயாவாத மதம் மறுக்கப்பட்டது.

அங்காங்கி பாவமாகி என்றதனல், அணுக்களே பொருளாய்த் தோன்றுவதன்றி அவற்றின் வேருய் அங்கி என்பதொன்றில்லை எனக் கூறும் சமுதாயவாத மதம் மறுக்கப்பட்டது. அங்கம்—நிலம், நீர் முதலியன. அணுக்களும் அங்கமே. அங்கி–பிரகிருதிமாயை அசுத்தமாயை.

உருவினிலுருவமாயே யுதித்திடும் என்றதனல். நிலம் முதலிய உருவப் பொருளினின்றும், கந்தகுண முதலிய அருவப்பொருள்தோன்றும் எனக்கூறும் ஆரம்பவாத மதம் மறுக்கப்பட்டது. இந்த ஆரம்பவாதங் கூறுபவர் தார்க்கிகர். இவர், குணி தோன்றிய அடுத்த கணத்தில் குணந்தோன்றுமென்பர். குணி தோன்றும்பொழுதே குணமும் உடன்ருேன்றுமாகலின், அவர் கூற்றுப் பொருந்தாது. ஆகவே, நிலம் முதலிய உருவமாகிய தூலப்பொருளினின்றும் அவற்றினுந் தூலமாகிய தூலசரீரதத்துவம் தோன்றுமஎன்பதறிக. பெருக்கஞ் சுருக்கம் பற்றி அணுக்களுக்கே பெரும்பாலும் வேற்றுமை கூறும் நையாயிகர் மதத்தை மறுத்தற்பொருட்டுப் பெருகிடுஞ் சுருங்கும் என்ருர். பெருகுதல்—நிலம், நீர் முதலிய காரியமாய் விரிதல். சுருங்குதல்—காரணரூபமாய் ஒடுங்கி நிற்றல், பேதாபேதமோடபேதமாகும் என்றதும் நையாயிகர் மதத்தை மறுத்தற்பொருட்டேயாம்.

இச்செய்யுளால் அசுத்த மாயையினின்றுந் தோன்றுங் காரியங்களினியல்பு தொகுத்துக் கூறப்பட்டது. (உஎ)

அருவமாகிய மாயையினின்று உருவந் தோன்ருதென்னும் மாயாவாதியை மறுத்துரைக்கின்றது.

அருவுரு வீனுதாகும் விகாரமு மவிகாரத்தின்
வருவது மில்லையென்னின் வான்வளியாதி பூதந்
தருவது தன்னின்மேக சனைசத் தங்களோடு
முருவமின் னுருமே றெல்லா முதித்திடு முணர்ந்து கொள்ளே.

(கோ.டு.) அருவுரு வீணுதாகும், அவிகாரத்தின் விகாரமும் வருவதும் இல்லை என்னின்.

(போ-ரை.) அருவமாகிய மாயை உருவமாகிய பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்காது. அருவம் என்றதனுலேயே அவிகாரயென்பதும் பெறப்படும். ஆதலால், அவிகாரமாகிய (விகாரமில்லாத) அம்மாயையினின்றும் விகாரமாகிய பிரபஞ்சந் தோன்றுவதுமில்லை என்று மாயாவாதி கூற, அறியாது கூறினுய்; உன் மதத்தில அருவமும், அவிகாரியுமாகிய ஆகாயத்தினின்றும் உருவமும், விகாரியுமாகிய வாயு முதலிய பூதங்கள் முறையே தோன்றும். அதுவேயுமன்றி, அவ்வாகாயத்தினின்று பல மேகங்களும், மேகத்தின்கண் பல விகாரங்களும், பல ஓசைகளும், பல மின்னல்களும், பல இடிகளும் இன்னும் இவைபோல்வன பலவும் தோன்றுமாகலான், அதனை மறந்து அருவத்தில் உருவம் தோன்ருதென்று கூறுதல் உனக்கே வழுவாய் முடியுமென்பதனை அறிவாயாக (எ-று.)

அருவினின்று உருவந்தோன்ருதென்றல் உனக்கு வழுவாம் என்றதனுல், சற்காரிய வாதங்கொண்ட எமக்காயின் அது வழுவாகாதென்பது கருத்து. அதாவது, ஒன்றிலிருந்து மாறுபட்ட பிறிதொன்று தோன்ருதென்பது சற்காரியவாதம். (உதாரணம்) நெல்லிலிருந்து கமுகு தோன்ருதவாறுபோல. ஆயின், காரண ரூபமாக நிற்கும்பொழுது அருவமாயிருந்து, அதினின்று காரிய ரூபமான உருவம் தோனறுதலில்லையோவெனின், காரிய ரூபமாகிய உருவம் காரணத்தில் சூக்குமமாயிருந்து, பின்னர்த் தூலமாய் வருமென்பதேஅன்றி, அருவமாய் இருந்து உருவமாய் வருமென்பதில்லை. மேலைச் செய்யுளில் அருவென்றதும் சூக்குமமென்னும் பொருள் குறித்ததேயாம்.

இச் செய்யுளால், அருவமாகிய மாயை உருவமாகிய பிரபஞ்சத்தைத்தோற்றுவிக்காதென்னும் மாயாவாதி மதத்தை மறுத்து, சூக்குமமாகியமாயையினின்றும் தூலமாகிய காரியம் தோன்றுமென்ற மேலைச் செய்யுளின் கருத்து வலியுறுத்தப்பட்டது.

இவ்வாறு, உதிப்பது மீறு மென்பது முதல் இச்செய்யுள்வரை இருபத்தேழு செய்யுளானும், ஒருவனே டொருத்தி யொன்றென்றுரைத்திடு முலகமெல்லாம் வருமுறை வந்து நின்று போவது மாதலாலே தருபவனெருவன் வேண்டும் என்ற முதற்கூற்றை முறையே அவ்வவர் மதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்தி, இனி இரண்டாங்கூற்றை அவ்வாறு வலியுறுத்தத் தொடங்குகின்ருர். (உஅ)

முதலதிகாரணம் முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

ஈறுமாகி அநாதி முத்த சித்துருவாய் மன்னி நின்று மருவுவித்திடும் என்பது.

இவ்வதிகரணம் ஈறுமாகி மருவுவித்திடும் எனவும், மன்னி நின்றே மருவுவித்திடும் எனவும், அநாதி முத்த சித்துரு எனவும் முக்கூற்றையுடையது. அவற்றுள், மேல் தருபவன் தருமுறை கூறிய இயைபுபற்றி மன்னி நின்றே மருவுவித்திடும் என்னும் நடுக்கூறு முன்னர் மூன்று செய்யுளாற் கூறப்படுகின்றது. மன்னுதல்—நிலைபெறுதல்.

தருபவன் எதில் நின்றுகொண்டு தருவன் என வினவுகின்றது.

மண்ணினிற் கடாதி யெல்லாம் வருவது குலாலனாலே
யெண்ணிய வுருவமெல்லா மியற்றுவ னீசன் றானுங்
கண்ணுகா ரியங்க ளெல்லாங் காரண மதனிற் காண்பன்
பண்ணுவ தெங்கே நின்றிங் கென்றிடிற் பகரக்கேளீ.

(கோ-டு-) குலாலனாலே மண்ணினிற்கடாதியெல்லாம் வருவது. ஈசன்றானும் எண்ணிய உருவம் எல்லாம் இயற்றுவன் (ஆயின்) இங்கு கண்ணு காரியங்கள் எல்லாம் காரணமதனின் (நின்று) காண்பன். எங்கே நின்று பண்ணுவது என்றிடில் பகர நீ கேள்.

(பொ-ரை.) குயவனால் மண்ணில் நின்றும் குட முதலிய காரியமனைத்தும் வருதல்போல, இறைவனும் கருதிய உலகமெல்லாவற்றையும் மாயையினின்று ஆக்குவனாயின், குயவன், இவ்விடத்துக் கருதுகின்ற கடாதி காரியங்களை எல்லாம் ஆக்குங்கால், அவற்றிற்குக் காரணமாகிய அந்நிலத்தினின்று செய்வனெனக் கண்டோமே; அதுபோல, இறைவன் எவ்விடத்து நின்று செய்வானென்று கேட்பையாயின் யாமதற்கு விடைகூற நீ கேட்பாயாக. (எ-று.)

"மண்ணினிற் கடாதியெல்லாம் வருவது குலாலனாலே யெண்ணிய வுருவமெல்லா மியற்றுவ னீசன்றானும்" என்றதுமேல் கஅ-வது செய்யுளிற் கூறிய பொருளாதலின், ஈசன் எதில் நின்றுகொண்டு தருவன் என வினவுதற்பொருட்டு அநுவாதமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இயற்றுவன் என்றவிடத்து இயற்றுவனாயின் என்னும் பொருள்பட ஆயின் என்பது சொல்லெச்சமாய் நின்றது. காரணம் என்றது நிலம் என்னும் பொருளில் நின்றது. காண்டல்—செய்தல். நின்று என்பது காரணமதனின் என்பதனோடுங் கூடி காரணமதனின் நின்று காண்பன் என இயையும். இச் செய்யுள் வினாவாகும். இதற்குப் பிறரெல்லாம் மேல் கஅ-வது செய்யுளின் பொருளே பொருளாகக் கொண்டு கூறியது கூறலென்னுங் குற்றமுண்டாக உரைப்பர். (உகூ)

தருபவன் நிராதாரமாய் நின்று தருவனெனக்கூறுகின்றது.

சீலமோ வுலகம் போலத் தெரிப்பரிததனு னிற்குங்
கோலமு மறிவாரில்லை யாயினுங் கூறக் கேணீ
ஞாலமே ழினையுந்தந்து நிறுத்திப்பின் னாசம்பண்ணுங்
காலமே போலக்கொண்ணீ நிலைசெயல் கடவுட்கண்ணே.

(**கொ - டு.**) காலமேபோல கடவுட்கண்ணே நிலைசெயல் நீ கொள்.

(**பொ - ரை.**) இறைவன் தன்மையோ உலகம்போலன்றி வாக்கு மனாதீதகோசரமாகலான், அவ்விறைவன் நிற்கும் நிலையும் வாக்குமனாதீத கோசரமேயாம். அங்ஙனமாயினும், ஒருவாற்றான் உவமையில் வைத்து உனக்குக் காட்டுதும். நீ அறிவாயாக. உலகமெல்லாவற்றையும் தோற்றுவித்து, நிறுத்திப் பின்னர் அழித்துக் ;காரியப்படுத்துங்காலம், அவற்றைக் காரியப்படுத்துங்கால், எல்லாப்பொருட்கும் தான் ஆதாரமாய்த் தனக்கு ஓர் ஆதாரமின்றி நிற்றல்போல, சிவசத்தியும் நிராதாரமாய் நின்றே உலகத்தைக் காரியப்படுத்து முறைமையை நீ உணர்ந்து கொள்வாயாக. (எ-று.)

சீலம்—தன்மை. சீலமோ என்றவிடத்து ஓகாரம் உயர்வு சிறப்பின்கண் வந்தது. கோலமும் என்றவிடத்துள்ள உம்மை சீலமேயன்றி என இறந்ததுதழீஇற்று. ஞாலமேழினையும் என்றது, தநு, கரண, போகங்களையுங் குறித்த உபலக்கணம். கடவுட்கண்ணே என்றவிடத்து

கண் என்பது அறிவு. அது சத்தியைக்குறித்தது. சிவன் எங்கு நின்று செய்வானென்னும் வினாவிற்குச் சிவனோடு ஒற்றுமையாய் நிற்றல்பற்றிச் சிவசத்தியின்மேல் வைத்து விடை கூறினர்.

கடவுள் கண் என்பது, ளகரம் டகரமாக உயர்திணையில் சிறுபான்மை திரியுமாகலின், கடவுட்கண் என நின்றது. இது, மக்கட்பண்பு முதலியனபோல * இலேசாற் கொளக. நிலை செயல் என்பது நிற்றல் என்னும் பொருட்டாய் ஐ உருபு தொக்குநின்று நிற்றலை என்னும் பொருள்குறித்து நினறது.

வாக்கு மனாதீதகோசரம் என்றசொல்லில், அதீதம் என்பது எட்டாமையையும், கோசரமென்பது எட்டுதலையும் குறித்து ஒன்றோடொன்று முரணுதோ? எனின், முரணாது. என்னை? வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாதென்பது தோன்ற வாக்கு மனாதீதமென்றும், எட்டாத தொன்று உண்டென்று கூறுதலால் யாது பயன் என்னும் ஐய நிகழாமைப் பொருட்டு அறிவிற்கெட்டு மென்பது தோன்றக் கோசரமென்றுங் கூறியதனுலென்க.

அவ்வாறாயின், காலம், தொழில் வேறுபாடுபற்றிச் செல்காலம், நிகழ்காலம் முதலியனவாய்ப் பலவகை யவத்தைப்படுமென்பது சித்தாந்த நூற்றுணிபாதலின், அதுபோல் முதல்வனும் தொழில் வேறுபாடுபற்றிப் பலவகை யவத்தைப்படுவன் போலுமெனின், அங்ஙனம் படானென் றுணர்த்துதற் கெழுந்தது வருஞ் செய்யுள். (௩௦.)

தருங்கால் தருபவன் இலய போக அதிகாரத்துட்பட்டுத் துடக்குற்றும் துடக்குறுவானல்லன் எனக் கூறுகின்றது.

கற்றநூற்பொருளுஞ்சொல்லுங்கருத்தினிலடங்கித்தோன்றும்
பெற்றியுஞ் சாக்கிராதி யுயிரினிற் பிறந்தொடுக்க
முற்றதும் போலவெல்லா வுலகமு முதித்தொடுங்கப்
பற்றொடு பற்றதின்றி நின்றனன் பரனுமன்றே.

(கோ - ு.) உயிரினில் சாக்கிராதி ஒடுக்கம் உற்று பிறந்ததும் போல பரனும் எல்லாவுலகமும் உதித்து ஒடுங்க பற்றொடு (நின்றனன்) கற்றநூற் பொருளுஞ் சொல்லும் கருத்தினில் அடங்கித் தோன்றும் பெற்றியும் (போல) பற்றது இன்றி நின்றனன் அன்றே.

(பொ - ரை.) ஆன்மாவினிடத்துச் சாக்கிர முதலிய அவத்தைகள் கரணங்களால் ஒடுங்கித் தோன்றும் வழி ஆன்

* இலேசு—சிறுபான்மையாயுள்ள விதி.

மாவும் அவத்தைப்பட்டுத் துடக்குறுதல் போல, முதல்வனுந் தன்பால் எல்லா உலகும் ஒடுங்கி உதிப்பத் தானும் அதுபற்றி, இலயம், போகம், அதிகாரமென்னும் அவத்தைப்பட்டுத் துடக்குறுவோனுயினும், ஒருவன் கற்றநூற்பொருளும், சொல்லும் அதாவது சொர்க்கம், நரகம், நன்மை, தீமை முதலியனவும் அவற்றைக் குறிக்குஞ் சொல்லும் வாதனை ரூபமாய்ப் புத்தி தத்துவத்தை ஒட்டிநின்று ஆன்ம போதத்தின்கண் ஒடுங்கி மீளத் தோன்றுமிடத்து, அவ்வான்ம போதம் அதுபற்றித் தொடக்குருதவாறு போல இறைவனும் தொடக்குறுதலின்றியே நின்றனன். (எ - று.)

இச்செய்யுள் எதிர்நிரனிறைப் பொருள்கோள். அதுகொண்டு கூட்டில் காட்டப்பட்டுள்ளது. இவ்விடத்துக் கருத்து என்றது உயிரினுணர்வை. பற்று என்பது பற்றுதல் என்னும் பொருள் குறித்த முதனிலைத் தொழிற்பெயர். மண்ணினிற் கடாதி என்றது முதல் இம்மூன்று செய்யுளானும், மன்னி நின்றே மருவுவித்திடும் என்ற நடுக்கூறு வினவிடைகளால் விளக்கிக் காட்டப்பட்டது. இதனை, முன் வைத்ததற்குக் காரணம் இவ்வதிகரண ஆரம்பத்தில் காட்டப்பட்டுள்ளது. இனி, ஆறு செய்யுளான் ஈறுமாகி மருவிடும் என்ற முதற்கூற்றை வலியுறுத்துகின்றார். [௩௧.]

புத்தர் மதம்பற்றி உலகம் தோன்றுதற்கும் ஒடுங்குதற்கும் காரணம் என்னையென்பார்க்கு விடை கூறுகின்றது.

உயிரவை யொடுங்கிப் பின்னு முதிப்பதெ னரன்பாலென்னிற்
செயிருறு மலத்தினுகுஞ் சிதைந்ததே தென்னிற் சித்தத்
தயர்வொழி காரியங்க ளழியுங்கா ரணங்கி டக்கும்
பயிறரு காரி யம்பின் பண்டுபோற் பண்ணுமீசன்.

[கோ - டு.] ஈசன் ஒடுங்கி [ய] உயிர் அவை பின்னும் அரன்பால் உதிப்பது என் என்னில், செயிருறு மலத்தின் ஆகும். சிதைந்தது எது என்னில், சித்தத்து அயர்வு ஒழி[ய] காரியங்கள் அழியும். பயில்தரு காரணம் கிடக்கும். காரியம் பின் பண்டுபோற் பண்ணும்.

(பொ - ரை.) சங்கார காரணனுகிய இறைவனுல் சங்காரமெய்திய உயிரோடும் கூடிய உலகம் சங்காரமெய்தியவாறே ஒழியாது மீளவும் அவ்விறைவன்பால் நின்று தோன்றுதல் எற்றுக்

கெனின், குற்றம் பொருந்திய மலத்தின் பரிபாகம் ஆன்மாவிற்கு வருதற்பொருட்டுத் தோன்றும். அவ்வாறாயின், மீளவும் தோன் றற்பாலதாகிய உலகம் முன் அழியாது நிலைபெறவே அமையும். அவ்வாறன்றி அழிதல் எற்றுக்கெனின், உயிரின் இளைப்பொழித் தற் பொருட்டு, முன் இளைப்பினைச் செய்துநின்ற காரியங்கள் அழியும். அழிந்தவிடத்தும் காரணங்களிற் கன்மத்தோடு பயின்று கிடக்கின்ற அவ்வுலகங்களை முன்னை வினைத்தொடர்ச்சிக் குரியனவாய்த் தத்தங் காரணங்களினின்றும் ஒடுங்கியவாறே பின்னர் உதிக்கும்படி செய்வன். (எ - று.)

ஆக்கம் அவ்வவர் கன்மமெல்லாங் கழித்திடல் என முன்னர் கூஎவது செய்யுளிற் கூறுகின்றாராதலின், கன்மங் கழிதற்குரிய இயைபு இவ்விடத் திலேயே உணர்த்துவாராய், "காரணங் கிடக்கும் பயில்தரு காரியம் பின் பண்டுபோற் பண்ணு மீசன்" என்றார். எனவே, காரணத்தில் கன்மத் தோடு பயின்று கிடக்கின்ற காரியங்களைப் பின்னர் ஒடுங்கியவாறே கன்மா நுபவத்தின் பொருட்டுத் தோற்றுவிப்பன் என்றாகிக் கன்மங் கழியுமாறு காண்க. உயிரவை என்றது உயிரோடுங் கூடிய உலகங்களை.

சிதைந்ததேது என்றவிடத்து ஏது என்பது எதற்கு என்னும் பொ ருள் குறித்து நின்றது. சித்தத்தயர்வு—உயிரின் அறிவின் கண்ணதாகிய இளைப்பு. அயர்வொழி காரியங்கள் என்றவிடத்து ஒழிய என்னும் வினை யெச்சத்து அகரம் தொக்கு நின்றது. அவ்வெச்சம் அழியும் என்னும் வினைகொண்டு முடிந்தது. கிடக்கும் என்பது பெயரெச்சம். அது,காரி யம் என்னும் பெயர்கொண்டு முடிந்தது. இச்செய்யுளுக்கு, மேல் எ-வது செய்யுளுக்குரிய சற்காரியவாதத்தியல்பில் வைத்துக் கூறியது கூறலென் னுங் குற்றமுண்டாகக் கூறுவர். அது பொருந்தாமை காண்க. கன்மத் தோடு பயின்று காரணங்களிற் கிடக்குங் காரியங்களைக் கன்மங் கழியுமாறு தோற்றுவிப்பன் என்க. [கூஉ.]

முத்தொழில் செய்தலால் இறைவன் விகாரமுறுனெனக் கூறுகின்றது.

தோற்றுவித் தளித்துப் பின்னுந் துடைத்தருதொழில்கண் மூன்றும்
போற்றவே யுடைய னீசன் புகுந்தத் விகார மென்னிற்
சாற்றிய கதிரோனிற்கத் தாமரை யலருங் காந்தங்
காற்றிடுங் கனலை நீருங் கரந்திடுங் காசினிக்கே.

[கோ - டு.] ஈசன் தோற்றுவித்து அளித்து பின்னும் துடைத் தருள் மூன்று தொழில்களும் போற்றவே உடையன். புகுந்தது விகாரம் என்னின், சாற்றிய கதிரோன் நிற்க காந்தம் கனலைக் காற்றிடும். தாமரை அலரும். காசினிக்கே நீரும் காந்திடும்.

(பொ - ரை.) ஒரு கடவுள் தோன்றச் செய்து நிலைப்பித்துப் பின்னர்ச் சங்காரத்தைச் செய்விக்கின்ற முறைமையில் இம் முத்தொழில்களும் இடையறாது செய்வனாயின், பாரமெய்தி விகாரியாகானோ வெனின், ஆகான். எதுபோலவெனின், யாவராலும் புகழப்பட்ட சூரியன் தன் சன்னிதியில் சூரிய காந்தக் கல்லில் நெருப்பைத் தோன்றச் செய்தும், தாமரையை அலரும்படி செய்தும், பூமியில் நீரைச் சுவறும்படி செய்தும், ஆகிய முத்தொழில் பற்றி அச்சூரியன் விகாரமெய்தாதது போலென்க.

காசினிக்கண் என்றிருக்க வேண்டியது காசினிக்கு என நின்றது வேற்றுமை மயக்கம்.

இவ்விரண்டு செய்யுளானும் ஈறுமாகி மருவுவித்திடும் என்றதனை புத்தர்மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்தியவாறு. [௩௩.]

பௌராணிகர்மதம் பாஞ்சராத்திரிமதம் இரணியகருப்பமதம்பற்றி ஈறுமாகி மருவுவித்திடு மென்றதனை வலியுறுத்தத் தொடங்கி முத்தொழிற்குஞ் சுதந்திரம் சிவபெருமானுக்கே யெனக் கூறுகின்றது.

உரைத்தவித் தொழில்கண் மூன்று மூவருக் குலக மோத
வரைத்தொருவ னுக்கேயாக்கிவைத்ததிங்கென்னையென்னின்
விரைக்கம லத்தோன் மாலு மேவலான் மேவினோர்கள்
புரைத்ததி காரசத்தி புண்ணிய நண்ண லாலே.

(கோ - டு.) உரைத்த இம்மூன்று தொழில்களும் மூவருக்கு உலகம் ஓத இங்கு ஒருவனுக்கே ஆக்கிவைத்து வரைத்தது என்னை யென்னின் விரைக்கமலத்தோன் மாலும் புண்ணியம் நண்ணலாலே புரைத்த அதிகார சத்தி ஏவலான் மேவினோர்கள்.

(பொ - ரை.) இங்ஙனம் கூறிப்போந்த சிருட்டி, திதி, சங்காரமென்னும் முத்தொழில்களும் பிரமா, விட்டுணு, உருத்திரனென்னும் மூன்று கடவுளருக்கு முரியவென உலகஞ்சொல்ல,

நிற்பவும், இவ்விடத்து ஒரு கடவுளுக்கே முத்தொழிலுஞ் செய்யும் சுதந்திரம் உண்டென்று வரையறுத்தது என்னையெனின், வாசனை பொருந்திய தாமரை மலரின்கண் உறைகின்ற பிரமா, விட்டுணு, இருவரும் புண்ணிய விசேடம்பொருந்தியதால் முதல்வனுடைய உயர்ந்த அதிகார சத்தியை அம்முதல்வனது ஏவலால் பெற்றுடையர். அவ்வாறன்றி, அத்தொழிற்கு அவ்விருவரும் சுதந்திரரல்லர் ஆகலான், முத்தொழிலும் செய்தற்குரிய சுதந்திரம் சங்காரகாரணனாகிய ஒருவனுக்கே உண்டு. (எ - று.)

பிரம விட்டுணுக்கள் புண்ணிய விசேடத்தால் உயர்ந்த அதிகார சத்தியைப் பெற்றுள்ளார் என்பதனை, "நல்வினைக்கண் வாணுளின் மாலாயயனாகி" என்ற போற்றிப் பஃறொடையானுந் தெளிக. வேதம் புராணம் இதிகாசம் முதலியவற்றிற்கும், முத்தொழிற்கும் சிவபெருமானே சுதந்திரர் ; ஏனையோர் சுதந்திரரல்லர் என்பதே கருத்து என்பது சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் முதலியவற்றுட் காண்க. வரைந்து என்பது வரைத்து என வலித்தல் விகாரமாயிற்று. புரைத்ததிகாரசத்தி என்றவிடத்து, புரைத்த அதிகார சத்தி என்று பொருள்பட பெயரெச்சத்து அகரம் தொக்கு நின்றது. அவ்வெச்சம் அதிகாரசத்தி என்னும் பெயர் கொண்டு முடிந்தது. புரைத்தல்—உயர்தல்.

விட்டுணுவுக்குக் காத்தற்றொழில் சுதந்திரமாயின், தன் மகனாகிய மன்மதனைச் சிவபெருமான் நீறாக்கிய காலத்து நீறுபடாது காத்திருக்கலாம். பிரமனுக்கு படைத்தற்றொழில் சுதந்திரமாயின் சிவபிரானாற் கொய்யப்பட்ட தனது தலையை மீளப் படைத்திருக்கலாம். அங்ஙனம் செய்யாமையானே அவர்க்கு அத்தொழில்கள் சுதந்திரம் அல்லவாதல் அறிக.[௩ச]

சங்கார காலத்தில் பிரம விட்டுணுக்களுஞ் சங்கரிக்கப்படுவர் ஆதலின் முத்தொழிற்குஞ்சிவனே முதல்வன் எனக் கூறுகின்றது.

இறுதியாங் காலந்தன்னி லிருவரு மிருவருந்தம்
முறுதியினின்ரு ரென்னி னிறுதி தானுண்டா காதா
மறுதியிலரனே யெல்லா மழித்தலா லவனாலின்னும்
பெறுதுநா மாக்கநோக்கம் பேரதிகரணத் தாலே.

[கோ - ௫.] இறுதியாங் காலந்தன்னில் இருவரும் தம் உறுதியில் நின்றார் என்னின், இறுதிதான் உண்டாகாதாம்: அறுதியில் அரனே எல்

லாம் அழித்தலால், ஒருவனே பேரதிகரணத்தாலே இன்னும் ஆக்கம் நோக்கம் அவனல் நாம் பெறுதும்.

(போ - ரை.) அன்றியும், சங்கார காலத்தில் பிரம விட்டுணு இருவரும் தத்தம் ஆற்றலோடு நிலைபெறுவராயின், உலகம் சங்காரமாதலின்று. ஆதலின், சங்கார காலத்தில் அவ்விருவரும் சங்கரிக்கப்பட்டு உளரல்லர் என்பது பெற்றும். அதுவன்றியும் வேறொருவராலும் சங்கரிக்கப்படாத சங்காரக் கடவுள் இலவற்றை ஒழித்துச் சங்கரிக்கமாட்டாஞகலானும், முழுதும் சங்கரித்தவிடத்துச் சங்காரக் கடவுளாகிய அவ்வொருவனே எஞ்சி நிற்றல் பெறப்படுதலானும், ஒடுங்கிய உலகங்கட்குப் பெரியதோர் ஆதாரம் எஞ்சி நின்ற சங்காரக் கடவுளேயாதலானும், ஒடுங்கிய உலகத்தை மீளத்தோற்றுதலும் நிறுத்துதலும் செய்தலை அவனுலே நாம் பெற்றுக்கொள்ளுதும். (எ - று.)

அறுதியில் அரன் என்றவிடத்து அரன் என்னும் பெயருக்கு அறுதியில் என்பது அடையாய் நின்றது. நிற்கவே, அதனுலும் இறைவன் முதல் என்பதற்கு, வேறொருவராலும் சங்கரிக்கப்படாமையால் என்னும் ஓரேதுக் கூறியவாறு. ஆகவே, எல்லாவற்றையுஞ் சங்கரித்தலானும், தான் எஞ்சி நிற்றலானும், ஒடுங்கிய உலகங்கட்கு ஆதாரமாகலானும், வேறொருவராலும் சங்கரிக்கப்படாது நிற்றலானும் சங்காரக் கடவுளே முதல் என்றுரைத்துக் கொள்க.

இன்னும்—மீளவும். ஆதாரம், அதிகாணம் என்பன ஒருபொருட்சொற்கள். உலகத்திற்கு முதற்காரணமும் அதிகாணமாதலின், இறைவன் அதிகாணமாய்நிற்றல் அதுபோலன்று என்பதுணர்த்துதற்குப்பேரதிகாணம் என விசேடித்தார். விசேடிக்கவே, முதற்காரணம் சடரூபமான அதிகாணம் எனவும், இறைவன் ஞான ரூபமான அதிகாணம் எனவும் பெறப்பட்டமை காண்க.

மேலைச் செய்யுளால் ஆகம அளவைபற்றியும், இச்செய்யுளால் யுத்திபற்றியும் பௌராணிகர் மதம்பற்றி நிகழும் ஆசங்கையைப் பரிசரித்து ஈறுமாகி மருவுவித்திடும் என்பது வலியுறுத்தப்பட்டது. இவ்வாறு வலியுறுத்தப்பட்ட இதனல், பாஞ்சராத்திரி, இரணியகருப்ப மதங்களும் பரிகரிக்கப்பட்டவாறு காண்க. [௩௭.]

இறைவன் ஜொழில் மறம், வீண், தன்னயம் என்னுங் குற்றங்களுட்படாது அருளே எனக் கூறுகின்றது.

சொன்னவித் தொழில்க ளென்ன காரணந் தோற்ற வென்னின்
முன்னவன் விளையாட் டென்று மொழிதலு மாமு யிர்க்கு
மன்னிய புத்தி முத்தி வழங்கவு மருளான் முன்னே
துன்னிய மலங்க ளெல்லாந் துடைப்பதுஞ் சொல்ல லாமே.

[கோ - ௫.] முன்னவன் சொன்ன இத்தொழில்கள் தோற்றக் காரணம் என்ன என்னில், விளையாட்டு என்று மொழிதலுமாம். உயிர்க்கு முன்னே மன்னிய புத்தி முத்தி துன்னிய மலங்களெல்லாம் அருளால் துடைப்பதும் வழங்கவும் [அருளாற்] சொல்லலாமே.

(பொ - ரை.) சங்காரக்கடவுள் இங்ஙனங் கூறிப்போந்த சிருட்டி, முதலிய தொழில்களைச் செய்தற்குக் காரணம் என்னை யென்னின், * "காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி" என்பது முதலிய திருவாக்குக்கள்பற்றி அத்தொழிற்குக் காரணம் விளையாட்டென்றலுமாம். விளையாட்டென்றதனால் சிறுமகார் விளையாட்டுப் போலப் பயனற்ற வீண் விளையாட்டோ வெனின், அன்று. விளையாட்டென்றதின் கருத்தென்னையோ வெனின், "† ஐயா நீ யாட்கொண்டருளும் விளையாட்டி னுய்வார்களுய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்" என்பது முதலிய திருவாக்குக்கள் பற்றி உய்தற் பயனுடைத்தாகலின், பெரும்பாரஞ் சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டு என்பது போல எளிதிற் செய்யப்படுதலை நோக்கியேயாம். அங்ஙனஞ் செய்வதும் தன்பயன் கருதியோ வெனின், அன்று. ஆன்மாக்களுக்குப் பெத்த காலத்துச் சுவர்க்காதி போகமும், பதமுத்திகளும், முத்திக் காலத்துப் பொருந்திய மும்மலங்களும் அருளால் நீக்குதலாகிய வீடுபேறும் பயத்தற் பொருட்டேயாம். அவ்வாறு செய்வதற்குத் தான் காரணம் யாதெனின், புத்தி முத்தி வழங்குதலும், மலந்துடைத்தலுமாகிய இரண்டும் பக்குவம் நோக்கிச் செய்யப்படுவன வாத

---

* திருவாசகம்-திருவெம்பாவை-செ. கஉ.

† திருவாசகம் திருவெம்பாவை-செ. கக.

லின், தம்முண் முாணுமையின், உயிர்கண்மேற் சென்ற கருணே யேயாம். (எ - று.)

மொழிதலும் என்றவிடத்துள்ள உம்மை விளையாட்டே யன்றி புத்தி முத்தி வழங்கவும் துன்னிய மலங்களெல்லாம் துடைப்பதுமாம் என எதிரது தழீஇற்று. வழங்கவும், துடைப்பதும் என்றவிடத்து உம்மை எண்ணும்மை. வழங்கவும் என்னும் உம்மையோடு பொருந்துதற் கேற்பத் துடைப்பதும் என்றவிடத்து ஆக்கச் சொல் வருவித்துத் துடைப்பதுமாம் என உரைக்க. அருளால் என்பதைச் சொல்லலாமே என்பதனேடுங் கூட்டி அருளாற் சொல்லலாமே என உரைக்க.

தொழில்களைச் செய்தற்குக் காரணம் என்னே என வினயினர்க்குப் புத்தி முத்தி வழங்குதலும், மலங்களெல்லாந் துடைப்பதும் எனப் பயன் கூறி விடுத்தல் விடை வழுவாகாதோவெனின், ஆகாது. எதனுலெனின், அருளால் புத்தி முத்தி வழங்கவும் மலங்களெல்லாந் துடைப்பதுமாம் என்றதனுல் அருள்காரணமென்பது தாற்பரியமாதலா லென்க. அவ்வாறாயினும், அநுக்கிரகம் நீங்கிய ஏனைய தொழில்களெல்லாம் பிறப்பிறப்புகளிற் சேர்த்துத் துன்பமடையும்படி செய்வனவாதலின், அவற்றைச்செய்தலும் அருளாதல் எவ்வாறு கூடுமெனின், அதற்கு விடை கூறுதற்காகவே வருஞ் செய்யுளெழுந்தது. [நகூ.]

அநுக்கிரகமாகிய தொழில் மட்டுமன்று சிருட்டி முதலிய ஏனைய தொழில்களும் அருளே எனக் கூறுகின்றது.

அழிப்பிளைப் பாற்ற லாக்க மவ்வவர் கன்ம மெல்லாங்
கழித்திட னுகரச் செய்தல் காப்பது கன்ம வொப்பிற்
றெழித்திடன் மலங்க ளெல்லா மறைப்பருள் செய்திதானும்
பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடி னருளே யெல்லாம்.

[கொ - டு.] அழிப்பு இளைப்பாற்றல். ஆக்கம் அவ்வவர் கன்மம் எல்லாம் கழித்திடல். காப்பது நுகரச் செய்தல். மறைப்பு கன்மவொப்பில் மலங்களெல்லாம் தெழித்திடல். அருள் பந்தம் வீடு. பார்த்திடின் எல்லாச் செய்திதானும் அருளே. பழிப்பு ஒழி.

(போ - ரை.) மேற்கூறிய முத்தொழில்களையும் ஐந்து தொழில்களாக விரித்துக் கூறவும்படும். அவற்றுள் சங்காரமாவது இளைப்பாற்றலாம். சிருட்டியாவது அவாவர் கன்ம முழுதுங் கழியுமுகத்தால் மலபாகம் வரச் செய்தலாம். திதியாவது

கன்மங் கழியுமாறு அதனை நுகர்வித்தலாம். திரோபவமாகிய மறைப்பாவது இருவினை யொப்புவரச் செய்து மலங்களைத் தெளித்தலாம். அதாவது அனுபவிக்க வேண்டிய வினையின் பயனை அனுபவிக்கும் முறையில் அதினுள்ள குணங்குற்றந்தோன் ருதிருக்கும்படி மறைத்து அனுபவிக்கச் செய்து மலத்தைத் தேய்த்தல். அருளாகிய அனுக்கிரகமாவது பந்தம் விடுவித்த லாம். இவ்வாறு ஒவ்வொரு தொழிலும் ஒவ்வொரு பயன் தரு தலால் ஆராயுமிடத்து ஐந்தொழிலும் அருட்செயலேயாம். இவற்றுள் சங்காரமும், மறைத்தலும் மறத்தொழிலே போலு மெனப் பழித்தலைச் செய்யற்க. (எ - று.)

சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஐந்து தொழில்களைச் சிருட்டி, திதி, சங்காரம் என்னும் முத்தொழிலாகக் கூறு மிடத்து திரோபவத்தைத் திதியினுள்ளும், அநுக்கிரகத்தைச் சங்காரத்தி னுள்ளும் அடக்கிக் கூறப்படும்.

இருவினை ஒப்பு:—மிகுந்த புண்ணியத்தின் பயனும், மிகுந்த பாவத் தின் பயனும் ஒருகாலத்து அனுபவிக்க வருங்கால் அவ்விரண்டும் ஒன்றோ டொன்று முரணுதலின், திருவருட்சத்தி அவ்விரண்டனையும் அநுபவிக்க வொட்டாது தள்ளிவிடுமாதலின் அதுவே இருவினையொப்பு என்பர் ஒரு சாரார். அங்ஙனமாயினும், எஞ்சிய வினையின்பயன் அனுபவித்துத் தீர வேண்டுதலின் அது இருவினையொப்பாகாது. எல்லா நல்வினைப்பயனும், தீவினைப்பயனும் அநுபவித்தொழிதலே இருவினையொப்பென்பர் மற் றொரு சாரார். அங்ஙனமாயினும், அது மல சத்தியைக் கெடுக்காது ஆணவமலமுடைய விஞ்ஞானகலராக்குதலே யாதலின் அதுவும் இருவினை யொப்பாகாது. இனி, இருவினையொப்புத்தான் யாதெனின், ஆன்ம அறிவின்கண் நல்வினை தீவினைகளும், அவற்றின் பயனாகிய இன்பத் துன் பங்களும் விருப்பு வெறுப்பின்றி ஒப்பத்தோன்றுதலேயாம். இதனால், நான் என்னும் சீவபோதமாகிய மலச்சேட்டை தேயும். ஆதலின், மல பரிபாகத்திற்குரிய இருவினையொப்பு இறுதியிற் கூறியதேயாம்.

மேலைச் செய்யுளால் இறைவன் செய்யுந்தொழில் மறமாய் முடியும் என்னும் நாத்திகர் மதமும், வீணாய் முடியுமென்னும் மாயாவாதிகள் மத மும், தன்னயங்கருதியதாய் முடியுமென்னும் பரிணாமவாதிகள் மதமும் பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து, இச்செய்யுளால்; அத்தொழில்கட்குக் காரணம் உயிர்கண்மேற் சென்ற கருணையே எனக்கூறி ஈறுமாகி மருவுவித் திடு மென்பது சிறப்பிக்கப்பட்டது.

"உயிரவை யொடுங்கி" என்றது முதல் இவ் வாறுசெய்யுளானும், "ஈறுமாகி மருவுவித்திடும்" என்ற முதற்கூற்றை வலியுறுத்தி, இனி இரு பத்திரண்டு செய்யுளால் "அநாதிமுத்த சித்துரு" என்ற மூன்றாங்கூற்றை வலியுறுத்துகின்றார். [நஎ.]

அநாதிமுத்த சித்துருவின் தடத்த வடிவம் அருவம், அருவுருவம், உருவம் எனக்கூறுகின்றது.

அருவமோ வுருவாரூப மானதோ வன்றி நின்ற
வுருவமோவுரைக்குங்கர்த்தாவடிவெனக்குணர்த்திங்கென்னி
னருவமு முருவா ரூப மானது மன்றி நின்ற
வுருவமு மூன்றுஞ் சொன்ன வொருவனுக் குள்ளவாமே.

[கோ - டு.] உரைக்கும் கர்த்தா வடிவு அருவமோ உருவா ரூப மானதோ அன்றி நின்ற உருவமோ இங்கு எனக்கு உணர்த்து என்னின், சொன்ன ஒருவனுக்கு அருவமும் உருவாரூபமும் ஆனதும் அன்றி உருவமும் நின்ற மூன்றும் உள்ளவாமே.

(போ - ரை.) இங்ஙனம் கூறிப்போந்த ஐந்தொழில் செய்யும் இறைவனுக்கு வடிவம் இன்றி முடியாமையின், அவ் வடிவம் அருவமோ அருவுருவமோ அவ்விரண்டுமின்றி நின்ற உருவமோ, இம்மூன்றனுள் அவனுக்குரிய வடிவம் இதுவென இவ் விடத்து எனக்குணர்த்த வேண்டுமென்று வினவில், அநாதிமுத்த சித்துருவென மேற்கூறப்பட்ட ஒருவனுக்கு அருவும் அருவுருவும் அவ்விரண்டுமின்றி உருவும் என நின்ற மூன்று வடிவமும் உள்ளனவாம். (எ - று.)

இச்செய்யுள் சொற்பொருட்பின்வருநிலை யென்னும் அலங்காரம். உள்ளன என்றிருக்கவேண்டிய அகரவீற்றுப் பலவறிசொல் அன்சாரியை பெறாது உள்ள என நின்றது. சொன்ன ஒருவன் என்றது அநாதி முத்த சித்துரு என மேற்கூறப்பட்ட ஒருவன்.

இனி, இத்தடத்த வடிவம் மூன்றற்கும் பிறர் கூறுங் குற்றங்களைப் பரிகரிக்க எண்ணி, உருவத்தின்கட் கூறுங் குற்றம் பரிகரிக்கவே, ஏனையவும் பரிகரிக்கப்பட்டனவா மென்னுங் கருத்தால், உருவமுண்டெனிற் குற்றமுண்டாமெனக் கூறும் பிறர் கூற்றைப் பரிகரிக்கத் தொடங்குகின்றார். [நஅ.]

இனி, இரண்டு செய்யுளால் இறைவனுக்குத்தடத்த வடிவமாகிய உருவத் திருமேனியுண்டேல் நம்மில் ஒருவனுமே என வினவுகின்றது.

கண்ணிடு முருவமென்னி னமக்குள வுருவம்போலப்
பண்ணிட வொருவன் வேண்டு மிச்சையேற் பலருமிச்சை
கண்ணிய வுருவங் கொள்ளேம் யாம்பெருங் கடவுடானு
மெண்ணிய யோகசித்தர் போலுரு விசைப்பன் காணே.

வித்தக யோகசித்தர் வேண்டுருக் கொள்ளு மாபோ
லுத்தமன் கொள்வ னென்னி னவர்களி லொருவனுவ
னத்தகை யவர்களெல்லா மாக்குவ தருளா லாங்கு
வைத்தது மாயை யென்னின் வடிவெலா மாயையாமே.

[கோ - டு.] உருவம் நண்ணிடும் என்னில் உருவம் நமக்கு உள போல பண்ணிட ஒருவன் வேண்டும். இச்சையேல் பலரும் இச்சையாம். கண்ணிய உருவங் கொள்ளேம். யோகசித்தர்போல் எண்ணிய உரு பெருங் கடவுள்தானும் இசைப்பன்காணே. வித்தக யோகசித்தர் வேண்டு உரு கொள்ளுமா போல் உத்தமன் கொள்வன் என்னின் அவர்களில் ஒருவன் ஆவன். அத்தகை அவர்கள் எல்லாம் ஆக்குவது அருளால். ஆங்கு வைத்தது மாயை என்னின் வடிவெலா மாயையாமே.

(பொ - ரை.) இறைவனுக்கு உருவம் உண்டென்னில் உருவமெல்லாம் ஒருதன்மையவாகலின் உருவமுடைய நம்மனோர்க்கு உளதாகிய சுய இச்சை இன்றிய பரதந்திரம் போல, முதல்வனுக்கும் உருவம் உண்டாதற்கு ஒரு கருத்தா உண்டெனப்பட்டுப் பரதந்திரமுளதாதல் வேண்டும். அஃதன்றி, முதல்வன் நினைந்த வடிவங் கொள்ளுதலால் சுதந்திரமுடையன் எனில், முதல்வனுக்கு உளதாகிய சுதந்திரம் நம்மனோர் பலர்க்கும் உருவமுடைய ஒற்றுமை பற்றி உளதாதல் வேண்டும். இனி, நம்மனோர்க்குக் கருதிய வடிவங்கள் எடுக்கமுடியாமையும், யோக சித்தர் தான் கருதியதொரு வடிவத்தை எடுத்துக்கொள்ளுதலும் உண்மையின், அவ்வியோக சித்தர்போல, தான் கருதியதொரு வடிவத்தை இறைவன் எடுத்துக் கொள்வனெனின், அங்ஙனமாயி

னும் சதுரப்பாடுடைய அவ்வியோக சித்தரில் ஒருவராய் முடியும். அன்றியும், அவ்வியோக சித்தர் தான் நினைந்ததொரு வடிவத்தைக் கொள்ளுதல் முதல்வன் அருளாலன்றி முடியாமையானும், யோகசித்தர்களுக்குண்டாகிய உருவம் மாயா காரியமாதலானும் யோகிகள் முதலிய நம்மனோர்க்கும் முதல்வனுக்கு முளதாய வேறுபாடு பெரிதாகலின் யோகசித்தரோடு ஒப்புமை கூறுதல் பொருந்தாது. அங்ஙனமாயினும், உருவமெல்லாம் ஒருதன்மையவாகிய மாயாகாரியமே யாகலான் உருவத்தின் வேற்றுமையில்லாத விடத்து வேறுபாட்டாற்போந்த பயன் என்னை. (எ-று)

"வித்தக யோக சித்தர் வேண்டுருக் கொள்ளுமாபோ லுத்தமன் கொள்வனென்னின்" என்றது, மேலைச் செய்யுளிற் கூறப்பட்டதை அநுவாதஞ் செய்து கொண்டது. [௧௧,௫௦.]

இறைவனுக்கு உருவத்திருமேனி உண்டு. அதுகொண்டு நம்மில் ஒருவனுதலில்லை எனக் கூறுகின்றது.

மாயை தான் மலத்தைப்பற்றி வருவதோர் வடிவ மாகு
மாயவா ணவம கன்ற வறிவொடு தொழிலை யார்க்கு
நாயக னெல்லா ஞானத் தொழின்முத னண்ண லாலே
காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னால்.

[கொ - டு.] ஆய ஆணவம் அகன்ற அறிவொடு தொழிலை ஆர்க்கும் நாயகன் எல்லா ஞானத் தொழில் முதல் நண்ணலாலே மலத்தைப் பற்றி வருவதோர் மாயைதான் வடிவமாகும். காயமோ மாயை அன்று. சத்தி தன்னால் காண்பது [ஆகும்.)

(பொ - ரை.) நீ அங்ஙனங் கூறுதல் பொருந்தாது. வடிவத்தை உடையவர்களது ஏற்றத்தாழ்வால் வடிவங்களும் ஏற்றத்தாழ்வுடையனவே யன்றித் தம்முள் ஒப்பனவாகா. அவ் வேற்றத் தாழ்வுகள் என்னையோ எனின், கூறுதும். யோகிகள் முதலிய நம்மனோர் எல்லாரும் மலத்தைப் பற்றிக் கிடக்கும் பசுக்கள். அதுவன்றியும், ஒன்றே யறிதலும், ஒன்றே செய்தலும், ஒன்றிலே முதன்மையாதலுமாகிய அற்ப ஞானத்தொழில் உடையராம். முதல்வன், பந்திப்பதாய அவ்வாணவமல நீங்கிய ஆன்ம அறிவிலே தங்கி நின்றுணர்த்தும் தொழிலுடையோனு

கிய பசுபதி. அதுவுமன்றி, எல்லா அறிவும், எல்லாத் தொழி லும், எல்லா முதன்மையும் உடையன். இங்ஙனம் வடிவத்தையு டைய அங்கிகட்குத் தம்முள் ஏற்றத் தாழ்வுகள் உண்மையின், அதற்கேற்ப மலத்தைப் பற்றிய பசுக்களுக்கு அம்மலத்தோ டியைபுடைத்தாய் ஏகதேச அறிவைச் செய்யும் மாயையே வடி வமாம். அநாதி முத்த சித்துருவாகிய பசுபதிக்கு ஏகதேசத் தைச் செய்யும் மலத்தோடியைபுடைய மாயை வடிவமன்று. அவனுக்கு மலநீங்கிய உயிர்க்கு வியாபக அறிவைச் செய்யும் சத்தியினாலேயே வடிவமாம். ஆதலின், அங்கங்களினும் தம் முள் ஏற்றத்தாழ்வுகள் உண்டென்பது இனிது விளங்குதலால் அதனை அறியாது கூறுதல் அடாது. (௭ - று.)

மாயைதான் என்றவிடத்துத் தான் என்றது மேலைச் செய்யுளிற் கூறிய மாயையை அநுவதித்து நிற்றலை உணர்த்தி நின்றது. மலத்தைப் பற்றி என்பது, மலத்தைப்பற்றிய பசுக்கள் எனப்பொருள் குறித்தலின் பெயர். அவ்விடத்து குவ்வுருபு விரித்துரைக்க. * "ஐந்தவித்தா னற் றல்" என்புழிப்போல. நாயகன் எல்லா ஞானத்தொழில்முதனண்ணலால் எனவே, உயிர்கள் ஏகதேச ஞானத்தொழில்முதலே நண்ணுவன என் பது பெறப்பட்டது. ஆணவமகன்ற என்றவிடத்து அகறல் நீங்குதல். அறிவொடு தொழிலை ஆர்க்கும் என்றவிடத்து ஆர்க்கும் என்பது பொருந் தும் என்றாகி, அஃது உபசாரத்தால் விளங்கித் தோன்றுதலைக் குறித்து, விளங்கித் தோன்றுங் காரணத்தாலுண்டாம் உணர்த்துதல் என்னுங் காரி யத்தின் மேல் நின்றது. என்றும் உள்ளானாயினும், இதுவரையும் வெளிப்படாது நின்று, இதுபொழுது விளங்கித் தோன்றுதலைப்பொருந் துதல் என்றது உபசாரம். காயமோ என்றவிடத்து ஓகாரம் இறைவன் றிருமேனியின் சிறப்பைக் குறித்தது.

ஏகதேச அறிவை யுண்டுபண்ணுதல் ஏகதேசப்படுதற்குரிய பொருட் கேயன்றி மற்றதற் குரித்தன்று; வியாபக அறிவை யுண்டுபண்ணுதல் வியாபகப் பொருட்கேயன்றி ஏகதேசப்படும் பொருட் குரித்தன்றாகலான், ஏகதேசமாக அறியும் உயிர்களுக்கு ஏகதேசத்தை யுண்டுபண்ணும் மாயை யே உருவமாயிற்று. வியாபகமாயறியும் பசுபதிக்கு, அதுபோல ஏக தேசப்படுந் தகுதியில்லாத சத்தியே உருவமாயிற்று என அறிந்துகொள்க.

இனி, இச்செய்யுளில் "ஆணவமகன்ற அறிவொடு தொழிலை ஆர்க் கும்" என்பதற்கு. ஆணவமானது வியாபக ஞானத்தொழில்களைத் தடுக்

---

* திருக்குறள்-நீத்தார் பெருமை. செ. ரு.

கும் என்றுரைப்பாருமுளர். அப்பொருள், அம்மட்டில் நின்று, பின் வரும் வாக்கியங்களோடியைந்து பொருள்தராது நின்று வற்றுமாகலின் பொருந்தாது. அன்றியும், மாயாகாரியமான உருவத்தைப்பற்றி ஆராயு மிவ்விடத்தில், ஆணவத்தின் காரியத்தைப்பற்றி ஆராய்தற்கு யாதொரு இயைபுமில்லை யாகலானும் அவ்வுரை பொருந்தாமை காண்க. [சக.]

இறைவனுக்கு உருவங்கொள்ளுதல் பொருந்தாது அருவங் கொள்ளுதலே பொருந்தும் எனின் ஆத்துவாக்களி லொருவனு மெனக் கூறுகின்றது.

சத்தியே வடிவென்றாலுந் தான்பரி ணமமாகு
நித்தமோ வழியுமத்தா னின்மல னருவே யென்னி
லத்துவா மார்க்கத் துள்ளா னலனிவனருமை தன்னைப்
புத்திதா னுடையை போல விருந்தனை புகலக் கேணீ.

(போ - ரை.) அங்ஙனம் சத்தியே வடிவாயினும், உருவ மெல்லாம் கண்டிதப் பொருளாதலின் மாறுதலை யடைந்து அழி வெய்தும். அவ்வாறழிவெய்தல் சிவசத்திக்குத் தகாமையால், அநாதி முத்த சித்துருவாகிய முதல்வன் அருவப்பொருளாதலே அமைவுடைத்தெனின், அருவப் பொருளாகிய ஆறத்துவாவை யுங் கடந்த கடவுட் பொருளை அவ்வத்துவாக்களோடு ஒப்ப அருவமெனக் கூறுதல் பொருந்தாது. ஆயினும், இவ்விறைவன் தன்மையைப் புத்தியுடையாய் போலிருந்தவனே கூறுவாம். நீ கேட்பாயாக. (எ - று.)

அத்துவா எனினும், வழி எனினும் ஒக்கும். அது கலை, மந்திரம், பதம், வன்னம், தத்துவம், புவனம் என அறுவகைப்படும். பிரபஞ்சந் தோன்றுதலும், ஒடுங்குதலும், ஆன்மாக்கள் வினைகளை ஈட்டுதலும் இவற் றின் வழியேயாதலின், அத்துவா வழியெனப்பட்டது. இதன் விபரம் எட்டாஞ் சூத்திரத்திற் கூறப்படும். புத்திதானுடையைபோல இருந்த னை என்பது இழித்தற்கண் வந்த குறிப்புமொழி.

அத்துவா மார்க்கத்துள்ளான் அலன் என்பதை அத்துவா மார்க்கத் துள்ளானன்று என்று பாடபேதங் கொள்ளின், அத்துவா மார்க்கத்து உள்ளான் எனப் பிரித்து, அத்துவா மார்க்கத்துள் ஒருவனுய்க் கருதப் படான் என்று பொருள்கூறி, அன்றிவன் என்பதற்கு அவ்வத்துவாக்கள தியல்போடு மாறுபட்ட இவன் என உரைத்துக் கொள்க. அன்றிவன்

என்றது அன்றிய இவன் என விரிதலின் வினைத்தொகை. அன்றுதல்—மாறுபடுதல். இது * "அன்றினர் புரமெரித்தார்" என்ற பெரிய புராணத்தானு மறிக.

அவ்வாறாயின், முதல்வனுக்கு வடிவம் அருவமாயின், அத்துவாக்களிலொருவனும் முடியுமென்றல் எவ்வாறு என்பார்க்கு விடை வருஞ் செய்யுளிற் கூறப்படும். [சஉ.]

இறைவனுக்கு அருவங் கொள்ளுதலும் அருவுருவங் கொள்ளுதலும் பொருந்தாதெனக் கூறுகின்றது.

உலகினிற் பதார்த்த மெல்லா முருவமோ டருவமாகி
நிலவிடு மொன்றொன் றாகா நின்றவந் நிலையே போல
வலகிலா வறிவன் றானு மருவமே யென்னி லாய்ந்து
குலவிய பதார்த்தத் தொன்றாய்க் கூடுவன் குறித்திடாயே.

[கோ - டு.] உலகினிற் பதார்த்தமெல்லாம் உருவமோடுஅருவமாகி நிலவிடும். ஒன்று ஒன்று ஆகா. அலகு இலா அறிவன் அருவமே என்னின், நின்றதானும் அந்நிலையே போல குலவிய பதார்த்தத்து ஒன்றாய்க் கூடுவன். ஆய்ந்து குறித்திடாயே.

(போ - ரை.) உலகத்திற் காணப்பட்ட பொருள்கள் எல்லாம் உருவமும், அருவமும், அருவுருவமுமாய்க் காணப்படும். அவற்றுள், ஆகாயம் முதலிய அருவப்பொருள் உருவத்தினியல்புடையதாகாது. சந்திரன் முதலிய அருவுருவப்பொருள் அருவுமாகாது, உருவுமாகாது. நிலம் முதலிய வுருவப் பொருள் அருவத்தினியல்புடைய தாகாது. இங்ஙனம் ஆறத்துவாவுட்பட்ட பொருள்களெல்லாம் ஒன்று பிறிதொன்றி னியல்புடையதாக மாட்டாது. ஆகலான், அநாதி முத்த சித்துருவாகிய முதல்வன் அருவப் பொருளே எனின், நிலைபெற்ற அவனும் அப்பொருள் போல் பிறிதொன்றினியல்புடையனாக மாட்டாமையை உடையனெனப் பட்டு, பொருந்திய அவற்றுள் ஒருவனும் முடியும். ஆகலான், நீ இதனை ஆராய்ந்தறிவாயாக. (எ - று.)

சந்திரனுக்கு ஒருகலை என்றுமிருக்கவும், அமாவாசையில் அறியமுடியாமையின் அருவம்; மற்றைக் கலைகள் அறியப்படுதலின் உருவம்; ஆதலின் சந்திரன் அருவுருவமாம்.

* பூசலார் நாயனார் புராணம், செ. க.

உருவமோடருவம் என்பதனை இரட்டுற மொழிந்து, உருவம்' அருவம், அருவுருவம் என உரைத்துக் கொள்க. ஒன்றினியல்பு ஒன்றுடைத்தாகாது எனக் கூறவேண்டி ஒன்றொன்றாகா என உபசரித்தார். இவ்வாறு கொள்ளாது ஒன்று ஒன்றாகா எனவே பொருள் கொள்ளின், சூக்குமம் தூலமாகும் என்னும் சற்காரிய வாதத்தோடு முரணுமாறு காண்க. "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி" என்பது முதலிய திருவாக்குக்களால் இறைவன் எல்லாமாதல் கூடுமாதலின் பிறிதொன்ற னியல்புடையனாகா னென்றல் பொருந்தாது. இச்செய்யுளில், நின்மலன் அருவே யென்பார் மதம் மறுக்கப்பட்டது. இதனானே, அருவுருவமென்பார் மதமும் மறுக்கப்பட்டவாறாயிற்று. இறைவனுக்கு அருவங் கூறுதலும், அருவுருவங் கூறுதலும் பொருந்தாதிருக்கட்டும். சத்தியே வடிவமாயின், சத்திக்குப் பரிணாமம் உண்டெனப்பட்டு, அநித்தமுமாய் விடுமே எனக் கூறிய குற்றத்திற்குப் பரிகாரங் கூறவில்லையே யெனின், அதற்குப் பரிகாரம் வருஞ் செய்யுளிற் பெறப்படும். [சசு.]

இறைவனுக்கு உருவங் கொள்ளுதலால் மாறுதலையடைந்து அழிவெய்துதலாகிய குற்றமின்றெனக் கூறுகின்றது.

பந்தமும் வீடு மாய பதபதார்த் தங்க ளல்லா
னந்தமு மாதி யில்லா னளப்பில னாத லாலே
யெந்தைதா னின்ன னென்று மின்னதா மின்னதாகி
வந்திடா னென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்ற மின்றே.

[கோ - டு.] எந்தைதான் பந்தமும் வீடும் ஆய பதபதார்த்தங்கள் அல்லான். ஆதி அந்தமும் இல்லான். அளப்பிலன் ஆதலாலே, இன்னன் என்றும் இன்னது ஆம் இன்னது ஆகி வந்திடான் என்றும் சொல்ல வழக்கொடு மாற்றம் இன்றே.

(போ - ரை.) அநாதி முத்த சித்துருவாகிய இறைவன் கட்டு வீடென்னும் பதங்களையுடைய பசு பாச பதார்த்தங்களது இயல்புடையனல்லனாகலானும், ஆதியும் அந்தமும் இலனாகலானும், அவை இலனாகவே அளவைகட் கெட்டாதவனாகலானும் அருவம், உருவம், அருவுருவம் என்னும் முக்கூற்றுள் இன்னனுவனென்றாவது, அம்முக்கூறும்படும் விருத்தி, பரிணாமம், விவர்த்தனம் என்பவற்றுள் ஒன்றிற்படுவன் படானென்றாவது கூறுதற்கு ஓர் ஆசங்கையுமில்லை. ஆசங்கையின்மையின் அதற்கு மறுமொழியாகிய பரிகாரமும் இல்லை. (எ - று,)

அருவமெல்லாம் உருவமாய்த் தோன்றுதலும், உருவமெல்லாம் அருவமாய் அழிதலும் துணிபு. இது, வித்தின்கண் மரம் அருவமாயிருந்து பின் உருவமாய்த் தோன்றுதலும், அங்ஙனந் தோன்றிய உருவம் பின்னர் அருவமாய் அழிதலும் ஆகிய இவற்றானறியப்படும். அங்ஙனந் தோன்றுதலும் அழிதலுமுடைமைபற்றி அருவமும், உருவமும் ஆகிய அவை அளவைகளான் அளக்கப்படுவனவுமாகும். அநாதி முத்த சித்துருவாகிய முதல்வனுக்குத் தோற்றக் கேடுகளின்மையானும், அவையின்மையின் அளவைகளான் அளக்கப்படாமையானும், அவன், விருத்தி, பரிணமம், விவர்த்தனம் என்னும் முக்கூற்றில் ஒரு கூற்றினும் வைத்து மொழியப்படான் என்று கூறவேண்டி "அந்தமு மாதியில்லா னளப்பில னதலாலே எந்தைதா னின்னனென்று சொல்ல வழக்கொடு மாற்றமின்றே" எனவும், பந்தமும், வீடும் இலனாகலின், எவ்வாறுமாமென்று கூறவேண்டி "பந்தமும் வீடுமாய பதபதார்த்தங்க ளல்லான் இன்னதா மின்னதாகி வந்திடானென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்றமின்றே" எனவும் கூறினார். விருத்தி, பரிணமம் மேற்கூறப்பட்டிருக்கின்றன. விவர்த்தனம்—ஒன்று பிறிதொன்றாய்த் தோன்றல்; அதாவது, கட்டை கள்வனாய்த்தோன்றல் போல்வன.

இச்செய்யுளை, அந்தமும் ஆதியில்லா னளப்பிலனதலாலே எந்தைதானின்னனென்றும் எனவும், பந்தமும் வீடுமாய பதபதார்த்தங்களல்லான் இன்னதாமின்னதாகி வந்திடானென்றும் எனவும், எதிர் நிரனிறைப் பொருள்கோளாகக்கொண்டு, சொல்ல வழக்கொடு மாற்றமின்றே என்றதனை ஈரிடத்தும் கூட்டி உரைத்துக்கொள்க.

இன்னதாமின்னதாகி வந்திடான் என்னும் இக்கருத்துப்பற்றியே, *"எந்தையா ரவரெவ்வகையார் கொலோ" என்றருளிச் செய்தனர் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளும். பதபதார்த்தம் என்றது, குழைக் காதுபோல பதத்தையுடைய பதார்த்தம் என்று பொருள்பட நின்ற இரண்டாம் வேற்றுமைத்தொகை. பதம்—அவ்வவ்வியல்பு. பசு பாச மிரண்டும் கட்டு வீடென்னும் இயல்புடையன. அஃதாவது, பாசம் உயிரைக்கட்டுதலும் நீங்குதலுமுடையது. உயிர் பாசத்தோடு கட்டுற்று நிற்றலும் விட்டுநிற்றலு முடையது. இறைவன் ஒன்றைப்பற்றி நிற்றலும் விட்டுநிற்றலும் இல்லை; ஆதலான், பந்தமும் வீடுமாய பதபதார்த்தங்களல்லான் என்றார். அந்தமும் ஆதியில்லான் என்றவிடத்து ஆதியும் என்னும் பொருள்பட உவமை தொக்கு நின்றது.

---

* திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம், திருப்பாசுரம், செ. ங.

அவ்வாறாயின், உருவமுடையாரெல்லாம் வேற்றுமைப்படுதலும், ஏகதேசமாதலும், கட்டுப்படுதலும் உடையராதல் காணப்பட்டமையின், முதல்வனுக்கு உருவமுண்டாயின் அம்மூன்றுமுளவெனப்பட்டுக் குற்றமாமே என்னும் ஆசங்கையை நீக்குதற்கெழுந்தது வருஞ்செய்யுள். [சச.]

இறைவன் உயிர்கள் மாட்டு வைத்த அருளினால் தான் நினைந்த வடிவங் கொள்ளுதலால் கன்மத்தால் உருவங் கொள்வார்க்குப்போலக் குற்றமின்றெனக் கூறுகின்றது.

குறித்ததொன் றாக மாட்டாக் குறைவில னாத லானு
நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும்
வெறுப்பொடு விருப்புத் தன்பான் மேவுத லிலாமை யானு
நிறுத்திடு நினைந்த மேனி நின்மல னருளி னாலே.

[கோ - டு.] நின்மலன் அருளினாலே நினைந்த மேனி நிறுத்திடும்.

(போ - ரை.) இறைவன் விகாரப்படுதற்குக் காரணமாகிய நினைந்ததொரு வடிவத்தை எடுத்துக் கொள்ளமாட்டாத பரதந்திரமிலனாதலானும், முறைமைப்பட ஏகதேசமாதற்குக் காரணமாகிய சிற்றுணர்வு சிறுசெயல்களின்றிய நிறைந்த தொழிலுடைய ஞானநிலைமையனாதலானும், துடக்குறுதற்குக் காரணமாகிய விருப்பு வெறுப்புக்கள் தன் மாட்டுப் பொருந்துதல் இல்லாதவனாகலானும், அவ்வுபாதிகள் இலனாகவே, அக்குற்றங்களுக்குத் தூரனாய், அநாதி முத்த சித்துருவாகிய முதல்வன், மலநீங்கிய உயிர்களின் அறிவிலே தங்கிநின்று உணர்த்தும் அருளுடையனாய் நிற்றலின், தான் நினைந்ததொரு திருமேனியைத் தனதாகக் கொண்டருளுவன். (எ - று.)

குறித்ததொன்றாகமாட்டாக் குறைவே பரதந்திரமாகலான், அதற்குப் பரதந்திரம் என உரை செய்யப்பட்டது. பரதந்திரம்—பிறர் வயம்படுதல்.

அவ்வாறாயின், விகாரப்படுதல் முதலிய குற்றங்கள் இல்லாதவனாகிய முதல்வன் உருவங்கொள்ளாமலே எத்தொழிலுஞ் செய்யக்கூடுமாதலின், உருவங் கொள்ளுதலால் உண்டாம் பயனென்னையெனின், அப்பயனுணர்த்துதற்கன்றே எழுந்தது வருஞ்செய்யுள். [சரு.]

இறைவன் உருவங் கொள்ளுதலாற் போந்தபயன் கூறுகின்றது.

ஆரண மாக மங்க ளருளினா லுருவு கொண்டு
காரண னருளா னாகிற் கதிப்பவ ரில்லை யாகு
நாரணன் முதலா யுள்ள சுரர்நரர் நாகர்க் கெல்லாஞ்
சீரணி குருசந் தானச் செய்தியுஞ் சென்றி டாவே.

[கோ - ரு.] காரணன் அருளினால் உருவுகொண்டு ஆரணம் ஆகமங்கள் அருளானாகில் கதிப்பவர் இல்லையாகும்.

(போ - ரை.) உயிர்க்குத் தன்னுடம்பைத் தொழிற்படுத்துதற்கு வேறொரு வடிவம் வேண்டாதவாறுபோல, அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வனுக்குத் தன் வடிவமாகிய உலகத்தைத் தொழிற்படுத்துதற்பொருட்டு வேறொரு வடிவம் வேண்டப்படுவதன்று. ஆயினும், அம்முதல்வன் கருணையினால் திருவுருக்கொண்டு வேதாகமங்களைமுறைப்பட அருளிச்செய்யவில்லையாயின், நேராகவும் பிறிதொரு வடிவத்தில் மறைந்து நின்றும் அறிவித்தால் அறியுந் தன்மையுடைய பிரளயாகலர், சகலர் என்னும் உயிர் வர்க்கங்கள் பொருளியல் புணர்ந்து வீடுபேறடைதல் இல்லையாகும். அதுவன்றி, திருமால் முதலிய தேவர்க்கும் மானுடர்க்கும் நாகர் முதலியோர்க்கும் மிக்க சிறப்புடைய குருபரம்பரையின் வைத்து அருளுதலும் செல்லாவாம். ஆதலின், திருமேனி உறுதியாக வேண்டப்படும். (எ - று.)

இச்செய்யுளால் பிரளயாகலர்க்கு மான், மழு, சதுர்ப்புஜம் முதலிய தடத்தத் திருமேனிகொண்டு முன்னின்றுணர்த்தலும், சகலர்க்கு அவர் வடிவம்போலும் வடிவில் மறைந்து நின்று உணர்த்த வேண்டுதலால் அங்ஙன முணர்த்து முறையில் நூல் இன்றியமையாது வேண்டப்படுமாதலால் அந்நூல் செய்தலும் ஆகிய இவற்றிற்கும், குருபரம்பரை வருதற்குந் திருமேனி உறுதியாக வேண்டப்படும் என உணர்த்தியவாறும். கதிப்பவர்—கதியடைபவர். விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்று ஆன்ம வர்க்கம் மூன்று வகைப்படும். அவை, முன்னர் எட்டாஞ் சூத்திரத்திற் கூறுகின்றார். சுசு.]

இறைவனுக்குத் தனு உண்டாகவே வாக்கு மனதீதனென்றல் பொருந்தாது என்பாரை மறுத்து, ஆன்மாக்கள் மலத்தினால் கொள்ளும் நியதியான உருவை நூல்வழியாகக் கண்டு வாக்காற் சொல்லவும், மனத்தாற் சிந்திக்கவும் கூடுதல்போல இறைவன் அருளாற் கொள்ளும் நினைந்ததொரு திருமேனிக்குக் கூடாதாகலின், சிந்திதனாயினும் வாக்குமனதீதனென்றல் பொருந்தும் எனக் கூறுகின்றது.

உருவருள் குணங்க ளோடு முணர்வரு ளுருவிற் றோன்றுங்
கருமமு மருளரன்றன் கரசர ணாதி சாங்கந்
தருமரு ளுபாங்க மெல்லாந் தானரு டனக்கொன் றின்றி
யருளுரு வுயிருக் கென்றே யாக்கின னசிந்த னன்றே.

[கோ - ரு.] அரன்றன் உரு அருள். தரும் கரசரணாதி சாங்கம் அருள். உணர்வு அருள். உருவில் தோன்றும் கருமமோடும் குணங்களும் அருள். உபாங்கம் எல்லாம் தான் அருள். அருளுரு உயிருக்கென்றே தனக்கு ஒன்று இன்றி ஆக்கினன் அசிந்தன் அன்றே.

(பொ - ரை.) அரன்றன் திருவடிவம் அருளாதலின் தரப்பட்ட திருக்கை திருவடி முதலிய பிரத்தியங்கங்களும் அருள் வடிவேயாம். உயிர்கட்கு அறிவைக் கொடுப்பதாகிய அத்திருவுருவிற் றோன்றுகின்ற தொழில்களும், வாய்மை முதலியகுணங்களும் ஆகிய சாங்கங்களும் அருள்வடிவேயாம். உபாங்கமாகிய புவனபோகங்களும் அருள்வடிவேயாம். இவ்வருளாகிய வடிவெல்லாம் உயிர்களின் பொருட்டன்றிச் சிறிதுந் தன் பொருட்டுக் கொள்வோனல்லனாதலின் இவ்வடிவம்பற்றிச் சிந்திதனாயினும் அசிந்திதனே. (எ - று.)

உணர்வருளுரு என்றவிடத்து அருளுரு என்றது அருளும் உரு எனப் பொருள்தந்து நிற்றலின், எதிர்கால வினைத்தொகை. ஈற்றடியிலுள்ள அருளுரு என்றது அருளாகிய உரு எனப் பொருள்தந்து நிற்றலின் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. வாய்மை முதலிய குணங்கள் சூலம் முதலிய ஆயுதமாகலின், அவை சாங்கமாகிய காரணம் எனப்பட்டன. கரசரணாதி சாங்கம் தருமருள் என்பது, உருவருள் என்றதன் பின்னாக வைக்கவேண்டியதாயினுஞ் செய்யுளாகலின் முறை பிறழ வைத்தார். கரசரணாதி என்றவிடத்து ஆதி என்றதனால், ஏனை அங்கமும், பிரத்தியங்கத்

துள் கரசரணம் நீங்கிய ஏனையவுங் கொள்ளப் டும். கரசரணுதி பிரத்தியங்கமாதலின், அவற்றைச் சாங்கம் என்றது உபசாரம். அசிந்தன் என்பது சிந்தனைக்கெட்டாத இறைவனைக் குறித்தலின் அன்மொழித்தொகை. அசிந்தனன்றே என்பதில் அன்றே என்பது அசை.

அங்கம்—சிரசு, முகம், இருதயம் என்னும் மூன்றுமாம்.

பிரத்தியங்கம்—நேத்திரம், நாசி, கண்டம், மார்பு, தோள், நாபி, கை, கால், விரல் முதலிய உறுப்புக்களாம்.

சாங்கம்—அங்கத்துடன் கூடியது. அதாவது, சூலம் முதலிய பத்து. அவற்றுள், சூலம் - ஆரணி, செனனி, ரோதயத்திரி ஆகிய முத்தொழிற்குரிய மூன்று சத்திகளையும், பரசு - சத்தியத்தையும், வாள் - பிரதாபத்தையும், வச்சிரம் - தன்னையாவது தன் செயலையாவது பிறராற் பேதிக்கப்படாமையையும், அபய முத்திரை - அனுக்கிரகத்தையும், நாகம் - சுத்தமாயையையும், பாசம் - அதோமாயையையும், அங்குசம் - விரிவையும், கண்டை - சத்தநாதத்தையும், அக்கினி - பாசசங்காரத்தையுங் குறிக்கும்.

உபாங்கம்—அங்கத்தின் சார்பிலிருப்பது. அதாவது, வஸ்திரம், மாலை, ஆபரணம், ஆசனம் முதலியன. அவை, இவ்விடத்து புவன போகங்களைக் குறித்து நின்றன.

நண்ணிடுமுருவம் என்பது முதல் இவ்வொன்பது செய்யுளானும் முதல்வனுக்கு உருவத்திருமேனி யுண்டென்பதுபற்றிப் பிறர் கூறுங் குற்றங்களைப் பரிகரித்து அது வலியுறுத்தப்பட்டது. [சஎ.]

இறைவன் உருவத்திருமேனி யுடையனுயினும், அசிந்திதன் என்பதனைச் சுருதி வாக்கியங்களால் வலியுறுத்துகின்றது.

உலகினை யிறந்து நின்ற தரனுரு வென்ப தோரா
ருலகவ னுருவிற் றோன்றி யொடுங்கிடு மென்று மோரா
ருலகினுக் குயிரு மாகி யுலகுமாய் நின்ற தோரா
ருலகினி லொருவ னென்ப ருருவினை யுணரா ரெல்லாம்.

[கொ - டு.] அரன் உரு உலகினையிறந்து நின்றது என்பது ஓரார். அவன் உருவில் உலகு தோன்றி ஒடுங்கிடும் என்றும் ஓரார். உலகினுக்கு உயிருமாகி (நின்றது) ஓரார். உலகும் ஆய் நின்றது ஓரார். உருவினை யுணரார் எல்லாம் உலகினில் ஒருவன் என்பர்.

(போ - ரை.) இறைவன் வடிவமுடையனுயினும், வாக்கு மனுதீதன் என்பதற்கு உருத்திரன் வடிவம் உலகினைக் கடந்து நிற்றலால், வேதத்துள் உருத்திரன் உலகாதீதனென்று கூறுஞ் சுருதியினையும் உணரார். அவ்விறைவன் திருவுருவில் உலகந் தோன்றி ஒடுங்குமாதலால், உலக காரணனென்று கூறுஞ் சுருதியினையும் உணரார். உலகிற்கு உயிராய் நிற்றலால் உலகத்திற்கு அந்தரியாமி யென்றுகூறுஞ் சுருதியினையும் உணரார். உலகமாய் நிற்றலால் உலகரூபி என்று கூறுஞ் சுருதியினையும் உணரார். இங்ஙனங் கூறுஞ் சுருதிகள் சான்ருகவும் திருமேனியின் இயல் புணராதவர்கள் அச்சிவபிரானை உலகத்திலுள்ளார் கூறுங் கடவுளரில் ஒருவன் என்பர். (எ - று.)

மாயையிற்றேன்றி யொடுங்கு முலகம், அம்மாயைக்கு ஆதாரமாய் நின்ற முதல்வனுருவிற் றேன்றி யொடுங்கும் என்ருர். இது, கிழங்கினின்றும் தோன்றிய தாமரையை அக்கிழங்கிற் காதாரமாய் நின்ற சேற்றினின்றும் தோன்றியதெனப் பொருள்படும்படி பங்கயம் என்று கூறுவதனுலும் அறியப்படும். பங்கஜம் என்பது பங்கயம் என மருவிற்று. பங்கம்— சேறு. ஜம்—தோன்றுதல்.

இவ்வுண்மை யறியாது உலகவனுருவிற் றேன்றி ஒடுங்கிடும் என்றது கொண்டு முதல்வன் உலகிற்கு முதற்காரணமென மயங்கிக் கூறுவர் இதுபற்றிய சங்கை உத்தரங்கள் சிவஞானபோதச் சிற்றுரை விளக்கத்தில் விரித்துக் காட்டினும். அவற்றை அவ்விடத்துக் காண்க, [சஅ.]

சுருதி வாக்கியங்களை வலியுறுத்தும் புராண சரித்திரங்கள் கூறி அசிந்திதனென்பதனை வலியுறுத்துகின்றது.

தேவரி னொருவ னென்பர் திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்ற தோரார் முதலுருப் பாதி மாத
ராவது முணரா ராதி யரியயற் கறிய வொண்ணு
மேவுரு நிலையு மோரா ரவனுரு வினைவு மோரார்.

[கோ-டு] அரி அயற்கு அறிய வொண்ணு ஆதிமேவு உரு நிலையும் ஓரார். தேவர் மூவர் ஆய் திருவுரு நின்றது ஓரார். அவன் உரு வினை ம் ஓரார். முதல் உருப் பாதி மாதராவதும் உணரார். சிவனைத்தேவரு ளுன் ஒருவன் என்பர்.

(போ-ரை.) மேற்கூறிய நான்கு சுருதிகளையும் முறையே உறுதிப்படுத்துவனவாய் உலகாதீதனென்பதற்கு அரியும் அயனும் அடிமுடி தேடி அறியாவண்ணம் உயர்ந்த முதல்வன் திருவுருவின் நிலைகூறும் புராண வசனத்தினையும் உணரார். உலககாரணனென்பதற்கு மும்மூர்த்திகளுந் தன்னுறுப்பிற் றோன்றி நின்ற திருவுருவின் இயல்பு கூறும் புராண வசனத்தினையும் உணரார். உலகத்திற் கந்தரியாமி யென்பதற்கு அவ்விறைவன் வடிவிலே விளைந்த வண்ணமே உலகிற்கு விளைவு கூறும் புராண வசனத்தினையும் உணரார். உலக ரூபியென்பதற்குப் பாதி உரு உமையோடு கூடிய அர்த்தநாரீசுவர வடிவு கூறும் புராண வசனத்தினையும் உணரார். இங்ஙனங் கூறும் புராண வசனங்கள் சான்றாகவும் இவ்வுண்மை யறியாதவர் அச் சிவபிரானை ஏனைக் கடவுளரின் ஒருவன் என்பர். (எ - று.)

வடிவத்திற் பாதி சத்திபாகமாயிருப்பது சிவபிரான் ஒருவனுக்கேயன்றி ஏனைய கடவுளருக்கில்லை. உண்டென்பதற்குப் பிரமாணமுமில்லை.

உருவத் திருமேனிகளின் தொழில்களின் பயனிவை எனக்கூறி அசிந்திதனென்பதனை வலியுறுத்துகின்றது.

போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரித லோரார்
யோகியா யோக முத்தி யுதவுத லதுவு மோரார்
வேகியா னாற்போற் செய்த வினையினை வீட்ட லோரா
ரூகியா மூட ரெல்லா மும்பரி னொருவ னென்பர்.

(கோ - ௫.) வேகி ஆனாற்போல் செய்த வினையினை வீட்டல் ஓரார். யோகியாய் யோகமுத்தி யுதவுதலதவு மோரார்.

(போ - ரை.) முதல்வன் கொண்ட திருமேனிகள் போக வடிவம், கோரவடிவம், யோக வடிவம் என முத்திறப்படும். அவற்றுள், போக வடிவம் உயிர்கட்குப் போகம் புரிதற்பொருட்டென்பதனையு முணரார். கோரவடிவம் உயிர்கள் செய்த வினையினைக் கெடுத்தற் பொருட்டென்பதனையு முணரார். யோக வடிவம் உயிர்கட்கு யோகமுத்தி உதவுதற் பொருட்டென்பதனையு முணரார். இவ்வாறு திருமேனி கொள்ளும் முறைமையை ஆராய்ந்

தறியும் வலியில்லாரனைவரும் அம்முதல்வனைத் தேவரின் ஒரு வன் என்பர். (எ - று.) (ருo)

அங்ஙனம் மாறுபட்ட திருமேனி கொள்ளுதல் உயிர்களின் பொருட்டு ஆதலால் அசிந்திதனே என வலியுறுத்துகின்றது.

ஒன்றொடொன் றொவ்வாவேட மொருவனே தரித்துக்கொண்டு
நின்றலா லுலக நீங்கி நின்றன னென்று மோரா
ரன்றியவ் வேட மெல்லா மருள்புரி தொழிலென்றோரார்
கொன்றது வினையைக் கொன்று நின்றவக் குணமென் றோரார்

[**கோ - டு.**] ஒன்றொடு ஒன்று ஒவ்வா வேடம் ஒருவனே தரித்துக் கொண்டு நின்றலால் அன்றி[ய] அவ்வேட மெல்லாம் அருள்புரி தொழில் என்று ஓரார். கொன்றது வினையைக் கொன்று நின்ற அக் குணம் என்று ஓரார். உலகம் நீங்கி நின்றனன் என்றும் ஓரார்.

(**போ - ரை.**) அவ்வாறு போக வடிவும், கோரவடிவும், யோக வடிவுமாய்த் தம்முள் மாறுபட்ட பல வடிவம் ஒருவனே தரித்துக்கொண்டு நிற்றலால், மாறுபட்ட அப்பல வடிவங்களும் மேற்கூறியவாறு போகமும், வீடும், யோகமும் உதவுவதாகிய அநுக்கிரகம் ஒன்றற்கே ஏதுவாகுமென்பதையு முணரார். கொல் லுதலாகிய தீமை செய்வது வினையைக் கெடுத்து நன்மை பயத்த லாகிய நிலைபெற்ற குணமென்பதனையு முணரார். இங்ஙனம் உல கத்தில் வைத்து அறியப் படாத அதிசய நிலையன் என்பதனையு முணரார். ஆதலின், இவ்வதிசய நிலையும் அசிந்தித னென்பதற் குச் சான்று. (எ - று.)

மேல் சஅ-வது செய்யுளில் "உலகினை யிறந்துநின்ற தானுரு" எனக் கூறியதனை, இச் செய்யுளில் தம்முண் மாறுபட்ட பல வடிவம் ஒரு வனே தரித்துக் கொண்டு நிற்றலால் என ஏதுக்காட்டி இனிது விளக்கிய வாறுமாயிற்று. நிற்றல் என்றிருக்க வேண்டியது நின்றல்என மெலித்தல் விகாரமாயிற்று. அன்றியவ் வேடம என்றவிடத்து, அன்றிய அவ்வேடம் என்னும் பொருள்படப் பெயரெச்ச அகரவீறு தொக்கு நின்றது. அவ் வெச்சம் அவ்வேடம் என்னும் சுட்டுப் பெயர்கொண்டு முடிந்தது.

இவ்விரண்டு செய்யுளானும் அசிந்திதன் என்பதற்கு ஏதுக்காட்டிய வாறு. மாறுபட்ட வடிவந் தரித்தல் ஏது. மாறுபட்ட தொழில்களை

ஒருவன் மேற்கொள்ளுதல் கூடும். மாறுபட்ட வடிவத்தைக் கொள்ளுதல் கூடாது. அங்ஙனங் கொள்ளுதலால் அசிந்திதன் ஆவன். [கூக.]

இறைவன் திருமேனிகளும் அவற்றின் ஜெழில்களும் உயிர்களின் பொருட்டே என்பதை அநுபவத்தில் வைத்துக் காட்டி அசிந்தித னென்பதை வலியுறுத்துகின்றது.

நாயகன் கண்ண யப்பா ணயகி புதைப்ப வெங்கும்
பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தினலே சுடரொளி கொடுத்த பண்பிற்
றேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுருத் தேச தென்னர்.

[கோ - ௫.] நாயகி நயப்பால் நாயகன் கண்புதைப்ப, எங்கும் பாயிருள் ஆகி மூட, பரிந்து உலகினிற்கு தூய நெற்றி நேத்திரத்தினலே சுடர் ஒளி கொடுத்த பண்பின், தேயம் ஆர் ஒளிகளெல்லாம் சிவன் உருத்தேசது என்னர்.

(போ - ரை.) முதல்வி திருவுள மகிழ்ச்சியால் முதல்வனது திருக்கண் புதைத்த திருவிளையாட்டின்கண் எவ்விடத்தும் பாவிய இருளாகி மூடவும், கிருபையினல் உலகத்தினுள்ளார்க்குப் பரிசுத்தமாகிய நெற்றிக் கண்ணல் மிகுந்த பிரகாசத்தினைத் தந்தருளிய தன்மையினனே, உலகின்கணுள்ள ஒளிகளெல்லாம் அச்சிவபெருமான் திருமேனிப் பிரகாசமே என்பதனை உணரார். ஆதலின், இறைவன் கொள்ளும் அவ்வேடமெல்லாம் அருளைத் தருகின்ற தொழிலென்பதற்கு இந்நிகழ்ச்சியே சான்று. (எ-று.)

நயப்பு—மகிழ்ச்சி. பாய்தல்—பரத்தல். தேயம்—உலகம். (கூஉ.)

தொழிலுக்கு வேடம் உறுதியாய் வேண்டப்படு மெனக் கூறுகின்றது.

கண்ணுதல் யோகி ருப்பக் காமனின் றிடவேட் கைக்கு
விண்ணுறு தேவராதி மெலிந்தமை யோரார் மாரு
னெண்ணிவேண் மதனை யேவ வெரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப் பேரின்ப மளித்ததோரார்

[கோ - 6.] கண்ணுதல் யோகு இருப்ப வேட்கைக்குக் காமன் கின்றிட.

(போ - ரை.) நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான் யோகநிலையிலிருந்த விடத்துக் காமத்திற்குக் காரணமாகிய மன் மதனிருக்கவும், மேலிடத்திலுள்ள தேவர்கள் முதலியோர் காம வேட்கையின்றி மெலிவுற்றதும் அறியார். விட்டுணு அம்மெலிவு கெடும்படி கருதி, இறைவனிடத்து மன்மதனை ஏவுதல் செய்ய அம்மன்மதனை நெற்றிக் கண்ணை விழித் தெரித்து இமயமலை அரையன் பெற்ற உமாதேவியை மணந்து அவ்வுயிர்கட்குப் பே ரின்பத்தினை அருளிச் செய்ததும் உணரார். ஆகலின், பலவேறு வகைப்பட்ட அருள்புரி தொழிலும் அவ்வேடத்தை இன்றி யமையாமைக்கு இந்நிகழ்ச்சியே சான்று. (எ - று.)

மேல் ௪அ-வது செய்யுளில் உலகினுக்குயிருமாகி நிற்பன் என்றதை சிவபெருமான் யோகத்திருக்கும் பொழுது மன்மதனிருக்கவும் தேவர் முதலியோர் மெலிந்ததிருவிளையாடலாலும், மன்மதனைஎரித்து உமாதேவி யாரை மணந்து உயிர்கட்குப் பேரின்ப மளித்த திருவிளையாடலாலும் இனிது விளக்கியவாறும். அஃதாவது, இறைவன் உயிர்க்குயிராய் நிற்றலை அவன் தொழிற்படாதிருக்கும் பொழுது உயிர்கள் தொழிற்படாமை யினும், அவன் தொழிற்படும் பொழுது உயிர்கள் தொழிற்படுதலினும் வைத்து விளக்கிய வாறும்.

மேல் ருக-வது செய்யுளில், ஒன்றொடொன்றொவ்வா வேடம் ஒரு வனே தரித்துக் கொண்டு எனக் கூறி, யோக வடிவம், கோரவடிவம், போக வடிவம் ஒருவனே தரித்துக் கொண்டான் எனக்கூறிய இச்செய்யுளால் அதனை விளக்கியவாறு காண்க. இவையிரண்டு செய்யுளானும், அசிந்திதன் என்பதனைக் காட்சியளவையின் வைத்து வலியுறுத்திய வாறும். சீகண்ட ருத்திரர்க்குரிய வடிவங்களும், தொழில்களும், பெயர்களும் முதல்வனுக் கும் ஒப்ப உளவென்பது வாயு சங்கிதையுட் கூறப்படுதலின், இவ்விடத் துக் கூறியனவெல்லாம் மகாருத்திரனாகிய முதல்வனுக் குரியனவேயாமெ னக் கொள்க. ஆகலினுற்றான், இவ்விடத்துக் கூறிய வடிவங்களெல்லாம் மகேசுவர மூர்த்தம் இருபத்தைந்தனுள் வைத்தெண்ணப்பட்டன. [ருந.]

இறைவன் உருவத்திருமேனி கொள்ளாமலே இத்தொழி லனைத்தும் செய்யக்கூடாதோ வென்னும் ஐயத்தை நீக்கி இறை

வனுக்கு உருவத் திருமேனி இன்றியமையாது வேண்டப்படு மென்று கூறுகின்றது.

படைப்பாதித் தொழிலும் பத்தர்க் கருளும்பா வனையு நாலு
மிடப்பாக மாத ராளோ டியைந்துயிர்க் கின்ப மென்று
மடைப்பாலு மதுவு முத்தி யளித்திடும்; யோகும் பாசந்
துடைப்பாலுந்தொழிலுமேனிதொடக்கானேற்சொல்லொணதே

[கோ - ௫] படைப்பு ஆதித்தொழிலும், பத்தர்க்கு அருளும் பாவனையும், உயிர்க்கு என்றும் இன்பம் அடைப்பாலும் அதுவும், நூலும் மாதராளோடு இடப்பாகம் இயைந்து முத்தி அளித்திடும் யோகும், பாசம் துடைப்பாலும் தொழிலும், மேனி தொடக்கானேல் சொல்ல வொணதே.

(பொ - ரை.) "ஆரணமாகமங்கள்" என்னுஞ் செய்யுளிற் கூறிப் போந்தபடி உபதேச மாத்திரைக்கே யன்றி, படைப்பாகிய முதற்றொழிலுக்கு, வாதுளாகமத்திலோதியவாறே அசையும் பொருளும் அசையாத பொருளும் ஆகிய உலகங்கள் முதல்வனது திருமேனியில் ஒவ்வோருறுப்புக்களினின்று தோன்றுமாறு செய்யவேண்டுமாதலானும், பக்தர்களுக்கு இருவினை ஒப்பு வந்தவிடத்து அநுக்கிரகத்தின் பொருட்டுச் செய்யும் பாவனையாகிய மறைத்தற்றொழிற்கு நடனமியற்ற வேண்டுமாதலானும், உயிர்களுக்கு எக்காலத்தும் இன்பத்தைச் செய்வதாகிய திதிக்கு வேதாகமங்களை அருளிச் செய்யும் அருளாகிய உமாதேவியாரோடு இடப்பாகத்தே பொருந்த வேண்டுமாதலானும், முத்தியளிப்பதாகிய அநுக்கிரகத்திற்கு நிட்டையிருந்து காட்டவேண்டுமாதலானும், பாசநீங்கிய சங்காரத் தொழிற்குத் தோன்றின முறையே அவ்வவ் வுறுப்புக்களின் ஒடுக்க வேண்டுமாதலானும், இவ்வற்றிற்கும் அவ்வுருவத்திருமேனி முதல்வனுக்கு இன்றியமையாது வேண்டப்படும். (எ - று.)

நடனம்—ஊன நடனம், ஞானநடனம் என்றிருவகைப்படும். அவற்றுள் சிருட்டி, திதி, சங்காரம், அநுக்கிரம் என்னும் நான்கும் அறிவித்தற்றொழிலாயிருத்தலின் ஞானநடனம் எனவும், திரோபவம் மறைத்தற்றொழிலாயிருத்தலின் ஊன நடனம் எனவும் அறிந்து கொள்க.

திதி முதலிய ஐந்தொழில்களை வெளிப்படையாகக் கூறுதலால் படைப்பாதி என்பதற்குப் படைப்பு முதலியன வென்று கொள்ளாது, படைப்பாகிய ஆதித்தொழிலென்று கொள்க. பத்தர்க் கருளும் பாவனை என்பது, பத்தர்க்கு இருவினையொப்பு வந்தவிடத்து அருளுதற் பொருட்டுச் செய்யும் பாவனை எனத் திரோதானத் தொழிலை உணர்த்திற்று. அஃதாவது, இருவினையொப்பு வருதற் பொருட்டு அவ்வினைப் பயன்களில் அழுந்தி அநுபவிக்கச் செய்தல். இவ்வாறு செய்தல் அவனுக்கு இயல்பன்று. ஆகலின், பாவனையென்றார். அவனுக் கியல்பு கருணை செய்தலே யாம். இந்த மறைப்பும் கருணைக் கேதுவாதலின், கருணையெனப்படும்.

நூலும் என்பது, நூலைச் செய்யும் எனப் பொருள்படும்படி, நூல் என்னும் பெயரடியாகப் பிறந்த பெயரெச்ச வினையாகி, இடப்பாக மாதராளுக்கு அடையாயிற்று. உம்—பெயரெச்ச விகுதி. அவ்வெச்சம் இடப்பாகமாதராள் என்னும் பெயர்கொண்டு முடிந்தது. நூல்—வேதாகமம். அவற்றைச் செய்தற்குக் காரணம் அருள். ஆகலின், நூலைச் செய்யும் இடப்பாக மாதராள் என்றார். இவ்வாறன்றி, நூலும் என்றதை எண்ணும்மை யேற்ற சொல்லாகவே வைத்துத் தொழிலும், பாவனையும், நூலும், அதுவும், யோகும், தொழிலும் என்றெண்ணி உரைப்பினு மமையும், அவ்வாறுரைக்குங்கால் ஆரணமாகமங்களென மேல் சகூ-வது செய்யுளில் நூல் கூறப்பட்டமையின், அதனை ஈண்டுங் கூறுதல் குற்றமாகாதோவெனின், ஆகாது. எதனாலெனின். அவ்விடத்துக் குருசந்தானத்தோடு வைத்துக் கூறப்பட்டது. பிரித்துக் கூட்டலென்னு முத்தியினால், குருசந்தானத்தினின்றும் வேறு பிரித்துத் தொழில்களாகிய இவற்றோடு கூட்டினாராதலின் என்க.

பாசந்துடைப்பானுந் தொழில் என்றது, இவ்விடத்துத் தனு முதலியவற்றை ஒடுக்குதலாகிய சங்காரத்தின் மேல் நின்றது. அது, மேல் ௬க-வது செய்யுளில், "கொன்றது வினையைக் கொன்று நின்ற வக்குணம்" என்பதனாலறியப்படும். அடைப்பான் துடைப்பான் என்பன, பான் ஈற்று வினையெச்சமாய் நின்று, அடைப்பதற்கு, துடைப்பதற்கு என்னும் பொருள் கொண்டன. வினைமுற்றன்று. சிருட்டி, திதி, சங்காரம் திரோபவம், அநுக்கிரகம் என முறையே வையாது, செய்யுளாகலின், சிருட்டி, திரோபவம், திதி, அநுக்கிரகம், சங்காரம் என முறை பிறழ வைத்தார்.

இவ்வைந்தொழிற்குச் சிவனே கருத்தாவாகக் கூறுதலால், இவை யனைத்துஞ் சுத்த மாயையிற் றோன்றுங் காரியங்களை நோக்கிக் கூறிய

தென்றுணர்ந்து கொள்க. அசுத்தமாயை பிரகிருதிமாயைகளில் அநந் தர், சீகண்டர் வாயிலாகவும், சுத்த மாயையில் தான் நேராகவும் சிவன் கருத்தாவாவர். உலகினை என்பது முதல் இவ்வேழு செய்யுளானும், ௬எ-வது செய்யுளிற் கூறப்பட்ட அசிந்தனன்றே என்றதனை வலியுறுக் கும் வாயிலாய், அவ்வருட்டிருமேனியின் பேதங்களும், அத்திருமேனி களாலாய தொழில்களும், அத்தொழில்களாலாய பயனும், அத்திருமேனி கள் இன்றியமையாச் சிறப்பினவாமாறுந் தொகுத்துக் கூறப்பட்டன. (௬௪)

இறைவனுக்கு உருவத் திருமேனி உண்டாகவே அவ்வியைபு பற்றி அருவத் திருமேனியும் அருவுருவத் திருமேனியும் உண் டென்றும் அவையும் கருணையே யென்றும் கூறுகின்றது.

உருமேனி தரித்துக் கொண்ட தென்றலு முருவி றந்த
வருமேனி யதுவுங் கண்டோ மருவுரு வான போது
திருமேனி யுபயம் பெற்றோஞ் செப்பிய மூன்று நந்தங்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே.

(பொ - ரை.) மேற்கூறியவாறு உருவத் திருமேனி தரித் துக் கொண்டதென்ற மாத்திரையால், உருவமெனப்படுந் தூலப் பொருட் கெல்லாம் அருவமெனப்படுஞ் சூக்கும அவத்தை உண் டென்பது துணிபாதலின், அச்சற்காரிய வாதத்தின் இயல்புபற்றி உருவமொடுங்குதற்குக் காரணமாகிய அருவத் திருமேனியது உண்மையுங் கண்டாம். அவ்வருவமெனப்படும் சூக்குமப் பொ ருள் பின் உருவமெனப்படும் தூல வவத்தை யெய்தும்பொழுது அவ்விரண்டிற்கும் பொதுவாகியதொரு அவத்தையும் உண்டாம். ஆதலின், அதுபற்றி அருவுருவத் திருமேனியது உண்மையும் பெற்றாம். திருமேனி யெல்லாம் ஒரு தன்மைய வாகலின், இங் ஙனங் கூறிய மூன்று திருமேனியும் நமது பிறவிக்கேதுவாகிய மாயையின் உருவை ஒழித்தற்கு முதல்வன் கருணையினாற்கொண்ட வடிவே. (எ - று.)

மரம் எனப்படும் உருவம் வித்தின்கண் அருவமாயிருத்தலும், பின் னர் அருவத்தன்மை நீங்கி உருவமாய் வெளிப்படுதற்கிடையே உரு அரு இரண்டற்கும் பொதுவாக அங்குரமாதலும் காண்க. இதனானே, வினை

அருவம், அருவுருவம் ஆகிய இருதிருமேனிகளும் உண்டென்பதும், அவற்றதியல்பும், உருவத் திருமேனியோடு உளதாகிய சம்பந்தம் பற்றிச் சாதிக்கப்பட்டன. [ருரு.]

இறைவனுக்குக் கருணையாற் கொள்ளும் நினைந்ததொரு வடிவமேயன்றி எவற்றுடனும் கலந்து உடனாய் நிற்குமேதுவால் அத்துவாக்களும் வடிவமென்று உபசரித்து உரைக்கப்படும் எனக் கூறுகின்றது.

அத்துவா மூர்த்தியாக வறைகுவ தென்னை யென்னி
னித்தனாய் நிறைந்தவற்றி னீங்கிடா நிலைமை யானுஞ்
சித்துட னசித்திற் கெல்லாஞ் சேட்டித னாதலானும்
வைத்ததா மத்துவாவும் வடிவென மறைக ளெல்லாம்.

[கோ - ரு.] மறைகள் எல்லாம் அத்துவா மூர்த்தியாக அறைகுவது என்னையென்னின், நிறைந்து அவற்றின் நீங்கிடா நிலைமையானும் நித்தனாய் சித்துடன் அசித்திற்கு எல்லாம் சேட்டிதன் ஆதலானும் அத்துவாவும் வடிவு என வைத்தது ஆம்.

(போ - ரை.) இவ்விடத்துக் கூறியவாற்றால் முதல்வனுக்குக் கருணையினால் கொள்ளும் வடிவமேயன்றி மாயா வடிவம் இல்லையாயின், ஆகமங்களிலெல்லாம் அத்துவாக்களாறும் முதல்வனுக்கு வடிவமென்று கூறுதலெதுபற்றியெனின், முதல்வன் அவ்வத்துவாக்கள் முழுதினும் நிறைவுற்றுக் கலந்து எல்லாமாகி நிற்றலானும், பொருட்டன்மைபற்றி அவ்வத்துவாக்கள்போல் அழியாது அல்லனாய் நிற்றலானும், சடசித்துக்களை யெல்லாம் இயக்கி உடனுமாய் நிற்றலானும், அம்மூவகை இயல்புடைய முதல்வனுக்கு, அம்முதல்வனது திரோதான சத்தியின் சம்பந்தத்தால், அத்துவாவும் வடிவமென உபசரித்துக்கூறப்படும்.

அத்துவாவும் என்னும் உம்மை உபசார வடிவம் என்பது உணர்த்தி நின்றது. [ருசு.]

இரண்டு செய்யுளால் இறைவனுக்கு அத்துவாக்களுள்ளும் மந்திர வடிவம் சிறந்ததென்பதற்கு ஏதுக் கூறப்படுகின்றது.

மந்திர மத்து வாவின் மிகுத்தொரு வடிவ மாகத்
தந்ததெ னரனுக் கென்னிற் சகத்தினுக் குபாதா னங்கள்
விந்துமோ கினிமான் மூன்று மிவற்றின்மே லாகி விந்துச்
சிந்தையா ரதீதமான சிவசத்தி சேர்ந்து நிற்கும்.
சுத்தமாம் விந்துத் தன்னிற் றோன்றிய வாத லானுஞ்
சத்திதான் பிரேரித் துப்பின் றானதிட் டித்துக் கொண்டே
யத்தினுற் புத்தி முத்தி யளித்தலா லரனுக் கென்றே
வைத்தவா மந்திரங்கள் வடிவென மறைக ளெல்லாம்.

[கோ - ௬.] அரனுக்கு அத்துவாவின் மந்திரம் ஒரு வடிவமாக மிகுத்துத் தந்தது என் என்னின், சகத்தினுக்கு உபாதானங்கள் விந்து மோகினி மான் மூன்றும். இவற்றின் மேலாகி விந்து சிந்தை ஆர் அதீதம் ஆன சிவசத்தி சேர்ந்து நிற்கும். சுத்தம் ஆம் விந்துத் தன்னில் தோன்றிய ஆதலானும், சத்திதான் பிரேரித்துப் பின் தான் அதிட்டித்துக் கொண்டே அத்தினுல் புத்தி முத்தி அளித்தலால் மறைகள் எல்லாம் அரனுக்கு மந்திரங்கள் வடிவு என வைத்த என்றே ஆம்.

(போ - ரை.) முதல்வனுக்கு அத்துவாக்களுள்ளும் மந்திர வடிவத்தை ஒப்பற்ற வடிவமாகச் சிறந்தெடுத்தோதிய தென்னையெனின், உலகிற்கு முதற் காரணங்கள் சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூன்றாகும். இம்மூன்றனுள், மேலாகிய சுத்தமாயையின்கண் மனத்தால் நினைப்பதற்கு அருமையாகிய அதீதமெனப்படும் சிவசத்தி சேரப்பட்டு நிற்றலானும், சுத்தமாயையாகிய அவ்விந்துவில் மந்திரங்கள் முதலாவதாய்த் தோன்றிய தலைமையுடையன வாதலானும், அம்மந்திரங்களைச் சாதகராவார் கணிக்குமாறு அச்சிவசத்தி செலுத்திக் கணித்தபின் பயன் கொடுத்தற்பொருட்டு அம்மந்திரங்களை வாயிலாகக் கொண்டு கணித்த அதனுல் போகம் வீடுபேறுகளாகிய பயன் கொடுத்தலானும், அவைபற்றி ஆகமங்களிலெல்லாம் முதல்வனுக்கு மந்திர வடிவம் விசேட உரிமையாகக் கூறியனவேயாம். (எ - று.)

சகத்தினுக் குபாதானங்கள் விந்து மோகினி மான் என்றது, மேல் கக-வது செய்யுளிற் கூறிய பொருளாயிருப்பவும், விந்துவினிடத்துச்

சிவசத்தி சேர்ந்து நிற்றலால் எனக் கூறவேண்டுவதற்காக அநுவாதமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. சிந்தை ஆரீதம் என்றவிடத்து ஆரீதம் என்பது அருமையாகிய அதீதம் என்னும் பொருள் குறித்த பண்புத் தொகை. சேர்ந்து என்பது சேரப்பட்டு என்னும் பொருள் குறித்தது. மந்திரங்கள் விந்துத் தன்னிற் றோன்றின வென்பது, மேல் கக-வது செய்யுளில் "விந்துத் தன்பால் வைகரியாதி முந்திடும்" எனக் கூறியவாற்றானறிக. வாக்குக்களும் மந்திரங்களும் ஒலிவடிவாகலின், வாக்குக்கள் சுத்த மாயையின் காரியமாதல்போல, மந்திரங்களும் சுத்த மாயையின் காரியமாதல் காண்க.

பிரேரித்தலாவது, மந்திரத்தைக் கணிக்கும் சாதகராவார் கணிக்குமாறு செலுத்துதல். அதிட்டித்தலாவது, அவ்வாறுகணித்தபின் கணித்தவர்க்குப் பயன் கொடுத்தற் பொருட்டு மந்திரங்களை வாயிலாகக் கொள்ளுதல். எனவே, மந்திரங்களைக் கணிப்பவர்க்கு அவற்றை வாயிலாகக் கொண்டு சிவசத்தி பயன்றருமென்றவாறாயிற்று. மந்திரங்களோடு ஏனைத் தேவர்கட்கும் உரிமையிருப்பினும், சிவனுக்கு விசேட உரிமையாதல்பற்றி "அரனுக்கன்றே வைத்த" என்றார். விசேட உரிமையாதல் எதுபோலுமெனின், உத்தியாக சத்திகளோடு அவ்வுத்தியோகங்களைச் செய்பவரனைவர்க்கும் உரிமையிருப்பினும், அவ்வுரிமை சுதந்திரமாயின்மையின், அவற்றோடு அரசனுக்குள்ள சுதந்திர வுரிமைபோலும் என்க. [ரு எ, ரு அ.]

இறைவனுக்கு மந்திரவடிவுள்ளும் பஞ்சப்பிரமமந்திரவடிவம் சிறந்ததென்பதற்கு ஏதுக் கூறுகின்றது.

மந்திர மதனிற் பஞ்ச மந்திரம் வடிவ மாகத்
தந்திரஞ் சொன்ன வாறிங் கென்னெனிற் சாற்றக் கேணீ
முந்திய தோற்றத் தாலு மந்திர மூலத் தாலு
மந்தமில் சத்தியாதிக் கிசைத்தலு மாகு மன்றே.

[**கோ - டு.**] தந்திரம் மந்திரம் அதனில் பஞ்ச மந்திரம் வடிவமாக இங்கு சொன்னவாறு என் எனின், சாற்ற நீ கேள். முந்திய தோற்றத்தாலும் மந்திர மூலத்தாலும் அந்தம் இல் ஆதிசத்திக்கு இசைத்தலும் ஆகும் அன்றே.

(போ - ரை.) ஆகமங்களில் இறைவனுக்கு மந்திர வடிவுள்ளும் பஞ்சப் பிரம மந்திர வடிவத்தை ஒப்பற்ற வடிவமாகச் சிறந்தெடுத் தோதியதென்னையெனின், கூறுதும். நீ கேட்பா

யாக. அப்பஞ்சப் பிரம மந்திரம் ஏனைய மந்திரங்கட் கெல்லாம் முற்படத் தோன்றியதானும், மூலமாதலானும், அம்மந்திரங்களைச் செலுத்தி நிற்கும் அழிவில்லாத ஆதியாகிய திரோதான சத்திக்கு முற்படப் பொருந்துவதாகிய உபசார வடிவாதலானும் அங்ஙனம் கூறியது என்க. (எ - று.)

தந்திரம் என்பது ஆகமம். இவ்வாறு கூறிய அத்துவாமூர்த்தி, மந்திர மூர்த்தி, பஞ்சப் பிரம மூர்த்திகளெல்லாம், அத்துவா, மந்திரம், பஞ்சப் பிரமமாகிய அவற்றைச் செலுத்தி நிற்கும் திரோதான சத்திக்குப் பொருந் தச்செய்த வுபசார வடிவென்று கூறவேண்டி,இம்மூன்றனையுங் கூறிமுடித்த இச்செய்யுளினிறுதியில் " சத்தியாதிக் கிசைத்தலுமாகும்" எனக் கூறினார்.

ஆதிசத்தி என்பது சத்தி ஆதி என நின்றது. அவ்விடத்து இரு பெயரொட்டுப் பண்புருபு தொக்கு நின்று, ஆதியாகிய சத்தி என்னும் பொருள் தந்தது. ஆதி சத்தி எனினும் திரோதான சத்தி எனினும் ஒக்கும். இசைத்தலும் என்றவிடத்து உம்மை சிறப்பு.

அத்துவாமூர்த்தி என்பது முதலாக இவை நான்கு செய்யுளானும் முதல்வனுக்கு அத்துவாக்களும், மந்திரங்களும், பஞ்சப்பிரம மந்திரங்களும் உபசாரத் திருமேனி என்பது கூறப்பட்டது. அருவமோ என்னுஞ் செயயுள் முதல் இதுவரையும் திருமேனியினியல்பு கூறும் முறையில், அத்திருமேனிக ளெல்லாம் கருணை காரணமாகவும், உபசாரமாகவும் ஆயினவாகலின், அநாதி முத்த சித்துருவாதலை விளக்கிக் காட்டியவாறு.

அவ்வாறாயின், பிரமன் முதலியோரையும் அத்துவாமூர்த்திகளாக வைத்து அவரவர் எல்லையளவும் அவரவர் வடிவில் அத்துவநியாசஞ் செய்யு மாறும் ஆகமங்களின்விதித்தலின், அயன் முதலியோருருவும் அரனுருவோ டொக்குமோ என்னும் ஆசங்கைக்குச் சமாதானம் வருஞ் செய்யுளிற் பெறப்படும்.

இவ்வாறு:மண்ணினிற்கடாதி என்பதுமுதல் மந்திரமதனில் என்பது வரை ௩௪-செய்யுளானும், முதற் செய்யுளில் " ஈறுமாகி மருவிடுமநாதி முத்த சித்துருமன்னி நின்றே" என்ற இரண்டாங்கூற்றை அவ்வவர் மதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து வலியுறுத்தி, இனி மூன்றாங் கூற்றை அவ்வாறு வலியுறுத்தத் தொடங்குகின்றார். [௫௧.]

இரண்டாம் அதிகரணம் முடிந்தது.

மூன்று மதிகரணம்.

தான் முதல் என்பது.

அரனுடைய சத்தி ஒவ்வொன்றே பிரமனாதியோரிடத்தும நிற்றலால் அரனே முதலெனவும், அவ்வரனுக்குப் பிரமனாதியோர் வேண்டப்படுவரெனவும் கூறுகின்றது.

அயன்றனை யாதி யாக வரனுரு வென்ப தென்னை
பயந்திடுஞ் சத்தியாதி பதிதலாற் படைப்பு மூல
முயன்றன ரிவரே யாயின் முன்னவ னென்னை முற்று
நயந்திடு மவனி வர்க்கு நண்ணுவ தொரோ வொன்றுமே.

(கொ - டு.) இவரே முயன்றனர் எனவும், ஒரோ ஒன்று நண்ணுவது ஆமே எனவுங் கூட்டுக.

(போ - ரை.) பிரமனுடைய அழகிய உருவம் விட்டுணுவினுடைய உருவம் முதலியவற்றையும் அரனுருவோடொத்த வுருவாக வைத்து, வேதாகமங்களில் அவரவர் எல்லையளவும் † அத்துவநியாசம் ‡ மந்திரநியாசம் முதலாயின விதித்தலின், அரனாகிய சங்காரக் கடவுளோடொப்ப அவரும் முதல்வராவார்போலுமென மலையவேண்டாம். படைப்பாதி தொழில் செய்யும் செனனி முதலிய சிவ சத்திகள் ஒரோவொன்று பிரமனாதியோர் மாட்டுப் பதிந்து நின்று செலுத்துதலால், அச்சத்தி பதிந்திருக்குமியைபு பற்றி வேதாகமங்களில் அரனோடொப்ப வுபசரித்து ஓதப்பட்டன. சத்தி பதிந்திருக்குமதனால், படைப்பாதி தொழிலை அயன், அரி முதலாயினாரே முதல்வனருளின்றியும், தாம் தாம் நினைந்தவாறு செய்வரென்று கூறின், முதல்வன் எதற்காக வேண்டும்? வேண்டுவதின்றாம். ஆகலின், அமைச்சர் முதலாயினார்க்கு அரசனையின்றிச் செல்லாமைபோல, அயனரி முதலாயினார்க்கு அரனருளை யின்றிச் செல்லாது. ஆயின், ஐந்தொழிலுஞ்

---

† அத்துவநியாசம் - அத்துவசோதனை. ‡ மந்திரநியாசம் - மந்திரவைப்பு.

செய்யும் அம்முதல்வன் அத்தொழிலனைத்துந் தான் செய்யாது, அயனரி முதலாயினர்க்கு ஒவ்வொரு தொழிலியற்றச்செய்தலின், அரசனுக்கு அமைச்சர் முதலாயினர் போல முதல்வனுக்கு அயனரி முதலாயினரும் வேண்டப்படுவர். (எ - று.)

அவ்வாறுயின், படைப்பு முதலிய ஒவ்வொரு தொழிற்கும் பிரமன் முதலியோரும், சிவபெருமானும் மேண்டுமென்றாகுமே. ஆகுங்கால், ஒரு தொழிற்கு இருவர் எதற்காக வேண்டுமென ஆசங்கை நிகழும். அவ்வாறு ஆசங்கிப்பாரை நோக்கி, அமைச்சர் முதலாயினர்க்கு அரசனாணையின்றித் தத்தம் அதிகாரம் செல்லாதவாறுபோல, அயனரி முதலாயினர்க்கு அரனருளையின்றிச் செல்லாதெனத் தருக்க முகத்தால் விளக்கவேண்டி "படைப்புமூல முயன்றனரிவரேயாயின் முன்னவனென்னை" என்றும் அரசனுக்குத் தன்னாணைவழி நின்று காரியத்தை நடத்துதற்பொருட்டு அமைச்சர் முதலாயினர் வேண்டப்படுமாறுபோல, அரனுக்குத் தன்னாணைவழி நின்று சிருட்டி முதலியவற்றை நடத்தும் அயனரி முதலாயினரும் வேண்டப்படுவரென்பது ஏது முகத்தால் விளக்கவேண்டி "முற்று நயந்திடு மவனிவர்க்கு நண்ணுவதொரோவொன்றாமே" என்றுங் கூறினர். முன்னவனென்னை என்பது தருக்கம். நண்ணுவதொரோவொன்று என்பது ஏது.

அரசு அமைச்சு உவமை இச் செய்யுளிலில்லை. அடுத்துவரும் செய்யுளில் பெறப்படுமாதலின், வருவித்துரைக்கப்பட்டது. அரசனுக்கு அமைச்சர் முதலாயினோரும், அமைச்சர் முதலாயினோர்க்கு அரசனும் வேண்டப்படுவரென்னுமிது ஒன்றையொன்று பற்றுதலென்னுங் குற்றமாகாதோவெனின், ஆகாது. என்னை? அரசனுக்கு அமைச்சர் முதலாயினோர் கருவியாக வேண்டப்படுவர். அமைச்சர் முதலாயினோர்க்கு அரசன் கருத்தாவாக வேண்டப்படுவனாதலினென்க. இவ்வாறே பொருளினுங் கண்டுகொள்க.

ஐ அழகு. அவ்வழகு ஆகுபெயரால் அழகுடையுருவத்தின் மேல் நின்றது. இரண்டாம் வேற்றுமையுருபாக வைத்துரைப்பின், முடிக்குஞ் சொல்லாகிய அரனுருவென்பதனோடு பொருந்தாமை காண்க. ஆகவரனுருவென்பது அரனுருவோடொத்த ஆகம் எனப்பொருள் குறித்த உவமைத்தொகை. இது, அரவின்பைபோலும் அல்குல் எனற்பாலது, பையரவல்குல் என வருதல் போலும். ஆகம் - உடம்பு. பயத்தல் - படைத்தல். படைப்பு மூலம் - படைப்பாதி. பயந்திடுஞ் சத்தியாதிபதிதலை, பதிதலெனப் பிரித்துவைத்துக்கூறுகின்றமையின், இவரே என்னும் ஏகா

ரம் அச் சத்திகளையுடைய சிவனைப் பிரித்துக்காட்டிற்று. எனவே, சத்திபதிதலினால் அயன் முதலியோருக்குச் சிருட்டி முதலிய தொழிலும், சத்தியே வடிவாய் நிற்றலால் சிவனுக்குச் சிருட்டி முதலிய தொழிலும் உளவென்பதறிக.

மேல் ௩௪-வது செய்யுளிலும் இதே விஷயம் கூறப்பட்டுள்ளது. ஆயினும் கூறியது கூறலாகாது. எதனாலெனின், அச்செய்யுள், சிருட்டி முதலிய தொழில்கள் அயன் முதலியோருக்குச் சுதந்திரமாயுளவெனக்கூறும் பௌராணிகரை நோக்கி, அத்தொழில்கட்கும் சிவனுக்கும் சம்பந்தம் இல்லை யென்பது மாத்திரம் நீக்கிச் சங்காரக் கடவுளே தோற்றுவிப்பன் என்பதை வலியுறுத்தியது. இச்செய்யுள், அயன் முதலிய கடவுளர் பலருளராதல்பற்றி அநேகேசுரவாதங் கூறுவாரை நோக்கி, அயன் முதலியோர்க்குச் சிருட்டி முதலியவற்றில் சம்பந்தம் இல்லையெனக் காட்டிச் சிவனொருவனே முதலென்றதனை வலியுறுத்தியதாகலினென்க.

அவ்வாறாயின், அநேகேசுரவாதத்தை மறுத்தற் பொருட்டு அயன் முதலியோரிடத்து ஒவ்வொரு சத்திபதியும், சிவன் எல்லாச் சத்திகளுமுடையன் எனச் சத்திக்குப் பன்மை கூறவே, சத்திமான் ஒருவனாதல் செல்லாதாகலின், இது தேளுக்கஞ்சிப் பாம்பின்வாயில் விழுந்தாலொப்ப மீண்டும் அநேகசுரவாதமாய் முடியுமே என்னும் ஆசங்கைக்குச் சமாதானங் கூறுதற்கெழுந்ததுவருஞ் செய்யுள். (௬௦.)

சிருட்டியாதி பல சத்திகள் உளவெனவே அச் சத்திகளையுடைய சத்தன் பலவாமெனப்பட்டு அநேகேசுர வாதமாகாதா என்பாரை மறுத்து உவமை முகத்தால் சிவசத்தி ஒன்றின் தடத்தமே பல சத்திகளாதலின், அரன் ஒருவனே எனக் கூறுகின்றது.

சத்திதான் பலவோ வென்னி ற்றுனொன்றே யநேக மாக
வைத்திடுங் காரி யத்தான் மந்திரி யாதிக் கெல்லா
முய்த்திடு மொருவன் சத்தி போலரனுடைய தாகிப்
புத்திமுத் திகளை யெல்லாம் புரிந்தவ னினைந்த வாறும்.

(கோ - 6.) சத்திதான் பலவோ என்னின், ஒருவன் சத்தி மந்திரியாதிக்கு எல்லாம் உய்த்திடும்போல் அரனுடையதாகி தான் ஒன்றே காரியத்தால் அநேகமாக வைத்திடும். புத்தி முத்திகளை யெல்லாம் புரிந்து அவன் நினைந்தவாறு ஆம்.

(போ - ரை.) மேற்கூறியவாறு இறைவனுக்குச் சத்திகள் அநேகமோ என்றிடின், அன்று. அரசன் சத்தி ஒன்றே அமைச்சர், படைத்தலைவர், தண்டக்காரர் முதலாயினார் மாட்டு நின்று செய்யுங் காரிய வேறுபாட்டால் பல வேறு வகைப்பட்டாற் போல, சிவசத்தி ஒன்றே பிரமன் முதலாயினார் மாட்டு நின்று செய்யுங் காரிய வேறுபாட்டால் செநநி முதலியவாய்ப் பல வேறு வகைப்படும். ஆயினும் சிவசத்தியொன்றே யென்பதும், அதுவே பல கடவுளர் மாட்டு நின்று நடாத்துமென்பதும், அமைச்சர் முதலாயினார் எவை எவை செய்யினும் அரசன் நினைந்தவாறன்றி ஆகாமைபோல, போக மோக்ஷங்களெல்லாம் கருணையினால் அவ்வரன் நினைந்தவாறன்றி ஆகாமையின் வைத்தறியப்படும். (எ-று.)

அரன் நினைந்தவாறன்றி அயன் முதலியோருக்கு ஒன்றும் ஆகாமை, சிவபெருமானுடைய திருவுள்ளத்துக்கு மாறாகச் செய்த தக்கன் வேள்வி முற்றுப்பெறாமையினும், சிவபெருமானது திருவுள்ளத்தோடு ஒன்றுபட்டு நின்ற மார்க்கண்டரது வாழ்நாளினும், சிவபெருமானை வணங்காது சென்று கடைந்ததினால் உண்டான விடத்தோற்றத்தினும், இவை போன்ற பிறவற்றினும் இனிது விளங்கக்கிடத்தலின் வகுத்துக் கூறாராயினார். (சுக.)

மேல் சிவ சத்தியின் தடத்தங் கூறினமையால் இது அச்சிவசத்தியின் சொரூபம் கூறுகின்றது.

சத்திதன் வடிவே தென்னிற் றடையிலா ஞான மாகு
முய்த்திடு மிச்சை செய்தி யிவை ஞானத் துளவோ வென்னி
னெத்திற ஞான முள்ள தத்திற மிச்சை செய்தி
வைத்தலான் மறைப்பின் ஞானன் மருவிடுங் கிரியையெல்லாம்

(கோ - டு.) சத்திதன் வடிவு எது என்னின், தடையிலா ஞானமாகும். [தடை செய்யும் ஞானம்] உய்த்திடும். இச்சை செய்தி இவை ஞானத்து உளவோ என்னின், ஞானம் எத்திறம் உள்ளது அத்திறம் இச்சை செய்தி வைத்தலால், கிரியை யெல்லாம் மறைப்பு இல் ஞானன் மருவிடும்.

(போ-ரை.) ஒன்றாகிய சிவசத்தியின் சொரூபம் யாதெனின், உயிர்கட்கு அனுக்கிரகம் மாத்திரங் குறித்து, அதற்கு வேண்டுவனவற்றைச் சிறப்பு வகையால் தானறியாமலும், உயிர்க்கு

அறிவிக்காமலும், பொது வகையால் தான் அறிந்தும், உயிர்க்கு அறிவித்தும் நிற்பதாகிய ஞானம் ஒன்றேயாம். அந்த ஞானமே பராசத்தி எனப்படும். அந்த ஞானம் உயிர்கட்கு மல பரிபாகம் வருதற்பொருட்டு ஐந்தொழில் செய்தலைக் குறித்துச் சிறப்பு வகையான் வியாபரிக்குங்கால் ஒரு கூற்றானே திரோதான சத்தி என நின்று இச்சா ஞானக்கிரியை என முத்திறப்பட்டுத் தொழிற்படும். அவ்வாறாயின், இச்சை கிரியை என்கின்ற இவைகள் ஞானத்தினின்றுந் தோன்றுவனவோ எனின், ஞானம் எவ்வாறுளதோ அவ்வாறே இச்சை கிரியைகளும் நடத்தலின், அவ்விரண்டும் ஞானத்தின் வியாபார விசேடங்களேயன்றி வேறு தோன்றுவனவல்ல. ஆதலால், காரியத்தால் அநேகமாகிய செநநி முதலிய வியாபார சத்திகளெல்லாம் முற் கூறப்பட்ட பராசத்தி ரூபமாகிய தடைசெயா ஞானம் ஒன்றால் உளவாவனவேயாம். (எ-று.)

தடை-தடுத்தல். அதாவது மறைப்பு. மறைத்ததற்குச் செயப்படுபொருள் அநுக்கிரகம். எனவே, தடுக்கப்படாத அநுக்கிரகமென்றவாறும். தடையிலா ஞானம் என்றதனால், தடை செய்யும் ஞானமும் உண்டென்பது பெறப்படுதலின், அதுவே திரோதான சத்தி எனப்படும். ஞானத்துளவோ என்றவிடத்து, ஞானத்தினின்றும் உளவோ என்னும் பொருள்பட இன் உருபு விரித்துரைக்க. உள என்பது தோன்றுதல் என்னும் பொருள் குறித்தது.

செநநி முதலியனபோலத் தோன்றினவல்ல எனக்கூறவேண்டி, எத்திற ஞானமுள்ள தத்திறமிச்சை செய்தி என்றார். எனவே, ஞானத்தின் வியாபார விசேடங்களே இச்சை கிரியை என்பதாம். "‡ நீடு பராசத்தி நிகழிச்சா ஞானநிறை கிரியைதர" என்றதும். "¶கிரியையறிவிச்சை யிளந்த சத்தி யேதோ - பெரிய பராசத்தி யெனப் பேசாய்" என்றதும் ஞானத்தின் வியாபார விசேடங்களே இச்சை கிரியை என்னும் கருத்துப்பற்றி யென்க. ஞானம் என்பது அம் கெட்டு ஆல் உருபேற்று ஞானால் என நின்றது. அம் கெடுதல் "† பெற்றொன்றுயர்த்த பெருமான்" "கோணகணையான்" என்பனவற்றுள்ளுங் காண்க. இவற்றுள், பெற்றம் என்றதும், கோணகம் என்றதும் அம் கெட்டு நின்றன.

¶ சிவப்பிரகாசம், பொதுவதிகாரம். செ-உ. ‡ துகளறுபோதம். செ-௬௨.

† திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம். திருப்பாசுரம். செ-௧௧.

ஞானல் என்பதற்கு இவ்வாறு கூறுதலேயன்றி, ஞானத்தால் என்னும் பொருள்பட அத்துச் சாரியை தொக்கு நின்றது எனினும் அமையும். கிரியை என்பது வியாபாரம்.

இதனால், பராசத்தி, திரோதான சத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியா சத்தி என ஐந்து சத்திகள் இறைவனுக்கு உண்டென்றும், அவற்றுள் பராசத்தி ஒன்றே சொரூபமென்றும், ஏனைய நான்கும் அவற்றின் வியாபார பேதமாகிய சொநி முதலிய சத்திகளும் தடத்தமென்றும் அறிக. பொது வகையால் அறிதல் - அநுக்கிரக மாத்திரங் குறித்து நிற்றல். சிறப்பு வகையால் அறிதல் - சிருட்டி முதலிய நான்கு தொழிலேயுங் குறித்து நிற்றல். இவை, முறையே உபகாரஞ் செய்யவேண்டுமென்றெண்ணுதலும், இன்னவிதஞ் செய்யவேண்டுமென் றெண்ணுதலும் போலவாம்.

பராசத்தி ஒன்றென்பதும், அதுவே வியாபார பேதத்தால் இச்சா ஞானக்கிரியை என முத்திறப்படுமென்பதும், வியாபார பேதத்தால் உயிர்கட்குண்டாம் பயனிவை யென்பதும் இச் செய்யுளாற் கூறப்பட்ட பொருளென்பது வருஞ் செய்யுளிற் பெறப்படும். (சுஉ.)

சிவசத்தி ஒன்றே சிறப்பு வகையாய்த் தொழிற்படுதலால் உயிர்கட்கு உண்டாம் பயன் கூறுகின்றது.

ஒன்றதா யிச்சா ஞானக் கிரியையென் றொருமூன்றாகி
நின்றிடுஞ் சத்தி யிச்சை யுயிர்க் கருணேசமாகு
நன்றெலா ஞான சத்தி யானயந் தறிவ னாத
னன்றருட் கிரியை தன்னா லாக்குவ னகில மெல்லாம்.

(சொ - ௫.) சத்தி ஒன்றதாய் இச்சா ஞானக் கிரியை என்று ஒரு மூன்றாகி நின்றிடும். இச்சை உயிர்க்கு அருள் (நாதன்) நேசம் ஆகும். ஞானசத்தியால் நன்று எலாம் (நாதன்) நயந்து அறிவன். அருட்கிரியை தன்னால் அன்று அகிலமெல்லாம் நாதன் ஆக்குவன்.

(பொ - ரை) பராசத்தியாவது தடையிலா ஞானமெனப் பொதுமையால் ஒன்றாய், இச்சா ஞானக் கிரியை என வியாபார பேதத்தால் மூன்றாய், அவையே மற்றும் அவ்வக் காரிய பேதத்தால் பலதிறப்படும். அம்மூன்றனுள் இச்சாசத்தியாவது, உயிர்கட்கு மலத்தை நீக்கிச் சிவாநுபவத்தைத் தருதற்பொருட்டு

முதல்வனிடத்து உளதாகிய கருணையாம். ஞானசத்தியால் சிவப்பேறாகிய அதற்குச் செய்யக் கடவதான உபாயங்களையெல்லாம் முதல்வன் விரும்பி அறிவன். அருளின் வேறல்லாத கிரியா சத்தியால் அறிந்த அவற்றை அறிந்தவாறே முதல்வன் சங்கற்பித்துச் செய்வன். (எ - று.)

நன்று என்பது ஒருமை. எலாம் என்பது பன்மை. நன்றெலாம் என்பது ஒருமைப் பன்மை மயக்கம். இது $ "உள்ளிய தெல்லாம்" என்றாற்போல. நன்மை—உபாயம். அன்று—அறிந்தபோதே.

அயன்றனையாதியாக என்பது முதல் இவை நான்கு செய்யுளானும் அயன் முதலியோருருவத்தை அரனுருவோடொப்ப வைத்து நியாசம் செய்தல் பற்றியும், சத்தி பலவாதல்பற்றியும், சிவனொருவனே முதற்கடவுள் என்றல் செல்லாதென்னும் அநேகேசுரவாதி மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து சிவன் முதலென்றது வலியுறுத்தப்பட்டது. (சு௩.)

இச்சை ஞானம் கிரியை என்னும் மூன்று சத்திகளும் சீவனுக்கும் உளவாதல் பற்றிச் சீவன் சிவனை ஒப்பாகான் எனக் கூறுகின்றது.

சீவனு மிச்சா ஞானக் கிரியையாற் சிவனை யொப்ப
னுவனென் றிடின நாதி மலமிவற் றினை மறைக்குங்
காவல னிவன்செய் கன்மத் தளவினிற் கொடுப்பக் காண்பன்
பாவியாம் புத்தி முத்திப் பயன்கொளும் பண்பிற் றாகும்.

(கொ - பு.) இச்சா ஞானக் கிரியையால் சீவனும் சிவனை ஒப்பன் ஆவன் என்றிடின், இவற்றினை அநாதி மலம் மறைக்கும்.

(பொ-ரை.) இச்சா ஞானக் கிரியையாகிய மூன்று சத்திகளும் முதல்வனோடொப்ப உயிர்க்கும் உளவாம். அதுகொண்டு உயிர்களும் முதல்வனோடொக்குமோ எனின், அன்று. உயிர்களின் இச்சாஞானக் கிரியைகளைக் கேவலாவத்தையில் அநாதியாகிய ஆணவ மலம் மறைக்கும். பின்னர்ச் சகலாவத்தையில் உயிர்கள் தாம் செய்கின்ற கன்மத்தளவிற் கேற்ற பயனை முதல்வன் கொடுக்கப்பெற்று ஒன்று அனுபவிக்குங்கால் பிறிதொன்றை அனுபவிக்கமாட்டாமல் ஏகதேசப்பட்டு அனுபவிக்கும். சுத்தா

$ திருக்குறள்-வெகுளாமை. செ. ௯.

வத்தையில் முத்திப்பயனும், சகலாவத்தையில் கன்மத்தால் வரக்கடவதாய போகப்பயன் போல் முதல்வன் கொடுப்பவே கொள்ளும் உரிமையுடையனவாம். ஆதலால், இத்தன்மைகளில்லாத முதல்வனுடைய இச்சாஞானக் கிரியா சத்திகளுக்கும், இத்தன்மைகளையுடைய சீவனுடைய இச்சாஞானக் கிரியாசுத்திகளுக்கும் வேற்றுமை பெரிதாகலின் ஒப்புமையாகாவாம். (எ - று.)

பாவி என்பது வரக்கடவதென்னும் பொருள் குறித்த வடசொல்.

புத்தி முத்தி என்றவிடத்து, புத்தி போல் என்னும் உவம வுருபு தொக்கு நின்றது. இவ்வாறு புத்திபோல் முத்திப்பயன் என்றுரையாமல் புத்தி முத்திப்பயன் என உரைக்கின், கன்மத்தளவினிற் கொடுப்பக் காண்டலும் புத்திப்பயனுதலின், கூறியது கூறலாய் முடியும்.

இச்செய்யுளால், இச்சாஞானக் கிரியை யுடைமைபற்றிச் சீவனும் சிவனோடு சமமாகும் என்னும் சிவசமவாதியை மறுத்துத் தான்முதல் என்றது வலியுறுத்தப்பட்டது.

அவ்வாறுயினும், ஆகமங்களில் இலயசிவன், போக சிவன், அதிகார சிவன் எனச் சிவப்பன்மை கூறுதலின், தான் முதல் என்று ஒரு பொருள் மேல் வைத்தோதுதல் பொருந்தாது என்பார்க்குச் சமாதானங் கூறுதற் கெழுந்தன வருஞ் செய்யுட்கள். (சு௭.)

சிவசத்தியின் தடத்தம் பலவாயினும் சொரூபம் ஒன்றுயினாற் போலத் தடத்தசிவமும் இலய சிவம், போகசிவம், அதிகார சிவம் என மூன்றுயினும், சொரூபசிவம் ஒன்றேயெனவும், அதுவே தடத்த சிவமாயும் தடத்த சிவத்தின் அவத்தைக்கு ஏதுவான ஆதாரத்தின் பெயரைப் பெற்றும் நிற்குமெனவும் கூறுகின்றது.

ஞானமே யானபோது சிவன்றொழின் ஞான மொக்கி
னீனமில் சதாசி வன்பே ரீசனுந் தொழில தேறி
னூனமேற் கிரியை வித்தை யுருத்திர னிலய போக
மானபே ரதிகா ரத்தோ டதிகர ணத்தனுமே.

[கே - ௫.] ஞானமே ஆனபோது சிவன். தொழி (லே ஆன போது) ஞானம். ஒக்கின் ஈனமில் சதாசிவன். தொழில் அது ஏறின்

பேரீசன் ஆம். கிரியை ஊனமேல் வித்தை. இலயம் போகம் பேர் ஆண அதிகாரத்தோடு அதிகாரணத்தன் உருத்திரன் ஆமே.

(பொ - ரை.) மேற்கூறிப்போந்த சிவசத்தி மூன்றனுள் எப்பொழுதும் ஒரு தன்மையாய்த் தொழிற்படுவது இச்சா சத்தி. அவ்விச்சையொழிந்த ஞானங்கிரியையென்னும் இரண்டனுள் முதல்வன் ஞானசத்தியேயாய் நின்று தொழிற்பட்ட போது சிவமெனவும், கிரியா சத்தியேயாய் நின்று தொழிற்பட்டபோது சத்தியெனவும், ஞானமும் கிரியையுமாய் ஒத்து நின்று தொழிற்பட்டபோது மேம்பட்ட சதாசிவமெனவும், ஞானம் குறைந்து கிரியை ஏறி நின்று தொழிற்பட்ட போது மகேசுவரம் எனவும், கிரியை குறைந்து ஞானம் ஏறி நின்று தொழிற்பட்டபோது சுத்தவித்தை எனவும் ஐவகைப்பட்டு அந்த இலயம், போகம், பெரிதாகிய அதிகாரம் என்னும் மூன்று அவத்தைகளையும் அவ்வவத்தைக் கேதுவாய் அங்ஙனம் வேறுபட்ட சிவமுதலிய ஆதாரங்களையும் உடையனாய் மகாருத்திரனொருவனே அவத்தைக்கு ஆதாரமாகிய அவற்றின் பெயரைப் பெற்று நிற்பன். (எ - று.)

இவ்விடத்து உருத்திரன் என்பது மகாசங்காரக் கடவுளாகிய பரமசிவனை. இலய போகம் என்றவிடத்து ஆகமங்களிற் கூறப்பட்ட இலய போகம் என்னும்படி அகரச் சுட்டு வருவித்துரைக்க. தொழில் ஞானம் என்றவிடத்து ஞானம் சத்திக்குப் பரியாயப் பெயராய் நின்றது. ஒக்கில் என்பதற்கு ஞானந் தொழில் என்னும் இவ்விரண்டும் என எழுவாய் வருவித்து ஞானந் தொழில் ஒக்கில் என உரைக்க. ஆதாரம் அதிகாரணம் என்டன ஒருபொருட் சொற்கள். இது, மேல் ௩௫-வது செய்யுளிலும் உரைக்கப்பட்டது.

சிவம் சத்தி என்ற இரண்டும் எல்லாம் ஒடுங்குதற் கிடமாய் நிற்றலால் இலயமெனவும், சதாசிவம் ஏனைய மூர்த்தங்களைத் தோற்றுவித்தலால் போகமெனவும், மகேசுவரத்தில் இருபத்தைந்து மூர்த்தமும், சுத்தவித்தையில் பிரமவிட்டுணுவும் தோன்றித் தொழிற்செய்வதால் மகேசுவரம் சுத்தவித்தை என்ற இரண்டும் அதிகாரமெனவு மறிக. (௬௫.)

இலய போக அதிகார அவத்தைகளுக்கு ஏதுவாய் நின்ற

ஆதாரங்கள் சிவதத்துவங்களெனவும் அவற்றின் இயல்பும் கூறு கின்றது.

வித்தையோ டீசர் சாதாக் கியஞ்சத்தி சிவங்களைந்துஞ்
சுத்ததத் துவஞ்சி வன்றன் சுதந்திர வடிவ மாகு
நித்தமென் றுரைப்பர் கால நீங்கிய நிலைமை யாலே
வைத்திலர் முற்பிற் பாடு வருவித்தார் கருமத்தாலே.

[கோ - டு.] வித்தையோடு ஈசர் சாதாக்கியம் சத்தி சிவங்கள் சுத்த தத்துவம் ஐந்தும் சிவன்றன் சுதந்திர வடிவம் ஆகும். கருமத்தாலே [முற்பிற்பாடு] வருவித்தார். கால நீங்கிய நிலைமையாலே முற்பிற்பாடு வைத்திலர். நித்தமென்றுரைப்பர்.

(பா - ரை.) சுத்த மாயாகாரியமாகிய சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் சுத்த தத்துவங்களைந்தும், முதல்வனுடைய ஞானக்கிரியா வியாபாரங்களுக்கிடமாய், அவ்வியாபாரங்களால் ஐவகைப்பட்டு மேற்கூறிப் போந்த சுத்தவித்தை முதலிய இறைவன் பெயரே பெயராக அவ்விறைவனுக்குச் சுதந்திரமாகிய அதிட்டானமுமாம். முன்பின்னாக நிகழும் ஞானசத்தி கிரியா சத்திகளின் வியாபார பேதம் பற்றி இச் சிவதத்துவங்களுக்கு ஒன்றன்பின் ஒன்றாக முற்பிற்பாடு கூறினார். ஆயினும், முற்பிற்பாடு கூறினமையால் காலம் ஏதுவாகக் கூறப்பட்டதென்னலாமோவெனின், சுத்தமாயையில் இவ்வைந்து தத்துவங்களும் தோன்றிய பின்னர்த் தோன்றுவதாகிய காலதத்துவம் இவ்வைந்தின் தோற்றத்திற்கு ஏதுவாகாதாம். ஆதலின், காலம்பற்றி முற்பிற்பாடு கூறிற்றிலர். காலவரையறை கடந்து நிற்றலால், அதுபற்றி இச்சிவதத்துவ மைந்தும் சிவபிரானுக்கு நிலைத்த அதிட்டான மென்றுரைப்பர். (எ று.)

அனந்த தேவர் முதலியோர் வாயிலாக நின்றதிட்டிக்கப்படும் அசுத்த மாயாகாரியம், பிரகிருதி மாயாகாரியங்கள் போலன்றி, இச் சுத்த மாயா காரியங்கள் தன்னால் நேரே யதிட்டிக்கப்படுதலின், இவை சுதந்திர வடிவமெனப்பட்டன. அதிட்டிக்கப்படும் அதிட்டானத்தை வடிவம் என்றது

உபசாரம். உயிராலதிட்டிக்கப்படும் உடம்பு உயிருக்கு உபசாரமாய் வடிவமாதல் போல. அதிட்டானம்—நிலைக்களம்.

தோற்றக் கேடுகளுடையனவாய தத்துவங்கள் இறைவனுக்குச் சுதந்திர வடிவமாதல் எவ்வாறு கூடும் என்னும் ஆசங்கையை நீக்குதற்கு "நித்தமென்றுரைப்பர்" என்றும், இச்சுத்த தத்துவங்கள் நித்தமாதற்கு ஏதுக் கூற வேண்டி "கால நீங்கிய நிலைமையால்" என்றும், அவ்வாறாயின், காலமில்லாத விடத்து இத்தத்துவங்களின் தோற்றத்திற்கு முற்பிற்பாடு கூறுதல் எவ்வாறு கூடும் என்பாரை நோக்கி இவ்விடத்து முற்பிற்பாடு கூறியது காலம் பற்றியன்று எனக்கூற வேண்டி "வருவித்தார் கருமத்தால்" என்றுங் கூறினர்.

கருமம் என்றது மேலைச் செய்யுளிற் கூறிய ஞானசத்தி கிரியாசத்திகளின் வியாபார பேதங்களை. அந்த வியாபாரங்கட்குக் காரணம் கலையித்திரி எனப்பெயர் பெற்றுக் காலத்தானமாய் நிற்கும் சிவசத்தியே யாகலின், அவ்விடத்துக் காலமின்மை பற்றி முற்பிற்பாடுண்மைக்கு இழுக்கின்மை யுணர்க.

இதனால் சிவதத்துவம் இறைவனுடைய வியாபாரத்திற்கு இடமாதலும், இறைவனுக்கு உபசாரத்தால் வடிவமாதலும் அறிக.

வடிவமென்றது இவ்விடத்து அதிட்டானமாகிய நிலைக்களத்தை. உயிருக்கு வடிவு உணர்வேயாயினும், நிலைக்களமாகிய உடம்பும் வடிவமென உபசரித்துக் கூறப்படுவது போல, இறைவனுக்கு வடிவம் சித்தேயாயினும் சிவதத்துவமும் வடிவமென்று உபசரித்துக் கூறப்படும். உயிருக்கு உடம்பு மாறி மாறி வருதல் போல, இறைவனுக்கு வருதலில்லையென்பதும் சிவதத்துவம் என்றும் அதிட்டானமாம் என்பதும் தோன்ற "நித்தம்" என்றார். அதிட்டான மென்பது நிலைக்களமாகிய வாயிலாமென்பதனை இச்சூத்திரம் ருஅ-வது செய்யுளில் "அதிட்டித்துக்கொண்டே" என்பதற்குக் கூறிய உரையானறிக.

மேல் சுக-வது செய்யுளில் சத்தியினாலேயே வடிவமென்றதனோடு இக்கருத்து முரணாதோ எனின் முரணாது. என்னை? வருகின்ற செய்யுளில், வடிவமெல்லாம் சத்தியிற் காணப்படுவனவென்றும், அதற்கடுத்த செய்யுளில் சத்தியிற் காணப்படும் வடிவமெல்லாம் தானாகத் தோன்றி நிற்பன்; சத்தியினிடமாக வன்றி இறைவன் தானாகத் தோன்றான் என்றும், இரண்டாஞ் சூத்திரம் சுகூ-வது செய்யுளில் சிவதத்துவம் ஐந்தும் சடமாயினும், சிற்சத்திக்குச் சுதந்திர வடிவமென்றும் உரையாசிரியர் கூறியவாற்றால், இறைவனுக்கு வடிவம் சிற்சத்தியே என்பதும், சிற்சத்திக்குச்

சிவதத்துவம் வடிவமாமென்பதும், ஒற்றுமை பற்றிச் சத்திக்குரிய வடிவத்தை இறைவனுக்குரிய வடிவமாகக் கூறியதால் முரணில்லை என்பதும் அறிக.

சிவபெருமானுக்கு எங்கும் இடமாகவும் சிவதத்துவத்தை இடமென்று வேறெடுத்துக் கூறியதென்னை யெனின், எல்லா விடத்திலும் தான் வெளிப்படாது மறைந்தும் சிவதத்துவத்தில் வெளிப்பட்டும் நிற்றல் பற்றி யென்க. அன்றியும், இச் சிவதத்துவம் அனந்தர் முதலிய ஏனைய தேவர்க் கிடமாகாமையின் சுதந்திரம் எனப்பட்டது. (௬௬.)

சொரூபசிவம் சுத்த தத்துவங்களைப்பற்றிய வியாபார பேதத்தால் இலயம், போகம், அதிகாரமென்னும் அவத்தை எய்தினும், அவை சத்தியிற் காணப்படலால் விகாரியாகான் என உவமை முகத்தாற் கூறுகின்றது.

ஒருவனே யிராவ ணாதி பாவக முற்றுற் போலத்
தருவனிவ் வுருவ மெல்லாந் தன்மையுந் திரியானாகும்
வரும்வடிவெல்லாஞ் சத்தி சத்திதான் மரமுங் காழ்ப்பு
மிருமையும் போல மன்னிச் சிவத்தினோ டியைந்து நிற்கும்.

[கோ - டு.] ஒருவனே இராவணன் ஆதி பாவகம் உற்றாற்போல தருவன் இவ்வுருவமெல்லாம். வரும் வடிவு எல்லாம் சத்திதான் மரமுங் காழ்ப்பும் இருமையும் போல மன்னிச் சிவத்தினோடியைந்து நிற்குஞ் சத்தி. தன்மையுந் திரியானாகும்.

(பொ - ரை.) ஒருவன் கூத்திற்குரிய இராவணாதி பல வேடங் கட்டி நடித்தானாயினும், தன் தன்மையிற் சிறிதும் மாறுபடாதது போல, முதல்வன் ஐந்தொழிற்குரியனவாய் மேற் கூறிப்போந்த சுத்த வித்தை முதலிய பேத வடிவெல்லாம் எய்தியும், பொருந்தப்பட்ட அவ்வடிவு வேறுபாடெல்லாஞ் சத்தியுந் தானும் மரமும் வயிரமும் போல நிலைபெற்று, பிரிப்பின்றி நிற்கும் தனது சத்தியிற் காணப்படுவனவாம். ஆகலின், அவ்வடிவத்தின் வேறுபாடுபற்றித் தன் தன்மை வேறுபட்டு விகாரியாவனல்லன். (எ - று.)

ஒருவனே என்றவிடத்து ஏகாரம் தேற்றம்: தன்மையும் என்றவிடத்து உம்மை சிறப்பு. இருமை என்றது இவ்விடத்து இரண்டு என்னும்

எண்ணின்மேல் நின்றது. வரும் வடிவெல்லாம் சத்தியிற் காணப்படுவன என்று கூற வேண்டியதை வரும் வடிவெல்லாம் சத்தி என்றது உபசாரம்.

சத்தியிற் காணப்படுதல் தனக்காமாறு உவமை முகத்தாற் கூறுகின்றது.

பொன்மைநீ லாதி வன்னம் பொருந்திடப் பளிங்க வற்றின்
றன்மையாய் நிற்கு மாபோற் சத்திதன் பேத மெல்லா
நின்மலன் ருனுத் தோன்றி நிலைமையொன் ருயே நிற்பன்
முன்னருட் சத்திதன்பான் முகிழ்க்குந் தான் முளையானன்றே.

[கோ - ௫.] முன் அருட்சத்திதன்பால் முகிழ்க்கும். தான்[ஆச] முளையானன்றே. பொன்மை நீலம் ஆதி வன்னம் பொருந்திட பளிங்கு அவற்றின் தன்மையாய் நிற்குமாபோல், நின்மலன் சத்திதன் பேதமெல்லாம் தான் ஆத் தோன்றி நிலைமை ஒன்ருயே நிற்பன்.

(பொ - ரை.) அவ்விறைவன் எவ்விடத்தும் கருதப்பட்ட அருட்சத்தியின் இடமாகவே தோன்றுவானன்றித் தானுகவேறு தோன்ருனுகலான், பொன்றன்மையையும் நீலம் முதலிய பொருள்களையும் பளிங்கினது நிறமே பற்றவும், அப்பளிங்கும் அப்பொருள்களின் தன்மை அனைத்துமாய்த் தோன்றி வேற்றுமையின்றி நிற்குமாறு போல, முதல்வனும் தனது சத்தியிற் காணப்படும் வடிவபேதமெல்லாம் தானுகத் தோன்றி வேற்றுமையின்றியே நிற்பன். (எ - று.)

வன்னம்—படிக நிறம். ஒன்ருயே என்றவிடத்து ஏகாரம் தேற்றம். சத்திதன்பால் என்றவிடத்து தன் இடைச்சொல். மேல் சுரு-வது செய்யுளில் “கிரியை தன்னுலாக்குவன்” என்ருற்போல. பால்—இடம். தான் என்றவிடத்து ஆக என ஒருசொல் வருவித்து தானுக என உரைக்க.

ஞானமேயானபோது என்பது முதல் இவை நான்கு செய்யுளானும் இலயபோக அதிகாரம்பற்றிச் சிவபேதங் கொள்ளும் சிவபேத வாதிகள் கூறும் ஆசங்கையைப் பரிகரித்துத் தான் முதல் என்றது சாதிக்கப்பட்டது.

இவ்வாறு அநேகேசுரவாதம், சிவசமவாதம், சிவபேதவாதம் என்னும் முத்திறம் பற்றிக் கூறப்பட்ட ஒன்பது செய்யுளும் தான் முதல் என்றதனை வலியுறுத்தியவாறு காண்க. (சூ-அ.)

சத்தியும் சிவமுமாகிய தான் முதலென்றதனை காட்சி அநுபவத்தில் வைத்து விளக்கி முதல்வனுக்குரிய பொதுவிலக்கணத்தைத் தொகுத்துக் கூறுகின்றது.

சத்தியுஞ் சிவமு மாய தன்மையிவ் வுலக மெல்லா
மொத்தொவ்வா வாணும் பெண்ணு முணர்குண குணியு மாகி
வைத்தன னவளால் வந்த வாக்கமிவ் வாழ்க்கை யெல்லா
மித்தையு மறியார் பீட லிங்கத்தி னியல்பு மோரார்.

(கோ - ௭.) இவ்வாழ்க்கை யெல்லாம் அவளால் வந்த ஆக்கம்.

(போ - ரை.) இறைவன் இவ்வாறு சத்தியுஞ் சிவமுமெனத் தன்னுள்ளே இருவேறு வகைப்பட்ட தன்மைகள் உடையனு யிருத்தலானன்றே, தன் வியாபகத்துட்பட்ட பலவேறு வகைப்பட்ட இவ்வுயிர் வடிவங்களனைத்தும் மனுடர், மிருகம் முதலிய அவ்வப் பிறப்பிற்கியைய வடிவங்களொத்தும், குறியும், குணங்களும் ஒவ்வாது இரு வேறுவகைப்பட்ட ஆணும் பெண்ணுமாகிய குறிகளையும், உணரப்படும் ஆண்மையும் அமைதியுமாகிய குணங்களையும் உடையனவாய்த் தம்முட் கூடிக் களித்து வாழும்படி செய்தனன். ஆகலான், இப்படியே தனு கரண புவன போகமாகக் கூறிப்போந்த வாழ்வுகளெல்லாம் சிவமுஞ் சத்தியும் மணந்ததனுலாகிய வாழ்வு என்பது அறியப்படும். இவ்வாறு எல்லா வடிவங்களும் ஆண் தன்மையும் பெண் தன்மையுமாம்படி சிவமுஞ் சத்தியும் நின்ற முறைமையும் உணரார். சத்தியும் சிவமுமாக இறைவன் இருவேறு வகைப்பட நிற்பன் என்பதற்குப் பீடமும், இலிங்கமும் ஆக அமைந்திருத்தலே பிரத்தியட்சமான சான்றுகவும் அதனையு முணரார். (எ - று.)

ஒத்தொவ்வாமையாவது, மனுடப்பிறப்புக்கியைய வடிவங்களெல்லாம் ஒத்தும் ஆண்குறி, பெண்குறி, ஆண்மைக்குணம், அமைதிக்குணம் என்னும் இவைகளொவ்வாது ஆண் பெண் என இருவேறு வகைப்படுதல் போல்வன. ஆண் பெண் என்பன வடிவத்தை யுணர்த்தாது, குறிகளை யுணர்த்தி நின்றன. உணர் குண குணியுமாகி என்பது, ஆண்குறி பெண்குறி என்னும் அவ்வக்குறிகட்கேற்ப உணரப்படும் ஆண்

மைக்குணம், அமைதிக்குணம் என்னும் இருவகைக் குணங்களேயுடைய குணியுமாகி என்பதாம். ஈண்டுக் குணி என்றது குணத்தையுடையது என்னும் பொருள் குறியாது ஆண் பெண் என்னும் பெயரைக் குறித்து நின்றது. இது கரிகரம், பணிபணம் என்றவிடத்துக் கரியும், பணியும் கரத்தையுடையது, பணத்தையுடையது என்னும் பொருள் குறியாது யானையையும், பாம்பையும் குறித்தவாறு போலாம். பணம்-படம்.

இவ்விடத்துக் கூறிப்போந்த வாழ்க்கையாவன, உலகமெல்லாம் அவன், அவள், அதுவென்னும் அவயவப் பகுப்புடையனவாதலும், தோன்றி நின்று ஒடுங்கும் முத்தொழிலுடையனவாதலும், அத்தொழிற்கு ஒரு கருத்தாவையுடையனவாதலும், ஒடுங்கியவாறே ஒழியாது மீளவும் சங்காரக் கடவுளினின்றுந் தோன்றுவனவாதலும், அச்சங்காரக் கடவுளேயே முதற்கடவுளாக உடையனவாதலும் என்னும் இவை.

பீடம் என்பது ஆவுடையாள். அதுவே சத்தி. இலிங்கம்—சிவம். பொதுவிலக்கணம் உலகமாய் நிற்றல். (௬௯.)

முதல்வன் இவ்வாறு தடத்தமாய் நிற்பினும் அதனைப் பொருந்தாது சொரூபமாய் நிற்பன் என அவ்விலக்கணத்தைத் தொகுத்துக் கூறுகின்றது.

சிவனரு வுருவு மல்லன் சித்தினே டசித்து மல்லன்
பவமுதற் றொழில்க ளொன்றும் பண்ணிடு வானு மல்லன்
றவமுத லியோக போகந் தரிப்பவ னல்லன் றானே
யிவைபெற வியைந்து மொன்று மியைந்திடா வியல்பினனே

(போ-ரை.) சிவபிரான் அருவும், உருவுமல்லாதவன். சித்தும், அசித்துமல்லாதவன். சிருட்டி முதலிய ஐந்தொழில்களில் ஒன்றும் செய்வானுமல்லாதவன். தவமுதலியவற்றிற்குரிய யோகவடிவம், போகவடிவம் கொள்வானுமல்லாதவன். ஆதலால், அம்முதல்வன் தடத்த இலக்கணமாகிய இவற்றைப் பொருந்தி நின்றானாயினும், அவற்றைச் சிறிதும் பொருந்தாத சொரூப இலக்கணத்தையுடையான். அச் சொரூப இலக்கணம் ஆறுவது சூத்திரத்தில் கூறப்படும். (எ - று.) (எ0.)

மூன்றமதிகாரணம் முடிந்தது.

முதற் சூத்திரம் முடிந்தது.

ஆகத்திருவிருத்தம் எ0.

இரண்டாம் சூத்திரம்,

பாச உண்மை.

மேலைச் சூத்திரத்தில் "ஈறுமாகி மருவிடு மென்றதனுனே" எவ்வாறு நின்று மருவுவிப்பன்? என்னும் ஆசங்கை நிகழுமன்றே. அந்நிகழ்ச்சி பற்றி புதுச் சிருட்டியுண்டாமாறுணர்த்துதற்கு இரண்டாஞ் சூத்திரமெழுந்தது.

குடமாகிய செயப்படுபொருளைக்கொண்டு செய்பவனாகிய குயவன் உண்டென்று கொள்ளுவதுமன்றி, முதற் காரணமாகிய மண்ணும், துணைக் காரணமாகிய திகிரியு முண்டென்றறியப்படு மாகலின், அதுபோலத் தோன்றி யழியுங் காரியப் பிரபஞ்சத்தைக்கொண்டு நிமித்த காரணனாகிய கருத்தா வுண்டென்று மேலைச்சூத்திரத்தால் விளக்கி அக்கருத்தா உயிர்களோடு அத்துவிதமாய் நின்று பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பன் எனக்கூறு முறையில் அப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாகிய மாயையும், சிற்சத்திவழித்தாய் துணைக் காரணமாகிய கன்மமும் என்னும் பாசவுண்மையை நாட்டுகின்ற காரிய ஏதுவெனப்படும் அநுமானப் பிரமாணம் இச்சூத்திரத்தாற் கூறுகின்றார்.

இறைவன் உயிர்களோடு அத்துவிதமாய் நின்று கன்மத்திற்கேற்ப மாயையினின்றும் பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பன் எனச் சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது.

உலகெலா மாகி வேறா யுடனுமா யொளியா யோங்கி
யலகிலா வுயிர்கள் கன்மத் தாணையி னமர்ந்து செல்லத்
தலைவனா யிவற்றின் றன்மை தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீ ரமல னாகி நின்றன னீங்கா தெங்கும்.

(**கோ - டு.**) உலகு எலாம் ஆகி, வேறு ஆய், உடனும் ஆய், ஓங்கி ஒளியாய், ஆணையின் கன்மத்து அலகிலா உயிர்கள் அமர்ந்து செல்லத் தலைவனாய், இவற்றின் தன்மை தனக்கு எய்தல் இன்றி நீங்காது எங்கும் தானே நிலவு சீர் அமலனாகி நின்றனன்.

(போ - ரை.) மேற் கூறிப்போந்த சிவபெருமான், பதி தாகப் பிரபஞ்சத்தைத் தோன்றச்செய்யுங்கால், உயிர்களிடத்தே கலப்பினால் உடலும் உயிரும் போல ஒன்றாய், பொருளின் தன்மையால் கண்ணும் சூரியனும் போல அவ்வுயிர்களின் வேறுமாய், உயிர்க்குயிராதற்றன்மையால் கண்ணொளியும் ஆன்ம போதமும் போல அவ்வுயிர்களோடு உடனுமாய், அவ்வவ்வுயிர்களினிடத்து மேலாய் நிற்பதாகிய சத்தி ரூபமாகியும், அச்சத்தியினால் கூட்டுவிக்கின்ற இருவினைகளுக்கேற்ப எண்ணிறந்த அவ்வுயிர்கள் ஐந்தொழிலிற்பட்டுச் செல்லுங்கால் அவ்வைந்தொழில் நடாத்துவதாகிய பதி ரூபமாகியும், சத்தி ரூபம், பதிரூபம் ஆகிய அத்தன்மைகளின் வேறாயும், அத்தன்மைகளோடு பிரிப்பின்றியும் எவ்விடத்தும் தானே சுயம்பிரகாசமாம் இயல்புடையனாய் நிற்பன். ()

அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன் ஒன்றினுந்தோய்வின்றித் தானே சுயம்பிரகாசமாய் நிற்குந் தன்னுண்மையில் சிவம் எனவும், உலகெலாமாகி வேறாயுடனுமாய் இவ்வாறு உயிர்களோடு ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நிற்கும் தன்மையில் சத்தி யெனவும், பிரிக்கமுடியாத தாதான்மியத்தால் சிவம் சத்தி என இருதிறப்பட்டு, பின், உயிர்களின் பொருட்டு ஐந்தொழில் செய்யும் தன்மையில் பதி எனப் பெயர்பெற்று நிற்பன் என்பது சிவாகம நூற்றுணிபு. இத்துணிபு உணர்த்தவேண்டி இச்செய்யுளில் இவ்வாறு பகுத்து ஓதினார். எவ்வாறெனின், இவற்றின்றன்மை தனக்கெய்தலின்றித் தானே நிலவு சீரமலனாகி நின்றனனீங்காதெங்கும் என்றதனால் சிவமாய் நிற்றலையும், உலகெலாமாகி வேறாயுடனுமா யொளியாயோங்கி என்றதனால் சத்தியாய் நிற்றலையும், அலகிலா வுயிர்கள் கன்மத் தாணையினமர்ந்து செல்லத் தலைவனாய் என்றதனால் பதியாய் நிற்றலையும் உணர்த்தியவாறும்.

உலகம் என்றது இவ்விடத்து உயிர்களை. ஒளி என்றது சத்தியை. தலைவன் எனினும் பதி எனினும் ஒக்கும். நீங்காமை - தாதான்மியம். அதாவது, பிரிக்கமுடியாத சம்பந்தம்.

இச்செய்யுள் முதனூல் இரண்டாஞ் சூத்திரம் போல நாற்கூற்றை யுடையது. அவற்றுள், முதற்கூறு:— "உலகெலாமாகி வேறாயுடனுமாய் ஒளியாயோங்கி", இரண்டாங்கூறு:— "அலகிலா வுயிர்கள் கன்மத்தாணையினமர்ந்து செல்ல" மூன்றாங்கூறு:— "தலைவனாய்" நாலாங்கூறு:— "இவற்றின்றன்மை தனக்கெய்தலின்றி தானே நிலவுசீரமலனாகி நின்றனன் நீங்காதெங்கும்". (க.)

முதலதிகரணம்.

"உலகெலாமாகி வேறாயுடனுமாய் ஒளியா
யோங்கி என்பது."

பலவுயிர்களோடும் ஒரு இறைவன் கலந்து உடனாய் நிற்பன் என உவமை முகத்தாற் கூறுகின்றது.

ஒன்றென மறைக ளெல்லா முரைத்திட வுயிர்களொன்றி
நின்றன னென்று பன்மை நிகழ்த்துவ தென்னை யென்னி
னன்றவை பதிதா னொன்றென் றறையுமக் கரங்கடோறுஞ்
சென்றிடு மகரம் போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே.

(கோ - பே.)) மறைகள் எல்லாம் ஒன்று என உரைத்திட உயிர்கள் ஒன்றி நின்றனன் என்று பன்மை நிகழ்த்துவது என்னை என்னின் அவை பதிதான் ஒன்று என்று அறையும். அன்று. அக்கரங்கள் தோறும், சென்றிடும். அகரம் போல, சிவனும் சேர்ந்தே நின்றனன்.

(பொ - ரை.) வேதங்களில் எல்லாம் ஆன்மா ஒன்றே என்று உரைக்கவும், உயிர்களோடு கலந்து உடனாய் நிற்பன் என்று இவ்விடத்து உயிர் பலவென்று கூறுவது முரணாகாதோவெனின், அவ்வேதங்களில் ஆன்மா ஒன்று என்பது ஜீவான்மாவையன்று. அச்சீவனுக்குப் பதியாகிய பரமான்மா ஒன்றே என்பது தாற்பரியமாதலால் முரணாகாதெனக. சீவான்மாக்கள் பலவாகவும், பரமான்மாவாகிய இறைவன் ஒன்றாகவும் இருத்தலால், மேலைச் செய்யுளில் சீவான்மாக்களின் இறைவன் வேறு என்றதும் பொருந்தும். வேறாயும், ஒருவனாயும் நிற்கும் இறைவன் பல உயிர்களுடன் கலந்து நின்றனன் என்பது எவ்வாறு பொருந்துமெனின், ஒன்றாகிய அகர அக்கரமானது அதனின் வேறாகிய பல அக்கரங்களோடும் கலந்து நிற்றல்போல, இறைவனும் உயிர்களோடு கலந்து நிற்றல் கூடும். அவ்வாறு கலந்து நிற்றலால் மேலைச் செய்யுளில் உடனுமாய் என்றதும் அமைவுடைத்து. (௭-று.)

சிவனும் என்றவிடத்து உம்மை சிறப்பு.

அகரமாவது, அக்கரங்களுள் முதலாவதாய் நிற்கும் அக்கரம் என்பர் ஒரு சாரார். அவ்வக்கரம் ஏனை அக்கரங்களோடு கலந்து நிற்றல் பெறப் படாமையின் அவர் கருத்துப் பொருந்தாது. இனி, அங்காத்தல் எல்லா அக்கரங்களோடும் பொருந்துதலின் அவ்வங்காத்தலே அகரமென்பர் மற்றொரு சாரார். அங்காப்பின்றியே வாக்கு மௌனமாயிருந்து ஒருவன் ஒரு பொருளைச் சிந்திக்கும்பொழுது அப்பொருளுக்குரிய சொல்லும், எழுத்தும் அகத்திற்றோன்றுமாதலின், அங்ஙனந் தோன்றுமெழுத்துடன் அங்காத்தல் பொருந்தாமையின் அவர் கருத்தும் பொருந்தாது. இவ்வாறாகவே அகரமென்பதுதான் யாதோவெனின் அகத்தின்கண் எப்பொழுதும் இயங்கிக்கொண்டிருக்கும் நாதமாகிய ஒலியே அகரமாம். அவ்வொலி அகரம்போல் ஒலித்தலால் அகரமெனப்பட்டது. அவ்வொலி பல வேறு வகைப்பட்ட அக்கரங்களாகிய ஒலிகளுக்கெல்லாம் முதலாயும், அவ்வொலிகளோடு கலந்தும் நிற்றலால் அகரம் போல் என உவமை கூறப்பட்டது. இதனையே ஆசிரியர் திருவள்ளுவரும் "அகர முதல வெழுத்தெல்லாம்" என்றார். உரையாசிரியர் பரிமேலழகரும் "நாத மாத்திரையாகிய இயல்பாற் பிறத்தல்," என அகரத்திற்கு இலக்கணங் கூறினர். (உ)

இறைவன் உயிர்களோடுகலந்து உடனாய் நிற்பினும் வேறாவனென உவமை முகத்தாற் கூறுகின்றது.

உருவொடு கருவி யெல்லா முயிர்கொடு நின்று வேறாய்
வருவது போல வீச னுயிர்களின் மருவி வாழ்வன்
றருமுயி ரவனை யாகா வுயிரவை தானு மாகான்
வருபவ னிவைதா னாயும் வேறுமாய் மன்னி நின்றே.

(கொ-டு.) உயிர் உருவொடு கருவி எல்லாம் கொடு நின்று வேறாய் வருவது போல ஈசன் உயிர்களின் மருவி வாழ்வன். தானும் உயிரவை யாகான். தரும் உயிர் அவனை ஆகா. இவைதான் ஆயும் வேறும் ஆய் மன்னி நின்றே வருபவன்.

(போ-ரை.) உயிரானது நரம்பு முதலியவற்றால் கட்டப்படும் உடம்பையும், செவி கண் முதலிய கருவிகளையும் பற்றிக் கொண்டு அவ்வுடம்போடு உடனாய் நிற்கும். நிற்குங்கால், உடம்பிற்கிட்ட பெயரால் பிறன் அழைத்தவிடத்து உயிர் என்னை என்று

கேட்கும். கேட்கினும் உயிர் உயிரே; உடம்பு உடம்பே? உயிரானது உடம்பாகமாட்டாது; உடம்பு உயிராகமாட்டாது; அவ்வாறாயினும், உயிர் அவ்வுடம்பின் வேறாகியும், அவ்வுடம்பாகியும் நிற்றல், முறையே, என் செவி கேட்டது என்பதனாலும் நான் கேட்டேன் என்பதனாலும் காணப்படும். அதுபோல, முதல்வன் உயிர்களோடு அபேதமாய்க் கலந்து நிற்பன். அவ்வாறு நின்றவிடத்தும் முதல்வன் முதல்வனே. உயிர் உயிரே. முதல்வன் உயிராக மாட்டான். உயிர் முதல்வனாகமாட்டாது. அவ்வாறாயினும், முதல்வன் அறிவித்தலால் உயிரின் வேறாகியும் உடனின்று செலுத்துதலால் உயிர்கள் எல்லாமாகியும் நிற்பன். (எ-று.)

தருமுயிரவனையாகா என்றவிடத்து ஐ சாரியை. உயிரவை என்றவிடத்து அவை பகுதிப்பொருள் விகுதி.

இவ்விரண்டு செய்யுளுள், முதற் செய்யுளால் உயிரும் சிவமும் ஒன்றே என்று அபேதங் கூறுவார் மதமும், ஒன்றும் வேறுமாம் எனப் பேதா பேதங் கூறுவார் மதமும், இச் செய்யுளால் வேறே எனப்பேதங் கூறுவார் மதமும் மறுக்கப்பட்டு, அம்மூன்றும் உடைமையைக் கூறும் உலகெலாமாகி வேறாயுடனுமாய் என்ற முதற் கூறு சாதிக்கப்பட்டது.

உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் இறைவன் நிற்றலின்கணுண்டாம் பயன் என்னையென்பது முதலிய சங்கையுத்தரங்களனைத்தும் இரண்டாமதிகரண முதல் விரித்துக் கூறப்படுகின்றமையின் இவ்விடத்து விரித்திலர்.

இனி ஒளியா யோங்குதலாகிய சத்தியின் கட்படும் சங்கையுத்தரங்கள் மேலைச் சூத்திரத்தில் முதல்வனைப்பற்றிக் கூறுமிடத்து இயைபுபற்றிக் கூறினமையின் இவ்விடத்து விரித்திலர்.

அஃதவ்வாறாகட்டும். முதனூற் பொருளை முதனூலிற் கிடந்தவாறே கூறுது, தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழி பெயர்ப்பு என்னும் நால்வகையாப்பினுள் ஒன்றுபற்றிச் செய்வது வழிநூலாகும். அவ்வாறன்றி, முதநூலாகிய சிவஞானபோதத்தில் "ஒன்றென்ற தொன்றே காணொன்றே பதி" என்னும் வெண்பாவின் பொருளை "அன்றவை பதிதானென்றென்றறையும்" எனவும் "கட்டுமுறுப்பும் கரணமுங் கொண்டு" என்னும் வெண்பாவின் பொருளை "உருவொடு கருவியெல்லா முயிர்கொடு" எனவும், வேறு சிலவற்றையும் முதனூலிற் கிடந்தவாறே கூறுதல் வழிநூற்குமா

பாமோவெனின், ‡ முன்னோர் மொழி பொருளேயன்றி யவ்வர்மொழியும், பொன்னேபோற் போற்றுவமென்பதற்கும்—முன்னோரின், வேறு நூல் செய்துமெனு மேற்கோளிலென்பதற்கும், கூறு பழஞ் சூத்திரத்தின் கோள். என்பவாகலின், பொன்னேபோற் போற்றும் பயன்பற்றி ஒரோவிடத்து அவ்வாறு கூறுதலும் வழிநூற்கு மரபென அமையுமென்க. இதனானே, கூறியது கூறல் என்னும் குற்றமின்மையுங் கண்டுகொள்க. (ரு).

முதலதிகாரணம் முடிந்தது.

இரண்டாம் அதிகரணம்.

"அலகிலா உயிர்கள் கன்மத்து ஆணையின் அமர்ந்து செல்ல" என்பது.

இறைவன் அவ்வாறு நிற்றல் தனது சத்தியால் வினையின் பயனாகிய இன்பத் துன்பங்களை உயிர்கட்கு ஊட்டுதற் பொருட்டென்பதைத் தொகுத்துக் கூறுகின்றது.

இருவினை யின்பத் துன்பத் திவ்வுயிர் பிறந்தி றந்து
வருவது போவதாகு மன்னிய வினைப்ப லன்க
டருமரன் றரணியோடு தராபதி போலத் தாமே
மருவிடா வடிவுங் கன்ம பலன்களு மறுமைக் கண்ணே.

(கோ-டு.) இவ்வுயிர் இருவினை இன்பத் துன்பத்து பிறந்திறந்து போவது வருவது ஆகும். வடிவும் கன்ம பலன்களும் தாமே மறுமைக் கண்ணே மருவிடா. மன்னிய வினைப் பலன்கள் தரணியொடு தராபதி போல அரன் தரும்.

(போ-ரை.) மேற் கூறிப்போந்த உயிர்க்கு முற் பிறவியிற் செய்யப்பட்டுக் கிடந்த இருவினையின் பயனாகி இப்பிறவியில் இன்

---

‡ நன்னூல் பொதுப்பாயிரம். வெ-கூ.

பத் துன்ப அனுபவமுண்டாம். அவ்வனுபவத்தால் மேலும் வினையேறும். அதனால், மீட்டு மீட்டும் பிறந் திறத்தலும், சுவர்க்க நரகங்களிற் சென்று மீளுதலுங் கூடும். உடம்பும் வினைப் பயனும் அறிவில்லாத சடமாதலால், உடம்பு வினைப்பயனை எடுத் துக்கொள்ளவாவது, வினைப்பயன் உடம்பைப் பொருந்தவாவது முடியாவாம். ஆதலால் உடம்பினையும் அவ்வுடம்பொடு நிலை பெறும் வினைப்பயன்களையும் வைத்தியனும், அரசனும் போல, முதல்வனே தனது சத்தியால் அவ்வுயிருக்குக் கூட்டுவன் (எ-று)

தாணம் என்னும் வடமொழி கடத்தல் என்னும் பொருளைத் தரு வது. ஆதலின், நோயைக் கடக்கும்படி செய்தலின் மருத்துவனுக்குத் தாணி யெனக் காரணக் குறியாயிற்று. இச் செய்யுளிற் கூறப்பட்ட தாணி என்பதற்கு மருத்துவன் என்பதே பொருள் என்பது "மருத்துவனுரைத்த நூலின்" எனப் பின்னர் வகுத்துக் கூறுமாற்றால் காண்க.

வைத்தியன் அரசன் என்ற உவமையைப் பின்னர் முப்பதாவது செய் யுள் முதல் முப்பத்தைந்தாவது செய்யுள்வரை விரித்துக் கூறப்படுமாத லின் ஆண்டுக்காண்க. இச்செய்யுளில் கூறப்படும் இருவினை என்பதை உலகாயதர் கூற்றாகவும், தாமே மருவிடா என்பதை மீமாஞ்சகர் கூற்றாக வும், தாணியோடு தராபதி என்பதை உவமைக்கூற்றாகவும், இன்பத்துன் பத்திவ்வுயிர் பிறந்திறந்து வருவது போவதாகும் என்பதை உயிர் அருந்துங் கூற்றாகவும் முறையே பின்னர் விரித்துக் கூறுகின்றார். (௪)

இன்பத்துன்பங்கள் இயல்பேயன்றி வினையின்பயன் அன் றெனக் கூறும் உலகாயதரை மறுத்துரைக்கின்றன.

இருவினை யென்னை யின்பத்துன்பங்க ளியல்பதென்னி
னொருதன்மை யியல்புக் குள்ள தொருவனுக் கிரண்டுசெய்தி
வருவதென் மலருந் தீயு மருவலின் வாசம் வெம்மை
தருவதெ னீரென் செய்துதானியல் பாகு மன்றே.

தன்னியல் பொழியப் பூவுந் தழலும்வந் தணைய நீரின்
மன்னிய திரண்டு செய்தி வருமிரு வினையி னானு
முன்னிய வின்பத் துன்ப முறுமுயி ருணர்வில் லாத
துன்னிய வசித்தை யின்பத் துன்பங்கள் சூழ்ந்திடாவே.

(கோ - ரு) நீர் என் செய்து தருவதுதான் இயல்புஆகும் என் அன்றே- நீரின் தன்னியல்பு ஒழிய பூவுந்தழலும் வந்தணைய இரண்டு செய்தி மன்னியது. உன்னிய இன்பத்துன்பம் உயிர்உறும். துன்னிய இன்பத்துன்பங்கள் இருவினையினானும் வரும். உணர்வுஇல்லாத அசித்தைச் சூழ்ந்திடாவே.

(பொ - ரை) இருவினை என்பதே இல்லை. இன்பத்துன்பங்களெல்லாம் இயல்பேயாகும் என்று உலகாயதர் கூறுவர். இயல்பென்பது எப்பொழுதும் ஒருதன்மையாயிருப்பதன்றி, ஒரு பொருளில் தம்முள் மாறுபட்ட இன்பத்துன்பங்களாகிய இரண்டு தன்மையாக இருக்குமென்றல் எவ்வாறு பொருந்தும்? அவ்வின்பத்துன்பம் காரணத்தாலன்றிப் பொருந்தாவாம். அக்காரணம் இரு வினையேயாம். தண்ணீரில் பூவும் அக்கினியும் பொருந்துதலால், மணமும் சூடும் உண்டாவனவாம். அவ்வாறன்றித் தண்ணீரில் மணமும் சூடுங் கிடையா. மணமும் சூடும் இயல்பு எனின், அன்று. எப்பொழுதும் ஒரு தன்மையான தட்பமாயிருத்தலே தண்ணீருக்கு இயல்பு. வாசமும் வெப்பமும் தண்ணீருக்கு மலர்தீக்களின் செயற்கையான் உளவாயின. இவைபோல, எப்பொழுதும் ஒரு தன்மையான அறிவே உயிருக்கு இயல்பு. அவ்வியல்புடைய உயிரே கருதப்படும் இன்பத்துன்பங்களை யநுபவிக்கும். அவ்வுயிருக்கு நெருங்கிய இன்பத்துன்ப அநுபவம் இருவினையாகிய செயற்கையாலுண்டாம். அவ்வனுபவம் உடம்புக்கே எனின், உடம்பு சடமாகையால் அதற்கு அநுபவித்தல் கூடாது. (எ-று)

இருவினை யென்னை என்ற விடத்து என்னை என்றது இன்மை குறித்து நின்றது. இயல்பது என்றவிடத்து அது பகுதிப் பொருள் விகுதி. அவ்விகுதி இயல்பு என்னும் அப்பண்பையே உணர்த்தி நின்றது. உணர்வில்லாத அசித்து என்ற விடத்து அசித்து என்றது வாளாபெயராய் நின்று சடத்தைக் குறித்தது. † "அடியளந்தான்று அயது" என்ற விடத்து அடியளந்தான் என்றது வாளா பெயராய் நின்று விட்டுணுவைக் குறித்தாற்போல. அசித்தை என்பது அசித்துக்கு என்னும் பொருள்பட வந்த வேற்றுமை மயக்கம். (ரு, சு.)

---

† திருக்குறள், மடியின்மை. செ-ய.

இன்பத்துன்பங்கட்குக் காரணம் முயற்சியே என்பாரை மறுத்துரைக்கின்றன.

இம்மையின் முயற்சி யாலே யிருநிதி யீட்டி யின்ப
மிம்மையே நுகர்வர் செய்தி யிலாதவர் பொருளு மின்றி
யிம்மையே யிடரு ழப்பர் வேறிரு வினைய துண்டே
லிம்மையின் முயற்சியின்றி யெய்திட வேண்டு மிங்கே.

இருவினைச் செயல்கா ணிம்மையிரும்பொரு ளின்பம்வேண்டி
வருவினை செய்யுங் காலை மடிவரு மடியு மின்றித்
தருவினை யதனி லத்தந் தானறுந் துயரும் தங்கு
மொருவினை செய்யாதோரு முடையரிவ் வுலகத் துள்ளே.

(கோ-டு.) முயற்சியாலே இம்மையின் இருநிதி ஈட்டி இன்பம் இம்மையே நுகர்வர். செய்தி இலாதவர் பொருளும் இன்றி இம்மையே இடருழப்பர். இருவினையது வேறு உண்டேல், இம்மையின் முயற்சி இன்றி இங்கே எய்திட வேண்டும். இம்மை இரும் பொருள் இன்பம் வேண்டி வருவினை செய்யும் காலை மடிவரும். மடியும் இன்றி தருவினை அதனில் அத்தந்தான் அறும். துயருந் தங்கும். இவ்வுலகத்துள்ளே ஒருவினை செய்யாதோரும் உடையர். இருவினைச் செயல்காண்.

(பொ-ரை.) இன்பத் துன்பங்களுக்குக் காரணம் முயற்சியேயாம். வினை என்பது பொருந்தாது. எதனாலெனின், முயற்சியால் இவ்வுலகின்கண் மிகுந்த பொருள்களைச் சேர்த்து இன்பத்தையும் இப்பிறப்பின்கண் அனுபவிப்பர். முயற்சியில்லாதவர் பொருளீட்டுதலுமின்றி இப்பிறப்பின்கண்ணே துன்பத்தை அநுபவிப்பர். இவ்வநுபவத்தில் வைத்து முயற்சியே இன்பத் துன்பத்திற்குக் காரணம் எனப் பிரத்தியட்சமாக அறியக்கிடத்தலின் அதுவே அமையும். அதுவன்றி, இருவினை யென்பது ஒன்றுண்டு என வேறுமோர் காரணங் கொள்ளில், அவ்வினையானது இப்பிறப்பின்கண் யாதொரு முயற்சியின்றியும் இவ்விடத்துப் பொருள் கைகூடச் செய்யவேண்டும். அவ்வாறின்மையால்,

முயற்சியைவிட வேறு காரணங் கொள்ளுதல் மிகை யென்னுங் குற்றமாகாதோவெனின், ஆகாது. இம்மைக்கண்ணே மிக்க பொருளின்பங்கள் கருதி வருகின்ற முயற்சியைச் செய்யுமிடத்து அம்முயற்சி முற்றுப்பெறாது தளர்வுண்டாகலானும், தளர்வுமின்றிப் பொருந்திய முயற்சியில் பயனின்றிப் போதலானும், முயற்சியினாலே துன்பம் எய்துதலினாலும், இவ்வுலகின்கண் யாதொரு முயற்சிசெய்யாதாரும்செல்வராய்த்தங்குதலினாலும், அம்முயற்சி பிறழ்தல் காணக்கிடத்தலின், இவ்வாறு பிறழ்தற்குரிய காரணம் வேறுண்டென்பது பெறப்படுதலால், அக்காரணமே வெளிப்பட அறியமுடியாத சஞ்சிதமாகிய இருவினையென்றறியப்படும். ()

ஒருவினை செய்யாதோரும் செல்வராதல் கிழியீடு நேர்பட்டப் பெற்றார் மாட்டுக் காணப்படும். கிழியீடு—நிலத்திற் புதைந்திருக்கும் நிதி. உடையர் என்றது இவ்விடத்துச் செல்வரை. அது, † உடையார் முனில்லார் போல், என்பதனானும் அறிக.

இவை நான்கு செய்யுளானும் உலகாயதர் மதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து, சஞ்சிதமெனப்படும் இருவினையுண்டென்பது இன்பத் துன்பமாகிய காரிய ஏதுவின் வைத்துச் சாதிக்கப்பட்டது.

அவ்வாறாயின், இன்பத்துன்பத்திற்கு இருவினையே அமையுமாகலின், ¶ முயற்சி திருவினையாக்கு முயற் றின்மை—இன்மை புகுத்திவிடும். என்பதுபற்றிச் செல்லும் மனவெழுச்சிக்குப் பயனில்லையே யெனின், அம் மனவெழுச்சிக்குப் பயன் முன்வினைப்பயனை யனுபவித்தற்குத் துணையாதலும், பின் வினைக்கு ஏதுவாதலுமாம் என அடுத்துவரும் செய்யுட்களாற் கூறப்படும். (எ.) (அ.)

முயற்சியின் பயன் மேல் வினையும் முன்வினைப்பயனை யநுபவிக்கச் செய்யுந் துணையுமென இருதிறப்படும் எனக் கூறுகின்றது.

பேறிழ வின்ப மோடு பிணிமூப்புச் சாக்கா டென்னு
மாறுமுன் கருவுட் பட்ட தவ்விதி யனுபவத்தா
லேறிடு முன்பு செய்த கன்மமிங் கிவற்றிற் கேது
தேறுநீ யினிச்செய் கன்ம மேலுடற் சேரு மென்றே.

---

† திருக்குறள், கல்வி. செ-ரு.

(**கோ - ௬.**) பேறு இழவு மூப்புச் சாக்காடு இன்பமோடு பிணி என்னும் ஆறும் முன் கருவுட்பட்டது. அவ்விதி எறிடும் அனுபவத்தால். இனிச் செய் கன்மம் மேலுடற் சேரும். முன்பு செய்தகன்ம மிங்கு இவற்றிற்கு ஏது என்றே நீ தேறு.

(**போ - ரை.**) எடுத்த உடம்பில் வரக்கடவனவாகிய இன்பத் துன்பங்கட் கேதுவான செல்வ வறுமைகளும், அவற்றால் வரும் உயர்வு இழிவுகளும், அவற்றாலாய இன்பத் துன்பங்களுமாகிய ஆறும் உடம்பு எடுப்பதற்கு முன்னே சூக்குமமாய்க் கருவினுள் அமைந்து கிடந்தனவாம். அன்றி, அப்போதப்போது உளவாவனவல்ல. முன் கருவுட் கிடந்த அவை பின்னர் அவற்றை அநுபவித்தற்குத் துணையாகிய முயற்சியால் தூலமாய் வந்து கூடும். அவ்வாறனுபவித்தற்குத் துணையாக உண்டான முயற்சி அநுபவிக்கச் செய்தலோ டொழியாது மற்றோருடம்பிற் பொருந்துவதான அவ்வறுவகைக்கும் வித்தாய் நிலைபெறும். முற்பிறவியிற் செய்த முயற்சி இப்பிறவியில் வரும் இவ்வாறற்கும் ஏதுவாயினாற் போல, இப்பிறவியிற் செய்யும் முயற்சி மேல் வினைக்கு வித்தாதலே யன்றி, இப்பொழுது பயன்தருவதில்லை யென்பதனை நீ தெளிவாயாக. (எ - று.)

பிணி என்றது இவ்விடத்துத் துன்பத்தை யுணர்த்தி நின்றது. பிணி துன்பத்தை யுணர்த்துமென்னும் இக்கருத்துப் பற்றியே "நோயு மின்பமும்" என்றார் தொல்காப்பியனாரும்.

இவ்விடத்து மூப்பு என்றது உயர்ச்சியை. அது, விண்ணோர்க் கெல்லா மூப்பாய் என்பதனாலும், மூத்த திருப்பதிகம் என்பதனாலு மறிக. இழிவு, சாக்காட்டை யொத்தலின், அதனைச் சாக்காடு என்றுபசரித்தார். மூப்புச் சாக்காடு என்பதற்கு உயர்வு இழிவு எனக்கூறாது, முதுமை, இறத்தல் எனப் பொருள் கூறின், பேறிழவு இன்பம் பிணிபோல இம் மூப்புச் சாக்காடுகள் தம்முள் மறுதலையாகாமையானும், அவற்றின் மறுதலைப் பொருள்களை வேறு கூறாமையானும், துன்பத்துள் முதுமை இறத்தல்கள் அடங்குதலின் வேறு கூற வேண்டாமையானும், காலம்பற்றி ஒருதலையான் வரும் மூப்புக்குக் கன்மங் காரணம் எனக் கூறவேண்டாமையானும், அம் முதுமையிறத்தல்களை உடன்வைத்தெண்ணி உரைசெய்தல் பொருந்தாது.

¶ திருக்குறள் ஆள்வினையுடைமை. செ-௬.

இன்பமோடு என்றவிடத்து ஒடு எண்ணின்கண் வந்தது. உடனிகழ்ச்சிப் பொருளின்கண் வந்ததன்று. கருவினுள் ஆறும் அமைந்து கிடக்கும் சூக்கும அவத்தையிற் பாகுபாடின்மை பற்றி, ஆறும் பட்டன என்று கூருது, பட்டது என்று ஒருமைப்பாலாற் கூறினர். சூக்குமமாய்ப் பட்டது என்று கூறவே, ஏறிடும் என்பது தூலமாய் விளங்குமென்பதாயிற்று. சூக்குமமாய்ப் பாகுபாடின்றிக் கிடந்து பின் தூலமாய் விளங்கும் என்ற இது சற்காரிய வாதம். அனுபவத்தால் ஏறிடும் என்றவிடத்து, அநுபவம் என்பது அதற்குக் காரணமாகிய முயற்சியைக் குறித்தது. முன்பு செய்த முயற்சி இங்கு இவற்றிற்கு ஏது என்றது, இப்பொழுது செய்யும் முயற்சி இனிவரும் அவ்வறு வகைக்கும் ஏதுவாகும் என்பதற் குவமையாக எடுத்துக்காட்டுதலின், எடுத்துக் காட்டுவமை. இச்செய்யுளில் கன்மம் என்றது முயற்சியை. மேலைச் செய்யுளில் வருவினை, தருவினை, ஒருவினை என்றவிடங்களில் வினை என்றதும் முயற்சியை, (கூ.)

வினையால் உடலும், உடலால் வினையும் வித்தும் மரமும் போலாமெனக் கூறுகின்றது.

உடற்செயல் கன்ம மிந்த வுடல் வந்த வாறே தென்னின்
விடப்படு முன்னு டம்பின் வினையிந்த வுடல்வி ளைக்குந்
தொடர்ச்சியா லொன்றுக் கொன்று தொன்றுதொட்டநாதிவித்தி
னிடத்தினின் மரம ரத்தின் வித்தும்வந் தியையு மாபோல்.

(கோ - டு.) வித்தின் இடத்தினின் மரம், மரத்தின் வித்தும் வந்து இயையும் ஆபோல் ஒன்றுக்கொன்று தொடர்ச்சியால் தொன்று தொட்டு அநாதி.

(போ - ரை.) உடலின் முயற்சியால் வினை உண்டாம். அவ்வாருயின் இவ்வுடல் உண்டாதற்குக் காரணம் யாதெனின், விடப்பட்ட முன் உடம்பின் வினையாம். அவ்வினையே இவ்வுடம்பை உண்டுபண்ணும். இவ்வாறு உடம்பால் வினையும், வினையால் உடம்பும் வருதல், வித்தின் கண் மரமும், மரத்தின்கண் வித்தும் வந்து பொருந்துமாறு போலவாம். வினை, உடல் என்னும் இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று காரண காரியமாய்த்தொன்று தொட்டு ஒன்றன்பின் ஒன்ருக வருதலால், அவற்றிற்கு முற்பிற்பாடு கூறமுடியாது. (எ - று.)

வித்தும், மரமும் ஒன்றுக் கொன்று காரண காரியமாயிருப்பினும், இறைவன் முதலாவதாக இரண்டிலொன்றைத் தான் உற்பத்தி செய்திருக்க வேண்டும். அது மரமாகவே யிருக்க வேண்டும். இக்கருத்துப்பற்றியே "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என, மணிவாசகப் பெருமான் அருளிச் செய்தனர். இதுபோல, கேவலத்தில் அறிவு தொழிற்பாடின்றிக் கிடந்த ஆன்மாவிற்குக் குருடனுக்குக் கோல் கொடுப்பது போல் இறைவன் சூக்கும தேகத்தைக் கருணையினாற் கொடுப்பன். அச்சூக்கும தேகத்தை இறைவன் தருதல் வினைகாரணமாக அன்று. அறியாமையுட்பட்டு வருந்துங் காரணத்தால் தரப்பட்டதாம். அச்சூக்கும தேகம் முத்தியடையும் வரை எத்துணைப் பிறவிகளை யெடுப்பினும் ஒன்றாகவே யிருந்து முத்தியடையினீங்கும். அச்சூக்கும தேகம் எல்லா வுயிர்க்கும் ஒரு தன்மையாகவே யிருக்கும். இருப்பினும், முன்பொருந்தி நின்ற அறியாமை பலவேறு வகைப்படுமாதலின், அவ்வறியாமைக்கேற்ப அச்சூக்கும தேகத்தினின்று தூலவுடம்பும், அவ்வுடம்பால் வினையும் மாறி மாறி வரும். ஆதலால், வினை உடல் என்னும் இரண்டிற்கும் மூலமாகிய சூக்கும தேகம் ஒன்றுண்டென்பதால் முற்பிற்பாடு கூறமுடியாத குற்றத்திற் குட்படாமை யறிக. (கo.)

முயற்சியின்றி வினைப்பயன் அநுபவித்தல் கூடாதென்றும் முன்வினைப்பயன் அநுபவிப்பதற்கான அம்முயற்சி மேல் வினைக்கு வித்தாம் என்றும் கூறுகின்றது.

முற்செயல் விதியை யிந்த முயற்சியோ டனுப வித்தா
லிச்செயல் பலிக்கு மாறென் னிதமகி. தங்கண் முன்ன
ரச்செய லானு லிங்கு மவைசெயின் மேலைக் காகும்
பிற்செயா தனுப விப்ப தின்றுபின் றொடருஞ் செய்தி.

(கோ - ௫.) செய்தி பின் தொடரும்.

(பொ - ரை.) இத்துணையுங் கூறியவாற்றால், முற்பிறவியில் செய்த முயற்சி யிப் பிறவியில் வரும் செல்வ முதலிய மேற்கூறிய ஆறற்கும் ஏதுவென்பதும், அச்செல்வ முதலியவற்றை இப்பிறவியில் முயற்சியாகிய துணையால் அநுபவித்தல்கூடுமென்பதும் பெற்றாம். அங்ஙனமாயின், அவ்வாறு முன் வினைப் பயனுக்கீடாக இப்பொழுது வருகின்ற முயற்சி மேல் உடலெடுத்

தற்குரிய வினையாமாறு யாங்ஙனமெனின், முன் வினையெனப் படும் இதம் அகிதங்களாவன முற்பிறவியில் அவ்வாறு நிகழும் முயற்சியே யன்றி வேறின்மையானால், இப்பொழுதும் அம் முயற்சி நிகழ்ந்தால் அது மேலைக்கு வினையாமென்பது தானே விளங்கும். அவ்வாறாயின், சிலவிடத்து முயற்சியின்றி இருப் பார்க்கு மேல் வினையேறுமாறு இல்லையென்று கொள்ளவருமே யெனின், அநுபவமாவது பின்னர் முயற்சியை ஒட்டியே நிகழு மாதலின், பிராரத்தவினையின் அநுபவமுள்ள அளவும் முயற்சியும் உறுதியாய் உண்டென்பது பெறப்படும். ஆதலின், அநுபவ முள்ளவிடத்து மேல்வினை ஏறுமாறில்லை என்றல் பொருந்தாது. ()

மேல், முயற்சி செய்யாதாரும் செல்வராய்த் தங்குதல் என்றது, வருந் திச் செய்யவேண்டாது எளிதிற் பெறுவது நோக்கியே ஆதலின், அத னோடு முரணுமை அறிக.

மரங்கள் முதலியவற்றிற்கும் தண்ணீர் முதலியவற்றை ஏற்றுக்கோடற் குரிய சூக்கும முயற்சி யுண்மையின், முயற்சியை ஒட்டியே அநுபவம் நிக ழும் என்பது அவற்றினுங் கண்டுகொள்க. இம் முறைமை எவ்விடத்தும் பிறழாமை உணர்த்துதற்காகவே, பிற்செயா தனுபவிப்பதின்று என, எதிர்மறை முகத்தால் வரையறுத்துக் கூறினர். முற்செயலானால் என்ற விடத்து ஆனல் என்றது அச்செயலே எனத் தெளிவின்கண் வந்தது. மேல், ௨௭-வது செய்யுளில் "காண்பவன் சிவனேயானல்" என்றாற்போல.

முயற்சியாகிய துணையைக் கொண்டே அநுபவம் நிகழும் என்றத னல், பிராரத்த அநுபவத்திற்கு முயற்சி இன்றியமையாதென்பது பெறப் படும். படவே, முயற்சியெல்லாம் பயனொடு கூடியதாக வேண்டும். சில முயற்சி பயனொடு கூடியதாகவும், சில முயற்சி பயனொடு கூடாததாகவும் காணப்படுகின்றதே யெனின், கூறுதும். பிராரத்த அநுபவத்திற்குத் துணையான முயற்சியென்றும், சஞ்சித கன்மம் பக்குவமாதற்குத் துணை யான முயற்சியென்றும் முயற்சி இருவகைப்படும். முன்னையது பய னொடு கூடியது. பின்னையது பயனொடு கூடாதது. அஃதாவது, சஞ் சித கன்மம் புத்தி தத்துவமும் மாயையும் பற்றுக்கோடாக இருக்குமாத லின், புத்தியினிடத்து வாசனா ரூபமாயிருக்கும் அந்தச் சஞ்சிதம் மேலு மேலும் முயற்சிக்கப்பட்டு இனி முயற்சிக்கவேண்டாமென்ற நிலையில் பிராரத்தமாய்ப் பலனுக்கு வரும். வாசனைபற்றி மேலுமேலும் முயற்சித் தலே பக்குவமாதல். பக்குவமாவதற்கான அம்முயற்சி அப்பொழுது

பலன்றருவதில்லை யென அறிந்து கொள்க. அவ்வாருயின், ஒன்றன்பொருட்டு வந்தது மற்ருென்றன் பொருட்டாதல் கண்டிலமாதலின், முற்பிறவியில் வினைப்பயனுக் கீடாக வந்த முயற்சி இப்பிறவிக்கு வித்தானவாறுதான் எவ்வாறெனின், அஃதுணர்த்துதற் கெழுந்தது வருஞ் செய்யுள். ()

முயற்சியானது செயல்வகையால் அநுபவமாயும் யான் செய்தே னென்னும் கருத்து வகையால் மேல் வினைக்கு வித்தாயும் இருதிறப்படும் எனக் கூறுகின்றது.

மேலைக்கு வித்து மாகி விளைந்தவை யுணவு மாகி
ஞாலத்து வருமா போல நாஞ்செயும் வினைக ளெல்லா
மேலத்தான் பலமாச் செய்யு மிதமகி தங்கட் கெல்லா
மூலத்த தாகி யென்றும் வந்திடு முறைமை யோடே.

(கோ - ரு.) ஞாலத்து விளைந்தவை உணவும் ஆகி மேலைக்கு வித்தும் ஆகி வரும் ஆ போல, நாம் செயும் வினைகளெல்லாம் என்றும் முறைமையோடே ஏலத்தான் பலம் ஆ (வந்திடும்) செய்யும் இதம் அகிதங்கட்கெல்லாம் மூலத்தது ஆகி வந்திடும்.

(பொ - ரை.) உலகத்தின்கண் உணவின் பொருட்டு விளைந்த கனி முதலாயின உணவுமாய், மேலைக்கு வித்துமாய் வருமாறு போல், நாம் செய்தேம் என்னும் முனைப்பால் செய்யப்படுவதாகிய முயற்சியும், எக்காலத்தும் முறையாற் பொருந்தச் செயல்வகையால் வினைக்கீடாய் வரும் அநுபவத்தைப் பயக்கும். நான் செய்தேனென்னும் கருத்து வகையால், செய்யாநின்ற இதம், அகிதம் எனப்படும் ஆகாமிய வினையைப் பயக்கும்.(எ-று)

எச்செயலுஞ் சிவன்செயலெனக் காணுவார்க்கு மேல் வினையேறுமாறின்றிப் பிறவியறுமென்பது கருத்து. இக்கருத்துப் பற்றியே "சிவன் செயலாலே யாதும் வருமெனத் தேறே—னூ மவந்தருநினைவை யெல்லா மகற்றிலே—னுசைவெள்ளங் கவர்ந்துகொண் டிழுப்ப வந்தக் கட்டிலேயகப்பட் டையோ—பவந்தனை யீட்டி யீட்டிப் பதைக்கின்றேன் பாவியேனே." என்றனர் ஸ்ரீதாயுமான சுவாமிகளும்.

வினை ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என மூவகைப்படும். அவற்றுள் ஆகாமியமாவது, நல்வினை தீவினை என்னும் முயற்சி. சஞ்சிதமா

வது, அம்முயற்சி பலனுக்கு வராமல் புண்ணிய பாவமாய்க் கட்டுப்பட்டிருப்பது. கட்டுப்பட்டிருக்குமிடம் செய்தவன் புத்திதத்துவமும் மாயையுமாம். பிராரத்தமாவது, அம்முயற்சியின் பயனாகிய இன்பத்துன்ப அநுபவம். இம்மூன்றற்கும் திருட்டாந்தம் வருமாறு:—வித்தை நிலத்திலிடுதல் ஆகாமியம்; அவ்வித்து இட்டவன் புத்திதத்துவம் பற்றுக்கோடாகப் பலன் தரும்வரை பூமியிற் றங்கியிருப்பது சஞ்சிதம்; பலன் அநுபவத்திற்கு வருதல் பிராரத்தமாம்.

முயற்சியால் வினையும், வினைப்பயனை அநுபவித்தலால் முயற்சியுமாகிய இவ்வியல்பு கேவலத்தினின்று நீங்கியது முதல் முத்தியடையும் வரையும் இடையீடின்றித் தொடர்ச்சியாய் வருமாதலின், "என்றும்" என்றார். மூலத்தது என்னும் ஒருமை மூலமாகிய ஆகாமிய வினையின்மேல் நின்றது.

அடுத்த செய்யுளில் இதமகிதங்களென்பது என்றதும் மூலமாகிய ஆகாமிய வினையை. சஞ்சித பிராரத்தங்களுக்கு முதலாதலின், ஆகாமியம் மூலம் எனப்பட்டது. முறைமையோடே என்றவிடத்து ஒடு, முறைமையால் எனப் பொருள் குறித்தலின், ஆனுருபாயிற்று. இது, $ "ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்" என்றாற்போல.

பேறிழவின்பமோடு என்பது முதல் இவை நான்கு செய்யுளானும் முயற்சிக்குப் பயன் முன் வினைப்பயனை யநுபவித்தற்குத் துணையாதலும் மேல் வினைக்கு வித்தாதலுமாம் எனக் கூறு முறையில், முன்வினைப் பயனை இப்பொழு தனுபவித்தொழித்தால் மேல்வினை வருதற்கு வழியின்மையான் வினையுண்மை பெறப்படா தென்பார் மதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து, வினைப்பயனை யநுபவிக்குங்காலத்து இது இறைவன் ஆணையால் வந்ததென எண்ணாது தன் செயலால் வந்ததென்றெண்ணும் கருத்து வகையால் மேல்வினை ஏறும் எனக்கூறி, இரு வினையுண்டென்பது வலியுறுத்தப்பட்டது. (கஉ.)

கன்மமே யன்றி இறைவனில்லை என்னும் மீமாஞ்சகர் மதத்தை மறுத்து, இதம் அகிதம் என்னும் முயற்சி இறைவனால் ஏன்றுகொள்ளப்பட்டு இன்பத் துன்பப் பலனை அவ்விறைவன் தருவனெனக் கூறுகின்றது.

இதமகி தங்களென்ப திகன்மன வாக்குக் காயத்
திதமுயிர்க் குறுதி செய்த லகிதமற் றதுசெய் யாமை
யிதமகி தங்களெல்லா மிறைவனே யேற்றுக் கொண்டிங்
கிதமகி தத்தா லின்பத் துன்பங்க ளீவ னன்றே.

$ தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமையியல், சூ-ம், கஉ.

(கொ-டு) உயிர்க் குறுதி செய்தல் இதம். மற்றது செய்யாமை அகிதம். இறைவனே இதம் அகிதங்களெல்லாம் ஏற்றுக்கொண்டு இங்கு இதம் அகிதத்தால் இன்பத்துன்பங்கள் ஈவன் அன்றே.

(பொ - ரை) இதம் அகிதங்களாகிய வினைகளது இயல்பு யாதெனின், நினைத்தலும் சொல்லுதலும் செய்தலுமாகிய மாறுபட்ட மன வாக்குக் காயங்களால் வேதாகமங்களில் உயிர்க் குறுதி என விதிக்கப்பட்டவற்றைச் செய்தலே இதம். அவ்வேதாகமங்களில் விலக்கியவற்றைச் செய்தலே அகிதம். இதம் செய்பவன் தன் மனதில் இதம் என்று கருதிச் செய்யுங்காலத்து அவனை யறியாது அகிதம் வருதலுங்கூடும். அகிதம் செய்பவனிடத்து இவ்வாறு இதம் வருதலுங்கூடும. அன்றியும், அகிதம் செய்பவன் அதனை அகிதம் என எண்ணான். ஆதலால், இதம் அகிதமாகிய அவ்விரண்டினையும் அறிபவன் அம்முதல்வனேயாம். அம்முதல்வனே அந்த இதம் அகிதங்களை ஏற்றுக்கொண்டு இவ்விடத்து, அவற்றிற்கேற்ப இன்பத்துன்பமாகிய பயனைத்தருவன்.()

இதம் அகிதங்களை இறைவன் ஏற்றுக்கொள்வதற்கு ஏது கருணையே எனக் கூறுகின்றது.

இறைவனிங் கேற்ப தென்னை யிதமகி தங்களென்னி
னிறைபர னுயிர்க்கு வைத்த நேசத்தி னிலைமையாகு
மறமலி யிதஞ்செய் வோருக் கநுக்கிர கத்தைச்செய்வன்
மறமலியகிதஞ் செய்யி னிக்கிரகத்தை வைப்பன்.

(கொ - டு) இறைவன் இதம் அகிதங்கள் இங்கு ஏற்பது என்னை என்னின்:

(பொ - ரை) ஆன்மாக்கள் செய்த இதம் அகிதமாகிய வினையை முதல்வன் இவ்விடத்து ஏற்றுக்கொள்ளுதற்குக் காரணம் யாதெனின், எவ்விடத்தும் நிறைந்த அம்முதல்வன் உயிர்கள் முத்தியின்பம் அடைதற்பொருட்டு வைத்த கருணையேயாம். கருணையாயினும், வினையாகிய காரணம் இதம், அகிதம் என இருவேறுவகைப்பட நிகழ்ந்தமையின், அவற்றிற்கேற்ப அறமிகுந்த நல்வினைசெய்வோர்க்கு இன்பத்தையும், மறமிகுந்த தீவினை செய்வோர்க்குத் துன்பத்தையும் செய்வன். (எ-று) (கச)

இறைவனால் செய்யப்படும் அநுக்கிரகம், நிக்கிரகம் ஆகிய இரண்டும் கருணையே எனக் கூறுகின்றது.

நிக்கிர கங்க டானு நேசத்தா லீசன் செய்வ
தக்கிர மத்தாற் குற்ற மடித்துத்தீர்த் தச்சம் பண்ணி
யிக்கிர மத்தி னாலே யீண்டற மியற்றி டென்ப
னெக்கிர மத்தி னாலு மிறைசெய லருளே யென்றும்.

(கொ - ரு) ஈசன் நிக்கிரகங்கள் செயவதுதானும் நேசத்தால்.

(பொ - ரை) முதல்வன் நல்வினை செய்தாருக்கு அநுக்கிரகம் செய்தல் போல, தீவினை செய்தாரைத் தண்டித்தலும் நல்வழிப்படுத்தற் பொருட்டுச் செய்யும் கருணையேயாம். தண்டித்தல் கருணையாவது எவ்வாறெனின், அக்கிரமத்தாற் செய்யப்பட்ட குற்றங்களைத் தண்டித்து நீக்குதலால், அச்சமுண்டாகச் செய்து இம்முறைமையால் இவ்வாறு குற்றஞ் செய்யாது, இனி அறத்தினைச் ;செய்திடல் வேண்டும் என உணர்த்துவனாதலின் கருணையேயாம். வினையின் பயனை யனுபவிக்கும் முறைமையிற் செய்யும் திரோபவ கிருத்தியமும், உடம்பினை நீக்குதலாகிய சங்கார கிருத்தியமும் உளப்பட அம்முதல்வன் செய்யும் எச்செயலும் எக்காலத்தும் கருணையே என்பதற்குஇழுக்கில்லை.()

நிக்கிரகங்கடானும் என்ற விடத்து, தான் அசை. உம்மை, அநுக்கிரகஞ்செய்தலேயன்றி என இறந்தததுதழுவிற்று. நிக்கிரகத்தின் கொடுமையைக்குறித்த இழிவு சிறப்புமாம்.

திரோபவித்தல், சங்கரித்தல்களுள்பட்ட செயல்களும் அருளேயாதலின், "எக்கிரமத்தினாலு மிறை செயலருளே" என்றார். அவ்விடத்து ஏகாரம், அருள் என்பதன்கண் ஐயமறுத்தலின் தேற்றம். (கரு.)

தண்டித்தலும் கருணையே என்பதை உவமை முகத்தாற் கூறுகின்றது.

தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்க டஞ்சொ லாற்றின்
வந்திடா விடினு றுக்கி வளாரினு லடித்துத் தீய
பந்தமு மிடுவ ரெல்லாம் பார்த்திடிற் பரிவே யாகு
மிந்தநீர் முறைமை யன்றோ வீசனார் முனிவு மென்றும்.

கo.

(போ-ரை.) உலகத்தில் தந்தை தாயர்களாவார் பெறப்பட்ட தம்முடைய புதல்வர்கள் தம்முடைய சொல்வழி நடவார்களாயின், அப்புதல்வர்களை அச்சமுறுத்தி வளாரினாலே அடித்துக் கொடிய விலங்குமிடுவர். பார்க்குமிடத்து இச் செயல்கள் செயல் வகையால் துன்பஞ் செய்தல் போலத் தோன்றினும், நல்வழிப்படுத்தவேண்டும் என்னுங் கருத்து வகையால் அருளேயாம் என்பது, பின்னர் நல்வழிப்படுதலா லறியப்படும். இதுபோல், முதல்வன் செய்யும் தண்டமும் எக்காலத்தும் கருணையேயாம். (எ-று.)

நீர் முறைமை என்பது நீர்மை போலும் முறைமை என்னும் பொருள் குறித்த உவமைத்தொகை. நீர்மை—இயல்பு.

இதமகிதங்களென்பது முதல் இவை நான்கு செய்யுளானும் கன்மமேயன்றி இறைவன் வேண்டாவென்னும் மீமாஞ்சகர்மதம்பற்றி ஆசங்கித்துப் பரிகரித்து மேல் ௪-வது செய்யுளில், மன்னிய வினைப்பலன்க டருமரன் என்றது பொருந்துமாறும், அங்ஙனந் தருதல்பற்றி அவனுக்கிழுக்கின்மையுங் கூறப்பட்டன. (கசு.)

வினையே பலன்றரு மென்பாரை மறுத்து வினையானது செய்தபொழுதே கெட்டொழிதலால் இன்பத் துன்பப் பலனை அவ்வினை தராதென்றும், இறைவனே தரவேண்டுமென்றும், கெட்டுப் பலன் தருதல் எவ்விடத்துஞ் செல்லாதென்றும் கூறுகின்றன.

செயல்களே பலத்தைச் செய்யுந் தெய்வம்வேண் டாவிங்கென்னின்
முயலுமிச் செயல்களிங்கே முழுவது மழியு மெங்கே
பயனளிப் பனவழிந்தே பலன்களைப் பண்ணுங் கெட்டே
வயலிடுந் தழையுந் தின்னு மருந்தும்பின் பலிக்கு மாபோல்

செய்க்கிடுந் தழையுந் தின்னுந் திரவிய மதுவும் போல
வுய்த்திடுஞ் செய்தி கெட்டே யுறுவிக்கும்பலத்தை யென்னின்
வைத்திடுஞ்சோறும்பாக்குமருந்தினர்வயிற்றின்மாய்ந்தான்
மெய்த்திடும் பலமு னக்கு மலமலான் வேறு முண்டோ.

(கோ-டு.) செயல்களே பலத்தைச் செய்யும். இங்குத் தெய்வம் வேண்டா என்னின், முயலும் இச் செயல்கள் இங்கே முழுவதும் அழியும். எங்கே பயனளிப்பன. வயலிடும் தழையும் தின்னும் மருந்தும் கெட்டே பின் பலிக்கும் ஆ போல், அழிந்தே பலன்களைப் பண்ணும். பலத்தை உறுவிக்கும். உனக்கு மெய்த்திடும் பலம்.

(போ-ரை.) மேற் கூறியவாறு தண்டித்தலுங் கருணையே யாயினும், வினைகளே தம் பயனைத் தருதல் கூடும். ஆதலின், வினைப்பயனைத் தருதற்கு இறைவன் வேண்டாவென்னின், செய்த அவ்வினைகள் செய்தபொழுதே இவ்விடத்து முழுவதுங் கெட்டொழிவனவாம். அவ்வினைகள் பின்னின்று பயன்றருதல் செல்லாதென மறுக்க. வயலின் கண் இட்ட தழைகளும், உண்ணப்பட்ட மருந்துகளுங் கெட்டுப் பின்னர்ப் பலிக்குமாறுபோல, வினையுங் கெட்டுப் பலத்தைப் பொருந்தச் செய்யுமென்பது பொருத்தமாதலின், வயலின்கணிட்ட தழையும் தின்னப்பட்ட மருந்தும் போல முயற்சியாலாகிய வினை கெட்டே பலத்தைப் பொருந்தச் செய்யுமெனின், உண்ணப்பட்ட சோறு முதலிய உணவுகளும் பாக்கு முதலியனவும் உண்டார் வயற்றின்கண் கெடப்பெற்றால், உனக்கு மெய்யின் கண் வரும் பலன் மலமன்றி வேறில்லையாதலின், கெட்டவை பயன்றருமென்பது, தழை மருந்து முதலிய சிலவற்றினன்றி எல்லாவற்றினுஞ் செல்லாது ஆதலின், வினை கெட்டுப் பலன்தருமென்றல் பொருந்தாது. (எ-று.)

செய்க்கிடுந் தழையுந் தின்னும் திரவிய மதுவும் போல, உய்த்திடுஞ் செய்தி கெட்டேயுறுவிக்கும் பலத்தை யென்னின் என்று மேலைச் செய்யுளிற் கூறியதைக் கெட்டுப் பலன்றருதல் எவ்விடத்துஞ் செல்லாதென்று கூறுதற்காக, அநுவாதஞ் செய்துகொண்டது.

மெய்த்திடும் பலம் என்றது மெய்யின் கண்ணதாய் வரும் பலத்தை. வயிற்றிலிடப்பட்ட சோறு முதலியன கெட்டுப் பலன் றருதல் இல்லையாயினும், வயலிலிடப்பட்ட தழை முதலியன கெட்டுப் பலன்றருதலால், சிலவற்றினுயினுங் கெட்டுப் பலன்றருதல் காணப்படுதல்பற்றி வினையுமவ்வாறு கெட்டுப் பலன்றருமென்பது பொருந்துமென்பாரை நோக்கி, அக்கூற்றை மறுத்தற் கெழுந்தது வருஞ் செய்யுள். (கஎ.) (கஅ.)

கெட்ட இடத்தில் பலன்தரும் தழை முதலியன பிறிதோரிடத்தில் பலன் தரும் வினைக்கு உவமையாகாது எனவும், அக்கினியில் காய்ச்சிய இரும்பில் சுவறிக் கெட்ட நீர் பிறிதோரிடத்தில் பலன் தாராததுபோல், கெட்ட பொருள் பிறிதோரிடத்திற் பலன் தாராதெனவுங் கூறுகின்றது.

திரவிய முவமை யன்று செய்திக்கட் டிரவியங்கள்
விரவிய விடத்தே வீந்து பலந்தரு மிம்மை யம்மை
பரவிநீ பார்நீ ரங்கி பாத்திரத் திட்ட வெல்லாங்
கரவிடு மிங்கே யெங்கே பலன் கொளக் கருதினாயே.

(**கோ-டு.**) திரவியங்கள் விரவிய இடத்தே வீந்து பலந்தரும். இம்மை அம்மை செய்திக்கண் திரவியம் உவமை அன்று. அங்கி பாத்திரத்து இட்ட நீர் எல்லாம் இங்கே கரவிடும். எங்கே பலன்கொளக் கருதினாயே. நீ பரவிப்பார்.

(**பொ-ரை.**) மேல் எடுத்துக்காட்டிய தழை முதலிய பொருள்களும், தாம் கிடந்த விடத்தே கெட்டு, கெட்ட அவ்விடத்தே பலன் தருவனவாம். அவ்வாறின்றி, இவ்வுடம்பிற் செய்தவினை இவ்விடத்தே கெட்டு, மற்றோருடம்பிற் பலன் தருமாதலின், வினைக்குத் தழை முதலிய பொருள்கள் உவமையாகாவாம். தானமாகத் தண்ணீரிலும், யாகமாக அக்கினியிலுஞ் சேர்க்கப்பட்ட பொருள்கள் அவ்விடத்துக்கெட்டு மற்றோரிடத்தில் பலிக்குமெனக்கொள்வதுபோல், வினையுங் கெட்டுப் பலன் தருமெனக் கூறுவோமெனின், தீயொழுகக் காய்ந்த பாத்திரத்தில் இட்ட நீர் முதலியன இவ்விடத்துக் கெட்டுப்போதலேயன்றி வேறிடத்துப் பலன் தருதல் காணப்படாமையால், தானமாகவும் யாகமாகவுங் கொடுத்துக் கெட்ட பொருள் பிறிதோரிடத்திற் பலன் தராது. அப்பொருளாற் செய்யும் தானம் என்ற வினையே பிறிதோரிடத்தில் பலன் தரல் வேண்டும். அவ்வினை சடமாதலின், தானே பயனாகிவருமென்றல் கூடாது. இவ்வுண்மையை நன்கு விசாரித்து ஆராய்வாயாக. (எ-று.)

செய்திக்கு என நிற்கவேண்டுவது செய்திக்கண் என நின்றது உருபு மயக்கம். பரவிப் பார்த்தலாவது, புடைபட ஒற்றி ஆராய்தல். அஃதாவது, ஏதுக்களைக்கொண்டு இனிது ஆராய்தல்.

அவ்வாறாயின், இம்மை அம்மையாதல்பற்றி இடம் வேறெனக் கொள்ளல் வேண்டாம். இருமையினும் வினை செய்தவர் ஒருவரேயாகலின், அவ்வினை செய்தவரறிவின் கண்ணே அடங்கி வயலிலிட்ட தழை முதலியனபோல அவ்வறிவினிடத்தே பயனைத்தோற்றுவிக்கும் என்றல் கூடுமாதலின், திரவிய மூவமையன்றென மறுத்தல் பொருந்தாது என்பாரை நோக்கி மறுத்தற்கெழுந்தது வருஞ் செய்யுள். (கசு.)

செய்தவர் மனத்தில் வினை கிடந்து வேறிடத்திற் பலன் தருதலால் இட வேற்றுமை கொண்டு தழை உவமை பொருந்தாதென்றல் கூடாது என்பாரை மறுத்துரைக்கின்றது.

செய்தவர் மனத்தே யெல்லாச் செய்தியுங் கிடந்து பின்னா
ரெய்தவே பலன்களீனு மென்றிடி னிருஞ்சு வர்க்கம்
பொய்யர்வாழ் நரகம் பூமி புந்தியிற் கிடந்து போந்த
தையனே யழகிதுன்சொ லிந்திர சால மாய்த்தே.

(கோ-டு.) ஐயனே உன் சொல் அழகிது. இந்திரசாலம் ஆய்த்தே.

(பொ-ரை.) வினை செய்தவர் மனத்தின் கண்ணே எல்லா வினைகளுந்தங்கிப் பின்னர்ப் பொருந்தும்படி பலன் தருமாதலின், வயலின்கண் தழை கெட்டுப் பலன் தருதலாகிய உவமை கூடாதென்றது பொருந்தாதென்று கூற, வினைக்குப்பயனாவன பெரிய சுவர்க்கம், பொய்யர் வாழ்கின்ற நரகம், பூமி என்னும் இவற்றுட்பட்ட பல்வேறுவகைப் புவன போகங்களேயாம். அவையனைத்தும் வயலின்கண் விளைவுபோல, ஆன்மபோதத்தின்கண் கிடந்து உளவாக வேண்டுமே. அவ்வாறுளவாமென்றல் ஐயனே உனதழகிதாய சொன் மாத்திரையேயன்றிப் பொருள்படாத இந்திர சாலம் போலுமாம். (எ-று.)

ஐயனே என்றது இழித்தற்கண் வந்த குறிப்பு மொழி. செய்தவர் மனத்தைக் கூறவே, ஏற்றலு முயற்சியாதலின், இனம்பற்றி ஏற்பவர் மனமும் கொள்ளப்படும். இவ்வாறு இருவர் மனமும் கொள்ளப்படும் என்னும் இக்கருத்துப்பற்றியே மறுக்குமிடத்து, செய்தவர் புந்தியில்

வெளிப்படக் கூறாது, இருவருக்கும் பொதுவாகப் புந்தியிற் கிடந்து போந்தது எனக் கூறினர். (உ0.)

செயல் யாவுஞ் செய்யப்படுகின்ற பொருளிற் கிடந்துபலன் றருமென்பாரையு மறுத்து வினையின் பலனைத் தருதற்கு இறைவன் வேண்டுமெனவும், தருதல் அவன் கடமை யெனவும் கூறுகின்றது.

தானஞ்செய் பொருட ரித்தோர் செய்தவர் தக்க செய்தி
யூனம்பின் னுறவே காண்டும் பலமுறு விப்பான் வேண்டு
மீனமில் செய்தி யீச னிடும்பணி யிவைகாஞ் செய்தா
னூனங்க ளதிக நோக்கி நுகர்விப்பன் வினை நோய் தீர.

(கோ-டு.) பின் ஊனம் உறவே காண்டும் எனவும், வினைநோய் தீர நுகர்விப்பன் எனவுங் கூட்டுக.

(போ-ரை.) வினையானது செய்தவர் மனத்தின்கட் கிடந்து பலன்றருமென்றல் பொருந்தாதாயினுஞ் செய்யப்படும் பொருளிற் கிடந்து பின்னர்ப் பலன்றருமெனக் கொள்வோமெனின், தானஞ் செய்யப்பட்ட பொருளும், தானத்தை ஏற்றோரும், தானஞ்செய்தோரும், தானமாகியசெயலும், ஆகிய அனைத்தும் நிலையின்றிக் கெட்டொழிவனவேயாம். ஆதலால் நிலைபேறுடைய முதற் கடவுளே அவற்றையறிந்து பலன் தரல் வேண்டும். அம்முதற்கடவுள் பலன்தருதற்குச் சம்பந்தமென்னையெனின், குறைவில்லாத முயற்சி யெல்லாம் முன் வினைப்பயனையநுபவித்தற்பொருட்டு முதல்வனுற்றரப்படுகின்றஏவல்வினையாதலால், அவ்வேவல் வினையாகிய முயற்சியை நாம் செய்தோமென்னும் முனைப்பாற் செய்தால் அம்முனைப்புத் தீருதற் பொருட்டு அம்முயற்சியினலாகிய பாவ புண்ணியங்களையறிந்து அப்பாவ புண்ணியமாகிய வினை நோய் தீருதற் பொருட்டுப் பலன் தருதல் முயற்சியைக் கூட்டுவித்த அவ்விறைவனுக்குக் கடப்பாடாம். (எ-று.)

தானஞ்செய்பொருள் என்றது உபலக்கணமாதலின், அப்பொருளோடு கூட இடம் காலம் முதலியனவுங் கொள்ளப்படும். முயற்சி இறை ...ட்டளை யென்பது வருஞ் செய்யுளிற் பெறப்படும். (உக.)

வினை செய்வதாகிய உயிர் ஒன்றும், அவ்வினை நிகழ்தற்குரிய துணைகள் ஏழும், ஆக எட்டு முதல் நிலைகளும் சிற்றறிவுடைய தும் சடமுமாதலின் முற்றறிவுடைய முதல்வனுக்கு வினைப் பயனைக் கூட்டுவித்தல் கடமையாயிற்றெனக் கூறுகின்றது.

உலகுடல் கரணங் கால முறுபல நியதி செய்தி
பலவிவை கொண்டு கன்மம் பண்ணுவ துண்ப தானு
னிலவிடாதிவை தாஞ்சென் றுநினைந்துயிர்நிறுத்திக்கொள்ளா
தலகிலா வறிவ னாணை யணைத்திடு மருளி னாலே.

(கோ - டு.) இவை தாஞ் சென்று நிலவிடாது.

(போ-ரை.) முயற்சிக்கு முதற்கருத்தாவாகியஉயிரானது, அவ்வுயிர் தங்குதற்கிடமாகிய உடலும், உடலிற் பொருந்திய கருவிகளாகிய கரணமும், வினை செய்தற்குரிய காலமும், வினையின் பயனாகப் பொருந்தும் செயப்படு பொருளும், இதற்காக, இது பயனாக என்னும் நியதியும், செயலும் ஆகிய ஏழு முதல் நிலைகளையும் துணையாகக்கொண்டு வினைகளைச் செய்தலும் அநுபவித்தலும் கூடும் என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததாம். அவ்வேழு முதல் நிலைகளும் உயிரையின்றித் தாமே தொழிற்பட மாட்டாத சடமாதலால், அவை தாமே உயிரை வந்து கூட மாட்டா. அம்முதல்நிலைகளையின்றி அறிவு தொழிற்படமாட்டாத அவ்வுயிர் அம்முதல்நிலைகளைத்தானே கருதி நிறுத்திக் கொள்ளாது. உயிரும், ஏனையமுதல்நிலைகளும் இவ்வாறாகவின்பாரிசேட அளவையானே அளவிட்டறிதற்கரிய சுதந்திர அறிவினனாகிய முதல்வனே தனது ஆணையாகிய திருவருளால் உயிருக்கு அவ்வேழு முதல்நிலைகளைக் கூட்டுவன். ஆதலால், அம்முதல் நிலைகளோடு கூடிச் செய்யும் செயல்களெல்லாம் இறைவன் கட்டளையேயாம். (எ-று.)

ஆதலால், அச்செயல்களெல்லாம் இறைவன் கட்டளையேயாம் என்பது குறிப்பெச்சம். இவ்விடத்து உலகு என்றது உயிர்களை. நியதி என்பதனால் இன்னதற்காக, இது பயனாக என்னும் இரண்டு காரகங்களையும் தழுவினர். இன்னதற்காக என்பது, செயப்படு பொருளைப் பிரி

தொரு பொருள் பெற்றுக் கொள்ளுவதற்கு உபகாரமாக என்னும்பொருள் குறித்தது. இது பயனாக என்பது, அந்தப் பிறிதொரு பொருள் அந்தச் செயப்படுபொருளை ஏற்றுக்கொண்டதனால் அவ்வினை முதலுக்குத் தரும் பயன் குறித்தது. பண்ணுவது, உண்பது என்னும் ஒருமைகள் பண்ணுதல் உண்ணுதல் என்னுந் தொழில்கள்மேல் நின்றன. இச்செய்யுளிற் கூறப்பட்ட உயிர் முதலிய எட்டினையும் வடநூலார் காரகம் என்பர். அது, முதல்நிலை என்னும் பொருள் குறித்ததென்பது, *'வினையே' என்றற் றொடக்கத்துத் தொல்காப்பியச் சூத்திரத்தாலறிக. (உஉ.)

வினைப்பயனை யநுபவித்தற்காக இறைவனாற் கூட்டும் முயற்சியாகிய அக்கட்டளை நல்லனவாயின் அறமாயும், தீயனவாயின் பாவமாயும் இருதிறப்படும் எனக் கூறுகின்றது.

ஒழுக்கமன் பருளா சார முபசார முறவு சீலம்
வழுக்கிலாத் தவந்தா னங்கள் வந்தித்தல் வணங்கல்வாய்மை
யழுக்கிலாத் துறவு டக்க மறிவொடர்ச் சித்த லாதி
யிழுக்கிலா வறங்க ளானா லிறங்குவான் பணிய றங்கள்.

(பொ - ரை.) வினைப்பயனை அநுபவிப்பதற்காக இறைவனாற்றரப்படும் கட்டளையாகிய செயலானது உலகத்தோடொட்ட ஒழுகுதலுடைமை, யாவர்மாட்டும் அன்புடைமை, அருளுடைமை, வேதாகமங்களில் விதித்தவாறு அநுட்டித்தலுடைமை, தக்கோர் மாட்டுச் செய்யும் உபசரிப்புடைமை, யாவர்மாட்டும் கலப்புடைமை, நற்குணமுடைமை, ஐம்பொறியடக்கல் விரதங் காத்தல் முதலிய குற்றமில்லாத தவமுடைமை, தக்கோர்மாட்டு உவகையோடு செய்யும் தானங்களுடைமை, தன்னின் மூத்தார் மாட்டுத் தோத்திரஞ் செய்தலுடைமை, நமஸ்காரஞ் செய்தலுடைமை, சத்தியமுடைமை, பிறர் மனை விழையாமை வரைவின்

---

* "வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலங் கருவி யென்றா
வின்னதற் கிது பய னாக வென்னு
மன்ன மரபி னிரண் டொடுந் தொகைஇ
யாயெட் டென்ப தொழின்முத னிலையே."
(சொல்லதிகாரம், வேற்றுமை மயங்கியல் சூ-உகூ.)

மகளிர் விழையாமை முதலிய குற்றமில்லாத ஆண் தகைமையுடைமை, தீ நெறிக்கட் செல்லாது அடங்குதலுடைமை, தக்கன இவை தகாதன இவை எனப் பகுத்தறிதலுடைமை, தன்னின் மூத்தார்மாட்டு அர்ச்சித்தலுடைமை ஆகிய பதினாறும் மற்றும் அவை போல்வனவுமாகிய குற்றமில்லாத நல்வினைகளாயின், கருணையினாற் றாப்பட்ட அக்கட்டளை அறமாய் முடியும். இவற்றின் மறுதலையான தீவினைகளாயின் பாவமாய் முடியும், (எ-று.)

ஒழுக்கம் என்றது இவ்விடத்து உலகத்தோடொட்ட ஒழுகுதலை.

இவ்விடத்துத் துறவு என்றது, பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் நான்கு நிலையினும் சேரற்குரிய பிறர்மனை விழையாமை, வரைவின் மகளிர் விழையாமை முதலிய ஆண்டகைமையே என்றுணர்த்த வேண்டி 'அழுக்கிலா' என விசேடணங் கொடுத்துக் கூறினார். அறிவாவது தக்கன இவை, தகாதன இவை எனப் பகுத்தறிதல். வந்தித்தல், வணங்கல், அர்ச்சித்தல் என்பன தன்னின் மூத்தார் மாட்டுச் செய்வனவற்றை. இறைவன்மாட்டுச் செய்வனவன்று. அது, "இனமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றி" என, அடுத்து வருஞ் செய்யுளிற் பெறப்படும். அறிவொடு என்பதில் ஒடு ஒவ்வொன்றையும் எண்ணின எண்ணின்கண் வந்தது. இவ்வொழுக்கம் முதலிய வினைத்தும் இயமம், நியமம், என்னும் இருவகையுளடங்கி அறஞ்செய்யும் சமயத்தார்க் கெல்லாம் பொதுவகையான் வேண்டப்படும் அங்கமாகலின், தெய்வத்தை வணங்கும் ஒழுக்கத்தின் வேறாக இவற்றைத் தனித்தெடுத்துக் கூறினார். (உங.)

நல்வினையினுள்ளும் சிறந்ததாகிய கடவுள் வழிபாடு தத்தம் மதத்திற் கேற்றவாறு செய்யினும் மேல் சிவன் முதலென்றதனோடு முரணாது அவ்வழிபாட்டிற்குப் பயன் சிவபெருமானே தருவன் எனக் கூறுகின்றது.

மனமது நினைய வாக்கு வழுத்தமந் திரங்கள் சொல்ல
வினமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுத லகற்றி வாழுஞ் செயலற மானால் யார்க்கு
முனமொரு தெய்வ மெங்குஞ் செயற்குமுன் னிலையா மன்றே.

(கோ - டு.) சினம் முதல் அகற்றி அங்கு இச்சித்த தெய்வம் மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல கையில் இன மலர்

கொண்டு போற்றி வாழும் செயல் அறமானல் யார்க்கும் முனம் ஒரு தெய்வம் எங்குஞ் செயற்கு முன்னிலேயாம் அன்றே.

(போ - ரை.) மேற்கூறிய ஒழுக்கம் முதலிய நன்மைகளை உடையனுய், அவற்றின் மறுதலேயாகிய தீமைகளை நீக்கி ஒழுகுவாஞெருவனுக்கு தன் கருத்துக்குப் பொருந்தியதொரு கடவுளை மனத்தால் நினைந்து, வாக்கால் துதித்து, அக்கடவுளுக்குரிய மந்திரங்களை உச்சரித்து, கைகளால் பல மலர்களைக் கொண்டு அர்ச்சித்து வழிபட்டு வாழுஞ் செயலாகிய அறமுளதாயின், அவனுக்கு, முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாகிய சிவபெருமானே, அவன் வழிபடும் தெய்வத்தினிடமாக நின்று அச்செயலே ஏற்றுக்கொண்டு பயன் கொடுப்பன். (எ-று.)

சினமுதலகற்றி என்பது, சின முதலிய தீமைகளை நீக்கி யொழுகுவானுக்கு என்னும் பொருள் குறித்தலின் பெயராய் நின்று நான்கனுருபு தொக்கது. சின முதலகற்றுதல் கூறவே, ஒழுக்க முதலிய வுடைமை பெறப்பட்டது.

மேலைச் செய்யுளிற் கூறிய ஒழுக்க முதலிய அங்கங்கட்கு இச்செய்யுளிற் கூறிய தெய்வ வணக்கமாகிய அறம் அங்கியாகலின், சின முதலகற்றுதலேயும் இச்செய்யுளில் உடனெடுத் தோதினர். (உசு.)

வழிபட்டார்க்கு வழிபடப்பட்ட அவ்வத் தெய்வமே பலன் கொடுக்கும் என்பாரை மறுத்துரைக்கின்றது.

யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக ஞர்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு
மாதலா னிவையிலாதா னறிந்தருள் செய்வ னன்றே.

(கோ - டு.) மற்று அத்தெய்வங்கள் வேதனைப்படும் இறக்கும் பிறக்கும் மேல் வினையுஞ் செய்யும். ஆதலான், இவை இலாதான் மாது ஒரு பாகனர்தாம். யாதொரு தெய்வம் கொண்டீர் ஆங்கே அத்தெய்வமாகி வருவர். அறிந்து அருள் செய்வன் அன்றே.

(போ - ரை.) அவ்வாறு வழிபட்டார்க்கு வழிபடப்பட்ட அவ்வத்தெய்வமே பலன் கொடுக்குமெனில், அதனல் உண்டாம் குறை என்னை என்பார்க்கு, நால்வகை யோகியுள் ஒரு

யோநிவாய்ப்பட்டுப் பிறப்பனவெல்லாம் சீவ வர்க்கம். அவ்வாறு யோநிவாய்ப்பட்டுப் பிறத்தலில்லாதது பதிப்பொருள். பதிக்கும், சீவனுக்கும் தம்முள் வேற்றுமை இதுவேயாம். ஆதலின், ஏனைத் தெய்வமெல்லாம் யோநிவாய்ப்பட்டுப் பிறந்திறத்தலே யன்றி, மேல்வினையுஞ் செய்தல் கேட்கப்படுதலால் சுதந்திர அறிவில்லாதனவேயாம். அவை ஒன்றும் இல்லாத சுதந்திர அறிவுடையன் சிவபெருமானேயாம். அச்சிவபிரான் ஒருவனே நீர் எவ்விடத்து யாதொரு தெய்வத்தைப் பொருளாகக் கொண்டீராயினும் அவ்விடத்து அத்தெய்வத்தினிடமாக நின்று அவ்வழிபாட்டை யறிந்து உயிர்கட்குப் பலனைக் கூட்டுவன். ஏனைத் தெய்வம் சுதந்திர அறிவின்மையாற் றானே பலன் கொடுக்கமாட்டாது. (எ - று.)

மற்று என்பது மாதொரு பாகனார்தாம் அத்தெய்வமாகி வருவர் என்னும் வினையை மாற்றி அத்தெய்வங்கள் வேதனைப்படும் இறக்கும் பிறக்கும் எனக்கூறுதற்கு இடையே நிற்றலால் வினைமாற்று. மாதொரு பாகனார்தாம் வருவர் எனப் பலர்பாலாக மேலே கூறி, இவையிலாதா னறிந்தருள் செய்வன் என ஒருமைப் பாலாகப் பின்னர்க் கூறியது பால்வழுவாகாதோவெனின், ஆகாது. என்னை? மாதொரு பாகனார் எனப் பொதுவகையானெடுத்துக் காட்டி, வேதனைப்படுதல் முதலியன இலாதான் எனச் சிறப்பு வகையாற் கூறினாராதலினென்க. (உரு.)

ஒருவரை வழிபட மற்றொருவர் பலன்றருதல் கூடுமென்று உவமை முகத்தாற் கூறுகின்றது.

இங்குநாஞ் சிலர்க்குப் பூசை யியற்றினா லிவர்க ளோவக்
தங்குவான் றருவா ரன்றே லத்தெய்வ மத்த னைக்கா
ணெங்கும்வாழ் தெய்வ மெல்லா மிறைவனா ணையினானிற்ப
தங்குநாஞ் செய்யுஞ் செய்திக் காணவைப் பாலளிப்பன்.

(**கோ - டு.**) சிலர்க்கு இங்கு நாம் பூசைஇயற்றினால் எனவும், இறைவன் ஆணையினால் எங்கும் வாழ் தெய்வம் எல்லாம் நிற்பது எனவுங்கூட்டுக.

(**போ - ரை.**) மேற்கூறியவாற்றால் ஒருவரை வழிபட மற்றொருவர் பலன் கொடுப்பரென்பது பெறப்படும். அவ்வாறு

பலன் றருதல் உலகத்துக் கண்டிலமென்பாரை நோக்கி, பசு, பார்ப்பார், தந்தை, தாய் முதலாயினுரை இவ்விடத்து நாம் வழிபட்டால் சுவர்க்க முதலிய உலகங்களில் அவர்களா வந்து பலன் றருகின்றுர்கள்? நம் வழிபாட்டைக் கடவுள் அறிந்து அதற்கேற்ற பலன்களைத் தரும் என்பது எல்லார்க்கும் சம்மத மான முடிவாம். அதுபோல எத்தெய்வத்தை வழிபடினும், அவ்வழிபாட்டிற்குச் சிவபெருமானே பலன்றருவன் என்றல் பொருந்தும். அவ்வாருயின், பிற தெய்வத்தை வழிபட்டார்க்கு அவ்வத்தெய்வமே எதிர்தோன்றி நின்று பலன் கொடுத்ததென நூல்களிற் கூறப்படுதலின், அத்தெய்வங்களும் பலன் கொடுக் கும் வல்லமையுடையன வென எண்ண வருமே யெனின், அரச ஞணையே மந்திரி முதலாயினுரிடத்து நின்று பிறர்க்குப் பலன் கொடுக்குமாறு போல, சிவபெருமானே தன் ஆணையைத் தன் ஏவல் வழிநிற்கும் அவ்வத் தேவரிடம் வைத்து அத்தேவரிடத்து நாம் செய்யும் வழிபாட்டிற்கு அத்தேவரிடமாக நின்று பலன் றருவன் ஆதலால், ஏனைத் தேவர்கள் சுதந்திரமாய்ப் பிறருக்குப் பலன் கொடுக்குமாறில்லை. (எ - று.)

இதனுல் பசுவர்க்கமாகிய பிற தெய்வங்களின் வழிபாட்டிற்குச் சிவ பெருமானே பலன்றருவனென்பது பெறப்பட்டமையால், பசு புண்ணிய மும் சிவபுண்ணியமாகுமென்று கொள்ள வருமெனின், பசுக்களை நோக் கிச் செய்யும் புண்ணியம் பசு புண்ணியம். பதியை நோக்கிச் செய்யும் புண்ணியம் பதி புண்ணியம். ஆயினும், இகபர போகத்தை விரும்பிப் பதியை நோக்கிச் செய்யும் புண்ணியம் பசு புண்ணியமே. முத்தி இன் பம் வேண்டிப் பதியை நோக்கிச் செய்யும் புண்ணியம் பதி புண்ணியமே. இனிப் பசுக்களிடத்துச் சிவபாவனையோடு செய்யும் புண்ணியம் பதி புண்ணியமாம். பதியினிடத்து நம்மிலொருவனென்னும் பசு பாவனை யோடு செய்யும் புண்ணியம் பசு புண்ணியமாம் எனக் கூறுதலும் உள வாம். ஆதலால், புண்ணியச் செயல் செய்பவன் கருத்து வகையால் வேறுபடுதலே யன்றிக் கொள்வோர் கருத்து வகையால் வேறுபடுதலில்லை யாதலின், ஏனைத் தெய்வங்களையே முழுமுதற் கடவுளென எண்ணிச் செய்யும் பசு புண்ணியம் சிவபுண்ணியமாகா தென்றறிந்து கொள்க.

நிற்பது என்னும் ஒருமை நிற்றல் என்னுந் தொழில் மேல் நின்று வைத்து என்னும் பொருள் குறித்தது.

ஒழுக்கமன்பருள் என்பது முதல் இவை நான்கு செய்யுளானும் ஈச னிடும் பணியாகிய முயற்சியை நான் செய்தேன் என்னுந் தற்போத முனைப்பாற் செய்தலால் பாவ புண்ணியங்களாமாறும், அப்பாவ புண்ணி யங்களை நோக்கி இன்பத் துன்பங்களை யநுபவிக்கச் செய்யுமாறும், பொது வகையானுஞ் சிறப்பு வகையானுங் கூறப்பட்டன. ஒழுக்கம் முதலியண பொதுவகை. தத்தம் மதத்திற்கேற்ற கடவுள் வழிபாடு சிறப்பு வகை.

இனி, அம்முயற்சிகளாலாய பாவபுண்ணியங்களுள் சிவபெருமானைக் குறித்துச் செய்யும் புண்ணியமாயின் விசேட புண்ணிய மென்றும், சிவ பெருமானைக் குறித்துச் செய்யும் பாவமாயின் அது மிகுந்த பாவமென்றும் பின்னர்க் கூறுகின்றார். (௨௬.)

பலன்றருபவன் சிவபெருமானே யாதலின், அச்சிவபெரு மானை வழிபடுதலே சிறப்பான அறம் எனக் கூறுகின்றது.

காண்பவன் சிவனே யானு லவனடிக் கன்பு செய்கை
மாண்பற மரன்றன் பாத மறந்துசெ யறங்க ளெல்லாம்
வீண்செயலிறைவன்சொன்னவிதியறம்விருப்பொன்றில்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை புரிந்து கொள்ளே.

(**கோ - ௫.**) அறம் இறைவன் சொன்ன விதி.

(**போ-ரை.**) இதுவரையுங் கூறியவாற்றால் ஏனைத் தெய் வங்கள் மாட்டுச் செய்யும் வழிபாடுகளையும் சிவபெருமானே ஏற்றுக்கொண்டு பலன்றருவன் என்பது பெறப்பட்டது. ஆத லான், அச்சிவபிரான் றிருவடியை வழிபடுதலே நல்ல அறமாம். அவன் றிருவடியை மறந்து செய்கின்ற அறங்களெல்லாம் வீண் செயல்களாம். அன்றியும் புண்ணியமாவது அச்சிவபெருமானால் வேதாகமங்களின் விதிக்கப்படும் விதியாதலான் அவ்வாறு விதித் தற்குச் சிவபிரான் ஒரு பொருளிலும் பற்றிலனுய் உயிர்க ளிடத்து வைத்த கருணையே காரணமாதலின், அந்நன்றி செய்த அச்சிவபிரான் றிருவடிப் பூசனையே உறுதியாகச் செய்யக் கடவது. (எ - று.)

இல்லான், பூண்டனன் என்பன இல்லானுகியும் எனவும், பூண்டு எனவும் பொருள் தந்து நிற்றலின் முற்றெச்சங்கள். சொல்லால் முற்று ம், பொருளால் எச்சமாயும் நிற்பது முற்றெச்சம். விருப்பொன்றில்

லான் என்றவிடத்து விருப்பு ஒன்றும் இல்லான் என்னும் பொருள்படச் சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. (உஎ.)

சிவபெருமானை வழிபடுதற் குரிய இடங்களிவை எனக் கூறுகின்றது.

தாபர சங்க மங்க ளென்றிரண் டுருவி னின்று
மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்ப
னீபரன் றன்னை நெஞ்சி னினைவையே னிறைந்த பூசை
யாய்பரம் பொருளை நாளு மர்ச்சிநீ யன்புசெய்தே.

[கோ - டு.] பூசை மாபரன் தாபரசங்கமங்கள் என்ற இரண்டு உருவில் நின்று நீ பரன்றன்னை நெஞ்சில் நினைவையேல், நிறைந்த பூசை கொண்டு மன் உயிர்க்கு அருளை வைப்பன். நீ ஆய் பரம்பொருளை நாளும் அன்பு செய்தே அர்ச்சி.

(பொ - ரை.) மேற்கூறியவாறு சிவபெருமானை வழிபடுதற்கு வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாத அச்சிவபெருமான் திருமேனி கொண்டவிடத்தும் அத்திருமேனி சுத்த மாயா தத்துவ புவனத்தில் தோன்றி விளங்குவதன்றி இவ்வுலகத்தில் தோன்றி விளங்குவதின்மையால், இவ்விடத்திலுள்ளார் வழிபடுதற்கு சதாசிவதத்துவத்தின்கண் வைகும் மாட்சிமை பெற்ற இறைவன் புறத்தே திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனியும், விபூதி உருத்திராக்கமாகிய திருவேடமும் ஆகிய இரண்டையும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், நீ அப்பரனை மனத்தால் வழிபட விரும்புவையாயின் அகத்தே உயிரிடமாகக் கொண்டு நின்றும், இங்குள்ளார் செய்யும் நிறைந்த பூசையை ஏற்று அவர்க்கு அருள் செய்வன். ஆதலான், நீ இவ்வுண்மையை யறிந்து பரம் பொருளைத் தினந்தோறும் மேற்குறித்த இடங்களில் பத்தி செய்து வழிபடுக. (எ - று.) (உஅ.)

அறமுஞ் சிவபிரானிடத்து அன்பிலாது செய்யின் பாவமாகு மெனவும், பாவமும் அச்சிவபிரானிடத்து அன்போடு செய்யின் அறமாகு மெனவும் கூறுகின்றது.

அரனடிக் கன்பர் செய்யும் பாவமு மறம தாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி
கரரினிற் பாலன் செய்த பாதக நன்மை யாய்த்தே.

(பொ- - ரை.) அறம் பாவங்கள் பலன் றருவது, அவ் வறம் பாவங்களைக் கொள்வோர் உயர்வு தாழ்வு பற்றியேயாம். அவ்வாறன்றி, செய்வாரது உயர்வு தாழ்வு பற்றியாவது, செய்யப்படும் வினைகளின் உயர்வு தாழ்வு பற்றியாவது பலன் றருதலன்று. ஆதலால், சிவபெருமான் றிருவடிக்கு அன்புடையார் பாவஞ் செய்யினும் அப்பாவமானது புண்ணியமாய் முடியும். அவன் றிருவடிக்கு அன்பிலார் செய்யும் புண்ணியமானது பாவமாய் முடியும். இவற்றிற்குத், தேவரில் வரங்கள் பெற்ற தக்கன் செய்த பெரிய யாகமானது புண்ணியமே யாயினும், இறைவனிடத்து அன்பில்லாமையால் பாதகமாய் முடிந்ததும், மாநுடரில் பாலப்பருவத்தையுடைய சண்டீச நாயனார் தமது பிதாவுக்குச் செய்த கொலைப் பாதகமானது இறைவனிடத்து அன்புடைமையால் புண்ணியமாய் முடிந்ததும் சான்றாம். ஆதலால், சிவபெருமானையே அர்ச்சித்தல் வேண்டும். (எ - று.)

காண்பவன் சிவனேயானால் என்பது முதல் இவை மூன்று செய்யுளானும் முயற்சியாலுண்டாம் பாவ புண்ணியங்களை நோக்கி அநுபவிக்கச் செய்தலின்கணுண்டாம் விசேடங் கூறப்பட்டது. சிவபெருமானிடத்து அன்பு வைத்துச் செய்யும் புண்ணியமும் பாவமும் விசேட புண்ணியமென்பதும், சிவபெருமானிடத்து அன்பில்லாது செய்யும் புண்ணியம் விசேட பாவமென்பதும் அறிவித்தவாறு காண்க.

இதமகிதங்களென்பது முதல் இச்செய்யுள் வரையும் மீமாஞ்சகர் மதம் பற்றி யாசங்கித்துப் பரிகரித்து இருவினைகள் செய்த பொழுதே அழியும் என அதனியல்பு கூறுமுகத்தானும், அழிந்த அவற்றை அறிந்து கூட்டுதலின் அவை இறை பணியாமாறு கூறுமுகத்தானும், அவற்றை இறைபணி எனக்கருதாது நான் செய்தேனென்னு முனைப்பாற் செய்யுமாறு கூறுமுகத்தானும், அவ்விருவினைகள் புண்ணிய பாவ ரூபமாய்ப் பயன்படுமாறு கூறுமுகத்தானும், தாமே மருவிடா வடிவுங் கன்ம பலன்

களு மறுமைக் கண்ணே என்றதனை வலியுறுத்தி வினைப்பயனைக் கூட்டு தற்கு இறைவன் வேண்டுமெனச் சாதித்தவாறும்.

இனி, வைத்தியனும் அரசனும் போல் என்ற உவமைப் பொருளைக் கூறத் தொடங்குகின்றார். (உசு.)

அரச உவமை கூறத் தொடங்கி உயிர்கட்கு வினைப்பயன் களைத் தருதலேயன்றி பாவ புண்ணியங்களைப் பகுத்தறிவதற்கு வேதாகமங்களையும் நரக சுவர்க்கங்களையும் சிவபெருமானே தந் தருளுவனெனக் கூறுகின்றது.

மறைகளீ சன்சொ லச்சொல் வழிவாரா வுயிரை வைக்குஞ்
சிறைகண்மா நிரய மிட்ட பணிசெய்வோர் செல்வத் தோடு
முறையுமா பதிக ளும்ப ருலகங்கள் யோகிக் கெல்லா
மிறைவனு ணையினு லின்பத் துன்பங்க ளியைவதாகும்.

(கொ-ரு.) மறைகள் ஈசன் சொல். மாநிரயம் அச்சொல் வழிவாரா உயிரை வைக்கும் சிறைகள். உம்பர் உலகங்கள் இட்ட பணிசெய்வோர் செல்வத்தோடும் உறையும் மாபதிகள். யோகிக்கெல்லாம் இன்பத் துன் பங்கள் இறைவன் ஆணையினால் இயைவதாகும்.

(பொ-ரை.) மேற்கூறியவாற்றால் இருவினை முதலாயின அழிவெய்துவனவாதலின், அவ் விருவினைகளைச் சிவபிரானே பொருந்தி அறிந்து இன்பத்துன்பங்கள் தருவனென்பது பெறப் பட்டது. அதுவன்றியும், வேதாகமங்கள் என்பன சிவபிரான் கற்பித்தருளிய வாய்மொழியே. பெரிய நரகமாவது, அவ்வேதாகம வழி நடவாதாரைத் தண்டித்தற் பொருட்டு அவ னால் அமைக்கப்பட்ட சிறைக்களமே. சுவர்க்க உலகமாவது, அவ்வேதாகம வழி நடப்போரை வாழ்வித்தற் பொருட்டு அவ னால் அமைக்கப்பட்ட பெரிய நகரமே. ஆதலால், உயிர்கட்கு இன்பத் துன்பங்கள் அச்சிவபெருமான் ஆணையால் ஆகற்பாலன வேயாம். (எ-று.)

இயைவது என்னும் ஒருமை இயைதல் என்னுந் தொழில்மேல் நின்றது. (௩௦.)

வேதாகமங்களின் விதியில் தவறினாரைத் தண்டித்தற்கும் அவ்விதியில் ஒழுகினாரை வாழ்வித்தற்கும் அரசனை உவமை யாகக் கூறுகின்றது.

ஆணையா லவனி மன்ன னருமறை முறைசெய் யாரை
யாணையிற் றண்டஞ் செய்து மருஞ்சிறை யிட்டும் வைப்ப
னாணையின் வழிசெல் வோருக் கரும்பதி செல்வ நல்கி
யாணையும் வைப்ப னெங்கு மாணையே யாணை யேகாண்.

(கோ - டு) அவனிமன்னன் ஆணையால் அருமறை முறைசெய்யாரை.

(பொ - ரை) உலகத்து அரசர் தமது ஆணையால் நிகழ்ந்த அரிய கட்டளையின்படி நடவாதாரைத் தமது ஆணையினால் தண்டித்துப் பொறுத்தற்கரிய சிறைக்களத்தில் வைப்பர். அக்கட்டளையின்படி நடப்போருக்கு உயர்ந்த பட்டமும் செல்வமுங் கொடுத்து வாழ்வித்து அவரைத் தங்கீழ் அதிகாரமுஞ் செய்ய வைப்பர். அவ்வாறு அதிகாரம் பெற்றிருக்கும் மந்திரி முதலாயினாரிடத்துக் காணப்படும் ஆணையும் அவ்வரசனது ஆணையேயாம். இதுபோல முதல்வனிடத்துங் கண்டுகொள்க. (எ-று.)

இவ்விடத்து மறை என்றது அரசன் மொழியை யுணர்த்தி நின்றது. ஆணையே ஆணையே என்னும் ஏகாரம் இரண்டனுள், முன்னையது அரசன் ஆணை யென்பதில் ஐயமறுத்தலின் தேற்றம். பின்னையது அசைநிலை. இச்செய்யுள் ஒட்டென்னுமலங்காரம். அஃதாவது, அரசனைக்கூறவே அவ்வுவமையோடு ஒட்டி முதல்வனைக் கொள்ளுதல்.

அவ்வாறாயின், அரசனாணை வேறாக இருக்க இறைவனாணையே எவ்விடத்து மென்றல் எவ்வாறு கூடும் என்பார்க்கு விடை கூறுதற் கெழுந்தது வருஞ் செய்யுள். (ருக)

அரசன் செயலும் வேதாகமங்களின் வழியேயாதலின், அச்செயல் இறைவன் அருள்வழியே யென்றும், இறைவன் செயலைக் குறிப்பிப்பதென்றும் கூறுகின்றது.

அரசனுஞ் செய்வ தீச னருள்வழி யரும்பா வங்க
டரையுளோர் செய்யிற் றீய தண்டலின் வைத்துத்தண்டத்
துரைசெய்து தீர்ப்பன் பின்பு சொல்வழி நடப்பர் தூயோர்
நிரயமுஞ் சேரா ரந்த நிரயமு னீர்மை யீதாம்.

(கோ - டு) தரையுளோர் அரும்பாவங்கள் செய்யின், தீயதண்டலின் வைத்து தண்டத்து உரைசெய்து தீர்ப்பன். தூயோர் பின்பு சொல்வழி நடப்பர். நிரயமுஞ்சேரார். அந்த நிரயம் ஈது முன்னீர்மையாம். அரசனும் செய்வது ஈசன் அருள்வழி.

(பொ - ரை) இவ்வுலகத்துள்ளார் பெரும் பாதகங்கள் செய்தால், செய்த அவர்க்கு அரசனானவன் கொடிய தண்டஞ் செய்து, மேலும் பாவஞ்செய்யின் இவ்வளவினன்றி இன்னும் கொடிதாகச் செய்வனெனச் செய்யப்படும் தண்டத்தை எடுத்துச்சொல்லி, அச்சமுறுத்தி அவன் பாதகத்தைத் தீர்ப்பன். அறிவுடையார் அவ்வாறு செய்வித்தபின்பு, விதிவழி நடந்து பாவத்தின் பயனாகிய நரகத்திலழுந்தார். அந்த நரக தண்டம் இவ்வரச தண்டம்போல உண்டென்று கருதுவதற்கு அரச தண்டம் ஏதுவாகின்ற தன்மையுடையதாம். இவ்வாறு அரச தண்டம் வைத்தது நரக தண்டம் வாராமல் பாவத்தைத் தொலைத்துக் காத்தற் பொருட்டும், அரசர் தண்டிக்கும்படியான நிலையில் வெளிப்படாமல் மறைந்து பாவஞ்செய்யின், நரக தண்டத்தை உயிர்க்குயிராகிய இறைவன் அறிந்து தருவனென்று அறிவுறுத்தற்பொருட்டுமாம். ஆதலால், அவ்வரசன் ஆணையும் முதல்வன் ஆணையின் வழியாய் நிகழ்வதன்றிச் சுதந்திரமாய் நிகழ்வதன்று. (எ-று.)

பாவஞ்செய்யின் தண்டஞ்செய்து மேலுஞ்செய்யின் அத்தண்டத்தை எடுத்துச்சொல்லி யொழிப்பன்; அந்த நரக தண்டமும் இதுபோல உண்டென்று நினைத்தற்கேதுவாம் என்றதனால், புண்ணியஞ்செய்யின் அதற்குரிய வரிசையின்வைத்துத் தீர்ப்பன். அந்தத்துறக்கம் இதுபோல உண்டென்று நினைத்தற்கேதுவாம் என்பதுங் கொள்ளப்படும். நிரயமும் என்றவிடத்து உம்மை இழிவு சிறப்பு.

தண்டத்து உரை செய்தலாவது, மேலும் பாவஞ்செய்யின் இவ்வளவினன்றி இன்னுங் கொடிதான தண்டஞ்செய்வேனென அக்கொடுந் தண்டத்தை எடுத்துச்சொல்லி அச்சமுண்டாகச்செய்தல். தண்டத்து உரை செய்தல் என்பது தண்டத்தை உரை செய்தல் என்னும் பொருள் குறித்தது. அவ்விடத்துத் தண்டம் என்பதில் ஈறுகெட்டு, அத்துச் சாரியை வந்ததனால் ஐயுருபு நிலையாமை ஏகதேச விதியாற் கொள்க. * மகர்கான்புள்ளிமுன் அத்தேசாரியை" என்றார் தொல்காப்பியநாயனாரும்.

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், உருபியல். சூ-கஅ.

தண்டத்துரைசெய்து என்பதற்கு தண்டத்தை உரைசெய்து எனப் பொருள் கொள்ளாது, சொல்வழி நடப்பர் தூயோர் என்னும் மோனை யெழுத்திற்கேற்ப துரைசெய்தெனவே கொண்டு தண்டமாகிய துரையைச்செய்து எனினும் அமையும். துரை—மிகுதிப்பாடு. அது, † "துரைமாண்டவாபாடி" என்பதனானுமறிக. முன்னீர்மை என்பது முன்னுதற்கேதுவாகிய நீர்மை என்னும் பொருள் குறித்தலின், ஏதுப்பெயரோடு முடிந்த வினைத்தொகை. நீர்மையுடைய நரக தண்டத்தை நீர்மை என்றுபசரித்தார்.

மறைகளீசன் என்பது முதல் இவை மூன்று செய்யுளானும் அரசன் போல வினைப்பலன் றருமாறு விளக்கிக் கூறப்பட்டது. [கூஉ]

வைத்தியன் உவமை கூறத்தொடங்கிப் பாவத்தின் பலனைப் புசிப்பித்துத் தீர்ப்பது புண்ணியம்செய்வதின் பொருட்டுப்போல் புண்ணியத்தின் பலனைப் புசிப்பித்துத் தீர்ப்பது மலநிவர்த்தியின் பொருட்டெனக் கூறுகின்றது.

அருளினு லுரைத்த நூலின் வழிவாரா ததன்மஞ் செய்யி
னிருளுலா நிரயத் துன்பத் திட்டிரும் பாவந் தீர்ப்பன்
பொருளுலாஞ் சுவர்க்கமாதி போகத்தாற் புணியந் தீர்ப்பன்
மருளுலா மலங்க டீர்க்கு மருந்திவை வயித்திய நாதன்.

(கோ - டு) மருள் உலாம் மலங்கள் வைத்தியநாதன் இவை தீர்க்கும் மருந்து.

(போ - ரை) இறைவன் கருணையினால் உரைத்தருளிய வேதாகம வழி நில்லாது பாவஞ்செய்யின், இருள் நிறைந்த நரகத்திற் செலுத்தித் துன்பத்தினை அநுபவிக்கச்செய்து அப்பெரிய பாவத்தினைத் தீர்ப்பன். அவ்வேதாகமவழி நடப்போரை அதிசயப்பொருள்கள் தங்கிய சுவர்க்கம் முதலியவற்றில் வைத்து இன்பத்தினை அநுபவிக்கச்செய்து அப்புண்ணியத்தைத் தீர்ப்பன். புண்ணியம் நூல்வழி நிற்றலேயாயினும், நான் செய்தேனென்னும் ஆணவமலம் அறுதலாகிய அருள்வழி நில்லாமையால், அதுவும் பந்தமேயாம். பந்தமுறுதற்கேதுவாகிய பாவ

† திருவாசகம், திருத்தோணோக்கம், சே-கச.

புண்ணிய மிரண்டும் உயிர்க்கு நோயாகலான், சிவபிரானுகிய வைத்தியனுக்கு இன்பத்துன்பங்கள் அந்நோய் தீர்த்தற்குரிய மருந்தாம். (எ-று.)

மலங்களை நோய் என உருவகஞ்செய்யாது, இன்பத்துன்பங்களை மருந்து என உருவகஞ்செய்தலின் இஃது ஏகதேச உருவகம். [௬௬]

வைத்தியன் மருந்தாலும் பிராயச்சித்தத்தாலும் நோயைத் தீர்ப்பதுபோல, இறைவனும் நரக சுவர்க்க முதலிய பலவாற்ரு னும் வினை நோயைத் தீர்ப்பன் எனக் கூறுகின்றது.

மருத்துவ னுரைத்த நூலின் வழிவரிற் பிணிகள் வாரா
வருத்திடும் பிணிக டப்பிற் றப்பிய வழியுஞ் செய்யத்
திருத்தினன் மருந்து செய்யா துறும்பிணி சென்றுந் தீர்ப்ப
னுரைத்தநூற் சிவனு மின்னேயுறுங்கன்மமூட்டித்தீர்ப்பன்.

[கோ - டு] நூலின் உரைத்தவழிவரின் பிணிகள் வாரா, தப்பின் வருத்திடும் பிணிகள் செய்ய மருந்தும் திருத்தினன். தப்பிய வழியுஞ் செய்யாது உறும்பிணி சென்றும் மருத்துவன் தீர்ப்பன். இன்னே உரைத்த நூற் சிவனும் உறும் கன்மம் ஊட்டித் தீர்ப்பன்.

(போ - ரை.) வைத்திய நூலின் உரைத்தவழி நடப்போருக்கு நோய்கள் வந்தணுகா. அந்நூல்வழியிற் றப்பியவர்க்குத் தன் செயலாலும், செயலுக்கு முன்னிலையான பொருள்களாலும் நோய்கள்வரும். இந்நோய் அபத்தியத்தால் உண்டானதாமாதலால், அதற்குத்தக்க மருந்துகளை வைத்தியன் கொடுத்துத் தீர்ப்பன். வைத்திய நூல் வழியில் தப்பாதிருக்கவும், கன்மங் காரணமாகத் தெய்வத்தால் பிணிகள் வரவுங்கூடும். அப்பிணிகளை அவற்றிற்குத் தக்க பிராயச்சித்தங்களாகிய தானம், பூசை, ஓமம் முதலிய புண்ணியச் செயல்களை நோயாளியைச் செய்யச் செய்து மருந்துங் கொடுத்துத் தீர்ப்பன். இவ்வாறே வேதாகமங்கள் உணர்த்திய வண்ணம் சிவபெருமானும் உயிர்கட்கு வரும் இருவினையாகிய நோயைப் பல்திறத்தானும் இன்பத்துன்பங்களை ஊட்டித்தீர்ப்பன். (எ - று.)

மேலைச் செய்யுளில் மலத்தை நோயாகவும் இன்பத் துன்பங்களை மருந்தாகவும், சிவபெருமானை வைத்தியனாகவும் உருவகஞ் செய்ததனை இச் செய்யுளில் வைத்தியன் நோயைத் தீர்க்கும் முறையில் வைத்து விளக்கிக் காட்டியவாறும். தப்பியவழியும் என்றவிடத்து உம்மை இழிவு சிறப்பு. திருத்தினன் என்பது திருத்தியும் என்னும் பொருள் குறித்தலின் முற்றெச்சம். திருத்தியும் சென்றும் தீர்ப்பன் என முடித்துக் கொள்க. திருத்தினன் என்ற பாடத்தை திருத்தி நன்மருந்து எனப் பாடபேதங் கொள்ளுதலுமுண்டு. சென்றும் என்றவிடத்து உம்மை திருத்துதலேயன்றி என இறந்ததுதழுவிற்று. சென்றும் என்றவிடத்து செல்வித்தும் என்னும் பொருள்பட வி்வ் விகுதி தொக்கு நின்றது. * குடிபொன்றி என்றவிடத்து வி்வ் விகுதி தொக்கு நின்றாற்போல. செலுத்தியும் என்றதன்கணுள்ள அவாய் நிலையான் அவற்றிற்குத் தக்க உபாயங்களிலே என்பது வருவிக்கப்பட்டது. அவ்வுபாயங்களாவன— தானம், பூசை, ஓமம் முதலாயின. செய்யாது என்னும் எதிர்மறை செயவெனெச்சத் திரிபு. [ருசு.]

துன்பமேயன்றி இன்பமும் மருந்தென உவமை முகத்தால் விளக்குகின்றது.

மண்ணுளே சிலவி யாதி மருத்துவ னருத்தி யோடுந்
திண்ணமா யறுத்துக் கீறித் தீர்த்திடுஞ் சிலநோ யெல்லாங்
கண்ணிய கட்டி பாலுங் கலந்துடன் கொடுத்துத் தீர்ப்ப
னண்ணலு மின்பத் துன்ப மருத்தியே வினைய றுப்பன்

[கோ - டு.] மருத்துவன் மண்ணுளே சில வியாதி அருத்தியோடும் எனவும், கண்ணிய கட்டி பாலும் உடன் கலந்து கொடுத்துத் தீர்ப்பன் எனவும் கூட்டுக.

(போ - ரை.) இவ்வுலகத்துள்ளார்க்கு உண்டாகிய சில வியாதிகளை வைத்தியனானவன் நோயாளியிடத்து அன்பும் உறுதியும் உடையவனாய் அறுத்துக் கீறித் தீர்த்திடுவன். வேறு சில வியாதிகளை கருதப்படுஞ் சர்க்கரையும் பாலும் மருந்தோடுகலந்து கொடுத்துத் தீர்த்திடுவன். இவ்வாறு வைத்தியன் செய்யும் துன்பமும் இன்பமும் மருந்தாமாறுபோல, முதல்வனும் இன்பத்

---

* திருக்குறள், வெஃகாமை. சு-க.

துன்பங்களாகிய மருந்தை அநுபவிக்கும்படி செய்து இருவினை யாகிய நோயைத் தீர்ப்பன்.　　　(எ - று.)

அருளினுலுரைத்த நூலின் என்பது முதல் இவை மூன்று செய்யுளானும், வைத்தியன்போல இறைவன் இன்பத் துன்பங்களைத் தருமாறு விளக்கிக் கூறப்பட்டது.　　　[௫௫.]

உயிர் இன்பத் துன்பம் அருந்தும் முறை கூறத்தொடங்கி பூமி, நரக சுவர்க்கங்களில் போகமநுபவித்தற்குரிய சரீர இயல்பு கூறுகின்றது.

பூதனு சரீரம் போனற் புரியட்ட ரூபந் தானே
யாதனு சரீர மாகி யின்பத்துன் பங்க ளெல்லா
நாதனு ராணை யுய்க்க நரகொடு சுவர்க்கந் துய்த்துத்
தீதிலா வணுவா யோநி சேர்ந்திடுஞ் சீவ னெல்லாம்.

[கோ - டு.] பூதனு சரீரம் போனல் புரியட்ட ரூபந்தானே யாதனு சரீரம் ஆகி சீவன் எல்லாம் நாதனுர் ஆணை உய்க்க சுவர்க்கமொடு நரகு இன்பத் துன்பங்க ளெல்லாந் துய்த்து தீது இலா அணுவாய் யோநி சேர்ந்திடும்.

(போ - ரை.) சிவபிரானாகிய வைத்தியன் ஊட்டும் மருந்தாகிய இன்பத் துன்பங்களை உயிர் அருந்தும் முறைமை எவ்வாறென்பார்க்கு, இத்தூலவுடம்பு நீங்கியவிடத்து அதனோடு உடன் போகாது நிலைபெற்றுள்ளதாகிய சூக்குமவுடம்பினின்றும் வினைப் பயனை அநுபவித்தற்குரிய வெவ்வேறுடம்புகள் உளவாம். ஆதலால், உயிர்கள் எல்லாம் வினைப்பயனை யநுபவித்தற்குரிய அவ்வுடம்போடு இறைவன் ஆணை செலுத்தச் சென்று சுவர்க்க நரகத்து இன்பத் துன்பங்களை அநுபவித்துப் பின்பு எஞ்சிய சஞ்சித வினைப்பயனை யநுபவித்தற் பொருட்டுக் குற்றமில்லாத சூக்கும வுடம்போடு மண்ணுலகத்தில் கருப்பாசயத்தில் பொருந்தும். ()

யாதனு சரீரமாகி என்றவிடத்து ஆகி என்பது, காரிய காரணப் பொருள்பற்றிவருஞ் செயவெனெச்சத்திரிபு. யாதனுசரீரம் சூக்குமவுடம்பின் காரியம். அது, வினைப்பயன்களை அநுபவித்தற்குக் காரண மாதலின், காரிய காரணப் பொருள்பற்றியதென்பதும், ஆகி யென்பது உள

வென்னும் பொருள் குறித்தலின் செயவெனெச்சத் திரிபாமாறுங் காண்க. யாதனு சரீரம் என்றது துன்பத்தை அநுபவித்தற்குரியது. நரகத் துன்பம் இருப்பு விலங்கும், துறக்கவின்பம் பொன் விலங்கும் போல்வன வாதலின், அவ்விரண்டற்கும் உரிய உடம்பை யாதனு சரீரம் என்றார். பூதவுடம்பு, பூதசாரவுடம்பு, யாதனுவுடம்பு என உடம்பு மூன்று. இவை முறையே பூமி, சுவர்க்கம், நரகமாகிய உலகங்களுக்குரியன. நிலவுலகத்து வரும்போது அணுவாய் யோநி சேர்ந்திடுமென்றதனல், துறக்கநிரயங்களிற் செல்லும்போது யாதனு சரீரத்தைப்பற்றியே செல்லுமென்பது பெற்றாம். அணு—சூக்கும உடம்பு. [சுசு.]

ஒரு உடலை விட்டவுடன் பிறிதோருடலை எடுக்கினு மெடுக்கும். எடுக்காது கற்போற் கிடக்கினும் கிடக்குமெனக் கூறுகின்றது.

உடல்விடா யோநி பற்றி யுதிப்பினு முதிக்கு மொன்றிற்
படர்வுறா துறும்பா வத்தாற் பாடாணம் போற் கிடந்து
கடனதாங் காலஞ் சென்றாற் கடுநர கதனில் வீழ்ந்தங்
கிடருறு முருவங் கன்மத் தளவினி லெடுக்கு மன்றே.

[கொ - டு.] கன்மத்து அளவினில் உருவம் எடுக்கும் அன்றே என்பதை முன்னர் வைத்து உடல்விடா யோநிபற்றி என்பதை அதன் பின்னக வைத்துரைக்க.

(பொ - ரை.) அந்த அந்த வினைகளின் வன்மை மென்மைகட் கேற்ப பூதசரீரமாகிய இவ்வுடல் போயபொழுது யாதனு சரீரத்தை எடாது மற்றுமோர் பூத சரீரத்தை எடுத்தலும், யாதனு சரீரம் போயவாறே பூத சரீரம் எடாது மற்றுமோர் யாதனுசரீரத்தையெடுத்தலுமுளவாம். ஆகலான், இவ்வுடம்பினை விட்டுப் பிறிதோருடம்பை எடுத்தல் இடைவிடாது நிகழ்தலுமுண்டு. ஒரு உடம்பிலும் தங்காது மிகுந்த பாவத்தால் கற்போல் சூக்கும தேகத்துடன் பிரகிருதியில் சிறிது காலங்கிடந்து முறைமையான அக்காலஞ் செல்லுங்கால் கொடிய நரகத்தில் வீழ்ந்து அவ்விடத்துத் துன்புற்று இவ்வுலகத்து வந்து பிறத்தலாகிய இடைவிட்டு நிகழ்தலுமுண்டு. (எ - று.)

உதிப்பினும் என்றவிடத்து உம்மை இடைவிட்டு நிகழ்தலுமுண்டு என எதிரது தழுவிற்று. பாவப்பயன் அநுபவித்தற்குரிய யாதனு சரீர வியல்பு கூறியதனுல், இனம்பற்றிப் புண்ணியப் பயனை யநுபவித்தற்குரிய பூதசார சரீர வியல்பும் அவ்வாருதல் பெறப்படும்.

அவ்வாறு, இறந்த வுயிரே மீளப் பிறக்குமாயின், இறந்த உடம்பு முதலியனவும் மீளத் தோன்றுதல் வேண்டும். அவ்வாறு காணப்படாமை யின், இறந்த உயிரும் மீளப் பிறப்பதில்லை எனக் கிரீடாப் பிரமவாதி முத லாயினோர் கூறுவர். அவர் கூற்றைப் பரிகரித்தற் கெழுந்தது வருஞ் செய்யுள். [கூஎ.]

உயிர் மீளப் பிறக்கும். பிறக்குங்கால் உடல், இடம், குறி, உணர்வு மாறினும் உயிர் மாறாது என உவமை முகத்தால் விளக்குகின்றது.

பன்னக மண்ட சங்கள் பரகாயந் தன்னிற் பாய்வோர்
துன்னுதோன் முட்டை யாக்கை துறந்துசெல் வதுவேபோல
வுன்னிய வுயிர்க ளேல வுடல் விட்டு வானி னூடு
மன்னிடு நனவு மாறிக் கனவினை மருவு மாபோல்.

[கோ - டு.] பன்னகம் துன்னுதோல்(துறந்து செல்வதுவேபோல) அண்டசங்கள் முட்டை (துறந்து செல்வதுவேபோல) பரகாயந் தன்னிற் பாய்வோர் யாக்கை துறந்து செல்வதுவேபோல, நனவு மாறிக் கனவினை மருவும் ஆபோல், உன்னிய உயிர்கள் தூலவுடல்விட்டு வானினூடு (சென்று) மன்னிடும்.

(போ - ரை.) நெருங்கிய முன்னைத் தோலாகிய வுடலை விட்டுச் சென்று வேறொரு தோலாகிய வுடலினைப்பற்றும் பாம்பு போலவும், முன்னை முட்டையாகிய இடத்தினை விட்டுச் சென்று மற்றோரிடத்தினைப்பற்றும் பறவைகள் போலவும், முன்னைச் சரீரத்தினை விட்டு மற்றோர் சரீரத்தினைப் பற்றும் பரகாயப் பிர வேசிகள் போலவும், நனவுணர்வு மாறிக் கனவுணர்வைத் தலைப் படுமாறு போலவும், கருதப்படும் உயிர்கள் முறையே தாம் வேருகாது, தூலவுடலாகிய முன்னை உடம்பினைவிட்டு வானேறிச் சென்று மற்றோருடம்பில் அறிவு வேறுபட்டு நிலைபெறும். ()

வானினூடு என்றவிடத்து சென்று என்பது சொல்லெச்சம். நனவு மாறிக் கனவினை மருவுமாபோல் என்றது முற்றுப்பெருமையின், அறிவு வேறுபட்டு என்பது அவாய் நிலையால் வந்தது. நனவு, கனவு என்பன நனவுணர்வு, கனவுணர்வு என்னும் பொருள் குறித்தலின் ஆகுபெயர். பன்னக முதலிய நான்கும் தான் வேருதலின்றியும் தன் உடலும், இடமும். அச்சும், அறிவும் வேருதற்கு முறையே உவமையாயின. அச்சு—குறி.

பூதனு சரீரம் என்பது முதல் இவை மூன்று செய்யுளானும் இவ்வுயிர் பிறந்திறந்து வருவது போவதாமாறு வகுத்துக் கூறப்பட்டது.

இவ்வாறு, இருவினை யென்னை என்பதுமுதல் பன்னகமண்டசங்கள் என்பதுவரையுள்ள முப்பத்து நான்கு செய்யுளும், இருவினை யின்பத் துன்பத்து என்னும் நான்காவது செய்யுளிற் கூறிய பொருள்பற்றி இருவினை இல்லை எனவும், உண்டெனினும் அதுவே யமையும், இறைவன் வேண்டாமெனவும் கூறும் அவரவர் மதம்பற்றி யாசங்கித்துப்பரிகரித்து இருவினை உண்டெனவும், இறைவன் வேண்டுமெனவும் வலியுறுத்தி வகுத்துக் கூறியவாறு. [௩௮.]

முற்கூறிய இருவினையாவது முயற்சி யென்றும் அதுவே காமிய மலமென்றும் அதற்குமூலம் உண்டென்றும் கூறுகின்றது.

தன்மமோ டதன்ம மாகித் தானிரு பயனுந் தந்து
நன்மைதீ மையினு மின்பத் துன்பினு நாடிக் காண
முன்னமே யான்மா வின்றன் மும்மலத் தொன்ற தாகிக்
கன்மமு மூலங் காட்டிக் காமிய மலமாய் நிற்கும்.

[கொ - டு.] முன்னமே ஆன்மாவின்றன் கன்மமுந்தான், தன்மமோடு அதன்மமாகி இருபயனுந் தந்து மூலங்காட்டிக் காமிய மலமாய் மும்மலத்தொன்றதாகி நன்மை தீமையினும் இன்பத் துன்பினும் நாடிக் காண நிற்கும்.

(போ - ரை.) இதுகாறுங் கூறியவாற்றல், கன்மமாவது முற்பிறவியில் ஆன்மாவினால் செய்யப்படும் இதம்அகிதமென்னும் முயற்சியாமென்பது பெறப்பட்டது. இதுவே ஆகாமியம். அம்முயற்சி பலனுக்கு வருங்காறும் கட்டுப்பட்டு அறம், பாவம் என்னும் இருவகைத்தாம். இதுவே சஞ்சிதம். அவ்வறம், பாவம் பலனுக்கு வருங்கால் இன்பத்துன்பமென்னும் இரு-

வகைத்தாம். இதுவே பிராரத்தம். இவ்வாறு ஆகாமியத்தால் சஞ்சிதமும் பிராரத்தமும், அப்பிராரத்தத்தை அநுபவிக்குமுறையில் மேல் ஆகாமியமும் உண்டாமாயின் முன்னர்ப் பிராரத்தமுண்டாயிற்ரு, ஆகாமியமுண்டாயிற்ரு? என்னுஞ்சங்கைநிகழுமன்றே. பிராரத்தமென்பது ஆகாமியத்தின் பலனேயன்றிப் பிறிதில்லையாதலின், ஆகாமியமே முன்னர் உண்டாயிற்றென்று சொல்லல் வேண்டும். அவ்வாகாமியமாகிய இதமகிதத்தை முன்னர்ச்செய்வதற்கும் ஒரு காரணம் வேண்டும்; இன்றேல் அச்செயல் நிகழாது. அக்காரணம் விருப்பு வெறுப்பேயாம். அக்காரணமாகிய மூல கன்மம் உண்டென்று காட்டுவதான அவ்வாகாமிய கன்மம் பிறப்பிறப்பிற் கட்டுப்படுத்தலின், ஆணவமலம் மாயாமலங்களோடொத்தலால் இதுவும் மலமெனப்பட்டுக் காமிய மலமாய் மும்மலத்துள் ஒன்ருய் வைத்தெண்ணப்படும். காமிய மலமாகிய இருவினை யென்பது இப்பொழுது செய்யப்படாமையால் உண்டென்று பிரத்தியட்சமாய் அறியப்படாவிடினும், இன்பத்துன்பமாகிய காரியத்தாலும், புண்ணிய பாவமாகிய காரணத்தாலும் உண்டென்றறியப்படும். இவ்வாறறிவது அநுமான அறிவு. ()

விருப்பு வெறுப்பென்னும் மூலகன்மம் தொழிற்பட்டன்றிப் பயன்றராமையின் ஏனை ஆகாமிய சஞ்சித பிராரத்தங்களோடொப்ப நான்கென வேறுவைத் தெண்ணப்படாதாயிற்று. மூலகன்மம் விருப்பு வெறுப்பென்பதனை "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்னுந் திருக்குறளும் வலியுறுத்தும். எவ்வாறெனில், இறைவனுக்கு விருப்பு வெறுப்பு இல்லாமை கூறவே, அவ்விருப்பு வெறுப்பு ஆன்மாவிற்குண்டென்பது குறிப்பாலுணரப்படுமாதலாலென்க. இவ்விருப்பு வெறுப்பையேதிருவானைக்காப் புராணத்தில் கச்சியப்ப முனிவர் "இரண்டெனும் பழைய வினையும்" எனவும், பட்டினத்தடிகள் "இருவாதனை யற்றிறந்தான் பெருமை" என்பதில் "இருவாதனை" எனவும் அருளியவாறும். கன்ம மலத்திற்குமுன் விருப்பு வெறுப்பு உளவென்பதை "செம்புறு களிம்பென வநாதிமல மூழ்கி யிருள் சேருமலர் விழியென்னவே, தெளிவற்ற கேவலத் தசைவற்றிருந்து மல சேட்டையாற் குழவிகுருடர், தம்பிணியினுலுற்ற பால்கோலை நோக்கவவை தமையளிப்பா ரென்னநான், சார் கன்ம மாயையை விரும்பநீ தந்திடச் சகலனுப்" என மாதவச் சிவஞான யோகிகள் அருளிய வாற்ருனு மறிக.

கன்மமும் என்றவிடத்து உம்மை சிறப்பு. மூலகன்மத்தின் சம்பந்தமான கான்மியம் காமியமென மருவிற்று. செயப்படு பொருளெல்லாம் முதற்காரணத்தை யுடைத்தாயிருக்கு மாதலின் ஆகாமியமாகிய செயப்படு பொருளும் மூலகன்மத்தை முதற்காரணமாக வுடைத்தாமாறு காண்க. []

அவ்வினையானது தொடர்ச்சியாய் இறைவனாணையால் உயிர்க்குப் பல வேறு வகைப்பட்ட உடல்களைத் தோற்றுவிக்குமெனக் கூறுகின்றது.

இருவினை யநாதி யாதி யியற்றலா னுகர்வா லந்தம்
வருமலஞ் சார்ந்து மாயா வுருவுகண் மருவி யார்த்துத்
தருசெயன் முறைமை யாலே தான்பல பேதங் காட்டி
யருவதாய் நின்ற ரன்ற னாணைபி னமர்ந்து செல்லும்.

[கோ - ௫] இருவினை நுகர்வால் இயற்றலால் வரும் ஆதி அந்தம். அநாதி மலம் சார்ந்து மாயாவுருவுகள் மருவி ஆர்த்துத் தருசெயல் முறைமையாலேதான் பல பேதம் அரன்றன் ஆணையின் அருவதாய் நின்று காட்டி அமர்ந்து செல்லும்.

(பொ - ரை) அவ் வாகாமிய வினையானது அழியப்பட்டும் செய்யப்பட்டும் பரம்பரையாய் வருதலால் ஆதியும் அந்தமு முடையதாம். ஆயினும், இடையறாதோடும் நீர்ப்பெருக்குப் போலத் தொடர்ச்சியாய்த் தொன்றுதொட்டுவருதலால் பிரவாக அநாதியாம். அது எனை ஆணவமல காரியமாகிய மோகம் முதலிய குணங்களோடும், மாயாமல காரியமாகிய தநு கரண புவன போகங்களோடும் கூடி உயிரைப் பிறப்பிறப்பிற் கட்டுப் படுத்தித் தனது காரியமாகிய இன்பத்துன்பங்களின் வேறுபாட்டிற்கேற்பப் பல வேறு வகைப்பட்ட உடல்களை இறைவனாணையால் அவ்வுயிர்க்கு வெளிப்படாது சூக்குமமாய் நின்று தோற்றுவித்து நடக்கும். (எ-று)

இச்செய்யுளில் அரன்றனாணையினமர்ந்து செல்லும் என்றது, முதலாவது செய்யுளில் "ஆணையினமர்ந்து செல்ல" என்றதை முடித்துக்காட்டுதலின் முடிந்தது முடித்தல்.

மேலைச் செய்யுளானும் இச்செய்யுளானும் மேலே கூறிய சஞ்சிதமாகிய இருவினையின் சொரூபம் புண்ணிய பாவமாகிய அருவமென்பது கூறப்பட்டது. [சo.]

மநுடர் மநுடராகவும் மிருகம் மிருகமாகவும் இவ்வாறே பிறவும் பிறப்பதன்றி ஒரு பிறவியிலிருந்து மற்றொரு பிறவி வாராதென்பாரை மறுத்துரைக்கின்றது.

சங்கமந் தாப ரங்க டத்தங்கன் மத்துக் கீடா
வங்குரு யோநி மாறு மச்சுமா றுதிங் கென்னி
னிங்குமா நுடரியற்றும் புண்ணியத் தின்ப வீட்ட
மங்குவான் சுரர்க ளாயோ நரர்களா யருந்துவாரோ.

(கோ - டு) தத்தம் கன்மத்துக்கு ஈடா சங்கமம் தாபரங்கள் அங்கு உருயோநிமாறும். இங்கு அச்சுமாறுது என்னின்.

(போ- ரை) அவரவர் வினைக்கீடாகச் சங்கமம் தாபரமாகிய அவ்வவ் வுயிர்கள் உடலைப் பிரியுங்கால் மீட்டும் அவ்வப்பிறவியிற் பிறத்தலேயன்றி இவ்விடத்துவேறுபிறவியில்மாறிப்பிறத்தலில்லை என்னில், இவ்வுலகத்தில் மாநுடர் செய்யும் புண்ணியத்தின் பயனுகிய இன்ப மிகுதியை மேலுலகத்தில் வாழ்கின்ற தேவர்களாய் அநுபவித்தலேயன்றி மாநுடர்களா யநுபவிப்பதுண்டோ. (எ-று.) (சக)

தேவபோகத்தை மாநுடனுகவும் மாநுட போகத்தைத் தேவனுகவும் அநுபவித்தல் கூடாதாகலின் உடல் மாறும் என வலியுறுத்துகின்றது.

நரர்களாய்த் துய்ப்பரென்னி னரர்பதி சுரரு லோகஞ்
சுரர்களாய்த் துய்ப்ப ரென்னிற் சொன்னவச் சுதியு மாகுஞ்
சுரர்களாய்ப் பலன்க டுய்த்துத்தாமிங்குத்தோன்றும்போது
நரர்களாய்ப் பிறப்பர் ஞாலத் தமரராய் நண்ணி டாரே.

(கோ - டு) சுரர் உலோகம் நரர்களாய்த் துய்ப்பர் என்னின் நரர்பதி எனவும், அமரராய் ஞாலத்து நண்ணிடாரே எனவும் கூட்டுக.

(போ - ரை) இன்பமாகிய தேவபோகத்தை மேலுலகத்தில் மானுட வடிவு கொண்டே அனுபவிப்பரெனின், அவ்வாறனுபவிக்கில் அது தேவ உலகமாகாது மண்ணுலகமேயாம்.

தேவர்களாயே அநுபவிப்பரென்பதை ஒத்துக்கொள்ளின் மேற் சொல்லியவாறு உடல் மாறுதலுண்டென்பது இனிது விளங்கும் ஆதலால் தேவர்களாய் இன்பப்பயனை யநுபவித்துத் தொலைந்த விடத்துத் தாம் மீண்டு இவ்வுலகிலுதிக்கும்போது மானுட வடிவாய்ப் பிறப்பதன்றித் தேவராய் இவ்வுலகத்திற் பிறவார். (எ - று.) (சஉ.)

தேவருக்கும் மனிதருக்கும் அவரவர்க்குரிய வடிவமாறினும் உறுப்புக்களும் அங்கங்களும் மாறுவாதலின் உடல் மாறுமென்றல் பொருந்தாதென்பார்க்கு மயிர்க்குட்டி முதலியன வண்டு முதலியனவாய் மாறும் பிரத்தியட்சங்காட்டி உடல் மாறும் என வலியுறுத்துகின்றது.

வண்டுக ளாகி மாறு மயிர்க்குட்டி மற்றோர் செந்துப்
பண்டைய வுருவந்தானே வேட்டுவ னாய்ப்பி றக்குங்
கண்டுகொள் யோநி யெல்லாங் கன்மத்தான் மாறு மென்றே
கொண்டன சமய மெல்லா மிச்சொனீ கொண்ட தெங்கே.

(கோ - டு) மயிர்க்குட்டி வண்டுகளாகி மாறும் மற்றோர் செந்து பண்டைய உருவந்தானே வேட்டுவனாய்ப் பிறக்கும். கண்டுகொள். கன்மத்தான் யோநியெல்லாம் மாறும் என்றே சமயம் எல்லாம் கொண்டன. இச்சொல் நீ எங்கே கொண்டது.

(பொ - ரை) அவ்வாறுபினும், மனுட வுடல் தேவ உடலாய் மாறுபட்டவிடத்தும் செவி முதலிய உறுப்புக்கள் மனுடருக்குந் தேவருக்கும் வேறுபடுதலில்லையாதலால், முற்றும் மாறு மென்றல் பொருந்தாதெனின், இவ்விடத்திலும் மயிர்க்குட்டி வண்டாகவும், புழு குழவியாகிய வேட்டுவனாகவும் உடல் மாறு மென்பதும், அவ்வாறு மாறுவதில் அதுவதற்குரிய உறுப்புக்கள் வேறு வேறுமென்பதும் பிரத்தியட்சம் ஆதலால், கன்மத்திற் கேற்ப உடல்கள் மாறுதல் உண்டென்பது எல்லாச் சமய நூல் களுக்கும் ஒப்ப முடிந்ததாம். பிரத்தியட்சப் பிரமாணத்தோடும் நூற் பிரமாணத்தோடும் மாறுபட்டு முற்றும் மாறுதலில்லை என்று நீ கூறும் இப்போலிக்கூற்று எங்கே கொண்டாய்.() (சங.)

ஓர் உடம்பு கெடாது பிறிதோருடம்பாய் மாறும் மயிர்க்குட்டி முதலிய உவமை, கெட்டுத் தோன்றுமென்பதோடு பொருந்தாதென்பார்க்கு அகலியை முதலியஉவமை கூறி உடல் மாறுமென்பதை வலியுறுத்துகின்றது.

அகலியை கல்ல தாரு ளரிபல பிறவி யானன்
பகலவன் குலத்திற் றோன்றிப் பாரெலா முழுதுமாண்டு
நிகரிலா வரச ஞருஞ் சிலந்திநீ டுலகம் போற்றச்
சகமதி லெலிதா னன்றே மாவலி யாய்த்துத் தானே.

[கோ - டு.] சிலந்தி பகலவன் குலத்திற்றோன்றி எனவும், எலி தான் அன்றே நீடு உலகம் போற்ற சகமதில் மாவலி ஆய்த்துத்தானே எனவுங் கூட்டுக.

(போ - ரை.) மேற்கூறியவாறு வண்டு முதலியவற்றின் உடல்களே மயிர்க்குட்டி முதலிய உடல்களாய் மாறுபட்டன வன்றி, முன்னுடல் அழிந்து வேறுடம்பு தோன்றுவதன்றாதலால், முன்னுடல் கெட்டுப் பிறிதோருடல் தோன்றுமென்பதனோடு பொருந்தாதென்னின், அகலியை யானவள் கௌதம முனிவனிட்ட சாப வயத்தால் கல்லாக முன்னுடல் அழிந்தே மாறினாள் என்பதும், விட்டுணுவானவன் பிருகு முனிவனிட்ட சாப வசத்தால் மச்ச முதலிய பத்துவிதத் தோற்றத்தினும் உடலழிந்தே மாறினானென்பதும், சிலந்திப் பூச்சியானது திருவானைக்காவில் சிவபெருமானை அர்ச்சித்த பலத்தால் முதல்வனருளால் சூரிய வம்சத்தில் ஒப்பில்லாத அரசனாய் உதித்து பூமி முழுவதும் ஆண்ட முறைமையில், முன்னுடலழிந்தே மாறியதென்பதும், எலியானது சிவாலயத்துள்ள திருவிளக்கைத் தீண்டப்பெறலால், தேவ உலகத்துள்ளாரும் துதிக்கும்படி இம்மண்ணுலகத்தின்கண்ணே முதல்வனருளால் மகாபலிச் சக்கரவர்த்தியாக முன்னுடலழிந்தே மாறியதென்பதும் நூல்களிற் கேட்கப்படுதலால் எவ்விடத்தும் அவ்வாறே தெளியப்படும்.　　(எ - று.)　　(௪௪)

அகலியை முதலிய பிரமாணமெல்லாம் சாபமும் அருளுமேயன்றி வினைப்பயன் அன்று என்பார்க்கு வினைப்பயனைத் தருதலும் இறைவனது சாப அருள்களேயாமெனக் கூறுகின்றது.

செப்பினுய் மாற வேறு சிலர்விதி யாலே கன்மால்
வைப்புறும் யோநி யெல்லா மாறிவந் திடாவிங் கென்னி
னெப்படி யானுஞ் செய்திக் கிறைகரி யாவ னென்றே
முற்பட மொழிந்தே னெல்லா முதல்வன்றன் விதியே யாகும்.

(கோ - டு.) சிலர் விதியாலே வேறுமாறச் செப்பினுய்.

(போ - ரை.) மேற்கூறியவாறு அகலியைமுதலியோர்க்கு உடல் மாறியது சாப அருள்களாலன்றிக் கன்மத்தாலன்றாதலின், அதுபற்றி எவ்விடத்தும் அவ்வாறு உடல் மாறுமென்றல் பொருந்தாதென்னின், அவரவர் செயலுக்கேற்ப சாப அருள் நிகழ்ந்தவாறுபோல், எவ்வகையானும் உயிர்கள் செய்யுங் கன்மங் கட்கு முதல்வன் சான்றுவனென்று மேற்கூறிப்போந்தா மாதலின், வினைப்பய னெனப்பட்டனவெல்லாம் முதல்வனுடைய சாப அருள்களேயாம். ஆதலால், எவ்விடத்தும் உடல் மாறு மென்றது பொருந்தும். (எ - று.)

விதி என்றது இவ்விடத்து சாப அருள்களைக் குறித்தது.

சங்கமம் என்பது முதல் இவை யைந்து செய்யுளானும் மீமாஞ்சகரி லொருசாரார் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து மேல் ௪0-வது செய்யு ளில் "தான் பல பேதங்காட்டி" எனக் கூறியது சாதிக்கப்பட்டது.[௪டு.]

ஒன்றைப்பற்றி அதுவாய் நிற்கும் உயிர் முன்பற்றியதை விட்டுப் பிறிதொன்றை இறைவனுணையாற்பற்றி அதுவாய் நிற்கு மெனக் கூறுகின்றது.

அவ்வவ யோநி தோறு மவ்வவ வுலகந் தோறுஞ்
செவ்விதி னறிந்து கன்மஞ் சேர்ந்திடா சீவன் சேரா
விவ்வகை தம்மிற் சேர்வு மிறைசெய லானுற் செய்த
வெவ்வுரு வுந்தங் கன்மான் மாற்றுவ னிறைவன் றானே.

(கோ - டு.) கன்மம் அவ்வவ யோநிதோறும் எனவும், இறைவன் றானே செய்த எவ்வுருவும் தங்கன்மால் மாற்றுவனெனவுங் கூட்டுக.

(போ - ரை.) உயிர் ஒன்றனைப்பற்றி அதுவாய் நிற்பதே யன்றிப் பிறிதொன்றனை எவ்வாறு பற்றுமெனின், வினைகள் சட—

மாதலால் அவ்வினைகட் கீடாய தனுக்களையும் புவனங்களையும் நேராக அறிந்து சென்று அணையமாட்டா. உயிர்கள் அறிவுடைப் பொருளாயினும் தமக்கென அறிவின்மையால் வினையின் பயனைத் தாமே அறிந்தெடுத்துக்கொண்டு அநுபவிக்கமாட்டா. இவ்வாறாதலின், மாயையினையும் வினைகளையும் காரியப்படுத்தி உயிர்கட்குச் சேர்த்தல் இறைவன் செயலே என்பது பாரிசேட அளவைபாற் பெறப்பட்டது. ஆதலால், இறைவன் செய்த எவ்வகை உடலையும் உயிர்கள் வினைக்கேற்ப அவ்விறைவன் மாற்றிப் பிறிதோருடலைப் பற்றச் செய்வன். (எ - று.)

இவ்வகை என்றவிடத்து இவ் என்பது உயிரையும் மாயை வினைகளையுஞ் சுட்டிய வகரவீற்றுப் பலவறி சொல்.

இச்செய்யுளால் மேலே சாதிக்கப்பப்பட்ட தான் பல பேதங்காட்டி என்பது வலியுறுத்தப்பட்டது. [சசு.]

இறைவனாற்றலால் ஒரு சூக்கும உடம்பே பல தூல உடலாய் மாறுதலில் சற்காரிய வாதத்திற்கு இழுக்கில்லை என உவமை முகத்தால் விளக்குகின்றது.

மாறியிவ் வுருவ மெல்லாம் வருவதெங் கேநின் றென்னின்
கூறிய சூக்கு மத்தா முருவெனிற் குறியொன் றென்னின்
வேறொரு குறியா மாரம் வீரசங் கிலியு மாகுந்
தேறுநீ யொருவ னாலிச் செயலெலாஞ் சிவனா லாகும்.

(**கோ - டு.**) இவ்வுருவமெல்லாம் மாறிவருவது எனின், எங்கே நின்று என்னின், உருக் கூறிய சூக்குமத்து ஆம். குறி ஒன்று என்னின், ஒரு குறி ஒருவனால் வேறாம் ஆரம் வீரசங்கிலியுமாகும். சிவனால் இச் செயலெல்லாம் ஆகும். நீ தேறு.

(**பொ - ரை.**) அவ்வாறு உடல்மாறித் தோன்றுவதாயின், உள்ளது காரியப்படும் என்னும் சற்காரிய வாதத்திற் கிழுக்காகாதா? ஆகாதெனின் வேறு வேறு உடல் எங்கிருந்து தோன்றுமெனின், மூலமாகிய சூக்கும உடம்பினின்றும் பல தூல உடம்புகளுண்டாம். காரணம் ஒன்றாகவும் காரியம் பலவாதல் எவ்வாறமையுமெனின், காரணமாகிய ஒருபொன் செய்வானது வல்ல

மையால் ஆரம், வீரசங்கிலி முதலிய வெவ்வேறு ஆபரணங்களாய் மாறுபடுமாறுபோல, ஒரு சூக்கும உடம்பாகிய காரணம் இறைவனது ஆற்றலால் வெவ்வேறு உடல்களாய்த் தோன்றும். ஆதலால் சற்காரிய வாதத்திற் கிழுக்கில்லை என்பதை நீ தெளிவாயாக. (எ - று.) (சஎ.)

ஒரு சூக்கும உடம்பினின்று பல தூல உடம்பு தோன்றியழிவதற்கு உவமை கூறுகின்றது.

சூக்குமங் கெட்டுத் தூலந் தோன்றிடா சூக்கு மத்தி
லாக்கியோ ருடல்கி டப்ப தின்றுட லாக்குந் தன்மைக்
கோக்கிய சத்தி யுண்டா யுடறருங் கால முற்று
நீக்கிட மரம்பின் வேரோர் நீண்மர நிகழ்த்து மாபோல்.

[கோ - டு.] மரம் காலம் உற்று நீக்கிட பின் வேர் ஓர் நீள்மரம் நிகழ்த்தும் ஆபோல் ஒக்கிய சத்தியுண்டாய் உடல் தரும்.

(போ - ரை.) அவ்வாறு ஒரு சூக்கும உடம்பினின்றும் பல தூல உடம்பு வருவது பொன்னானது ஆரம், வீரசங்கிலியானாற்போல ஒன்று பிறிதொன்றுவதுமன்று. வித்து மரமானாற்போல ஒன்று கெட்டு ஒன்று தோன்றுவதுமன்று. சந்திரனிடத்து எழுகின்ற கலைகள்போல் ஒன்றின்கண் ஒன்று அடங்கிக் கிடந்து தோன்றுவதுமன்று. இவ்வாறாயின், சூக்கும உடம்பினின்றும் தூல உடம்புகள் உண்டாவதற்கு மற்றென்னையோ திருட்டாந்தமெனின், மரமானது கெடுகின்ற காலம் பொருந்துதலால் அழியவும், பின்பு அம்மர வேரின் மற்றொரு நீண்ட மரம் உண்டாதல்போலும். ஆதலால், சூக்கும உடம்பில் தூலவுடம்புகள் தோன்றுதற்கு யோக்கியமான சத்தி அடங்கியிருந்து தோன்றுவனவாம். (எ - று.)

சூக்கும வுடம்பினின்றும் தூலவுடம்பு தோன்றுவதாகிய சற்காரியத்தின் விசேடங் கூறியவாறும். விசேடம்—தூலவுடம்புகள் சூக்கும வுடம்பில் யோக்கியமான சத்தி ரூபமாயிருந்து தோன்றுதல். யோக்கியம் என்பது ஒக்கியம் என மருவிற்று.

மேலைச் செய்யுளில் பொன் ஒன்றே பல ஆபரணமானாற்போல் என்றது செய்வானது ஆற்றலால் பலவாறு காரியப்படுமென்பதற்கு. இச்செய்யுளில் ஒன்றினிருந்து வேறு பல தோன்றுமென்றதற்கு வேறுவமை கூறி அவ்வுவமையை மறுத்தலால் முரணின்மை யறிக. ஆயின், இவ்வுவமையினையே முன்னர்க் கூறியிருக்கலாமே யெனின், பொன்னணி வுவமையில் செய்வானது ஆற்றலும், பல வேறு காரியங்களு முள்ளன. வேர் மரவுவமையில் அவ்விரண்டுங் கிடையா. ஆதலின், செய்வானது ஆற்றலையும் பல வேறு காரியங்களையும் காட்டுதற்குப் பொன்னணி வுவமையும், ஒன்று என்று மொருதன்மையாயிருக்க அதினின்றுங் காரியந் தோன்றுமென்றற்கு மரவேருவமையும் வேண்டப்படு மென்க. (சஅ.)

பல தூலவுடம்பு தோன்றி ஒடுங்குவதற்கு ஒரு சூக்குமவுடம்பு வேண்டப்படுமென உவமை முகத்தால் விளக்குகின்றது.

விதிப்படி சூக்கு மத்தே யுருவரும் வினையா லிங்கே
யுதித்திடா வுருவ மாக வுருவரு மரங்கள் வித்திற்
கதித்தெழு மரமும் வித்துங் கழியும்பின் னழியுஞ் சூக்க
மதிக்கெழு கலைகள் போல வருவது போவ தாமே.

[கோ - ரே.] உருவரும் மரங்கள் வித்தின் கதித்து எழும். விதிப்படி வினையால் சூக்குமத்தே உருவரும். மரமும் வித்தும் கழியும். பின் சூக்கம் அழியும் (என்னின்) வருவது போவது மதிக்கெழு கலைகள் போல ஆமே. இங்கே உருவமாக உதித்திடா.

(போ-ரை.) உருவமாய் விளங்குகின்ற மரங்கள் அவைக்கு முதலாகிய வித்தினின்று தோன்றி விளங்கும். அதுபோல, இறைவன் ஆணையால் வினைக்கேற்ப சூக்கும உடம்பினின்றும் தூல வுடம்புகள் தோன்றும். மரம் அழிந்தவிடத்து அதற்கு மூலமாகிய வித்தும் உடனழிதல் போல, தூல வுடம்பு கெட்டவிடத்து அதற்கு முதலாகிய சூக்குமவுடம்பும் கெடுமோவெனின், மேற் கூறிய உவமை சூக்குமத்தினின்றும் தூலம் தோன்றுவதற்கு மட்டுமே யன்றி முற்றுவமையன்றாதலால், தூல வுடம்பு கெட்டவிடத்துச் சூக்கும வுடம்பு கெடாது. அவ்வாறு கெடாதிருக்கவும் தூலவுடம்பு தோன்றி யொடுங்குதல் எதுபோலவெனின், சந்திரனுக்கு உளவாகிய கலைபதினாறிற் காரணமாகிய

ஒரு கலை யழியாது நிற்க, மற்றக் கலைகள் தோன்றுதலும் ஒடுங்குதலும் போலவாம். ஒரு கலையில்லாதிருப்பின் மற்றக்கலைகள் தோன்றுதலும் இல்லாதுபோமாறுபோல, சூக்கும வுடம்பாகிய ஒரு முதல் இல்லாதவிடத்துத் தூலவுடம்புகள் உருவமாகத் தோன்றிடாவாம். (எ-று.)

இச் செய்யுளால்ஒரு சூக்கும வுடம்பு நிலைபெற்றிருந்தாலன்றிப் பல தூல வுடம்புகள் தோன்றி யழிதல் கூடாதாதலால் பல தூல வுடம்புகள் தோன்றியழிதல் காணப்படுதல்பற்றி அவற்றிற்குக் காரணமான சூக்கும வுடம்பு ஒன்று உண்டு என்பதற்கு அருத்தாபத்திப் பிரமாணங் கூறியவாறும்.

இவ்வாறு சூக்கும வுடம்பினின்றும் தூலவுடம்புகள் தோன்றி அத் தூலங் கெடுங் காலத்து, வித்தில் அருவமாய் நின்ற மரம் உருவமாய்த் தோன்றி மரங் கெடுங் காலத்து, வித்துங் கெடுமாறு போல, சூக்குமங் கெடுமோ என்னும் ஆசங்கையை நீக்குதற்கு, மதிக்கெழுகலைகள் போல வருவது போவதாமென்பதும் உடன் கூறினர்.

அவ்வாறாயின், தூலவடிவுக்குக் காரணம் ஐம்பெரும் பூதமேயமையும், சூக்கும வடிவு எதற்காக வேண்டும் எனின், சற்காரியவாதத்தில் தூலப் பொருட்குக் காரணம் சூக்கும பூதமாவதே யன்றிப் பிறிதில்லை யெனவும், அச் சூக்கும வுடம்பாவது சூக்கும பூதமெனப்படுந் தன் மாத்திரையாலான வடிவாகலின், ஐம்பெரும் பூதமெனப்படுந் தூல பூதம் அத் தன்மாத்திரையின் காரியமாதல்பற்றியே தூல வுடம்மை ஐம்பெரும் பூத வடிவென்பதெனவும் நன்கறிந்துகொள்க. அதாவது, தூல வுடம்பு ஐம்பெரும் பூதத்தின் காரியம் எனக்கூறுமிடங்களுக்கு, ஐம்பெரும் பூதத்திற்குக் காரணமான ஐந்து தன்மாத்திரையாலான சூக்கும தேகத்தின் காரியமென்பது கருத்து. வித்தில் சூக்குமமாய் நின்ற மரம் தூலமாய் வரும் என்றது, சூக்கும வுடம்பினின்று தூல வுடல் வருதற்கு எடுத்துக் காட்டுவமை. மரமும் வித்துங் கழியும் என்பதும் எடுத்துக் காட்டுவமை. சூக்குமம் என்பது சூக்கம் எனச் சிதைந்து நின்றது. இது பிராகிருதச் சிதைவு.

மாறி யிவ்வுருவமெல்லாம் என்பது முதல் இவை மூன்று செய்யுளாலும், சூக்குமவுடம்பு தூல வுடம்புக்கு முதற் காரணமென்பதுணர்த்தி தான் பல பேதங் காட்டுதல்பற்றிச் சற்காரிய வாதத்திற்கிழுக் கின்மை கூறப்பட்டது.

மேலைச் செய்யுளில், ஒரு கலையில் ஏனைய கலைகள் அடங்கிக் கிடந்து தோன்றுமென்பதை எடுத்துக் காட்டி மறுத்து, இச் செய்யுளில் ஒரு கலை

யிருத்தலினுல் ஏனைய கலைகள் தோன்றி யொடுங்குமென அவ்வுவமையை ஒப்புக்கொண்டதுபற்றி முரணின்மை யறிக. அடங்கிக் கிடந்து தோன்று மென்பதும் இருத்தலாற் றோன்றுமென்பதும் வேற்றுமை. (சகூ.)

சூக்கும வுடம்பிற்கு மூலம் அசுத்த மாயை என்றும் தூல சூக்கும வுடல்கள் சிவத்தைச் சார்தற் பொருட்டு அஞ்ஞான காலத்தில் உளவாமென்றும் கூறுகின்றது.

தூலமா முருவினுக்குச் சூக்கும முதல தற்கு
மூலமா னதற்கு மூல மோகினி யதன்மு தற்றான்
மேலதாம் விந்து சத்தி சிவமிவை மிசையா மெல்லாஞ்
சாலவின் றாகு மான்மாச் சிவத்தினைச் சார்ந்த போது.

(கோ - டு.) முதல் சூக்குமம் எனவும், ஆன்மா சிவத்தினைச் சார்ந்த போது சால இன்று ஆகும் எனவுங் கூட்டுக.

(பொ-ரை.) தூலவுடம்பிற்கு முதற் காரணம் சூக்கும வுடம்பு என்பது பெறப்பட்டது. அச் சூக்கும வுடம்பிற்கு முதற் காரணம் உண்டோவெனின், உண்டு. அது மூலப் பிரகிருதியாம். அம் மூலப் பிரகிருதிக்கு முதற் காரணம் அசுத்த மாயை. அப்பிரகிருதிக்கு முதலாகிய அவ்வசுத்த மாயையே இப் பிரபஞ்சத்திற்கு மேலாகிய முதற் காரணமாம். மேலாகிய முதற் காரணமென்றதனுல், மூலப் பிரகிருதி அதன் கீழாகிய முதற் காரணமாகுமென்பதறிக. ஏனைச் சுத்த மாயையாகிய குண்டலினி சத்தி சுத்தமாய் இவ்விரு மாயைக்கும் வியாபகமாய் நிற்கும். பிரகிருதிமாயை அசுத்த மாயையாகிய இரு மாயை களாலுண்டாகும் தூல சூக்குமங்களாகிய இருவகைப் பிரபஞ்ச மும் ஆன்மா சிவத்தினையடைவதற்கு ஏதுவாகிய பக்குவ காலம் பொருந்துதற் பொருட்டு இப் பெத்த காலத்து இறைவனுல் உளவாவனவேயாம். (எ-று.)

அதன் முதற்றான் என்பது அந்த மூலப் பகுதிக்கு முதலாகிய தான் என இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாய் அசுத்த மாயையின்மேல் நின்றது. அது, அதற்கு மூல மோகினி என்பதனுல் பெறப்பட்டிருக்க வும், அந்த மோகினியாகிய அசுத்த மாயை மேலான முதற் காரணமென்ப

துணர்த்த வேண்டி அதன் முதற்றூன் என்று அநுவதித்தார். இவ்வாறு முதற்றூன் என்பதற்கு முதலாகிய தான் எனப் பொருள் கொள்ளான் முதல் என்றதனை எழுவாயாகவைத் துரைப்பர். அவ்வாறுரைக்குமிடத்து, முதறூன் என இருக்கவேண்டுமேயன்றி முதற்றூன் என றகரமிரட்டித்தல் கூடாது. அன்றியும், அதன் முதல் மேலதாம் விந்து என முடித்தல் சித்தாந்தத்திற்கும் ஏலாது. சித்தாந்தத்தில் சுத்த மாயை அசுத்த மாயை இரண்டும் நித்தமெனப்படும். இதனை "ஏகனனேக னிருள் கரும மாயை இரண்டு ஆக இவை யாறு ஆதியில்" என்னுந் திருவருட் பயனானுமுணர்க.

விந்து சத்தி சிவம் என்பதை விந்து சத்தி சுத்தமெனவும், சார்ந்த போது என்பதை சார்தற் கேதுவாகிய காலமெனவும், சால என்பதை அமைதற் பொருட்டு எனவும், இன்று என்பதை இப் பெத்த காலத்து எனவும் உரைக்க. இவ்வாறன்றி, சிவத்தினைச் சார்ந்தபோது எல்லாம் இல்லையெனக் கூறின் சால என்னும் சொல்லுக்குப் பொருளின்று. கூறினும் சிறப்பின்று. அன்றியும், எல்லாம் இல்லையாதலுமில்லை. ஆதலால், அவ்வுரை பொருந்தாது. சார்ந்த என்னும் பெயரெச்சம் போது என்னும் பெயர்கொண்டது. போதென்பது, சார்தற் கேதுவாகிய பக்குவ காலத்தைக் குறித்தலின் ஏதுப் பெயர்.

இச் செய்யுளால், மேலைச் செய்யுளிற் கூறப்பட்ட சூக்கும வுடம்பிற்கு முதல் உண்டோ? இல்லையோ என்னும் ஆசங்கையை நீக்கி வருஞ் செய்யுட்குத் தோற்றுவாயுஞ் செய்யப்பட்டது. வருஞ் செய்யுளில் "அநாதி மலங்களிம் மருந்தாற் றீர்த்துப் பரகதி யதுவுந் தந்து பாத பங்கயமுஞ் சூட்டும்." என்று கூறுகின்றார். அதற்கு இச்செய்யுளிற் கூறப்படும் "சிவத்தினைச் சார்ந்தபோது சால இன்றாகும்" என்பது தோற்றுவாயாயினமை காண்க.

"இருவினையின்ப" என்னும் ச-வது செய்யுள் முதல் இச் செய்யுள் வரை முதற் செய்யுளில் "அலகிலா வுயிர்கள் கன்மத்தாணையி னமர்ந்து செல்ல" என்ற இரண்டாங் கூறு வலியுறுத்தப்பட்டது.

அசுத்த மாயை பிரகிருதி மாயை யென்னும் இரு மாயையினின்றுண்டாகும் இருவகைப் பிரபஞ்சம் இவையென முன்னர் விரித்துக் கூறப்படும். (ருo.)

இரண்டாமதிகரணம் முடிந்தது.

மூன்றுமதிகரணம்.

"தலைவனுய்" என்பது.

ஆணவமலம் கன்ம மலம் என்னும் நோயைத் தீர்த்துச் சிவத்தை அடைவித்தற்குத் தூல சூக்கும வுடம்புகள் மருந்தாக இறைவனுற்றாப்படும் எனக் கூறுகின்றது.

அரன்விதி யருள தென்றே யறைந்தன னதுவு முன்னே
தரைநர கருந்து றக்கந் தநுகர ணுதி யெல்லாம்
வருவதுஞ் செய்த நாதி மலங்களிம் மருந்தாற் றீர்த்துப்
பரகதி யதுவுந் தந்து பாதபங் கயமுஞ் சூட்டும்.

(கோ-டு.) அதுவும் அரன் விதி (என்று) அருளதே என்று முன்னே அறைந்தனன் எனவும், இம் மருந்தால் அநாதி மலங்கள் தீர்த்து எனவுங் கூட்டுக.

(போ-ரை.) மேற் கூறிய அவ்விருவகைப் பிரபஞ்சங்களும் ஆன்மா சிவத்தினை யடைவதற்கு ஏதுவாகிய பக்குவ காலம் பொருந்துதற்கு இப் பெத்த காலத்து உளவாதல் எவ்வாறெனின், இறைவன் இலயம் போகம் அதிகாரம் என்னும் அவத்தைகளினின்று செய்யுஞ் செய்தியால் உளவாம். அவ்வாறு செய்தலும் உயிர்களிடத்து வைத்த கருணையேயாகும் என்பதைத் தொகுத்தும் வகுத்தும் மேலே கூறியிருக்கின்றோம். ஆதலால், பூமி நரக சுவர்க்க முதலியவற்றிற் சென்று அவற்றிற்குரிய பயனை அநுபவித்தற் கேதுவாகிய தநுகரணுதிகளை உளவாகச் செய்து, அத்தநுகரணுதிகளாகிய மருந்துகளினுல் அநாதியாகிய மல கன்மங்களென்னும் நோய்களைத் தீர்த்துப் பரஞானத்தை விளக்கிச் சிவானந்தப் பெரும்பேறு அவ்விறைவனுற் றாப்படும். (எ-று.)

கதி என்பது ஞானத்தினை யுணர்த்தல் வடமொழி மதம். முன்னே யறைந்தனன் என்றதனுல் இருவினைக்கேற்ப ஐந்தொழிலிற்பட்டுச் செல்லுதற்குத் தலைவனுதற் கட்படு மியல்பெல்லாம் இவ்வதிகரணத்தின் கண்ணே கூறற்பாலனவாயினும், ஒவ்வோரியையுபற்றி இருவினையைக்

கூறும் இரண்டாமதிகரணத்தில் ஆண்டாண்டு ஒருங்குவைத் தோதப்பட்டன. அவையெல்லாம் இவ்வதிகரணத்துக் கொண்டுவந்துரைத்துக் கொள்க என்பதூஉமாயிற்று. இயைபாவது:—கன்மம் சடமாதலானும், அதனைச் செய்த வுயிர்கள் சிற்றறிவுடையன வாதலானும், தாமே கூட மாட்டா வாதலின், கூட்டுவித்தற்கு அவ்விரண்டின் வேறாய தலைவன் வேண்டப்படுமென்பது.

மாயாகாரியங்களெல்லாஞ் சிவத்தினைச் சார்தற்பொருட்டாம் என மேலைச்செய்யுளிற் கூறியது எவ்வாறு பொருந்துமென்னும் ஆசங்கையை நீக்குதற்பொருட்டு, இச்செய்யுளில் அநாதிமலங்களைத் தநுகரணாதிகளாகிய இம்மருந்தாற் றீர்த்துப் பாகதியதுவுந்தந்து பாத பங்கயமுஞ் சூட்டும் என்றார். இதனால், மலங்களை நீக்கு முகத்தால் தநுகரணாதிகள் சிவத்தினைச் சார்தற்பொருட்டாம் என்றவாறாயிற்று. அறைந்தனன் என்றவிடத்து அன் ஈறு அறைந்தேன் என்னும் பொருள்படத் தன்மைக்கண் வந்தது. ‡ "இலனென்று தீயவை செய்யற்க" என்றாற்போல. தநுகரணாதிகளை மருந்தாக வுருவகஞ்செய்து மலங்களை நோயாக வுருவகஞ் செய்யாமையின், இது ஏகதேச வுருவகம்.

மேல் கூறுவது செய்யுளில் இன்பத்துன்பங்களை மருந்தெனக்கூறி இவ்விடத்துத் தநுகரணாதிகள் மருந்தென்றல் மலைவாகாதோவெனின், ஆகாது. என்னை? நோய் தீர்தற்கு ஏதுவாயினவெல்லாம் மருந்தெனப் படுமாகலினென்க. இதனை "உற்றவன் றீர்ப்பான் மருந்துஉழைச்செல்வா னென்று அப்பால் நாற்கூற்றே மருந்து" என்னுந் திருக்குறளாலறிக.

இச்செய்யுளால் மருத்துவனுக்கு மருந்துபோல, மேற்கூறி முடித்த தூலவுடல், சூக்குமவுடல், பிரகிருதிமாயை, அசுத்தமாயை, சுத்தமாயை யெல்லாம் மலவைத்தியனுகிய அரனுக்குப் பரிக்கிரகப் பொருளாதல் கூறப்பட்டது. (௫௧)

மலமாகிய ஆணவகன்மங்களைப் பிறிதொரு மலமாகியமாயையினால் நீக்குதற்கு உவமை கூறுகின்றது.

எழுமுடல் கரணமாதி யிவைமல மலம லத்தாற்
கழுவுவ னென்று சொன்ன காரண மென்னை யென்னிற்
செழுநவை யறுவை சாணி யுவர்செறி வித்த ழுக்கை
முழுவதுங்கழிப்பன்மாயைகொடுமலமொழிப்பன்முன்னோன்.

* திருக்குறள், தீவினையச்சம். ‡ த்தல் அழியாதெ

(கொ - டு) செழுநவை அறுவை அழுக்கை சாணி உவர் செறிவித்து எனவும், முன்னேன் ஒழிப்பன் எனவுங் கூட்டுக.

(போ - ரை) உண்டாகின்ற தநுகரண முதலியன யாவும் மாயாமல காரியமாகவும், ஆணவ கன்மமலங்களை இம்மாயாமலத்தால் நீக்குவனென்று கூறிய காரணம் என்னையோவெனின், அழுக்குடைய மெல்லியஆடையின் அழுக்கைச் சாணி உவர்மண் முதலிய பிறிதோர் அழுக்கைக்கொண்டு வண்ணான் முழுவதும் நீக்குதல்போல, மாயாகாரியமாகிய உடல் முதலியவற்றை மருந்தாகக்கொண்டு ஏனை ஆணவகன்ம மலங்களாகிய நோயை முதல்வன் தீர்ப்பன். (எ-று)

மலம், அழுக்கு என்பன ஒரு பொருட் சொற்கள். தநு என்பது உடல். கரணம் என்பது செவி முதலிய இந்திரியங்களும், மனம் முதலிய அந்தக்கரணங்களுமாம். புவனம் என்பது உலகம். போகம் என்பது உலகத்திலுள்ள பொருள்கள்.

இச்செய்யுளால், தநுகரணாதிகளால் மலங்களை நீக்குவனென்று மேலைச்செய்யுளிற் கூறியது வலியுறுத்தப்பட்டது.

இனி, அந்த மாயை மாயாகாரியங்களின் இயல்பாவது என்னை என்பார்க்கு அதனை வகுத்துக்கூறத் தொடங்குகின்றார். (கூஉ)

மாயையின் இலக்கணங் கூறுகின்றது.

நித்தமா யருவா யேக நிலையதா யுலகத் திற்கோர்
வித்துமா யசித்தா யெங்கும் வியாபியாய் விமல னுக்கோர்
சத்தியாய்ப் புவன போகந் தநுகர ணமுமு யிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமுஞ் செய்யு மன்றே.

(கோ - டு) மாயை நித்தமாய் எனக்கூட்டுக.

(போ - ரை.) உலகிற்கு முதற்காரணமெனப்படும் அசுத்த மாயையின் இலக்கணம் யாதெனின், உற்பத்தியில்லாததால் நித்தமாகியும், கண்ணுக்குத் தோற்றாமையால் அருவமாகியும், அழிதலில்லாமையால் ஒன்றாகியும், உலகம் உண்டாவதற்கு ஒரு காரணமாதலால் வித்தாகியும், அறிவில்லாததால் சடமாகியும், எவ்விடத்து[illegible]க்க[illegible]குத் தநுகரண புவன போகங்களைக்

கொடுத்தலால் வியாபகமாகியும், முதல்வன் வியாபகத்துள் அடங்குதலால் அவனுக்கு ஓர் வைப்புச் சத்தியாகியும், புவனமும் போகமும் தநுவும் கரணமுமாக உயிர்களின் பொருட்டு விரிதலால் ஒருமலமாகியும், விபரீத வுணர்வினைச்செய்தலால் மயக்கஞ் செய்வதாகியும் உள்ள இலக்கணங்களை யுடையதாம். (எ-று)

புவன போகந் தநுகரணமு முயிர்க்காய் என்றதனால் மாயையின் சொரூபம் புவனாதிகளென்பது கூறப்பட்டது. மாத்துமிகர் மாயையைச் சூனியமென்பர். அதனை மறுத்தற்கு உலகத்துக்கோர் வித்துமாய் என்றார். கணிகவாதிகள் ஒன்றன் சார்பில் ஒன்று தோன்றுமென்பர். எனவே ஒன்று தோன்றுங்கால் அது தோன்றுதற்கு முன்னுள்ளது கெடும் என்பது அவர் கொள்கை. அதனை மறுத்தற்கு "நித்தமாய்" எனறார். உலகாயதர் உலகத்தோற்றத்திற்குப் பூதங்களே காரணமென்பர். அவராற் கொள்ளப் படுவன நான்கு பூதங்களேயாம். அவை உருவமாதலின், அதனை மறுத்தற்கு "அருவாய்" என்றார். வைசேடிகர் முதலியோர் உலகத்திற்குக் காரணம் பரமாணுக்களென்பர். அணுக்கள் என்றதனாலேயே வியாபகமில்லாததென்பது பெறப்படும். அதனை மறுத்தற்கு "எங்கும் வியாபியாய்" என்றார். சாங்கியர் உலகத்திற்குக் காரணம் முக்குணமயமாகிய பிரகிருதி என்பர். அதனை மறுத்தற்கு "ஏகநிலையதாய்" என்றார். பாற்கரியர் உலகத்திற்குக்காரணம் பிரமம் என்பர்; அதனை மறுத்தற்கு "விமலனுக்கோர் சத்தியாய்" என்றார். சிவாத்துவிதர் உலகத்திற்குக்காரணம் சிற்சத்தி என்பர். அதனை மறுத்தற்கு "அசித்தாய்" என்றார். மாயாவாதிகள் உலகத்திற்குக்காரணமாகிய மாயை அநிர்வசனம் என்பர். அதனை மறுத்தற்கு " வைத்ததோர் மலமாய்" என்றார்.இத்தன்மைத்தாகிய மாயை ஆணவமலம்போல மயக்கமே செய்யுமென்பர் சைவருளொருசாரார். அதனை மறுத்தற்கு மயக்கமுஞ் செய்யும் என்றார்.

செய்யுளாதலின் முறை பிறழ வைக்கப்பட்டன. மயக்கமே என்ற பிரிநிலை ஏகாரம் தநுகரணாதிகளைச் செய்யாதென விலக்கும். மயக்கமும் என்ற வும்மை தநுகரணாதிகளால் அறிவை விளக்குவித்து மயக்கமுஞ்செய்யும் என்பது குறித்தது. இங்கு மயக்கம் என்றது விபரீதவுணர்வை. அவ்விபரீதவுணர்வைச் செய்தல் மாயைக்குத் தன்னியல்பன்று என்பதை மயக்கமும் என்ற வும்மை உணர்த்திநின்றது. மாயைக்குத் தன்னியல்பு ஏகதேச அறிவைச்செய்தல்.

ஒன்றாயுள்ளது அழியாது என்ற இதனால் பலவாகிய ஆன்மா அழியுமோவெனின், பலவாயும் சித்தாயுமிருத்தலால் அழியாதென்க. ஆகவே

பலவாயும் சடமாயும் உள்ளன அழியுமென்றும், ஒன்றாயும் சடமாயுமுள் ளது அழியாது என்றும், சித்து ஒன்றாயினும் பலவாயினும் அழியாதென் றும் அறிக. [௫௩]

மாயையிலிருந்து காலதத்துவம் தோன்றும் எனவும் அத னியல்பும் கூறுகின்றது.

மாயையிற் கால மோடு நியதிபின் கலாதி தோன்று
மாயவக் கால மூன்று யாக்கியு மளித்தும் போக்கிக்
காயமோ டுலகுக் கெல்லாங் காலசங் கையினைப் பண்ணி
நாயக னாணையாலே நடத்திடுஞ் சகத்தை யெல்லாம்.

(**கோ-டு.**) ஆய அக்காலம் நாயகன் ஆணையாலே மூன்றாய் ஆக்கி யும் அளித்தும் போக்கி (யும்) காயமோடு உலகுக் கெல்லாம் காலசங்கை யினைப் பண்ணி சகத்தை யெல்லாம் நடத்திடும்.

(**பொ-ரை,**) அத்தன்மைத்தாகிய அசுத்த மாயையினின் றுங் கால தத்துவமும், நியதி தத்துவமும் பின்னர்க் கலாதத்து வம் முதலியனவும் முறையே தோன்றுவனவாம். அவற்றுள் ஒன்றாகிய கால தத்துவமாவது, முதல்வன் ஆணையால் செல் காலம், நிகழ் காலம், வருங்காலம் என முத்திறப்படும். அக்காலம் சிருட்டி திதி சங்காரம் என்னும் முத் தொழிலை அடைவதாகிய உடலும் உலகுமாகிய காலத்திற்குக் கீழுள்ள காரியப் பிரபஞ்ச மனைத்தையும் காலவரையறைக்குட்படுத்தி உலகத்தை யெல்லாம் கன்மத்தளவில் நடத்தி நிற்கும். (எ-று.)

ஆக்கியும் அளித்தும் என்றவிடத்துள்ள எண்ணும்மை போக்கி என்றவிடத்தும் சென்றியையும், நாயகனாணையாலே என்பதனை ஒவ் வொரு தத்துவத் தோற்றத்தினும் சேர்த்துரைக்க. (௫௪.)

அவ்வசுத்த மாயையினின்று கால தத்துவத்தின் பின்னர் நியதி தத்துவமும், கலா தத்துவமும் தோன்றும் எனவும், அக் கலையில் வித்தையென்னுந் தத்துவம் தோன்றும் எனவும் அவற் றின் இயல்பும் கூறுகின்றது.

நியதிபின் றோன்றிக் கன்ம நிச்சயம் பண்ணி நிற்கு
மயர்விலாக் கலைபின் றோன்றி யாணவ மொதுக்கிச் சித்தின்
செயல்புரி கிரியா சத்தி தெரிவிக்குஞ் சிறிதே வித்தை
யுயர்கலை யதனிற் றோன்றி யறிவினை யுதிக்கப் பண்ணும்.

(கோ-டு.) பின் நியதி தோன்றி கன்ம நிச்சயம் பண்ணி நிற்கும். பின் அயர்வு இலாக்கலை தோன்றி ஆணவம் சிறிதே ஒதுக்கி சித்தின் செயல் புரி கிரியா சத்தி தெரிவிக்கும். உயர்கலை யதனில் வித்தை தோன்றி அறிவினை (ச்சிறிதே) உதிக்கப் பண்ணும்.

(போ-ரை,) அக் கால தத்துவத்தின் பின்னர் அம் மாயை யினின்றும் நியதி தத்துவம் தோன்றும். அந் நியதி அவரவர் செய்த கன்மம் அவரவரே அநுபவிக்குமாறு முதல்வன் ஆணை யால் நியமிக்கும். அதன் பின் அம் மாயையினின்றே அயர்ச்சி யில்லாத கலா தத்துவம் தோன்றி ஆணவத்தின் மறைப்பைச் சிறிது நீக்கி ஆன்மாவின் தொழில் செய்யுங் கிரியா சத்தியைச் சிறிது விளக்கி முதல்வன் ஆணையால் வினைக்கீடாகவரும் போகத் தில் செலுத்தி நிற்கும். உயர்ந்த அக்கலா தத்துவத்தினின்றும் வித்தியா தத்துவந் தோன்றி அவ்வான்மாவினது அறிவைச் சிறிது விளக்கி முதல்வன் ஆணையால் அப் போகத்தின் கட் செலுத்தி நிற்கும். (எ-று.) (ருரு.)

வித்தையினின்று அராக தத்துவந் தோன்றும் எனவும், அதனியல்பும், காலம் நியதி கலை வித்தை அராகமென்னும் ஐந்த ளோடுங் கூடிய உயிரின் நிச்சயம் புருட தத்துவ மெனவுங் கூறு கின்றது.

விச்சையி னராகந் தோன்றி வினைவழி போகத் தின்க
ணிச்சையைப் பண்ணி நிற்குந் தொழிலறி விச்சை மூன்றும்
வைச்சபோ திச்சா ஞானக் கிரியைமுன் மருவி யான்மா
நிச்சயம் புருடனாகிப் பொதுமையி னிற்ப னன்றே.

[கோ-டு.) விச்சையின் அராகந் தோன்றி இச்சையை வினைவழி போகத்தின் கண் பண்ணி நிற்கும். தொழில் அறிவு இச்சை மூன்றும் வைச்சபோது ஆன்மா இச்சா ஞானக்கிரியை முன் பொதுமையின் மருவி நிச்சயம் புருடனாகி நிற்பன் அன்றே.

(போ-ரை.) அவ் வித்தையினின்றும் அராகதத்துவந் தோன்றி ஆன்மாவினது இச்சா சத்தியை விளக்கி வினைக்கீடாக வரும் அப் போகத்தில் முதல்வன் ஆணையால் ஆன்மாவைச்

செலுத்தி நிற்கும். இவ்வாறு கலை வித்தை அராகம் மூன்றும் தொழில் அறிவு இச்சை மூன்றனையும் விளக்கியவிடத்துக் கன் மத்தை வரையறுத்தல் செய்யுங் காலமும், நியமித்தல் செய்யும் நியதியும் உளப்பட ஐந்து தத்துவங்களாகிய சட்டையோடுங் கூடிய உயிர் இச்சா ஞானக்கிரியை மூன்றனையும் ஏகதேசத்தில் பொருந்தி நிற்கும். அவ்வுயிரே பொது வகையால் நிச்சயமாகிய புருட தத்துவமெனப் பெயர்பெற்று அப்போகத்தில் முதல்வன் ஆணையால் பற்றுச்செய்து நிற்கும், (எ-று.)

சிறப்பு வகையாற் புருட தத்துவமென நிற்றல் மூலப் பகுதியிற் றோன்றும் அஞ்ஞானம், அகங்காரம், அவா, ஆசை, கோபம் என்னும் பஞ்ச கிலேசத்தையுடையதாயிருக்கும் பொழுதேயாதலின், இவ்விடத்து "பொதுமையில் நிற்பன்" என்றார். உயிர் சித்துப்பொருள். தத்துவம் சடப்பொருள். ஆதலின், புருட தத்துவமென்பது உயிரன்று. உயிர் போகத்தில் பற்றுச் செய்யுங்கால் அப்பற்று புருட தத்துவமென நிற்ப தன்றி வேறில்லையென்ப தறிவித்தற்கு "நிச்சயம்புருடனுகி" என்றார். [ருசு]

மேற்கூறிய கலா தத்துவத்தினின்று மூலப் பிரகிருதியும், அதினின்று குண தத்துவமும் தோன்றும் எனவும், குணதத்து வத்தின் இயல்பும் கூறுகின்றது.

வருங்குண வடிவாய் மூலப் பிரகிருதி கலையிற் றோன்றித்
தருங்குண மூன்றா யொன்றிற் றான் மூன்றாய் மும்மூன் றாகு
மிருங்குண ரூப மாகி யியைந்திடு மெங்கு மான்மாப்
பெருங்குண வடிவாய்ப் போக சாதனம் பெந்தமாமே.

[கோ-ரு.] கலையின் மூலப் பிரகிருதி வரும் குண வடிவாய்த் தோன்றி, தருங்குணம் மூன்றாய், ஒன்றின் தான் மூன்றாய் மும் மூன்றாகும். போக சாதனம் பெருங் குணவடிவாய்ப் பெந்தமாமே. எங்கும் ஆன்மா இருங்குண ரூபமாகி இயைந்திடும்.

(பொ-ரை.) அசுத்த மாயையினின்றும் மேற் கூறியவாறு கால முதலிய தத்துவங்கள் தோன்றிய பின்னர், அத் தத்துவங் களுள் ஒன்றாகிய கலா தத்துவத்தினின்றும் குணங்கள் அடங்கி யிருக்கின்ற மூலப் பிரகிருதி முதல்வன் ஆணையாற் றோன்றும்.

அம் மூலப் பிரகிருதியினின்றும் சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் மூவகையான குண தத்துவந் தோன்றும். அக்குணம் ஒவ்வொன்றும் முத்திறப்பட்டு ஒன்பது வகையாம். அக்குணதத்துவத்தில் போகத்துக்குச் சாதகமாகிய புத்தி முதலிய தத்துவங்கள் தோன்றி அத் தத்துவங்களெல்லாம் குண வடிவமாகவே முதல்வன் ஆணையால் உயிரைப் பந்திக்கும். அதனால், போகம் அநுபவிக்கும் இடம் எல்லாம் உயிரும் பெரிய அக்குணரூபமாக நிற்கும். (எ-று.)

சாத்துவிக குணமானது, பொறுமையையும், மன உறுதியையும், மனதின் சூட்சுமத்தையும், துன்பத்திலும் சந்தோஷமாயிருக்குந் தன்மையையும், மனம் வாக்குக் காயம் மூன்றும் கபடமின்றி ஒத்திருக்குந் தன்மையையும், நல்ல உத்தியோகத்தையும், பெற்றது கொண்டே மகிழுந் தன்மையையும், மோட்ச இச்சையையும், இந்திரிய அந்தக் கரணங்களின் அடக்கத்தையும், சகல சீவர்களிடத்தும் இரக்கத்தையும், மிருதுவான உணவை யுண்ணுதலையும் உண்டுபண்ணும்.

இராசத குணமானது, இலௌகீகப் பிரவிருத்தியையும், கோப முதலிய குரூரத் தன்மையையும், யானென தென்னும் அபிமானத்தையும், வஞ்சனையையும், இரக்கமில்லாமையையும். போகத்தின் கண் இச்சையையும், டம்ப நடையையும், துக்கத்தையும் உண்டுபண்ணும்.

தாமத குணமானது, ஒன்றிலும் திருப்தி இல்லாமையையும், உற்சாகம் இன்மையையும், ஈனப் பிரவிருத்தியையும், கோட் சொல்லுகையையும், அசுத்த உணவை உண்பதையும், அதிக நித்திரையையும், கர்வத்தையும், சோம்பலையும், பிறருடைய மதிப்பைக் குறைக்க எண்ணுதலையும், அறிவில்லாமையையும், மோகத்தையும் உண்டுபண்ணும்.

ஒவ்வொன்றும் முத்திறப்படுதலாவது, ஒரு குணம் மேற்பட்டிருக்குங்கால் ஏனைய இரண்டு குணங்கள் அடங்கித் தோன்றுதல். தோன்றுங்கால் சாத்துவிகத்தில் சாத்துவிகம் இராசதம் தாமதம், இராசதத்தில் இராசதம் தாமதம் சாத்துவிகம், தாமசத்தில் தாமதம் சாத்துவிகம் இராசதம் என ஒன்பது வகைப்படும். (கஎ.)

மூலப் பிரகிருதியினின்று குண தத்துவமேயன்றி அஞ்ஞானமும் தோன்றுமெனவும், குண தத்துவத்தினின்று புத்தி தத்துவந் தோன்றும் எனவும், அவற்றினியல்பும் கூறுகின்றது.

சித்தமா மவ்விய த்தஞ் சிந்தனை யதுவுஞ் செய்யும்
புத்தியவ் வியத்திற் றோன்றிப் புண்ணிய பாவஞ் சார்ந்து
வத்துநிச் சயமும் பண்ணி வருஞ்சுக துக்க மோகப்
பித்தினின் மயங்கி ஞானக் கிரியையும் பேணி நிற்கும்.

[கோ - ௬] வரும் வத்து நிச்சயமும் பண்ணி.

(போ - ரை) குண தத்துவத்திற்குக் காரணமெனச் சித்திக்கப்பட்டதாகிய மூலப்பிரகிருதியானது அக்குணதத்துவத்தைத் தோற்றுவித்தலேயன்றி, ஒன்றைப் பிறிதொன்றாக உணரும் அவிச்சையாகிய அஞ்ஞானத்தையுந் தோற்றுவிக்கும். அதன்பின் அந்தக்குண தத்துவத்தினின்றும் புத்தி தத்துவந் தோன்றும். அபபுத்தி தத்துவம் உயிர்கள் செய்த புண்ணிய பாவங்களைப் பொருந்தி அப்புண்ணிய பாவத்திற்கிடாகவந்த பொருளை இன்னதென நிச்சயித்து, நிச்சயித்தபின்னர் அப்பொருளைச் சுக துக்க மோக வடிவாய் வேறு படுத்தி, வேறுபடுத்தியவிடத்து அறிவு தொழில்கட்கு விடயமாய் நிற்கும். (எ-று.)

சித்தமாமவ்வியத்தஞ் சிந்தனையதுவுஞ் செய்யும் என்பதனைச் சித்தத்தின்மேல் வைத்துரைப்பாருமுளர். † "சிந்தைநினைவையம்-வந்துதருமன மொழிய வகுப்பொணுதே" எனப் புடை நூலாசிரிய ரோதுதலின், மனத்தின் பின்னதாய் அதன் கணடங்குஞ் சித்தத்தை இவ்விடத்துக் கூறுதற் கோரியைபின்மையானும், புடை நூலாசிரியர் அவ்வாறோதாமையானும், சிவாகமங்களோடு முரணுதலானும் அவ்வுரை பொருந்தாது. புடை நூலாகிய சிவப்பிரகாசத்தின் கருத்து வருமாறு:—சித்தமானது நினைவு மாத்திரமே. சந்தேகத்தை வந்துண்டாக்குகின்ற மனத்தை யொழிய வேறாக வகுத்துக் கூறவொண்ணுது என்பதாம். இச்செய்யுளிற் சிந்தனை யென்றது சித்தத்தின் றொழிலையன்று. எற்புழிக்கோடலால் ஒன்றைப்பிறிதொன்றாகவுணரும் விபரீத வுணர்வைக் குறித்தது. எற்புழிக்கோடலாவது, அவ்வியத்தத்திற்கு ஏற்ற தொழிலைக்கொள்ளுதல். சிந்தனையதுவும் என்ற விடத்துள்ள வும்மை குணதத்துவத்தைத் தோற்றுவித்தலேயன்றி என இறந்தது தழுவிற்று. மேல் சுரு, சுகூவது செய்யுட்களில் 'கன்மால்' என்றாற்போல வியத்தம் என்றது அம்முக்கெட்டு இல் உரு

† சிவப்பிரகாசம், பொதுவதிகாரம். உ-ம் சூ-ம் செ-உ௯.

பேற்று வியத்தில் என நின்றது. புத்தி அவ்வியத்தில் என்றதிலுள்ள அகரம் அர்தவியத்தில் என்னும் பொருள் குறித்த சுட்டு. சார்ந்து என்பது சாரப்பட்டு என்னும் பொருள் குறித்தது. பேணி என்பது பேணப்பட்டு என்னும் பொருள் குறித்தது. சுக துக்க மோகங்கள் பித்துப்போல உயிரை மயக்குதலால், அவற்றைப் பித்தென்றார். மயக்குதல் இவ்விடத்துப் பரிணமித்தல்.

* "சிந்தித்தாய்ச் சித்தத்தெளியதாய் ஆங்காரம் புந்தியா யாய்ந்துமனமாகி" என்னுஞ் சிவஞானபோதத் திருவெண்பாவால் சித்தம் மனம் அகங்காரம் புத்தியாகிய இவை முறையே ஒன்றன்பின் ஒன்றாய்த் தொழிற்படுமென்று கூறியிருக்கவும், இவ்விடத்துப் புத்தியை முன்னதாகக்கூறி வருஞ் செய்யுட்களில் அகங்காரம் மனம் சித்தம் முறையே ஒன்றன்பின்ஒன்றாய்த் தோன்றுமெனக்கூறுதல் முரணாதோவெனின், முரணாது. என்னை? இவ்விடத்துத் தோற்றமுறையுஞ் சிவஞானபோதத்திற் தொழிற்படுமுறையுங் கூறியதனாலென்க. இது எதுபோலவெனின், ஓர் அரசன் மாளிகையைக் கூறுமிடத்து அகத்துக் கொலுவீற்றிருக்கும் மண்டபமுதல் வெளிவாயில் வரை ஒவ்வொன்றும் உள்ளனவாசக் கூறுதலும், அம்மாளிகைக்குச் செல்லுங்கால் வெளிவாயில் முதலாக ஒவ்வொன்றாய்க் கடந்து செல்லுதலும் போலவாம். (நு-அ)

புத்தி தத்துவத்தினின்று அகங்காரதத்துவம் தோன்றுமெனவும், அதனியல்பும், அது முத்திறப்படுமெனவும் கூறுகின்றது.

ஆங்காரம் புத்தியின்க ணுதித்தகந் தைக்கு வித்தா
யீங்கார்தா னென்னோ டொப்பாரென்றியானென்னதென்றே
நீங்காதே நிற்குந் தானு மூன்றதாய் நிகழு மென்பர்
பாங்கார்பூ தாதி வைகா ரிகந்தை[illegible] ன்றே.

[கோ - ௬] புத்தியின்கண் ஆங[illegible] ஆர்தான் என்னோடு ஒப்பார் என்று அகந்தைக்கு வி[illegible] என்றே நீங்காதே நிற்கும். தானும் பாங்கு ஆர் பூத[illegible] தைசதம் தான் என்றே மூன்றதாய் நிகழும் என்பர்.

---

* சிவஞானபோதம் சூ-ம் [illegible]

(பேர் - ரை) அப்புத்தி தத்துவத்தினின்றும் அகங்கார தத்துவம் தோன்றும். அவ்வகங்காரம் இவ்விடத்து என்னோ டொப்பவர் ஒருவரும் இல்லை என அகந்தைப் படுதற்குக் காரண மாய் உடலை யானென்றும் மற்றப்பொருள்களை எனதென்றும் அபிமானித்து உயிரோடு வேற்றுமை இன்றி நிற்கும். அவ்வாறு நிற்கும் அகங்காரம் தனக்கு மூலமாகிய குண தத்துவத்தின் வேற்றுமைபற்றி தாமத குணத்தின் தோற்றமான பூதாதி அகங் காரம், இராசத குணத்தின் தோற்றமான வைகரி அகங்காரம், சத்துவகுணத்தின் தோற்றமான தைசத அகங்காரம் என முத்தி ரப்படும் என்பர். (எ-று.)

அகங்காரம் ஆங்காரம் என மருவிற்று. நீங்காது நிற்கும் என்றதனால் அந்த அகங்காரங் கிரியாசத்தியைத் தொழிற்படுத்துங் கலைபோல வினை முதற்காரகமென்று உபசரிக்கப்படுமென்பதாயிற்று. கருவியைக் கருத்தா வென்றது உபசாரம். வினை முதற்காரகம்—கருத்தாவாய் நின்று செய் விப்பது. [ருக]

தைசத அகங்காரத்தினின்று மனந்தோன்றி அம்மனம் சித்த ரூபமாய் நிற்கும் எனவும், அவற்றின் இயல்பும், அவ்வகங்காரத் தில் மனத்தின் பின்னாக ஞானேந்திரியமும் வைகரி அகங்காரத் தில் கன்மேந்திரியமுந் தோன்றுமெனவும் கூறுகின்றது.

மனமது தைசதத்தின் வந்தொரு பொருளை முந்தி
நினைவதுஞ் செய்தங் கைய நிலைமையி னிற்கு மாங்கே
யினமலி சோத்திராதி கன்மவிந் திரிய மெல்லா
முனமுறை செய்த வைகா ரிகந்தரு மென்பர் முன்னோர்.

(கோ - டு.) ச[illegible] ள் மனமது வந்து முந்தி ஒரு பொருளை நினைவது செய்து [illegible] மையில் நிற்கும். இனம் மலி சோத்தி ராதி ஆங்கே ([illegible] ரசெய்த வைகாரிகம் கன்ம இந்திரி யம் எல்லாம் [illegible]

(பேர [illegible] கார மூன்றனுள்ளே தைசத அகங் காரத்தினி[illegible] தோன்றும். அம்மனம் எதிர்ப்பட்ட தொருபொ[illegible] மாய் நின்று அப்பொருளின்உண்மை யை அ[illegible] அறிந்து சிந்திக்கும். அதுவன்றி,

அம்மனமே அவ்வாறு சிந்தித்த பின்னர் அப்பொருளின்கண் அதுவோ இதுவோ என்று சந்தேகித்து நிற்கும். இவ்வாறு சந்தேகித்து நிற்றலால் மனமென்றும், சிந்தித்து நிற்றலால் சித்தமென்றும் மனம் இருவகைப்படுமாறு அறிக. மனந்தோன்றிய பின்னர் உணரும் வகையில் அம்மனத்திற் கினமாகிய ஞானேந்திரியங்கள் அத்தைசத அகங்காரத்தினின்று முதல்வன் ஆணையாற் றோன்றும். முற்கூறிய ஏனை வைகாரி யகங்காரத்தினின்று கன்மேந்திரிய மைந்தும் முதல்வன் ஆணையாற்றோன்றும் என்பர் முன்னோர். (எ - று.)

இனமலி சோத்திராதி என்றவிடத்து, தோன்றும் என்பது சொல்லெச்சமாக வருவித்துரைக்க. [௬௦.]

ஞானேந்திரியங்களாவன இவை என்றும் அவற்றின் விடயங்கள் இவை என்றும் கூறுகின்றது.

நற்செவி துவக்குக் கண்ணு நாசியைந் தினையு நல்லோர்
புத்தியிந் திரிய மென்று புகன்றன ரிவைத மக்குச்
சத்தநற் பரிச ரூப விரதகந் தங்க ளைந்தும்
வைத்தனர் விடய மாக வடைவினின் மருவு மென்றே.

[கோ - ௫.] நற்செவி துவக்குக் கண் நா நாசி ஐந்தினையும் புத்தியிந்திரியம் என்று நல்லோர் புகன்றனர். இவை தமக்கு விடயமாக அடைவினில் சத்தம் நன்பரிச ரூப விரத கந்தங்கள் ஐந்தும் மருவும் என்றே வைத்தனர்.

(பொ - ரை.) அவ்விருவகை இந்திரியங்களுள் நன்மையாகிய செவியும் உடலும் கண்ணும் நாக்கும் நாசியும் ஆகிய ஐந்தினையும் ஞானேந்திரியங்க ளென்று நல்லோர் மொழிந்தனர். அறியுந் தன்மையால் ஞானேந்திரியமெனப் பெயராயிற்று. அவ்விந்திரியங்கள் ஐந்திற்கும் முறையே சப்தமும் பரிசமும் ரூபமும் இரதமும் கந்தமும் என்னும் பூத குணமைந்தும் விடயமாகப் பொருந்துமென்று வைத்தனர். (எ - று.) (௬௧.)

கன்மேந்திரியங்களிவை யென்றும் அவற்றின் றொழில்களிவை யென்றும் கூறுகின்றது.

வாக்கொடு பாதம் பாணி பாயுவோ டுபத்த மைந்து
நீக்கினர் முன்னே கன்மேந் திரியங்க ளெனநி னைந்தே
யாக்கிய வசன கமன தானமும் விசர்க்கா னந்த
மூக்கமா ரைந்து மைந்தின் றொழிலென வோதி னாரே.

[கோ - டு.] வாக்கொடு பாதம் பாணி பாயுவோடு உபத்த மைந்தும் கன்மேந்திரியங்களென முன்னே நினைந்தே நீக்கினர். ஐந்தின் தொழில் ஆக்கிய வசன கமன தானமும் விசர்க்கம் ஆனந்தம் ஊக்கம் ஆர் ஐந்தும் என ஓதினாரே.

(போ - ரை.) கன்மேந்திரியங்களாவன, வாக்கும் பாதமும் கையும் மல விசர்க்கஞ் செய்யும் பாயுவும் சலவிசர்க்கஞ் செய்யும் உபத்தமுமென ஐந்தாம். இவ்வைந்துந் தொழில் செய்யுங் கருவியாதலால், ஞானேந்திரியங்களின் வேறாகக் கன்மேந்திரியங்களென முன்பே கருதிவைத்தனர். இவ்வைந்தின்றொழில்கள் முறையே வசனமும் நடையும் கொடையும் மல விசர்க்கமும் ஆனந்தமுமாகிய வலிமைபெற்ற ஐந்துமாமென மொழிந்தனர். ()

அவ்வாறாயின், ஆன்மாவின் ஞானக் கிரியைகளை விளக்குதற்கு இந்திரியம் அந்தக்கரணம் கலாதி என்னும் மூவகையினுள் ஒன்றேயமையுமாகலின், ஏனைய மிகையாமென்பார்க்குச் சமாதானங் கூறுதற்கெழுந்தது வருஞ் செய்யுள். [கஉ.]

உயிர்க்கு ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் புறக்கருவியும், மன முதலிய நான்கும் அகப்புறக் கருவியும், கலை முதலியன அகக்கருவியுமாம் முறைமை கூறுகின்றது.

வாயாதி சோத்தி ராதி புறத்துவாழ் கருவி யாகு
மோயாத மனாதி காயத் துணருமுட் கருவி யாகு
மாய்வார்கட் கராக மாதி யவற்றினுட் கருவி யென்பர்
மாயாடன் வயிற்றி வற்றாற் றுடக்குண்டு வாழு மான்மா.

[கோ - டு.] அராகம் ஆதி ஆய்வார்கட்கு எனவும், ஆன்மா துடக்குண்டு வாழும் எனவும் கூட்டுக.

(போ - ரை.) ஆன்மாவின் அறிவு தொழில்களை விளக்குவதற்கு இந்திரியம் அந்தக்கரணம் கலாதி என்னும் முத்திறத்துள்

ஒன்று போதாதோவெனின், போதாது. என்னையெனின், ஒரு பொருளை அறிய வேண்டுவோர்க்குக் கன்மேந்திரிய ஞானேந்திரியங்களாகிய அவ்விருவகை இந்திரியங்களும் புறத்துத் தோன்றி அறிந்து தொழிற்படும் புறக்கருவிகளாம். ஒழிவில்லாத மன முதலிய காரணங்கள் அவ்விந்திரியங்களால் அறியப்பட்ட பொருள்களை உடம்பின் அகத்தே நின்று பகுத்தறியும் உட்கருவிகளாம். ஏனைக் கலாதிகளாவன, ஆய்வார்க்கு அவ்வந்தக் காரணங்களால் அறியப்பட்ட பொருள்களில் விருப்பு வெறுப்புற்று ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியாசத்தி பொருந்தச் செய்தலின்உள்ளந்தக்காரணங்களாகிய கருவிகளாம்என்பர். இவ்வுள்ளந்தக் காரணங்களை நோக்க மன முதலிய அந்தக்காரணம் புறமாகவும் இந்திரியங்களை நோக்க அகமாகவும் இருத்தலால் அம்மன முதலியவற்றை அகப்புறக் கருவி என்றும் கலை முதலியவற்றை அகக் கருவி யென்றுங் கூறுவர். இவ்வாறு இவை தம்முள் வேற்றுமை யாதலால், மாயையின் கலக்குண்ட பாகத்தில் உண்டாகிய இம் முத்திறக் கருவிகளாலும் உயிர் கட்டுப்பட்டு நிற்கும். ()

மாயாளெனப் பெண்பாலாகக்கூறியது வடமொழி மதம்பற்றி; தத்துவங்கள் தோன்றுதற் கிடமாதல்பற்றி உருவகஞ் செய்தற்பொருட்டு மாயாளெனக்கூறியதெனினும் அமையும். ஓயாத என்னும் அடை மன முதலிய அனைத்திற்கு மன்று. மனதிற்கு மாத்திரமேயாம். [சுசு]

பூதாதி அகங்காரத்தினின்று சப்தாதி தன்மாத்திரை ஐந்தும் தோன்றும் எனவும், அவற்றின் இயல்பும், இத்தன்மாத்திரை ஐந்தும், மனம், புத்தி, அகங்காரம் மூன்றும் ஆக எட்டும் புரியட்டக சரீரம் எனவும் கூறுகின்றது.

ஓசைநற் பரிச ரூப விரதகந் தங்க ளென்று
பேசுமாத் திரைக ளைந்தும் பிறக்கும்பூ தாதி கத்தி
னேசவிந் திரியங் கட்கு நிகழறி விதனாற் காண்டு
மாசைசேர் மனாதி தன்மாத் திரைபுரி யட்ட கந்தான்

[கோ - ௫] பூதாதிகத்தின் ஓசை நற்பரிசமெனவும், தன்மாத்திரை ஆசைசேர் மனாதி புரியட்டகந்தான் எனவுங் கூட்டுக.

(போ - ரை) அவ்விருவகை இந்திரியங்களுந் தோன்றிய பின்னர் ஏனைப்பூதாதி யகங்காரத்தினின்று சப்தமும் பரிசமும் உருவமும் இரதமும் கந்தமும் எனக் கூறப்படும் தன்மாத்திரைக ளைந்துந் தோன்றும். மேற்கூறிய விரும்பப்பெற்ற இந்திரியங் கள் தத்தம் விடயங்களை விடயிக்குமாறு முதல்வன் ஆணையால் அத்தன்மாத்திரைகள் ஊக்கஞ்செய்வித்து நிற்கும். இத்தன்மாத் திரைகளைந்தும் இச்சாரூபமாகிய மனம், புத்தி, அகங்காரம் மூன் றும் ஆக எட்டும் புரியட்டக வுடம்பாம். (எ-று.)

பேசுதன்மாத்திரை என இருக்கவேண்டுவது பேசு மாத்திரை என நின்றது தலைக்குறை.

மேல் சுக-வது செய்யுளில் ஞானேந்திரியங்களின் விடயங்களாகக் கூறிய சத்தாதி வேறு. ஈண்டுக்கூறிய சத்தாதி வேறு. அதுபோக ரூப மாய்ப் புறத்தே யிருக்கும். இது தேக ரூபமாய் அகத்தேயிருக்கும். அவ்வாறிருத்தல் எவ்வாறெனின், சப்தம் அகத்தில் கேட்குந் தன்மை யான அறிவாயும், புறத்தில் கேட்கப்படுந் தன்மையான ஒலியாயுமிருக்கும். இவ்வாறே ஏனையவுமுய்த் துணர்ந்துகொள்க. கேட்பது குணமாகிய் தன்னளவிற்றாயும், கேட்கப்படுவது பொருளளவிற்றாயுமிருக்குமாதலின் கேட்பதற்குத் தன் மாத்திரை என்றும், கேட்கப்படுவதற்கு விடயம் என்றும் பெயராயிற்று.

தத்துவங்களைப்பற்றிக் கூறிக்கொண்டுவரு மிவ்விடத்தில் "மனுதி தன்மாத்திரைபுரியட்டகம்" என உடன் கூறியது தன்மாத்திரை அகத்தி லிருக்குமென்ப துணர்த்துதற்பொருட்டு. (சுச)

தன் மாத்திரையினின்று ஆகாய முதலிய ஐந்து பூதங்கள் தோன்றுமெனவும், அவற்றின் குணங்கள் ஒன்றற்கொன்று ஏற்ற மாயிருக்குமெனவும், இப்பூதங்களின் காரியங்கள் தாத்துவிகங்க ளாகிய அங்கமாகவும், இப்பூதங்கள் அங்கியாகவு மிருக்குமென வும் கூறுகின்றது.

சாற்றிய பஞ்ச தன்மாத் திரைகளிற் சத்த முன்னாத்
தோற்றும்வான் வளிதீநீர்மண் டொக்கியே யொன்றுக் கொன்றங்
கேற்றமா மோசை யாதி யிருங்குண மியைந்து நிற்கு
மாற்றவே விடய பூத மங்காங்கி பாவத் தாமே.

[கொ - ௫] சத்தம் முன்னுச்சாற்றிய பஞ்ச தன்மாத்திரைகளின் வான் வளி தீ நீர் மண்தோற்றும். தொடக்கியே ஒன்றுக்கொன்று அங்கு ஏற்றமாம் ஓசை ஆதி யிருங்குணம் இயைந்துநிற்கும். பூதம் ஆற்றவே விடயம் அங்காங்கி பாவத்தாமே.

(பொ - ரை) மேற்சத்த முதலியவாகக் கூறிய தன்மாத்திரைகள் ஐந்தனுள் சப்தத்தில் ஆகாயமும், பரிசத்தில் வாயுவும், ரூபத்தில் அக்கினியும், இரதத்தில் அப்புவும், கந்தத்தில் பிருதிவியுமாகிய தூலபூதம் ஐந்துந் தோன்றும். அப்பூதங்களுள் ஆகாயம் சப்த குணத்தையும், வாயு சப்த பரிச குணங்களையும், அக்கினி சப்த பரிசரூப குணங்களையும், அப்பு சப்த பரிசரூப இரத குணங்களையும், பிருதிவி சப்த பரிசரூப இரதகந்த குணங் களையும் விளங்கித் தோன்றுதலையுடைத்தாய் சப்த முதலிய தன் மாத்திரைகளுடன் பிரிப்பின்றி நிற்கும். இவ்வைம்பெரும் பூதங்களும் தன் மாத்திரையோடு கூடிநின்று இந்திரியங்களைத் தொழிற்படுத்துவதற்கு இப்பூதங்களில் நின்று காரிய பூதங்களாகிய அறுபது தாத்துவீகங்களுந் தோன்றும். அத்தாத்துவிகம் அங்கமாகவும், இத்தூலபூதங்கள் அங்கியாகவும் நிற்கும். (எ-று)

ஆற்றுதல்-ஊக்குதல். விடயம் என்பது இவ்விடத்துக் காரியம் என்னுமளவில் நின்றது. எனவே, காரியபூதம் என்பதாம்.

காரியபூதம் என்பது தூலபூதத்தினின்றுங் காரியப்படுகின்ற பஞ்சீகரண பூதங்களாம். பஞ்சீகரணமாவது, ஒரு பூதத்தை இரண்டு பங்காக்கி ஒரு பாதி நிற்க மற்றப்பாதி ஒவ்வொன்றையும் நான்கு கூறாகச் செய்து ஒவ்வொரு நான்கு கூறையும் தன்பாதி நீங்கிய ஏனைய பாதியோடு கூட்டலாம். கூட்டவே பிருதிவியில் எலும்பு தசை மயிர் தோல் நரம்பு முதலானவையும், அப்புவில் மூத்திரம் இரத்தம் சிலேட்டுமம் வியர்வை சுக்கிலம் முதலானவையும், அக்கினியில் இருதய உஷ்ணம் அன்ன பானாதிகளைச் சீரணிக்கச்செய்கை நயனத்தில் சூடு தேகத்தில் சூடு பயித்தியம் முதலானவையும், வாயுவில் தச வாயுக்களும், ஆகாசத்தில் தச நாடிகளும் உண்டாம். தூல சரீரதத்துவங்களாகிய தாத்துவீகங்கள் சூக்கும சரீர தத்துவங்கள்போல, ஆன்மாவுக்கு நிலைத்திருப்பதின்றி அழியுந்தன்மையுடையனவாதலால், தாத்துவிகம் எனப்பட்டது.

தூல சரீர தத்துவம் அறுபது வருமாறு:—மேற்கூறியவாறு பிருதிவியில் உண்டான எலும்பு முதலிய ஐந்தும், அப்புவிலுண்டான மூத்திர முதலிய ஐந்தும், அக்கினியிலுண்டான இருதய உஷ்ண முதலிய ஐந்தும், வாயுவிலுண்டான பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்னும் பத்து வாயுக்களும், கிடத்தல், ஓடல், இருத்தல், நடத்தல், நிறுத்தல் என்னும் அவ்வாயுவின்கூறு ஐந்தும், ஆகாயத்தினுண்டான அத்தி, அலம்புடை, இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, குகுதை, சங்கினி, சிகுவை, புருடன் என்னும் பத்து நாடிகளும், காமம், குரோதம், மதம், லோபம், மோகம் என்னும் அவ்வாகாயத்தின்கூறு ஐந்தும், வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் என்னும் கன்மேந்திரியத்தின் தொழில் ஐந்தும், சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் வாக்கு நான்கும், சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் குணம் மூன்றும், தைசதம், பூதாதி, வைகாரிகம் என்னும் அகங்காரம் மூன்றும் ஆக அறுபதுமாம், வாக்கு நான்கும் சுத்த மாயாகாரியமாயினும், புறமாய்த் தொழிற்படு முறைமைபற்றித் தூலபூத காரியமாய்க் கூறப்பட்டது. இவ்வாறே பிறவுமாம். ஞானேந்திரியங்களின் விடயமாகிய சத்தாதி ஐந்தும், வசனாதி போன்று புறத்து நிகழாமையின், புறக்கருவியினுள்வைத் தெண்ணப் படாதவாறு காண்க.

"எழுமுடல் கரணமாதி" என்னுஞ்செய்யுள்முதல் இதுவரையுள்ள பதினன்கு செய்யுளானும், தத்துவங்கள் ஒன்றினென்று தோன்று முறைமையும், அவற்றின் றொழிற்பாடும், அதனல் உயிருக்குண்டாம் பயனும், தாத்துவிகங்கள் பஞ்ச பூதங்களின் காரியம் என அவற்றதியல்பும் கூறப்பட்டன.

இத் தத்துவங்களெல்லாம் அகமும், அகப்புறமும், புறமும் என மூவகைப்படும். வித்தியாதத்துவங்களாகிய கலாதிகள் அகம். மன முதலிய அந்தக்கரணங்கள் அகப்புறம். இந்திரியம், தன்மாத்திரை, பூதங்கள் புறம். புறத்திலுள்ள விடயங்களோடு நேராகக் கூடுமியைபுபற்றி இந்திரிய முதலியன புறம் எனவும், இந்தப்புறத்தைநோக்க அகமாயும், கலாதிகளைநோக்கப் புறமாயும் இருத்தல்பற்றி மனம் முதலியன அகப்புறமெனவும், அவற்றினும் அகத்திருத்தல்பற்றிக் கலாதிகள் அகமெனவும் வகுத்தவாறு காண்க. அவற்றுள், புறமாகிய பூதங்கள் சரீர ரூபமாயிருத்தல் பற்றி அகப்பூதமெனவும், உலக ரூபமாயிருத்தல்பற்றிப் புறப்பூதமெனவும் இருவகைப்படும். அவ்விரண்டனுள் உலக ரூபமாகிய புறப்பூதங்களிலுண்டாம் விசேடங் கூறத் தொடங்குகின்றார். (கூகு)

ஐந்து பூதங்களின் குணமும் தொழிலும் இவை எனக் கூறுகின்றது.

இரந்தர மாகி வான்று னிடங்கொடுத் திடுஞ்ச லித்துப்
பரந்தவை திரட்டுங் காறீச் சுட்டொன்று வித்தல் பண்ணு
நிரந்தரங் குளிர்ந்து நின்று பதஞ்செயு நீர்மண் டானு
முரந்தருங் கடின மாகித் தரித்திடு முணர்ந்து கொள்ளே.

(கோ - டே) வான்தான் இரந்தரமாகி இடங்கொடுத்திடும். கால் சலித்துப் பரந்தவைதிரட்டும். தீ சுட்டு ஒன்றுவித்தல் பண்ணும். நீர் நிரந்தரம் குளிர்ந்து நின்று பதஞ்செய்யும்.

(போ - ரை.) மேற்கூறிய ஐம்பெரும்பூதங்களுள் ஆகாய மானது வெளியாகிய குணத்தையும், இடங்கொடுத்தலாகிய தொழிலையும் உடையதாம். வாயுவானது சலிக்குங் குணத்தையும், பரந்தவற்றைத் திரட்டுதலாகிய தொழிலையும் உடையதாம். அக்கினியானது சூடாகிய குணத்தையும், எவற்றையும் சுட்டு நீறுக்கும் தொழிலையும் உடையதாம். நீரானது இடைவிடாது குளிருங் குணத்தையும், நனைத்தலாகிய தொழிலையும் உடையதாம். மண்ணானது வலிமை தருதற் கேதுவாகிய கடினமான குணத்தையும், எவற்றையுக் தாங்குதலாகிய தொழிலையும் உடையதாம். இவற்றினை யறிவாயாக. (எ - று.) (கூகூ.)

ஐந்து பூதங்களின் வடிவும் நிறமும் பீசாக்கரமும் இவை எனக் கூறுகின்றது,

மண்புன லனல்கால் வான்பால் வடிவுநாற் கோண மாகுந்
தண்பிறை மூன்று கோணந் தகுமறு கோணம் வட்டம்
வண்பொன்மை வெண்மை செம்மை கறுப்பொடு தூம வன்ன
மெண்டரு மெழுத்துத் தானும் லவரய வவ்வு மாமே.

[கோ - டே.] மண் புனல் அனல் கால் வான் நாற்கோணம். தண் பிறை மூன்றுகோணம். தகும் அறுகோணம் வட்டம் ஆகும் பால் வடிவு வண் பொன்மை வெண்மை செம்மை கறுப்பொடு தூமம் (பால்) வன்னம் லவரய அவ்வுமாம் எண் தரும் எழுத்துத் தானுமே.

(போ - ரை.) நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் அப்பூதங்கள் முறையே நாற்கோணமும், குளிர்ந்த பிறைபோலும் இருகோணமும், முக்கோணமும், தக்க அறுகோணமும், வட்டமும் ஆகிய ஐவகை வடிவுகளையும், முறையே வளப்பமாகிய பொன்மையும், வெண்மையும், செம்மையும், கருமையும், புகைமையும் ஆகிய ஐவகை நிறங்களையும், அவ்வாறு முறையே லகாரமும், வகாரமும், ரகாரமும், யகாரமும், ஹகாரமும் ஆகிய ஐவகைப் பீசாக்கரங்களையும் உடையனவாம். (எ - று.) (கூஎ.)

ஐந்து பூதங்களின் அடையாளங்களும் அதிதெய்வங்களும் இவையெனக்கூறி, அவை நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகட்கும் உளவெனக் கூறுகின்றது.

குறிகள்வச் சிரத்தி னோடு கோகந தஞ்சு வத்தி
யறுபுள்ளி யமுத விந்து வதிதெய்வ மயன்மா லாதி
செறிபுக ழீசனோடு சதாசிவம் பூத தெய்வ
நெறிதரு கலையைந் திற்கு நிகழ்த்துவ ரிந்த நீர்மை.

(கோ - டு) பூதம் வச்சிரத்தினோடு அயன் கோகநதம் மால்சுவத்தி ஆதி அறுபுள்ளி செறிபுகழ் ஈசன் அமுதவிந்து சதாசிவம் குறிகள் அதிதெய்வம் நெறிதருகலை ஐந்துக்கும் இந்த நீர்மை நிகழ்த்துவர்.

(போ - ரை) முற் கூறிய ஐந்து பூதங்களுள், பிருதிவியானது வச்சிராயுதத்தை அடையாளமாகவும், பிரமாவை அதிதேவதையாகவு முடைத்தாயிருக்கும். அப்புவானது தாமரையை அடையாளமாகவும், விட்டுணுவை அதிதேவதையாகவு முடைத்தாயிருக்கும். அக்கினியானது இருதலை மேழியை அடையாளமாகவும், உருத்திரனை அதிதேவதையாகவு முடைத்தாயிருக்கும். வாயுவானது அறுபுள்ளியை அடையாளமாகவும், மிக்க புகழினையுடைய மகேசுவரனை அதிதேவதையாகவு முடைத்தாயிருக்கும். ஆகாசமானது அமிர்த விந்துவாகிய வட்டத்தை அடையாளமாகவும், சதாசிவனை அதிதேவதையாகவு முடைத்தாயிருக்கும். மந்திர முதலிய அத்துவாக்களை யடக்கி

நிற்பதாகிய நிவர்த்தி முதலிய ஐந்து கலைகட்கும் இவ்வடையாளங்களும், அதிதெய்வங்களும் உளவாமென்று பெரியோர் கூறுவர். (எ-று.)

ஐந்து கலைகளாவன—நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்பனவாம். இவற்றை முன்னர் எட்டாஞ்சூத்திரத்தில் விரித்துக்கூறப்படுமாதலின் அவ்விடத்துக்காண்க.

"இரந்தரமாகி" என்பது முதல் இவை மூன்று செய்யுளானும் புறப்பூதங்களி னியல்பு வேறெடுத்துக்கொண்டு வகுத்துக் கூறப்பட்டது.

அகம் அகப்புறம் புறமென்னு மூன்றனுள், சூக்கும சரீர ரூபமாயிருக்குந் தன்மாத்திரை அகப்பூதமெனவும், தூல சரீர ரூபமாயிருக்கும் ஆகாய முதலிய பூதங்கள் அகப்புறப்பூதமெனவும், உலகரூபமாகிய பூதங்கள் புறப்பூதமெனவும் வழங்கப்படும். தூல சரீரத்திலிருக்கும் பூதங்கள் தன்மாத்திரையை நோக்கப் புறமாயும், வெளிப் பூதங்களை நோக்க அகமாயு மிருத்தல்பற்றி அகப்புறப் பூதமெனப்பட்டன. அவற்றுள், அகப்பூதங்களினியல்பு மேல் ௬௪-வது செய்யுளில் "நேசவிந்திரியங்கட்கு நிகழறிவினைக் காண்டும்" எனவும், அகப்புறப்பூதங்களினியல்பு அச்செய்யுளில் "ஆசைசேர் மனுதி தன்மாத்திரை புரியட்டகந்தான்" எனவும் சூக்கும பூதமாகிய தன்மாத்திரைக் கோதியவாறுபற்றி அறியக்கிடந்தன. இந்திரியங்களுக்கு விடயங்களை அறியுமாறு ஊக்கஞ் செய்விப்பது அகப்பூதங்களாகிய தன்மாத்திரையினியல்பு. இந்திரியங்களுக்கு விடயங்களில் செல்லுமாறு செய்விப்பது அகப்புறப் பூதங்களாகிய பூதங்களினியல்பு. ஆசை—விடயங்களிற் செல்லுதல். [௬௮.]

மேல் முதற் சூத்திரம் அறுபத்தாறுவது செய்யுளிற் கூறிய தத்துவம் ஐந்தும், இச்சூத்திரத்திற் கூறிய தத்துவம் முப்பத்தொன்றும், ஆகத் தத்துவம் முப்பத்தாறும் மூவகை இயல்பை உடையன எனக் கூறுகின்றது.

சுத்ததத் துவங்க ளென்று முன்னமே சொன்ன வைந்து
மித்தகை மையினி யம்பு மிவைமுப்பத் தொன்று மாகத்
தத்துவ முப்பத் தாறுஞ் சைதன்னி யங்க ளைந்து
மித்தசித் தான்மா வொன்று முப்பது மசித்தே செப்பில்.

[கோ - ௫.] முன்னமே சொன்ன சுத்த தத்துவங்களென்று ஐந்தும், இத்தகைமையி னியம்பும் இவை முப்பத்தொன்றும் ஆக முப்பத்

தாறு தத்துவமாம். செப்பில் ஐந்து சைதன்னியங்கள். ஆன்மா ஒன்று சித்து அசித்து. முப்பதும் அசித்தே.

(போ - ரை.) மேலைச் சூத்திரத்துட் கூறிய சுத்த தத்துவங்கள் ஐந்தும், இச்சூத்திரத்துட் கூறிய தத்துவம் முப்பத்தொன்றும் ஆகத் தத்துவம் முப்பத்தாறும். சொல்லுமிடத்து இவற்றுள், சுத்த தத்துவமாகிய முன்னைய வைந்தும் சடமாயினும் சிற்சத்திக்குச் சுதந்திர வடிவாகலின், உபசாரமாய்ச் சைதன்னியம் என்று சொல்லப்படும். ஏனை முப்பத்தொன்றனுள், புருட தத்துவமாகிய ஒன்று சித்தையும் அசித்தையுஞ் சார்ந்து அதனதன் வண்ணமாய் நிற்கும் உரிமையுடைமையால் சித்த சித்தெனப்படும். அஃது ஒழிந்த ஏனைய முப்பது தத்துவங்களும் சடமாதலால் அசித்தெனவேபடும். (எ - று.)

சித்தசித் தென்றது தமிழ் நூலின் முடிபு. வடநூலின் முடிபாயின் சிதசித்தென இருத்தல் வேண்டும்.

இச் செய்யுளால் மேலேகூறி முடித்த தத்துவங்களின் தொகை முப்பத் தாறெனவும், அவற்றுள் ஐந்து சைதன்னியம், ஒன்று சித்தசித்து; முப்பது அசித்து என அவற்றது இயல்புங் கூறப்பட்டன. [சுகூ.]

அம்முப்பத்தாறு தத்துவங்களும் சுத்தம், சுத்தாசுத்தம், அசுத்தம் என மூவகையாகவும், பிரேரக காண்டம், போக காண்டம், போக்கிய காண்டம் என மூன்று காண்டமாகவும் விளங்குமெனக் கூறுகின்றது.

ஐந்துசுத் தத்தின் கீழேழ் சுத்தாசுத் தம்ம சுத்தந்
தந்திடும் புமான்கீ ழெண் மூன் றுபதத் துவஞ்சீ வர்க்கு
வந்திடும் பிரேர காண்டம் மருவுபோ கசயித் திரத்தோ
டந்தமி லணுக்க ளுக்குப் போக்கிய காண்ட மாமே.

[கோ - டு.] ஐந்து (சுத்தம்) சுத்தத்தின் கீழ் ஏழ் (தத்துவம்) சுத்தா சுத்தம். தந்திடும் புமான் கீழ் எண் மூன்றுய தத்துவம் அசுத்தம். சீவர்க்கு வந்திடும் பிரேர காண்டம் மருவு போக சயித்திரத்தோடு அந்தம் இல் அணுக்களுக்குப் போக்கிய காண்டம் ஆமே.

(போ - ரை.) இத்தத்துவம் முப்பத்தாறனுள், முற்கூறிய ஐந்து தத்துவமும் சுத்த தத்துவமாம். அதன் கீழான

கால முதலிய ஏழு தத்துவமும் சுத்தா சுத்த தத்துவமாம். பொருந்திய புருட தத்துவத்தின் கீழான ஏனைய இருபத்து நாலு தத்துவமும் அசுத்த தத்துவமாம். இவை முறையே சுத்த மாயையில் உண்டானதினாலும், அசுத்த மாயையிலுண்டானதினாலும், பிரகிருதி மாயையிலுண்டானதினாலும் இவ்வாறு வகுக்கப்பட்டனவாம். அசுத்த மாயையானது சுத்த மாயைக்கும் பிரகிருதி மாயைக்கும் நடுவாய் நின்றமையால் சுத்தா சுத்தமெனப்பட்டது. பிரகிருதி மாயை தூல சூக்குமவுடல்களுக்கு ஆதாரமாய் நின்றமையால் அசுத்தமெனப்பட்டது. சுத்த தத்துவம் ஐந்தும் கலாதி தத்துவங்களைப் போகத்தில் செலுத்துவதற்கு ஏதுவாய் நிற்குமாதலால், பிரேரக காண்டமாம். பிரேரகம்—செலுத்துதல். சுத்தா சுத்த தத்துவங்கள் ஏழும் உயிர்களுக்குப் போகங்களைத் தோற்றுவிக்கு மாதலால், போக சயித்துரு காண்டமாம். சயித்துரு—உண்டுபண்ணுதல். அசுத்த தத்துவம் இருபத்து நாலும் அளவில்லாத உயிர்கள் போகங்களை அநுபவிப்பதற்கு ஏதுவாயிருக்கு மாதலால் போக்கிய காண்டமாம். (எ - று.)

வித்தியா தத்துவம் ஏழையும் சுத்த தத்துவம் ஐந்தும் செலுத்து முறை வருமாறு:—காலம், நியதி, கலை என்னும் மூன்றனையும் சத்தி தத்துவமும், வித்தையைச் சுத்தவித்தையும், அராகத்தை ஈசுவர தத்துவமும், மாயையைச் சிவதத்துவமும், புருடனைச் சதாசிவ தத்துவமுஞ் செலுத்தும்.

கிரியையேயானபோது தோன்றுவது சத்தி தத்துவமாதலால், அது, கிரியையை யெழுப்புங் கலை கால நியதிகளைச் செலுத்துதலும், ஞானமேறிக் கிரியை குறைந்தபோது தோன்றுவது சுத்த வித்தை யாதலால், அது, அறிவை யெழுப்பும் வித்தியா தத்துவத்தைச் செலுத்துதலும், கிரியையேறி ஞானங் குறைந்தபோது தோன்றுவது ஈசுவர தத்துவமாதலால், அது ஞானங் குறைந்த இச்சையை யெழுப்பும் அராக தத்துவத்தைச் செலுத்துதலும், ஞானமேயானபோது தோன்றுவது சிவ தத்துவமாதலால், அது, உலகந்தோன்றி ஒடுங்குதற்குரிய கலக்குண்ட பாகமாகிய மாயையினை யறிந்து செலுத்துதலும், ஞானமுங் கிரியையுமொத்தவிடத்துத் தோன்றுவது சதாசிவ தத்துவ மாதலால், அது, இச்சா

ஞானக் கிரியைகளின் கூட்டத்தாலுண்டான புருட தத்துவத்தைச் செலுத்துதலும் முறைமையாமாறு கண்டு கொள்க. இது தத்துவப் பிரகாச மென்னுந் தமிழ் நூலிற் கண்டது.

சிவதத்துவமைந்தும் சுத்தமென்பது மேலைச்செய்யுளிற் கூறி முடித்தமையின் இச்செய்யுளில் அதன்கீழ் ஏழு என்று கூறுவதற்காக அநுவதித்தார். போகசயித்திர என்றவிடத்து சயித்திரு என்னும் பொருள்பட உகரமும், அத்தோடு என்றவிடத்து அதனோடு என்னும் பொருள்பட அன்சாரியையுந் தொக்கு நின்றன. போக சயித்திரத்தோடு என்றவிடத்து அது என்பது போகசயித்திரு என்னும் பொருளையேதரும் பகுதிப் பொருள் விகுதி. இத்தத்துவங்கள் பிரேரககாண்டம், போககாண்டம், போக்கியகாண்டம் எனக் காரணக்குறியாமாறு செலுத்துதலினாலும், போகத்தைத் தோற்றுவித்தலினாலும், போகாநுபவத்திற்குத் துணையாயிருத்தலினாலும் கண்டுகொள்க.

இச்செய்யுளால் அம்முப்பத்தாறு தத்துவமும் பிரேரகம், போகம், போக்கியமென மூவினமாதல் கூறப்பட்டது. [எ0]

பிரபஞ்சம் அனைத்தும் தத்துவவடிவாய் தூலம் சூக்குமம் அதிசூக்குமமெனமுத்திறப்படுமெனவும், இத்தத்துவங்களைப்பொருந்தும் அணுபக்க சம்பு பக்கத்து அதிதெய்வங்கள் அவ்வத்தத்துவப்பெயரைப் பெறுமெனவும், யாவையுந் தத்துவத்தில் வைத்துக் காணவேண்டுமெனவும் கூறுகின்றது.

தத்துவ ரூப மாகுந் தருமரு வுருவ மெல்லாந்
தத்துவந் தூல சூக்க பரங்களு மாகி நிற்குந்
தத்துவந் தன்னிற் சாரு மணுக்கள்சா தாக்கி யத்திற்
றத்துவ சத்தஞ் சாருஞ் சகலமுந் தத்து வங்காண்.

[கோ - டு] தரும் எல்லாம் அருஉருவம் தத்துவரூபமாகும்.

(பொ - ரை) மாயையினாலே தரப்பட்ட பிரபஞ்சம் அனைத்தும் அருவும், உருவும், அருவுருவும் என முத்திறப்படும். எவ்வாறெனில், பிரபஞ்சமெல்லாம் பஞ்சபூதத்திலடங்கும். அப்பஞ்சபூதத்துள் ஆகாயம் கண்ணுக்குப்புலப்படாமையால் அருவமாம். வாயு கண்ணுக்குப் புலப்படாமையாலும் பரிசிக்கப்படுதலாலும் அருவுருவமாம். அக்கினி, அப்பு, பிருதிவிமூன்றும் கண்ணுக்குப்

புலப்படுதலால் உருவமாம். இப்பூதங்களின் காரியமாகிய பிரபஞ்சமனைத்தையும் இவ்வாறே யறிக. இத்தன்மைத்தாகிய பிரபஞ்சமனைத்தும் தத்துவங்களுள் அடங்குதலால் தத்துவ வடிவேயாம். தத்துவம் முப்பத்தாறும் தூலதத்துவம், சூக்கும தத்துவம், அதிசூக்கும தத்துவம் என முத்திறப்படும். எவ்வாறெனில், தத்துவங்களுக்குக் காரணமாகிய பிரகிருதி மாயை தூலம். அசுத்தமாயை சூக்குமம். சுத்தமாயை அதி சூக்குமம். இவற்றிற் ரேன்றுந் தத்துவங்களும் அவ்வாருகுமென்றறிக. இனி ஒவ்வொரு மாயையிற்ரேன்றிய தத்துவங்களும் தூலம், சூக்குமம் அதி சூக்குமம் என முத்திறப்படும். அவற்றையெல்லாம் இவ்விடத்தில் விரிப்பிற் பெருகும். விரிந்த நூலிற் காண்க. இத்தன்மையவாய தத்துவங்களைப் பொருந்திச் செலுத்துகின்ற அணுபக்க சம்புபக்கத்து அதிதெய்வங்களும் அவ்வத் தத்துவப் பெயரைப் பெறும். ஆதலின், எல்லாப்பொருளையுந் தத்துவங்களின் வைத்துக்காண்க. (எ-று)

எல்லாப்பொருளையுந் தத்துவங்களின் வைத்துக்காண்க என்று சொன்னமையால், இத்தத்துவ முப்பத்தாறு முணர்ந்தானுக்கு எல்லாப்பொருளும் இனிது விளங்குமென்பதாயிற்று. தத்துவங்களைப் பொருந்திய அதிதெய்வங்கள் அத்தத்துவப்பெயரைப் பெறுதல் எதுபோலவெனின், அரச சத்தியாகிய உத்தியோகத்தைப்பெற்ற ஒவ்வொருவரும் அவ்வப் பெயரைப் பெறுதல்போலவாம். அணுபக்கமென்பது ஜீவவர்க்கம். சம்புபக்கமென்பது பதிவர்க்கம்.

இம்முப்பத்தாறு தத்துவங்களுள் உலக வடிவான தத்துவங்கள் போகநுகர்ச்சிக்கண் எல்லாவுயிர்க்கும் பொதுவாய்ப் போகம் பயத்தலின் பொதுவெனப்படும். சூக்குமதேக வடிவாகிய தத்துவங்கள் உயிர்தோறும் வேறு வேருய் நின்று போகம் பயத்தலின் சிறப்பெனப்படும். தூலதேக வடிவாகிய தத்துவங்கள் அவரவர் போகநுகர்ச்சிக்குச் சிறப்பு வகையாலிடமாதலும், மனைவி முதலியோருக்குப் பொதுமையால் போக்கியமாதலுமாகிய இருவகையுமுடைமையின் பொதுச்சிறப்பெனப்படும்.

இச்செய்யுளால் தத்துவங்களின் உணர்ச்சி இன்றியமையாததென்பது கூறப்பட்டது. [எக.]

தத்துவங்கள் ஒடுங்குமுறை இவ்வாறெனவும், ஒடுக்குங் கடவுளர் இவரெனவும் கூறுகின்றது

தத்துவ மெண்மூன் றுஞ்சென் றான்மதத் துவத்தொ டுங்கும்
வித்தையி னொடுங்கு மாறுஞ் சிவத்தினி னொடுங்கு மூன்று
நித்ததத் துவமிம் மூன்று மென்பர்க ளிரண்டு நின்ற
சுத்தமாஞ் சிவத்தொ டுங்குந் தோற்றமு மிதுபோ லாகும்.

[கோ - டு] ஆறும் வித்தையில் ஒடுங்கும், மூன்றும் சிவத்தினில் ஒடுங்கும். நின்ற இரண்டும் சுத்தமாம் சிவத்தினில் ஒடுங்கும். தோற்றமும் இதுபோலாகும். இம்மூன்றும் நித்ததத்துவம் என்பர்கள்.

(போ - ரை) இம்முப்பத்தாறு தத்துவங்களும் சங்காரகாலத்துத் தத்தங் காரணங்களில் ஒடுங்கும். ஒடுங்குமிடத்து நிலம் முதல் மூலப்பிரகிருதி ஈறாகிய இருபத்துநான்கு தத்துவங்களும் சென்று சகல வர்க்கத்து ஆன்மாக்கட்கு அதிதெய்வமாகிய சீகண்ட ருத்திரனால் ஒடுங்கும். மூலப்பிரகிருதிக்கு மேல் உள்ள ஆறு தத்துவங்களும் வித்தை யீசராகிய அனந்த தேவரால் ஒடுங்கும். சுத்த வித்தை, ஈசுவரம், சாதாக்கியம் ஆகிய மூன்று தத்துவங்களும் இலயசிவனால் ஒடுங்கும். ஏனைச் சத்தி தத்துவம் சிவதத்துவ மிரண்டும் சுத்த சிவனால் ஒடுங்கும். புனர் உற்பவம் ஆங்காலும் அவ்வத் தத்துவங்கள் அவ்வவராற் றோன்றும். சுத்த சிவனொருவனே தோற்றம் ஒடுக்கம் இல்லாத நித்தியன். இலயசிவன், போகசிவனாகிய அனந்த தேவர், அதிகார சிவமாகிய சீகண்ட ருத்திரன் என்னும் மூவரையும் அவ்வாறு நித்தியரென்பாருமுளர். அஃது உபசாரமே. (எ - று.)

மூலப் பகுதிக்குங் குணதத்துவத்திற்குந் தம்முள் வேற்றுமை குணங்கள் அடங்கி நிற்றலும், வெளிப்பட்டுத் தோன்றுதலு மாத்திரமே யன்றி ஏனைய தத்துவங்கள்போலத் தோன்றுதல் விசேடமின்மையான் அவையிரண்டனையும் ஒன்றாக வைத்துத் தத்துவ மெண்மூன்று என வெண்ணினார். சிவத்தினின் என்றவிடத்து இன்னுருபு ஏதுப்பொருட்கண் வந்தது. அவ்வுருபு ஆன்ம தத்துவத்து என்றவிடத்தும், சிவத்து என்றவிடத்தும் விரித்துரைக்க. ஆன்ம தத்துவம் என்றது சகல வர்க்கத்து ஆன்மாக்கட் கதிதெய்வமாகிய சீகண்ட ருத்திரர்க்குப் பெயராயிற்று.

தத்துவம் என்பது கருவிகளையுங் கருவிகளை யதிட்டித்து நிற்கும் உயிர்ப் பொருள், கடவுட்பொருட்களையு முணர்த்தும் பொதுச்சொல். ஆதலின், இம்மூன்றும் நித்த தத்துவமென்பர் என்றார். சீகண்டர், அனந்தர், இலய முதலிய அவத்தைகளினிற்குஞ் சிவன் என்னும் இவர் முறையே ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவதத்துவங்களைத் தோற்றுவிக்குங் கடவுளராதலின், அவ்வாறு தோற்றுவிக்குங் காரணத்தின் சம்பந்தம்பற்றி அவர் பெயர்கள் அவ்வத் தத்துவங்களுக்குமாயின என்பதுணர்த்தவேண்டி சீகண்ட ருத்திரரை ஆன்ம தத்துவமென்றும், அநந்தரை வித்தியா தத்துவ மென்றும், சிவனைச் சிவ தத்துவமென்றுங் கூறினர். வித்தை, சிவம் என்ற ஈரிடத்தும் ஆன்ம தததுவம் என்றதற்கேற்பத் தத்துவச் சொல் வருவித் துரைக்க.

இனி நான்கா மதிகரணத்தில் "சிவஞ் சத்தி" என்னுஞ் செய்யுளால் நவந்தரு பேதங் கூறத்தொடங்கிய வாசிரியர் அதற்குத் தோற்றுவாயாக சீகண்ட ருத்திரர் முதலியோரைக் கூறும் இச்செய்யுளை இவ்விடத்து வைத்தாராயினும், தத்துவந் தோற்றுமுறை கூறிய பின்னர் ஒடுங்குமுறை கூறவேண்டுதல் முறைமையாகலின், அவ்வியைபுபற்றி "ஐந்து சுத்தத்தின்" எனத் தத்துவங்களை மூவகைப்படுத் தோதிய செய்யுளின் பின்னாக வைத்துக் கண்டுகொள்க.

இச்செய்யுளால் ஆன்ம தத்துவங்களைத்தோற்றி யொடுக்குங் காரணக் கடவுளர் ஸ்ரீகண்ட ரென்பதும், வித்தியா தத்துவங்களைத் தோற்றி யொடுக்குபவர் அனந்தரென்பதும், சுத்த வித்தை முதலிய மூன்றற்கும் இலய சிவனென்பதும், சத்தி சிவ மிரண்டற்கும் சுத்த சிவனென்பதுங் கூறப்பட்டன. இதுவரையும் மூன்றாங் கூற்றின்க ணுண்டாம் முறைமை யெல்லாந் தொகுத்துக் கூறப்பட்டது. இனி, எழு செய்யுளான் நான் காங் கூற்றை விளக்குகின்றார். [எஉ.]

மூன்றாம் அதிகாரணம் முடிந்தது.

நான்காம் அதிகரணம்.

"இவற்றின்றன்மை தனக்கெய்தலின்றித் தானே
நிலவு சீர் அமலனாகி நின்றனன் நீங்காதெங்கும்"
என்பது.

இவ்வதிகரணம் முக்கூற்றை உடையது. அவற்றுள், முதற்கூறு "நிலவு சீர் அமலனாகி" என்பது. இரண்டாங்கூறு "நின்றன னீங்காதெங்கும்" என்பது. மூன்றாங்கூறு "இவற்றின்றன்மை தனக்கெய்தலின்று" என்பது. இவை முறையே முன்னர் விரித்துக் கூறப்படுகின்றன.

முக்கூற்றுப் புறச்சமயத் தெய்வங்கள் பிரகிருதி மாயா தத்துவம், அசுத்த மாயா தத்துவம், ஆகிய இவைகளில் நிலைபெறுமெனவும், அகச்சமயத் தெய்வமாகிய இலய, போக, அதிகார சிவ பேதங்கள் சுத்த மாயா தத்துவத்தில் நிலைபெறுமெனவும், சுத்த சிவம் இம்முப்பத்தாறையுங் கடந்து நிற்குமெனவும், அமலனாதலை விளக்கிக் கூறுகின்றது.

மொய்தரு பூத மாதி மோகினி யந்த மாகப்
பொய்தரு சமய மெல்லாம் புக்குநின் றிடும்பு கன்று
மெய்தரு சைவ மாதி யிருமூன் றும் வித்தை யாதி
யெய்துதத் துவங்க ளேயு மொன்றுமின் றெம்மி றைக்கே.

[கோ - ரு.] பொய்தரு சமயமெல்லாம் மொய்தரு பூதமாதி எனவும், எம்மிறைக்கு ஒன்று மின்றே எனவுங் கூட்டுக.

(பொ - ரை.) பொய்மை பெற்ற சாருவாக முதல் ஐக்கியவாத சைவமீறாகியபுறப்புறச்சமயமும், புறச்சமயமும், அகப்புறச் சமயமுமென்னும் முக்கூற்றுச்சமயத்தெய்வங்களெல்லாம்நெருங்கிய பூதமுதல் அசுத்தமாயாதத்துவமீறாக ஒவ்வொருதத்துவங்களில் நிலைபெறும். சிவாகமங்களுட் கூறப்படும் ஏகன், அநேகன், இருள், கருமம், மாயை இரண்டு என்னும் ஆறு பொருளின் உண்மைத் [illegible]மையை விளக்குகின்ற சைவமெனப்படுந் தலையாகிய அறுவ[illegible] சமயத் தெய்வமாய் நின்ற அதிகார சிவம்,

போக சிவம், இலய சிவம் என்னும் சிவபேதங்கள் சுத்தவித்தை முதலிய சுத்த தத்துவம் ஐந்தனுள் ஒவ்வொன்றில் நிலைபெறும். சித்தாந்த சைவத் தெய்வமாகிய எம்முடைய சுத்த சிவம் இம் முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து நிற்கும். (எ - று.)

ஒடுக்கமுறையில் அவ்வத் தெய்வங்கள் நிலைபெறுந் தத்துவமே அவ் வச் சமயத்தார்க்கு முத்தித்தானம் என்பதும் பெறப்படும். அவரவர் கொள்ளுந் தத்துவங்களின் மேலுள்ள தத்துவங்களி னுணர்ச்சி அவ்வச் சமயத்தார்க்குச் செல்லாமையின், அவ்வத்தத்துவத்தினளவினன்றி அதற்கு மேற் செல்லுதல் அவருக்குக்கூடாமை யறிக. சமயத் தெய்வங்க ளெல் லாம் என்று கூறவேண்டுவதை சமயமெல்லாம் என்றுபசரித்தார். இரு மூன்று மென்றது அறுவகைச் சமயத் தெய்வமாய் நின்ற அதிகார, போக, இலய சிவபேதங்களை. ஆணவமலமுண்டென்று கொள்ளமாட்டாத ஐக் கிய வாத சைவரை அகச்சமயத்தினின்றும் நீக்குதற்கு மெய்தரு சைவம் என்றும், ஆதி இருமூன்று என்றும் விசேடித்தார். மெய்தரு என்பது சைவத்தை விசேடித்து நின்றது.

ஆதி என்பது இருமூன்றை விசேடித்து நின்றது. விசேடிக்கவே, மெய்தருதல்—உண்மைத் தன்மையை விளக்குதல். ஆதி—தலைமை. எனவே, உண்மைத் தன்மையை விளக்குகின்ற தலையாகிய சைவமென் றாகி ஆணவமலத்துண்மை கொள்ளாத ஐக்கியவாத சைவரை விலக்கிய வாறு காண்க. ஐக்கியவாத சைவம் நீங்கிய ஏனைச் சைவம் ஏழு. அவை யாவன, பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சிவசங்கிராந்தவாதம், ஈசுவர அவிகாரவாதம், சிவாத்துவிதம், சுத்தசைவம் என்பனவாம். இவ் வேழனுள் பாடாணவாதத்திற்கும் பேதவாதத்திற்குந் தம்முள் வேற்றுமை சிறிதாதல்பற்றி அவ்விரண்டனையும் ஒன்றாக வைத்து இருமூன்று எனத் தொகை கூறியவாறு காண்க. பாடாணவாதம்—முத்திநிலையில் ஆன்மாக் கற்போல் சுக துக்காநுபவமின்றி யிருக்கும் என்பது. பேதவாதம்— முத்திநிலையில் ஆன்மா பெறுவானும், சிவம் பேறுமாய் இருக்கும் என்பது. சிவனைச் சார்ந்து சிவனுய் நிற்றலில்லை யென்பதில் இவ்விரண்டும் ஒற்று மையா யிருப்பினும், கற்போலிருத்தலும் பெறுவானுயிருத்தலுமாகிய சிறிது வேற்றுமையுடையனவாத லறிக. [௭௩.]

நீங்காது நிற்றலை மூன்று செய்யுளாற் கூறத்தொடங்கிச் சுத்த சிவனே சுத்த மாயா தத்துவங்களில் ஒன்பது பேதமாய் நின்று தொழிற் செய்வானெனக் கூறுகின்றது.

சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழு மீச
னுவந்தரு ளுருத்தி ரன்றான் மாலய னொன்றி னொன்றாப்
பவந்தரு மருவ நாலிங் குருவகா லுபய மொன்றா
நவந்தரு பேத மேக நாதனே நடிப்ப னென்பர்.

[கோ - பே.] ஏகநாதனே சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன் உவந்தருள் உருத்திரன்றான் மால் அயன் ஒன்றினொன்றா பவந்தரும். இங்கு நாலு அருவம். நாலு உருவம். ஒன்று உபயமாம். நவந்தரு பேதம் நடிப்பன் என்பர்.

(போ - ரை.) அங்ஙனம் ஒன்றுமின்றி நிற்கும் எம்மிறைவனே ஒவ்வொரு தத்துவங்களில் நின்றுகொண்டு தத்தம் தொழில்களைச் செய்யும் முறைமையில் சிவமெனவும், சத்தியெனவும், நாதமெனவும், விந்துவெனவும், சதாசிவனெனவும், மகேசனெனவும், உருத்திரனெனவும், விட்டுணுவெனவும், பிரமனெனவும் ஒன்றினொன்றாகத் தோன்றி ஒன்பது பேதமாவன். அப்பேதங்களுள் சிவம், சத்தி, நாதம், விந்துவாகிய நான்கும் இறைவனுக்கு அருவத் திருமேனியாம். மகேசன், உருத்திரன், விட்டுணு, பிரமனாகிய நான்கும் உருவத் திருமேனியாம். சதாசிவம் அருவுருவத் திருமேனியாம். அருவம், உருவம், அருவுருவம் என்னும் இம் முத்திறத்து ஒன்பதுபேதத்தினும் இறைவன் வேற்றுமையின்றி நின்று அவ்வத் தொழில்களைச் செய்வனென்பர். (எ - று.)

நாதனே என்றவிடத்து ஏகாரம் தேற்றம். மேல் முதற் சூத்திரம் கூஎ-வது செய்யுளில் ஒருவனே இராவணாதி பாவக முற்றாற்போல என்றதனை ஒருவனே ஒன்பது பேதமாவன் என இவ்விடத்தும் அறிவிக்க வேண்டி "நடிப்பன்" என்றார். சிவ முதலாக எண்ணப்படும் ஒன்பது என்னுஞ் செவ்வெண்டொகை தொக்கு நின்றது.

இவ்வொன்பது பேதத்துள் சத்தி விந்து என்னும் இரண்டும் சத்தி பேதமாயினும், சிவன் முதல் பிரமன் ஈறாகிய சிவபேதம் ஏழும் தோன்றும் முறையில் ஒன்றுக்கொன்று காரணமாய் இடைநிற்றல்பற்றிச் சிவபேதத்துடன் வைத்தெண்ணியவாறும்.

தோன்றுமுறையாவது:—சிற்சத்தியோடு பிரிப்பின்றி நிற்குஞ் சிவபெருமான் ஆன்மாக்களின் மல நோயைத் தீர்த்தற் பொருட்டுச் சுத்த மாயையில் தொழிற் செய்யத் திருவுளங்கொண்ட அவதாரம் சிவம். துன்பத்தை நீக்க உன்னிய அவதாரமாகலின், இதனைப் பரநாத மென்பர். அவ்வுன்னுதலின் பின் எவ்வாறு தொழிற் செய்ய வேண்டும் என்றெண்ணிய அவதாரம் சத்தி. சத்தி யென்பது அடங்கி நிற்கும் ஆற்றலைக் குறிப்பது. அது இவ்விடத்தில் இவ்வாறு செய்யலாமெனத் தோன்றுது நிற்றலைக் குறித்தது. இந்த அவதாரத்தில் ஒரு குறிப்பு நிகழ்தலினுல் இச்சத்தியைப் பரவிந்து என்பர். நாதம் என்பது ஒலியையும், விந்து என்பது குறியையும் உணர்த்தும். அதன் பின் எண்ணியவாறே செய்தற்கு முதற் காரணமாய்த் தன்னுள் அடங்கியிருந்த சுத்த மாயையோடு கூடிய அவதாரம் நாதம். அச்சுத்த மாயையோடு கூடிச் செய்யவேண்டுவனவற்றைச் செய்ய எண்ணிய அவதாரம் விந்து. முன்னர்க் கூறிய நாதம் விந்து சுத்த மாயையிற் கூடாத அவதாரத்தில் உண்டானமையால் பரநாதம் பரவிந்து எனவும், பின்னர்க் கூறிய நாதம் விந்து சுத்த மாயையோடுகூடிய அவதாரத்தில் உண்டானமையால் அபரநாதம் அபரவிந்து எனவுங் கூறப்படும். அபரநாதம் அபரவிந்துவையும் சிவம் சத்தி எனக் கூறுதலும் உண்டு. மேல் முதற் சூத்திரத்தில் இலய சிவமெனக் கூறிய சிவம் சத்தி இவ்வபரநாத அபரவிந்துக்களேயாம். அதன் பின் இன்னின்னவாறு செய்ய வேண்டுமென்றெண்ணிய அவதாரம் சதாசிவம். சத்தியோடுகூடிய சிவம் சதாசிவம். எண்ணும் முதன்மை சிவத்தையும், எண்ணுதற்குரிய ஆற்றல் சத்தியையுங் குறித்துச் சதாசிவமெனப்பட்டது. எண்ணியவாறு செய்யுங்கால் அவரவர் கன்ம பலத்தை யநுபவிக்கச் செய்யுமுறைமையில் அநுபவிக்க வேண்டாத கன்ம பலன்களையும் அநுபவிக்கவேண்டிய கன்ம பலன்களில் உள்ள குண தோடங்களையும் மறைத்தலாகிய அவதாரம் மகேசுவரம். மகதைசுவரியத்தை யுடையது மகேசுவரம். அநுபவிக்கவேண்டிய ஐசுவரியங்களைக் கொடுத்தும், அநுபவிக்க வேண்டாத ஐசுவரியங்களை மறைத்தும் வைத்தலின் மகேசுவரம் எனப்பட்டது. அவ்வாறு அநுபவிக்குங் காலத்து இளைப்பொழித்தற் பொருட்டும் வேறு உலகத்தில் இன்பத்துன்பம் அநுபவித்தற் பொருட்டும் இவ்வுலகத்தில் வேறு சரீர வாயிலாக இன்பத்துன்பம் அநுபவித்தற் பொருட்டும் சங்கரித்தலாகிய அவதாரம் உருத்திரன். அநுபவிப்பதற்காக நிலைக்கச் செய்யும் அவதாரம் விட்டுணு. அநுபவித்தற்குரிய உடல், கருவி, உலகம், பொருள் முதலியவற்றைத் தோற்றுவிக்கும் அவதாரம் பிரமன். இதன் மேல் செய்ய

வேண்டுவ தொன்றுமில்லாமையால் ஒன்பது பேதமென வரையறுக்கப் பட்டவா றறிக.

இவ்வொன்பது பேதத்திற்கும் உதாரணம் வருமாறு:—அரசன்போல் சுத்த சிவம். அவ்வரசன் உலகத்தைத் தொழிற்படுத்த வேண்டுமென் றெண்ணிய அவதரம் சிவம். எவ்வாறு தொழிற்படுத்தலாமென் றெண்ணிய அவதரம் சத்தி. தன்னுளடங்கியுள்ள தொழிற் செய்யும் அதிகாரிகளைத் தெரிந்தெடுக்க எண்ணுதல் நாதம். அவ்வதிகாரிகளைத் தெரிந்தெடுத்தல் விந்து. இன்னின்னர் இன்னின்ன காரியத்தை இவ்வாறு செய்யவேண்டுமென்று நியமித்தல் சதாசிவம். செய்யுங்காலத்து முறை பிறழாதிருக்கச் செய்தல் மகேசுவரம். முறை பிறழ்ந்தாரைத் தண்டித்தலும், அவசியமானபோது அப்புறப்படுத்த வேண்டியவர்களை அப்புறப்படுத்தலும் உருத்திரன். முறை பிறழாதாரைக் காத்தல் விட்டுணு. காப்பதற்காகக் கைத்தொழில் கிருஷி முதலியவற்றை உண்டுபண்ணுதல் பிரமன். இவ்வாறு உவமையில் வைத்தறிக. இவ்வுவமைக்கண் ஆதி அநாதி என்னும் வியவகாரத்தை யிட்டு மலையற்க. இது ஒருபுடை யுவமை யல்லது முற்றுவமை யன்றாதலின்.

சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் நான்கும் வெளிப்படாது தன்மாட்டு நிகழ்தலால் அருவத் திருமேனியெனவும், நிட்களத் திருமேனி யெனவும் பெயர்பெறும். தன்மாட்டு நிகழும் இத்திருமேனியோடு கூடிய சிவபெருமான் சத்தரெனப்படுவர். சதாசிவம் சத்தியோடு கூடிப் பிறபொருளோடு கலந்தும் கலவாமலும் நிற்றலால் அருவுருவத் திருமேனி யெனவும், சகள நிட்களத் திருமேனி யெனவும் பெயர்பெறும். ஆலோசனை வடிவாயிருக்கும் இத்திருமேனியோடு கூடிய சிவபெருமான் உத்தியுத்த ரெனப்படுவர். மகேசுவரம் முதலிய நான்கும் உருவமாய்க் காணப்படலால் உருவத் திருமேனியெனவும், சகளத் திருமேணி எனவும் பெயர் பெறும். தொழிற் செய்வதாகிய இத்திவிமேனியோடு கூடிய சிவபெருமான் பிரவிருத்தரெனப்படுவர். களம் என்பது வடிவத்தைக் குறிக்கும். சகளம் என்பது வடிவத்தோடு கூடியது. இதுவே நடராஜா முதலிய மூர்த்தங்கள். சகள நிட்களம்—மகாலிங்கம்.

நவந்தரு பேதமேக நாதனே நடிப்பன் என்றது சத்தி சிவத்திற்குரிய ஒற்றுமை நயம்பற்றிப் பொதுவகையாற் கூறினர். சத்தி விந்து என்னும் அவை, முறையே சிவத்துக்கும், நாதத்துக்குமுரிய சத்திபேதமேயா மென்பது வருஞ் செய்யுளிற் காண்க. [எசு.]

பிரமன் முதல் சிவம் ஈறுகிய சிவபேதம் ஏழற்கும் பராசத்தி யாகிய ஒருத்தியே சரஸ்வதி முதலிய சத்திபேத மேழாய் நிற்ப ளெனக் கூறுகின்றது.

சத்தியாய் விந்து சத்தி யாய்மனோன் மனிதா ளுகி
யொத்துறு மகேசை யாகி யுமைதிரு வாணி யாகி
வைத்துறுஞ் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தி யொருத்தியாகு
மெத்திற நின்று னீச னத்திற வமளு நிற்பள்.

[கோ - ௫.] சிவாதிக்கு வருஞ் சத்தி சத்தியாய், விந்து சத்தியாய், மனோன்மனிதாளுகி, ஒத்துறு மகேசையாகி, உமை திரு வாணியாகி வைத்துறும். ஈசன் எத்திறம் நின்றான். ஒருத்தியாகும் அவளும் இங் ஙன் அத்திறம் நிற்பள்.

(போ - ரை.) மேற்கூறிய ஒன்பதனுள் சத்தி, விந்து இரண்டும் சத்திபேத மாதலால், ஏனைய சிவபேதம் ஏழற்கும் உரிய சத்தி பேதமும் ஏழாம். அவையாவன:—சிவத்திற்குச் சத்தியும், நாதத்திற்கு விந்துவும், சதாசிவத்துக்கு மனோன்மனி யும், மகேசனுக்கு மகேசையும், உருத்திரனுக்கு உமையும், விட் டுணுவிற்கு இலக்குமியும், பிரமனுக்குச் சரஸ்வதியுமாம். எம் மிறைவனுகிய பரமசிவன் சிவபேதம் ஏழினும் நின்று நடாத்தும் போதெல்லாம் அவனோடு பிரிப்பின்றி நிற்கும் ஒருத்தியாகிய பராசத்தியும் இச்சத்திபேதம் ஏழினும் அவனுக்குத் துணையாய் நின்று நடாத்தும். (எ - று.)

சுத்த சிவனுகிய பரமசிவனிடத்துப் பிரிப்பின்றி நிற்குஞ் சத்தி பரா சத்தி. இச்செய்யுளில் சிவத்திற்குச் சத்தி என்றது சிவதத்துவந் தோன் றிய பின்னர்த் தோன்றுஞ் சத்திதத்துவமாம்.

அவ்வாறுயின், மேல் முதற் சூத்திரம் சுஎ-வது செய்யுளில் வரும் வடிவெல்லாஞ் சத்தியிற் காணப்படும் எனக்கூறி, இவ்விடத்துச் சிவ பேதம் சத்திபேதம் என வேறு வைத்து ஈசனெத்திறம் நின்றான் அவளும் அத்திறம் நிற்பள் என்றல் மலைவாகாதோவென்பார்க்கு ஆகாதென்றுணர்த்து தற் கெழுந்தது வருஞ் செய்யுள். [எ௫.]

சிவமுஞ் சத்தியுமெனப் பிரித்தெண்ணப்படினும் அவ் விரண்டும் பிரிப்பின்றி நாயகன் நாயகி பாவமாய் நிற்குமெனக் கூறுகின்றது.

சத்திதா னாத மாதி தானாகுஞ் சிவமு மந்தச்
சத்திதா னாதி யாகுந் தரும்வடி வான வெல்லாஞ்
சத்தியுஞ் சிவமு மாகுஞ் சத்திதான் சத்த னுக்கோர்
சத்தியாஞ் சத்தன் வேண்டிற் றெல்லாமாஞ் சத்தி தானே.

[கோ - டு:] சத்திதான் நாதம் ஆதி தானாகும். சிவமும் அந்தச் சத்திதான் ஆதியாகும். சத்திதான் தரும் வடிவான எல்லாம் சத்தியும் சிவமும் ஆகும். சத்தன் வேண்டிற்றெல்லாம் ஆம் சத்திதானே சத்தனுக்கு ஓர் சத்தியாம்.

(பொ - ரை.) பராசத்தியானது நாத முதலிய சிவபேதம் ஏழினுங் கூடியிருக்கும். அவ்வாறே சுத்த சிவமானது சத்தி முதலிய சத்தி பேதம் ஏழினையும் வாயிலாகக்கொண்டு நிற்கும். இவ்வாறு சத்தியுஞ் சிவமும் மாமும் வயிரமும்போல ஒப்பக்கூடி நிற்றலால் சத்தியாற் றரப்படும் எல்லாத் திருமேனியும் சத்தி சிவம் இரண்டிற்கும் பொதுவடிவேயாம். அவ்வாறுகூடிப் பிரிப் பின்றி நிற்பினுந் தான் வேண்டியவா றெல்லாம் ஆவதாகிய சத்தியே சத்தனுக்கு ஒப்பற்ற தேவியுமாம். ஆகலான், சத்தி சிவத்திற்குரிய வடிவு விசேடம் குண விசேடம்பற்றிச் சத்திபேதம் சிவபேத மென்றாயின. (எ - று.)

ஆகலான் அதற்குரிய வடிவு விசேடங் குண விசேடம்பற்றிச் சிவ பேதஞ் சத்திபேத மென்றாயின வென்பது குறிப்பெச்சம். அக்கினி பொருளால் ஒன்றாயினும் வடிவால் செம்மையென்றும் குணத்தால் சூடு என்றும் பிரித்தெண்ணப்படுமாறுபோல பரம்பொருளொன்றேயாயினும், எவற்றையுங் கடந்து நிற்கும் வெளியாகிய வடிவால் சிவமெனவும், எவற்றுடனுங் கலந்து எவற்றையுந் தன்பால் இழுக்கும் வலிமையாகிய குணத்தால் சத்தியெனவும் பிரித்துக் கூறியவாறும்.

சத்தனுக்கோர் சத்தியாம் என்றது வல்லவனுக்கு வல்லபையாய் நிற்கும் எனச் சிவனுக்கு நாயக பாவமும், சத்திக்கு நாயகி பாவமும் கூறியவாறும். நாயகன் விரும்பியவாறே செய்தல் நாயகி கடமையாதலை வலியுறுத்த வேண்டி, சத்தன் வேண்டிற்றெல்லாமாஞ் சத்தி எனச் சத்தியின் பெருமை கூறியவாறு. பெருமையாவது:—சத்தன் வேண்டிற் றெல்லாமாதல். வேண்டிற்று என்பது ஒருமை. எல்லாம் என்பது பன்மை. வேண்டிற்றெல்லாம் என்பது ஒருமைப் பன்மை மயக்கம்.

"சிவஞ் சத்தி" என்பது முதல் இவை மூன்று செய்யுளும் சிவமுஞ் சத்தியும் பிரிக்க முடியாததாய் நீங்காது நிற்றலை விளக்கிக் கூறியவாறும்.

அவ்வாறாயின், சிவஞ் சத்தி என்ற செய்யுளில் ஒன்றினிடமாக ஒன்று தோன்றும் எனப்பட்ட சத்தி சிவங்களை மகளுந் தந்தையும் எனக்கூறுது, இச்செய்யுளில் தலைவனுந் தலைவியுமாய்த் தம்முட் கூடுமென்பது முறை யன்றென்பாரை நோக்கிச் சமாதானங் கூறுதற்கெழுந்தது வருஞ்செய்யுள். (எசு.)

சிவனும் சத்தியும் நாயகனும் நாயகியுமாய் நிற்பினும் சிவன் பிரமசாரியும் சத்தி கன்னிகையுமாமென "இவற்றின் றன்மை தனக்கெய்த வின்றுதலை" விளக்கிக் கூறுகின்றது.

சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்று
முவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரெல்லா மீன்றும்
பவன்பிரம சாரி யாகும் பான்மொழி கன்னி யாகுந்
தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் றெரியு மன்றே.

[கோ - ட.] இத்தன்மைதான் தவந்தரு ஞானத் தோர்க்கு தெரியு மன்றே.

(போ - ரை.) சிவ தத்துவத்தினின்று சத்தி தத்துவந் தோன்றும். சத்தி தத்துவத்தினின்று சதாசிவதத்துவந் தோன்றும். சதாசிவ தத்துவமாவது சத்தியுஞ் சிவமும் கூடிய நிலையாம். சத்தி சிவமாகிய இருவருங் கூடிய அதனாலேயே இவ் விடத்துச் சடமுஞ் சேதனமுமாய பிரபஞ்சமெல்லாந்தோன்றும். இவ்வாறு தோன்றினும் எல்லாந் தோன்றுவதற்குக் காரணமாய்ச் சத்தியோடுகூடி நின்ற சிவபிரான் பிரமசாரியாவன். எல்லாவற் றையும் தோற்றுவித்த சிவசத்தி கன்னிகையாவள். சத்தியுஞ் சிவமுமாய் நின்று செய்யுஞ் செயல்களெல்லாம் நம்மனோர் பொருட்டாக நடித்துக்காட்டும் நாடகமாத்திரையே யன்றிப் பிறிதில்லை யென்பது முற்றவ விசேடத்தால் முதல்வன் அருள் பெற்ற ஞானிகட்கு விளங்கும். (எ - று.)

சிவசத்திகளின் கூட்டமே எல்லாந் தோன்றுதற்குக் காரணமாதல் பற்றி நாயகன் நாயகிகளாகக் கூறப்பட்டது.

உம்மை மூன்றும் சிறப்பு. பிரமசாரியும், கன்னிகையும் போகத்தில் விருப்பமில்லாதிருப்பதுபோல, தனக்கென விருப்பின்றி ஆன்மாக்களின் பொருட்டு எல்லாஞ் செய்தலால் சிவன் பிரமசாரியெனவுஞ் சத்தி கன்னிகையெனவுங் கூறப்பட்டமை காண்க. சதாசிவ தத்துவத்தினின்று உயிரும் உலகமும் தோன்றுமென்றது, உயிரும், உலகத்திற்கு முதற்காரணமான மாயையும் அநாதி என்றதனோடு முரணாதோ வெனின், முரணாது. எவ்வாறெனின், இவ்விடத்துக் கூறுவனவெல்லாம் ஒடுக்கி வைத்திருந்த உயிரையும் மாயையினையும் மீளத்தோற்றுவிப்பதாகிய புதுச் சிருட்டியேயாதலின் என்க. அநாதியில் எவ்வாறெனின், கேவலத்துள் அடங்கிக் கிடந்த ஆன்மாவையும், இறைவன் தன்னுள் அடங்கிக் கிடந்த மாயையினையும் சதாசிவ தேவர் வெளிப்படுத்துவரென்க.

முதற் சூத்திரத்தில் "பந்தமும் வீடுமாய பதபதார்த்தங்க ளல்லான்" என்னும் ௬௬-வது செய்யுள் முதலாக விரித்துக் கூறியவற்றை இச்செய்யுளில் பிரமசாரி, கன்னிகை என உருவகஞ் செய்யுமுகத்தால் தொகுத்துணர்த்தி இவற்றின்றன்மை தனக்கெய்த லின்மைதலை விளக்கிக்கூறியவாறும். மேலைச் சூத்திரத்தில் விரித்துக்கூறிய பொருள்களாவன:— மல முதலிய குற்றமில்லாமையின், நினைந்ததொரு திருமேனியைத் தனது சத்தியினிடமாகக் கொள்வன் ஆதலால், தனக்கென விருப்பு வெறுப்பில்லாதவன் என்பது முதலியன. இவ்விடத்து உருவகஞ் செய்த பிரமசாரி கன்னிகை என்பனவும் விருப்பு வெறுப்பில்லாமையை உணர்த்தியவாறு காண்க. (எள.)

தத்துவங்க ளெல்லாம் உயிர்களோடு பொருந்துவன என்றறிந்து நீக்கித் தத்துவாதீதனாகிய பரமசிவனை அறிபவன் தத்துவ ஞானியாவன் எனக் கூறுகின்றது.

தனுகரண புவன போகக் தற்பரம் பந்தம் வீடென்
றனுவினோ டெல்லா மாகி யடைந்திடுந் தத்து வங்க
ளினிதறிந் திவைநி விர்த்தி முதற்கலை யிடத்தே நீக்கி
கனிபர முணர்ந்தோ னந்தத் தத்துவ ஞானி யாவன்.

(**கோ - டு.**) தநுகரண புவன போகம் தற்பரம் பந்தம் வீடு எல்லாம் தத்துவங்கள் ஆகி அடைந்திடும் என்று இவை அணுவினோடு(என்று இனிது அறிந்து நிவிர்த்தி கலை முதல் இடத்தே நீக்கி பரம் நனி உணர்ந்தோன் அந்தத் தத்துவஞானியாவன்.

(போ - ரை.) தநு கரண புவன போகங்களும் அவை மூலமாயுள்ள பந்த முத்திகளும் அப்பந்த முத்திகளுள் உண்டாம் பேதங்கள் அனைத்தும் மேற்கூறிப் போந்த தத்துவங்களால் ஆயினவென்றும், அத்தத்துவங்கள் உயிர்களோடு பொருந்துவனவன்றி முதல்வனோடு பொருந்துவனவல்லவென்றும், நூல்களானும் யுத்தியானும் தெளிய வுணர்ந்து, அத்தத்துவங்களை அவற்றிற்கு ஆதாரமாகிய நிவிர்த்தி கலை முதலிய பஞ்ச கலைகளின் வைத்துக் கழித்து, அத்தத்துவங்களைக் கடந்து மேலாய் நிற்கும் ஒன்றாகிய பரமசிவனை ஐய விபரீதக் குற்றமின்றி யுணரப் பெற்றவன் யாவனோ, அவனே மேலைச் செய்யுளில் பவன் பிரமசாரியும் பான்மொழி கன்னியுமா மென்பதை அறிந்த தத்துவ ஞானியாகிய உண்மை யறிவுடையவன். (எ - று.)

மேலைச்செய்யுளில் தவந்தரு ஞானத்தோர்க்கித் தன்மைதான் தெரியுமன்றே என்றதனுள், இத்தன்மை தெரியும் என்றதனை, இச்செய்யுளில் தவ விசேடத்தால் ஞானத்தைப் பெற்றவர் தத்துவங்களனைத்தும் உயிர்களோடு பொருந்துவனவன்றி இறைவனோடு பொருந்துவனவல்ல என வுணர்ந்து, அவற்றை நீக்கி மேலான பொருளை யுணர்தலென, விளக்கிக் காட்டி, இவற்றின் றன்மை தனக்கெய்தலின்றாதலை வலியுறுத்தியவாறும். தற்பரம் என்னும் வடசொல் மூலம் என்னும் பொருளுடைத்தாதல் தாற்பரியம் என்பதனானு மறிக.

மேல் எ0-வது செய்யுளில் தத்துவங்களை யதிட்டிக்கும் அனுபக்க சம்புபக்கத்து அதிதெய்வங்கள் அவ்வத் தத்துவப் பெயரைப் பொருந்துமெனவும், எச-வது செய்யுளில் சுத்த சிவனே சுத்த மாயா தத்துவங்களைப் பொருந்தித் தொழிற் செய்வனெனவுங் கூறியதனால், தத்துவங்கள் சிவத்தோடும் மற்றத் தெய்வங்களோடும் பொருந்துவனவாமெனப் பெறப் படுமன்றே; அவ்வாறாகவும் இவ்விடத்துத் தத்துவங்களெல்லாம் உயிர்களோடு பொருந்துவன வெனக்கூறியது முரணாகாதோவெனின், ஆகாது. என்னை? சுத்தசிவனும் மற்றத் தெய்வங்களும் தத்துவங்களைக் கூடியது உயிர்களின் பொருட்டே யாதலானும், அத்தத்துவங்களையும் அவற்றினிற்குஞ் சிவபேதங்களையும் கடந்து செல்லுதற்குரிய நிலைமையில் அவற்றிற் கட்டுப்பட்டிருப்பது உயிரே யாதலானுமென்க. (எஅ.)

தத்துவங்கள் உயிரைப் பொருந்துதல் உயிர்கட்கு வினைப் பயனை யநுபவிக்கச்செய்து அதனால் கன்மமலம், ஆணவ மலங்களைப் போக்குதற்பொருட்டெனக் கூறுகின்றது.

எல்லா மாய்த் தத்துவங்க ளியைக்தெதன்ன னுவுக்கென்னிற்
றொல்லாய கன்ம மெல்லாக் துய்ப்பித்துத் துடைத்தற் கும்பி
ணில்லாமை முற்று வித்து நீக்கவுங் கூடி நின்ற
பொல்லாத வாணவத்தைப் போக்கவும் புகுந்த தன்றே.

(கோ - ௬) தத்துவங்கள் அணுவுக்கு எல்லாமாய் இயைந்தது என் என்னின், துய்ப்பித்து தொல்லாய கன்மமெல்லாந் துடைத்தற்கும் முற்று வித்துப் பின் னில்லாமை நீக்கவும் கூடிநின்ற பொல்லாத ஆணவத்தைப் போக்கவும் புகுந்தது அன்றே.

(போ - ரை) அவ்வாறு தத்துவங்கள் பல்வேறு வகைப் பட்ட உயிரோடு பொருந்தியது எதன்பொருட்டெனின், இன்பத் துன்பமென்னும் பலன்களை அனுபவிக்கும்படிசெய்து பழைமை யாய பிராரத்தமென்னும் இருவினைகளை நீக்குதற் பொருட்டும், அவ்வாறு நீக்குதலால் பருவமுண்டான விடத்துத் தீக்கையால் எஞ்சிய சஞ்சிதமாய இருவினைகளை மேலேக்குவித்தாகாதவாறு பக்குவம் வரச்செய்து கழித்தற்பொருட்டும், அவ்வாறு கழிவத னுல் எல்லா அநர்த்தங்கட்கும் மூலமாய் உயிரோடு கலந்து நின்ற ஆணவ மலத்தைப் போக்குதற்பொருட்டும் உயிரோடு தத்துவம் அடைந்ததாம். (எ-று.)

எனவே, தத்துவங்களால் நீக்கப்படும் ஆணவ கன்மங்கள் அணுவுக்கே யன்றிச் சிவத்துக்கின்மையால் அத்தத்துவங்கள் அணுவினேடன்றிச் சிவத்தோடு பொருந்தாவாயின என ஆசங்கை நீக்கியவாறும். ஆசங்கை யாவது, "மேலைச்செய்யுளில் அணுவினேடெல்லாமாகி யடைந்திடும்" என் றதனுல் தத்துவங்கள் அணுவையடைதற்கும், சிவத்தையடையாமைக்கும் காரண மென்னை? என்பது. அணுவுக்கு என்றவிடத்துச் சிவனைப்பிரித் தற்குரிய பிரிநிலை ஏகாரமும், தொல்லாய என்ற விடத்துத் தொன்மை யாய என்னும் பொருள்பட்ட மை விகுதியும் தொக்கு நின்றன.

"மொய்தரு பூதமாதி" என்பது முதல் இவை ஏழு செய்யுளானும் நாலாங்கூற்றினுள்ள முத்திறப்பொருளும் வகுத்துக் கூறப்பட்டன.

அவ்வாறாயின், இச்செய்யுளி லெடுத்துக்கொண்ட ஆணவமலம் யாது? அதனுல் வரும் பொல்லாமை யாது? அதனைப் போக்குமாறு யாங்ஙனம்? என்பாரை நோக்கிப் பதினேழு செய்யுளால் நாலாங்கூற்றின் ஒழிபு கூறுகின்றார். (எக.)

நான்காம் அதிகரணத்தின் ஒழிபு.

ஒழிபு என்பது ஒன்றன் சேடம். முதற் செய்யுளின் பகுப்பின்படி நான்காம் அதிகரணம்கூறி முடித்து அவ்வதிகரணத்தின் சேடமாய்க் கூறவேண்டுவதான ஆணவமல முதலியவற்றின் இலக்கணங் கூறுத லின் ஒழிவு எனப்பட்டது.

ஆணவ மலத்தின் இலக்கணங் கூறுகின்றது.

ஒன்றதா யநேக சத்தி யுடையதா யுடனு யாதி
யன்றதா யான்மா வின்ற னறிவொடு தொழிலை யார்த்து
நின்றுபோத்திருத்துவத்தைநிகழ்த்திச்செம்பினிற்களிம்பேய்ந்
தென்றுமஞ் ஞானங் காட்டு மாணவ மியைந்து நின்றே.

(கோ - டு) அநேக சத்தி உடையதாய் ஆன்மாவின் உடனாய் ஆண வம் செம்பிற் களிம்பேய்ந்து ஆதி அன்றதாய் இயைந்துநின்றே ஒன்றதாய் தன் அறிவொடு தொழிலை ஆர்த்து நின்று போத்திருத்துவத்தை நிகழ்த்தி என்றும் அஞ்ஞானம் காட்டும்.

(போ - ரை) மேற்கூறிய ஆணவமலமாவது யாது? அத னிலக்கணம் யாது? எனின், அளவில்லாத சத்திகளையுடையதாய் அளவில்லாத உயிர்களுடன் சேர்ந்து நிற்பது ஆணவமலம். எப் பொழுது சேர்ந்ததெனின், ஆன்மாவுள்ள அன்றே ஆணவமல மும் உண்டாய் அன்றே ஆன்மாவுடன் சேர்ந்து நிற்றலால் செம் பிற் களிம்புபோல அனாதியாய்க்கலந்து நிற்பதாம். மறைக்கப் படும் உயிர்கள் பலவாதல்போல பலவன்று ஒன்றேயாம். அவ் வாணவமலம் உயிர்கள் கேவலாவத்தையில் நிற்குங்கால் அறிவு தொழில்களை யவ்வுயிர்கட்கு நிகழவொட்டாது தனது மறைப்புச் சத்தியால் மறைத்து நிற்கும். கேவலத்தினின்றும் நீங்கித் தநு கரணபுவன போகங்களுடன்கூடிச் சகலத்தில் உயிர்கள் நிற்குங் கால் அவ்வாணவமானது மோகஞ்செய்தலாகிய கீழ்ச்செலுத்துஞ் சத்தியால் போகானுபவத்திற்கேற்ற கர்த்தாத்தன்மையை நிக ழ்த்திநிற்கும். இவ்வாறு கேவலத்திலுஞ் சகலத்திலும் அவ் வாணவமலமே காரணமாய் நின்று உயிர்க்கு அஞ்ஞானத்தை உண்டுபண்ணும். (எ-று)

இச்செய்யுளால் ஒன்றதாய் என்பது முதலாயின ஆணவமலத்தின் சொரூபம் என்பது கூறப்பட்டது.

ஆணவமலம் ஒன்ருயிருந்து பல வுயிர்களுடன்கூடி மறைப்பது எது போலுமெனின், இருள் ஒன்ருயிருந்து பலகண்களுடன்கூடி மறைப்பது போலாம். பல வுயிர்களுடன் கலந்துநிற்குந்தன்மையால் வியாபகம் எனப்படும். அவ்வாறு கலந்து நிற்கும் முதல்வன் வியாபகத்திற்கும் இதற்கும் வேற்றுமை என்னையோவெனின், முதல்வன் வியாபகம் உயிரின் வியாபகத்திற்கு மேம்பட்டதாய் அதனுல் அஞ்ஞான காலத்தில் விளங்கித்தோன்ருமையும் முத்திக்காலத்தில் விளங்கித் தோன்றுதலுமாகிய வேற்றுமையுடன் நீங்காததாயிருக்கும். ஆணவமல வியாபகம் உயிரின் வியாபகத்திற்கு மேம்படாமலும் குறையாமலும் சம வியாபகமாய் அதனுல் குருவருளால் முத்திக்காலத்தில் நீங்கப்பெறுவதாயிருக்கும்.

இம்மலத்தின் காரியம்:—மோகம், மதம், இராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என எழுவகைப்படும். அவ்ற்றுள், மோகம்—குருவினுலும், நூலினுலும் தீயனவென்றறிந்தவற்றில் நீங்காமல்நிற்கும் மயக்கம். மதம்—தன்னைப்போல ஒருவருமில்லையென மதித்தல். இராகம்—கிடையாத பொருளினிடத்தில் ஆசைப்படுதல். கவலை—கிட்டிய பொருள் பிரிந்தபொழுது வருந்துதல். தாபம்—சுற்றத்தைவிட்டுப் பிரிவதற்கும், பிரிந்ததற்கும் ஆற்ருமை. வாட்டம்—அவ்வாற்ருமையால் முக மலர்ச்சியின்றி வாடுதல். விசித்திரம்—எச்செயலும் வினையின்வழியாய் நிகழ்வது என்று எண்ணுது தான் செய்ததாகவும், பிறர் செய்ததாகவும் எண்ணுதல். (அ௦.)

மாயையே ஆணவமல மென்பாரை மறுத்துரைக்கின்றது.

மலமென வேறொன் றில்லை மாயாகா ரியம தென்னி
னிலகுயிர்க் கிச்சா ஞானக் கிரியைக ளெழுப்பு மாயை
விலகிடு மலமி வற்றை வேறுமன் றதுவே ருகி
யுலகுட லகரண மாகி யுதித்திடு முணர்ந்து கொள்ளே.

(கொ - ௭) மாயா காரியம் அது. மலமென ஒன்று வேறு இல்லை என்னின், மாயை இலகுயிர்க்கு இச்சா ஞானக் கிரியைகளெழுப்பும். மலம் வேறும் அன்று. இவற்றை விலகிடும். உலகுடல் கரணமாகி அது வேருகி உதித்திடும் உணர்ந்துகொள்ளே.

(போ - ரை.) மாயாகாரியமே உயிர்க்கு மறைத்தற் றொழிலைச் செய்யுமாகலின், அம்மாயையின் வேறாக மலமென்று ஒரு பொருள் இல்லையெனின், அது பொருந்தாது. எவ்வாறெனின், மாயையானது விளங்காநின்ற உயிர்கட்கு வேறாய் நின்று அறிவிச்சை செயல்களை விளக்கும். ஆணவ மலம் உயிர்களோடு கலந்து நின்று அறிவிச்சை செயல்களை மறைக்கும். விளக்குவதாகிய மாயைக்கும், மறைப்பதாகிய ஆணவ மலத்திற்குந் தம்முள் வேற்றுமை பெரிதாகலின், அவ்வேற்றுமை யறியாது தநுகரண புவனபோகமாயும், உயிர்க்கு வேறாயும் உதிக்கும் மாயையினையே உயிரோடு கலந்து நிற்கும் மலமென்பார் மதம்போலியென்பதனை அறிவாயாக. (எ-று.) (அக)

மாயா மலத்தைத்தவிர ஆணவ மலம் வேறில்லை யென்பதற்கு உவமைகூற அவ்வுவமை பொருந்தாதெனக் கூறுகின்றன.

மாயையே யான்ம ஞானக் கிரியையை மறைத்து நிற்குந்
தூயவப் பரிதிதன்னைச் சுடர்முகின் மறைத்தாற் போலப்
போய்முகி லகலச் சோதி புரிந்திடு மதுவே போலக்
காயமு மகல ஞானத் தொழில்பிர காச மாமே.

பரிதியை முகின் மறைப்பப் பாயொளி பதுங்கி னாற்போ
லுருவுயிர் மறைக்கின் ஞானக் கிரியைக ளொழிக்கு மாகுங்
கருதிடு மிச்சா ஞான காரியங் காயம் பெற்றான்
மருவிடு முயிர்க்குக் காயம் வந்திடா விடின்ம றைப்பே.

(கோ - டு.) தூயபரிதிச் சுடர்தன்னை முகில் மறைத்தாற்போல மாயையே ஆன்ம (இச்சா) ஞானக்கிரியையை மறைத்து நிற்கும். அம்முகில் போய் அகலச்சோதி புரிந்திடும் அதுவேபோல, காயமும் அகல (இச்சா) ஞானத்தொழில் பிரகாசமாமே. பரிதியை முகின் மறைப்பப் பாயொளி பதுங்கினாற்போல், உருமறைக்கின் உயிர் (இச்சா) ஞானக் கிரியைகள் ஒழிக்குமாகும்.

(போ - ரை.) மேகமானது சூரியனின் வேறாய் நின்று சூரியனுடைய பரிசுத்த ஒளியை மறைத்தாற்போல, மாயையானது தநுகரண புவன போகமாய் ஆன்மாவின் வேறாய் நின்று

அறிவிச்சை தொழில்களை மறைத்தல் கூடும். அம்மேகம் நீங்கினவிடத்துச் சூரியனொளி வெளிப்பட்டுத் தோன்றுமாறுபோல, சரீர முதலாகிய மாயை நீங்கியவிடத்து ஆன்மாவின் அறிவிச்சை தொழில்கள் பிரகாசித்தல்கூடும். இவ்வாறு உடம்பாட்டானும், எதிர்மறையானும் மாயையே ஆணவமலமென்பது இவ்வுவமையில் வைத்து அறியப்படுமெனின், அது பொருந்தாது, எவ்வாறெனின், மேகம்போல மாயை மறைக்குமாயின், மேகத்தால் சூரியன் ஒளி மறைபடுதல்போல, மாயா காரியத்தால் உயிரின்கண் அறிவிச்சை தொழில் நிகழாதிருத்தல் வேண்டும். அவ்வாறின்றி, மாயா காரியமாகிய உடம்பைப் பெற்றால், விளங்குகின்ற உயிர்க்கு அறிவிச்சை செயல்கள் நிகழவும், அவ்வுடம்பைப் பெறுவிடில் அறிவிச்சை தொழில்கள் நிகழாது மறையவுங் காணப்படுதலால், அவ்வுவமை இவ்விடத்துப் பொருந்தாது. (எ - று.)

(அஉ.) (அ௩.)

ஆணவமல மாயா மலங்களின் வேற்றுமையை விளக்கி ஆணவமலத்தின் தன்மை உயிரினுணர்வைத் தடுத்தலாமெனக் கூறுகின்றது.

போதகா ரியம றைத்து நின்றது புகன்ம லங்கா
ணோதலாங் குணமு மாக வுயிரினுள் விரவ லாலே
காதலா லவித்தை சிந்தத் தருங்கலை யாதி மாயை
யாதலா லிரண்டுஞ் சோதி யிருளென வேறு மன்றே.

(**கோ - டு.**) உயிரினுள் விரவலாலே குணமுமாக ஓதலாம். அவித்தை சிந்தக் கலை ஆதி மாயை காதலால் தரும். இரண்டும் சோதி இருளென வேறும் அன்றே. ஆதலால், புகல் மலம் போத காரியம் மறைத்து நின்றது காண்.

(**போ - ரை.**) அவ்வாறன்றியும் ஆணவ மலத்தானாகிய மறைப்பு, சூரியனின் வேறுப்நிற்கும் மேகத்தாலாகிய மறைப்புப் போலன்று. அம்மறைப்புத்தான் எவ்வாறு நிகழுமெனின், உயிரோடு வியாபகமாய்க் கலந்து உயிரின் குணம்போலத் தோன்றி நின்று மறைப்பதாம். அவ்வாறு மறைக்கும் ஆணவமாகிய

இருள் கெடுவதற்குக் கலை முதலிய தத்துவங்களாகிய விளக்கை மாயையானது விருப்பத்தோடு தரும். இவ்வாறு மாயையும், ஆணவமும் ஒளியும் இருளும்போலச் செயலின்கண் மாறுபட்டு நிற்பனவாகலான், இருள்போலக் கூறுந் தன்மைத்தாகிய ஆணவ மலமே உயிர் உணர்வைத் தடுக்கும் வல்லமையுடையதென உறுதியா யறிக. (எ - று.)

குணமும் என்னும் உம்மை குணமன்று என எதிர்மறைக்கண்வந்தது.

"மலமென" என்பது முதல் இவை நான்கு செய்யுளானும் ஐக்கிய வாதி பாசுபதி முதலியோர் மதம்பற்றி ஆணவமலமில்லை யென்னும் ஆசங் கையைப் பரிகரித்து அதனுண்மை சாதிக்கப்பட்டது. (அசு.)

ஆணவமலம் உயிர்க்குக் குணமென்பாரை மறுத்துரைக் கின்றது.

3226

புருடன்றன் குணம வித்தை யெனிற்சடம் புருட னாகுங்
குருடன்றன்கண்ணின்குற்றங்கண்ணின்றன்குணமோகூறாய்
மருடன்றன் குணமதாகி மலமசித் தாகி நிற்குந்
தெருடன்றன் குணமதாகிச் சித்தென நிற்குஞ் சீவன்.

[கோ - பே.] அவித்தை புருடன்றன் குணம் எனின், புருடன் சடமாகும். குருடன்றன் கண்ணின் குற்றம் கண்ணின்றன் குணமோ. மலம் மருள்தன்றன் குணமதாகி அசித்தாகி நிற்கும். சீவன் தெருள்தன் றன் குணமதாகிச் சித்தென நிற்கும் கூறாய்.

(பொ - ரை.) மேற்கூறியவாறு உயிரோடு கலந்து நிற்ப தாகிய ஆணவ மலத்தினை உயிரின் வேறாய் ஒரு பொருளென் னாது கலந்து நிற்றலால் உயிரின் குண விசேட மென்றலே பொருத்தமாமெனின், அவ்வாறு அறியாமை வடிவாகிய மலங் குணமாயின் அறிவு வடிவாகிய ஆன்மா அறிவில்லாத சடமெனப் பட்டுப் பொருந்தாதாய் முடியும். ஒரு பொருளின்கண் குணம் போலக் குற்றமும் உடனாய்க் கலந்து நிற்றல் கூடுமென்பது, குருட்டுக் கண்ணிற் காணப்படும். கண்ணுக்குக் குணம் ஒளியே யாதலால், குருடனது கண்ணில் ஒளிக்குணத்தை மறைத்துக் கண்ணுடன் கலந்து நிற்கும் படலமாகிய குற்றம் கண்ணின்

குணமாதல் செல்லாது. அன்றியும். அறியாமையைத் தனது குணமாகக்கொண்டு நிற்கும் மலம் அறிவில்லாத சடமாய் நிற்ப தன்றி அறிவுடைய பொருளாகாது. ஆதலானும், உயிர் அறிதற் றொழிலையுடைய சித்தேயாய் நிற்கும் ஆதலானும், உயிரின்கண் குற்றமாகக் காணப்படும் அறியாமைக் குணத்திற்குக் குணிப் பொருள் உயிரின் வேறாய் உயிரோடு கலந்துநிற்கும் ஆணவமலம் என்று அறிவாயாக. (எ - று.)

இச்செய்யுளால், அறியாமை உயிர்க்குக் குணமென்னும் பாடாண வாதிகள் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து அது மலத்தின் குணம் என மலத்தினுண்மை சாதிக்கப்பட்டது. (அநி.)

மும்மலங்களும் உயிரைப் பந்தப்படுத்துதல் நெல்லுக்கு முளை தவிடு உமிபோலெனவும் வேறும் இருமலமுண்டெனவும் கூறுகின்றது.

மும்மல நெல்லி னுக்கு முளையொடு தவிடு மிப்போன்
மம்மர்செய் தணுவி னுண்மை வடிவினை மறைத்து நின்று
பொய்ம்மைசெய்போகபந்தபோத்திருத்துவங்கள்பண்ணு
மிம்மல மூன்றி னோடு மிருமல மிசைப்ப னின்னும்.

[கோ - டு.] அணுவின் உண்மை வடிவினை மம்மர் செய்து மறைத்து நின்று எனவும் இன்னும் இருமலம் இசைப்பன் எனவுங்கூட்டுக.

(பொ - ரை.) மேல் இச்சூத்திரத்து ௩௪-வது செய்யுளில் "தன்மமோ டதன்மமாகி" எனக் கூறப்பட்ட கன்மமலமும், அதன் பின்னுக, ௫௩-வது செய்யுளில் "நித்தமாயருவா" எனக் கூறப்பட்ட மாயாமலமும், இவ்விடத்துக் கூறப்பட்ட ஆணவ மலமுமாகிய இம்மூன்று மலங்களும் உயிரினது உண்மைவடிவினை மறைத்து மயக்கத்துக் கேதுவாகக் கூடி நிற்றல் எதுபோல வெனின், நெல்லுக்கு முளைத்தற் சத்தியும், தவிடும், உமியும் போலவாம். எவ்வாறெனின், முளைத்தற் சத்தி முளையைத் தோற்றுவிக்குமாறுபோலக் கன்மமலம் பொய்ம்மை செய்கின்ற சுக துக்கங்களைத் தோற்றுவிக்கும். தவிடு முளைத்தற்கு அனு கூலஞ் செய்து நிற்பதுபோல மாயாமலம் அச்சுக துக்கங்கள்

தோன்றுதற்கு அனுகூலமாகத் தனு கரண முதலியவற்றைத் தோற்றுவிக்கும். உமி அம்முளை தோன்றுதற்கு நிமித்தமாய்ப் பற்றி நிற்பதுபோல ஆணவமலம் அச்சுக துக்கங்களை உயிர் அனுபவிக்குமாறு கருத்தாத் தன்மையைச் செய்து நிற்கும். இவ்வாறு பந்தப்படுத்தும் இம்மலங்கள் மூன்றனோடும் வேறும் இரு மலங்கள் உளவாம். (எ - று.)

கன்மத்தை முளைபோல் போகஞ் செய்யும் என்றும், மாயையைத் தவிடுபோல் பந்தஞ் செய்யும் என்றும், ஆணவமலத்தை உமிபோல் போத்திருத்துவங்கள் பண்ணும் என்றும் கூறினமையின் இச் செய்யுள் நிரனிறைப் பொருள்கோள்.

நெல் என்பது அரிசியைக் குறிக்கும். அவ்வரிசிக்கு முளை தவிடுமிப் போல் என்பது மும்மலங்கள் உயிரைப் பந்தப்படுத்தற்கும் பந்தத்திற்குக் காரணமாதற்கும் உவமையாயின. அன்றி, உயிரும் அம்மும்மலங்களும் கூடி நிற்கும் சம்பந்தத்திற்கு உவமையாகாது. எவ்வாறெனின், முளைத் தற் சத்தி அரிசியினுள் அடங்கி நின்று பந்தப்படுத்துவதுபோலக் கன்ம மலம் ஆன்மாவினுள் அடங்கி நிற்பதின்றி ஆன்மாவினாற் செய்யப்படுவதா யிருத்தலானும், தவிடு அரிசியைத் தொடர்ந்து நின்று பந்தப்படுத்துவது போல, மாயை தொடர்ந்து நின்று பந்தப்படுத்துவதின்றிக் கூடி நின்று பந்தப்படுத்துவதாலும், உமி அரிசியின் வேறாய் நின்று பந்தப்படுத்துவது போல, ஆணவமலம் வேறாய் நிற்பதின்றிக் கலந்து நின்று பந்தப்படுத்துவ தாலும் சம்பந்தத்திற்கு உவமையாகாமை யறிக. இம் மும்மலங்களுள் சுக துக்கமாகிய காரியத்திற்கு கன்மமலம் முதற்காரணமும், மாயாமலம் துணைக் காரணமும், ஆணவமலம் நிமித்தகாரணமுமாம். எவ்வாறெனின், முளைத்தற்சத்தி முளையைத் தோற்றுவிக்குமாறுபோல, கன்மமலம் சுக துக்கங்களைத் தோற்றுவித்தலின், அது முதற்காரணம். முளைத்தற்கு அனுகூலஞ் செய்து அரிசியுடனிற்குந் தவிடுபோல, உயிரினிடத்துச் சுக துக்கங்கள் தோன்றுதற்குத் துணையாய் அவ்வுயிரினோடு மாயாகாரியமாகிய தநு கரணுதிகள் கூடி நிற்றலின் மாயை துணைக்காரணம். முளை அரிசி யினிடத்துத் தோன்றுதற்கு நிமித்தமாய் நிற்கும் உமிபோல, சுகதுக்கங் கள் உயிரினிடத்துத் தோன்றுதற்கு அச்சுக துக்கங்களை முனைத்து நிற் கச் செய்து அவற்றை உயிர் அநுபவிக்குமாறு செய்வது ஆணவமாதலின், அது நிமித்த காரணமென அறிந்துகொள்க.

பந்தப்படுத்தும் முறைமையின் வேற்றுமைக்கேற்ப மும்மலங்களும் வேற்றுமைப்படும். அதாவது, ஆணவமலம் உயிரோடு கலந்துநின்று

அறிவு, இச்சை, செயல்களைத் தடுத்தலால் பிரதிபந்தம். கன்மமலம் உயிர் செல்லுமிடமெல்லாம் தொடர்ந்துசென்று சுக துக்கங்களைக் கூட்டுதலால் அநுபந்தம். அனு என்பது தொடர்ச்சி. மாயாமலம் உயிரோடுகூடித் தநுகரண முதலியனவாய் நிற்றலால் சம்பந்தம் என வறிக.

"பந்தம் போகம் போக நிறுத்தலும் வந்தது மாயை வினைமலத்து" என்றார் ஞானமிர்த நூலுடையாரும்.

முளை என்பது முளைத்தற் சத்தியைக்குறித்தலின் ஆகுபெயர். (அசு)

இருமலமென்பது மாயாகாரியமும், திரோதான சத்தியுமாம் எனவும், ஐந்து மலங்களும் உயிர்க்குப் பந்தஞ்செய்யுமெனவும் கூறுகின்றது.

மாயையின் காரி யத்தை மாயேய மலம தென்று
மேயுமும் மலங்க டத்தந் தொழிலினை யியற்ற வேவுந்
தூயவன் றனதோர் சத்தி திரோதான கரியதென்று
மாய்வரிம் மலங்களைந்து மணுக்களை யணைந்து நிற்கும்.

(போ - ரை-) அச்சுகதுக்க விளைவுகட்கெல்லாம் இடமாய் நின்று ஆன்மாவின் அறிவிச்சை செயல்களை ஏகதேசப்படுத்துவதென மேற்கூறிப்போந்த மாயாகாரியமாகிய தநுகரணுதிகளை மாயேயமலம் என்றும், பொருந்திய மும்மலங்களையுந் தத்தம் தொழில்களைச்செய்ய ஏவும் சிவசத்தியை மறைத்தலைச் செய்வதாகிய திரோதானமலம் என்றும், வேறு இருமலம் உண்டென்று ஆராய்ந்து கூறுவர். அவ்விரு மலங்களுள், மாயாகாரியம் மாயையிலடங்குமாயினும் பந்தப்படுத்தும் வேற்றுமைபற்றி வேறுவைத்தெண்ணப்படும். வேற்றுமையாவது, மாயை உயிரின் அறிவோடுகூடி அவ்வறிவை மயக்கும். மாயாகாரியம் மயக்கத்திற்கு முன்னிலைப் பொருளாயிருக்கும். இவையே வேற்றுமையாம். இனி மலங்களைத் தொழிற்படுத்துஞ் சிவசத்தியும் பராசத்தியின் அடங்குமாயினும் தொழில் வேற்றுமைபற்றி வேறுவைத்தெண்ணப்படும். அவ்வேற்றுமையாவது, பராசத்தி கருணை ஒன்றே செய்துநிற்கும். திரோதான சத்தி கருணை காரணமாகக் கன்மத்திற்கேற்றவாறு உயிரின் அறிவை மறைத்து

நிற்கும். இவையே வேற்றுமையாம். இவ்வாறு இவ்வைந்து மலமும் உயிர்தோறும் நின்று செய்யும் பந்தவேறுபாடு கண்டு கொள்க. (எ-று.)

திரோதானகரி என்பது திரோதானத்தைச் செய்வது என்னும் பொருள் குறித்த வடசொல்.

ஐந்து மலங்களையும் மும்மலங்களுள் அடக்கிக்கூறுங்கால் மாயேய மலத்தை மாயாமலத்தினும், திரோதான சத்தியை மறைக்குந் தொழிலொப்புமையால் ஆணவமலத்தினுமடக்கிக்கூறுவர். (அஎ.)

உயிர்மேற்கூறிய ஐந்து மலங்களால் பிறந்திறந் துழலுமெனக் கூறுகின்றது.

மலமாயை கன்ம மாயே யந்திரோ தாயி மன்னிச்
சலமாரும் பிறப்பி றப்பிற் றங்கியித் தரைகீழ் மேலு
நிலையாத கொள்ளி வட்டங் கறங்கென நிமிடத் தின்க
ணலமாரு மிறைவ னாணை யாலுயிர் நடக்கு மன்றே.

(**கோ - டு**) உயிர் மலம், மாயை, கன்மம், மாயேயம், திரோதாயி மன்னி இறைவன் ஆணையால் நிலையாத கொள்ளிவட்டம் கறங்கு என நிமிடத்தின்கண் அலமாரும். பிறப்பு இறப்பில் தங்கி இத்தரை கீழ்மேலும் சலமாரும் நடக்கும் அன்றே.

(**போ - ரை.**) ஆணவம், மாயை, கன்மம், மாயேயம், திரோதாயி ஆகிய இவ்வைவகை மலங்களும் உயிருடன் பொருந்துதலால், அம்மலங்களுக்கேற்ப முதல்வன் ஆணையால் நிலையில்லாத கொள்ளிவட்டமும் காற்றாடியும்போல் கணப்போதில் பல்முறை சுழற்சியுற்றுப் பிறப்பிறப்பைப் பொருந்திப் பூமி, நாகம், சுவர்க்கங்களிலே போக்குவரவுடையதாய் அவ்வுயிர் திரியும். (எ-று.)

மன்னியலமாரும் என்பது மன்னுதலால் அலமாரும் எனக் காரண காரியப்பொருளாய் நின்றது. "மழைபெய்யக் குளநிறைந்த"தென்றாற் போல. அலமரும் என்பது அலமாரும் என ஓசை நிரப்புதற்பொருட்டு நீண்டது. சலம்-போக்குவரவு.

இச்சூத்திரம் முதற்செய்யுளில் "ஆணையினமர்ந்துசெல்ல" எனவும் ரூசுவது செய்யுளில் "நாதனாராணையுய்க்க நரகொடு சுவர்க்கந்துய்த்து" எனவும் கூறியிருப்பவும் இவ்விடத்தும் "இறைவனாணையாலுயிர் நடக்கும்"

எனக்கூறியது பிறப்பிற்பட்டுச் சுழலுதலை நீக்குவதற்கு இறைவனருளே வாயிலாகும் என்பதுணர்த்துதற்பொருட்டு. அவனருள் வாயிலாகும் என்பது வருஞ்செய்யுள்முதல் வகுத்துக்கூறப்படும்.

"மும்மல நெல்லினுக்கு" என்ற செய்யுள்முதல் இவை மூன்று செய்யுளானும் மலங்கள் ஐந்தென்பதும், அவை பந்திக்கு முறையுங் கூறுமுகத்தால் ஆணவமலத்தானாகிய பொல்லாமை கூறப்பட்டது. ஆணவமல மல்லாத ஏனைய மலங்களெல்லாம் ஆணவமல நீக்கத்தின்பொருட்டே யாதலின், இவையனைத்துங்கூடி நீக்கத்தக்க கருத்தாத்தன்மையே ஆணவமலத்தானாகிய பொல்லாமையாம். (அஅ.)

பிறந்திறந் துழலுதற்குரிய பிறவிகளுள் மானுடப்பிறவியே அரிதெனக் கூறுகின்றது.

அண்டசஞ் சுவேத சங்க ளுற்பிச்சஞ் சராயு சத்தோ
டெண்டரு நாலெண் பத்து நான்குநா றுயி ரத்தா
யுண்டுபல் யோநி யெல்லா மொழித்துமா நுடத்து தித்தல்
கண்டிடிற் கடலைக் கையா னீந்தினன் காரி யங்காண்.

(போ - ரை.) உயிர்கள் பிறத்தற்குரிய முட்டையும், வேர்வையும், வித்தும் கருப்பையுமாக எண்ணப்படும் நால்வகைத் தோற்றத்தினின்று உண்டாம் பிறவிகள், தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என எழுவகைப்படும். அவ்வெழுவகைப் பிறப்பினின்று உண்டாகும் உறுப்புப் பேதம் எண்பத்துநான்கு நூறாயிரமாகும். அப்பேதங்களினின்றும் விரிந்த பேதங்கள் அளவின்றி உள்ளன. அவற்றுள் மற்றைப் பிறவிகளெல்லாம் ஒழிந்து ஒரு உயிர் மாநுடப்பிறவியைப் பொருந்தக் காணப்பெற்றிடின், அப்பேறு சமுத்திரத்தைக் கையால் நீந்திக் கரையேறினவன் காரியத்தோடொக்கும். இம் மாநுடப்பிறவியே பிறப்பிறப்பிற்பட்டுழலும் சுழற்சியை நீக்குதற்கு வாயிலாம். (எ-று.) (அகூ)

மாநுடப்பிறவியுள்ளும் உத்தமநாட்டில், உத்தம ஜாதியில், உத்தம சமயத்தில் பிறத்தலரிதெனக் கூறுகின்றது.

ஈரர்பயி றேயங் தன்னி ளுன்மறை பயிலா நாட்டில்
விரவுத லொழிந்து தோன்றன் மிக்கபுண் ணியத்தா னுகுந்
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணு ணுதே.

(போ - ரை.) அம்மாநுடப் பிறவியினுள்ளும் மாநுடர் வாழ்கின்ற இவ்வுலகத்துள் வேதாகம வழக்கம் இல்லாத நாட்டிலே பிறவாது அவ்வேதாகம வழக்க மிகுந்துள்ள உத்தம நாட்டிலே பிறத்தலரிது. அவ்வாறு பிறத்தல் மிகுந்த புண்ணியத்தாலுண்டாம். அவ்வுத்தமநாட்டினுள்ளுங் கீழ்ச்சாதியிலே தோன்றாது தவஞ்செய்தற்குரிய உத்தம சாதியிலே தோன்றல் அதனினும் அரிது. அவ்வாறு தோன்றினும் புறச்சமயங்களிற் செல்லாது அப்பிறப்பிறப்பை ஒழித்தற்கு வாயிலாகிய உத்தம சமயத்திற்குரிய நன்மை ஒருவனுக்குண்டாதலரிது. (எ-று.)(கூ0)

உத்தம சாதியிற் பிறக்கினும் வாழ்வினாலாகிய செருக்கும் வறுமையினாலாகிய சிறுமையும் நீங்கிச் சைவசமயத்திற்சாரல் மிக அரிதெனவும், அதனினும் சித்தாந்த நெறியினால் சிவனை வழிபடுபவரே வீடு பெறுவர் எனவும் கூறுகின்றது.

வாழ்வெனு மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரு
மூழ்பெற லரிது சால வுயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியினானைப் போற்றுவா ரருள்பெற் றாரே.

(போ - ரை) மேற்கூறியவாறு உத்தமசாதியிற் பிறக்கினும் பொருளுடையார், குலம், இளமை, கல்வி, செல்வம், அதிகாரம் என்னும் இவைகளாலுள்ளதாகிய அகங்காரமொழிந்தும், பொருளில்லார் வறுமையால் அச்செல்வமுடையார் பின்சென்று, தாழ்ந்துநிற்குஞ் சிறுமையினீங்கியும் இருப்பது அரிது. அவ்வாறிருத்தல் உயர்ந்த சாதியினும் உயர்ந்தகுடிப் பிறப்பிற்றான் உண்டாகும். அவ்வுயர் குடிப்பிறப்பே பிறப்பிறப்பை நீக்குதற்கு வாயிலாம். ஆகலான், அவ்வுயர்ந்த குடியிற் பிறந்து சிவபிரானுக்கு

நாம் என்றும் அடிமையாவோமென்று கருதி அச்சிவபிரானிடத்து மெய்யன்போடும் சைவசமயத்தைப் பொருந்தும் புண்ணியப்பேறு பெரிதும் அரிதாம். அச்சைவசமயத்தினுள்ளும் உயர்ந்த சித்தாந்த நெறி யுணர்ச்சியைப் பொருந்தி அவ்வுணர்ச்சியால் பிளவுபட்ட இளம்பிறையணிந்த சிவபெருமானை வழிபடப் பெறுவாருளராயின், அவரே மலத்தாலுண்டாந் துன்பங்களினின்றும் நீங்கிப் பிறவாநெறியாகிய முத்திப் பேறடைவார். (எ-று)

வாழ்வினாலாகிய மையலை வாழ்வெனு மையல் எனவும், வறுமையாலாகிய சிறுமையை வறுமையாஞ் சிறுமை எனவும் காரியத்தைக் காரணமாக வுபசரித்தார். மையலும், சிறுமையும் காரியம். வாழ்வும், வறுமையும் காரணம். மையல்-அகங்காரம்.

"அண்டசம்" என்னுஞ் செய்யுள் முதல் இவை மூன்று செய்யுளானும் அவ்வாணவமல பந்தத்தைப் போக்குதற்குரியவாயில், மாநுடப்பிறவியும், வேதாகம வழக்குடைய நாட்டிற்றோன்றுதலும், உத்தமசாதியிற்றோன்றுதலும், உத்தம சமயத்திற் றோன்றுதலும், அவ்வுத்தமசமயத்துள்ளும் சைவசமயத்திற்றோன்றுதலும், அதனினும் சித்தாந்த நெறியுணர்தலும் என்னும் இவையென்பது வகுத்துக்கூறப்பட்டது. (கூக.)

உத்தம நாட்டில் உத்தம சாதியில் மாநுடராய்ப் பிறத்தல் வேண்டப்படுமெனவும், வேண்டப்படுதற்குக் காரணம் உணர்ச்சி விசேடம் எனவும் கூறுகின்றது,

மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காய
மானிடத் தைந்து மாடு மரன்பணிக் காக வன்றோ
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்ப
ரூனெடுத் துழலு மூமரொன்றையு முணரா ரந்தோ.

(கோ - டு.) ஆனிடத்து ஐந்தும் ஆடும் அரன், மனம் வாக் காயம் பணிக்காக அன்றோ மானுடப் பிறவிதானும் வகுத்தது எனவும், அந்தோ ஊன் எடுத்து உழலும் ஊமர் ஒன்றையும் உணரார் எனவுங் கூட்டுக.

(போ - ரை.) அப்பிறப்பிறப்பை நீக்குதற் பொருட்டுப் பசுவினிடத் துண்டாம் பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்னும் பஞ்சகவ்வியத்தினை அபிஷேகமாகக் கொண்டருளும்

சிவபெருமானை மனத்தால் நினைந்தும், வாக்கால் புகழைத் துதித்தும் மந்திரங்களைச் செபித்தும், காயத்தால் பணிந்தும் வழிபாடு செய்யவேண்டும். இவ்வழிபாடு ஏனைப் பிறவிகளிற் செய்தல் கூடாமையின், அவ்வழிபாட்டின் பொருட்டாகவன்றே பிறவி விசேடமாகிய மானுடப் பிறவியை முன் செய்த தவத்தால் வேண்டப்பட்டு வகுத்ததாம். மேலுலகத்திலுள்ள விட்டுணு முதலிய தேவர்களும் அவ்விறைவனை வழிபடுதல் ஏனை உலகங்களிற் கூடாமையால் தேச விசேடமாகிய இம்மண்ணுலகத்தில் வந்து அச்சிவபிரானை அருச்சிப்பர். அவ்வாறு அருச்சிப்பதற்குரிய இவ்வுலகத்து அருச்சிப்பதற்குரிய மாநுடசரீரம் பெற்றும் அருச்சிக்க வேண்டுமென்னு முண்மையை ஐயோ பிறவியிற்பட்டுழலும் ஊமாகிய ஏனையோர் சிறிதும் அறியமாட்டார். ஆதலால் உண்மை அறிதற்குரிய சாதி விசேடமும், குடிப்பிறப்பு விசேடமும் வேண்டப்படும். (எ - று.)

இச்செய்யுளால், மேற்கூறிய வினைத்தும் சிவபிரானை வழிபடும் உணர்ச்சி விசேடத்திற்குக் காரணமாதலால், ஆணவமலத்தைப் போக்கும் வாயிலாதற்கு உரிமையுடையனவாதல் கூறப்பட்டது. உரிமையாவது, சிவபிரானை வழிபடும் உணர்ச்சி விசேடம்.

வாக் காயம் என்பது வடநூன் முடிபு. தமிழ் நூல் முடிபாயின் வாக்குக் காயம் என்றிருத்தல் வேண்டும். அவ்விடத்து வாக்கால் என்னும் பொருள்பட ஆலுருபு தொக்கு நின்றது. (௬௨.)

வாழ்வினுலாகிய மையலை நீக்குதற்குச் சரீர நிலையாமையை நோக்குதல் உபாயமெனக் கூறுகின்றது.

கருவினு ளழிவ தாயுங் கழிந்திடா தழிவ தாயும்
பரிணமித் தழிவ தாயும் பாலனு யழிவ தாயுந்
தருணனு யழிவ தாயுந் தானரைத் தழிவ தாயு
முருவமே யழிவே யானு லுள்ளபோ தேபா ருய்ய.

(கொ - டு.) நரைத்துத் தானழிவதாயும் எனவும், உள்ளபோதே உய்யப்பார் எனவுங் கூட்டுக.

(பொ - ரை.) மாநுட யாக்கை அவ்வளவு பெருமையுடையதாயினும் மாதாவினுடைய கருப்பத்திற்றுனே யழியினு

மழியும். பிறந்த உடனே அழியினுமழியும். பிறந்து சிறிது காலமிருந்து அழியினு மழியும். பாலப் பருவருத்தி லழியினு மழியும். யௌவனப் பருவத்தி லழியினு மழியும். நரையுண்டாகிய விருத்தப் பருவத்தி லழியினு மழியும். இவ்வளவு நாள் நிற்கும் என்று அறிய முடியாமல் நீரினிடத்துண்டாங் குமிழி நிலைபெறுது அழிதல்போல் எப்பொழுதும் சரீரம் அழியுந் தன்மையதாம். ஆதலால், நிலைத்திருக்கும் பொழுதே உய்யும் வண்ணம் அந்நிலையாமைகளை உற்றுநோக்குவாய். அவ்வாறு நோக்குவார்க்குச் சரீர முதலியவற்றுளுண்டாம் மையலை விடுதல்கூடும்.()

உருவமே யென்பதில் ஏகாரம் அசை. உருவவேயென்று பாடங்கொள்வாருமுண்டு. பொருட் பொருத்தமின்மையில் அது பொருந்தாது. (கூரு.)

விடயங்களை அறியும் அறிவும் வாழ்க்கையும் நிலையுடையன வல்ல என்றறிதலும் அம்மையலை நீக்குதற்கு உபாயம் எனக் கூறுகின்றது.

ஒருபுல னுகரும் போ தங் கொன்றிலை யொன்றின் பாலும்
வருபயன் மாறி மாறி வந்திடு மெல்லா மாறு
மொருபொழு துணரி னுண்டா மல்லதிவ் வல்லல் வாழ்க்கை
மருள்கன வதுவும் போல மாயும்பின் மாயு மன்றே.

(**கோ - டு.**) அங்கு ஒரு புலனுகரும்போது ஒன்று இலை. ஒன்றின் பாலும் வருபயன் மாறி மாறி வந்திடும். ஒரு பொழுது எல்லாமாறும். அல்லது இவ்வல்லல் வாழ்க்கை கனவும் மருளதுவும்போல பின் மாயும் அன்றே மாயும். உணரின் உண்டாம்.

(**பொ - ரை.**) மாறுட சரீரத்தைப்பெற்று அதில் நின்றுகொண்டு, ஒரு பொருளை அநுபவிக்குங்கால் மற்றொரு பொருளை அநுபவிக்க முடியாமையால் பொருளை அறியுமறிவும் எல்லாப் பொருளையும் ஒரு சேர அறியமாட்டாது. ஒன்றை அறியுமிடத்தும் விட்டு விட்டு அறிவதின்றித் தடையின்றி அறியமாட்டாது. அவ்வாறறிதலும் உறக்கம் மூர்ச்சை முதலியவற்றில் இறிதுமில்லையாய்விடும். அதுவன்றி இவ்வாக்கையின் பொருட்

டுளதாகிய செல்வமென்னும் அல்லலும் கனப்பொருள்போலவும், மயக்கப் பொருள்போலவும் மாயுந்தன்மையுடையதாம். எவ்வாறெனின், கனு முடிவு போகாது இடையே மாய்வதுபோலவும், மயக்கந் தோன்றிய பொழுதே மாய்வதுபோலவும் செல்வமும் மாயும் என்றறிக. ஆதலால், இவ்வறிவு நிலையாமை செல்வம் நிலையாமைகளை உணர வல்லார்க்கு அவற்றாலாகிய மையலை விடுதல்கூடும். (எ - று.)

பயன்—அறிதலாகிய பயன். அல்லது என்பது அன்றி என்னும் வாய்பாட்டு வினையெச்சக் குறிப்பு. அன்றி என்னும் வினையெச்சம் மாயும் என்ற வினைகொண்டது. அன்றி என்பது காலத்தை வெளிப்படக் காட்டாமையின் குறிப்பு. மருள்போல அன்றே மாயும், கனவுபோலப் பின்னு மாயும் என்றுரைத்துக் கொள்க. மருளும், கனவும் மயக்கப் பொருளையும், கனப் பொருளையும் குறித்தலின் ஆகுபெயர். வாழ்க்கை என்றவிடத்து அவ்வறிவேயுமன்றி எனவும், பின் என்றவிடத்து அப்பொழுதேயுமன்றி எனவும் இறந்தது தழுவிய எச்சவும்மைகள் தொக்கு நின்றன.(கூச.)

அதிகாரஞ் செய்வோர் தாம் சும்மாயிருத்தலை நோக்கித் தம்மைப் பிணமெனக் கருதலும் அம்மையலை நீக்குதற்கு உபாயம் எனக் கூறுகின்றது,

அரிசனம் பூசி மாலை யணிந்துபொன் னுடை சாத்திப்
பரிசனம் பின்பு செல்லப் பாரகர் பரிக்கக் கொட்ட
வரிசின்ன மூதத் தொங்கல் வந்திட வுணர்வு மாண்டு
பெரியவர்பேச்சுமின்றிக்கிடத்தலாற்பிணத்தோடொப்பர்.

(பொ - ரை.) அதிகாரஞ்செய்வோர் சந்தன முதலிய வாசனு திரவியங்கள் பூசியும் வாசத்தோடுகூடிய பூமாலைகள் அணிந்தும், பீதாம்பரம் போர்த்தும், தம் பரிவாரங்கள் பின்னே வரவும், சுமப்பவர் சிவிகை சுமப்பவும், வாத்தியங்கள் முழக்கவும், வரி பொருந்திய சின்னங்கள் ஊதவும், குடை சாமரங்கள் சூழ வரவும், அறிவற்றுப் பெரியாரைப் பேச்சின்றி அகங்காரத்தைப் பொருந்திக் கிடத்தலால் அவர் செத்தவரோ டொப்பரென்பதை அவ்விடத்தில் நிகழும் நிகழ்ச்சிபற்றி அறியவல்லராயின் அவ்வாறறிபவர்க்கு வாழ்வினாலாகிய மையலை விடுதல்கூடும். (எ-று.)

மேலைச்செய்யுளில் உள்ள "உணரின்உண்டாம்" என்பதனை இச் செய்யுளின் இறுதியினும் வைத்துரைக்க. பெரியவர் என்பது இழித்தற் கண்வந்த குறிப்பு மொழி. பெருமை அதிகாரத்தானுயது.

"கருவினுள்" என்னுஞ் செய்யுள் முதல் இவை மூன்று செய்யுளானும் வாழ்விஞலாகிய மையலை நீக்குதற்குச் செல்வத்தின் நிலையாமையினையும், அதனுல் இறுமாந்திருப்பவர் பிணத்தோடொப்ப ரென்பதனையும் உணர்தல் உபாயம் என்பது கூறப்பட்டது. (கூரு)

சிவபிரானை வழிபடுதலாலுண்டாம் அருட்செல்வத்தை நோக்கப் பொருட்செல்வம் நிலையன்றெனக் கருதிச் செல்வரைப் பின்பற்றிவாழ்தல் பயனிலை யென்றெண்ணுதல் வறுமையாலுண்டாஞ் சிறுமை நீங்குதற்கு உபாயம் எனக் கூறுகின்றது.

பிணத்தினையொத்துவாழ்வோர்பின்னடைப்பிணங்கள்போல
வுணக்கியே யுழல்வீ ருங்க ளுடலுயி ருணர்வு மெல்லாங்
கணத்திடைத் தோன்றி மாயுங்காயமென்றறிந்தொருக்கால்
வணக்குறீ ரரனை யென்றும் வானவர் வணங்க வைப்பன்.

(**கோ - ரு**) அரனை ஒருக்கால் வணக்குறீர் என்றும் வானவர் வணங்கவைப்பன் காயம் கணத்திடைத் தோன்றிமாயும். உங்கள் உடல், உயிர், உணர்வும் எல்லாம் உணக்கியே உழல்வீர் என்று அறிந்து பிணத்தினை ஒத்துவாழ்வோர் பின் நடைப் பிணங்கள்போல் (ஆம்)

(**பொ - ரை.**) மேற் கூறியவாறு செல்வ முதலியன நிலையாவென்பதனை யுணர்ந்து சிவபிரானை ஒருகாலேனும் வழிபாடு செய்கின்றிலீர். செய்யப்பெறின், எக்காலத்துந் தேவர்களும் வணங்கும் வண்ணம் அழியாச் செல்வத்தை அச்சிவபிரான் தருவன். அச்செல்வத்தை நோக்க உடம்பு கணத்திற்றோன்றி அழியுந் தன்மையுடையதாம். அவ்வுடம்பின் பொருட்டு உம்முடைய உடல், உயிர், உணர்வு முதலியவெல்லாம் வருத்தமுறும்படி வருந்தி நீர் சேர்க்குஞ் செல்வம் செல்வமன்று. இவ்வாறு உடலின் றன்மையினையுஞ் செல்வத்தின் றன்மையினையும் உணர்வீராயின், இச்சிறு செல்வத்தை வேண்டிப் பிணத்தினையொத்து வாழும் அவ்வதிகாரச் செருக்குடையார் பின்சென்று நடைப்

பிணங்கள்போல் நின்று தாழ்தலாகிய சிறுமையினீங்குதல் உமக்குக் கூடும். (எ-று.)

இச்செய்யுள் வறுமையாஞ் சிறுமை தப்புதற்கு உபாயங் கூறியது. உபாயமாவது, இச்செய்யுளின் அவதாரிகையிற் காட்டப்பட்டுள்ளது.

சிவபிரானை வழிபடுதலாலுண்டாம் அருட்செல்வமே செல்வமென்னு மிக்கருத்துப்பற்றியே, "செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய, செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே." என்றருளிச்செய்தனர் திருஞான சம்பந்த சுவாமிகளும். ஏனைச்செல்வங்களைநோக்கி வருந்தாது, சிவபிரானை வழிபடின், அச்சிவபிரான் அருட்செல்வத்தைத் தருதலேயன்றி ஏனைய செல்வங்களையுந் தந்தருளுவரென்னும் உண்மையினை, "மாட்டைத்தேடி மகிழ்ந்துநீர் நும்முளே, நாட்டுப்பொய்யெலாம் பேசிடு நாணிலீர். கூட்டை விட்டுயிர் போவதன் முன்னமே, காட்டுப்பள்ளியுளான் கழல்சேர்மினே" என்றும், "ஐயனேயரனேயென் றரற்றினு, லுய்யலா முலகத்தவர் பேணுவர், செய்யபாத மிரண்டு நினையவே, வையமாளவும் வைப்பர்மாற் பேறரே" என்றும் அருளிச்செய்த திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாக்குக்கள் வலியுறுத்தும்.

ஒன்றதாயென்ற செய்யுள்முதலிதுவரையில் நான்காம் அதிகரணத்தின் ஒழிபு கூறியவாறும். (கூகூ)

நான்காம் அதிகரணம் முடிந்தது.

இரண்டாஞ்சூத்திரம் முடிந்தது.

ஆகத் திருவிருத்தம் கஅகூ.

மூன்றுஞ் சூத்திரம்.

பசு உண்மை.

குடத்தைக்குயவன் செய்தலினாலேயே கொள்வோன் உண்டென்று கருதப்படுமாறு போலப் பிரபஞ்சத்தை இறைவன் தோற்றுவித்தலினாலேயே அப்பிரபஞ்சத்தில் பற்றுச்செய்து நிற்கும் உயிர் உண்டென்று பெறப்படுமென்பதை இச்சூத்திரத்திற் கூறவேண்டுவதாயினும், இயைபு பற்றி மேலைச் சூத்திரத்தில் அலகிலாவுயிர்களின் பொருட்டு என்றார். என்றதனால், அவ்வுயிரென்பதுதான் உண்டோ, இல்லையோ? இல்லையாயின், உயிர்களின் பொருட்டு என்றது பொருந்தாது, உண்டாயின் அது யாது? எங்கிருக்கும்? என்னும் ஆசங்கைகள் நிகழுமன்றே. அவ்வாசங்கை நீக்குதற் பொருட்டு மூன்றுஞ்சூத்திரம் எழுந்தது. இயைபு—கன்மத்தை ஊட்டுதல்.

சீதமின்மையால் பனியின்மை காணப்படுதல் போல, உடலியக்கமின்மையால் உயிரின்மை காணப்படுமன்றே. இவ்வெதிர்மறை கொண்டு உடன்பாட்டு முகத்தால் உடலியக்க முண்மையால் உயிருண்டென்று காட்டுகின்ற அநுபலத்தி ஏதுவென்னும் அநுமானப் பிரமாணம் இச்சூத்திரத்தாற் கூறுகின்றார்.

சூனியம், தூலவுடம்பு, ஐம்பொறி, சூக்குமவுடம்பு, பிராணவாயு, பிரமம், சமுதாயம் என்னும் ஏழும் உயிரன்று என்றும் இவற்றின் வேறாய், காணப்படும் உடலின்கண் உயிர் உண்டென்றுங் கூறுகின்றது.

உயிரெனப் படுவ திந்த வுடலின்வே றுளதா யுற்றுச்
செயிருறு மிச்சா ஞானச் செய்திக ளுடைய தாகிப்
பயில்வுறு மின்பத் துன்பப் பலங்களு நுகரும் பார்க்கிற்
துயிலொடு மஞ்ச வத்தைப் படுமுண்மை துரியா தீதம்.

(**கோ - டு.**) உளதாய் உற்றுச் செயிருறும், இச்சாஞானச் செய்திகளுடையதாகி, துயிலொடும் பயில்வுறும், இன்பத்துன்பப் பலங்களும் பார்க்கில்நுகரும், அஞ்சு அவத்தைப்படும், துரியாதீதம் உண்மை, உயிரெனப்படுவது இந்த வுடலின் வேறு.

(**பொ - ரை.**) உயிர் அறியப்படாமையால் சூனியம் என்பர். சூனியம் என்றுணர்வது வேறுண்டாதலின், அவ்வாறுணர்

வதுவே உயிரெனமறுக்க, உயிர் உடம்பே என்பர். உடம்பினை யானெனதென்று அபிமானித்து நிற்பதொன்றுண்டாதலின், அவ்வாறு நிற்பதே உயிரெனமறுக்க, ஐம்பொறியே உயிரென்பர். அவ்வைம்பொறிகட்கு அறிதல் மாத்திரையேயன்றி இச்சையுந் தொழிலுமில்லாமையின், அம்மூன்றனையு முடையதாய் அவ் வைம்பொறியின் வேறாயுள்ளதே உயிரெனமறுக்க, சூக்கும உடம்பே உயிரென்பர். அவ்வுடம்பு என்றும் ஒரு தன்மைத் தாய் அகத்தேயிருந்துஞ் சொப்பனத்தில் ஒன்றைத் தெளிவாய் அறியவும் சாக்கிரத்தில் அதனையே மயங்கியறியவுங் காண்ட லால், அச்சூக்கும தேகத்தின் வேறாகநின்றும் அதனோடு கூடி அகத்துச் சென்றவிடத்துத் தெளிவாயறிவதும் தூலதேகத் தோடு கூடிப் புறத்துச்சென்றவிடத்து மயங்கி யறிவதுமாகிய தொன்றுண்டாதலின் அவ்வாறறிவதே உயிரெனமறுக்க, பிராண வாயுவே உயிரென்பர். சுழுத்தியில் பிராணவாயு இயங்கிக் கொண்டிருக்கவும் இன்பத்துன்பம் அநுபவிக்கப்படாமையின் அப்பிராணவாயுவின் வேறாய் இன்பத்துன்பம் அநுபவிப்பதொன் றுண்டாதலின் அதுவே உயிரெனமறுக்க, பிரமமே உயிரென்பர். அது அறிந்தபடியே அறிவதன்றி மயங்கி ஐந்தவத்தைப் படா மையின், அவ்வாறு மயங்கி ஐந்தவத்தைப் படுவதொன்றுண்டா தலின் அதுவே உயிரெனமறுக்க, அனைத்துங்கூடிய சமுதாயமே உயிரென்பர். அவ்வனைத்திற்குந் தனித்தனி பெயரிருப்பதினா லும், அவற்றிற்கு உயிரெனப் பெயரின்மையாலும், அவ்வனைத் தும் நீங்கிய அதீதத்தின் கண் நிற்பதொன்றுண்டாகலானும் அதுவே உயிரெனமறுக்கவும், அவ்வுயிரெவ்விடத்துளதென்று வினவ, காணப்படும் உடலின் கண் இவற்றின் வேறாய் உள தாம். (எ-று)

உயிர்களே உயிரெனப்படுவது என்றது சாதியொருமை. துயில் என்பது இவ்விடத்துக் கனவைக் குறித்தது. பயில்வுறும் என்றவிடத்து இரண்டாவது வேற்றுமையுருபு விரித்துப் பயில்வையுறும் என உரைக்க. பயில்வு என்பது பயின்றதனைக் குறித்தலின் ஆகுபெயர். பார்க்கில் என்பது விழித்தவிடத் தென்பதாம். * "ஐயுங்கண்ணுமல்லாப் பொருள்

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமைமயங்கியல். சூ—௨௨.

வயின்—மெய்யுருபு தொகாஅவிறுதியான'' என்பதோத்தாகலின், ஏழா வது கண் உருபு உடலின் என்ற விடத்துத் தொக்குநின்றது. கருவிக ளனைத்தும் நீங்கிய துரியாதீதத்திலுயிர் உண்டெனபது, அந்நிலையினின் றும் துரியத்துக்குவந்து அதனினின்றும் சுழுத்திக்குவந்து சுகமனுப வித்ததை விழித்தபின்னர்ச் சுகமாகத்துயின்றே னென்று உணர்வு நிகழ் தல்பற்றித் தெளியப்படும்.

உளதாய் என்றதனல் உயிர் சூனியமெனவும், உற்றுச் செயிருறும் என்றதனல் உடம்பே உயிர் எனவும், இச்சா ஞானச் செய்திகளுடைய தாகி யென்றதனல் ஐம்பொறியே உயிரெனவும், துயிலொடும் பயில்வுறு மென்றதனல் சூக்குமவுடம்பே உயிரெனவும், இன்பத்துன்பப் பலன் களும் பார்க்கில் நுகருமென்றதனல் பிராணவாயுவே உயிரெனவும், அஞ் சவத்தைப் படுமென்றதனல் பிரமமே உயிரெனவும், துரியாதீதம் உண் மையென்றதனல் சமுதாயமே உயிரெனவும் கொள்வோர் மறுக்கப்பட்டன ராதலின் குறிப்பேது ஏழும் விரிந்தவாறுகாண்க. அவ்வாறு விரிந்ததால் சிவஞானபோதம் மூன்றாஞ் சூத்திரம்போல, இச்செய்யுளும் ஏழு கூற்றை யுடையது. அவற்றுள் சூனியம் உயிர் என்னும் முதற்கூறு உளதாய் என்றதனல் இம்முதற் செய்யுளிற் சாதிக்கப்பட்டது. அதன்கண் வேறு ஆசங்கையின்மையின் விரித்திலர். ஏனைய ஆறு கூற்றுள் இரண்டாவதும், மூன்றாவதும், ஐந்தாவதும் இச்சூத்திரத்துள் கூறுகின்றார். நான்காவதும், ஆறாவதும், ஏழாவதுமாகிய கூற்றுக்கள் நான்காஞ் சூத்திரத்துள் கூறப் படும்.

அவ்வாறாயின், சூனிய முதலியவற்றுள் உடம்பு, ஐம்பொறி, பிரா ணவாயு என்னும் மூன்றும் நீங்கிய ஏனையவெல்லாம் அறியுமென்பது காட்சியளவைக் கெய்தாமையின் உயிர் அவற்றின் வேறெனக் கொள்ளி னும், உடம்பாவது, உடம்பின்கணுளவாகிய ஐம்பொறிகளாவது, அவ் வைம்பொறிகளை ஊக்கி இயங்குவதாகிய பிராணவாயுவாவது அறியும் என் பது காட்சியளவையான் அறியக்கிடத்தலின், உயிர் அம்மூன்றனுளொன் றாகும் என்பதே பொருத்தம் என்பாரை நோக்கி அம்மூன்றனையும் வேறாக எடுத்தோதி மறுத்தற்கெழுந்தன வருஞ் செய்யுட்கள். (க.)

இரண்டாங்கூறாகிய உடம்பு உயிரன்றென்பதைப் பிணமாய்க் கிடத்தலினும், உறக்கத்தினும் உணரப்படாமையின் வைத்து விளக்குகின்றது.

உடலின்வே றுயிரே னிந்த வுடலன்றே வுணர்வ தென்னி
னுடல்சவ மான போது முடலினுக் குணர்வுண் டோதா
னுடலினின் வாயுப் போனு லுணர்ச்சியின் றுடலுக் கென்னி
னுடலினின் வாயுப் போகா துறக்கத்து முணர்வ தின்றே.

(கோ - டு.) உடலுக்கு உணர்ச்சி இன்றெனின்.

(போ - ரை.) எழுவகை ஏதுக்களாலும் உடம்பு முதலியவற்றின் வேறாய் உயிருண்டெனச் சாதித்த பின்னரும், அறியுந்தன்மை உடம்பிற் காணப்படுதலால், அவ்வுடம்பே உயிராம்; அதனின் வேறாய் உயிருண்டென்றல் பொருந்தாதென்பர். அவ்வாறு உடம்பே அறியும் எனின், உடம்பு பிணமாய்க் கிடந்தவிடத்தும் உணர்வு நிகழவேண்டும். நிகழப் பெறுமையினுல் உடம்பு உயிரென்றல் எவ்வாறு பொருந்தும் என மறுத்தவிடத்துப் பிணமாய்க் கிடந்தபொழுது பிராணவாயு நீங்கினமையால் உணர்வு நிகழவில்லை; பிராணவாயு நீங்காதிருப்பின் உணர்வு நிகழும்; ஆதலால், உடம்பின் வேறாய் உயிருண்டென்றல் பொருந்தாதெனின், அவ்வாறுபின் சுழுத்தியில் பிராணவாயும் உடம்பும் இருத்தலால் உணர்வு நிகழவேண்டும். அவ்விடத்து உணர்வு நிகழாமையின் உடம்பு அறியுமென்றதும், அதுவே உயிரென்றதும் எவ்வாறு பொருந்தும். (எ - று.)

போகாதுறக்கத்து என்றவிடத்து போகாத என்னும் பெயரெச்சத்து அகரம் விகாரத்தால் தொக்கு நின்றது. (உ.)

மூன்றுங் கூறுகிய ஐம்பொறிகள் உயிரன்றென்பதை, ஒவ்வொன்றையே அறிதலினும், ஒன்றையொன்றறியாமையினும், தாமே அறியாமையினும் வைத்து விளக்குகின்றது.

அறிவதைம் பொறியே யென்னி னுறக்கத்தி னறியா வாகு
மறிவது மொன்றொன் றாக வொன்றொன்று யறியு மென்னி
னறிவுகளொன்றையொன் றங்கறிந்திடாவைந்தையுங்கொண்
டறிவதொன் றுண்ட தான்மா வைம்பொறி யறிந்தி டாவே.

(கோ - டு.) ஐம்பொறியே அறிவது உறக்கத்தின் அறியாவாகும் என்னின் எனவும், அறிவுகள் ஒன்றை அங்கு ஒன்று அறிந்திடா எனவும் கூட்டுக.

(போ - ரை.) மேல் அறியுந்தன்மை உடம்புக்கின்மையால் அது உயிரன்றெனச் சாதித்தவிடத்து ஐம்பொறிகளே அறியுந் தன்மையுடையனவாம். அப்பொறிகள் உடம்பு பிணமாம்போது கெட்டொழியும். நனவின்கண் அவ்வைம்பொறிகளே உடம்பி னின்று அறிந்தும், உறக்கத்தின்கண் அறியாதும் நிற்குமாதலின் அவ்வைம்பொறியே உயிரெனின், அவ்வாறாயின் நனவின்கண் ணும் அவ்விந்திரியங்கள் ஒவ்வொரு பொருளாக அறிவதன்றி எல்லாப்பொருளையும் ஒருசேர அறியமாட்டாது. ஒன்றொன்றாக அறிவதுவே அவற்றின் இயல்பாமென்னின், அவ்வாறறி வதிலும் ஒரு இந்திரியம் ஒரு விடயத்தை அறியும்போது மற்றோரிந்திரியம் மற்றொரு விடயத்தை அறியாது. அவ்வா றறிதலினும், ஒரு இந்திரியம் தனக்குரிய ஒரு விடயத்தை அறி யுமேயன்றிப் பிற இந்திரியங்களாலறியப்படும் விடயங்களை அறி யாது. அதாவது, கண் ஒவ்வொரு உருவப்பொருளாய் அறி யுமேயன்றி எல்லா உருவப்பொருளையும் அறியமாட்டாது. அக் கண் உருவத்தை அறியும்போது செவி ஓசையைக் கேளாது. கண் உருவத்தை அறியுமேயன்றி ஒலியை அறியாது. இவ் வாறே பிறவுங் காண்க. ஆதலால், அவ்வைந்து இந்திரியங்களையுங் கொண்டு ஐந்து விடயங்களையும் அறியும் பொருளொன்றுண்டு. அதுவே உயிராவதன்றி ஐம்பொறிகள் தாமே அறியாமையால் உயிராகமாட்டாவாம். (எ - று.)

அறிவதைம்பொறியே என்றவிடத்து அறிவது என்பது அறியும் என் னுந் தொழில்மேல் நின்றது.

அறிவதும் என்றவிடத்து உம்மை சிறப்பு. அறிவுகள் என்பது அறி யும் இந்திரியங்களைக் குறித்தலின் ஆகுபெயர். அது ஆன்மா என்ற விடத்து அஃது ஆன்மா என ஆய்தம் தொக்கு நின்றது.

இச்செய்யுளுக்கு இவ்வாறின்றி, "அறிவதைம் பொறியே யென்னி னுறக்கத்தினறியாவாகு மறிவதுமொன் றொன்றாக வொன்றொன்று யறியு மென்னின்" என்பதற்கு, என்னுடம்பகத்து நின்று அறிவது ஐம்பொறி களேயாம். அவை உறக்கத்தினறியாத அழகும், நனவின்கண் ஒவ்வொரு விடயமாக அறிவதும் இருவர் மதத்தினும் ஒக்கும். ஆதுபற்றி என்னை

ஆசங்கித்தல் கூடாமையின், அவ்வைம் பொறிகளே ஒருதலையாக அறியும் வேறுமோருயிர் கோடல் மிகையாமென்பையாயின் என்றுரைத்தலு மொன்று.

இப்பொருட்கு அறியாவாகும் என்றவிடத்து வாகு என்பது அழகைக் குறித்தது. உறக்கத்தினறியாமை இழுக்கன்றுதலின் அழகெனப்பட்டது. ஏனைய இரண்டடியு மறப்பாதலின் அவற்றின் பொருளில் வேற்றுமை யின்று. (ரு.)

ஐந்தாங் கூறுகிய பிராணவாயு உயிரன்றென்பதை அப் பிராணவாயு நிற்கும்போதும் கருவிகள் நில்லாமையில் வைத்து விளக்குகின்றது.

அறிந்திடும் பிராண வாயு வடங்குதல் விடுதல் செய்தா
லறிந்திடா துடலு றக்கத் தறிவின்மை கரண மின்மை
யறிந்திடு முதலி யாகி னதுநிற்கக் கரணம் போகா
வறிந்திடும் பிராணன் றன்னை யடக்கியும் விட்டு மான்மா.

(கோ-டு.) பிராணவாயு அடங்குதல் விடுதல் செய்தால் அறிந்திடும். உடல் உறக்கத்துக் கரணம் இன்மை அறிவின்மை அறிந்திடாது. அறிந் திடும் முதலியாகின் அது நிற்கக் கரணம் போகா. அடக்கியும் விட்டும் பிராணன் றன்னை அறிந்திடும் ஆன்மா.

(பேர் - ரை.) ஐம்பொறிகள் உயிரல்லவெனச் சாதித்த விடத்துப் பிராணவாயு இயங்குதலினாலேயே அறிவு நிகழக் காண்டலின் அப்பிராணவாயுவே அவ்வைம்பொறிகளையுங் கொண்டு அறிவதாகிய உயிரென்றல் பொருந்தும். உறக்கத்தில் உடம்பின் கண் அப்பிராணவாயு இயங்கினும் ஐம்பொறிகளாகிய கருவியின் மையால் அறிவின்மையாய் அறியாதாயிற்று; ஆதலின் பிராண வாயுவின் வேறாய் உயிருண்டென்றல் பொருந்ாதெனின், பிராண வாயுவே அறியுந் தன்மையுடைய கருத்தாவாயின் உறக் கத்தில் அப்பிராணவாயு இருக்கவும் கருவிகள் போதல் கூடா வாம். ஆதலால், கருவிகளை அடக்கியும் விட்டும் பிராணவாயுவை யுங் கொண்டு அறிவதாகிய உயிர் வேறு உண்டென்று கூற, சுழுத்தியில் உயிரிருக்கவுங் கருவிகள், ஒடுங்கி இருக்குமென்று

கூறுவதுபோல,பிராணவாயுவே கருவிகளை ஒடுக்கியும்விட்டும் அறியுமென்றல் ஏன் கூடாதெனின், பிராணவாயு சுழுத்தியிலும் நனவிலும் ஒரு தன்மையான போக்கு வரவுடையதாய் இயங்கக் காண்கின்றும். அவ்வாறு அறிவும் ஒரு தன்மையாய் இன்றி நனவில் அறிந்தும் சுழுத்தியில் அறியாதும் நிற்றலாகிய வேறுபாடுடையதாய்க் காணப்படுதலால், பிராணவாயுவின் வேறாய் அவ்வேறுபாடுடையது வேறொன்றுண்டென்பது அறியப்படும். அதுவே இந்திரியங்களை அடக்கியும் விட்டும் பிராணவாயுவைத் துணையாகக் கொண்டும் அறிவதாகிய உயிரெனப்படும். (எ - று.)

"உடலின் வேறுயிரேன்" என்ற செய்யுள் முதல் இவை மூன்று செய்யுளானும் முறையே உடல், ஐம்பொறி, பிராணவாயு என்னும் மூன்றனையுங் காட்சியளவையா னறியக்கிடந்த விசேடம்பற்றி வேறெடுத்து ஆசங்கித்துப் பரிகரித்து இந்தவுடலின் உயிரெனப்படுவது வேறு என்பது சாதிக்கப்பட்டது. (ச.)

மூன்றாஞ் சூத்திரம் முடிந்தது.

ஆகத் திருவிருத்தம் ககூ0.

இலக்கணவியல்.

நான்காஞ் சூத்திரம்.

"பசு இலக்கணம்."

மேல் மூன்று சூத்திரத்தாலும் பதி, பசு, பாசமென்னும் முப்பொருள் உண்டென்பதற்குப் பிரமாணங் கூறவே, அம் மும்பொருள்களின் இலக்கணம் யாதோவென்னும் வினு நிகழுமன்றே? அந்நிகழ்ச்சி பற்றிப் பசு இலக்கணம், பாச இலக்கணம், பதி இலக்கணம் என்னும் மூன்றனையும் முறையே மூன்று சூத்திரங்களாற் கூறத்தொடங்கி, எதிர் நிரனிறையாக முதற்கண் மேல் அடுத்து நின்ற பசுவினது இலக்கணம் இச் சூத்திரத்தாற் கூறுகின்றார்.

அந்தக்கரணங்கள் ஆன்மா அன்றெனவும் ஆணவமலத்தின் சேர்க்கையால் ஆன்மா அந்தக்கரணங்களைக் கூடி ஐந்தவத்தைப் படுமெனவும் கூறுகின்றது.

உணர்வன கரணமென்னி லொன்றையொன் றுணரா வெவ்வே
றணைதருஞ் செயல்க ணன்கு மறிந்தவை யடக்கி யாக்கிப்
புணருமுட் கருவி யாக்கிப் புறக்கரு வியினும் போக்கி
யிணைதரு மிவற்றின் வேறு யானென தென்ப தான்மா.

(**கோ - ட.**) கரணம் உணர்வன என்னில், ஒன்றைஒன்று உணரா. ஆன்மா இவற்றின் வேறாய் யான் எனது என்பது இணைதரும். நான்கு செயல்களும் அறிந்து அவை அடக்கிப் புணரும் உட்கருவியாக்கி, ஆக்கிப் புறக்கருவியினும் போக்கி வெவ்வேறு அணைதரும்.

(**போ - ரை**) இனி, மன முதலிய அந்தக்கரணமே அறியுமாதலின் அவையே உயிரெனின், இவ்வந்தக்கரணமும் ஐம்பொறி போல் ஒன்றனையொன் றுணராவாம். அதாவது, மனம் சங்கற்பிக்குமேயன்றிச் சிந்தித்தல், நிச்சயித்தல், அகங்கரித்தல்களைச் செய்யாது. இவ்வாறே புத்தி, சித்தம், அகங்காரம் மூன்றி

னிடத்துங் கண்டுகொள்க. ஆதலால், அந்தக்கரணம் நான்கினையுங் கொண்டறியும் உயிர் அவற்றின் வேறும். வேறாகியும் யானெனதென்னும் செருக்குறுதற் கேதுவாகிய ஆணவமலம் உயிரோடு அநாதியே பொருந்தி நிற்றலால், உயிருக்குத் தனக்கென அறிவின்றி இவ்வந்தக்கரணங்களாலாய நான்கு தொழிலையும் இவற்றோடு கூடி யறியும். அவ்வாறறிகின்ற ஆன்மா சொப்பனாவத்தையில் இவ்வந்தக் கரணங்களை யடக்கி உட்கருவிகளாக்கி அகத்து நிகழ்வதை யறியும். சாக்கிராவத்தையில் இவ்வந்தக் கரணங்களைப் புறக்கருவிகளோடு சேர்த்துப் புறக்கருவிகளாக்கிப் புறத்து நிகழ்வதை யறியும். இவ்வாறு அகத்தும் புறத்துஞ் சேரலால் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்தவத்தைகளை ஆன்மாப் பொருந்தும். (எ - று.)

எனவே, ஆணவமலத்திற் கட்டுண்டு ஐந்தவத்தையுறுதல் ஆன்மாவிற்கு இலக்கணமென்றவாறாயிற்று. இது தடத்த இலக்கணமெனப் படும் பொதுவியல்பு.

ஒன்றையொன் றுணரா வாகலான் இவற்றின் வேறாயிருந்தும், ஆணவமலத்தோடு கூடுதலால் இவ்வந்தக்கரணங்களோடு கூடி யறிந்து, அடக்கியாக்கி ஆக்கிப்போக்கி வெவ்வேறணைதரும் என வினை முடிபு செய்க. அடக்குதல்—சொப்பனாவத்தையிற் செலுத்துதல். ஆக்குதல்—சாக்கிராவத்தையிற் செலுத்துதல். சொப்பனம் கூறவே, இனம்பற்றி சுழுத்தி, துரியம், துரியாதீதாவத்தைகளுங் கொள்ளப்படும். அடக்கி உட்கருவியாக்கி, ஆக்கி புறக்கருவியினும் போக்கி என நிரனிறைப் பொருளாகக் கொள்க. இவற்றின் வேறாய் என்றவிடத்து வேறாயும் எனச் சிறப்பும்மை விரித்துரைக்க. யானெனதென்பது ஆணவமலத்தின் காரியம். ஆணவமலம் காரணம். காரணத்தைக் காரியமாக வுபசரித்தார். என்பது என்னும் பெயருக்கு அடையாகிய யான் எனது, மலத்தினுண்மை சாதித்தற்குக் குறிப்பேதுவாய் நின்றது. யான் எனது என்றலைக்கொண்டு யானெனதென்பதாகிய மலம் உண்டென்றறியப்படும் என்பதாம்.

இச்செய்யுள் சிவஞானபோதம் நான்காஞ் சூத்திரம்போல முக்கூறதாகும். அவற்றுள்,

முதற்கூறு:—உணர்வன கரணமென்னின் ஒன்றையொன் றுணராவாதலான் ஆன்மா இவற்றின் வேறும்.

இரண்டாங் கூறு:—யானென தென்ப திணைதரும்.

மூன்றாங் கூறு:—செயல்கணுன்கு மறிந்தவையடக்கி யாக்கிப் புணரு முட் கருவியாக்கிப் புறக்கருவியினும் போக்கி வெவ்வேறணைதரும். (க.)

முதலதிகரணம்.

"உணர்வன கரணமென்னின் ஒன்றை ஒன்று உணரா வாகலான் ஆன்மா இவற்றின் வேறும்" என்பது.

அந்தக் கரணங்கள் கருவி எனவும், ஆன்மா இவற்றின் வேறெனவும், இவ்வான்மாவை இவ்வாறு அறியும் ஞானம் பசு ஞானமெனவும், சிவஞானம் அதனினும் வேறு எனவும் கூறு கின்றது.

கருவியா மனமும் புத்தி யகங்காரஞ் சித்த நான்கு
மருவியான் மாவே யென்ன வருந்தீப மெனத்தெ ரிந்தங்
கொருவியான்மாவி னுண்மை யுணர்ந்தவர் தமையுணர்ந்தோர்
தருமிது பசுஞா னம்பின் சிவஞானந் தனக்கு மேலாம்.

(கோ-டு.) மனமும், புத்தி, அகங்காரஞ், சித்த நான்கும் கருவியா மருவி எனவும், பின் பசு ஞானம் இது தரும் சிவஞானந் தனக்கு மேலாம் எனவுங் கூட்டுக.

(பொ-ரை.) மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்கின்ற நான்கும் ஒரு விடயத்தை அறிதற்குக் கருவியாக ஆன்மாவோடு ஒற்றித்து நிற்கும். நிற்குங்கால் அக் கருவியே கருத்தாவென் னும்படி விளங்கும். அவற்றைக் கருவியாகக்கொண்டு விடயங் களை ஆன்மா அறிவது எதுபோலவெனின், விளக்கைக் கருவி யாகக்கொண்டு பொருளை யறியும் கண் போலாம். ஆதலால், இவ்வந்தக்கரணங்கள் உயிர்க்குக் கருவியாய் வேறு நிற்பனவென் றறிந்து நீங்கி நின்று இக்கருவியைக் கொண்டறியும் கருத்தாவி னுண்மை யாதென்றாராய்ந்தோரே தாமாகிய ஆன்ம சொரூ

பத்தை இனிதுணர்ந்தோராவர். அவ்வாறு அறியும் அறிவும் பசு ஞானமேயாகும். ஆகலான் அப்பசுஞானம் வந்த பின்பு, அந்த ஞானம் நம்மிடத்தில் முன்னிகழாமையால் நாமாக அறிந்தோமென்றல் பொருந்தாது. அறிவிக்கும் பொருள் வேறிருந்து இப்பருவத்தில் அவ்வறிவினைத் தந்திருக்க வேண்டுமென உணர்ந்து அவ்வறிவினைத் தரும் பொருள் யாதெனத் தேறின், அங்ஙனந் தேறுவார்க்கு அப் பசு ஞானத்தின் மேலாகிய சிவஞானம் விளங்கும். (எ-று)

இச் செய்யுளில் ஆன்மாவென்றது, தமை யுணர்ந்தோர் என அடுத்து வருதலால் தம்மின் வேறன்று; தானாகிய கருத்தா என்னும் பொருள் குறித்து நின்றது.

இச் செய்யுளால் அந்தக் கரணங்கள் கருத்தாவல்ல என்பது, தம்மையும் தலைவனையும் அறியும் முறையில் வைத்துக் கூறப்பட்டது. அந்தக் கரணங்கள் கருவி என அறிதல் தம்மை யறியும் முறை. அங்ஙனம் அறியும் அறிவு பசு ஞானம் என அறிதல் தலைவனை அறியும் முறை யென அறிக. (உ.)

அந்தக் கரணங்களை உடனின்று செலுத்தும் அக்கரங்கள் இவை எனவும், அவ்வக்கரங்களைச் சேர்த்து நோக்கிற் பிரணவமாமெனவும், இப்பிரணவத்தின் உண்மை நால்வகை வாக்குக்களை உற்றுநோக்க வல்லார்க்கு விளங்குமெனவும் கூறுகின்றது.

அவ்வுடனுவ்வு மவ்வு மனம்புத்தி யகங்காரங்கள்
செவ்விய விந்து நாதஞ் சித்தமோ டுள்ள மாகு
மொவ்வெனு மெழுத்தாமைந்துமுணர்வுதித்தொடுங்குமாறும்
பவ்வமுந் திரையும்போலும் பார்க்கிலிப் பண்புந்தோன்றும்.

(கோ-டு.) அகங்காரம் புத்தி மனம் சித்தமோடு உள்ளங்கள் அவ்வுடன் உவ்வும் மவ்வும் செவ்விய விந்து நாதம் ஆகும்.

(பொ-ரை.) அகங்காரம், புத்தி, மனம், சித்தம், உள்ளமென்கின்ற ஐந்துஞ் சடமாதலால், அவை கருவியாக நின்று எவ்வாறு அறிதலைச் செய்யுமெனின், அக் கருவிகளுள், அகங்காரத்திற்கு அகாரமும், புத்திக்கு உகாரமும், மனத்திற்கு மகார

மும், சித்தத்திற்கு விந்துவும், உள்ளத்திற்கு நாதமும் என்கின்ற எழுத்துக்கள் உடனின்று செலுத்துவதால் அறிதலைச் செய்யும். அவ் வெழுத்துக்கள் ஐந்தும் பிரிப்பின்றி நோக்குங்கால் பிர ணவ ரூபமாம். இவ்வைந்தெழுத்தானும் உயிரின் கண் உணர்வு மாறி மாறித் தோன்று முறை எதுபோலவெனின்; கடலின் கண்ணே அலை புதிது புதிதாகத் தோன்றியும், ஒடுங்கியும் வரு மாறு போலாம். இவ்வைந்தெழுத்தானும் கருவிகள் தொழிற் படுவதான விகற்பத்தோடு கூடிய இயல்பு, நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகளைப் பற்றுக் கோடாகச் சார்ந்து தோன்றும் சூக் குமை முதலிய நால்வகை வாக்குக்களை உற்று நோக்குவார்க்கு இனிது விளங்கும். (எ-று.)

எழுத்துக்களுங் கருவியும் உடனிற்கும் ஒற்றுமைபற்றி எழுத்துக் களே கருவியாக உபசரித்தார். அந்தக்கரணங்களைப்பற்றி ஆராயும் இவ்விடத்தில் அந்தக் கரணங்களோடு ஒத்திருத்தல்பற்றிப் புருட தத்து வமும், அதனைச் செலுத்தும் அக்கரமும் உடன் கூறப்பட்டன. உள் ளம் என்பது புருடதத்துவமாந்தன்மை. புருட தத்துவத்தைச் செலுத் துதலாவது, புருட தத்துவமாந் தன்மையை நிகழ்வித்தல். ‡ "அகார வுகார மகங்காரம் புத்தி—மகாரம் மனம்" என முதனூலுட்கூறுதலானும், துகளறு போதத்தும் அவ்வாறே கூறுதலானும், ஈண்டு அவ்வுட னுவ்வு மவ்வு மனம் புத்தி யகங்காரங்கள் என்றது எதிர்நிரனிறையெனக் கொள்க. பிரணவமாகலின் உள்ளவாறே வெளிப்படக் கூறாது, ஒவ்வெனக் கடைக் குறைத்துக் குறுக்கல் விகாரமாக்கிச் கூறினர். ஐந்தும் என்றவிடத்து ஐந்தானும் என்னும் பொருள்பட ஆன் உருபு தொக்கு நின்றது. (க-)

அந்தக் கரணங்களைச் செலுத்தும் அக்கரங்களின் அதிதெய் வங்களிவை எனவும், இப்பதினைந்துங் கூடியவிடத்து ஆன்மா அறிதலைச் செய்யுமெனவும், யோகப்பயிற்சியுடையார்க்கு இப் பதினைந்தின் உண்மை விளங்கும் எனவும் கூறுகின்றது.

அயனரி யரனு மீசர் சதாசிவ மதிதெய் வங்க
ளுயவரு மவ்வோ டுவ்வு மவ்விந்து நாதங்கட்குப்
பயனுறு மஞ்சி லான்மாப் பரவிடி லசித்தாம் பார்க்கிற்
சயமுறு வளியி ரண்டுந் தவிர்த்துநிற் றூனுந் தோன்றும்.

---

‡ சிவஞானபோதம், நான்காஞ் சூத்திரம் சே--க.

(கோ-டு.) அவ்வோடு உவ்வும் மவ்விந்து நாதங்கட்கு அயன், அரி, அரனும், ஈசர், சதாசிவம் அதி தெய்வங்கள் உயவரும். அஞ்சில் ஆன்மா பரவிடில் பார்க்கின் பயன் உறும். (பரவாவிடில்) அசித்தாம்.

(போ-ரை.) அகார, உகார, மகார, விந்து, நாதங்களாகிய அவ்வெழுத்துக்களும் சடமாதலின், அவ்வெழுத்துக்களை முறையே பிரமாவும், விட்டுணுவும், உருத்திரனும், மகேசரும், சதாசிவரும் ஆகிய ஐவரும் அதி தெய்வங்களாய் நின்று செலுத்துவர். ஆகலான், இவ்வாறு காணமும், அக்காமும், அதி தெய்வமும் என்னும் இம் முத்திறத்துப் பதினைந்தோடும் ஆன்மாப் பொருந்திய விடத்துப் பார்க்குங்கால் அறிதற்றொழிலைச் செய்யும். இப் பதினைந்தோடும் பொருந்தாதவிடத்துச் சடம்போல அறிவின்றிக் கிடக்கும். வலி பொருந்திய பிராணன் அபானன் என்னும் இருவகை வாயுவையும் அடக்கிச் செய்யும் யோகிகளுக்கு அந்த யோகப் பயிற்சியில் இவ்வியல்பு இனிது விளங்கும். ()

அதி தெய்வம் அதிட்டித்து நிற்குந் தெய்வம். அதாவது, அக்கரங்களை வாயிலாகக் கொண்டு நிற்குந் தெய்வம்.

அசித்தோ டொக்கும் என்று கூறவேண்டுவதை அசித்தாம் என்றுபசரித்தார். பரவாவிடில் என்பதைச் சொல்லெச்சமாக வருவித்துப் பரவாவிடில் அசித்தாம் என்றுரைத்துக்கொள்க.

மேலைச் செய்யுளானும், இச் செய்யுளானும் அந்தக்காணங்கள் அக்காங்களாலும் அதி தெய்வங்களாலும் அதிட்டிக்கப்பட்டுக் கருவியாகும் என்னும் முறைமையும், அங்ஙனங் கருவியாதலை யறிதற்குபாயமுங் கூறப்பட்டன.

உபாயம்—யோகப் பயிற்சி.

அவ்வாறாயின், காணம், அக்காம், அதி தெய்வம் என்னும் இப் பதினைந்தன் கூட்டமே அறிவுக்கு முதலாதலமையும், இடையே உயிரென ஒன்று கோடலெற்றுக் கென்பாரை நோக்கி எழுந்தது வருஞ்செய்யுள்.(ச)

அப்பதினைந்தும் சுட்டியறியப்படுதலின் அவை ஆன்மாவின் வேறெனக் கூறுகின்றது.

ஆன்மாவின் வடிவுதானே யநேகார்த்தக் கூட்டமென்னிற்
பார்ப்பார்கட் கான்மா வின்றாய்ப் பலபொருளுண்மையாகுஞ்
சேர்ப்பாய பலவே யுண்மை யென்றிடிற் சென்றிவற்றை
யோர்ப்பான்வே றுணர் வோர்க்கெல்லா முணர்பொருள் வேறதாமே.

(கோ-டு.) அநேகார்த்தக்கூட்டம் ஆன்மாவின் வடிவுதானே எனின், பார்ப்பார்கட்கு இன்றாய்ப் பல பொருளுண்மையாகும். சேர்ப்பாய பலவே உண்மை ஆன்மா என்றிடில், சென்றிவற்றை ஓர்ப்பான் வேறு உணர் பொருள் வேறதாமே உணர்வோர்க்கெல்லாம்.

(பொ-ரை.) கரணம், அக்கரம், அதிதெய்வங்களாகிய இம் முத்திறத்தோடும் கூடியவிடத்தே ஆன்மா அறிதலைச் செய்யும் என்றதனால், அப் பலபொருட் கூட்டமே ஆன்ம சொரூபம் என்று சொல்லில், அதனை ஆராயுங்கால், கூட்டம் என்பதற்கு ஒரு பொருளின்றாய்ப் பல பொருளே உண்டென விளங்கும்; அதுபோல, ஆன்மா என்பது தனித்த ஒரு பொருளன்றாய்ப் பலபொருள் எனமுடியும். ஆதலால், அது பொருந்தாது. கூடுவனவாகிய அப்பதினைந்துமே உண்மையான ஆன்மாவெனின், அப் பதினைந்தும் சுட்டியறியப்படுவதனால் அறியும் ஆன்மா வேறு. அப்பதினைந்து வேறு. உணர்வோர்க்கெல்லாம் அறிவதும் அறியப்படுவதும் ஒன்றாகாவென்னும் இவ்வுண்மை ஒப்ப முடிந்தது. (எ-று.)

இச்செய்யுளால் அப்பதினைந்தும் உயிரின் வேறாதல் வலியுறுத்தப் பட்டது.

மேல் மூன்றாஞ் சூத்திரத்தில் சமுதாயமே ஆன்மா என்பாரை மறுத்தற்குக் கூறிய "உண்மை துரியாதீதம்" என்ற இறுதிக் கூற்றைச் சவுத்திராந்திகர் மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து வலியுறுக்குமாறும் இதனானே பெறப்பட்டது.

இவை நான்கு செய்யுளும், அந்தக்கரணங்கள் கருத்தாவல்லவாமாறும், அக்கரங்களும் அதிதெய்வங்களும் அதிட்டிக்கக் கருவியாமாறும், அப்பதினைந்தும் உயிரின் வேறாமாறும் உணர்த்தி முதற் கூற்றை வலியுறுத்தியவாறும். (ரு.)

முதலதிகாரணம் முடிந்தது.

இரண்டாம் அதிகரணம்.

"யானெனதென்ப திணைதரும்" என்பது.

கருவி முதலிய பதினைந்தோடும் கூடியவிடத்தன்றி அறிவு விளங்காமையால், ஆன்மாவானது இயல்பாகவே அறியும் பிரமமாகாது எனக் கூறுகின்றது.

அறிவிச்சைசெயல்களெல்லாமடைந்தனல்வெம்மையும்போற்
குறியுற்றங் கேகா நேக குணகுணி பாவமாகி
நெறியுற்று நிற்கு மென்னி னிகழ் புலன்கரணமெல்லாஞ்
செறிவுற்றங் கறிவு கொள்ள வேண்டுமோ சீவ னார்க்கே.

(கோ - டு.) எல்லாம் அங்குக் குறி உற்று அறிவு இச்சை செயல்கள் அடைந்து அனல் வெம்மையும்போல் ஏகா நேக குண குணி பாவமாகி நெறியுற்று நிற்கும் என்னின், சீவனார்க்கே நிகழ் புலன் கரணம் எல்லாம் செறிவுற்று அங்கு அறிவு கொள்ளவேண்டுமோ.

(பொ - ரை.) ஆன்மாக்களெல்லாம் கருவி முதலிய பதினைந்தின் வேறுமென மேற் சாதித்தபின்னர், பரிணாம வாதிகள் பிரமப்பொருளே வேறுபட்டுச் சீவனெனத்தோன்றி அறிவிச்சை செயல்களையடைந்து தீயும் சூடும் போலப் பிரமமுஞ் சீவனும் பேதாபேதமாகிய குண குணித்தன்மையுற்று, குணமாகிய சீவனும் குண குணித்தன்மையாய்ப் பல வேறு வகைப்பட்டு நிற்குமென்பர். அவ்வாறு, பிரமப்பொருளே சீவனாயின், அச்சீவனுக்கு நிகழ்கின்ற பொறிகரண முதலிய கூட்டுறவு இல்லாதபோது அறிவு நிகழாமைக்குக் காரணம் யாது? பிரமப் பொருளாயின், பொறிகரணங்களின் துணையின்றி யறியவேண்டும். அவற்றைத் துணையாகக்கொண்டு அறிவு நிகழ்தலின் சீவன் பிரமமாகமாட்டாது. (எ-று)

ஏகாநேகம் என்பது பேதாபேதம். பேதாபேதமாவது, தீயாகிய ஒரு பொருளில் செம்மையுஞ் சூடும் பிரிக்க முடியாமையால் அபேதம்; ஆயினும் செம்மைத்தன்மை வேறு சூட்டுத்தன்மை வேறாதலின் பேதம்; ஆதலின் இது பேதாபேதமாம். இவற்றுள், செம்மையாயிருப்பது குணி.

சூடு குணம். இதுபோல, பிரமமும் சீவனும் பேதாபேதமாய், பிரமம்குணியும், சீவன் குணமுமாய் நிற்குமென்பர். அது, பொருந்தாதென மறுத்தவாறும். குணி யென்பது குணத்தையுடைய பொருளைக் குறிக்கும். சீவனார் என்பதில் ஆர் விகுதி இழித்தற் குறிப்பின் வந்தது.

இச்செய்யுளால், மேல் மூன்றாஞ் சூத்திரத்தில் பிரமமே ஆன்மா என்பாரை மறுத்த ஆறாங்கூறாகிய "அஞ்சவத்தைப்படும்" என்பது வலியுறுத்தப்பட்டது மாயிற்று. (சு.)

அறிவிச்சை செயல்களாகிய குணம் ஆன்மாவுக்கின்றெனவும், ஆன்ம சந்நிதியில் கரணங்கட்கே உண்டெனவும் கூறுஞ் சாங்கியரை மறுத்து ஆன்மாவுக்குண்டெனக் கூறுகின்றது.

குணங்களை யின்றி யொன்றுங் குறியுடைத் தான்மா வென்னி
னிணங்கிடா விச்சா ஞானக் கிரியைக ளிவையு டற்கட்
பிணங்கிடுஞ் சந்நிதிக்க ணெனிற்பிணத் துறக்கத் தின்று
முணங்கிடுங் கரண மென்னிற் சந்நிதி யொழிந்த தன்றே.

(கோ - டு) குணங்களை இன்றி ஒன்றுங் குறிஉடைத்து ஆன்மா என்னின், உடற்கண் இச்சா ஞானக் கிரியைகளிவை இணங்கிடா. சந்நிதிக்கண் (கரணம்) பிணங்கிடும் எனின், பிணத்து உறக்கத்து இன்றும். கரணம் உணங்கிடும் என்னின், சந்நிதி ஒழிந்தது அன்றே.

(போ - ரை.) இனிச் சாங்கியர் அறிவிச்சை செயல்கள் குணமாகவும், ஆன்மா குணியாகவும் இருத்தலின்றி அறிவு மாத்திரையாகவே ஆன்மா இருக்குமென்பர். அவ்வாறாயின், உடலின்கண் அறிவு மட்டும் நிகழல் வேண்டும். அங்ஙனமின்றி அறிவிச்சை செயல்கள் மூன்றும் நிகழக்காண்டலின், ஆன்மா அறிவு மாத்திரம் என்றல் கூடாது. அதன்மேல் உயிரின் சந்நிதியில் கரணங்கள் தொழிற் படுதல்பற்றி உடலின்கண் அறிவிச்சை செயல்கள் நிகழுமாதலால், அந்நிகழ்ச்சிபற்றி ஆன்மாவுக்கு அறிவிச்சை செயல்கள் உண்டெனக் கூறவேண்டாமென்பர். அவ்வாறாயின், வியாபகமான சந்நிதியில் உடம்பு பிணமான காலத்தும் உறக்கத்தும் அறிவிச்சை செயல்கள் உயிரின்கண் நிகழ்தல்வேண்டும். அங்ஙனம் நிகழ்தலின்மையால் அதற்குக் காரணம் என்னை

யென்று வினவ, காணங்கள் ஒடுங்கினமையால் என்பர். காணம் ஒடுங்கியவிடத்தும் வியாபகமான உயிரின் சந்நிதிக்குக் கேடில்லை யாதலால், சந்நிதி மாத்திரையால் நிகழ்தலென்றது ஒழிந்தது. ஆதலான், ஆன்மாவின் குணமாகிய அறிவிச்சை செயல்களின் றொழிற்பாட்டால் காணங்கள் தொழிற்படுமன்றிச் சந்நிதிமாத்திரையால் காணங்கள் தாமேதொழிற் படாவாம். (எ-று.)

உறக்கத்து இன்றென்னும் ஒருமை இவை யென்னும் எழுவாயைக் கொண்டு முடியாது ஆதலின் இன்மைப் பண்பின்மேல் நின்றது. (எ)

காந்தத்தின்முன் இரும்பு தொழிற்படுதல் போல ஆன்மாவின்முன் காணம் தொழிற்படுமென்னுஞ் சாங்கியரை மறுத்து நினைத்தல் மறத்தல் முதலிய மாறுபட்ட தொழில்கள் காணத்தில் நிகழக் காண்டலின் இழுக்கப்படுதலொன்றே நிகழும் அவ்வுவமை பொருந்தாதெனக் கூறுகின்றது.

சந்நிதி குணம தாகுந் தானென்போ லென்னிற் காந்த
முன்னுரும் பென்று மீர்க்கு முறைமையுண் டகற்ற லின்று
முன்னித லொடுங்க லோட லிருத்தலே கிடத்த னிற்ற
லென்னுமித் தொழில்கண் மற்றுமி யற்றுவ தான்மாவென்னே.

(கோ - டு.) சந்நிதிதான் என்போலென்னின், காந்தமுன் இரும்புக் குணமதாகுமென்றாய். ஈர்க்கும் முறைமையுண்டு. அகற்றல் இன்றாம்.

(பொ - ரை.) சந்நிதி என்பது வியாபகமாய் நிற்கப்பெறுதல் என்று கொண்டு சந்நிதி மாத்திரையில் காணங்கள் தொழிற்படுமென்பதை மறுத்தது பொருந்தாது. சந்நிதியாவது எது போலவெனின், காந்தத்தின்முன் எதிர்ப்பட்ட இரும்பு தொழிற்படுதல்போல உயிரின்முன் எதிர்ப்பட்ட உடம்பு தொழிற்படுதற் கேதுவாகிய தொரு குண விசேடம் என்பர். அவ்வாறாயினும், ஒரு குணமுடைய காந்தம் இரும்பை இழுத்தலாகிய ஒரு தொழிலைச் செய்வதன்றி அகற்றலாகிய மாறுபட்ட தொழிலைச் செய்தலின்று. அதுபோல, ஆன்ம சந்நிதியில் காணங்கள் ஒரு தொழிலைச் செய்யாமல் நினைத்தல், மறத்தல், ஓடல், இருத்தல், கிடத்தல், நிற்றல் முதலிய மாறுபட்ட தொழில்களைச் செய்வ

தற்கு என்ன காரணம்? அக்காரணத்தை ஆராயுமிடத்து அத்தொழில்களைச் செய்வதற்கு ஏதுவாகிய அறிவு, இச்சை, செயல்கள் ஆன்மாவினிடத்துக் குணமாக இருந்து அக்குணங்கள் தொழிற்படுதலால் உடம்பு தொழிற்பட்டதேயன்றி ஆன்மா சும்மாவிருக்க அதன் சந்நிதியில் உடம்பு தொழிற்பட்டதென்றல் பொருந்தாதென்பது நன்கு விளங்கும். (எ.று,) (அ.)

ஆன்மா உருவப்பொருள் என்னும் பவுராணிகரை மறுத்துரைக்கின்றது.

உருவுயி ரென்னி னிந்த வுடலினுட் காண வேண்டும்
வருவது பரிணா மத்தா யநித்தமாம் பூதமாகும்
கருவினு னுழையு மாறுங் காட்டிட வேண்டுங் கண்ணின்
மருவிடா தென்னி னுன்றன் வாயினா லுருவன் றென்னே.

(**கோ - ட.**) உயிர் உருவென்னின்.

(**பொ - ரை.**) இவ்வாறு கூறப்பட்ட ஆன்மா அருவமோ, உருவமோ, அருவுருவமோ என்னும் சந்தேகத்தின்கண், பவுராணிகர் ஆன்மா உருவமே என்பர். அவ்வாறாயின், இவ்வுடம்பினுள்ளாகவே வேறொரு வடிவங் காணவேண்டும். அன்றியும் காணப்படும் உருவப்பொருள், மாறுபட்டு அழிவினை யடைவதாகிய காணப்படும் பூதத்தோ டொப்பாகும். அதுவன்றியும் உருவமாயிருக்கின்ற உயிர் மாதாவின் கருப்பத்தினுள் நுழைவது எவ்வாறென்றும் தெரிவிக்கவேண்டும். ஆதலால், ஆன்மா உருவப்பொருளென்று கூறல் பொருந்தாது என்று மறுத்தவிடத்துக் கண்ணினாற் காணப்படாத உருவையுடையது ஆன்மாவென மீண்டுங் கூறுவர். அவ்வாறாயின் உருவத்தை யறிவது கண்ணாதலால், அக்கண்ணிற் கெட்டாததென்ற உன் சொல்லாலேயே உருவமன்று என நீயே ஒப்புக்கொண்டாய் என்பது இனிது தெளிக. (எ-று.) (கூ)

ஆன்மா அருவமாகிய சூக்கும உருவமென்பாரையும் அதிசூக்கும உருவமென்பாரையும் மறுத்துரைக்கின்றது.

சூக்கும வுருவ தென்னிற் றூலகா ரண்ம தாகு
மாக்கிய மனாதி தன்மாத் திரைவடி வசேத னம்பி
னீக்கிய சூக்கு மத்தே நிற்பதோ ருருவுண் டென்னி
னாக்கிடு முருவ மெல்லா மசித்துமா யநித்த மாமே.

(கோ - டு.) சூக்கும உருவதென்னின், தூலகாரணமதாகும் அசேதனம் மனாதி தன் மாத்திரை ஆக்கியவடிவு. பின் நீக்கிய சூக்குமத்தே ஓர் உரு நிற்பது உண்டென்னின்.

(போ - ரை.) உயிர் உருவமன்று என மறுத்தவிடத்து அம்மறுப்பு தூல உருவத்தையே குறிக்குமெனக் கொண்டு அருவமாகிய சூக்கும உருவே உயிர் என்பர். அச்சூக்கும வடிவம் தூல உருவத்தைத் தோற்றுவிக்கின்ற சடமாகிய மனாதி காணங்கள் தன் மாத்திரைகளால் ஆக்கப்பட்ட புரியட்டக உடம்பாம். ஆதலால், அதுவும் ஆன்மாவன்று. அதன்மேல் அப்புரியட்டக தேகத்துள் அதிசூக்கும உருவாய் நிற்பதே உயிர் என்பர். அவ்வாறு நிற்பது கலை முதலிய தத்துவங்களைத் தோற்றுவிக்கின்ற அசுத்த மாயையின் ஏகதேச பாகமாகிய பர சரீரமாம். ஆதலால், அதுவும் உயிரன்று. இச்சூக்கும சரீரம், அதிசூக்கும சரீரம் ஆகிய அனைத்தும் அறிவில்லாததும், அழி வெய்தக்கூடியதும் ஆதலால் அவ்வியல்புகளில்லாத உயிர் அவ்வியல்புகளையுடைய உருவப்பொருளென்றல் எவ்வாறு பொருந்தும்? (எ-று.) (கo.)

ஆன்மா அருவுருவம் என்னுங் கவுளரை மறுத்துரைக்கின்றது.

அருவுரு வென்னி லான்மா வருவுரு வாவ தின்று
முருவரு வாகா தாகு மொருபொருட் கிரண்டு தன்மை
வருவது மில்லை காட்ட வன்னிபோன் மருவு மென்னி
னுருவமுங் காணவேண்டு முண்மையு மொழிந்து போமே.

(கோ - டு.) அருவுரு ஆன்மா என்னில், அருவுருவாவது இன்றும். உரு அருவாகாதாகும். இரண்டு தன்மை ஒரு பொருட்கு வருவதும் இல்லை. காட்டவன்னிபோல் மருவுமென்னின்.

(போ - ரை.) மேல் ஆன்மா தூல உருவுமன்று, சூக்கும வுருவுமன்று என மறுத்துவிட்டத்து கவுளர் என்னும் ஒரு சாரார் ஆன்மாவானது அருவுருவப் பொருள் என்பர். அவ்வாறாயின் அருவானது உருவாவதில்லை; உருவானது அருவாவதில்லை. எது போலவெனின், அருவான ஆகாயம் உருவாகாததுபோலும், உரு வான மண் அருவாகாததுபோலுமாம். ஒன்று பிறிதொன்றாகா தென்பது ஒக்கும். ஒரு பொருளினிடத்தில் இரண்டு தன்மை கள் இருக்குமென்றல் என் கூடாதெனின், மாறுபட்ட இரண்டு தன்மைகள் ஒரு பொருளினிடத்தில் என்றும் இராவாம் என்று கூற, காட்டத்தன்மை, அக்கினித்தன்மை ஆகிய இரண்டு மாறு பட்ட தன்மைகள் காட்டத்தினிடத்தில் காணப்படுகின்றபடி யால், மாறுபட்ட இரண்டு தன்மைகள் ஒரு பொருளினிடத்து இராது என்றல் பொருந்தாதென்பர். இவ்வுவமையை ஆராயு மிடத்துக் காட்டமும் வன்னியும் இருபொருள்களாய்க் காட்டந் தோன்றியபொழுது அக்கினி தோன்றுவதில்லை. அக்கினி தோன் றியபொழுது காட்டங்கெட்டொழிதலோடு அக்கினியும் கெட் டொழியும். இவ்வாறு ஒன்று தோன்றுங்கால் பிறிதொன்று தோன்றாமையால் அவ்விரண்டுந் தம்முள் வேறாகி ஒவ்வொன்றுங் காணப்பட்டு உருவாகி அழிவினை யெய்து மாதலின், இவ்விடத்து உருவமில்லாதாய், அழியப்படாததாயிருக்கின்ற ஒரு பொரு ளாகிய ஆன்மாவிற்கு உவமையாதல் செல்லாது. (எ-று.)

கவுளர்—சத்தியை வழிபடுபவர்.

இறைவனுக்கு அருவுருவத் திருமேனி யுண்டென்று நூல்களிற் கூறப்படுகின்றதே? அருவமும், உருவமுமாகிய மாறுபட்ட இரண்டு தன் மைகள் ஒன்றாயிருத்தல் எவ்வாறு கூடுமெனின், தன்னுண்மையைநோக்கி அருவமென்றும், உருவப்பொருள்களோடு கலந்து அதுவாய் நிற்றல்பற்றி உருவமென்றுங் கூறினதேயன்றி அருவும் உருவும் ஆகிய இரண்டன் கூட்டம் அருவருவமெனக் கூறியதன்று. (கக)

மீளவும் சந்திரன் போல் ஆன்மா அருவுருவம் என்பாரை மறுத்துரைக்கின்றது.

சந்திரன் வடிவுபோலத் தானரு வுருவமென்னின்
வந்துநங் கண்ணிற் றோன்றும் வடிவுள தாமு யிர்க்கு
மிந்தவூ னுருவந் தானு யெழுவது முயிரே யென்னிற்
பந்தமா யசித்தா யான்மாப் பவுதிக மாகு மன்றே.

(கோ-டு.) சந்திரன் வடிவு போல உயிர்க்கும் தான் அருவுருவம் என்னின், வந்து நம் கண்ணில் தோன்றும் வடிவு உளதாம். உயிரும் இந்த ஊன் உருவந் தானுய் எழுவதே யென்னின், ஆன்மா அசித்தாய்ப் பவுதிகமாய்ப் பந்தமாகும் அன்றே.

(போ-ரை.) சந்திரன் அமாவாசை தினத்தில் ஒரு கலையுடன் அருவமாய் நின்று பின் ஒவ்வொருகலையாய் வெளிப்பட்டு உருவமாய்த் தோன்றுவது போல, ஆன்மாவும் அருவுருவமாகு மென்று மீண்டுங் கூறுவர். அவ்வாறுயின், சந்திரனுடைய உருவ நிலை நம் கண்ணிற்கு வெளிப்பட்டுக் காணப்படுதல் போல, ஆன்மாவின் உருவநிலையும் அவ்வாறு காணப்படல் வேண்டுமே எனின், ஆன்மாவும் அருவமாய் நின்றே கருவுட் பதிந்து இவ்வுடம்புருவமாய் வளர்ந்து காணப்படுமாதலால், ஆன்மாவின் வடிவம் அருவுருவமென்றல் பொருந்துமென்பர். அவ்வாறுயின், சித்தாய் அதாவது அறிவுடையதாய், அழியாததாய், பந்தத்திற் பட்டு நீங்குவதே ஆன்மாவென்றதனேடு முரணுக அறிவில்லாததாய், அழிவதாகிய பூத காரியமாய், பந்தமாயுள்ள உடம்பு ஆன்மாவின் வடிவமென்றல் எவ்வாறு பொருந்தும்? (எ-று.) ()

ஆகாசம்போல் ஆன்மா அருவமாம் என்னும் பாதஞ்சலரை மறுத்துரைக்கின்றது,

அருவவி காரி யான்மா வாகாயம் போல வென்னி
னுருவினைக் கட்டி யாட்டி யோட்டிமீட் டுலாவப் பண்ணி
மருவிநிற் பித்தி ருத்திக் கிடத்திமண் புரட்டி மற்றும்
பெருவிகா ரங்க ளெல்லாந் தருவதென் பேசி டாயே.

(கோ - டு.) ஆன்மா ஆகாயம்போல அரு அவிகாரி என்னின்.

(போ - ரை.) இனி, பாதஞ்சலரென்னும் ஒரு சாரார் ஆன்மாவானது ஆகாயம்போல் அருவாய் அவிகாரியாய் நிற்கும்

என்பர். மேல் அருவமென வாதித்தது சூக்கும வடிவையும், அதிசூக்கும வடிவையும் ஆதலின், இவ்விடத்து அருவமென்றது அதனின் வேறுய் வடிவமில்லாமையைக் குறித்ததாம். ஆன்மா ஆகாயம்போல் அருவமாயின் உடலோடுகூடி உடலை ஆட்டியும் அவ்வுடலை நிற்கும்படி செய்தல், நடக்கும்படி செய்தல், மண்ணிற் புரழும்படி செய்தல் முதலிய இப்பெரிய விகாரங்களெல்லாம் செய்தல் எவ்வாறுகூடும் சொல்வாயாக. ஆகாயம் அருவாயும், சடமாதலால் விகாரமில்லாமை கூடும். ஆன்மா அருவாயும், அறிவுடைப் பொருளாதலால் விகாரமில்லாமை கூடாது. ஆதலால், ஆகாயம்போல் அருவமென்றல் பொருந்தாது. (எ - று.)

அறிவுடைப் பொருளாயிருக்கின்ற இறைவனை விகாரமில்லாதவனென்று கூறுங் கருத்தென்னை? எனின், விகாரமில்லாதவனென்பது ஒன்றுஞ் செய்யாதவனென்பதன்று. எல்லாஞ் செய்தும் பற்றில்லாதவனென்பதாம். ஆதலால், முரணின்மை யறிக. (கரு.)

ஆன்மா அசித்தென்பாரையும், சித்தசித் தென்பாரையும் சுத்த சித்தென்பாரையும் மறுத்துரைக்கின்றது.

அசித்தெனி னுணரா தான்மா வசித்துச்சித் தாகு மென்னி
னசித்துச்சித் தாகா தாகுஞ் சித்தசித் தாவதில்லை
யசித்தொரு புறமா யொன்றிற் சித்தொரு புறமாய் நில்லா
தசித்துருச் சித்தே யென்னி னசித்தடைந் தறிவதின்றும்.

(**கோ - டு.**) ஆன்மா உணராத அசித்தெனின், அசித்துச் சித்தாகும் என்னின், சித்து அசித்தாவதில்லை. அசித்துச் சித்தாகாதாகும். ஒன்றில் அசித்து ஒருபுறமாய் சித்து ஒருபுறமாய்நில்லாது. அசித்து உருச் சித்தே என்னின், அசித்து அடைந்து அறிவது இன்றும்.

(**போ - ரை.**) இனி, வைசேடிகர் என்னும் ஒரு சாரார் ஆன்மா அறிவில்லாத சடப்பொருள் என்பர். சடப்பொருளாயின் அறியமாட்டாது. அறியுந்தன்மை காணப்படுதலால், ஆன்மா சடமாகாதென்று கூற ஆன்மா சடமென்றுலும் பின் மனத்தோடுகூடி அறியுமென்பர். அது பொருந்தாது. எவ்வாறெனின், அறிவுடையது அறியாமையுடையதாகாது. அறியா

மையுடையது அறிவுடையதாகாது என்றுகூற, அதன்மேல் சைவரிலொரு சாரார் ஆன்மா அறிவாயும், அறிவின்மையாயும் அதாவது சித்த சித்தாயிருக்குமென்பர். ஒரு பொருளில் மாறுபட்ட இரண்டு தன்மை இருத்தல் கூடாமையினால் அதுவும் பொருந்தாது என்றுகூற, அதன்மேல் பட்டாசாரியரென்னும் ஒரு சாரார் கருவிகளைப் பொருந்தாத சித்தே ஆன்மாவென்பர். அவ்வாறாயின், கருவிகளின் துணையின்றியே அறியவேண்டும். கருவிகளின் துணையையின்றி அறிதல்கூடாமையால் அதுவும் பொருந்தாது. (எ - று.)

அசித்துறாச் சித்தே என்றவிடத்து உறாத என்னும் பெயரெச்ச அகர ஈறும், தகர எழுத்துப் பெயரும் தொக்கு நின்றன.

சித்த சித்தென மாறுபட்ட இரண்டு தன்மைகள் ஆன்மாவினிடத்திலிருக்குமென்றல் பொருந்தாதாயின், பின்னர் ஏழாஞ் சூத்திரத்தில் ஆன்மா "நித்தனாய் சத சத்தாகி" என்று மாறுபட்ட இரண்டு தன்மைகளையுடையது என்றதனோடுமுரணாதோவெனின், முரணாது. எவ்வாறெனின், சத்தும் அசத்துமாகிய இரண்டு தன்மைகள் ஒன்றாயிருக்குமென்று கூறவில்லை. சத்தோடு கூடிச் சத்தாயும், அசத்தோடு கூடி அசத்தாயும் நிற்றற்கு உரிமையுடையதெனக்கூறியதாம். ஆதலால்முரணின்மையறிக.(கச)

ஆன்மா பரமாணு வென்பாரை மறுத்துரைக்கின்றது.

உயிரினை யணுவ தென்னி னுடல் பல துவார மோடும்
பயில்வுறக் கட்டுணா து பாரமுந் தரித்துச் செல்லா
தயர்வுறு மசித்தாய்ப் பூத வணுக்களி னொன்ற தாகு
மியல்புறு மவய வத்தா லணுவுரு விறக்கு மன்றே.

(கோ - ரு.) உடல் உயிரினை அணுவதென்னின், அணு உருப் பல துவாரமோடும். பயில்வு உறக்கட்டுணாது. பாரமுந் தரித்துச் செல்லாது. பூத அணுக்களின் ஒன்றதாகும் அயர்வுறும் அசித்தாய் இயல்பு உறும்அவயவத்தால் இறக்கும் அன்றே.

(போ - ரை.) இனி, பாஞ்ச ராத்திரிகள் ஆன்மா அணுமாத்திரமென்று வேதங்களிற் கூறுவதால், இவ்வுடம்பகத்து ஆன்மாவானது பரமாணு வளவாக நிற்கும் என்பர். அணுவடிவாகில் இத்தேகத்துள்ளிருக்கும் பல துவாரங்களில் ஒரு துவார

த்தின் வழியாய் ஓடிப்போய்விடும். அன்றியும் அவ்வுடம்பு பிறிதொரு பொருளோடு பயில்வதற்கும், கட்டுண்டற்கும் வியாபித்திருந்தாலன்றி முடியாவாம். அணுவாய் ஒரு பக்கத்திலிருந்தால் மேற் கூறிய செயல் கூடாது. பெரும் பாரங்களை உடம்பு தாங்கிச் செல்லுதற்கும் அணுவாயிருந்தால் உடன்படாது. அம்மட்டோ? பூத பரமாணுக்களோடு ஒன்ருய், அழிவெய்துஞ் சடமாய், வேறுவேருய் நிற்கும் இயல்பினைப் பொருந்திய பகுப்பினையுடையதெனப்பட்டு, அழிவினைப்பொருந்தும். ஆதலால், ஆன்மா அணுவென்றல் பொருந்தாது. (எ-று.)

வேதங்களில் ஆன்மாவை அணுவென்றதனோடு இவ்விடத்துக் கூறியது முரணதோவெனின், முரணது. எவ்வாறெனின், ஆன்மா அந்தக்கரணத்துடன்கூடி இருதயத்தில் நின்றுகொண்டு கண் முதலியபொறிகளின் வழியாய் விடயங்களைக் கிரகிக்கும் பொழுது கிரகிக்கின்ற ஆன்மா அந்த அவத்தையில் மனம், இந்திரியம், விடயம் என்பவைகளில் அதி சூக்குமமாய் நிற்றல்பற்றி அணுவெனக் கூறியதாம். இவ்வாறன்றி ஆன்மாவின் வடிவம் அணுவளவென்பதன்று. ஆதலால், முரணின்மையறிக. ஆன்மாவின் வடிவம் ஞானமே. இது, முதற் சூத்திரத்து முதற் செய்யுளில் "அநாதிமுத்த சித்துருவென்னும் இனம்பற்றி அடையடுத்தலான் அநாதி பெத்த சித்துருவும் உண்டென்பது பற்றி அறியப்படும். (௫௫).

மீளவும் ஆன்மா உடம்பகத்து ஏகதேசமாய் நிற்குமென்பாரை மறுத்துரைக்கின்றது.

உடலினி னேகதேசி யுயிரெனி னுருவாய் மாயும்
படர்வுறு மறிவின் றெங்குஞ் சுடரொளிப் பண்ப தென்னிற்
சுடர்தொடிற் சுடுவதெங்குந் தொட்டிட மறிவுண் டாகு
மடர்புல னிடத்து மொக்க வறிவெழ வேண்டு மன்றே.

(கோ - டு) உயிர் உடலின் ஏகதேசி (சுடர் ஒளிப்பண்பது) எனின், உருவாய் மாயும். எங்கும் படர்வுறும் அறிவு இன்று. சுடர் ஒளிப்பண்பது என்னின், சுடர்தொடின் சுடுவது. தொட்ட இடம் எங்கும் அறிவுண்டாகும். அறிவு அடர்புல னிடத்தும் ஒக்க எழவேண்டும் அன்றே.

(போ - ரை.) இனி, மிருதி நூலார் புல்லின் நுனியிலிருக்கும் நீர்த்துளிபோல, ஆன்மாவானது உடம்பகத்து இத

யத்தானத்தில் மிகச் சிறிதாய் நிற்ப அவ்வான்மாவின் அறிவு எவ்விடத்தும் வியாபிக்கும். எதுபோலவெனின், ஒரு வீட்டினுள் ஓரிடத்தில் ஒரு விளக்கிருப்ப அவ்விளக்கின் ஒளி வீடு முழுதும் பிரகாசித்தல் போல என்பர். அவ்வாறு ஓரிடத்திருப்பதாயின், உருவமுடையதெனப்பட்டு, மேல் உருவ மென்றதற் கோதிய குற்ற மனைத்துமுண்டாம். அன்றியும், குணமானது அக்குணத்தையுடைய பொருளளவில் நிற்பதன்றி, அப்பொருளின்வேறாய் வியாபித்துநிற்றல் செல்லாமையால்ஓரிடத்திருக்கும் ஆன்மா எங்கும் வியாபித்தறியுமென்றல் கூடாது. விளக்கின் ஒளி அவ்விளக்கின் சூக்கும வடிவேயன்றி விளக்கின் குணமன்று. குணம் சூடேயாம். ஆதலால், விளக்குவமை இவ்விடத்துப் பொருந்தாது. பொருந்துமெனக் கொள்ளினும், விளக்கின் சுடரைத் தொட்டாற் சுடுவதுபோல், ஆன்மாவும் இருந்த விடத்தைத் தொட்டா லறிவதேயன்றி உடம்பில் எந்த இடத்தைத் தொட்டாலும் அறிதல் கூடாது. அவ்வாறன்றித் தொட்ட இடமெல்லாம் உணரக் காண்கின்றோம். அதுவன்றியும், அவ்வுவமையைக் கொள்ளுமிடத்து விளக்கு ஓரிடத்திருந்து ஏககாலத்தில் மற்றுள்ள இடங்களை விளக்குதல் போல, ஆன்ம அறிவும் ஐம்பொறி வழியாக ஐந்து விடயங்களையும் ஏககாலத்தில் அறிய வேண்டும். அவ்வாறில்லாமையால் விளக்குவமை எவ்வாற்றானும் பொருந்ாது. (எ-று.)

இம்மறுப்பு உயிரினை அணுவென்பார்க்கும் ஒக்கும். (௧௬)

ஆன்மாவானது உடம்பளவாக நிறைந்து நிற்கு மென்பாரை மறுத்துரைக்கின்றது.

உருவினி னிறைந்து நின்றங் குணர்ந்திடு முயிரதென்னின்
மருவிடா துறக்கம் வாயி லறிவொக்க வழங்கவேண்டும்
பெருகிடுஞ் சுருங்குங் போதம் பேருடற் சிற்று டற்கண்
வருமுடற் குறைக்க வொக்கக் குறைந்துபின் மாயு மன்றே.

(கோ - டு.) உறக்கம் மருவிடாது வாயில் ஒக்க அறிவு வழங்கவேண்டும். பேருடற் சிற்றுடற்கண் பெருகிடுஞ் சுருங்கும் போதம்.

(போ - ரை) இனி, சமணர் உடம்பளவாக உயிர் நிறைந்து நின்று அவ்வுடம்பால் விடயங்களை அறியும் என்பர். அவ்வாறாயின், தூலவுடம்பு நீங்கிய சொப்பனவத்தையும், தூல சூக்கும வுடம்பு இரண்டும் நீங்கிய சுழுத்தியவத்தையும் பொருந்தாதிருக்கவேண்டும். அன்றியும், எல்லா வுடம்போடுங்கூடி நிற்கின்ற சாக்கிராவத்தையினும் ஐம்பொறியினும் ஏககாலத்தில் அறிவுநிகழ்தல் வேண்டும். அதுவுமன்றி பெரிய தேகத்திற்குப் பெரிய அறிவும், சிறிய தேகத்திற்குச் சிறிய அறிவுமாதல்வேண்டும். உடம்பில் ஓர் அங்கங் குறைய உயிரும் ஒரு பாகங் குறைந்து உடம்பு அழியுங்கால் உயிரும் அழியவேண்டும். ஆதலால், அவர் மதமும் பொருந்தாது. (எ-று.) (௧எ)

முதல்வன்போல ஆன்மாவும் வியாபகப் பொருளா மென்பாரை மறுத்துரைக்கின்றது.

எங்குந்தான் வியாபி யாய்நின் றுணருமிவ் வான்மாவென்னிற்
றங்கிடு மவத்தை போக்கு வரவுகள் சாற்றல் வேண்டும்
பங்கமார் புலனொன் றொன்றாய்ப் பார்த்திடல் பகரல் வேண்டு
மிங்கெலா மொழிந்தா னிற்ப தெங்ஙன மியம்பல்வேண்டும்.

(கோ - டு.) அவத்தை தங்கிடும் எனக்கூட்டுக.

(போ - ரை.) இனி, அயிக்கியவாதிகள் முதல்வன்போல் எவ்விடத்தும் வியாபியாய் நின்று அறிவது உயிர் என்பர். அவ்வாறாயின், சாக்கிரம் முதலிய ஒவ்வோரவத்தைகளில் தங்குதலும், பிறப்பு இறப்பாகிய வரவு போக்குகளைப் பொருந்துதலும், ஐம்பொறி வழியாய் ஐந்துவிடயங்களையும் ஒன்றொன்றாயறிவதின்றி ஏககாலத்தில் எல்லாவிடயங்களையும் அறியாமையுங் கூடாவாம். இவ்வாறு அநுபவத்தில் காணப்படுதலால் முதல்வன் போல வியாபகமென்றல் பொருந்தாது. அன்றியும், எல்லாமாய் வியாபித்து நிற்கும் முதல்வன் அவ்வாறு நிற்றலை யொழித்து உடம்பினுள் ஏகதேசமாய் நிற்றல் எவ்வாறு கூடும்? (எ - று.)

ஒழிந்தான் என்பது ஒழிந்தானாகி என்னும் பொருள் குறித்தலின் முற்றெச்சம். எலாம் என்றவிடத்து ஆக்கச்சொல் வருவித்து எல்லாமாய் என்றுரைக்க. எல்லாம் என்றது வியாபகமுணர நின்றது.

உருவப் பொருளனைத்திலுங் கூடுதலே வியாபகம் எனவும், அவை யனைத்தினையும் அறிதலே முற்றுணர்வு எனவும் கொள்வதே எங்கணும் வியாபி என்பதன் பொருள் என்பாரை மறுத்தற் பொருட்டு, ஒழிந்தா னிற்ப தெங்ஙனமென்பதை, ஒழிந்தால் நிற்பதெங்ஙனமெனப்பாடமோதி, சங்கார காலத்தில் எல்லாப் பொருளும் அழிந்தபொழுது உயிரும் அழிந்து போகவேண்டும். அழியுமாயின் பின்னர்ப் புனருற்பவமின்றாம். அவ்வா றின்றிச் சங்காரத்தின் பின் புனருற்பவமுண்டென்று கேட்கப்படுதலின், எல்லாம் ஒழிந்த சங்காரத்தும் உயிரிருக்கவேண்டும். இருந்தும் ஏனைய பொருளில்லை யாதலால், உருவப்பொருளைக் கூடுதல் வியாபகமென்றதும் பொருந்தாது என்றுரைப்பினுமமையும். (கஅ.)

மாயா காரியத்தால் ஆன்மாவினறிவு ஏகதேசப் படுவதாயிற் றென்பாரை மறுத்துரைக்கின்றது.

சுத்தமா மான்ம சித்து தத் துகளுடன் மறைத்த தென்னின்
வைத்துரு துடற்கண் வாயில் கரணங்கள் வழியான் ஞான
மொத்துறு மலமற் றூலு முறுமலம் வீடு மின்றாம்
பெத்தமு மடையான் முத்த னாய்ப்பிர காச னாமே.

(கோ - டு.) உடற்கண் வாயில் கரணங்கள் வழியால் ஞானம் வைத் துரு து எனவும் மலம் உறும் எனவுங் கூட்டுக.

(போ - ரை.) மீண்டும் ஆன்மா முதல்வன்போல் எங்க ணும் வியாபகமாய் நின்று அறியுந் தன்மையுடையதாயினும், சுத்தமாகிய அவ்வான்மாவி னறிவைக் குற்றம் பொருந்திய மாயா காரியமாகிய தநு கரணாதிகள் தடைசெய்தலால் சாக்கிர முதலிய அவத்தை யுறுதலும், பிறப்பு இறப்புக்களிற் போக்கு வரவு உறு தலும், ஐம்புலன்களை ஒவ்வொன்றா யறிதலும், இவைபோல்வன பிறவும் பொருந்தி ஏகதேசப்படுவதாயிற் றென்பர். அவ்வாறா யின், மாயா காரியமாகிய இந்திரிய அந்தக்கரணங்களால் ஆன்மா வுக்கு அறிவு விளங்குவதாயிருக்கவும், அதனோடு மாறாக அறி வைத் தடை செய்யுமென்றது பொருந்தாது. அன்றியும், சுத்த மாயுள்ள ஆன்மா மாயா காரியத்தால் தடைப்பட்டது என்னின், மேல் மாயாகாரியத்தை விடுபட்ட முத்திக்காலத்தும், முன் சுத்தமாயிருந்து பற்றியதுபோல் பின்னும் பற்றுமெனப்பட்டு

முத்தி என்பது இன்றாய் முடியும். வீடு பெற்றபின் மாயா காரியத்தைப் பற்றுதெனின் முன்னரும் பற்றுதிருக்க வேண்டும். முன்னர்ச் சுத்தமாயிருந்து பற்றியதெனின், பின்னரும் சுத்த மெய்தினும் பற்றுமென்பதனை ஒத்துக்கொள்ள வேண்டுமாதலால் மாயா காரியத்தால் ஆன்மாவின் அறிவு தடைப்பட்டதென்று கூறுதல் பொருந்தாது. (எ - று.)

"அறிவிச்சை செயல்கள்" என்னுஞ் செய்யுள் முதல் இத்துணையும் உயிருண்மைகொண்டு ஆணவமலத்துண்மை கொள்ளாத சமயிகள் தத்த மதத்திற்கேற்பக் கூறும் உயிரிலக்கணங்களும் அவை பொருந்தாமையுங் காட்டப்பட்டன. இன்னும் அவ்வமதத்தார் வேறுபடக் கூறும் உயிரிலக்கணங்க ளெல்லாம் இங்ஙனங்கூறியவற்றுள் வைத்துக் கண்டுகொள்க. (கக)

சித்தாந்த நெறிப்படி ஆன்ம இலக்கணம் இதுவெனக் கூறுகின்றது.

அசித்தரு வியாப கம்போல் வியாபக மருவ மின்றாய்
வசித்திட வரும்வி யாபி யெனும்வழக் குடைய னாகி
நசித்திடா ஞானச் செய்தி யநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவ முடைய னாகிப் பசுவென நிற்கு மான்மா.

(கோ - டு.) ஆன்மா அசித்து அரு வியாபகம் போல் வியாபகம் அருவம் இன்றாய் எனக் கூட்டுக.

(பொ - ரை.) இதுகாறும் ஆணவமலம் உண்டென்று ஒப்புக் கொள்ளாது ஆன்ம இலக்கணங் கூறிய சமயிகளை மறுத்த விடத்து ஆன்ம இலக்கணந்தான் யாதோ என வினவ, சித்தாந்த நெறிப்படி ஆன்மாவானது, எவ்வாற்றானும் அசித்தாதலில்லாத வியாபகப் பொருளாகிய இறைவன்போல பூரண வியாபகமும், அதிசூக்கும சித்தாதலும் இன்றிச் சார்ந்த பொருளினிடத்து அப்பொருளளவாக வசிப்புண்டு வியாபித்திருக்கும் ஏகதேச வியாபியாய் இச்சா ஞானக் கிரியை யென்னுங் குணங்களையுடையதாம். உடையதாயினும் அவ்விச்சா ஞானக் கிரியைகள், அனாதியேபற்றி நிற்கும் ஆணவ மலத்தினால் தொழிற்படாமல் மறைப்புண்டுகிடக்கும். அதனால் தூல சித்தாய் நிற்கும். இவ்வாறு கட்டுப்பட்டு நிற்குங்கால் பசுவெனப்படும். (எ - று.)

அசித்தரு என்றவிடத்து அருமை இன்மை குறித்து நின்றது * "உறற்பால—தீண்டா விடுத லரிது" என்றாற்போல. அருவம் என்றது § "இல்லா—வருவாகிநின்றானை" என்றாற்போல, அதிசூக்குமமாதலை யுணர்த்தி, ஆகுபெயராய் அதிசூக்கும சித்தாதலை யுணர்த்தி நின்றது. தூலசித்து—பசு. சூக்குமசித்து—ஆன்மா. அதிசூக்குமசித்து—சிவம். தூலசித்து என்பது பிறிதொன்றின் உபகாரத்தால் அறிவது. அதிசூக்குமசித்து என்பது தானே அறிவது. தூலசித்துக்குக் கண்ணொளியும், அதிசூக்கும சித்துக்குக் சூரியனொளியும் உவமைகளாம். உயிரின் பெத்த நிலை பசுவும், முத்திநிலை ஆன்மாவுமாம். முத்தியில் அருளின் உபகாரமிருப்பினும், வேறு நில்லாமையால் உயிர் சூக்குமமாயிற்று. இது உயிருணர்வோடுகூடிய கண்ணொளி போலாம்.

இச்செய்யுளால் உயிருக்கு அநாதி நிலையாகிய மலத்தோடு கூடிப் பசுத்துவ மாத்திரையாயிருக்கும் தன்னுண்மை கூறப்பட்டது. (உ௦.)

காரணசரீரம், கஞ்சுகசரீரம், குணசரீரம் என்னும் மூன்றனையும் ஆன்மாப் பொருந்தும் முறைமை கூறுகின்றது.

மாயையின் வயிற்றுண் மன்னி வருஞ்செயன் ஞான மிச்சை
யேயுமக் கலாதி மூன்றா லேகதே சத்தி னேய்ந்திங்
காயுமுக் குணங்க ளந்தக் கரணங்க ளாதி யெல்லாங்
காயபெத் தங்களாகிக் கலந்துட னிற்கு மான்மா

(கோ - ட.) ஆன்மா மாயையின் வயிற்றுள் மன்னிஞானம் இச்சை செயல்வரும். அக்கலாதி மூன்றால் ஏகதேசத்தின் எய்ந்து இங்கு எயும். அந்தக் கரணங்கள் ஆதி எல்லாம் பெத்தங்கள் முக்குணங்களாயும் காயமாகிக் கலந்து உடனிற்கும்.

(பொ - ரை.) மேற்கூறியவாறு அநாதியே ஆணவமலத்தால் மறைப்புண்டு பசுவென நின்ற ஆன்மாவுக்கு அந்நிலை கேவலமெனப்படும். அதன்பின் அவ்வான்மா, அறியாமையினால் துன்பம் அடைந்து வருந்துவதற்கிரங்கி அநந்த தேவராருளால் தரப்பட்ட அசுத்தமாயையிற் கலக்குண்ட பாகமாகிய காரண சரீரத்தைப் பொருந்தும். எல்லாச் சரீரங்களுந் தோற்றுதற்குக் காரணமாதலால், மாயை காரண சரீரமெனப்பட்டது. அதனைப்

---

* நாலடியார், பழவினை செ--௬.
§ சிவஞானபோதம், எட்டாஞ்சூத்திரம். செ-௪

பொருந்தியபொழுது மறைக்கப்பட்ட அறிவிச்சை செயல்கள் பொதுவகையால் சமட்டிரூபமாய் விளங்கப்பெறும். அதாவது உணர்வும், விருப்பமும், செய்யுந் திறமுந்தோன்றி, நல்லது தீயது என்ற உணர்வின் பகுப்பும், வேண்டும் வேண்டாமென்ற விருப்பின் பகுப்பும், செய்யுமுறை இவ்வாறு என்ற தொழிலின் பகுப்பும் விளங்காத நிலையாம். இது மூர்ச்சையாய்க் கிடந்த ஒரு உயிருக்குத் தெளிவுபெற்ற முதல்நிலை போலாம். அதன்பின் அவ்வசுத்த மாயையினின்றுந் தோன்றும் கலை முதலிய சட்டையாகிய கஞ்சுக சரீரத்தைப் பொருந்தும். பொருந்தவே முன் பொதுவகையால் விளங்கிய அறிவிச்சை செயல்கள் வியட்டிரூபமாய்ப் பிரிந்துதோன்றிச் சிறப்புவகையால் விளங்கப்பெறும். அதாவது, முன் பொதுவகை என்றதற்கு எதிர்மறை. அதன் பின் சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களாகிய குணசரீரத்தைப் பொருந்தி, அக்குணங்களுள் அடங்கி நின்று, பின் வெளிப்படுவனவாகிய மனமுதலிய சூக்குமசரீரம், எலும்பு நரம்பு முதலிய தூல சரீரமாகிய இரு சரீரங்களிடமாக வரும் விடயங்களைப்பற்றித் தொழிற்செய்யப்பெறும். முக்குணங்களுள் யாதானும் ஓர் குணத்துடன் கூடாமல் தொழிற்செய்ய முடியாதாதலால், அந்தக் குணத்துடன் கூடுதலே குணசரீரத்தைப் பொருந்துதலாம். (எ-று)

இவ்வாறு காரணசரீரம், கஞ்சுக சரீரம். குணசரீரம் எனப் பரசரீரம் மூவகைப்படுமெனக் கொள்க.

மாயையிற் கலக்குண்ட பாகத்தை வயிறாக உருவகஞ்செய்தார். மேல் உம் சூத்திரம் சூ௲-வது செய்யுளில், "மாயாள்தன் வயிற்றிவற்றால்" என்றதும் கலக்குண்ட பாகத்தின் உருவகமே. அக்கலக்குண்ட பாகமே, அசுத்தமாயா தத்துவமென வித்தியாதத்துவம் ஏழனுள் வைத்தெண்ணப் படுவதென்க. மன்னிவரும் என்னும் வினையெச்சமுடிபு மன்னுதலால் வரும் என்னும் பொருள்படக்காரண காரியப் பொருட்டாய் நின்றது. ஏகதேசத்தினேய்ந்து எனப் பின்னர் வருதலின் இவ்விடத்து வரும் என்பதற்கு பொதுவகையால் சமட்டிரூபமாய் விளங்கும் என்பது பொருளாதலறிக. அந்தக் கரணங்களாதியெல்லாம் என்றவிடத்து எல்லாவற்றூனும் என்னும் பொருள்பட அற்றுச் சாரியையும், ஆன் உருபும் தொக்குநின்றன * "அன்பிலாரெல்லாந் தமக்குரியர்" என்றாற்போல.

---

* திருக்குறள், அன்புடைமை. செ-உ.

காயம் என்பது காயத்தினிடமாக வரும் விடயங்களைக் குறித்தலின் ஆகுபெயர். ஆகிக்கலந்து நிற்கும் என்பது அறிவிச்சை செயல்களின்வினை. ஒற்றுமைபற்றி அக்குணவினை ஆன்மாவாகியகுணிமேலேற்றப்பட்டது (உக)

சூக்குமசரீரம் தூல சரீரங்களை ஆன்மாப்பொருந்தி ஐந்தவத்தைப் படும் முறைமை கூறுகின்றது.

சூக்கும தேகி யாகித் தூலரூ பத்தின் மன்னிச்
சாக்கிர முதலா யுள்ள வவத்தையுட் டங்கி யெங்கும்
போக்கொடு வரவு மெல்லாம் புரிந்துபுண் ணியங்கள் பாவ
மாக்கியும் பலன்க ளெல்லா மருந்தியும் நிற்கு மான்மா.

(கோ - டு.) ஆன்மா சூக்கும தேகியாகி எங்கும் போக்கொடு வரவுமெல்லாம் புரிந்து புண்ணியம் பாவங்கள் பலன்களெல்லாம் ஆக்கியும், அருந்தியும் தூலரூபத்தின் மன்னி (எங்கும் போக்கொடு வரவுமெல்லாம் புரிந்து புண்ணியம் பாவங்கள் பலன்களெல்லாம் ஆக்கியும், அருந்தியும்) சாக்கிர முதலாயுள்ள அவத்தையுள் தங்கிநிற்கும்.

(பொ - ரை.) மேற்கூறிய காரணம், கஞ்சுகம், குணம்என்னும் மூன்று சரீரங்களும் பரசரீரமெனப்படும். அவ்வாறு பரசரீரம் மூன்றையும் முறையானெய்திய ஆன்மா அதன்பின் சூக்கும தேகத்தைப் பொருந்தி எவ்விடத்தும் போக்குவரவுகள் செய்து சூக்குமமாகிய இருவினைகளைச்செய்து அவ்வினைகளின் பலனாகிய இன்பத்துன்பங்களை அநுபவிக்கும். அதன்பின் தூலசரீரத்தைப் பொருந்தி எவ்விடத்தும் போக்குவரவுகள்செய்து தூலரூபமாகிய இருவினைகளைச் செய்து அவ்வினைப் பலன்களை அநுபவிக்கும். இவ்வாறு தூலம், சூக்குமம், குணம், கஞ்சுகம், காரணம் என்னும் ஐந்துசரீரங்களைப் பொருந்திநிற்கு முறைமையில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆகிய ஐந்தவத்தைப்பட்டு நிற்கும். (எ - று.)

சாக்கிரமுதல் என்றது ஒடுங்கு முறைபற்றிக் கூறியதெனவுணர்க. சூக்குமவினையும், பலனும் மனோவியாபாரமாம். அதாவது, சொப்பனத்தில் செய்யும் வினையும், அநுபவமுமாம். சாக்கிரம்:—எல்லாக் கருவிகளோடுங் கூடிநிற்கும் அவத்தை. சொப்பனம்:—சில கருவிகள் தொழிற்படாமல், அதாவது, தூலதேகர் தொழிற்படாமல் கனவொடுநிற்கும்

அவத்தை. சுழுத்தி:—கனவுமின்றி உறங்கி விழித்தபின் "ஒன்றுந்தெரிய வில்லை; சுகமாய்த் தூங்கினேன்" என்று சொல்லப்படும் அவத்தை. துரியம்:—பிராணவாயு இயக்கத்துடன் மூர்ச்சையாய்க்கிடந்து தெளிந்த பின் "ஒன்றுந்தெரியவில்லை" என்று சொல்லப்படும் அவத்தை. துரியாதீதம்:—பிராணவாயுஇயக்கமின்றி மூர்ச்சையாய்க்கிடக்கும் அவத்தை.(உஉ)

ஐந்து சரீரங்களும் ஐந்து கோசங்களெனப் பெயர்பெறும் எனவும், அவற்றில் ஆன்மா கட்டுப்பட்டுப் போக்குவரவு செய்து நிற்கும் எனவுங் கூறுகின்றது.

மருவா னந்தம் விஞ்ஞான மனோபி ராண னன்னமய
முருவாந் தன்மையுண்டாய் முன்னொன் றுக்கொன் று சூக்குமமாய்
வருமா மன்ன மயம்பற்றி மாயை முதற்கா ரணமாகு
மருவா யான்மா வைங்கோசத் தார்ப்புண் டவற்றி னகம்புறமாம்.

(கோ - டு.) அருவாய் ஆன்மா முதற்காரணமாகும் மாயை உருவாந்தன்மை உண்டாய் மருவு ஆனந்தம் விஞ்ஞானம் மனோபிராணன் அன்னமயம் அன்னமயம் முன்பற்றி ஒன்றுக்கொன்று சூக்குமமாய் வருமாம். ஐங்கோசத்து ஆர்ப்புண்டு அவற்றின் அகம்புறமாம்.

பொ - ரை.) கேவலத்தில் ஒரு சரீரமுமின்றி ஆணவ மலத்தோடு கூடி அவ்வாணவமல மாத்திரையாய்நின்ற ஆன்மாவிற்கு, முதற்காரணமாகிய மாயையினின்றுந் தோன்றிய மேற்கூறிய காரணசரீர முதலாகிய ஐந்து சரீரங்களும் வடிவமாம். வடிவாய் நிற்குங்கால் காரணசரீரம் ஆனந்தமய கோசமெனவும், கஞ்சுகசரீரம் விஞ்ஞானமய கோசமெனவும், குணசரீரம் மனோமய கோசமெனவும், சூக்குமசரீரம் பிராணமய கோசமெனவும், தூலசரீரம் அன்னமயகோசமெனவும் பெயர்பெறும். இவ்வைங் கோசங்களும் அன்னமயம் முதல் ஒன்றுக்கொன்று சூக்குமமாய் நிற்கும். ஆன்மா இவ்வைங்கோசங்களிற் கட்டுப்பட்டு நிற்குங்கால் அதுவதுவாய் வசிப்புண்டு ஏகதேசியாய் அவற்றிற் போக்குவரவு செய்யும். (எ-று.)

கேவலத்தில் அறிவிச்சை செயல்கள் விளங்கப்பெறாது நின்ற ஆன்மா, மாயையிற் கலக்குண்ட பாகத்தைப் பொருந்தியபொழுது அவ்

வறிவிச்சை செயல்கள் பொது வகையால் விளங்கப்பெற்ற மாத்திரையே ஓரானந்தமுண்டாகப்பெற்று அம்மயமாய் நிற்றலின் காரண சரீரம் ஆனந்தமய கோச மெனப்பட்டது.

அதன்பின் கலை முதலிய ஐந்து தத்துவங்களாகிய கஞ்சுக சரீரத்தைப் பொருந்தி அறிவிச்சை செயல்கள் சிறப்பு வகையால் விளங்கப்பெற்று அம்மயமாய் நிற்றலின் கஞ்சுக சரீரம் விஞ்ஞானமய கோசமெனப்பட்டது. விஞ்ஞானம் என்பது விசேட ஞானமாம். அது சிறப்பு வகையால் அறிவு முதலியன விளங்குதலை யுணர்த்தி நின்றது.

அதன்பின் குண சரீரத்தைப்பொருந்தி அந்தக்கரணத்தின் தன்மை விளங்கப்பெற்று அம்மயமாய் நிற்றலால், குண சரீரம் மனோமயகோச மெனப்பட்டது.

அதன்பின் சூக்கும சரீரத்தைப்பொருந்திப் பிராணவாயுவின் சம்பந்தம்பெற்று அதன்மயமாய் நிற்றலால் சூக்கும சரீரம் பிராணமய கோச மெனப்பட்டது.

அதன்பின் தூல சரீரத்தைப் பொருந்தி அச்சரீரத்தை வளர்ப்பதற்கான அன்னமயமாய் நிற்றலால் தூல சரீரம் அன்னமய கோசமெனப்பட்டது.

இவ்வைங்கோசங்கட்குச் சீவான்மா வெனவும், பரமான்மா வெனவும் வேறு வேறு பொருள் கூறுவார் மதங்களையெல்லா மறுத்தற்பொருட்டு, ஆன்மா இவ்வைங்கோசங்களிற் கட்டுப்பட்டுப் போக்குவரவு புரியும் என எடுத்தோதி, மாயை இவற்றிற்கு முதற்காரணமாகுமென்றுங் கூறினர். ஆன்மா இம்மண்ணுலகத்தும், பாதல வுலகத்தும், மேலுலகத்தும் கொள்ளிவட்டமும் காற்றூடியும்போல நிமிடத்தின்கண் சுழலும்படி கொண்டு திரிதல்பற்றி இவ்வைங்கோசங்களை ஐந்து பறவையாகவும், அவற்றுளொரோவொன்றை ஐவகைப்படுத்து முகமுதலிய வுறுப்புக்களாகவும் வேதத்துளுருவகஞ்செய் துணர்த்தியவாறும்.

ஆன்மாவினுண்மை யுணர்தற்கு இவ்வைங்கோசங்களைத் தூல முதலிய வுடம்புகளாகப் பகுத்தறிதலும் ஒரு சாதனமெனக்கொள்க.

"மாயையின் வயிற்றுண்மன்னி" என்பதுமுதல் இவைமூன்றுசெய்யுளானும் ஆணவ மலத்தின் உபாதியால் மறைப்புண்டு நின்ற ஆன்மாவினறிவு இச்சை செயல்கள், பின் ஏகதேசமாய் விளங்கி ஐந்தவத்தை, போக்கு வரவு முதலியவற்றைப் பொருந்துதற்குரிய ஐங்கோசத்தின் உபாதி கூறுமுகத்தால், ௨௦வது செய்யுளில் கூறியவாறு வசித்திட வருமாறு விளக்கிக் காட்டப்பட்டது.

இன்னும் ஆன்மா சார்ந்ததன் வண்ணமாய் வசிப்புண்டு நிற்கும் என்பதற்குச் சருவஞானோத்தரத்தில் அவ்வச்சார்பு விசேடம்பற்றிப் பூதான்மா அந்தரான்மா, தத்துவான்மா, சீவான்மா, மந்திரான்மா, பரமான்மா என அறுவகைப்படுத்துத் தொகுத்தும் விரித்து மோதியதும் இவ்விடத்து உய்த்துரைத்துணர்ந்துகொள்க. (௨௬)

பஞ்ச கோசங்களினும் ஆன்மா நிற்கு முறைமை கூறுகின்றது.

தோற்பாவைக்கூத்துந்தொல்லைமரப்பாவையியக்கமுஞ்சீர்த்
தேர்ப்பாரிற்செலவும்வேறுய்ச்செலுத்துவோர்செய்திதானும்
பார்ப்பாய வேடங் கட்டி யாடுவோர் பரிசு போலு
மார்ப்பாய காயந்தன்னை யான்மாநின் றூட்டு மாறே.

(கோ - டு.) ஆர்ப்பாய காயந்தன்னை ஆன்மா நின்று ஆட்டுமாறு, சீர்த்தேர்ப்பாரின் செலவும், தொல்லை மரப்பாவை இயக்கமும், தோற்பாவைக் கூத்தும், வேறுய்ச் செலுத்துவோர் செய்திதானும், பார்ப்பாய வேடங்கட்டி ஆடுவோர் பரிசுபோலும்.

(பொ - ரை.) மேற்கூறியவாறு கட்டுப்படுத்துவதாகிய ஐந்து கோசங்களினும் ஆன்மா வேற்றுமையின்றி நின்று அக்கோசங்களைச் செலுத்தும் விதம் எவ்வாறெனின், தேரைச் செலுத்துவோர் தன்மைபோல அன்னமய கோசத்தையும், மரப்பாவையை இயக்குவோர் தன்மைபோலப் பிராணமய கோசத்தையும், தோற்பாவையினை யாட்டுவோர் தன்மைபோல மனோமய கோசத்தையும், பரகாயப் பிரவேசம் செய்பவர் தன்மைபோல விஞ்ஞானமய கோசத்தையும், வேதியர் வேட முதலிய பல வேடங்கட்டி ஆடுவோர் தன்மைபோல ஆனந்தமய கோசத்தையும் ஆன்மா நின்று செலுத்தும். (எ - று.)

வேறுய்ச் செலுத்துவோர் செய்தி என்றது பரகாயப் பிரவேசத்தை.

தேரைச் செலுத்துங்கால், குதிரை, இயந்திரம், அறிவு, உற்சாகங்களால் பாகன் செலுத்தி அத்தேரின் வேறின்றி நிற்பதுபோல, அன்னமய கோசமாகிய தூலதேகத்தை, பிராணன், மனம், கலாதி, மாயைகளால் ஆன்மாச் செலுத்தி அத்தூல தேகத்தில் வேற்றுமையின்றி நிற்கும்.

மரப்பாவையை இயக்குங்கால், கயிற்றால் இயக்கி இயக்குவோன் அக்கயிற்றின் வேறின்றி நிற்பதுபோல, பிராணமய கோசமாகிய சூக்கும

தேகத்தைச் செலுத்துங்கால், பிராணனுலியக்கி ஆன்மா அப்பிராண வாயு வின் வேறின்றி நிற்கும்.

தோற்பாவையை ஆட்டுங்கால், ஆட்டுவோன் தன்னுறுப்பினுள் ஒன்ருகிய கரத்தால் ஆட்டி அதனின் வேறின்றி நிற்பதுபோல, மனோமய கோசமாகிய குணசரீரத்தை ஆட்டுங்கால் மனத்தால் ஆட்டி ஆன்மா அம் மனத்தின் வேறின்றி நிற்கும்.

பரகாயப் பிரவேசஞ் செய்யுங்கால் உயிர் நீங்கிய பரகாயத்தில் விருப்பால் பிறிதோருயிர் பிரவேசித்து அவ்வுயிராய் நிற்பதுபோல, விஞ்ஞான மய கோசமாகிய கஞ்சுக சரீரத்தைச் செலுத்துங்கால் அறிவு முதலியன இல்லாத கலாதிகளில் ஆநந்தத்தால் ஆன்மாப் பிரவேசித்து அக்கலாதிகளில் வேறின்றி நிற்கும்.

வேடங்கட்டி ஆடுவோர் கட்டிய வேடத்திற்குரியவனுய் நின்று நடித்து அதனின் வேறின்றி நிற்பதுபோல, ஆநந்தமய கோசமாகிய காரண சரீரத்தைச் செலுத்துங்கால் ஆன்மா அவ்வாநந்த மயமாய் அதனின்வேறின்றி நிற்கும்.

இவற்றுள், தேரைச்செலுத்துங்கால் செலுத்துவோன், கரம்கால் கண் முதலிய வுறுப்புக்களையும், அறிவையுங்கொண்டு செலுத்துவன். மரப் பாவையை இயக்குஙகால் கரமும், கயிறும், அறிவும் கொண்டு இயக்குவ ஞதலால் தேரைச் செலுத்துவதிலும் மரப்பாவையை இயக்குவது சூக்கும மாயிற்று. தோற்பாவையை ஆட்டுங்கால் கரமும், அறிவுங்கொண்டுஆட்டுவன். இதிற் கயிறில்லாமையால் மரப்பாவையினின்றும் சூக்குமமாயிற்று. பரகாயப் பிரவேசஞ் செய்யுங்கால் அறிவு ஒன்றுடன் புறத்துச் செல்வன். இதில் வேறு கருவிகள் இல்லாமையால் முன்னையதினின்றும் சூக்கும மாயிற்று. வேடங்கட்டி ஆடுங்கால் அறிவுடன் அகத்திற்றங்குவன். புறத்திற் றங்குதலாகிய முன்னையதற்கு அகத்திற்றங்குதலாகிய இது சூக்கும மாயிற்று. இவ்வாறே தூலதேக முதல் காரணதேக மீருக தத்துவங்களின் குறைவிற்கேற்ப ஒன்றுக்கொன்று சூக்குமமாய்ஆன்மா நிற்கு முறைமையினை அறிந்து கொள்க.

செய்யுளாகலின் முறை பிறழ வைத்தார். காயம் என்பது ஐந்து சரீரங்களையுங் குறித்தலின் சாதி யொருமை.

இச்செய்யுளால் ஆன்மா அவ்வாறு ஐங்கோசங்களில் வசித்திட வரினும் அவ்வேகதேசப் பொருள்கட்கு வேருய் மேல் உ௦-வது செய்யுளிற் கூறியவாறு வியாபியெனும் வழக்குடையனுதல், அக்கோசங்களைச்செலுத்து முறையில் வைத்துணர்த்தப்பட்டது. ஒவ்வொன்றையும் செலுத்துதல்

பற்றி வேறாய் என்பதும், அவ்வாறே எல்லாவற்றையுஞ் செலுத்துதல் பற்றி வியாபி என்பதும் பெறப்பட்டமை காண்க. (உச)

ஆன்மா பஞ்ச கோசங்களினும் வேறென்பதை உவமை முகத்தால் விளக்குகின்றது.

என்னுடல்பொறிபி ராணன்கரணமென்னுணர்வென்றக்காற்
றன்னின்வே றாகு நீயென் றன்மனை யென்ற வெல்லா
நின்னின்வே றாகு மென்னி னீங்கிடா யிவையிங் கென்னி
னுன்னின வாகு நீயா முகிர்மயி ருகவுங் காண்டி.

(கோ - ரு.) என்றன் மனை என்ற வெல்லாம் நின்னின் வேறாகும். என் உடல் பொறி பிராணன் கரணம் என் உணர்வு என்றக்கால் நீ தன்னின் வேறாகும். இவை இங்கு என்னின் நீங்கிடாவென்னின், உன்னின வாகும் நீயாம் உகிர் மயிர் உகவுங் காண்டி.

(போ - ரை.) மேற்கூறியவாறு பஞ்ச கோசங்களினும் ஆன்மா அபேதமாய் நின்று செலுத்தினும், என் மனைவி என்பதி என்று, அபேதமாய் வழங்கி வந்தனவெல்லாம் தன்னின் வேறு தல் போல, என்னுடல், என் பொறி, என் பிராணன், என் கரணம், என் அறிவு எனத் தனித்தனி எனதென்று வழங்கப்படுமாதலால், அவை யனைத்தும் உன்னின்வேறாம். நீ அவைகளின் வேறாவாய் என்று கூற, மனைவி முதலிய புறப்பொருள்கள் என்னின் வேறுதல்கூடும். உடல், பொறி முதலியவை என்னைவிட்டு நீங்கமாட்டாவாதலின், அவை எவ்வாறு வேறாகும் எனின், உன்னுடையனவாகி அபேதமாய் எனதென்று வழங்கப்படும் நகம், மயிர் முதலியன நீங்குதல் காணப்படுதல்போல, உடல் முதலியனவும் அதற்குரிய காலம் வந்தவிடத்து நீங்குமாதலின் நீ அவற்றின் வேறென்பது துணிவாயறியப்படும். (எ - று.)

உன்னின வென்பது இன் சாரியை பெற்ற அகர ஈற்றுப் பலவறி சொல். எனவே, உன்ன என நின்று உன்னுடையன என்னும் பொருள் தந்தது.

மனைவி வீடு முதலியவற்றைத் தானாக வெண்ணுபவர் உலகாயதரிலொரு சாரார்.

அவ்வாருயின், உடல் முதலியவற்றை எனதென்பது வீடு முதலியவற்றை எனதென்பது போலன்றி இராகுவினது தலை என்ருற்போல, அபேதம்பற்றிக் கூறுங் கருத்தே யாகலின், உரைப்போர் குறிப்பொடு ஒட்டி நோக்குங்கால் பேதம்பற்றியும் அபேதம்பற்றியும் எனதெனக் கூறும் அவ்விருவகை வழக்கிற்குந் தம்முள் வேறுபாடு காணப்படுதலின், அவைதம்முளொக்குமாறு யாங்ஙனமென்பாரை நோக்கி எனது என்றதனுல் வேறு என்பதற்கு வேறுவமை யெடுத்துக்காட்டி யுணர்த்துதற் கெழுந்தது வருஞ் செய்யுள். (உரு.)

அபேதம் பற்றிப் பஞ்சகோசங்களை எனதென்று வழங்கப் படுதலால் ஆன்மா அவற்றின் வேறென்றல் கூடாதென்பாரை மறுத்துரைக்கின்றது.

பொன்னணி யாடை மாலை போதுமே லான போதிங்
கென்னணி யாளென் றுன்னி யிருந்தனை பிரிந்த போது
நின்னணி நீயு மல்ல வாயினை காய நின்னி
னன்னிய மாகு முன்னை யறிந்துநீ பிரிந்து பாரே.

(கோ - ரு.) நின் அணிபிரிந்தபோது நீயும் அல்ல வாயினை.

(பொ - ரை.) இராகுவினது தலை யென்ற விடத்துத் தலையின் வேருய் இராகு காணப்படாதவாறுபோல, கருவி காணங்களை எனதென்றதனுல் அக்கருவி காணங்களின் வேருய் ஆன்மா உண்டென்றல் பொருந்ாதென்னின், அபேதம்பற்றி நிகழும் அவ்வுவமை மிகுதியாக வழங்குதலின்றி ஏகதேசமாய் வழங்கப் படுமாதலால், அவ்வுவமை பொருந்தாது. பொன்ஞலாகிய ஆபரணம், நூலாலாகிய ஆடை, மலராலாகிய மாலை முதலிய புறப் பொருள்களை யணிந்திருக்கின்றபொழுது அபேதம்பற்றி அப் பொருள்களெல்லாம் நீயாகவேயிருந்தும் என்னுடையதென்று வழங்கப்படுதல் மிகுதியுங் காணப்படும். அப்புறப்பொருள்கள் நீங்கியபோது அப்பொருள்கள் உனக்கு அன்னியமாய் நீ அப் பொருளன்ருயினுற்போல, உடல், பொறி முதலிய வனைத்தும் அபேதம்பற்றித் தானுயிருப்பினும் உன்னின் வேருகுமாதலால், உடல் பொறி முதலியவற்றி னீங்கிநின்று உன்னுடைய உண்மையான ஆன்ம சொரூபத்தை அறிவாயாக. (எ - று) (உசு.)

விஞ்ஞானமய கோசம் ஆனந்தமய கோசங்களே ஆன்மா வென்பாரை மறுத்துரைக்கின்றது.

உடலியா னல்லே னிந்த வுணர்வுயா னல்ல வான
கடனியா தென்னின் வேறு கண்டுணர் வென்ன தென்கை
யிடரிலா வென்ற னான்மா வென்றபோ தான்மா வேறே
திடனதா வுயிரை வேறு கண்டிடார் செப்ப லேகாண்.

(கோ - டு.) இடரிலா என்றன் ஆன்மா என்றபோது ஆன்மா வேறே. திடனதா உயிரை வேறு கண்டிடார் செப்பலே காண். இந்த உணர்வு யான் அல்ல வான கடன் யாதெனின், உணர்வு என்னது என்கை வேறு கண்டு உடல் யான் அல்லேன்.

(பொ - ரை.) அன்னமயகோசம், பிராணமய கோசம், மனோமயகோசமாகிய உடல், பொறி முதலியனயானல்லவென்பது தொக்கும். குற்றமில்லாத ஆன்மாவை என்னுடைய ஆன்மா என்றவிடத்து ஆன்மாவின் வேறாய் என் என்பதற்குப் பொருளில்லாதவாறுபோல, அறிவு தொழிற்படுதற்குத் துணையாயிருக்கின்ற விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசங்களின் வேறாய் ஆன்மா உண்டென்றல் பொருந்தாதெனின், ஆன்மாவை உறுதியாக வேறாகக் காணும் அறிவில்லாதவர் இராகுவினது தலையென்றாற்போல என்னான்மாவென்று கூறுவர். அவ்வாறு கூறுதல் பெரும்பான்மையாய் வழங்கப்படுதலின்றிச் சிறுபான்மையாக வழங்கப்படும். அதுவும், என்னென்பதும் ஆன்மாவென்பதும் வேறு பொருளாயில்லாத அபேதம்பற்றிய வழக்காகும். விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசங்கள் அவ்வாறன்று. வேறு எவ்வாறெனின், என் அறிவு என் ஆனந்தம் என ஏனைக் கோசங்கள்போல எல்லாரானும் வேறாகக் காணப்படும் பெருவழக்காதலின், அபேதம்பற்றிய வழக்கென்று கூற அமையாது. அமையுமெனின், என் என்பதின் வேறாக ஆன்மா இல்லாதது போல் அறிவும் ஆனந்தமும் நீங்காதிருக்க வேண்டும். நீங்கக் காண்கின்றோமாதலால், ஏனைய உடல் முதலியனபோல விஞ்ஞானமய ஆனந்தமயகோசங்களும் உன்னின் வேறேயாம். (எ-று)

செய்யுளில் விஞ்ஞானமய கோசம் உயிரின் வேறாதல் கூறவே, இனம்பற்றி ஆனந்தமய கோசம் உயிரின் வேறாதலுங் கொள்ளப்படும். கண்டிடார் என்பது கண்டிடாராகி என்னும் பொருள் குறித்தலின் முற்றெச்சம். (உஎ.)

என்னுடைய ஆன்மா வென்பதற்குப் பொருள் கூறி உடல் முதலியவற்றின் ஆன்மா வேறு என்பதனை வலியுறுத்துகின்றது.

புந்தியை மனம தென்று மனமது புந்தி யென்றுஞ்
சிந்தையைச் சீவ னென்றுஞ் சீவனைச் சிந்தை யென்று
முந்தனை யான்மா வென்று மான்மாவை முந்த னென்றும்
வந்திடு மென்ற னுன்மா வென்றது மற்றொன் றைக்காண்.

(கோ - ரு.) என்றன் ஆன்மா என்றது மற்றொன்றைக் காண் என்பதை முன்னாகவைத்து, அதன் பின்னாக புந்தியை என்பது முதலாக உரைக்க.

(போ - ரை.) அன்றியும், என்னுடைய ஆன்மா என்று கூறப்படும் வழக்கில் ஆன்மாவென்பது ஆகுபெயரால் பிராண வாயுவை உணர்த்தும். அது எதுபோலவெனின், புத்தியை மனமென்றும், மனதைப் புத்தியென்றும், சிந்தையைச் சீவனென்றும், சீவனைச் சிந்தையென்றும், சிவபிரானை ஆன்மாவென்றும் ஆன்மாவைச் சிவபிரானென்றும் ஆகுபெயரால் கூறும் வழக்குப் போலாம். ஆகுபெயராவது, ஒன்றிற்குரிய பெயரை அதனோடு சம்பந்தமுள்ள பிறிதொன்றிற்கிட்டு வழங்குவது. ஆதலின், என்னுடைய ஆன்மா என்ற அம்மொழிகொண்டும் விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசங்களின் வேறாக ஆன்மா இல்லை யென்ற நின்கருத்து நிரம்புமாறில்லை. (எ - று.)

ஆதலின் என்னுடைய ஆன்மா வென்ற அம்மொழிகொண்டும் விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசங்களின் வேறாக ஆன்மா இல்லை யென்ற நின் கருத்து நிரம்புமாறில்லை என்பது குறிப்பெச்சம்.

ஒன்றன் பெயரை அதனோடு சம்பந்தமுள்ள பிறிதொன்றற்கிட்டு வழங்கி வருதலை விளக்கவேண்டி புந்தியை மனமதென்றும் என்பது முதலாக எடுத்துக் கூறினர்.

ஐந்துகோசங்களுக்கும் ஆன்மாவேறு என மேலே பொதுவாகக் கூறி, விஞ்ஞானமயகோசம் சீவான்மாவும், ஆனந்தமயகோசம் பரமான்மாவுமா மென்பார் மதத்தை மறுத்தற்பொருட்டு, அவ்விரண்டு கோசங்கள் ஆகுபெயரினால் அவ்வாறு கூறப்படுமென வேறெடுத்தோதி ஆன்மா வேறென்பது வலியுறுத்தப்பட்டது.

"என்னுடல் பொறி" என்பது முதல் இவை நான்கு செய்யுளானும் உலக வழக்கின் வைத்தறிவித்து உடல் முதலியவற்றின் ஆன்மா வேறென்பது வலியுறுத்தப்பட்டது. (௨அ.)

ஐந்துகோசங்களை ஆன்மா வென வேதத்துட் கூறியதும் ஆகுபெயராலெனக் கூறுகின்றது.

அறிவுடல் சிந்தை யான்மா வணைதலா லான்மா வென்ப
ரெறிசுடர் விளக்கி ருக்கு மிடத்தையும் விளக்கென் றாற்போற்
பொறிபுலன் கரண மெல்லாம் புலப்படு மபேத மாகிப்
பிறிதரா தறிவ தான்மா வறிபொருள் பின்ன மாமே.

(கோ - ரு.) புலப்படும் பொறி புலன் கரண மெல்லாம்.

(பொ - ரை.) உபநிடதங்களில் ஆன்மாவின் வேறாகிய விஞ்ஞானமயகோச முதலிய அப்பஞ்ச கோசங்களை ஆன்மாப் பொருந்தி நிற்கும் சம்பந்தம்பற்றி அக்கோசங்களை ஆன்மா வெனக் கூறும் என்பர். அவ்வாறு கூறுதல் ஒளியை வீசும் விளக்கிருக்கின்ற தகளியை விளக்கென்றாற் போலன்றிப் பிறிதில்லை. ஆதலால், அறியப்படும் பொறி புலன் கரண முதலிய எல்லாவற்றின் கண்ணும் அபேதமாய்ப் பிரிப்பின்றி நின்றறிவதாகிய ஆன்மா அறியப்படும் அப்பொருள்களுக்கு வேறு. (எ-று.)

அறிவுடல் சிந்தை என்றது முறையே விஞ்ஞானமயகோசம், அன்னமயகோசம் மனோமயகோசத்தைக் குறித்து உபலக்கணத்தால் ஐங்கோசங்களையும், பொறிபுலன் கரணமென்றது உபலக்கணத்தால் தநுபுவனங்களையுங் குறித்தன. எல்லாம் என்றவிடத்து எல்லாவற்றின்கண் என்னும் ஏழாம் வேற்றுமை யுருபும், அறிபொருள் என்றவிடத்து அறிபொருட்கு என்னும் நான்காம் வேற்றுமை யுருபும் தொக்கு நின்றன.

அபேதமாகிப் பிறிதராதென்றது முறையே வடமொழியும், அதன் பொருளை விளக்குந் தமிழ்மொழியு மாதலின், கூறியது கூறலின்மை

யுணர்க. இது, † "ஞான திரோதகமாய் மறைத்துக் கொடு நிற்றல்" என்றாற்போல.

இச்செய்யுளால் ஐங்கோசங்களை ஆன்மா வென்னும் உபநிடதத்திற்குத் தாற்பரியம் ஆகுபெயர்ப் பொருளெனக்கூறி ஆன்மா அவற்றின் வேறென்பது சாதிக்கப்பட்டது. (உகூ)

ஐந்து கோசங்களினும் ஆன்மா வேறென்பதை அநுபவத்தால் வலியுறுத்துகின்றது.

கண்டுணர் புருடன் வேறு கனவுகண் டொடுங்கிக் காய
முண்டியும் வினையு மின்றிக் கிடந்துயிர்த் திடவு ணர்ந்து
கண்டிடுங் கனவுஞ் சொல்லி யொடுக்கமுங் கருதி வேறா
யுண்டியும் வினையு முற்றிங் குணர்த்திட வுணரா நிற்கும்.

(கோ - டு.) கனவுகண்டு ஒடுங்கி உண்டியும் காயம் வினையும் இன்றிக்கிடந்து உயிர்த்திட உணர்ந்து இங்கு உணர்த்திட கண்டிடுங் கனவு சொல்லியும் ஒடுக்கம் கருதியும் வேறாய் உண்டியும் வினையும் உற்று உணரா நிற்கும். கண்டு உணர்புருடன் வேறு.

(பொ - ரை.) ஐந்து கோசங்களும் ஆன்மா வென்றால் அன்னமய கோசத்தைவிட்டுப் பிராணமய கோசத்திலும், பிராணமய கோசத்தைவிட்டு மனோமய கோசத்திலும், மனோமய கோசத்தைவிட்டு விஞ்ஞானமய கோசத்திலும், விஞ்ஞானமய கோசத்தைவிட்டு ஆனந்தமய கோசத்திலும் நிற்குங்கால், முறையே சாக்கிர முதலாக ஐந்தவத்தைப்பட்டு, விழித்தபின் சாக்கிரத்தில் அவ்வைங்கோசங்களையுங் கூடிநின்று அக்கோசங்களாகிய கருவிகளாற் காணப்பட்ட கனவைச்சொல்லும். சுழுத்தியில் ஒன்றுந்தெரியாது சுகமாயிருந்ததைக்கருதும். சுகாநுபவமும், பிராணவாயுவினியக்கமுமின்றி மூர்ச்சையாய்க்கிடந்த துரிய, துரியாதீதங்களை மறுதலையாகிய சுகாநுபவத்தினும், பிராணவாயுவினியக்கத்தினும் வைத்து அறியும். இவ்வாறு சாக்கிரத்தில் வந்தபோது அறிவதின்றி அந்தந்த அவத்தையினின்று அறிதலில்லை. அக்கோசங்கள் ஆன்மாவாயின், ஒவ்வொரு அவத்தையினையும் அவ்விடத்தே

† சிவஞானபோதம், நான்காஞ் சூத்திரம். அதிகரணம் உ.

அறிதல்வேண்டும். ஆதலால் அந்த அவத்தைகளைக் கண்டறியும் உயிர் அவற்றின் வேறெனத் தெளிவாயாக. (எ - று.)

ஐங்கோசங்களுங்கூடிய பின்னன்றி அறிவு நிகழாமையால் அறிதற்கு அவ்வைங்கோசங்கள் ஏது வாதல் பெறப்பட்டது. ஒடுக்கம் என்றது இவ் விடத்துச் சுழுத்தியை. அது, கனவுபோல் சொல்லவாராமையால் கருதி யுணருந் தன்மையதாயிற்று. சித்தமுஞ் செல்லாத துரியம், துரியாதீதங் கள் கருதவும் வாராமையின் மறுதலையின் வைத்துணருந் தன்மையவாயின. உணர்ந்தபின் என இருக்கவேண்டுவது உணர்ந்து எனத்திரிந்து நின்றது. உணர்தல் இவ்விடத்து நித்திரைவிட்டெழுதலாகிய சாக்கிரத்தைக் குறித் தது.

இச்செய்யுளால் கனவு முதலிய அவத்தைகளை அவ்விடத்து அறியாது சாக்கிரத்திற்கு வந்தபின் அறிதலின் வைத்துணர்த்தி ஐங்கோசங்களினும் ஆன்மா வேறென்பது வலியுறுத்தப்பட்டது.

"தோற்பாவை" என்னுஞ் செய்யுள்முதல் இச்செய்யுள் வரையுங் கூறியவாற்றால், மேல் ௩-ஞ்சூத்திரம் முதற்செய்யுளில் "உற்றுச்செயிரு றும்" என்பது முதலிய, அஃதாவது, தூலவுடல், இந்திரியம், சூக்கும வுடல், பிராணவாயு, ஆன்மா என்பாரை மறுத்த நாற்கூற்றுப் பொருளையும் வலியுறுத்தியவாறுமாயிற்று. (௩௦.)

ஆன்மாவானது முதல்வனின் வேறாய் அநாதியே ஆணவ மலத்தில் மறைந்து நிற்குமெனக் கூறுகின்றது.

புருடனே யறிவ னாகிற் பொறிபுல னாதி போதந்
தருவதெ னறிவு மாயா தனுகர ணாதி பற்றி
வருவதிங் கநாதி யாக மலத்தினின் மறைந்து நிற்ப
னருவனா யிவற்றோ டாளு மமைச்சரு மரசும் போல்வன்.

(கொ - டு.) புருடன் அறிவனேயாகில் பொறிபுலன் ஆதி இவற் றோடு அமைச்சரும் ஆளும் அரசும் போல்வன் போதம் தருவது என். மாயாதனுகரணாதிபற்றி இங்கு அறிவு வருவது, அநாதியாக மலத்தினின் மறைந்து அருவனாய் நிற்பன்.

(போ - ரை,) ஆன்மா சித்துப்பொருளாதலால், முதல் வன்போலக் கருவிகளின் துணையின்றி அறியாதோவெனின், அறி யாது. எதனாலெனின், முதல்வன்போலச் சுத்தசித்தன்று. அதா வது, அநாதியே மலத்தைப்பற்றாத சித்தன்று. அவ்வாறு சுத்த

சித்தாயின் தநுகரணாதிகளுடன் அமைச்சரும் அரசும்போல உட னின்று அத்தநுகரணாதிகளை யறிதல்வேண்டாம். அவ்வாறறிதல் காணப்படுகின்றமையால், அநாதியே ஆணவமலத்தால் மறைக்கப் பட்டு அறிவிச்சை செயல்கள் விளங்கப்பெறாது, பின் மாயா கரு விகளோடு கூடித்தத்துவரூபமாய் நின்றறியுமென்பது பெறப் படும். (எ - று.)

தருவதென் என்றவிடத்து என் என்றது வேண்டா என்னும் பொ ருள் குறித்துநின்றது. போல்வன் என்பது போலநின்று என்னும் பொருள் குறித்தலின் முற்றெச்சம். தநுகரணாதிபற்றி அறிவு வருதலால், தநுகர ணாதிகளில்லாத அநாதி நிலையில் மலத்தினின் மறைந்துநிற்கும் என்னும் அநுமானத்தை வலியுறுத்தற் பொருட்டு "புருடனேயறிவனாகிற் பொறி புலனாதி போதந்தருவது என்" எனத் தருக்கமெடுத்தோதினர். தருவது என் என்பது தருக்கம். இதனால் தருதல் காரணமாக மலத்தினில் மறைந்து நிற்குமென்பது வலியுறுத்தப்பட்டமை காண்க.

இச்செய்யுளால், மேல் ௨௦-வது செய்யுளிற் கூறியவாறு, உயிர்கள், ஞானச்செய்தியநாதியே மறைத்துநிற்கும் பசுத்துவமுடையனவாதல், கரு விகளைக்கூடிநின்று தொழிற்படுதலாகிய காரியாநுமானத்தின் வைத்து ணர்த்தி வலியுறுத்தப்பட்டது.

"அறிவிச்சை செயல்கள்" என்பது முதல் இதுவரையும் பரமதங் களைப் பரிகரித்து ஆன்மாவிற்கு இலக்கணங்கூறு முகத்தால் இரண்டாங் கூறு வலியுறுத்தப்பட்டது. (௩௧.)

இரண்டாம் அதிகரணம் முடிந்தது.

மூன்றும் அதிகரணம்.

**செயல்களுன்கும் அறிந்தவையடக்கி யாக்கிப் புணரு
முட் கருவியாக்கிப்புறக் கருவியினும்போக்கி
வெவ்வேறணைதரும் என்பது.**

ஆன்மாவானது ஐந்தவத்தையிற் போக்குவரவு புரிதலை அரச உவமையில் வைத்து விளக்குகின்றது.

**படைகொடு பவனி போதும் பார்மன்னன் புகும்போதில்லிற்
கடைதொறும் விட்டு விட்டுக் காவலு மிட்டுப் பின்ன
ரடைதருந் தனியே யந்தப் புரத்தினி லதுபோ லான்மா
வுடலினி லஞ்ச வத்தை யுறுமுயிர் காவ லாக.**

(கோ - டு.) ஆன்மா படைகொடு பவனிபோதும் பார்மன்னன் இல்விற் புகும்போது கடைதொறும் விட்டுவிட்டுக் காவலும் இட்டு பின்னர் அந்தப்புரத்தினில் தனியே அடைதரும். அதுபோல், உடலினில் உயிர் காவலாக அஞ்சு அவத்தை உறும்.

(போ - ரை.) உடல் பொறி முதலியவற்ரூடு ஆன்மா கூடிநிற்றல் எதுபோலவெனின், அமைச்சர் முதலாயினரும் அரசனும் போலாம். அமைச்சர், படைத்தலைவர் முதலிய பரிசனங்களோடு உலாப்போந்த அரசன், மீள அரண்மனையுட் புகுங்கால் அமைச்சர் முதலாயினோரை எந்தெந்த வாயிலில் எவரெவரை நிறுத்தவேண்டுமோ அந்தந்தவாயிலில் அவரவரை நிறுத்திப் பிறர் பிரவேசியாவண்ணம் காவலும் வைத்துப்பின்னர் அந்தப்புரத்துக்குத் தனியே செல்வன். அதுபோல, ஆன்மாவும் மனத்தைத் தேராகவும், பிராணவாயுவைக் குதிரையாகவும், புத்தியை மந்திரியாகவும், அகங்காரத்தைச் சாரதியாகவும், ஞானேந்திரிய கன்மேந்திரியங்களைக் காலாட்களாகவுங்கொண்டு புறத்து விடயங்களில் உலாப்போந்து அகத்து மீளுங்கால் புருவநடு, கண்டம், இருதயம், நாபியென்னுந் தானங்கள்தோறும் நீக்கவேண்டிய தத்துவங்களை நீக்கி உடலைப் பிறர் மோசஞ்செய்துவிடாமல் பிராணவாயு

வைக் காவலாக வைத்துவிட்டு மூலாதாரத்திற்கு மேலும் நாபிக்குக் கீழுமாகிய சுவாதிட்டானமாகிய அந்தப்புரத்திற்குத் தனியே சென்று, மாயையோடுகூடி ஆனந்தமய கோசனாய் நிற்கும். துரியாதீதத்தில் புருடதத்துவம் ஒன்றென்று கூறியதும் இக் கருத்துப்பற்றியேயாம். இவ்வாறு ஐந்தவத்தையினை ஆன்மாப் பொருந்துமாறறிக. (எ - று.)

மாயையோடு கூடிநிற்கும் நிலை தனிமையாவது எவ்வாறெனின், தொழிற் பாட்டிற்குரிய தத்துவங்களில்லாமல், தத்துவமில்லாமையால் அநாதி கேவலமின்றிச் சகலனாய் நிற்றற்குமட்டுந் துணையாய் மாயை நின்றமையால் தனிமையெனப்பட்டது.

துரியா தீதாவத்தையில் பிராணவாயு இயக்கமில்லாதிருக்கவும் காவலாகப் பிராணவாயுவை வைத்துவிட்டு என்றது எவ்வாறு பொருந்துமெனின், காவலாயுள்ளவன் அரசன் நித்திரையின்றி யிருக்குங்கால் வாயிலைத் திறந்துவைத்து யாவருக்குந்தெரியும்படியாக நிற்பன். அரசன் நித்திரை செய்யுங்கால் வாயிலைப்பூட்டிக்கொண்டு உட்புறமாகப் பிறருக்குத் தெரியாமல் நிற்பன். அதுபோல, துரியாதீதத்தில் பிராணவாயு அடங்கிக் காவலாயிருக்கும். இன்றேல் பின் உயிர்த்தெழ முடியாது. ஆதலால், பிராணவாயுவைக் காவலாக வைத்தென்றது துரியாதீதாவத்தையினும் பொருந்தும்.

இச்செய்யுளால், முதற்செய்யுளிற் கூறியவாறு வெவ்வேறவத்தையணைதருமுறைமை, மேலைச்செய்யுளிற் கூறிய அமைச்சு அரசு உவமையோடு பொருத்தி வகுத்துக் கூறப்பட்டது. (௬௨.)

ஐந்தவத்தையுள் ஒவ்வோரவத்தைக்குரிய தத்துவங்களும் தானங்களும் இவையெனக்கூறுகின்றது.

சாக்கிர முப்பத் தைந்து நுதலினிற் கனவு தன்னி
லாக்கிய விருபத் தைந்து களத்தினிற் சுழுனை மூன்று
நீக்கிய விதயந் தன்னிற் றுரியத்தி லிரண்டு நாபி
நோக்கிய துரியா தீத நுவலின்மூ லத்தி னொன்றே.

(கோ - ரு.) நுதலினில் சாக்கிரம் முப்பத்தைந்து. களத்தினில் கனவு தன்னில் ஆக்கிய இருபத்தைந்து. நீக்கிய இதயந்தன்னில் சுழுனை மூன்று. நாபி துரியத்தில் இரண்டு. நுவலின் மூலத்தின் நோக்கிய துரியாதீதம் ஒன்றே.

(போ - ரை.). அரசன்போல ஆன்மாவும் விட்டுவிட்டுச் சேருமிடத்து எங்கெங்கே இடத்தில் எங்கெந்தத் தத்துவங்களை விட்டுச் சேருமெனின், புறத்து விடயங்களையறிதலினின்று நீங்கி உறக்கத்திற்குச்சென்று உறங்குமுன் புருவ மத்தியாகிய இலாடத்தில் சாக்கிராவத்தையைப்பொருந்தி ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, சத்தாதி ஐந்து, வசனாதி ஐந்து, பிராணாதி வாயுப் பத்து, அந்தக்கரணம் நான்கு, புருடன் ஒன்று ஆக முப்பத்தைந்து தத்துவங்களுடன் கூடி நிற்கும். இதனைவிட்டுக் கண்டத்தானத்தில் சொப்பனவத்தையையடையும். அடையுங்கால் வாயுப்பத்து, சத்தாதி ஐந்து, வசனாதி ஐந்து, அந்தக்கரணம் நான்கு, புருடன் ஒன்று என்னும் ஆக்கப்பட்ட இருபத்தைந்து தத்துவங்களுடன் கூடிநிற்கும். இதனைவிட்டு இருதயத்தானத்தில் சுழுத்தியவத்தையை யடையும். அடையுங்கால், பிராணன், சித்தம், புருடன் என்னும் மூன்று தத்துவங்களுடன் கூடிநிற்கும். இதனைவிட்டு நாபித்தானத்தில் துரிய அவத்தையை யடையும். அடையுங்கால் பிராணன், புருடன் என்னும் இரண்டுடன் கூடிநிற்கும். இதனைவிட்டுச் சொல்லுமிடத்து மூலமாகிய சுவாதிட்டானத் தானத்தில் ஆராயப்படும் துரியாதீத அவத்தையை யடையும். அடையுங்கால் புருடதத்துவம் ஒன்றினைக் கூடிநிற்கும்.

(எ - று.)

அசிந்திய விசுவ சாதாக்கியத்தில் அவத்தைக்கு நிற்குங் கருவிகளிற் கலாதிகளையும் உடன்கூட்டி எண்ணி நாற்பத்தொன்று முதலியனவாகத் தொகை கூறுதலானும், கலாதிகளுளவாகவே சுத்த தத்துவங்களின் றொழிற்பாடும் ஆண்டுளவென்பது பெறப்படுதலானும், கலாதிகளில் வழிப் புருட தத்துவ மொன்றென வைத்தெண்ணப்படுதல் செல்லாமையானும், ஈண்டு முப்பத்தைந்து முதலியனவாகத் தொகை கூறியது மலைவாகாதோ வெனின், ஆகாது. கடைதொறும் விட்டுவிட்டு என்ற உவமைக் கேற்ப விடப்படுதல் மாலையவாய் நிற்குங்கருவிகள் மாத்திரைக்கே ஈண்டுத் தொகை கூறப்புகுந்தாராகலானும், அதுபற்றிக் கலாதிகளின் ஐயஞ் செல்லாமைப் பொருட்டு அவற்றைப் புருட தத்துவத்துளடக்கி அதனையுடன்வைத் தெண்ணினு ராகலானு மெனக.

கலாதி தத்துவங்களும் சுத்த தத்துவங்களும் விட்டு நீங்காமல் சாக்கிரம் முதல் துரியம் வரை உடனாக வெளிப்பட்டு நின்று துரியாதீதத்தில்

அடங்கி நிற்குமாதலால், விட்டு நீங்குந் தத்துவங்களோடு வைத்தெண்ணுதவாறறிக. கலாதிகளும் சுத்த தத்துவமும் இல்லையாயின் புருட தத்துவந் தோன்றாதாதலின், அதீதத்தில் அவை அடங்கி நிற்றல் காண்க.

துரியாதீதத்தில் காரண சரீர மாத்திரையேயன்றிக் கஞ்சுக சரீரம் இல்லாமையால் அவ்விடத்துக் கலாதிகளில்லை யென்பது பெறப்படும். படவே, கலாதிகள் விட்டு நீங்குந் தத்துவங்களல்ல என்றது எவ்வாறு பொருந்துமெனின், அவ்விடத்துக் கஞ்சுக சரீரமில்லை யென்றது கலாதிகள் வேறு நில்லாது புருடனோடு ஒற்றித்து நிற்குங் கருத்துப்பற்றியேயாதலாற் பொருந்துமென்க. (ரு௫.)

ஐந்தவத்தைகளும் சகலத்திற் கீழாலவத்தை, மத்தியாலவத்தை மேலாலவத்தை, யென முத்திறப்படுமெனக் கூறுகின்றது.

இருவகை சாக்கிராதி யவத்தைக ளியல்பு தானு
மொருவகை கீழே நாக்கி யுற்பவங் காட்டு மொன்று
பெருகமே னேக்கித் தீய பிறப்பறுத் திடுமி யோகிற்
றருவதோர் சமாதி தானுந் தாழ்ந்துபின் சனனஞ் சாரும்.

(கோ - டு.) சாக்கிராதி அவத்தைகள் இயல்பு தானும் இருவகை.

(போ - ரை.) மேற்கூறிப்போந்த சாக்கிரம் முதலாகிய ஐந்தவத்தைகளும் கீழாலவத்தை, மத்தியாலவத்தை, மேலாலவத்தை என முத்திறப்படும். அவற்றுள் கீழாலவத்தை கீழ் நோக்கிச் சென்று ஒடுங்கு முறையும், மேல் நோக்கித் தோன்று முறையும் என இருதிறப்படும். அவற்றுள் ஒடுங்குமுறை மேற்கூறியவாறு புருவ நடு முதல் கீழ்நோக்கி ஒவ்வொரு தானமாய் விட்டுச் செல்லுதலாம். அவ்வாறு செல்வது வினை செய்தலினுலுண்டான இளைப்பு நீக்கத்தின் பொருட்டாம். இளைப்பு நீங்கவே மேல் வினை செய்தற்குரிய வலிமையுண்டாம். அதனால் அவ்வொடுங்கு முறை கன்மம் சம்பாதித்தற்கேதுவாய்ப் பிறவிக்கு வித்தாம். பிறிதொன்றாகிய தோன்றுமுறையாவது துரியாதீதத்தையடைந்த வுயிர் ஒடுங்கியவாறேமீள மேல்நோக்கி ஒவ்வொரு தானத்தில் ஒவ்வொரு அவத்தையாய்ப் பற்றிப் புருவ நடுவில் சாக்கிரத்துக்கு வருதல். இவ்வாறு வருதலால் கன்மத்தின்

பலனை யநுபவித்தல் கூடும். கன்மாநுபவம் பிறவி யறுதற்குக் காரணமாகும். இனி மேலாலவத்தையும் இருதயம், கண்டம், நாக்கின் அடி, புருவநடு, பிரமரந்திரம் என்னும் ஐந்து தானங்களில் முறையே சாக்கிர முதலாக ஐந்தவத்தைப்பட்டு மேற்சென்று ஒடுங்குதலும், கீழ்நோக்கித் தோன்றுதலும் என இருவகைப்படும். மேல் நோக்கிச் செல்வதாகிய இவ்வைந்தவத்தையும் யோக சமாதிகளாலுண்டாம். இச்சமாதியால் பிரபஞ்ச நாட்டங் குறைந்து அக்குறைதல் பிறவி யறுதற்குக் காரணமாகும். பிறிதொன்றாகிய கீழ் நோக்கித் தோன்றுதலாவது, பிரமரந்திரத்தினின்றும் வெளியே வருதல். அது பிரபஞ்ச நாட்டத்தைத் தோற்றுவித்துப் பிறவிக்குக் காரணமாகும். (எ - று.)

மேலாலவத்தை யைந்தும் பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சவிகற்ப சமாதி, நிருவிகற்ப சமாதி என ஐவகைப்படும். யோகிற்றருவதோர் சமாதிதானுந் தாழ்ந்து பின் சனனஞ்சாரும் என்ற அநுவாதத்தால் அச்சமாதியுண்டென்பதும் பெறப்பட்டது. தாழ்தல்—ஒடுங்குதல். சனனஞ் சார்தல்—தோன்றுதல். இந்த யோகாவத்தையினையே கருவி கரணங்களின் மீளுதலில்லாத ஞானவத்தை யெனக்கொண்டு மயங்குவாருமுளர். அங்ஙன மயங்காமைப் பொருட்டு இதனை ஏனையவத்தைகளோ டொப்ப வைத்து இவ்விடத்துக்கூறினார்.

கீழாலவத்தையில் கீழ்நோக்கி ஒடுங்குதல் சகலத்திற் கேவலமெனவும், அதில் மேல் நோக்கித் தோன்றுதலும் மேலாலவத்தையில் கீழ்நோக்கித் தோன்றுதலும் சகலத்திற் சகலமெனவும், மேலாலவத்தையில் மேல்நோக்கி யொடுங்குதல் சகலத்திற் சுத்தமெனவும் அறிக. மேலாலவத்தையில் கீழ் நோக்கித் தோன்றுதல் பிரபஞ்சத் தோற்றத்திற்குக் காரணமாதலால், கீழாலவத்தையில் மேல்நோக்கித் தோன்றுதலோடொக்கும். அவ்வாறாயின், கீழாலவத்தையில் மேல்நோக்குதல் பிறவி யறுதற்குக் காரணமென்றும், மேலாலவத்தையில் கீழ்நோக்குதல் பிறவிக்குக் காரணமென்றும் மேற்கூறியது எவ்வாறு பொருந்துமெனின், வினைப்பயனை அநுபவித்தலால் பல பிறவிகளைப்பெற்று இருவினை யொப்பு முதலிய பக்குவமெய்திப் பரம்பரையில் பிறவி யறுமன்றி வினைப்பயனை யநுபவித்ததுகொண்டு பிறவியறாது. அதனாலும் பிரபஞ்சத் தோற்றத்தி லொத்தலானும் பொருந்துமாறறிக.

இச்செய்யுளில் கீழ்ச்சென்று ஒடுங்குமென்றதும் மேற்சென்று தோன்றுமென்றதும், மேற்சென்று பிறப்பறுத்திடும் என்றதும் நடுநின்று

பொருள்தரும் தாப்பிசையாய் வருகின்ற செய்யுளோடுஞ் சென்றியைந்து பொருள்தருமாகலான் அச்செய்யுட்கும் இவ்வாறுரைத்துக் கொள்க. (கூச.)

சகலத்து மத்தியாலவத்தையில் ஐந்தவத்தை யுண்டெனவும் சுத்தத்திலும் ஐந்தவத்தை யுண்டெனவும் கூறுகின்றது.

அறிதரு முதல வத்தை யடைதரு மிடத்தே யைந்துஞ்
செறிதருங் கரணந் தன்னிற் செயலுறுங் கண்டு கொண்ணீ
பிறிவிலா ஞானத் தோரும் பிறப்பற வருளா லங்கே
குறியொடு மஞ்ச வத்தை கூடுவர் வீடு கூட.

(கோ—டு.) நீ கண்டு கொள் எனவும், ஆங்கே வீடு கூட எனவுங் கூட்டுக.

(போ—ரை) மேற் கூறிய ஐந்தவத்தையினுள் எல்லாவிடயங்களையும் அறிகின்ற முதலவத்தையாகிய சாக்கிரத்தையடையும் இலாடத்தானத்தின் கண்ணும் சாக்கிரம் முதல் ஐந்தவத்தையுளவாம். அவ்வவத்தைகள் விடயங்களை யறியுஞ் செய்கையில் அதி நுணுக்கமாய் இடைவிடாது நிகழும். அவ்வாறு நிகழ்வதை நுண்ணுணர்வால் நீ கண்டு கொள்வாயாக. இனி, இச்சகலத்தில் நிகழும் இவ்வவத்தைகளேயன்றி, பிறிவிலா ஞானத்தையறிந்தவரும், பிறப்பு நீங்கி அவ்வருள் ஞானத்தால் வீடு அடைதற்குரிய சுத்தாவத்தையினும் அவ்வாறே சாக்கிர முதலாக ஐந்தவத்தையினைப் பொருந்துவர். அவை உண்மை யதிகாரத்துட் கூறப்படும். (எ—று.)

சாக்கிரத்தில் நிகழும் ஐந்தவத்தைகளாவன:—

சாக்கிரத்திற் சாக்கிரம்—விடயங்களை நேரே யநுபவித்தல்

சாக்கிரத்தில் சொப்பனம்—துக்க சுகங்கள் வந்த வரலாற்றை நாடி மனோவியாபாரஞ் செய்து நிற்றல்.

சாக்கிரத்திற் சுழுத்தி—சுக துக்கத்தில் மூழ்கி நிற்றல்.

சாக்கிரத்திற் றுரியம்—சுகதுக்கந் தோன்றாது பெரு மூச் செறிந்து நிற்றல்.

சாக்கிரத்தில் அதீதம்—சுகதுக்கங்களைக் கேட்ட மாத்திரையால் திடுக்கிட்டுப் பிராணவாயு சீவியாமல் மூர்ச்சித்து மயங்கி நிற்றல்.

அறிதருமென்பது இடத்தே யென்பது கொண்டு முடியும். சுத்தாவத் தையினியல்பு ஈண்டுக் கூறுதற்கோரியையில்லையாயினும், அவத்தையெனப் படுவன இவ்வளவே போலுமென மலையாதிருத்தற் பொருட்டு இவ்வாறு கூறினர். (௩௫.)

சாக்கிர முதலிய ஐந்தவத்தையினும் சிவதத்துவ மைந்தும் நின்று செலுத்து முறைமை இவ்வாறெனக் கூறுகின்றது.

ஐந்துசாக் கிரத்தி னன்கு கனவினிற் சுழுனை மூன்று
வந்திடுந் துரியந் தன்னி னிரண்டொன்று துரியா தீதந்
தந்திடுஞ் சாக்கி ராதி யவத்தைக டானந் தோறு
முந்திடுங் கரணந் தன்னிற் செயலொறு முணர்ந்து கொள்ளே.

(கொ-டு) சாக்கிராதி அவத்தைகள் சாக்கிரத்தின் ஐந்து. கன வினின் நான்கு. சுழுனை மூன்று. வந்திடுந் துரியந் தன்னின் இரண்டு. தந்திடுந் துரியாதீதம் ஒன்று. தானந் தோறும் கரணந்தன்னிற் செயல் தொறும் உந்திடும் உணர்ந்து கொள்ளே.

(பொ-ரை) மேற் கூறிப் போந்த சாக்கிராதி அவத்தை கள் ஐந்தினும் கலாதிகளைச் செலுத்தி நிற்கும் சிவதத்துவம் எவ் வாறு நிற்குமெனின், சாக்கிரத்தில் சுத்த வித்தை, மகேசுவரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் ஐந்து தத்துவங்களும், சொ ப்பனத்தில் மகேசுவரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் நான்கு தத்துவங்களும், சுழுத்தியில் சாதாக்கியம், சத்தி, சிவம், என்னும் மூன்று தத்துவங்களும், துரியத்தில் சத்தி, சிவம் என்னும் இரண்டு தத்துவங்களும், துரியாதீதத்தில் சிவதத்துவம் ஒன்றும், தொழிற்படுவதான அவ்வத்தானங்கள் தோறும் கருவி யால் அவ்வத்தானங்களில் விடயங்களை யறியும் செய்கை தோ றும் அச்செயல் நிகழ்வதற்குக் கலாதி தத்துவங்களைச் செலுத்தி நிற்கும். இதனை நீ நுண்ணுணர்வால் உணர்ந்து கொள்வா யாக. (எ-று.)

இச் செய்யுள் சுத்ததத்துவமைந்துஞ் செலுத்து முறையில் சாக்கிர முதல் அதீதம் வரையுள்ள சகலத்தில் கீழாலவத்தைக் கோதியதெனவும், நின்மல சாக்கிரமுதல் அதீதம் வரையுள்ள சுத்தாவத்தைக் கோதியதென வும் மலையாது, சகலத்திற சகலமாகிய மத்தியாலவத்தைக் கோதியதென

வுணர்ந்து கொள்ளுதற் பொருட்டு அவ்வவத்தையைக் கூறிய ரூஅ-வது செய்யுளில் உள்ள "கரணந்தன்னிற் செயறூறுங் கண்டு கொள்" என்பதனை இவ்விடத்துங்கூறினர். இஃதறியாதார்தத்தமக்கு வேண்டியவாறே உரைப்பர்.

ஐந்து நான்கு மூன்று இரண்டு ஒன்று என்றது செலுத்துகின்ற சிவதத்துவங்களை யென்பது, உந்திடு மென்றதனனும், * "சுத்தக் கருவிகளைந்துங்கொண்டே சொல்லவத்தையைந்துரு—சித்திக்கும் போதத்திலொன்றொன்று சென்றிடும்" என்பதனுனுமறிக.

இனி, இச்செய்யுளுக்கு இவ்வாறன்றி சாக்கிரத்தில் சாக்கிரமுதலிய ஐந்தவத்தையும், சொப்பனத்தில் சொப்பன முதலிய நான்கவத்தையும், சுழுத்தியில் சுழுத்திமுதலிய மூன்றவத்தையும், துரியத்தில் துரியமுதலிய இரண்டவத்தையும், துரியாதீதத்தில் துரியாதீதமாகிய ஓரவததையும் பொருந்துமென உரைத்தலு மொன்று. இப்பொருட்கு சாக்கிரத்தின் சாக்கிராதியவத்தைகள் ஐந்தெனக்கூட்டுக. தானம்—புருவநடு, கண்டம், இருதயம், நாபி, மூலாதாரம். உந்துதல்—பொருந்துதல்.

"சாக்கிர முப்பத்தைந்து" என்பதுமுதல் இவை நான்கு செய்யுளானும் மேல் ஐந்தவத்தை என்றவற்றின் பெயரும், வகையும், இடமும், அவற்றியல்பும் இவை என்பது கூறப்பட்டது. பெயர்—சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம். வகை—சகலத்திற்கேவலம், சகலத்திற்சகலம், சகலத்திற் சுத்தம். இடம்—புருவநடு, கண்டம், இருதயம். நாபி, மூலாதாரம். இருதயம், கண்டம், நாக்கினடி, புருவநடு, பிரமரந்திரம்.

இயல்பு—கீழ் நோக்கிச் செல்லு முறையினும் மேல் நோக்கித் தோன்று முறையினும் அறியு முறைமையும், சகல சகலத்தில் விடயங்களை நேரே யறியு முறைமையும், சுத்தத்தில் விடயங்களை விட்டு யோகாவத்தையில் காட்சி முதலியவற்றையும், ஞானவத்தையில் உண்மைப் பொருளையும் உணரு முறைமையுமாம். (ருசு.)

காரிய அவத்தையாகிய கேவல, சகல, சுத்தம் என்னும் மூன்றற்கும் காரணமாக கேவல, சகல, சுத்தம் என மூன்று அவத்தையுண்டெனவும், அவற்றின் பொது வியல்பு இவையெனவும் கூறுகின்றது.

---

* சிற்றம்பல நாடிகள், கவித்துறை செ-ருஎ.

கேவல சகல சுத்த மென்றுமூன் றவத்தை யான்மா
மேவுவன் கேவ லந்தன் னுண்மைமெய் பொறிக ளெல்லாங்
காவலன் கொடுத்த போது சகலனு மலங்க ளெல்லா
மோவின போது சுத்த முடையனுற் பவந் துடைத்தே.

(கோ—டு) ஆன்மா கேவல சகல சுத்த மென்று மூன்றவத்தை மேவுவன் எனவும், சுத்தம் உடையன் மலங்களெல்லாம் ஓவினபோது உற்பவந் துடைத்தே எனவுங் கூட்டுக.

(பொ—ரை) மேற்கூறியவாறு நிகழும் காரிய அவத்தைகளாகிய கேவல, சகல, சுத்த மென்னும் மூன்றவத்தைகளை ஆன்மாப் பொருந்துவதற்கு, கேவலம், சகலம், சுத்தமென மூன்று காரண அவத்தையைப்பொருந்தும். அவற்றுள், கேவலமாவது, இச்சா ஞானக்கிரியைகள் சிறிதுந் தொழிற்படாது தான் மாத்திரையாய் ஆணவமலத்தோடு கூடிநிற்றல். சகலமாவது, அவ்வாறு ஆணவமலத்தோடு கூடிநின்ற ஆன்மா பின்பு தநுகரணாதிகளோடு முதல்வன் கூட்டக்கூடி இச்சா ஞானக்கிரியைகள் ஒருவாறு விளங்கி நிற்றல். சுத்தமாவது, அவ்வாறு தநுகரணாதியோடு கூடி நின்ற ஆன்மா ஆணவமுதலிய பஞ்சமலங்களையும் நீங்கும்படி செய்து அம்மலங்கள் நீங்கினமையால் பிறவியொழிந்து சிவத்தோடு கூடி இச்சா ஞானக்கிரியைகளெங்குமாய் வியாபித்து விளங்குமவதரத்தில் சுத்தமுடையனாய் நிற்றல்.

(எ—று.)

சாக்கிர முதலிய ஐந்தவத்தைகளும் சகலத்திற் சகலம், சகலத்திற் கேவலம், சகலத்திற் சுத்தம் என்னும் மூன்றவத்தையினும் தனித்தனி காரியப்படுதலால், காரிய கேவல முதலிய அம்மூன்றற்குங் காரணமாக வேறு கேவல முதலியனவுண்டெனவும் அவற்றினியல்பும் இச்செய்யுளாற் கூறப்பட்டன. காரணசகலத்தும், காரணசுத்தத்தும் ஐந்தவத்தையுண்டென்பதுபற்றிக் காரண கேவலத்தும் ஐந்தவத்தை யுண்டென்பது துணியப்படும். அன்றியும், காரண கேவலத்தில் பஞ்சகிருத்தியம் உண்டென்று கேட்கப்படுதலானும் அவ்விடத்து ஐந்தவத்தை யுண்டென்பது துணியப்படும்.

எவ்வாறெனின், மலத்தால் மறைக்கப்பட்டு அறிவு முதலியன தொழிற்பாடின்றிக் கிடக்கும் நிலை அதீதம். அந்நிலையினின்று சிறிது

எழுச்சி உண்டாதல் துரியம். எழுச்சியுண்டாகியுந் துன்பந் தோன்றா திருத்தல் சுழுத்தி. துன்பந் தோன்றுதல் சொப்பனம். துன்பத்துக்கு வருந்துதல் சாக்கிரம். இவ்வாறு கேவலத்தில் ஐந்தவத்தையுங் காண்க. கருவிகளில்லாத நிலையில் துன்பந்தோன்றுதலும், துன்பத்துக்கு வருந்துதலும் எவ்வாறு கூடுமெனின், இச்சா ஞானக் கிரியா சத்திகள் இருத்தலாற் கூடுமென்க. கருவிகளோடு கூடின நிலையில் உண்டாகின்ற வருத்தத்திற்கும் கருவிகளோடு கூடாத நிலையில் உண்டாம் வருத்தத்திற்கும் வேறுபாடு என்னையோ வெனின், கருவிகளோடு கூடின நிலையில் காரணந் தெரிந்து வருந்துதலும், கருவிகளோடு கூடாத நிலையில் காரணந் தெரியாது வருந்துதலும் வேறுபாடாமென்க. இது எதுபோலவெனின், சிசுப் பருவத்தில் பசியினல் வருந்தும் வருத்தமும், முதிர்ந்த பருவத்தில் பசியினல் வருந்தும் வருத்தமும் போலாம். சிசு துன்பத்திற் காற்றாது வருந்துமேயன்றி அத்துன்பம் பசியினல் வந்ததென்றறியாது. பருவம் வந்தபின் துன்பமும் துன்பத்திற்குக் காரணமும் அறியப்படும். இவ்வாறே கருவிகளோடு கூடாத நிலையினையும், கூடின நிலையினையுங் கண்டு கொள்க. காரண சகலத்தில் ஐந்தவத்தை கேவல, சகல, சுத்தம் என மூன்று பிரிவாய் மேலே விரிவாய்க் கூறப்பட்டது. சுத்தத்தில் ஐந்தவத்தை முன்னர் எழாஞ் சூத்திர முதல் விரித்துக் கூறப்படுமாயினும், இவ்விடத்துச் சுருக்கிக் காட்டுதும். இருவினை யொப்பு மலபரி பாகம் சத்திநிபாதம் நிரம்பிய நிலை நின்மல சாக்கிரம். குரு தரிசனமாகி அவர் அருளுபதேசம் பெறல் நின்மல சொப்பனம். உபதேசத்தில் உறைத்து நின்று சாதித்தல் நின்மல சுழுத்தி. பாச நீக்கம் நின்மல துரியம். சிவப்பேறு நின்மல துரியாதீதம். இவ்வாறு ஐந்துங் காண்க.

ஆன்மா இவ்வாறு நிற்றற்கு ஏது வென்னையெனின், சார்ந்த பொருளின் வண்ணமாய் ஆன்மா நிற்றலாமென்க. ஆதலின், அறியாமையைச் செய்யும் மலத்தைச் சார்ந்து அறியாமைபாகவும், ஏகதேசத்தைச் செய்யும் கருவியைச் சார்ந்து ஏகதேசமாகவும், வியாபகத்தைச் செய்யும் சிவத்தைச் சார்ந்து வியாபகமாகவும் நிற்குமென்க.

கேவலம் ஒன்றுமில்லாமையையும், சகலம் எல்லாமுடைமையையும், சுத்தம் அழுக்கு நீக்கத்தையும் குறிக்குமாதலால், அறிவுமுதலியன பிண்டமாய்த் தொழிற்படுதலேயன்றிப் பகுத்துத் தொழிற்படுவதற்கான கருவிகள் இல்லாத நிலையைக் கேவலமென்றும், கருவிகளுடன் கூடிய நிலையைச் சகலமென்றும், கருவிகளும் மலமுமாகிய அழுக்கு நீங்கிய நிலையைச் சுத்தமென்றும் காரணக் குறியாய் வகுத்தவாறு அறிக.

முத்தியைக் கேவலமென்பதும் தத்துவமாகிய கருவிகளின் நீக்கம் பற்றியேயாம். முன்னைய கேவலம் அறியாமையோடு கூடிக் கருவிகளின் நீங்குதல். பின்னைய கேவலம் அறிவோடுகூடிக் கருவிகளின்நீங்குதல். ()

கேவலத்தின் சிறப்பியல்பு இதுவெனக் கூறுகின்றது.

அறிவில னமூர்த்த னித்த னராகாதி குணங்க ளோடுஞ்
செறிவிலன் கலாதி யோடுஞ் சேர்விலன் செயல்க ளில்லான்
குறியிலன் கருத்தா வல்லன் போகத்திற் கொள்கை யில்லான்
பிறிவிலன் மலத்தி னோடும் வியாபிகே வலத்தி லான்மா.

(கோ - ு.) ஆன்மா அமூர்த்தன். கலாதியோடும் சேர்வு இலன். அராகாதி குணங்களோடும் செறிவு இலன். குறி இலன். அறிவு இலன். செயல்களில்லான். கருத்தா அல்லன். போகத்திற் கொள்கை இல்லான். நித்தன். வியாபி. கேவலத்தில் மலத்தினோடும் பிறிவு இலன்.

(போ - ரை.) மேற்கூறிப்போந்த காரண அவத்தை மூன்றனுள் கேவல அவத்தையில் ஆன்மா எவ்வாறு நிற்குமெனின், உடம்பின்றியும், கலை முதலிய தத்துவங்களோடுகூடி அறிதலின்றியும், புத்தியின் குணமாகிய தருமம், ஞானம், வைராக்கியம், ஐஸ்வர்யம், அதர்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அனைஸ்வர்யம் ஆகிய எட்டுமின்றியும், மனமுதலியகருவிகளின்றியும், இச்சையின்றியும், அறிவின்றியும், ஒரு தொழிலுமின்றியும், தனக்கென ஒரு சுதந்திரமின்றியும், போகத்திற் கொள்கையின்றியும், சரீரத்தோற்றக் கேடுகளின்றியும், சரீரமில்லாமையால் ஏகதேசியாயின்றியும், ஆணவமலத்தோடு அம்மல மாத்திரையாய் வியாபித்து நிற்கும்.()

இச்செய்யுளில் அமூர்த்தம் என்றது உடம்பின் முன்னின்மையை. நித்தம் என்றது தோற்றக்கேடுகளின் முன்னின்மையை. வியாபகம் என்றது ஏகதேசத்தின் முன்னின்மையை. ஏனையின்மைகளும் அந்த அந்த முன்னின்மைகளைக்குறித்து நின்றனவாதலின், இவ்விலக்கணங்கள் சகலம் சுத்தம் என்னும் ஏனையவத்தைகளிற் செல்லாமையால் இவற்றுளொன்றே கூற அமையுமாயினும், மேலைச்செய்யுளில் கேவலந்தன்னுண்மை என்றதனால் இன்மை இவையென விளங்குதற்பொருட்டு இவையனைத்தும் வகுத்துக் கூறினர். பிறிவிலன் மலத்தினோடும் என்றதும் தன்னுண்மை ஆணவ

மலத்தோடு கூடி நிற்றலென்பது விளங்குதற்பொருட்டு. குறி என்பது குறித்தலென்னும் பொருள் குறித்த முதனிலைத் தொழிற்பெயராய் இச்சையை யுணர்த்தி நின்றது. அது, செயல்களில்லான் என்றதனைச் சார வைத்தலானறியப்படும். அராகாதி குணம் என்றது புத்தி குணமெட்டினையும் குறித்தது. அராகாதி குணங்களென்ற உபலக்கணத்தால் ஏனைப் போக்கிய காண்டக்கருவிகளுங் கொள்ளப்படும்.

இச்செய்யுளால் ஆன்மா ஆணவமலத்தோடு கூடிநிற்கும் தன்னுண்மை கேவலமென்பது கூறப்பட்டது. (௩௮.)

சகலத்தின் சிறப்பியல்பு இதுவெனக் கூறுகின்றது.

உருவினைக் கொண்டு போக போக்கியத் துன்னல் செப்பல்
வருசெயன் மருவிச் சத்த மாதியாம் விடயந் தன்னிற்
புரிவதுஞ் செய்திங் கெல்லா யோனியும் புக்கு ழன்று
திரிதருஞ் சகல மான வவத்தையிற் சீவன் சென்றே.

(கோ - டு.) சீவன் உருவினைக்கொண்டு போக (த்து) மருவி போக்கியத்து (மருவி) உன்னல் (மருவி) செப்பல் (மருவி) வருசெயல் மருவி சத்தம் ஆதியாம் விடயந்தன்னிற் புரிவதும் செய்து இங்கு எல்லா யோனியும் புக்கு உழன்று சகலமான அவத்தையில் சென்றே திரிதரும்.

(போ - ரை.) சகல அவத்தையில் ஆன்மா எவ்வாறு நிற்குமெனின், மேற்கூறிப்போந்த கேவல அவத்தையைப்பொருந்தி நின்ற ஆன்மா உடம்பின்மைக்கு மறுதலையாகிய உடம்பினைப்பெற்றும், போக காண்டமாகிய கலாதிதத்துவங்களோடு கூடியும், போக்கிய காண்டமாகிய தரும முதலிய புத்தி குணங்களைப் பொருந்தியும், மனமுதலிய கருவிகளைக்கூடியும், இச்சையுற்றும், வாக்குக்களால் நிகழும் அறிவுற்றும், செயல்களைப்பொருந்தியும், சத்தாதி விடயத்தில் விருப்பஞ்செய்தும், போகத்தை யநுபவித்தும், பிறப்பு இறப்புக்களில் புகுந்துதிரிந்தும், ஏகதேசியாகியும், சகலாவத்தையில் இப்பத்துக்காரியமுமுடையனுய்ச் சீவித்துநிற்கும்.()

போககாண்டமாகிய கலாதியைப் போகமென்றும், போக்கிய காண்டமாகிய புத்தியாதியைப் போக்கியமென்றுங் கூறினார். உன்னல் என்பது இவ்விடத்து விரும்புதலை யுணர்த்திநின்றது. செப்பல் என்பது செப்பப்

படுவனவாய நால்வகை வாக்குக்களையுமுணர்த்தி ஆகுபெயராய் அவ்வாக்குக்கள் காரணமாய் நிகழும் அறிவின்மேல் நின்றது. புரிவதும் என்ற உம்மையால் நுகர்வதும் என்பது வருவிக்கப்பட்டது.

சகலத்திற்கூறிய இப்பத்தும் கேவலத்தில் இல்லை என்றதற்கு மறுதலையாயவாறு கண்டுகொள்க.

இச்செய்யுளால் மேல் ௩௭-வது செய்யுளில் மெய் பொறிகளெல்லாங் காவலன் கொடுத்தபோது சகலனும் என்றது வகுத்துக் கூறப்பட்டது. ()

சுத்தத்தின் சிறப்பியல்பு இதுவெனக் கூறுகின்றது.

இருவினைச் செயல்க ளொப்பி னீசன்றன் சத்தி தோயக்
குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி முன்னைத்
திரிமல மறுத்துப் பண்டைச் சிற்றறி வொழிந்து ஞானம்
பெருகிநா யகன்றன் பாதம் பெறுவது சுத்த மாமே.

(கோ-டு) சுத்தம் என்பதை இருவினை என்பதன் முன்னாக வைத்து பெறுவது ஆமே எனக் கூட்டுக.

(பொ-ரை.) சுத்த அவத்தையில் ஆன்மா எவ்வாறு நிற்குமெனின், மேற்கூறிய சகல அவத்தையினின்ற ஆன்மா அந்நிலையை விட்டு இருவினை ஒப்பு வந்து சிவ சத்தி பதியப் பெறுதலால் குருவருள் பெற்று, ஞான யோகத்தைப் பொருந்தி, மும்மலங்களையும் நீக்கி, விடய அனுபவத்திற்கேதுவாகிய விருப்பு வெறுப்பு என்னும் பழைய வாதனையும் நீங்கி, சிவ ஞானத்தைப் பெருக்கிச் சிவபெருமான் திருவருளை யடைந்து நிற்கும். (எ - று.)

இருவினை யொப்பால் சத்தாதி விடயத்தைப் பற்றிய செயல் நீக்கமும், சத்திபதிதலால் கருவிகளின் கூட்ட நீக்கமும், குருவருள் பெறுதலால் தானஞ் செய்தல் காரணமாக உடம்பு நீக்கமும், ஞானயோகம் பெறுதலால் பிறப்பு இறப்பு நீக்கமும், மலம் அறுதலால் ஏக தேசத்தன்மை நீக்கமும், விருப்பு வெறுப்பு நீக்கத்தால் விடயாநுபவ நீக்கமும். சிவ ஞானப்பெருக்கால் விடய ஞான நீக்கமும் உண்டாம். விடய ஞானம் என்றதனால் விடய இச்சை செயல்களும், கருவி யென்றதனால் பாக காண்டமாகிய கலாதிகளும் நீங்கு மாறறிக.

சகலாவத்தைக்குக் கூறிய காரியம்பத்தும் நீங்குதற்கு ஏதுவாவன மாத்திரமே இச்செய்யுளிற் கூறப் புகுந்தாராதலின், சத்தி நிபாதத்திற்கு மூல

மாகிய மலபரிபாகமும், இரு வினையொப்புக்கு மூலமாகிய சிவ புண்ணிய முமென்னும் இது போன்றவற்றைக் கூறாது விட்டனர். அவையெல்லாம் பின்னர் அ-ஞ் சூத்திரத்திற் கூறப்படும். இரு வினை யொப்பு இது வென மேல் க-ம் சூ-ம். ௬௪-வது செய்யுளுரையிற் கூறியிருத்தல் காண்க.

இச் செய்யுளால் மேல் ௬௪-வது செய்யுளில் கூறிய மலங்களெல்லா மோவினபோது சுத்த முடையனும் என்றது வகுத்துக் கூறப்பட்டது. (௪0.)

மூன்றும் அதிகாரணம் முடிந்தது.

நான்காஞ் சூத்திரம் முடிந்தது.

ஆகத் திருவிருத்தம் உ௭௩௧.

ஐந்தாஞ் சூத்திரம்.

பாச இலக்கணம்.

நான்காஞ் சூத்திரத்தால் அச்சூத்திரத்தை யடுத்துநின்ற மூன்றாஞ் சூத்திரத்திற் கூறிய பசுவுக்கு இலக்கணங் கூறினமையால், அம்முறைப்படி மூன்றாஞ் சூத்திரத்தை யடுத்துநின்ற இரண்டாஞ் சூத்திரத்திற் கூறப்பட்ட பாசத் திற்கு இலக்கணம் இச்சூத்திரத்தாற் கூறுகின்றார்.

பாசமாவது:— ஆணவம், கன்மம், மாயை, மாயாகாரியம், திரோ தானசத்தி என ஐவகைப்படும். அவற்றுள், திரோதானசத்தி என்பது மறைத்தலைச் செய்யுஞ்சிவசத்தி. இதனாலேயே ஏனைய நான்கு மலங்க ளுங் காரியப்படும். ஆதலால், இதனிலக்கணங் கூறவே எல்லாப் பாசங் களி னிலக்கணமுங் கூறியதாகு மென்பதுபற்றி, திரோதான சத்தியி னிலக்கணமட்டுமே இச்சூத்திரத்திற் கூறப்படுகின்றது. திரோதானசத்தி என்பது உயிருள் மறைந்து நின்று கன்மத்திற்கேற்ப அறிவிக்கும் சிவ சக்தி. பந்தமுறுத்துதலால் இச்சிவசத்தி பாசமெனப்பட்டது. பந்தநீக் கத்தில் இதுவே அருளாகும்.

ஆன்மாவானது தன்னைச் செலுத்தி உடனாய் நிற்கும் முதல்வனை அறியமாட்டாதெனச் சூத்திரப்பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது.

பொறிபுலன் கரண மெல்லாம் புருடனை லறிந்தான் மாவை
யறிதரா வவையே போல வான்மாக்க ளனைத்து மெங்குஞ்
செறிதருஞ் சிவன்ற னாலே யறிந்திடுஞ் சிவனைக் காணு
வறிதருஞ் சிவனே யெல்லா மறிந்தறி வித்து நிற்பன்.

(கோ. - டு.) புருடனால் பொறிகரணமெல்லாம் புலன் அறிந்து ஆன்மாவை அறிதரா. அவையேபோல, எங்கும் செறிதரும் சிவன்றனாலே ஆன்மாக்கள் அனைத்தும் அறிந்திடும். சிவனைக்காணு. அறிதரும் சிவனே எல்லாம் அறிந்து அறிவித்து நிற்பன்.

(போ - ரை.) மேலைச் சூத்திரத்துட் கூறிய ஆன்மாவினால், உடனின்று செலுத்தியறியும்படி செய்ய, இந்திரியம் அந்தக் கரணம் முதலியன தத்தம் விடயங்களிற் சென்று இஃது இன்னதென்று அளவிட்டு அறியும். அவ்வாறறிந்தும் அறிகின்ற தம்மையும், தம்மோடு உடனாய் மறைந்து நின்று செலுத்தும் அவ்வான்மாவையும் அவ்விந்திரிய அந்தக் கரணங்கள் அறியமாட்டா. அவ்வாறே எவ்விடத்தும் வியாபகமாகிய முதல்வனது சிற்சத்தியின் அம்சமாகிய திரோதான சத்தியானது உடனின்று வினைப்பயன்களையறிந்தநுபவிக்கும்படிசெய்ய ஆன்மாக்களறிந்தநுபவிக்கும். அவ்வாறறிந்தநுபவித்தும் தம்மையுந் தம்மைச் செலுத்திநிற்குந் திருவருளாகிய திரோதானசத்தியினையும் ஆன்மாக்கள் அறியமாட்டாவாம். ஐம்பொறி முதலியன ஆன்மாவை அறியாவாயினும், ஆன்மா ஐம்பொறி முதலியவற்றையறிந்து உடனிற்றல்போல, ஆன்மாக்கள் முதல்வனை யறியாவாயினும், பாசநீக்கத்தில் தன்னையறியும்படி செய்பவனாகிய அம்முதல்வன், அவ்வான்மாக்களை யறிந்தும் அவற்றிற்கு அறிவித்தும் அவற்றுடனிற்பன். (எ-று.)

சிவனே யெல்லாமறிந்தறிவித்து நிற்பனெனப் பொருட்கண் ஓதியதனை ஆன்மாவாகிய உவமையினும் ஏற்குமாறு சேர்த்துரைத்துக்கொள்க.

ஏற்குமாறு—சிவன் ஒருங்கே யறிந்து ஒருங்கே அறிவிப்பின் என்பதும், ஆன்மா ஒன்றொன்றாயறிந்து ஒன்றொன்றாயறிவிக்கும் என்பதுமாம். அறிந்தறிவித்து நிற்கும் திரோதான சத்தியினியல்பை உபசாரத்தாற் சிவன் மேலேற்றிச் சிவனே யெல்லாமறிந்தறிவித்துநிற்பன் என்றார்.

இந்திரிய முதலான கருவிகள் சடமாதலால், எக்காலத்தும் ஆன்மாவை யறியமாட்டா. ஆன்மா சித்துப்பொருளாதலால் எக்காலத்தும் இறைவனை யறியமாட்டாதென்றல் பொருந்தாது. அன்றியும், இறைவனை யறிந் தின்புறுவதான முத்தி நிலையும் இல்லையாய் முடியுமாதலால், அஞ்ஞான காலத்தில் ஆன்மாவானது இறைவனை யறியாது. அவ்வஞ்ஞானம் நீங்கிய காலத்தில் அறியும். அப்பொழுதறிதலும் இறைவன் அறிவிக்க அறியும் என்பதுணர்த்துதற்கு "அறிதருஞ்சிவ" னென்று கூறினர். அறிதருஞ்சிவன் என்றதை அறிதலைத் தருஞ் சிவன் என விரித்துக்கொள்ளல் வேண்டும். அறி என்பது அறிதல் என்னும் பொருள்பட வந்த முதனிலைத் தொழிற் பெயர்.

இச்செய்யுள் முதனூல் ஐந்தாஞ் சூத்திரம்போல இரு கூற்றை யுடையது. அவற்றுள்,

முதற்கூறு:—பொறி புலன் கரணமெல்லாம் புருடனலறிந் தான்மாவை அறிதரா.

இரண்டாங்கூறு:—அவையேபோல ஆன்மாக்களனைத்து மெங்குஞ் செறிதருஞ் சிவன்றனலே யறிந்திடுஞ் சிவனைக் காணு அறிதருஞ் சிவனே யெல்லாம் அறிந்தறிவித்து நிற்பன்.

இவற்றுள், முதற்கூறு உவமையாய் அதன்க ணுசங்கையின்மையின் அதனை யுள்ளடக்கி நிற்கும் இரண்டாங்கூறு கூறத்தொடங்குகின்றார். (க.)

———

இரண்டாம் அதிகரணம்.

அவையேபோல அறிந்தறிவித்து நிற்பன் என்பது.

ஆன்மாக்களைச் செலுத்துதற்குக் கன்மமேயமையும் முதல்வன் வேண்டாமென்பாரை மறுத்துரைக்கின்றது.

இறைவனே யறிவிப் பானே லீண்டறி வெவர்க்கு மொக்குங்
குறைவதி கங்க டத்தங் கன்மமேற் கோமான் வேண்டா
முறைதரு செயற்குப் பாரு முளரிகட் கிரவியும்போ
லறைதரு தத்தங் கன்மத் தளவினுக் களிப்ப னாதி.

(கோ—டு) முளரிகட்கு இரவியும் முறைதரு செயற்குப் பாரும் போல்.

(பொ—ரை.) ஆன்மாக்களுக்கு இறைவனே அறிவிப்பானெனில், இறைவன் நடுவு நிலைமையுடையவனாதலால், எல்லா ஆன்மாக்களுக்கும் ஒன்று போலறிவிக்கவேண்டும். நடுவு நிலைமையுடையவனாயினும் அவரவர் கன்மத்துக் கீடாக ஏற்றத்தாழ்வுகளாய் அறிவிப்பானெனின், அறிவிப்பதற்குக் கன்மமேயன்றி இறைவன் வேண்டாம். தாமரையினது விரிவிற்கு அத்தாமரையின்றொழிலே யன்றிச் சூரியனும் வேண்டப்படுதல் போலவும், உழவு முதலிய செயல்களின் பயனுக்கு அச்செயல்களேயன்றி நிலமும் வேண்டப் படுதல் போலவும், சொல்லுகின்ற அவரவர் கன்மம் பக்குவமாதலும் பயன்றருதலும் இறைவனை யின்றியமையாமையின் அக்கன்மமேயன்றி இறைவனும் வேண்டப்படும். ஆதலால், கன்மமே போது மென்றல் பொருந்தாது. (எ—று.)

குறைவதிகங்கள் கன்மத்தின் காரியமாகவும், தத்தங் கன்மம் எனக் காரணத்தைக் காரியமாக வுபசரித்தார். கன்மம் காரணம். குறைவதிகங்கள் காரியம். செயல் என்பது செயல்களின்பயனைக்குறித்தலின் ஆகுபெயர். முறைதரு செயலாவது, உழுதல், எருப்பெய்தல், வித்திடல், களைபறித்தல், நீர் கட்டுதல், காத்தல் என்றிம்முறையாற்றரப்படுஞ் செயலென்க. (உ.

கன்மத்தோடு கூடிய ஆன்மா அறிவுடைப்பொருளாதலின், அவ்வான்மாவே தன்னைச் செலுத்திக் கொள்ளும் இறைவன் வேண்டாமென்பாரை மறுத்துரைக்கின்றது.

அறிந்திடு மான்மா வொன்றை யொன்றினா லறித லானு
மறிந்தவை மறத்த லானு மறிவிக்க வறித லானு
மறிந்திடுந் தன்னை யுந்தா னறியாமை யானுந் தானே
யறிந்திடு மறிவ னன்று மறிவிக்க வறிவ னன்றே.

(பொ—ரை) மேற் கூறியவாறு கன்மத்தோடுங் கூடிய ஆன்மா அறிவுடைப் பொருளாதலின், அவ்வான்மாவே கன்மத்தின் பலனையறிந் தெடுத்துக் கொள்ளுமெனின், அறிந்து வரும் இவ்வான்மா அறிவுடைப் பொருளாயினும், ஒவ்வொரு விடயங்களை ஒவ்வொரு இந்திரியங்களாலறிதலேயன்றி, இந்திரியத்தின் துணையில்லாமல் தானே ஒரு விடயத்தையும் அறியாது. அவ்வாறு இந்திரியத்தைக் கொண்டு விடயத்தையறிதலே ஆன்மாவின் இயல் பென்பையாயின், முன் அறிந்த விடயத்தைப் பின்னொரு விடயத்தையறியுங்கால் மறவாதிருக்கவேண்டும். மறத்தல் காணப்படுகின்றது. அறிந்த விடயத்தைப் பின்னறிய வேண்டாமையால் மறக்கலாயிற் றென்பையாயின், மறந்து பிறி தொன்றை யறிந்து கொண்டிருக்குங்கால் மறந்த விடயத்தை மீண்டு ஒருவன் அறிவிக்க அதில் அறிவு செல்லுகின்றது. அவ்வாறாயினும் யாதானு மொன்றை யறிந்து கொண்டிருப்பதனால் அறிதலில் வேறுபாடில்லை யென்பையாயின், அறிகின்ற தன்னை யறியாமையினால் அறிதலில் வேறுபாடில்லை யென்பது எவ்வாறு கூடும்? ஆதலால், ஆன்மாவானது முதல்வன் போலத்தானே யறியும் சுதந்திர அறிவின்றி இறைவன் அறிவிக்க அறியுந்தன்மையுடையது. (எ—று.)

இச்செய்யுளால் ஆன்மசந்நிதியில் கரணங்களறியு மென்னும் சாங்கியர் மதம், ஒன்றை யொன்றினா லான்மா வறிதலானும் என்றதனால் பரிகரித்து முதற்கூறுவலியுறுத்தப்பட்டது மாயிற்று. விடயத்தை இந்திரியத்தால் ஆன்மா அறியுமெனக் கூறியதனால், இந்திரியம் ஆன்மாவினால் விடயத்தை

யறிந்து தன்னையும் ஆன்மாவையும் அறியாதென்ற முதற் கூறுவலியுறுத்தியவாறு அறிக. இன்னின்ன விடயத்தை இன்னின்ன இந்திரியத்தால் அறியு மென்று வெளிப்படக்கூறுது ஒன்றையொன்றிறு லெனப் பொதுப்படக் கூறியதும் ஐந்தையுங் கொண்டறிவது ஆன்மா வென்பது வலியுறுத்தற் பொருட்டு. (ரு.)

மாயேயமாகியதத்துவங்களே ஆன்மாவிற்கு அறிதலை யுண்டு பண்ணும்; இறைவன் வேண்டா மென்பாரை மறுத்துரைக்கின்றது.

கருவியாற் பொருளாற் காட்டாற் காலத்தாற் கருமந் தன்னு
லுருவினு லளவா னூலா லொருவரா லுணர்த்த லானு
மருவனு யுண்மை தன்னி லறியாது நிற்ற லானு
மொருவனே யெல்லாத் தானு முணர்த்துவ னருளி னுலே.

(கோ-டு) உண்மை தன்னில் அருவனுய் அறியாது நிற்றலானும், எல்லாத்தானும் அருளினுலே உணர்த்துவன் ஒருவனே.

(பொ-ரை) ஆன்மா அறிதலைச் செய்வதற்கு மாயாகாரியங்களாகிய தத்துவங்களே யமையும், இறைவன் வேண்டு மென்றல் கூடாதெனின், ஆன்மாவினுற் செலுத்தப்படு மான்மதத்துவமும், புறக்கருவிகளாகிய தாத்துவிகமும், அறிவு முதலியவற்றை விளக்குவனவாகிய கலை, வித்தை முதலிய தத்துவங்களும், கன்மபலனை வரையறை செய்யும் காலம், நியதி முதலிய தத்துவங்களும், தூல வுடம்பும், பிரத்தியட்சாதி பிரமாணங்களும், நூல்கட்குக் காரணமாகிய நால்வகை வாக்குக்களும் பொருந்தும்படி ஒருவன் கூட்டி உணர்த்த உயிர் உணரும். அவைகளைக் கூட்டாத அநாதி கேவலத்தில் உயிர் மலத்துடன் கூடி அருவனுய் உணராது நிற்கும். அம்மாயா காரியங்கள் அறிதற்குத் துணையாயினும் சடமாதலின் தாமே ஆன்மாவுடன்கூடாது. அவையில்லாதகேவலத்தில் அறிவு நிகழாமையின் உயிர் அவ்வற்றை யறிந்து எடுத்துக்கொள்ளாது. ஆதலின், அவ்வையனைத்தையும் ஆன்மாவுடன் கூட்டி அருளாலறிவிப்பதற்கு ஒரு இறைவன் வேண்டப்படுமாதலால் இறைவனையின்றி மாயாகாரியங்களால் அறிதல் கூடாது.()

கருவி—உயிரால் செலுத்தப்படும் ஆன்ம தத்துவம். பொருள்—தாத்துவிகம். காட்டு—உயிரினறிவிச்சை செயல்களை விளக்குவனவாகிய கலை முதலியன. காலம்—கன்மத்தை முந்தாது பிந்தாது வரையறுத்துச்செலுத்துங் காலதத்துவம். கருமம்—கன்மத்தை ஏறாது குறையாது நிறுத்தும் நியதிதத்துவம். உரு—உடம்பு. அளவை—பிரமாணம். நூல்—நூல்கட்குக் காரணமாகிய நால்வகை வாக்கு. ஒரு விடயத்தை யறிதற்கண் இவற்றுளொன்றையின்றியும் அமையாமை கண்டுகொள்க. கருமம், அதனை நிறுத்தும் நியதிதத்துவத்தைக் குறித்தலானும், நூல், அதற்குக் காரணமாகிய வாக்கைக் குறித்தலானும் ஆகுபெயர். அவ்விரண்டினையும் இயற்பெயர்ப் பொருளாகவைத் துரைப்பாருமுளர். தன்னுண்மை என்பது உண்மை எனத் தலைக் குறைந்து நின்றது. தன்னுண்மையில் ஒன்றுமிலனாதல்பற்றி அருவன் என்றார்.

“இறைவனே” என்ற செய்யுளால், அறிவித்தற்குக் கன்மமே அமையும் என்னும் ஆருகதர் மதமும், “அறிந்திடு மான்மா” என்ற செய்யுளால், உயிரே அமையுமென்னும் மீமாஞ்சகர் மதமும், இச்செய்யுளால் மாயையமே அமையுமென்னுஞ் சாங்கியர்மதமும் பரிகரித்து, பதிபசுபாசமென்னு மூன்றனுள், பசுவும் பாசமும் நீக்கப்படவே, பாரிசேடஅளவையால் முதற்செய்யுளிற் கூறியவாறு அறிதருஞ் சிவனே யெல்லாமறிந் தறிவித்து நிற்றல் வலியுறுத்தப்பட்டது. (ச.)

இறைவன், பிறர் அறிவிக்க வேண்டாது தானே ஆன்மாக்களின் பொருட்டுச் சூக்குமம் தூலம் அதிசூக்குமமென்னும் மூவகையான ஐந்தொழிலைச் செய்வனெனக் கூறுகின்றது.

கருவியும் பொருளுங் காட்டுங் காலமுங் கருமந் தானு
முருவமு மளவு நூலு மொருவரு முணர்த்த லின்றி
யருவனு யுலக மெல்லா மறிந்தவை யாக்கி வேறு
யொருவனே யுயிர்கட் கெல்லா முயிருமா யுணர்த்தி நிற்பன்.

(கோ - ரு.) ஒருவனே அருவனாய் வேறாய் உலகமெல்லாம் அறிந்து அவை ஆக்கி உயிர்கட்கெல்லாம் உயிருமாய் உணர்த்தி நிற்பன்.

(போ - ரை.) மேற்கூறியவாறு சித்துப் பொருளாகிய ஆன்மா தன்னின் வேறாகிய இறைவனால் தத்துவ முதலாகியவற்றைக் கூட்டி அறிவிக்க அறிதல்போல, சித்துப் பொருளாகிய

இறைவனும் அவ்வாறே வேறொருவனாலறிவிக்க அறிவனென்று கூறலாகாதோவெனின், அவ்வாறாயின் அவனுக்கு அறிவிக்க மற்றொருவனும் அவ்வாறே மேலுஞ்சென்று வரம்பின்றியோடுதலென்னுங் குற்றத்திற்கிடனாகும். ஆதலால் தத்துவ முதலியனவும், வேறு அறிவுடைப் பொருளும், அறிவிக்க வேண்டாது இறைவன் தானே முதல்வனாய் உயிர்களின் பொருட்டுக் கேவலாவத்தையில் அறிதல் வகையில் சூக்கும ஐந்தொழிலையும், சகலாவத்தையில் விடயத்தைத் தோற்றுவிக்கு முறையில் சிருட்டி முதலிய தூல ஐந்தொழிலையும், அச்சகலாவத்தையினுள்ளும் சாக்கிரத்தில் இன்பத்துன்பப் பலனை ஊட்டுவிக்கு முறையில் அதி சூக்கும ஐந்தொழிலையுஞ் செய்து நிற்பன். (எ - று)

உலகெலா மறிந்தென்றது கேவலத்தில் சூக்கும ஐந்தொழில் செய்தலைக் குறித்தது. ஆக்கி எனவே இனம்பற்றி ஏனை நான்கு தொழில்களும் உடன் கொள்ளப்படும். அவ்வைந்தும் தூல ஐந்தொழில். உணர்த்தி நிற்பன் என்றது சாக்கிராதி அவத்தைக்குரிய இலாடத்தானத்தே நின்று செய்யப்படுவனவாய் உயிர்கட்கு அறிவிப்பதாகிய இவ்விடத் தெடுத்துக் கொண்ட அதிசூக்கும ஐந்தொழிலைக் குறித்தது.

சூக்கும ஐந்தொழிலாவது:—சர்வ சங்காரத்தில் மல பரிபாக தாரதம்மியத்திற்குத் தக்கபடி அறிவிக்கத் தக்கவர்களை அறிவித்தல் அநுக்கிரகம். மறைக்கத் தக்கவர்களை மறைத்தல் திரோபவம். ஆன்மாக்களின் சஞ்சித கன்மங்களைப் பக்குவப்படுத்தல் சங்காரம். மாயா காரியங்களை வெளிப்படத் தகுந்தவைகளாகச் செய்தல் திதி. தோன்றுதற்குரிய சித்துப் பொருள் சடப் பொருள்களைப் பார்த்துக்கொண் டிருத்தல் சிருட்டி. இது உயிர்களின் பொருட்டு இறைவன்றன்மாட்டு நிகழ்வது.

தூல ஐந்தொழிலாவது:—தநுகரண புவன போகங்களைத் தோற்றுவித்தல் சிருட்டி. அவற்றை நிலைப்படுத்தல் திதி. அவற்றை அழித்தல் சங்காரம். அவற்றுள் அநுபவிக்க வேண்டாதனவற்றை மறைத்து அநுபவிக்க வேண்டியவற்றில் அழுத்துதல் திரோபவர். அநுபவிக்கவேண்டியவற்றைத் தோற்றுவித்தலும் முத்தி தருதலும் அநுக்கிரகம். இது உயிர்களின் பொருட்டு உயிரின் மாட்டும் உடல் உலகமாகிய பாசத்தின்மாட்டும் நிகழ்வது. திரோபவம் அநுக்கிரகமிரண்டும் உயிரின்மாட்டும் ஏனைய பாசத்தின்மாட்டும் நிகழும்.

அதிசூக்கும ஐந்தொழிலாவது:—ஆன்மாவிற்கு அறிவித்தல் சிருட்டி. அறிந்தவற்றுள் அழுத்துதல் திதி. முன்னறிந்தவற்றினின்றும் பிரித்தல் சங்காரம். ஒன்றனை யறியவேண்டுங்கால் பிறிதொன்றனை யறியவொட்டாது மறைத்தல் திரோபவம். அறிந்தவற்றை யநுபவிக்கச் செய்தல் அநுக்கிரகம். இது உயிரின்மாட்டு நிகழ்வது.

இம்மூவகையான ஐந்தொழில்களுள், சூக்கும ஐந்தொழில் அநாதிபெத்த சித்துருவின் பொருட்டு என முதற் சூத்திரத்தானும், தூல ஐந்தொழில் உயிர்கள் கன்மத்தானாயி னமர்ந்து செல்லத் தலைவனுயென இரண்டாஞ் சூத்திரத்தானும் சங்கை யுத்தரங்களோடு கூறிவிட்டமையால் இச்சூத்திரத்துள் அதிசூக்கும ஐந்தொழிற்கணுண்டாம் சங்கை யுத்தரங்களை விரித்துக் கூறுகின்றார். அவ்விரு தொழில்களும் முதல்வன் றொழிலாதல் போல, இவ்வதிசூக்கும ஐந்தொழிலும் முதல்வன் றொழிலேயாமென் றுணர்த்தவேண்டி அவற்றையும் உடன் கூறினர். உயிருக்கு இறைவனறிவிப்பதுபோல இறைவனுக் கறிவிக்க ஒருவன் வேண்டுமெனில் அவ்வாறே மேலுஞ் சென்று வரம்பின்றியோடு மாதலின் அக்குற்றம் நிகழாதவாறு ஒருவரு முணர்த்தலின்றி யென்றார். (ரு.)

உயிருக்கு இறைவன் அறிவித்தலால் அவ்விறைவன் உயிர் போலும் பந்தமடையான் எனக் கூறுகின்றது.

இறைவன்றன் சந்நிதிக்க ணுலகின்றன் சேட்டை யென்னு
மறைகளு மறந்தாய் மாயை மருவிடான் சிவன வன்க
ணுறைதரா தசேத னத்தா லுருவுடை யுயிர்கட் கெல்லா
நிறைபரன் சந்நி திக்க ணீடுணர் வுதிக்கு மன்றே.

(கோ - ௬.) எல்லாம் நிறைபரன் சந்நிதிக்கண் உருவுடை உயிர்கட்கு நீடு உணர்வு உதிக்கும். அன்றே. அசேதனத்தால் மாயைமருவிடான். இறைவன்றன் சந்நிதிக்கண் உலகின்றன் சேட்டை என்னும் மறைகளும் மறந்தாய். சிவனவன்கண் உறைதராது.

(போ - ரை.) கருவி முதலியன விடயங்களை அறிதலால் வரும் பயன் அக்கருவிகளுக்கு அறிவித்து நிற்கும் உயிர்க்காயவாறு போல, உயிர் அறிதலால் வரும் பயன் அவ்வுயிருக்கு அறிவித்து நிற்கும் இறைவனுக்காதல்வேண்டும். வேண்டவே, இறைவனும் பந்த முறுவனெனப்பட்டு வழுவாம். ஆதலால், கருவி

முதலியவற்றிற்கு உயிர் அறிவிப்பதுபோல உயிர்க்கு இறைவ னறிவிப்பனென்றல் பொருந்தாதெனின், பொருந்துமாறு கூறு தும். கருவி முதலியன உயிரின சங்கற்பத்தால் உணரும். உயிர் இறைவன் சங்கற்பமின்றி எல்லாவற்றினும் நிறைந்துநின்ற அவன் சந்நிதி மாத்திரையால் உணரும். உயிர் வெவ்வேறு விதமாய் உணர்தற்கு வினைக்கீடான வுடம்பினை யுடையதாய் நிற்கும். இறைவன் அவ்வாறு உணர்தலும், வினையும் வினைப்பயனாகிய உடம்புடன் கூடுதலும் இன்றி நிற்பன். அன்றியும், உயிருக்குப் பிரபஞ்சம் சுட்டியறியப்படும். அகண்டாகாரமாய் நிற்கும் இறைவனுக்குச் சடமாகிய உலகம் சுட்டி யறியப்படமாட்டாது. ஆகவே சடமாகிய பிரபஞ்சத்தையும், சுதந்திர அறிவில்லாத உயி ரையும் இறைவன் சந்நிதி கூட்டுவிக்குமென்ற ஆகமப் பிரமாணத் தையு மறந்து பிணங்குகின்ற அறிவில்லாதவனே! உயிருக்கும் இறைவனுக்குங்காட்டிய வேற்றுமையால் பிரபஞ்சத் தோற்றத் தையும், சங்கற்பத்தையும், உடம்பையுமுடைய உயிர்க்கே அறி தற்பயனன்றி அம்மூன்று மில்லாத இறைவனுக்கு அறிதற் பய னில்லை. (எ-று.)

இறைவனுக்குப் பிரபஞ்சத் தோற்றமும் உடம்பும் இல்லை என்றது ஒக்கும். சங்கற்பம் இன்றிச் சந்நிதி மாத்திரையால் உயிரும் உடலுங் கூடு மாயின், கேவலத்திலும் இறைவன் சந்நிதிக்குக் கேடில்லையாதலால், அவ் விடத்துக் கூடவேண்டுமன்றோ? கூடாமையானும், சிவனே யெல்லா மறிந்தறிவித்து நிற்பனென மேல் இச்சூத்திரம் முதற் செய்யுளிற் கூறுத லானும் சந்நிதி மாத்திரை யென்றல் எவ்வாறு பொருந்துமெனின், சந்நிதி என்றது நேரான எதிர்முகமாதலைக் குறித்ததன்று. இறைவனோடு பிரிப் பின்றி நிற்குந் திருவருளைக்குறித்ததாம். ஆகவே சந்நிதி மாத்திரையா லென்றது திருவருளால் என்றபடியாம். அத்திருவருளுக்குச் சங்கற்ப முண்டோ இல்லையோ? இல்லையெனின் சந்நிதி மாத்திரைக்கு மேற்கூறிய குற்றமுண்டாம். உண்டெனின் உயிர்போலப் பந்தத்தைப் பொருந்தும் ஆதலால் உண்மையாதெனின், திருவருளுக்குச் சங்கற்பமுண்டு. அச்சங் கற்பம் தன் பொருட்டன்று; உயிர்களின் பொருட்டாம். உயிர்களின் சங்கற்பம் இந்திரியத்தின் பொருட்டன்று; தன் பொருட்டேயாம். ஆத லால், உயிர் உணர்தற்பயன் உயிர்க்கா மாறுபோல இறைவன் உணர்தற்

பயன் இறைவனுக்காகாமையறிக. சந்நிதி யென்பதற்குத் திருவருட் சங்கற்பம் என்பதே முடிவான பொருளாமென்பதை இந்நூல் முதற் சூத்திரம் ககவது செய்யுளில் "சிவனவன்றன் சந்நிதிதன்னினின்றே" என்பதற்கு "சிவசத்திசங்கற்ப ரூப சந்நிதியினின்றும்" எனவும், சிவஞானபோதச் சிற்றுரை ஐந்தாஞ்சூத்திரம் உம் அதிகரணத்து முதல் வெண்பா உரையில் "சிவசத்தி அவ்வக்காரியங்களின் உன்முகமாதலாகிய சங்கற்பமே ஈண்டுச் சந்நிதி எனப்படும்" எனவும் மாதவச் சிவஞானயோகிகள் அருளியவாற்றானறிக. திருவருட் சங்கற்பத்திற்கு எல்லாம் எதிர்முகமாதலின், அது சந்நிதியாதல் பொருந்துமாறு காண்க.

மறந்தாய் என்பது மறந்தவனே என்னும் பொருள் குறித்த விளியுருபேற்ற பெயர். மாயை என்பது மாயாகாரியமாகிய உடலையும், உணர்வு என்பது உணர்வின் பயனையுங் குறித்தலின் ஆகுபெயர். உயிர்கட்கு என்றவிடத்து இறைவனைப் பிரிக்கும் பிரிநிலை ஏகாரம் விரித்துரைக்க. உயிராலறியும் ஐம்பொறியின் பயன் உயிர்க்காதல் போலன்றி, இறைவனால் அறியும் அறிதற்பயன் உயிர்க்கே யாதற்கு ஏதுக் கூறவேண்டி உருவுடை உயிர் என உயிரை விசேடித்தார். உயிர்க்கு உருவுடைமையின் உருவருதற்கான கன்மத்திற்கேற்றவாறு உணர்தற் பயன் உயிர்க்கே யாயினமை காண்க. சந்நிதிக்கணீடுணர்வுதிக்குமென்றதும் இறைவனு லுணர்தற் பயன் உயிர்க்கே யாமென்பதற்கு ஏதுவாகும்! * "வினையாற் கண்டறிந்து நிற்குங்கா—ணெண்ணுன் சிவனசத்தையின்று" என்றார் முதனூலாசிரியரும். அன்றே-அசை.

இச்செய்யுளால், உயிருக் கறிவித்தல்பற்றி இறைவனுக்குப் பந்தமின்மை கூறப்பட்டது. (௬.)

இறைவன் உயிர்க்கறிவித்தலால் விகார மெய்தானெனக் கூறுகின்றது.

உலகமே யுருவ மாக யோநிக ளுறுப்ப தாக
இலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக
அலகிலா வுயிர்ப்பு லன்கட் கறிவினை யாக்கி யைந்து
நலமிகு தொழில்க ளோடு நாடக நடிப்ப னாதன்.

(கோ—டு.) நாதன் உலகமே உருவமாக யோநிகளுறுப்பதாக இலகு பேரிச்சா ஞானக் கிரியையுட் கரணமாக அலகு இலா உயிர்கட்குப் புலன் அறிவினை ஆக்கி நலம் மிகு தொழில்கள் ஐந்தோடும் நாடகம் நடிப்பன்.

---

* சிவஞானபோதம், ஐந்தாஞ் சூத்திரம் செ-ரு.

(போ—ரை.) இறைவன் உயிர்க்கு அறிவிக்குங்கால் எவ்வாறு நின்று அறிவிப்பனெனின். ஆன்மா உடம்பு முதலியவற்றைக் கொண்டு நின்றுணருமாறு போல, இறைவனும் இருநூற்றிருபத்து நாலு புவனங்கள் திருமேனியாகவும், எண்பத்து நான்கு நூறாயிர குறி பேதங்கள் அவயவங்களாகவும், மிக்கவிளக்கமுடைய இச்சா ஞானக்கிரியைகள் உட்காரணமாகவும் கொண்டு எண்ணிறந்த உயிர்களிடத்து அறிவிற் கறிவாய் நின்றுணர்த்துவன். அவ்வாறுணர்த்துதலாகிய நலம் மிகுந்த அதி சூக்கும ஐந்தொழிலும் மேற்கூறிய திருமேனி முதலிய கருவிகளின் துணையைக் கொண்டன்றிச் சங்கற்ப மாத்திரையாகவே நாடகமாகச் செய்தருளுவன். (எ—று.)

உயிரானது தன்னின் வேறான பொருளைத் தொழிற் படுத்துங்கால் கருவிகரணங்களோடுகூடித் தொழிற்படுத்தும். அதனால் விகாரத்தையடையும். தன்னுடலைத் தொழிற்படுத்தற்குச் சங்கற்பமே போதும். அதனால் விகாரமெய்தாது. அது போல, இறைவனும் தனது திருமேனியாய் விளங்கும் உலகத்தைச் சங்கற்ப மாத்திரையால் தொழிற்படுத்துதல்பற்றி விகாரமெய்தானென்றறிந்து கொள்க. புலன் என்றது புலன்களையறியும் அறிவைக் குறித்தலின் ஆகுபெயர். சங்கற்ப மாத்திரையாற் செய்வன் என்பது தோன்ற நாடக நடிப்பன் என்றார். இச்செய்யுளிற் கூறப்பட்ட ஐந்தொழில் மத்தியாலவத்தையாகிய சாக்கிரத்தில் அறிவித்தற்கட்படும் அதி சூக்கும ஐந்தொழில் என்க.

திருமேனியாகவும் அவயவங்களாகவும் புவனத்தையுங் குறிபேதத்தையும் கூறியதனால் இறைவன் உயிர்க்கு உயிராய் நின்று உணர்த்துதல் மட்டுமன்றி அவ்வுயிராலுணரப்படும் பொருள்களினும் நிறைந்து நின்று அப்பொருள்களை விளங்கும்படி செய்கின்றானென்பதறிக. அவ்வாறு பொருள்களில் நிறைந்து நிற்கவில்லையாயின் பொருள்கள் விளங்கமாட்டாவாம். உயிர்க்கறிவித்தலால் பயனுமின்று. இவ்வாறு நின்று உணர்த்துவதும் சங்கற்பமாத்திரை என்றதனால் கரணத்தோடு கூடித் தொழிற் செய்யும் உயிர் விகாரமெய்துதல் போல் இறைவன் விகாரமெய்தானென்பது குறிப்பாலுணரக் கிடந்தது. விகாரம்—வேற்றுமைப்படுதல். (எ.)

இறைவன் உயிர்க்கு அறிவித்தற் கட்படும் அதி சூக்கும ஐந்தொழிற்குப்பயன் ஏகதேச அறிவும், வியாபக அறிவும் நிகழ்ந்து

அவற்றால் போக மோட்சங்களை உயிர் அடைதலாமெனக் கூறுகின்றது.

தெரிந்துகொண் டொரோ வென்றாகச் சென்றைந்து புலனும் பற்றிப்
புரிந்திடு முணர்வி னேடும் போகமுங் கொடுத்தி யோனி
திரிந்திடு மதுவுஞ் செய்து செய்திகண் டுயிர்கட் கெல்லாம்
விரிந்திடு மறிவுங் காட்டி வீட்டையு மளிப்பன் மேலோன்.

(கோ-டு) மேலோன் உயிர்கட் கெல்லாம் ஐந்தும் பற்றிப் புலன் ஒரோவொன்றாகத் தெரிந்து கொண்டு சென்று உணர்வினேடும் புரிந்திடும் போகமுங் கொடுத்து, யோனிதிரிந்திடுமதுவுஞ் செய்து, செய்தி கண்டு விரித்திடும் அறிவுங்காட்டி வீட்டையும் அளிப்பன்.

(பொ-ரை.) மேற்கூறிய அதி சூக்கும ஐந்தொழிலாகிய அறிவித்தல் நலமிகுந்த தொழிலாமாறு எவ்வாறெனின், ஆன்மாவிற்கு நலமாவது போக மோட்சமென இருதிறப்படும். இறைவன், அறிவித்தலாகிய தொழிலால் ஆன்மாவிற்கு ஐம் பொறிவழியாக விடயங்களை அறிவித்து, அவ்வாறு அறிவித்தலால் ஏகதேச அறிவை நிகழச் செய்து, உலக போகத்தைக்கூட்டி, அப் போகாநுபவத்தினுல் பலபிறவிகளை எய்தும் படிக்கும் அதனுல் வெறுப்புத் தோன்றும் படிக்குஞ் செய்து, பருவம் முதிர்ந்த விடத்து வியாபக அறிவை விளக்கி அவ்வறிவுக்குப் பயனாக பர போகமாகிய பேரின்பத்தைக் கொடுத்தருள்வன். ஆதலால், நலமிகுந்த தொழிலாயிற்று. (எ-று.)

ஏகதேச அறிவு நிகழ்ந்தன்றிச் சிறு போக நுகர்ச்சி செல்லாமையும், வியாபக அறிவுநிகழ்ந்தன்றிப் பர போகநுகர்ச்சி செல்லாமையும் உணர்த்த வேண்டி "புரிந்திடு முணர்விஞேடு போகமுங்கொடுத்து" என்றும் "விரித்திடு மறிவுங்காட்டி வீட்டையு மளிப்பன்" என்றுங்கூறினர்.

இச் செய்யுளால், தூல ஐந்தொழில்களுள் திரோதானத்தின் கண் அடங்குவதாகிய அதிசூக்கும ஐந்தொழிற்குப்பயன் போக மோட்சம் எனக் கூறப்பட்டது. (அ.)

அவ்வைந்தொழிலால் இறைவனுக்கு யாதொருபயனுமின்றெனவும், அருட் பெருக்கால் அவ்வாறு செய்தல் இயல்பே யாமெனவும் கூறுகின்றது.

அருளது சத்தி யாகு மரன்றனக் கருளை யின்றித்
தெருள் சிவ மில்லை யந்தச் சிவமின்றிச் சத்தி யில்லை
மருளினை யருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்
கிருளினை யொளியா லோட்டு மிரவியைப் போலவீசன்.

(கோ—டு.) அருளது அரன்றனக்குச் சத்தியாகும். அருளையின்றித் தெருள் சிவமில்லை. அந்தச் சிவமின்றிச் சத்தியில்லை. கண்கட்கு இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப்போல ஈசன் மன்னுயிர்க்கு மருளினை அருளால் வாட்டி அளிப்பன்.

(போ—ரை.) மேற் கூறியவாறு ஆன்மாவின் பொருட்டு இறைவன் செய்யும் அறிவித்தலாகிய ஐந்தொழிலால் அவ்விறைவனுக்கு ஆகக்கடவது என்னையோவெனின், ஆன்மாக்கட்கு மேலைச்செய்யுளிற் கூறியவாறு போகங் கொடுத்து, அறிவு காட்டி, வீட்டையளிப்பதாகிய அக்கருணையும் இறைவனுக்கு இயற்கைக் குணமெனப்படுஞ் சத்தியாம். அவ்வருட் குணமாகிய சத்தியையின்றிச் சிவமில்லை அச்சிவத்தை விட்டுச் சத்தி நீங்குதலில்லை. ஆதலின், உலகத்துப் புற இருளினைக் கிரணத்தால் ஓட்டிக்கண்களுக்குப் பிரகாசத்தைச் செய்கின்ற ஆதித்தன் போல, அச்சத்தியானது அருட்குணமாக இறைவன் அவ்வருளால் உயிர்கட்குமயக்கத்தினை நீக்கி அநுக்கிரகஞ் செய்வன். ஆதித்தனுக்கு இருளை ஓட்டுவது இயற்கையாய், ஓட்டுவதனால் ஆகக்கடவதோர் பயனுமின்றாதல் போல, இறைவனுக்கு அருட்குணம் மேம்படுதல் இயற்கையாய், அதனாலாகக் கடவதோர் பயனில்லை. (எ—று.)

இச் செய்யுளால், அவ்வருள் இறைவனுக்கு அணிகலமாதல் கூறப்பட்டது. (கூ.)

இரண்டாம் அதிகரணம் முடிந்தது.

ஐந்தாஞ் சூத்திரம் முடிந்தது.

ஆகத்திரு விருத்தம் உ௩௬.

———

ஆறாஞ் சூத்திரம்.

பதி யிலக்கணம்.

மேல் அடுத்துநின்ற இரண்டு சூத்திரங்களால் பசு பாசங்களுக்கு இலக்கணங் கூறினமையால், இலக்கணங்கூற வேண்டியதாய் எஞ்சிநின்ற பதிப்பொருளுக்கு இலக்கணம் இச்சூத்திரத் தாற் கூறுகின்றார்.

சிவம் அறியப்படும் பொருளாகவும் அறியப்படாத பொருளாகவுமின்றிச் சித்துச் சத்தாய் நிற்குமெனச் சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது.

அறிவுறும் பொருளோ வீச னறிவுறா தவனே யென்னி
னறிபொரு ளசித்த சத்தா மறியாத தின்றா மெங்குஞ்
செறிசிவ மிரண்டு மின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கு
நெறிதரு சத்தின் முன்ன ரசத்தெலா நின்றி டாவே.

(கோ - டு.) ஈசன் அறிவுறும் பொருளோ அறிவுறாதவனோ என்னின், அறிபொருள் அசித்து அசத்தாம். அறியாதது இன்றாம். நெறிதரு சத்தின் முன்னர் அசத்தெலாம் நின்றிடா. (ஆகலான்) எங்கும் செறிசிவம் இரண்டும் இன்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்.

(பொ - ரை.) மேலைச் சூத்திரத்துட் கூறியவாறு ஆன்மாக்கட்கு அறிவித்தலைச் செய்யும் சிவபிரான், மனத்தாற் கருதிக் கண்ணாலறியப்படும் பொருளோ? எவ்வகையானும் அறியப்படாத பொருளோ? எனின், கருதிக் கண்ணாலறியப்படும் பொருளாயின், அவ்வாறு அறியப்படும் உலகப் பொருள்போல அறிவில்லாததாய் அழிந்துபோவதுமாகும். அறியப்படாத பொருளென்று சொல்லில் சூனியமெனப்படும். அன்றியும், இறைவனை யறிதல் முத்தியென்றலும் வீணாகும். ஆதலால், கண்ணாலறியப்படாததாய் மனத்தாற்கருதி யறியப்படும் பொருளென்று கூறலாமோவெனின், நெறியாகிய சிவஞானத்தால்

விளங்கப்படும் சிவபிரான் முன்னர்ச் சடமாகிய மனமுதலிய கரணங்கள் முனைத்துநிற்கும் வலிமையில்லாதனவாய் நீங்குந்தன்மையுடையனவாதலின் அத்தகைய மனத்தால் அறியப்படும் என்றலும் பொருந்தாது. இவ்வாறாயின் உண்மைதான் யாதோவெனின், எவ்விடத்தும் வியாபகமாகிய சிவம், கருவி கரணங்களா லறியப்படாததாய், எவ்வாற்றாலும் அறியப்படாத தல்லாததாய்ச் சிவஞானத்தா லறியப்படுஞ் சித்துச் சத்தாய் நிற்கும். (எ-று.)

ஈசன் என்பது வினவுவோர் கூற்றும் சிவம் என்பது விடை கூறுவோர் கூற்றுமாய் நின்று வேறு வேறு முடிபு கொள்ளுதலால் திணைவழுவின்மை யுணர்க. ஈசன்—உயர்திணை. சிவம்—அஃறிணை.

அசத்தெனவே அசித்தாலு மடங்குமாயினும், அசத்தென்பது சூனியமன்றென விளக்குதற் பொருட்டு அசித்தும் வேறு கூறினர். சித்தெனவே சத்தாய் நிற்குமென்பதும் பெறப்படுமாயினும், எக்காலத்தும் ஒருதன்மையான சித்தென்பது விளங்குதற்பொருட்டுச் சத்தென்பதும் வேறு கூறினர். இவ்வாறன்றிச் சிற்சத்து, சிற்சடசத்து, சடசத்து என்னும் சத்து மூன்றனுள் சடசத்தாய பாசத்தையும், சிற்சடசத்தாகிய உயிரையும் நீக்குதற்குச் சித்தொடு சத்தாய் நிற்குமென்றார் என்றுரைத்தலுமொன்று. நெறிதரு என்றவிடத்துத் தருதல்—விளங்குதல். நெறி—சிவஞானம். அவ்விடத்துச் சத்து என்றது சிவத்தைக் குறித்தது. கருவிகள் சிவத்தின் முன் முனைத்து நில்லாமையின் சிவம் கருவிகளால் அறியப்படும் பொருளாதலில்லை. சிவஞானத்தால் அறியப்படுதலின் அறியப்படாத பொருளாதலுமில்லை யாகலான் "இரண்டுமின்றி" என்றார். ஆகலான் என்பது சொல்லெச்சமாக வருவித்துரைக்க.

அழியும் பொருள் சடமாதல்போல் சடப்பொருள் அழியுமென்றல் கூடாது. கூடுமெனின், மலம் நித்தியமென்பதின்றாய் வழுவாம். ஆதலால், சடமாயும் பலவாயும் இருப்பின் அழியுமென்றும், சடமாயும் ஒன்றாயு மிருப்பின் அழியாதென்றும் அறிக.

சித்துச் சத்தென்ற இரண்டிலக்கணங் கூறுவானேன்? எனின், பாசஞானத்தா லறியப்படாதென்றமையால் அதனாலறியப்படும் சடம்போலன்றிச் சித்தாயும், பதிஞானத்தா லறியப்படுமென்றமையால் அதனாலறியப்படாத அசத்துப்போலன்றிச் சத்தாயும் விளங்கும் உண்மை யுணர்த்துதற்குச் சித்துச் சத்து என்றார். பதிஞானத்தின் முன் அசத்து முனைத்து

நில்லாமையின் அதனாலறியப்படாதாயிற்று. சத்துச் சித்தென்னாது, சித்துச் சத்தென்பானேனெனின், பாச நீக்கத்தில் முதற்கண் விளங்குவது சித்தும், அதிலழுந்துதலால் சத்தும் அநுபவமாகுமுறைபற்றி என்க. அவ்வாறாயின், சத்து வேறு சித்து வேறோவெனின், அன்று. அவ்விரண்டும் எது போலுமெனின், சூரியனும் ஒளியும்போலாம், உலகப்பொருளை விட்டுச் சூரியனை நோக்குவார்க்கு முதற்கண் விளங்குவது ஒளியும், அவ்வொளியை ஊடுருவிச் சென்ற பின்னர் விளங்குவது சூரியனும்போல அறிக. சத்துச் சித்தென்று கூறும் இடமெல்லாம் பொருள் இருக்கும் முறைமைபற்றியாம். அனுபவமுறை இருக்கும் முறைகளின் வேறுபாடு எப்பொருளிடத்தும் உண்டு.

முதல்வனுக்குப் பொதுவியல்பு மேல் உ-ஞ் சூத்திரத்திற் கூறப்பட்டமையின், இது சிறப்பியல்பெனக் கொள்க. ஆகலினாற்றான் இச்சூத்திரத்தை உண்மை அதிகாரத்தைச் சாரவைத் தோதினர்.

இச்செய்யுள் சிவஞானபோதம் ஆறும் சூத்திரத்திற் கொண்ட இரு கூற்றோடும் "அறியாததின்றாம்" என்றதனை ஒரு கூறாகக்கொண்டு முக்கூற்றினையுடையதாம். அவற்றுள்,

முதற்கூறு:—அறிபொருள் அசித் தசத்தாம்.

இரண்டாங்கூறு:—அறியாததின்றாம்.

மூன்றாங்கூறு:—அறிவுறும் பொருளோ ஈசன் அறிவுறாதவனோ என்னின், நெறிதரு சத்தின் முன்னாசத்தெலாம் நின்றிடா (ஆகலான்) எங்குஞ் செறி சிவம் இரண்டுமின்றி சித்தொடு சத்தாய் நிற்கும்.

முதனூலில், இரண்டாங் கூற்றின்கண் ஐயப்பாடு முதலியன நிகழாது எல்லாச் சமயத்தார்க்கும் ஒப்பமுடிந்தமையால், வேறெடுத் துரைக்காது விடுத்தனர். ஆயினும், மந்தவுணர்வுடையாருக்கு அதன்கண் ஐயம் நிகழாமைப் பொருட்டு இந்நூலாசிரியர் வேறு கூறாக எடுத்தோதிப் பரிகரித்தனர். (௪)

முதலதிகரணம்.

அறிபொருள் அசித்தசத்தாம் என்பது.

வேறுகச் சுட்டி யறியப்படுதலால் அறிவின்மேல் வைத்து அறியப்படும் பொருளனைத்தும் அசத்தெனக் கூறுகின்றது.

ஆவதா யழிவ தாகி வருதலா லறிவு தானுந்
தாவலா லுலகு போகந் தனுகர ணாதி யாகி
மேவலான் மலங்களாகி விரவலான் வேறு மாகி
யோவலா லசத்தாஞ் சுட்டி யுணர்பொரு ளான வெல்லாம்.

(கோ-டு.) அறிவுதானும் ஆவதாய் அழிவதாகி வருதலால், தாவலால், தனுகரண உலகு போகம் ஆதியாகி மேவலால், மலங்களாகி விரவலால், வேறுமாகி ஓவலால், சுட்டி உணர் பொருளான வெல்லாம் அசத்தாம்.

(பொ-ரை.) விடயத்தை வேறுக நின்று கருதியுணரும் சுட்டறிவு, ஒரு பொருள் பற்றித் தோன்றியும் பின்னொரு பொருளைப்பற்றுங்கால் முந்தின தோற்றம் கெட்டும் நிற்றலால், அவ்வறிவு தோற்ற நாச முடையதாம். அதனுலும், ஒன்றில் நிலை பெருது ஓரிடம் விட்டு ஓரிடம் தாவுதலாலும், தனுகரண புவனபோக முதலியனவாய்ப் பல வேறு வகைப்பட அறிதலானும், மலத்தோடு விரவுதலானும், உண்மை ஞானம் வந்த விடத்து வேறுபட்டொழிதலானும், அச்சுட்டறிவு அசத்தேயாம். ஆதலால், அச்சுட்டறிவினுல் சுட்டியறியப்பட்ட பொருளனைத்தும் அசத்தாவனவன்றி அவற்றுள் ஒரு பொருளும் சத்தாதல் செல்லாது. (எ-று.)

அசித்தா மென்பதூஉம் பாடம். அறிவுதானும் என்ற விடத்து உம்மை இழிவு சிறப்பு. வேறுமாகி என்றவிடத்து உம்மை மேற்கூறப்பட்ட ஆவதாயென்பது முதலியவற்றைத் தழுவியது.

இச்செய்யுளால், அறிபொருள்களி னொருசாரனவேயன்றி அனைத்தும் அசத்தாதலில்லை யென்னும் தார்க்கிகரை நோக்கி அறிபொருளனைத்

தும் அசத்தென்பது அவற்றையறியும் அறிவியல்பு பற்றித் தெரித்துணர்த்தப்பட்டது. (உ.)

பொருளின் மேல் வைத்து அழிதற்றன்மை பற்றி அறியப்படும் பொருள் அசத்து எனக் கூறுகின்றது.

மண்டனில் வாழ்வும் வானத் தரசயன் மாலர் வாழ்வு
மெண்டரு பூத பேத யோனிக ளியாவு மெல்லாங்
கண்டவிந் திரமா சாலங் கனாக்கழு திரதங் காட்டி
யுண்டுபோ லின்றும் பண்பி னுலகினை யசத்து மென்பர்.

(கோ—டு.) கண்ட எல்லாம் எனவும், உண்டு போல் காட்டி எனவுங் கூட்டுக.

(பொ—ரை.) மேற்கூறியவாறு அறிவின்தன்மை பற்றிக் காணப்படும் பொருள் அசத்தாமாறு போல, பொருளின் தன்மைபற்றி ஆராயுமிடத்தும் அசத்தேயாம். எவ்வாறெனின், மண்ணுலகில் அரசர் வாழ்வும், விண்ணுலகில் இந்திரன், பிரமா, விட்டுணு முதலியோர் வாழ்வும், பூதபரிணாமமாகிய எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்கள் எவற்றினும் பொருந்திய வாழ்வும், ஆகிய காணப்பட்ட யாவும் தோன்றும் பொழுதே இல்லையாய் மாறுபடுகின்ற இந்திர ஜாலமும், கடை போதலின்றி இடையே அழியப்படுஞ் சொப்பனக் காட்சியும், கடும் வேனில் நீங்குங்காரணத்தால் அழியப்படுங் கானற் சலமும் போல நெடுங் காலம் நிலைபெறுவன போற்றோன்றி விரையக் கெட்டு மறைந்து போம். ஆதலால், அவ்வாறு கெட்டொழிந்து போம் தன்மை பற்றி உலகப் பொருளனைத்தும் அசத்தெனக் கூறுவர். (எ—று.)

அசத்தும் என்னும் உம்மை பொருட்டன்மையாற் சத்தென்பது பட நின்ற எதிர் மறை.

சற்காரிய வாதத்தில் உள்ளது போகாது, இல்லது தோன்றாது என்னும் முறைபற்றி எல்லாம் உள்பொருளேயன்றி அசத்தென்ப தொன்றில்லையென்று கூறவும், இவ்விடத்து அறியப்படும் பொருள் அசத்தென்று கூறுதல் முரணாதோ வென்னுஞ் சாங்கியரை நோக்கிக் காரணரூபமா யொடுங்கியிருத்தலையே அசத்தென்ப தொன்றில்லை என்பதே யன்றிக் காரியத்தி

னழிவு இல்லை என்று சற்காரிய வாதங் கூறுவதின்று; ஆதலால் முரணுமை யறிகவென இந்திரசால முதலிய உவமையில் வைத்துக்காட்டப்பட்டது.(ரு)

முதலதிகரணம் முடிந்தது.

இரண்டாம் அதிகரணம்.

அறியாததின்றும் என்பது.

அறியாத பொருள் உண்டெனக் கொள்வோ மென்பார்க்கு அப்பொருள் வினை செய்வாளுல் அறியப்பட்டுக்காரியப்படாமை யால் உண்டென்றல் பொருந்தா தெனக் கூறுகின்றது.

உணராத பொருள்சத் தென்னி னொருபய னில்லை தானும்
புணராது நாமுஞ் சென்று பொருந்துவ தின்று மென்றுந்
தணவாத கரும மொன்றுந் தருவது மில்லை வானத்
திணரார்பூந் தொடையு மியாமைக் கெழுமயிர்க் கயிறும் போலும்.

(கோ - டு.) உணராத பொருள் சத்தென்னின் தானும் புணராது, நாமும் சென்று பொருந்துவது என்றும் இன்றும். ஒரு பயன் இல்லை. வானத்து இணர் ஆர்பூந்தொடையும், யாமைக்கு எழுமயிர்க் கயிறும்போலும் தணவாத கருமம் ஒன்றுந்தருவதும் இல்லை.

(பொ - ரை.) அறியப்படும் பொருள்கள் தோன்றியழி யக் காண்கின்றோம்; அதுபோல அறியப்படாத பொருட்குத் தோற்றக்கேடு முதலியன இல்லாமையால், அவ்வறியப்படாத பொருளைச் சத்தெனக் கொண்டாற்படும் இழுக்கென்னையோவெ னின், அவ்வாறு கொண்டதனுல் அது நம்மைப் பொருந்தாது; நாமும் அதனைப் பொருந்துதல் ஒரு நாளும் இல்லை. ஆதலால், ஆகாயப்பூவும் யாமை மயிரும் உண்டென்றுகொள்வதனுல் பய னில்லாததுபோல அறியப்படாத பொருளால் பெறக்கடவதோர் பயனுமில்லையாம். ஆகாயத்தினும் யாமையினும் பூவும் மயிரும்

தோற்றமின்றி அதி சூக்குமமாயுள வென்றும், அவற்ருல் ஆகற் பாலனவும் உளவென்றுங்கொள்ளக் கூடாதோவெனின், அறிந்து மாலையாகவும் கயிருகவும் ஆக்கும்படியாக இல்லாமையால், அப் பொருளும் பயனும் உண்டென்று கூறுதல் பொருந்தாது.

(எ - று.)

அவ்வாருயின், அறியப்படுவதும் அறியப்படாததுமென்னும் இவ்வி ரண்டும் இன்றி நிற்கும் பொருளை அநிர்வசனமெனக் கூருது சித்தொடு சத்தாய் நிற்கும் என்றது எவ்வாறு கூடுமென்னும் மாயாவாதியை மறுத்தற் கெழுந்தது வருஞ்செய்யுள். (ச)

இரண்டாமதிகரணம் முடிந்தது.

மூன்ரும் அதிகரணம்.

அறிவுறும் பொருளோ......சத்தாய் நிற்கும் என்பது.

அறியப்படுவதும் அறியப்படாததுமாகிய பரம்பொருள் அநிர்வசனமுமன்று மனம் வாக்குக்களுக்கு எட்டுவதும் அன்று எனக் கூறுகின்றது.

தத்துவஞ் சத்த சத்துச் சதசத்து மன்றென் ருலெ
னுய்த்துணர்ந் துண்டோ வின்ருே வென்றவர்க் குண்டென்
வைத்திடுஞ் சத்தை யாகு மனத்தொடு வாக்கி றந்த [ருேதில்
சித்துரு வதுவ சித்தா மனத்திறைற் றேர்வ தெல்லாம்.

(கோ - டு.) மனத்திஞல் தேர்வதெல்லாம் அசித்தாம்.

(பொ - ரை.) மேற்கூறியவாறு அறியப்படுவதும் அறி யப்படாததுமல்லாத பரம்பொருளை, உள்ளதுமன்று, இல்லது மன்று, உள்ளதுமில்லதுமன்று, வேறுமன்று எனக்கூறும் அநிர் வசனமாகக்கொண்டால் உண்டா மிழுக்கென்னையோவெனின், நன்று சொன்னய். அவ்வாறு ஆராய்ந்துணர்ந்து அநிர்வசன

மெனக் கூறப்படும் பொருள் உண்டோ இல்லையோ என வினவு மிடத்து, உண்டென்பையாயின் உள் பொருளாகவே முடியும். இல்லையென்பையாயின் இல்லாத சூனியப் பொருட்கோதிய குற்றமுண்டாம். அக்குற்றத்திற்கஞ்சி உண்டென்று ஒத்துக்கொள்வையாயின், பரம்பொருள் உள்பொருளாவதன்றி அநிர்வசனமன்றென்பதற்கு உன் வாய் மொழியே சான்ருகும். இனி, உள் பொருளாயின் என்னலறியப்பட வேண்டுமென்பையாயின், அப் பரம்பொருள் மனம் வாக்குக் காயங்களாலாகிய பாசவுணர்வினைக் கடந்து நிற்கும் அறிவுடைப் பொருளாதலின் அம்மனவாக்குக் காயங்களைக்கொண்டு ஆறிதல் கூடாது. அவற்றைக்கொண்டறியப்படுமாயின் அவற்ருலறியப்பட்டனவெல்லாம் சடமாய் அழிவெய்துமாறுபோல, பரம்பொருளும் சடமாய் அழிவெய்திவிடும். ஆதலால், பாச அறிவால் அறியப்படாதென்பதனை யறிவாயாக. (எ - று.)

தேர்வது என்பது ஒருமை. எல்லாம்என்பது பன்மை. தேர்வதெல்லாம் என்பது* "உள்ளியதெல்லா முடனெய்தும்" என்றாற்போல ஒருமைப் பன்மை மயக்கம். (ரு)

சிவ பரம்பொருளை அப்பரம் பொருளின் அருளால் ஆன்மா பிரிப்பின்றி நின்று அறியுமெனக் கூறுகின்றது.

அறிபொரு ளசித்தாய் வேரு மறிவுருப் பொருள்சத் தென்னி
னறிபவ னறியானுகி லதுவின்று பயனு மில்லை
யறிபவ னருளி ஞலே யநந்ய மாகக் காண்ப
னறிபொரு ளறிவாய் வேரு யறிவரு ளுருவாய் நிற்கும்.

(கோ - ௬.) அறிபவன் அநந்யமாக அருளினாலே காண்பன்.

(போ - ரை.) மேற்கூறியவாற்ருல் அறியப்படும் பொருள் சடமாயழிதலும், அறியப்படாத பொருள் உண்டென்ருல் பயனின்ருதலும் பெறப்பட்டமையால், சிவபரம்பொருள் அறியப்படுவதுமன்று அறியப்படாததுமன்று எனக்கூறின், அவ்

* திருக்குறள், வெகுளாமை செ-கூ.

வாறு கூறுவது உள்ளதுமன்று, இல்லதுமன்று என்பதுபோல அநிர்வசனமாகாதோவெனின், மேற்கூறியவாறே அப்பொருள் உண்டோ இல்லையோ என வினவுமிடத்து உண்டெனபையாயின் அறியப்பட்ட பொருளாய்ச் சடமாய் அழிவெய்தும்; அறியப் படாத பொருட்குத் தோற்றக்கேடு முதலியன இல்லாமையால் இல்லாத பொருள் உண்டென்று கொள்வோமென்பையாயின் அப்பொருள் அறிதற்குரிய ஆன்மாவால் அறிதல்வேண்டும். அறி யுமாயின் இல் பொருளென்றல் கூடாது. அறிய முடியாதாயின் அவ்வாறுகொண்ட பொருளும் இல்லையாய் முடிந்து அதனாற் பெறக்கடவதோர் பயனுமில்லையாய் முடியும். ஆதலால், பரம் பொருள் அறியப்படுமென்று கூறுதலும், அறியப்படாதென்று கூறுதலுங் குற்றமாம். இவ்வாறாயின், உண்மையாதெனின், சிவம் அறியப்படுவதன்று என்பதற்குக் கருவி கரணங்களால் அறியப் படுவதன்று எனவும், அறியப்படாததன்று என்பதற்குச் சிவ ஞானத்தாலறியப்படாததன்று எனவுங்கொள்ளல்வேண்டும். இம் முறைப்படி பாசபசு ஞானங்களைக் கடந்துநின்று அறிதற்கு வல் லமையுடைய ஒருவன் அச்சிவப்பொருளை அப்பொருளோடு ஒன்றுபட்டுநின்று அப்பொருளின் அருளாலறிவன். ஒன்றாய் நின்றால் அறிதல் கூடாதே? அறிதல் கூடுமாயின் ஒன்றாய் நிற் றல் கூடாதே? எனின், அப்பொருளையறியும் அநுபவத்தில் அறிவு நிகழ்வதற்கு ஆன்மாவின் அறிவுடன் கலந்து ஒன்றாயும், அறியப்படுவதற்கு பொருட்டன்மைபற்றி ஆன்மாவின் வேறாயும், அறிதற்றொழில் நிகழ்தற்கு ஆன்மாவின் அறிவைச் செலுத்தி அவ்வறிவோடு உடனாயும், இவ்வாறு இறைவன் அத்துவிதமாய் நிற்பன். எதுபோலவெனின், கண் சூரியனையறியுங்கால் கண் ணொளியோடு சூரியன்கலந்து ஒன்றாயும், காணப்படுவதற்குச் சூரியன், கண்ணின் வேறாயும், காணுந்தொழில் நிகழ்ச்சிக்கு சூரி யன், கண்ணொளியைச் செலுத்தி உடனாயும் நிற்றல் போலவாம்.

(எ - று.)

சிவனருளினாலே சிவனை யறியு மென்பது பாரிசேடப் பிரமாணத்தா லுணர்த்த வேண்டி முதற் செய்யுளிற் கூறிய "அறிபொருளசித்தாம்"

என்பதனையும், நான்காவது செய்யுளிற் கூறிய "உணராதபொருள்சத் தென்னின்' 'என்பதனையும் அனுவதித்துக் கொண்டு கூறினார். கூறவே, அறிபொருளசித்தாயும் வேறாயு மிருத்தலாலும், அறியப்படாத பொருள் உண்டென்பதாற் பயனில்லை யாகலானும், இவ்விரண்டும் விலக்கப்பட்டு அவனருளால் அவனை யறிய வேண்டுமென்பது பாரிசேடப் பிரமாணமா மாறு காண்க.

கிழவனறிந்தான் கிழத்தியறிந்திலள் என்றவிடத்து அதனை யறிந்தான் அறிந்திலள் என்னும் பொருள்பட உரு பேற்ற சுட்டுப்பெயர் வருவிக்கப் படுமாறுபோல, அறிபவன் அநந்நியமாக அருளினாலே காண்பன் என்றவிடத்து அச் சிவப் பொருளை என்னும் உருபேற்ற சுட்டுப்பெயர் வருவித்து ரைக்க.

அறிவருளுருவாய் நிற்கு மெனக் காரணத்தைக் காரியமாகவுபசரித் தார். உடனாய் நிற்றல் காரணம். அறிவை யருளும் உருவாய் நிற்றல் காரியம். அத்துவிதமாய் நிற்றலின், காண்பானுங் காட்சிப்பொருளும் அருளாலுபகரித்தலுமாதல் கூடுமென்பதுணர்த்த, அருளினாலே யநந்நிய மாகக் காண்பனென்பதனுடன் அறிபொருள் அறிவாய் வேறாய் அறிவரு ளுருவாய் நிற்குமியல்புங் கூறினார்.

இவையிரண்டு செய்யுளானும் பரம்பொருள் அநிர்வசனமென்னும் மாயாவாதி மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து மூன்றாங்கூறு வலியுறுத் தப்பட்டது. (௯)

யோகபாவனையால் இறைவனைக் காணக் கூடுமென்பாரை மறுத்து அவனருளால் காண வேண்டும் என்பதை வலியுறுத்து கின்றது.

பாவிப்ப தென்னிற் பாவம் பாவகங் கடக்கிற் பாவம்
பாவிக்கு மதுநா னென்னிற் பாவகம் பாவங் கெட்டுப்
பாவிப்ப தென்னிற் பாவம் பாவனை யிறந்து நின்று
பாவிக்கப் படுவ தாகும் பரம்பர னருளி னாலே.

(கோ-ரு.) பாவிப்பதென்னின் பாவம். பாவகம் கடக்கின் பாவம். பாவம் கெட்டுப் பாவிப்பதென்னின் பாவம். பாவிக்கும் அது நானென் னின் பாவகம். பாவனை இறந்துநின்று பரம்பரன் அருளினாலே பாவிக்கப் படுவதாகும்.

(போ-ரை.) இறைவனைத் தரிசிப்பதற்கு மேற்கூறிய வாறு அவனருளால் பிரிப்பின்றி நிற்றல் வேண்டாம். யோக

பாவனையினால் இறைவனைத் தரிசிக்கக் கூடுமென்பையாயின், அப்பாவனை கருவிகளோடு கூடினதாயின் சகலாவத்தையாம். கருவிகளை நீங்கி நின்றதாயின் சகலத்திற் றுறியாதீத மெனப்படுங் கேவலாவத்தையாம். இரண்டுமின்றி நின்று பாவிப்பதாயின், அது அநிர்வசனமெனப்பட்டு ஒன்றுமில்லாத பாழாய் முடியும். ஆதலால், அவ்வாறொன்றுமின்றிப் பாவனைக்கெய்தாத அப்பரம் பொருளைத் தன்னிடத்தில் வைத்து நானே அப்பரம் பொருளென அப்பொருள் எய்தியதாகப் பாவிப்பனென்பையாயின், அப்பாவனையானது கண்ணிற் சூரியனிருப்பதாகவும், நாக்கில் சர்க்கரையிருப்பதாகவும் பாவிப்பதால், ஒளியும் தித்திப்பும் பொருந்தாதவாறுபோலப் பயனில்லையாய் முடியும். ஆதலால், அப்பாவனையனைத்தும் நாடக மாத்திரையேயன்றிப் பரம்பொருளை யறிதற்குச் சாதனமாகாவாம். ஆதலின், மேற்கூறியவாறு பிரிப்பின்றி நின்று அவனருளால் அவனைக்காண்டலே அவனையறிதற்கேற்ற பாவனையாம். (எ - று.)

பாவம், பாவகம், நாடகம் என்பன ஒரு பொருட்சொற்கள். இவ்விடத்து அவத்தையைக்குறித்தது. அநிர்வசனமென்பது உறுதியாய்ச் சொல்லப்படாதது. எவ்வாறெனின், வசனம் சொல்வதற்குரியது. நிர்வசனம் நிர்ப்பந்தமென்பதுபோல உறுதியாய்ச் சொல்வதற்குரியது. அநிர்வசனம் உறுதியாய்ச் சொல்லப்படாதது என்க.

இச்செய்யுளால், பாதஞ்சலர் மதம்பற்றி யாசங்கித்துப்பரிகரித்து அவனருளாலே அவனைக் காணவேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது. (எ)

மலமாகிய குற்றம் நீங்கிய உயிரினறிவால் சிவனை யறியக் கூடுமென்னும் சிவசம வாதியை மறுத்துரைக்கின்றது.

அந்நிய மிலாமை யானு மறிவினு ணிற்றலானு
முன்னிய வெல்லா முண்ணின் றுணர்த்துவ தாதலானு
மென்னறி யானென் றோது மிருஞ்செருக் கறுத்த லானுந்
தன்னறி வதனாற் காணுந் தகைமைய னல்ல னீசன்.

(கோ - டு.) ஈசன் அந்நியமிலாமையாலும் எனக்கூட்டுக.

(பொ - ரை.) மேற்கூறியவாறு பாவனையான யோகத்தால் இறைவனையறிதல் கூடாதாயினும், மலம் நீங்கியவிடத்து

ஆன்ம அறிவு தடையின்றி விளங்குமாதலால், அவ்வறிவால் இறைவனை யறியக்கூடுமென்றலே பொருந்தும் அவனருளா லறியவேண்டுமென்றல் பொருந்தாதெனின், அவ்வாறாயின், உயி ரறிவால் அறியப்படும் பொருள் உயிரின் வேறாயிருத்தல் வேண் டும். அச்சிவம், உயிரின் வேறல்லாமையால் ஒன்றாயும், அறிவித் தற்கு உயிரறிவினுள்ளீடாக நிற்றலால் வேறாயும், அறிந்தவற்றிற் செல்வதற்கு உயிரினறிவினுள்ளாக நின்று செலுத்துதலால் உட னாயும் நிற்கும். அவ்வாறு நிற்கும் அப்பரம்பொருளை, அறிவா னும், அறிபொருளும், அறிவும் எனப்பகுத்தறிய முடியாதாம். யான் அறிவேனென்றதனால் மலம் நீங்கியதுமில்லை. ஆதலால், அவ்விறைவன் உயிரறிவால் அறியப்படுவனென்றல் பொருந் தாது. (எ - று.)

உன்னியவெல்லா முன்னின்றுணர்த்துவ னென்பதற்கு, மேல் சூ-வது செய்யுளில் அறிவருளுருவாய் நிற்கும் என்பதற்கு உரைத்தவா றுரைக்க. அஃதாவது, உன்னியவெல்லா முன்னின்றுணர்த்துதல் காரி யம். உடனாய் நிற்றல் காரணம். காரணத்தைக் காரியமாக வுபசரித்த வாறும். செருக்காலுண்டாம் பகுத்துணர்வைச் செருக்கென உபசரித்தார்.

ஒன்றாய் என்றதனால் உயிர்தனித்து நில்லாதென்பதும், வேறாய் என் றதனால் தனித்து நில்லாவிடினும் இறைவனை உயிர் அறிதல் கூடுமென்ப தும், உடனாயென்றதனால் இறைவனை யறிதல்கொண்டு உயிருக்குச் சுதந் திரம் உண்டென்று கொள்ளலாகாதோவென்னும் ஐயத்தை நீக்கி அறியுங் காலும் உடனிருந்தறியுமென்பதும், ஆயின் உயிர் அறிந்தது என்பானேன் எனின், அறிதற்பயன் உயிர்க்காதலின் அது நோக்கியென்பதும் இச்செய் யுளால் கூறியவாறு உய்த்துணர்ந்து கொள்க. (அ)

பிரித்தறிய முடியாத நிலையில் ஒன்றாதலும், வேறாதலும், உடனாதலும் உள என்பதற்கு ஏதுக்கூறுகின்றது.

ஒன்றெனு மதனா லொன்றென் றுரைப்பதுண் டாகை யாலே
நின்றனன் வேறாய்த் தன்னி னீங்கிடா நிலைமை யாலே
பின்றிய வுணர்வுக் கெட்டாப் பெருமைய னறிவி னுள்ளே
யென்றுநின் றிடுத லாலே யிவனவ னென்ன லாமே.

(போ - ரை.) இறைவன் ஒன்றேயென்று வேதங்கள் கூற வும் மேற்கூறியவாறு உயிரோடு ஒன்றாய் நிற்றல், வேறாய்நிற்றல்,

உடனாய் நிற்றல் ஆகிய முத்திறமும், உயிரும் உளவாமென்றலை எதனாலறியக்கூடுமெனின், உயிருஞ்சிவமும் ஒன்றென்று சொல்லில், அவ்வாறு அறிவதொரு பொருளுண்டாதலால், அச்சிவம் அறிவானுக்கு வேறாய் நிற்றல் பெறப்படும். அதுகொண்டு வேறென்று சொல்லில், அவ்வாறு வேறாக அறிவதற்கு அறிவுக்குளறிவு பிரிந்து தோன்றாமையால் வேறென்னு மறிவுக்கெட்டாது உடனாதல் பெறப்படும். அவ்வாறு அறியுங்கால் அவ்வறிவினுள்ளாக எக்காலத்தும் நீரினிடத்து ஒன்றாகக் கலந்திருக்கும் நிழல் போல, உயிரே சிவமெனும்படி கலந்துநிற்குமாதலால், ஒன்றாதல் பெறப்படும். ஆதலால், இவ்வாறு உயிரோடு பிரிப்பின்றி அத்துவிதமாய் நிற்கும் இறைவனைக் காணவேண்டின், கண்ணொளியோடு பிரிப்பின்றி நின்று கண்ணுக்கு வேறு விடயங்களைக் காணும்படி உபகரிக்கும் சூரியனைக் கண் காணவேண்டின், அதன் கிரணத்தாற் காண்டல்போல அவனருளாற் காண்டலே தக்கது.
(எ - று.)

நீரினிடத்து வெளியின்மையால் நிழல் உண்டென்பது எவ்வாறு அறியப்படுமெனின், தன்னுள் இயங்கும் உயிர்கட்கு நீர் இடங்கொடுத்தலால், நீரின்கண் வெளி உண்டென்பது பெறப்படும். வெளி உண்டாதலால் நிழல் உண்டென்பதும் பெறப்படும். அந்நிழல் வேறு நில்லாது நீரோடு கலந்து நிற்றலால் நீர்போலக் காணப்படாதாயிற்று. இது சிவஞானபோதச் சிற்றுரை எட்டாஞ்சூத்திரத்து இரண்டாமதிகரணத்து மூன்றாவது வெண்பாவுரையிற் கண்டது.

அத்துவிதம் என்னுஞ்சொல்லில் முன்னின்ற அகரம், அன்மை, இன்மை, மறுதலை என்னும் மூன்று பொருளையுணர்த்தும். உதாரணமாக அநசுவம் என்றவிடத்து அசுவமல்லாத புலி முதலியவற்றைக் குறியாது அசுவம் போன்றிருக்கும் கழுதையைக் குறித்தலால் அகரம் அன்மைப் பொருளில் வந்தது. "அமலம்" என்றவிடத்து மலமின்மையைக் குறித்தலால் அகரம் இன்மைப்பொருளில் வந்தது. "அநீதி" என்றவிடத்து நீதியின் மறுதலையைக் குறித்தலால் அகரம் மறுதலைப்பொருளில் வந்தது. இம்மூன்றனுள், இன்மைப்பொருள்கொண்டு இரண்டாவதாகிய பசுபாசப் பொருள்களில்லை, பிரமப்பொருள் ஒன்றே உள்ளது என்பர் ஏகான்மவாதிகள். ஒன்றென்றுணர்வது வேறுண்டாதலால் இவர் கருத்துப்பொருந்தாது.

மறுதலைப் பொருள்கொண்டு நீதியின் மறுதலைகொள்ளவே நீதியுங் கொள்ளக்கிடப்பதுபோல இரண்டன் மறுதலையாகிய ஒன்றுகொள்ளவே இரண்டுங்கொள்ளக்கிடந்து, ஒன்றும் இரண்டும் நீதியும் அநீதியும் வேறு வேறாதல்போல, ஒன்றாகிய கடவுளும் இரண்டாவதாகிய உயிரும் பந்தமும் வேறு வேறாக நிற்குமென்பர் மாத்துவர். வேறு வேறாயின் கடவுள் வியாபகத்திற்கு இழுக்கும், உயிருக்குத் தனித்துநிற்குஞ் சுதந்திரமும் உளவெனப்பட்டு நூலோடும் அநுபவத்தோடும் முரணுமாதலின் இவர் கருத்தும் பொருந்தாது.

மேற்கூறியவாறு இன்மைப்பொருளே கொண்டு கடவுள் வியாபகப் பொருளே யெனவும், உயிரும் பாசமும் கடவுளில் அடக்கமெனவும், ஆயினும் உயிரும், பாசமும் பலவாயினாற்போல, கடவுள் பல வல்ல ஒன்றே யென்பர் பாஞ்சராத்திரிகள். ஒன்றென்று கூறுவதற்கு வடமொழியில் ஏகம் என்னும் சொல் இருக்கவும் அதனைவிட்டு அத்துவிதமென்னுஞ் சொல்லால் உய்த்துணரவைக்க வேண்டாம் என மறுத்தவிடத்து, பிரமம் ஏகமென்று ஓரிடத்திலும், பிரமம் அத்துவிதமென்று பிறிதோரிடத்திலும் கூறுதலால், அத்துவிதம் என்பதும் ஏகம் என்பதும் ஒரு பொருட் சொற்களாமென்பர். ஏகமேவ அத்விதீயம் பிரமம் என ஓரிடத்திலேயே ஏகமெனவும், அத்துவிதமெனவும் கூறுதலால், ஏகமென்பதும் அத்துவிதமென்பதும் வேறு வேறு பொருளைக் குறித்ததாமென மறுத்தவிடத்து, அவ்வாறு கூறியது உறுதி பயக்கும் அடுக்குமொழியாமென்பர். அடுக்கு மொழியாயின், ஏகம் ஏகம் என்றாவது, அத்துவிதம் அத்துவிதம் என்றாவது இருக்கவேண்டுமேயன்றி இருவேறு மொழிகளாயிருத்தல் கூடாது. மற்றென்னையோ அவ்வாக்கியத்திற்குப் பொருளெனின், ஏகமாகிய பிரமமே பலவுயிர்களோடு கலந்து நிற்குமென்பதேயாம். ஆதலின், அத்துவிதம் என்னுஞ்சொல்லிற்குக் கடவுள் ஒன்று என்றுகொண்ட இவர் கருத்தும் பொருந்தாது.

இனி, அத்துவிதச்சொற்குப் பொருள்தான் என்னையோவெனின், அகரம் பொருட்பெயர்ச்சொல்லில் வரும்பொழுது தான் அன்மை, இன்மை, மறுதலை என்னும் முப்பொருள் பயக்கும். எண்ணுப் பெயர்ச்சொல்லில் வரும்பொழுது அன்மைப் பொருளொன்றேயன்றிப் பிறபொருள் பயவாது. உதாரணமாக, எண்ணுப்பெயர்மேல் ஏகத்தின் முன்னாகவும், துவிதத்தின் முன்னாகவும் அன்றி ஏனைய எண்ணுக்களுடன் அகரம் முன்னிற்பதில்லை. அவற்றுள், ஏகத்தின் முன்னாகநின்ற அகரம் அன்மைப் பொருள்பற்றி அநேகம் எனப் பொருள்தருமாறுபோல, துவிதத்தின் முன்னின்ற அகரமும் இரண்டன்மையைக் குறிக்குமென்பதே தேற்றம்.

இக்கருத்தேபற்றி அன்மைப்பொருள்கொண்டு அசுவம் போன்றிருந்தும் அசுவத்தன்மையில்லாதவாறுபோலக் கடவுளும் உயிர்களும் இரண்டு போன்றிருந்தும் இரண்டின்றன்மையாக வேறு பிரித்தறியவாராது, கண்ணொளியுஞ் சூரியனொளியும்போலக் கலந்து நிற்குமென்பர் சைவசித்தாந்திகள். இக்கருத்துப்பற்றியே "அத்துவிதமாவது—பேதப் பொருளிரண்டும் தம்முள் அபேத மாதற்குரிய சம்பந்த விசேடம்" என உரையாசிரியர் மாதவச் சிவஞானயோகிகள் சிவஞானபோதச் சிற்றுரை பதினோராஞ்சூத்திரத்து அருளியவாறும். கலந்துநிற்குங்கால் உண்டாம் வேறுபாடுகள் யாவும் உரைப்பாயிரத்தும், பிறயாவும் சிவஞானபோதமாபாடியம் ஆறுஞ் சூத்திரத்துங் காண்க.

பதி, பசு, பாசம் எனப்பொருள்கள் மூன்றாகவும், அத்துவிதமென இரண்டின்மேல் வைத்துக்கூறியதன் கருத்தென்னையெனின், பாசம், ஆணவம், கன்மம், மாயை என மூத்திறப்பட்டு, அவற்றுள் ஆணவம் அநாதியே ஆன்மாவுடன் கலந்தும், கன்மமும், மாயையும் இறைவன் உடைமைப் பொருளாகவும் நிற்றலால், பதி பசு வென்னும் இரண்டு பொருளின் மேல் வைத்துக் கூறியவாறு மென்க.

இவை யிரண்டு செய்யுளானும் சிவசமவாதி மதம்பற்றி யாசங்கித்துப் பரிகரித்து அவனருளாலே அவனைக் காணவேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது. (௧)

மூன்றாமதிகரணம் முடிந்தது.

ஆறுஞ்சூத்திரம் முடிந்தது.

ஆகத் திருவிருத்தம் ௨௬௮.

சாதன வியல்.

ஏழாஞ் சூத்திரம்.

சாதிக்கும் அதிகாரி யியல்பு.

நாலாஞ் சூத்திரமுதல் மூன்று சூத்திரத்தானும் முறையே பசுவிலக்கணம், பாசவிலக்கணம், பதியிலக்கணம் கூறி முடித்தமையால், அவ்வாறு இலக்கணம் கேட்டவிடத்து அம்முப்பொருள்களுள் பதிப்பொருளை அடைவதற்கு உரிமையுடைய தெதுவெனவும், செய்யவேண்டுவதெது வெனவும், செய்யுமுறை எவ்வாறெனவும் ஆசங்கை நிகழுமன்றே? அந் நிகழ்ச்சிபற்றிச் சாதனவியல் மூன்று சூத்திரத்தாற் கூறத்தொடங்குகின்றார்.

மேல் அடுத்துநின்ற ஆறாஞ்சூத்திரத்தில் பதி, பாசத்தை யறியாது, பாசம், பதியை யறியாது என வரைசெய்து கூறினமையால், அவ்விரண்டனையும் அறிதற்குரியது எது? என்னும் சந்தேகத்தை நிவிர்த்தித்தற் பொருட்டு ஏழாஞ் சூத்திரம் எழுந்தது. இச்சூத்திரத்தால், பதி பாச மிரண்டனையும் அறிதற்குரிமையுடையது பசு எனப் பாரிசேட அளவையில் வைத்துக் கூறுகின்றார்.

மேலைச்சூத்திரத்துள் பதியிலக்கணங் கூறியவிடத்து, ஆன்மாவால் பதி அறியப்படுமென்று கூறியிருக்கவும், இவ்விடத்தும் அறிதற்குரிமையுடையது ஆன்மாவென்று கூறுதல், கூறியது கூறலாகாதோவெனின், ஆகாது. எவ்வாறெனின், பதி அறியப்படும் பொருளோ அறியப்படாத பொருளோவென்னும் ஆசங்கைக்கு உத்தரமாக ஆன்மாவினால் அறியப்படும் பொருளென்று அவ்விடத்துப் பதிக்கு இலக்கணங் கூறினார். இவ்விடத்துப் பதியையடையும் முறைமையில் சாதனஞ்செய்து அடைதற்குரியது ஆன்மாவென அதிகாரி இயல்பு கூறுகின்றார். ஆதலின், கூறியது கூறலாகாமையறிக.

பாசத்தைப் பதி அறியாது பதியைப் பாச மறியாது எனக் கூறுகின்றது-

அனைத்துஞ்சத்தென்னிறென்றையறிந்திடாதசத்தாலென்னின்
முனைத்திடா தசத்துச் சத்தின் முன்னிரு ளிரவி முன்போ
னினைப்பதிங்கசத்தேயென்னிற்சத்தின்முன்னிலாமையானுந்
தனைக்கொடொன் றுணர்தலானுந் தானசத் துணராதன்றே.

(கோ - டு.) சத்து அனைத்தும் (அறிவது) என்னின், ஒன்றை அறிந்திடாது. அசத்தால் (அறிவது) என்னின், இரவி முன் இருள்போல் சத்தின் முன் அசத்து முனைத்திடாது. இங்கு அசத்தே நினைப்பது என்னின், சத்தின் முன்னிலாமையானும் தனைக்கொடு ஒன்று உணர்தலானும் அசத்துதான் உணராதன்றே.

(போ - ரை.) மேலைச் சூத்திரத்திற் சத்தும் அசத்தும் வரை செய்துணர்த்தியவிடத்து, அவ்விரண்டனையும் அறியும் பொருள் யாதென வினவில், சத்தாகிய சிவமே அசத்தாகிய பாசமனைத்தினையும் அறியுமெனச் சிவாத்துவித சைவர் கூறுவர். சத்தாகிய சிவம் வியாபக அறிவாதலால், எவற்றினையும் உடனாய் நின்று ஒருசேர அறிந்து நிற்பதன்றித் தனித்தனி பிரித்து ஒன்றையும் அறியாது என்று மறுக்க, அவ்வாறு சிவம் வியாபக அறிவாயினும், உயிரின் பொருட்டு அசத்தாகிய கருவி கரணங்களைக் கூடிநின்று பகுத்தறிதல் கூடும் என்பர். இரவி முன் இருள் போல் சிவ சந்நிதியில் அசத்தாகிய கருவி கரணங்கள் முனைத்து நில்லாமையால், சிவம், கருவி கரணங்களிடமாக நின்று பகுத்தறியுமென்பதுங் கூடாது என மறுத்தவிடத்து, விகாரமின்றி நிற்கும் ஆன்மாவின் சந்நிதியில் அசத்தாகிய கருவியே சிவ கரணமாய் நின்று சத்தாகிய சிவத்தை யறியுமெனச் சிவ சங்கிராந்தவாதிகள் கூறுவர். அவ்வாறாயின், மேற்கூறியவாறு அசத்தாகிய கருவிகள் சிவ சந்நிதியில் முனைத்து நில்லாமையானும், அக்கருவிதானும் உயிர் அறிவதற்குத் துணையாய் நிற்பதன்றி அதற்குத் தனக்கென அறிவின்மையானும், அக்கருவிகள் சிவகரணமாய் நின்று சத்தாகிய சிவத்தை அறியுமென்பதுங் கூடாது. இவ்வாறு, சத்து அசத்தையும், அசத்துச் சத்தையும் அறியாதென்பது பெறப்படவே பாரிசேட அளவையால் இவ்விரு பொருளின் வேறாய் எஞ்சிநின்ற உயிர்ப் பொருளே இவ்விரண்டனையும் பகுத்தறியுமென்பது பெறப்பட்டது. (எ-று.)

அனைத்தும் என்றவிடத்து ஐ என்னும் இரண்டாம் வேற்றுமையுருபு விரித்து அனைத்தையும் என உரைக்க. சத்து அனைத்தும் என்னின் என்றவிடத்து அவாய் நிலையால் அறிவது என்பது வந்தது. அசத்தா லென்றவிடத்தும் அறிவது என்பதைக் கூட்டி உரைக்க. சத்தின் முன் அசத்து முனைத்திடாமையாவது, இஃது குடம், இஃது ஆடை என நம்மனோராற் சுட்டியறிப்படுமாறுபோல, முதல்வனாற் சுட்டியறியப்படாத தாய் வேறு நில்லாமை. எனவே, எல்லாப் பொருளோடுங் கலந்து நின்று ஒரு சேர அறிவனென்பது பெறப்படும். இச்செய்யுள் முதனூல் ஏழாஞ் சூத்திரம்போல முக்கூற்றினையுடையது. அவற்றுள்,

முதற்கூறு:—அனைத்துஞ் சத்தென்னி ... ... னிரவி முன் போல். இவ்விரண்டடியும் சத்து அசத்தை உணராதென்பது.

இரண்டாங்கூறு:—நினைப்பதிங்கசத்தே ... ... தான் அசத் துணராதன்றே. இவ்விரண்டடியும் அசத்துச் சத்தை யுணராதென்பது.

மூன்றாங்கூறு:—பாரிசேட அளவையால் பதி பாச மிரண்டனையும் உயிரறியுமென்பது.

இம்முக்கூற்றினுள், முன்னையிரு கூற்றினும் விரிக்கக் கூடியதான சங்கை உத்தரங்களின்மையின், அவற்றை இம்முதற் செய்யுளினால் உணர்த்தியதோடு நிறுத்தி, ஏனைய மூன்றாங்கூற்றை மூன்று செய்யுளி னால் விரிக்கின்றார். அம்மூன்று செய்யுளுள், பாரிசேட அளவையாற் பெறப்பட்டு எஞ்சிநின்ற பொருள் உயிர் என்பது இனிது விளக்கி, அவ் வுயிரினியல்பு வரைசெய் துணர்த்துதற் கெழுந்தது வருஞ் செய்யுள். (க.)

மூன்றுமதிகரணம்.

பதி பாச மிரண்டினையும் ஆன்மா அறியும் எனவும், அவ் விரண்டினையும் அறியுமுகத்தால் ஆன்மா தன்னையறியுமெனவும் கூறுகின்றது.

சத்தசத் தறிவ தான்மாத் தான்சத்து மசத்து மன்று
நித்தனுச் சதசத் தாகி நின்றிடு மிரண்டன் பாலு
மொத்துட னுதித்து நில்லா துதியாது நின்றி டாது
வைத்திடுந் தோற்ற நாற்ற மலரினில் வருதல் போலும்.

(கோ - ரு.) சத்து அசத்து அறிவது ஆன்மா. உடன் ஒத்து நில்லாது உதியாது நின்றிடாது. மலரினில் நாற்றம வருதல்போலும். தான் சத்தும் அசத்தும் அன்று; இரண்டன்பாலும் உதித்து வைத்திடும் தோற்றம். சதசத்தாகி நித்தனுய் நின்றிடும்.

(போ - ரை.) சத்தும் அசத்தும் மேற்கூறியவாறு ஒன்றனை ஒன்று அறிதற்குரிமை யில்லாமையால், அவ்விரண்டனையும் அறிவது ஆன்மாவேயாம். அவ்வான்மா தன்னை அறியுமோ அறியாதோவென வினவுமிடத்து, சத்தையும் அசத்தையும் இது சத்து, இது அசத்தெனத் தனித்தறிவதுபோல் ஆன்மா தன்னைத் தனித்தறியமாட்டாது. அவ்வாறறியப்படாமையால்சூனியமுமன்று. மலரினிடத்து வாசனையானது மலர்போல விளங்கித் தோன்றாமலும், சூனியமல்லாமலும், அம்மலரின்கண் அடங்கித் தோன்றுமாறுபோல, சத்து அசத்து என்னும் இரண்டின் வேறாகிய ஆன்மாவும், சத்தோடு கூடித் தன்னைச் சத்தாயும், அசத்தோடு கூடித் தன்னை அசத்தாயும் அறியப்படுவதாம். அவ்வாறறியப்படுவதால் ஆன்மா சதசத்தென்று சொல்லுதற்குரிமையுடைய நித்தப் பொருளாய் நிற்கும். (எ - று.)

இதனால், சத்து அசத்தாகிய இரண்டினையு மறியுமுகத்தால் தன்னையறியுமெனத் தன்னையறியு முறை கூறியதுமாயிற்று. இன்னும், ஆன்மா யாதானு மொன்றைச் சார்ந்து நிற்பதன்றித் தனித்து நில்லாதென்பது மறிவித்தவாறாயிற்று. (௨.)

பதி அதிசூக்கும சித்தும்பசு தூலசித்துமாய் நிற்றலால் பசுவைப் பாசம் பற்றுமெனவும், அப்பற்றுதல் அநாதி யெனவும், அப்பற்றுதலே பதி பாசம் இரண்டனையும் அறிதற்குக் காரணமெனவும், பதி பசு பாசத்திற்கு உவமையும் கூறுகின்றது.

சுத்தமெய்ஞ் ஞான மேனிச் சோதிபா லசத்தஞ் ஞான
மொத்துறு குற்ற மெல்லா முற்றிடு முயிரின் கண்ணே
சத்துள போதே வேறாஞ் சதசத்து மசத்து மெல்லாம்
வைத்திடு மநாதி யாக வாரிநீர் லவணம் போலும்.

(கோ - ரு.) மெய்ஞ்ஞான மேனிச் சுத்த சோதிபால் அசத்து அஞ்ஞானம் ஒத்துறு. உயிரின்கண்ணே குற்றமெல்லாம் உற்றிடும். சத்து

உளபோதே வேறும் சதசத்தும் அசத்தும் எல்லாம் அநாதியாக வைத்திடும். வாரி நீர் லவணம் போலும்.

(போ - ரை.) பதியும் பசுவும் சித்துப் பொருளாகவும் பதியின் முன் முனைத்து நில்லாத பாசம் பசுவினிலறியப்படுவதாய் அப்பசுவின் முன் முனைத்து நிற்றற்குக் காரணம் என்னையோவெனின், பதியும் பசுவும் சித்து என்னும் சாதி ஒற்றுமையால் பொதுவகையாக ஒக்குமாயினும், அவற்றுள் உண்மை ஞானமே சொரூபமாகவுடைய பதி அதிசூக்கும சித்தாதலால் அப்பதி முன் அசத்தாகிய பாசம் முனைத்து நில்லாது. பசுவாகிய உயிர் தூல சித்தாதலின் அப்பசுமுன் பாசம் முனைத்து நிற்கும். உயிருக்கு இவ்வியல்பு எக்காலத்து உண்டாயிற்றெனின், சத்தாகிய சிவம் என்று உள்ளது? அன்றே சதசத்தாகிய உயிர்களும் உள்ளனவாய், அன்றே அவ்வுயிர்களை அசத்தாகிய பாசம் பற்றி நிற்கும். இவ்வாறு நிற்றல் எதுபோலுமெனின், நீருக்கு இடங்கொடுத்திருக்கும் ஆகாயமாகிய கடலும், நீரும், உப்பும் போலாம். (எ - று.)

சுத்தமெய்ஞ்ஞானமேனிச் சோதிபா லசத்தஞ்ஞான மொத்துறு என்ற இதனானே சத்து அசத்தை யறியாது; அசத்துச் சத்தையறியாது என்ற முன்னையிருகூறும் ஒருவாற்றால் வலியுறுத்தப்பட்டதுங் காண்க.

உயிர் தூலசித்து என்பது உயிர் என்னும் பெயரானும், உவமையானும் பெறப்படும். உயிர் என்னும் பெயரினால் உயிர்த்தலைச் செய்வதென்னும் பொருள் குறித்து, அங்ஙனஞ்செய்வதற்குக் கருவிகளின் துணையை வேண்டிநிற்குமென்பது பெறப்படும். அதனாலும், உவமையாகக் கூறப்பட்ட நீர், ஆகாயத்தினும் தூலம் என்பதனாலும், உயிர் தூலசித்தென்பது பெறப்படுமாறு காண்க.

சிவம் அதிசூக்குமசித்தென்றும் உயிர் தூலசித்தென்றுங் கூறினமையால் இடையே சூக்குமசித்தென ஒன்றிருக்கவேண்டுமென்பது பெறப்படும். படவே, உயிர் பாசத்தடையினின்றும் நீங்கிப் பதியையறிந்து அதுவாய்நிற்கும் நிலை சூக்குமசித்தெனப்படுமாறு காண்க.

ஆகாயமாகிய கடலும், நீரும், உப்பும் அநாதியேயாகவும், ஓரிடத்திலிருப்பவும், அவற்றுள், உப்பானது இடமாகிய ஆகாயத்தைப்பற்றாது நீரைப்பற்றி நிற்கும். அவ்வாறு பற்றாமைக்கும் பற்றுதற்குங் காரணம் ஆகாயத்தின் சூக்குமமும், நீரின் தூலமுமேயாம். இதுபோலப் பதி, பசு,

பாச மூன்றும் அநாதியாய் ஓரிடத்திலிருப்பினும், பாசம் அதிசூக்குமமாகிய பதியைப்பற்ருது; தூலமாகிய பசுவைப்பற்றி நிற்கும். அவ்வாறு பற்று தற்குப் பசுவின் தூலத்தன்மையே காரணம். அப்பாசப்பற்றே பதியைப் பசு அறிதற்குங் காரணமாயிற்று. எவ்வாறெனின், பாசம்பற்றி நிற்றலால் துன்பமெய்திய உயிர் துன்பநீக்கத்தைவேண்டிப் பாசத்தினின்றும் நீங்கிப் பதியைப்பற்றி நின்று அப்பதியை அறியுமென்க. (௬)

சிவம் அதிசூக்கும சித்தாதற்கும் சீவன் தூலசூக்குமசித்தா தற்குங் காரணம் பற்றுந்தன்மை யின்மையும், பற்றுந்தன்மை யுண்மையுமாமெனக் கூறுகின்றது.

அறிவிக்க வறிதலானு மழிவின்றி நிற்ற லானுங்
குறிபெற்ற சித்துஞ் சத்துங் கூறுவ துயிருக் கீச
னெறிநித்த முத்த சுத்த சித்தென நிற்ப னன்றே
பிறிவிப்பன் மலங்க ளெல்லாம் பின்னுயிர்க் கருளினாலே.

(கோ - டு.) அறிவிக்க அறிதலானும், (அறிந்தபின்) அழிவின்றி நிற்றலானும், உயிருக்குக்குறிபெற்ற சித்துஞ் சத்துங் கூறுவது. ஈசன் உயிர்க்கு மலங்களெல்லாம் பின் அருளினாலே பிறிவிப்பன். நெறிநித்த முத்த சுத்த சித் (துச்சத்) தென நிற்பன் அன்றே.

(போ - ரை.) சிவம் அதிசூக்கும சித்தென்பதும், சீவன் தூலசூக்குமசித்தென்பதும் எதனை லறியப்படுகின்றனவெனின், உயிர் தன்னறிவு தொழிற்படவேண்டுமாயின் சகலத்தில் கருவி முதலிய துணையையும், சுத்தத்தில் திருவருட்டுணையையுமின்றி முடியாமையால் தூலசூக்குமசித்து. அவ்வாறறிந்தபின் என்றும் அழிவின்றி நிற்றலால் தூலசூக்குமசத்துமாம். சிவம் தனக்கொரு துணைவேண்டாது தானே அறியும் முறைமையினையுடையதால் நித்த சுத்த அதிசூக்கும சித்து. உயிருக்கு மலத்தை அருளால் நீக்கித் தன்னுண்மையினை யறிவிக்கும் உயிர்த்துணையாதலுடைமையால் அதிசூக்கும சத்துமாம். (எ - று.)

தூலசித்தென்பது கருவித்துணைகொண்டறியுங்காரணத்தால்வந்தது. இது பிறவொளியைக் கொண்டறியுங் கண்ணொளிபோலாம். சூக்குமசித்தென்பது திருவருட்டுணை கொண்டறியுங் காரணத்தால் வந்தது. இது, உயிருணர்வைக் கொண்டறியுங் கண்ணொளி போலாம். அதிசூக்கும சித்தென்பது பிறபொருளின் துணைவேண்டாது தானே அறியுங்காரணத்தால் வந்தது. இது தானேயறியும் சூரியனொளிபோலாம்.

மேலைச்செய்யுளில் பதி, பசு, பாசம் மூன்றிற்கும் கடல், நீர், உப்பை உவமை கூறியது, அம்முப்பொருள்களின் இருப்புக்கும், பாசம் பசுவைப் பற்றுதற்கும், பதியைப்பற்றாமைக்கும் எனவும், இவ்விடத்துக்கூறிய சூரிய ஞெளி கண்ணொளி உவமை அம்முப்பொருள்களின் இலக்கணமாகியவியா பகத்திற்கும், பாசம் பதியைப்பற்ருது பசுவைப்பற்றுதற்குக் காரணம் பற் றுந் தன்மை பசுவுக்கு உண்டெனவும், பதிக்கு இன்றெனவும் உணர்த்து தற்குமெனவும் அறிக. எவ்வாறெனின், கடல் நீர் உப்பு உவமை, பதி பசு பாசம் மூன்றும் அநாதியே ஓரிடத்து உள்ளனவென்பதும், பாசம் பதியைப் பற்ருது பசுவைப்பற்றுமென்பதும் உணர்த்தும். சூரியஞெளி பதிக்குப் பூரணவியாபக முண்டென்பதும், கண்ணொளி பசுவுக்கு ஏகதேசவியாபக முண்டென்பதும் உணர்த்திக் கண்ணொளியை மறைக்கும் இருளுக்குச் சமவியாபகம் காணப்படுதல்போல, பல உயிர்களோடுங் கலந்துநிற்கும் பாசத்திற்குச் சமவியாபகமுண்டென்பது முணர்த்தும். சமவியாபகமா வது, மறைக்கப்படும் பொருளின் சத்திக்குக் குறையாமலும் கூடாமலும் அதனளவாக நிற்றல். குறையின் ஒரு காலத்துத்தானே நீக்குதல்கூடும். கூடின் எக்காலத்தும் எவராலும் நீக்குதல் கூடாது. ஆதலின், நீக்கப்படும் பாசம் சமவியாபகமாய் நின்றது. இவ்வாறு இருப்புக்கும் இலக்கணத்திற் கும் கூறிய உவமை வேறுபாடு கண்டுகொள்க.

சித்தியல்பில் தானேயறிதலும், துணைகொண்டறிதலுமாகிய வேற் றுமை காணப்படுமாறுபோல, சத்தியல்பினும் வேற்றுமை காட்டவேண்டி அறிந்தபின் னழிவின்றி நிற்றலால் சத்துங்கூறுவதென்ருர். எனவே, துணைகொண்டறிந்து அழிவின்றி நிற்றலும் துணைவேண்டாது அறி வித்து அழிவின்றி நிற்றலும் வேற்றுமையெனக் கூறியவாரும். அறிந்த பின் என்றது அறிவிக்க அறிதல் என்றதுகொண்டு வருவிக்கப்பட்டது.

இதனல், குருவாய்வந்து மலங்களை நீக்குமுறைமை கூறும் வருகின்ற சூத்திரத்துக்குத் தோற்றுவாய் செய்ததுமாயிற்று.

இவை மூன்று செய்யுளானும் முறையே உயிருக்குச் சத்து அசத்து இரண்டினையுமறியும் உரிமையுண்டென்பதும், அங்ஙனம் அறிதற்குக் காரணம் தூலசூக்குமசித்தாய் நிற்றலென்பதும், உயிரினிடத்துத் தூல சூக்குமசித்துத் தன்மை அறிவிக்க அறிதலால் உளதென்பதும் விளக்கிக் காட்டி மூன்ருங்கூற்றுப்பொருள் வலியுறுத்தப்பட்டது. (௩)

மூன்றமதிகாணம் முடிந்தது.

ஏழாஞ் சூத்திரம் முடிந்தது.

ஆகத் திருவிருத்தம் ௨௫௨.

எட்டாஞ் சூத்திரம்.

சாதனமும் அது வரும் வழியும்.

மேலைச்சூத்திரத்தால் பதிப்பொருளை அடைவதற்கு உயிர் உரிமையுடையது எனக் கூறியதனால், அவ்வுயிர் பதிப்பொருளை எவ்வாறு அடையுமென ஆசங்கை நிகழுமன்றே? அங்கநிழ்ச்சிபற்றிச் செய்யவேண்டுவது இதுவென்று கூறுதற்கு எட்டாஞ் சூத்திரம் எழுந்தது.

அடைதற்குரிய உரிமை தனக்கே யுண்டென்பதுணர்ந்த வுயிர்க்குப் பதியைஅடைதலாகிய அப்பேறு தனக்குவேண்டுமென்பதும் அப்பேறடைவதற்குச் சிறந்தசாதனம் இதுவென்பதும், அச்சாதனம் எவ்வாறு வருமென்பதும் அறிந்தாலன்றி, அப்பதியை அடைதற்குரிய சாதனஞ்செய்தற்கு மனஎழுச்சிகூடாது. ஆதலால், உயிர்க்கு மனஎழுச்சி உண்டாகும்பொருட்டுப் பதியையடைய வேண்டியதுகடமையென்றும், அதற்குச்சிறந்தசாதனம் ஞானமென்றும், அது ஞானசற்குருவால் வருமென்றும் மூவகையாகப் பிரித்துச் செய்யவேண்டுவதை இச்சூத்திரத்தாற் கூறுகின்றார்.

இறைவன் குருவாகிவந்து உணர்த்துவனெனச் சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது.

மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானாக்கிப் பேணு மாபோற்
றுன்னியவைம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையு மறியாது துயருறுந்தொல் லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரி னீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்.

(பொ - ரை.) அரசகுமாரனாகிய ஒருவன், பிள்ளைமைப் பருவத்து மடமையால் வேடரிடத்துப் பொருந்தி அவ்வேடன் வசமாய் நின்று, தன் ஜாதிக்குரிய பெருந்தகைமையினை இழந்து இழிதொழில் செய்து வளர்ந்து தந்தையாகிய அரசனையும் தன்

னையும் அறியாது மயக்கத்தைப் பொருந்தி நிற்குங்கால், பின்பு தந்தையாகிய அவ்வரசன் வந்து மகனைப்பார்த்து, நீ வேடகுமாரனல்லன்; என் மகனென்று அறிவுறுத்தி அவ்வேடரினின்றும் அவனை நீக்கி அரசகுமாரனுக்குரிய பெருந்தகைமையுடன் அரசனாகிய தானும்வண்ணஞ்செய்து போற்றுமாறுபோல, நிலைபெற்ற உயிர், தன்னிலையினின்று வேறுபட்டு, நெருங்கிய ஐம்பொறியாகிய வேடருடைய சூழலிற்பட்டு அறிவினையிழந்து, தன்னையறியாமையேயன்றித் தலைவனையுமறியாது வருந்துவதையறிந்து, அவ்வுயிர்செய்த கெடாத தவமுதிர்ச்சியால் இரங்கி, நித்த முத்த சுத்த சித்தெனப்படுந் தலைவனாகிய அவ்வீசன், குருவடிவங்கொண்டெழுந்தருளிவந்து, தன்னையுந் தலைவனையுமறியும் வண்ணமுணர்த்தி, அவ்வைம்பொறியினின்று நீங்குதற்கு, அதனோடு கூடும்படிசெய்த மலவலியைக்கெடுத்து, அதனினின்றும் மீட்டிப் பழைய நிலையாகிய தன் வண்ணமாக்கி அவ்வுயிரை மலர்போலும் தன் திருவடிக்கீழ்வைத்து வாழ்விப்பன். (எ - று.)

இங்ஙனம் அறிவித்தல் ஈசனுக்குக் கடமை என்பதை விளக்கவேண்டி அரசகுமாரனுவா னொருவனுக்கு அவன் தந்தை செய்யும் உதவியையெடுத்துக் காட்டினார். தூலமாகிய நக்ஷத்திரத்தைக்காட்டி அதன் பின் அதன் பக்கத்தேயிருக்கும் சூக்குமமாகிய அருந்ததி நக்ஷத்திரத்தைக் காட்டுமுறைபோல், படிமுறையில் வைத்துணர்த்தவேண்டுதல் மரபாகலின், மும்மலச் சூழலிற்பட்டு வருந்துதல் காட்சிக்கு விடயமாகாமையின், அதனையொழித்துக் காட்சிக்கு விடயமாவதாய் எளிதினறியப்படுவதாய ஐம்பொறிச் சூழலிற்படுதலை இவ்விடத்துக் கூறினார். தலைவனையும் என்னும் உம்மை தன்னையேயன்றி என இறந்ததுதழுவிற்று. சிறப்பெனினுமாம். மன்னுமருள் என்பது இவ்விடத்து இறப்பில் தவத்தைக்குறித்தது. இறப்பில் தவமாவது—சரியை முதலிய சிவ புண்ணியங்கள். இவை, சாலோக முதலிய பயனைத்தந்து அம்மட்டில் நில்லாது மேற்செலுத்துமாதலின் இறப்பில் தவம் எனப்பட்டன. சோதிட்டோமம் முதலிய தவங்கள் தத்தம் பயனைத்தந்து அழிவெய்துமாகலின் அவை இறக்குந் தவமெனப்படும். மன்னுமருள் என்றவிடத்து மன்னுமருளால் என மூன்றும் வேற்றுமையுருபு விரித்துரைக்க. அரசனாகிய உவமையில் "என் மகனீயென்று" எனக் கூறுதலால், பொருளாகிய சிவத்தினும் "உணர்த்தி" என்பது வரு.

விக்கப்பட்டது. * "தவத்தினிலுணர்த்த" என்றார் முதனூலாசிரியரும்.

இச்செய்யுள் முதனூல் எட்டாஞ் சூத்திரம்போல நான்கு கூற்றை யுடையது. அவற்றுள்,

முதற்கூறு:—குருவாகி வந்துணர்த்தி.

இரண்டாங்கூறு:—மன்னுமருளா லுணர்த்தி.

மூன்றாங்கூறு:—மன்னவன்றன்..................................... பேணுமாபோல் துன்னிய ஐம்புலவேடர் சுழலிற்பட்டுத் துணைவனையும் அறியாது துயருறும் தொல்லுயிர்.

நான்காங்கூறு:—அவரினீக்கி மலமகற்றி தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்.

முதற்கூற்றிலும் இரண்டாங்கூற்றிலும் உணர்த்தி என்பது வருவிக்கப்பட்டது. (௧)

முதலதிகரணம்.

குருவாகி வந்துணர்த்தி என்பது.

உணர்த்தும் முறையில் தீக்கையால் உணர்த்துவனாதலின், அத்தீக்கை சாதாரதீக்கை, நிராதாரதீக்கை என இருவகைப்படும் எனவும், சாதார தீக்கைக்குரியார் சகலரும், நிராதார தீக்கைக் குரியார் பிரளயாகலரும் விஞ்ஞானகலரும் எனவும் கூறுகின்றது.

உரைதருமிப் பசுவர்க்க முணரின் மூன்று
  மூயரும்விஞ் ஞானகலர் பிரளயா கலர்சகலர்
நிரையின்மல மலங்கன்ம மலங்கன்ம மாயை
  நிற்குமுத லிருவர்க்கு நிராதார மாகிக்
கரையிலருட் பரன்றுவிதா சத்திநிபா தத்தாற்
  கழிப்பன்மலஞ் சகலர்க்குக் கன்ம வொப்பிற்
றரையிலா சான்மூர்த்தி யாதார மாகித்
  தரித்தொழிப்பன் மலஞ்சதுர்த்தா சத்திநிபா தத்தால்.

---

* சிவஞானபோதம், எட்டாஞ்சூத்திரம், ஐம்புலவேடர்.

(கோ - ௫.) உரைதரும் இப்பசு உணரின் உயரும் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் மூன்று வர்க்கமாம். நிரையின் மலம், மலம் கன்மம், மலம் கன்மம் மாயை நிற்கும். சகலர்க்கு கன்ம ஒப்பில் சதுர்த்தா சத்திநி பாதத்தால் தரையில் ஆசான்மூர்த்தி தரித்து ஆதாரமாகி மலம் ஒழிப்பன். முதல் இருவர்க்கும் துவிதாசத்திநி பாதத்தால் கரையிலருட்பரன் நிராதாரமாகி மலங்கழிப்பன்.

(போ - ரை.) பதியை அடைதற்கு உரிமையுடையன வென மேற்கூறிப்போந்த ஆன்மாக்கள் எண்ணிறந்தனவேயாம். ஆராயுமிடத்து அவ்வான்மாக்கள் உயர்ந்த விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படுவர். அவருள், விஞ்ஞானகலர் ஆணவமலம் ஒன்றுடையர். பிரளயாகலர் ஆணவமலம் கன்ம மலம் இரண்டுமுடையர். சகலர் ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலமும் உடையர். அவருள், மும்மலங்களுமுடைய சகல வர்க்கத்து உயிர்கள் இருவினையொப்பரல், மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்னும் நால்வகைச் சத்திநிபாதமும் பொருந்துதற்குரியர். ஆதலால், அச்சகலவர்க்கத்து உயிர்களுக்கு இருவினையொப்பு வந்தவிடத்துப் பொருந்திய சத்திநிபாதத்திற் கேற்ப உணர்த்தவேண்டுவது முறைமையாதலின், அவ்வாறுணர்த்துதற்கு இவ்வுலகின்கண் இறைவன் குருமூர்த்தியை ஆதாரமாகக்கொண்டு தோன்றிச் சாதாரதீக்கை செய்து மலத்தை நீக்குவன். பிரளயா கலராகிய உயிர்கள் தீவிர தீவிரதா சத்திநிபாதத்தைப் பொருந்துதற்குரியராதலான், அவர்களுக்கு இறைவன் மான்மழு சதுர்ப்புஜங்களுடைய திருமேனியோடு தோன்றி உணர்த்துவதாகிய நிராதார தீக்கைசெய்து மலத்தை நீக்குவன். விஞ்ஞானகலராகிய உயிர்கள் தீவிரதாசத்திநிபாதத்தைப் பொருந்துதற்குரியராதலால், அவருக்கு அளவிடுதற்கரிய கருணை வடிவாகிய இறைவன் அவரறிவின் உள்ளீடாகநின்று உணர்த்துவதாகிய நிராதார தீக்கைசெய்து மலத்தை நீக்குவன். (எ - று)

விஞ்ஞானகலரென்பது செய்யுளாதலின் விஞ்ஞானகலரென நின்றது.

சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என ஆன்மாக்களை வகுத்ததற்குக் காரணம் என்னையெனின், கலர் என்பது கலையையுடையவர் எனப்

பொருள்படும். படவே, கலை முதலிய தத்துவங்களோடு கூடிய ஆன்மாக்களைச் சகலரென்றும், கலை முதலிய தத்துவங்களைப் பிரளயத்தில் நீக்கப்பெறும் ஆன்மாக்களைப் பிரளயாகலரென்றும், கலை முதலிய தத்துவங்களை விஞ்ஞானத்தால் நீக்கப்பெறும் ஆன்மாக்களை விஞ்ஞானகலரென்றும் பிரித்தவாறும். பிரளயாகலரென்பதை பிரளய அகலர் என்றும், விஞ்ஞானகலரென்பதை விஞ்ஞான அகலர் என்றும் பிரித்து, பிரளயத்தில் கலையற்றவர்; விஞ்ஞானத்தால் கலையற்றவர் எனக் கொள்ளல்வேண்டும். அறுதல் துணிபாதலின், அற்றவரென இறந்தகாலத்தாற் கூறப்பட்டனர்.

இவ்வாறு வகுத்ததற்குத்தான் காரணம் என்னையெனின், விஞ்ஞானகலர்—அநாதி கேவலத்தில் ஆன்மாக்களெல்லாம் ஆணவமலத்தால் மறைப்புண்டு கிடக்கும். மலத்தின் சத்தி பலவாதலால், மறைப்பும் பலவேறு வகைப்படும். அங்ஙனம் மறைப்புண்டு கிடக்கும் ஆன்மாக்களுக்கு மலநோயைத் தீர்க்கச் சிவபெருமான் திருவுளங்கொண்டருள்வன். கொண்டருளுங்கால் கன்மமல மாயாமலங்களைக் கூட்டாமலே விஞ்ஞானத்தால் ஆணவமலத்தை நீக்குதற்குரிய மறைப்பினையுடைய ஆன்மாக்களுக்கு விஞ்ஞானத்தால்ஆணவமலத்தைநீக்குவன் .விஞ்ஞானமென்பதுவிசேடஞானம். அதாவது பாசஞானம் பசுஞானங்களினின்றும் மேம்பட்ட பதிஞானமாம். இப்பதி ஞானத்தை இறைவன் எவ்வாறு நின்று உணர்த்துவனென்னின், அறிவினுள் அறிவாய் நின்று உணர்த்துவனென்க. அவ்வாறு உணர்த்துவதற்குக் கலை முதலிய தத்துவங்களாலாக்கப்படும் சரீரமும் புவனமும் இன்றியமையாது வேண்டப்படும். படவே, சுத்த மாயா காரியங்களாகிய கலாதி தத்துவங்களா லாக்கப்பட்ட சரீரத்தைக் கொடுத்து, அசுத்த மாயைக்குமேல்வைகும்படி செய்வன். இவ்வாறு கலாதிதத்துவங்களைப்பெற்று விஞ்ஞானத்தால் அத்தத்துவங்களிற் கட்டுப்படாதிருத்தலின் விஞ்ஞானகலர் எனப் பெயராயிற்று. இத்தகைய ஆன்மாக்களுக்கு ஆணவமல பந்தமிருத்தலால், இவர் ஒரு மலமுடையரெனப்படுவர். இவ்விஞ்ஞானகலரும் பக்குவர் அபக்குவரென இருதிறப்படுவர். பக்குவர் அப்பொழுதே சிவசாயுச்சியத்தைப் பெறுவர். அபக்குவர் உத்தமர், மத்திமர், அதமரென முத்திறப்பட்டு, உத்தமர் அணு சதாசிவர் முதலியோராய்ச் சதாசிவ தத்துவத்திலும், மத்திமர் அட்டவித்தியேசுவரர் முதலியோராய் ஈசுவரதத்துவத்திலும், அதமர் மூன்றரைக்கோடி தேவர்களாய்ச் சுத்த வித்தியா தத்துவத்திலும் வசித்து அதிகாரமுடையராய்ப் பிரளயத்திலும் மத்தியிலும் முத்தியடைவர். இந்த விஞ்ஞானகலருக்கு எடுத்த பிறவியையன்றி வேறு

பிறவி கிடையாது. இவ்விடத்துக் கூறிய தேவர்கள் வேறு, சகல வருக்கத்துத் தேவர்கள் வேறு.

பிரளயாகலர்—கன்மமலத்தைக்கூட்டி ஆணவமலத்தை நீக்குதற்குரிய ஆன்மாக்களுக்கு அசுத்த மாயா காரியமாகிய கலாதி தத்துவங்களால் ஆக்கப்பட்ட சரீரத்தைக் கொடுத்து, அவ்வசுத்த மாயையின் மத்தியில் வைகும்படிசெய்து, பிரளயத்தில் இறைவன் தடத்தத் திருமேனி கொண்டு முன்னின்று அருள்செய்வன். இவருக்குப் பிரளயத்தின் பின் பிறவியில்லாமையால் பிரளயாகலரெனப் பெயராயிற்று. விஞ்ஞானகலரில் பிரளயத்தில் முத்தியடைபவருக்கும் இவருக்கும் வேற்றுமையென்னையோ வெனின், விஞ்ஞானகலருக்குக் கன்மமலம் இல்லாமையால் பிரளயம் வரை ஒரு பிறவியேயன்றி மறுபிறவியில்லை. பிரளயாகலருக்குக் கன்மமலம் உண்மையால் ஒரு பிரளயத்துள் சில பிறவிகளுள. இவையே வேற்றுமையாம். இவர், ஆணவம் கன்மம் என்னும் இருமலமுடையர்.

சகலர்—கன்மமலம், மாயாமலங்களைக்கூட்டி ஆணவமலத்தை நீக்குதற்குரிய மறைப்பினையுடைய ஆன்மாக்களுக்கு அசுத்த மாயா காரியமாகிய கலாதி தத்துவங்களாலாக்கப்பட்ட சரீரத்தைக் கொடுத்து பிரகிருதி மாயையில் வைகும்படி செய்து பக்குவம் வந்தகாலத்து இறைவன் குருமூர்த்தியாய்த் தோன்றிநின்று அருள் செய்வன். இவர், ஆணவம் கன்மம் இரண்டுடனே மாயாமலமுடையராதலின், மயக்கத்தினால் பிரளயம் வரை பல பிறவிகளை எடுத்து, பிரளயத்தில் கலாதிகளுடன் ஒடுங்கிக்கிடந்து புனருற்பவம் ஆகுங்கால் மீண்டுந்தோன்றி இவ்வாறே பிறப்பிறப்பிற்பட்டு உழல்வராதலின் சகலரெனப்பட்டார். தேவர் முதல் எறும்பீறாகவுள்ள உயிர்களனைத்தும் சகலரெனப்படும். சகலரினும் பிரளயாகலத் தன்மை, விஞ்ஞானகலத் தன்மை சித்தித்தல் கூடும். அதாவது, பிரகிருதி மாயா புவனப்பற்று ஞானத்தால் நீங்கப்பெற்றவர் சகலரில் பிரளயாகலராவர். இவருக்கு இறைவன் தடத்தத் திருமேனியைத் தரிசித்தல் கூடும். பிரகிருதி மாயா புவனம், அசுத்த மாயா புவனமாகிய இருபுவனங்களின் பற்றும் ஞானத்தால் நீங்கப்பெற்றவர் சகரில் விஞ்ஞானகலராவார். இவருக்கு இறைவன் அறிவுக்குள் அறிவாய் நின்று உணர்த்துவன். சகலரில் விஞ்ஞானகலத்துவம் வந்தால் மேற்பிறவி இல்லை. பிரளயா கலத்துவம் வந்தால் சில பிறவியுண்டு. மேற்கூறிய விஞ்ஞானகலர், பிரளயாகலர் அநாதியாயுள்ளவர். சகலரில் விஞ்ஞானகலர் பிரளயாகலர் ஆதியாயுள்ளவர்.

சத்திநிபாதம் என்பது:—சத்தி பதிதலெனப் பொருள்படும். அதாவது, திருவருட் சத்தியின் விளக்கம் ஆன்ம அறிவின்கண் உண்டாதல்.

அது மந்ததரமாக உண்டாதலென்பது அதிக மந்தமாக என்றபடியாம். அதாவது, அருட்சத்தியின் விளக்கம் சிறிது உண்டாகி அதற்கேற்றவாறு சிறிதுமலவாசனை நீங்குதல். இதனை, மந்தரமுதலியனவாய் நான்கு வகையாகப் பிரித்ததன் கருத்து, மலவாசனையை நான்கு கூறாக்கியும், அவ்வாறே திருவருட் சத்தியை நான்கு கூறாக்கியும், ஒரு கூறு திருவருட்சத்தி தோன்ற ஒரு கூறு மலவாசனை நீங்குதலை மந்ததரசத்திநிபாதம் என்றும், இருகூறு திருவருட் சத்தி தோன்ற இருகூறு மல வாசனை நீங்குதலை மந்த சத்திநிபாதம் என்றும், மூன்றுகூறு திருவருட்சத்தி தோன்ற மூன்றுகூறு மலவாசனை நீங்குதலை தீவிர சத்திநிபாதம் என்றும், நான்குகூறு திருவருட்சத்தி தோன்ற மலவாசனை முற்றும் விடுபடுதலை தீவிரதர சத்திநிபாதம் என்றும் பிரித்துக் கூறியவாறும். இதனால் மல பரிபாகமும் நான்கு வகைப்படுமென்பதறிக. மல பரிபாகம் என்பது மலசத்தி தேய்தல்.

சகல வர்க்கத்து உயிர்கள் பிரகிருதி மாயா புவன வாசிகளாதலால், நால்வகைச் சத்திநிபாதத்தையும் பொருந்துதற்குரியர். பிரளயாகலர், விஞ்ஞானகலருக்குப் பிரகிருதி மாயா புவனமில்லாமையால் மந்ததரம், மந்தம் என்னும் இருவகைச் சத்திநிபாதமில்லை.

இருவினை ஒப்பு என்பதை முதற்சூத்திரத்து ௩௭-வது செய்யுளுரையிற் கூறியிருக்கின்றமையால் ஆண்டுக் காண்க.

சாதாரதீக்கை என்பது ஆதாரத்தோடு கூடி நின்று செய்யப்படுந் தீக்கை எனப்படும். அதாவது, இறைவன் குருமூர்த்தியை ஆதாரமாகக் கொண்டு நின்று செய்யும் தீக்கையாம்.

நிராதாரதீக்கை என்பது ஆதாரமின்றி நின்று செய்யும் தீக்கையாம். அது இருவகைப்படும். அவற்றுள் ஒன்று இறைவன் தடத்தத்திருமேனியோடு முன்னின்று செய்யுந் தீக்கை. மற்றொன்று சொரூபத் திருமேனியாகிய ஞானசொரூபியாய் அறிவினுள் நின்று உணர்த்துவதாகிய தீக்கை.

இனி, சாதாரம் நிராதாரம் என்னும் இவ்விரண்டு தீக்கையினுள், சகலவர்க்கத்து உயிர்கட்கு அநுக்கிரகஞ் செய்யு முறைமையாகிய இவ்விடத் தெடுத்துக்கொண்ட சாதார தீக்கையிலுண்டாம் பாகுபாடும், அப்பாகுபாடுகளினியல்பும் வகுத்துக் கூறுதற் கெழுந்தன வருஞ்செய்யுட்கள். (௨.)

சாதார தீக்கையாவது நோக்கம் முதலியனவாகப்பலவகைப் படுமெனவும், அவற்றுள் ஔத்திரி சிறந்தது எனவும், அவ்வௌத்திரி ஞானவதி கிரியாவதி என இருவகைப்படுமெனவும், அவ்விரண்டும் தனித்தனி நிர்ப்பீசம், சபீசமென இரண்டிரண்டாக நால்வகைப்படும் எனவும் கூறுகின்றது.

பலவிதமா சான்பாச மோசனந்தான் பண்ணும்
படிநயனத் தருள்பரிசம் வாசகமா னதமு
மலகில்சாத் திரம்யோக மவுத்தி ராதி
யநேகமுள வவற்றினவுத் திரியிரண்டு திறனு
மிலகுஞா னங்கிரியை யெனஞான மனத்தா
லியற்றுவது கிரியையெழிற் குண்டமண்ட லாதி
நிலவுவித்துச் செய்தல்கிரி யாவதிதா னின்னு
நிர்ப்பீசஞ் சபீசமென விரண்டாகி நிகழும்.

(கோ - ரு.) அவற்றின் அவுத்திரி இலகு ஞானம் கிரியை என இரண்டு திறனும். எழில் குண்ட மண்டலம் ஆதி மனத்தால் கிரியை இயற்றுவது ஞானம். நிலவுவித்துச் செய்தல் கிரியாவதி. தான் இன்னும் நிர்ப்பீசம் சபீசம் என இரண்டாகி நிகழும்.

(பொ. ரை.) சகல வர்க்கத்து உயிர்களுக்கு மல பரிபாகம் மந்ததரம் முதலியனவாகப் பலவகைப்படுதலின், அவற்றிற்கேற்ப ஆசிரியன் அம்மலத்தைக் கெடும்படி செய்யும் சாதார தீக்கையும் இருவகைப்படும். அவற்றுள், திருவருள் நோக்கம், பரிசம், வாக்கு, பாவனை, நூல், யோகம் என ஆறும் ஒருவகை. அவ்வாறுடனே கூடிய ஔத்திரி சாம்பவம் மற்றொரு வகை. ஔத்திரி தீக்கைக்கு உரியரல்லாதார்க்கு அந்த ஆறு தீக்கை மட்டுஞ் செய்யப்படும். அவ்வௌத்திரியும் விளங்குகின்ற ஞானவதி, கிரியாவதி என இருதிறப்படும். அவற்றுள் அழகினையுடைய குண்டம், மண்டலம், அங்கி, நெய், சுருக்கு, சுருவம் முதலிய அனைத்தும் மனத்தாற் கற்பித்துக்கொண்டு விதிப்படி ஆகுதி முதலிய கிரியையை அகத்தே செய்வது ஞானவதியாம். அவையனைத்தும் புறத்தே அமைத்துக்கொண்டு அக்கிரியையைப் புறம்பே செய்வது கிரியாவதி எனப்படும். இவ்விருவகைப் பட்ட ஔத்திரிதீக்கையும் நிர்ப்பீசம், சபீசம் எனஇருதிறப்பட்டு ஞானத்தில் நிர்ப்பீசம், ஞானத்தில் சபீசம், கிரியையில் நிர்ப்பீசம், கிரியையில் சபீசம் என நால் வகைப்படும். (எ - று.)

ஓம சகிதம் செய்யப்படுவது ஔத்திரி யெனப்படும்.

நோக்கம்—சட்சு தீக்ஷை எனப்படும். அதாவது, கண்ணால் பார்த்தல். பார்வை அநுக்கிரகமென்றும் நிக்கிரகமென்றும் அவ்விரண்டுமின்றிய பொதுவான அழகென்றும் மூன்றுவகைப்படும். அவற்றுள், அநுக்கிரகமான பார்வையே சட்சுதீக்ஷையெனப்படும். அதாவது, ஆசிரியன் உண்மைப் பொருளிலே சித்தத்தை வைத்து அச்சித்த விருத்தியோடு கூட மாணாக்கனுடைய பந்தம் நீங்கும்படி பார்த்தல்.

பரிசம்—பரிசதீக்ஷை எனப்படும். அதாவது, ஆசிரியன் தனது வலது கையில் சிவபெருமானைப் பாவனை செய்து பூசித்து அக்கையால் மாணாக்கன் தலையைப் பரிசித்து, அதாவது, கையைத் தலைமேல் வைத்துப் பாசம் நீங்கும்படி செய்தல்.

வாக்கு—வாசகதீக்ஷை எனப்படும். அதாவது, மாணாக்கனுடைய வருணத்திற்கும், ஆச்சிரமத்திற்கும் ஏற்றவாறு பஞ்சாக்கர மந்திரத்தை உபதேசித்தல்.

பாவனை—மானததீக்ஷை எனப்படும். அதாவது, ஆசிரியன் தன்னுடைய யோகாப்பியாசத்தால் மாணாக்கனுடைய இருதயத்தில் பிரவேசித்து அம்மாணாக்கன் அறிவில் சிவமாந்தன்மை விளங்கும்படி செய்தல்.

நூல்—சாஸ்திரதீக்ஷை எனப்படும். அதாவது, ஞான சாஸ்திரப் பொருள்களை யெல்லாம் தொகுத்துப் பதி, பசு, பாசங்களுடைய இலக்கணங்களையும், சிவ சீவர்களுடைய ஐக்கியத்தையும் நூல்வழியாகப்போதித்தல்.

யோகம்—யோகதீக்ஷை எனப்படும். அதாவது, சிவயோகத்தை அப்பியாசம் பண்ணும்படி உபதேசித்தல்.

ஔத்திரி—ஔத்திரிதீக்ஷை எனப்படும். அதாவது, ஓமத்தோடு கூடிச் செய்யுந் தீக்ஷையாம்.

சாம்பவம்—சாம்பவதீக்ஷை எனப்படும். அதாவது, சத்தியோடு கூடிச் செய்யுந் தீக்ஷையாம்.

ஞானவதி கிரியாவதி என்பன, ஞானவழி, கிரியாவழி எனப்படும். அதாவது ஞானமார்க்கம், கிரியாமார்க்கமாம்.

நிர்ப்பீசம்—பீசமில்லாதது எனப் பொருள்படும். அதாவது, செபிக்கக்கூடிய மந்திரத்திற்கு மூலமாகிய பீசாக்கரமின்றி மந்திரத்தை மட்டும் உபதேசிப்பது.

சபீசமாவது—பீசாக்கரத்தோடுகூட மந்திரத்தை உபதேசிப்பது,(௫)

நிரப்பீசதீக்ஷைக்கு அதிகாரி இவரெனவும், அத்தீக்கையின் இலக்கணம் இதுவெனவும், அது நிரதிகார தீக்கையெனச் சொல்

லப்பட்டுச் சமயம், விசேடம், நிருவாணமென மூன்ருய் விளங்கு மெனவும் கூறுகின்றது.

பாலரொடு வாலீசர் விருத்தர்பனி மொழியார்
பலபோகத் தவர்வியாதிப் பட்டவர்க்குப் பண்ணுஞ்
சீலமது நிர்ப்பீசஞ் சமயா சாரந்
திகழ்சுத்தி சமயிபுத் திரர்க்கு நித்தத்
தேதுமதி காரத்தை யியற்றித் தானு
மெழினிரதி காரரையென நின்றிரண்டாய் விளங்குஞ்
சாலநிகழ் தேகபா தத்தி னேடு
சத்தியநிர் வாணமெனச் சாற்றுங் காலே.

(கோ - டு.) நிர்ப்பீசம் பாலரொடு, வாலீசர், விருத்தர், பனி மொழியார், பலபோகத்தவர், வியாதிப்பட்டவர்க்கு திகழ் சமயாசாரஞ் சுத்தி, நித்தத்து எலும் அதிகாரத்தை இயற்றி, எழில் நிரதிகாரை என நின்று, அதுதானும் சமயி, புத்திரர்க்குப் பண்ணும் சீலம், சாற்றுங்காலே, சால நிகழ் தேகபாதத்தினேடு சத்திய நிர்வாணமென இரண்டாய் விளங் கும்.

(போ - ரை.) மேறகூறிய நிர்ப்பீசம், சபீசம் என்னும் இரண்டனுள், நிர்ப்பீச தீக்கையாவது, மலபரிபாகம் உடைய ராயும், சமயாசாரங்களை அநுட்டிக்கும் ஆற்றலும், கர்மத்தை யநுட்டிக்கும் அறிவும் இல்லாதவருமாகிய பாலரும், அறிவில்லாத வரும், வயதில் முதிர்ந்தவரும், மாதரும், போகாநுபவம் மிகுதியு முடையவரும், நோயினையுடையவருமாகிய இவர் முதலாயினோர்க் குச் செய்யப்படுவதாம். செய்யுங்கால், அவர் அநுபவிக்க வேண்டிய கன்மங்களை ஆகுதியினுல் ஆசிரியன் சுத்திசெய்து, அநுட்டிக்கவேண்டிய சமயாசாரங்களையும் அவ்வாறே ஆகுதியி னுல் சுத்திசெய்து கன்மங்களையும், சமயாசாரங்களையும் அநுப வத்திற்கு வாராமலும், செய்யவேண்டுவதில்லாமலும் நீக்கி, நித்திய கன்ம மாத்திரையில் இயன்றவாறு அநுட்டிக்கும் அதிகாரத்தைக் கொடுத்து, நைமித்திக கன்மத்தும், காமிககன்மத்தும் அதிகாரங் கொடாதிருக்கப்படும். நைமித்திகத்தும் காமிகத்தும் அதிகார

மில்லாமையினுல் இத்தீக்கை நிரதிகாரம் எனவும் படும். இவ்வாறு செய்யப்படும் ஔத்திரி தீக்கையும் சமயம், விசேடம், நிருவாணமென மூன்றும். அவற்றுள், சமயம் சமயிக்கும், விசேடம் புத்திரர்க்கும் செய்யப்படும். நிர்வாண தீக்கையைச் சொல்லுமிடத்து, சத்தியோ நிருவாணம், அசத்தியோ நிருவாணமென விளங்கும். சத்தியோ நிருவாணமாவது, தீக்ஷை செய்த அப்பொழுதே முத்தியைத் தருவது. அசத்தியோ நிருவாணமாவது, பிராரத்த தேகம் ஒழிந்த பின்னர் முத்தியைத் தருவதாய் மிக்கு நிகழ்வது. இந்த நிருவாண தீக்ஷை மோட்ச விருப்பமுடையாருக்குச் செய்யப்படுவது. (எ - று.)

சமயாசார சுத்தியோடு செய்யப்படும் நிருவாண தீக்கையும், அந்த நிருவாணத்திற்கு அங்கமாயும், அதற்கு அங்கமாகாது தனியாயும் சமயாசார சுத்தியோடு செய்யப்படும் சமய, விசேடங்களும் நிர்ப்பீசமெனக் கொள்க.

நித்திய கன்மமாவது—நாள்தோறுஞ் செய்யவேண்டிய சந்தியா வந்தன முதலிய கிரியைகள்.

நைமித்திக கன்மமாவது—விசேட காலமாகிய கிரஹண முதலிய புண்ணிய தினங்களில் விசேடமாகச் செய்யும் செபம், ஆராதன முதலியன.

காமிகமாவது—சித்தி முதலிய பயனை வேண்டிச் செய்யும் விசேடக் கிரியை.

சமய தீக்ஷையாவது—சமயத்தில் பிரவேசிக்கச் செய்வதாகிய தீக்ஷையாம். ஆதலின், இவர் சமயி எனப்படுவர்.

விசேட தீக்ஷையாவது—சமயப் பிரவேசஞ் செய்தவனுக்குச் சிவபூசை முதலிய ஆராதனங்கள் செய்யும்படி செய்வதாம். ஆராதித்தலின் இவர் புத்திரரெனப்படுவர்.

நிருவாண தீக்ஷையாவது—பாச பந்தமனைத்தையும் அறவே நீக்கிச் சிவபிரான்றிருவடியை யடையும்படி செய்வதாம்.

மந்ததர பக்குவமுடையார்க்குச் சமயதீக்ஷை ஒன்றுசெய்து, சரியையினையும், மந்தபக்குவமுடையார்க்குச் சமய விசேடம் இரண்டுஞ்செய்து கிரியையினையும், தீவிர பக்குவமுடையார்க்கு அவ்விரண்டு தீக்கையுஞ் செய்து யோகத்தினையும், தீவிரதர பக்குவமுடையார்க்கு நிருவாண தீக்கை

செய்து ஞானத்தினையும் அநுட்டிக்கும்படி செய்வர். சபீச தீக்ஷைக்கு மிவ்வாறே கொள்க. (ச)

சபீச தீக்ஷைக்கு அதிகாரி இவரெனவும், அத்தீக்கையின் இலக்கணமிது வெனவும், அது சாதிகார தீக்கை என்று சொல்லப் பட்டுச் சமயம் முதலிய நான்காய் விளங்கு மெனவும், இத்தீக்கை யுடையார் சாதகர், ஆசாரியரென இருதிறப்படுவரெனவும், இத் தீக்கையும் உலகதருமிணி சிவதருமிணி என ஆச்சிரமபேதம்பற்றி இருதிறப்படுமெனவும் கூறுகின்றது.

ஓதியுணர்ந் தொழுக்கநெறி யிழுக்கா நல்ல
வுத்தமர்க்குச் செய்வதுயர் பீசமிவர் தம்மை
நீதியினா னித்தியநை மித்திககா மியத்தி
னிறுத்திநிரம் பதிகார நிகழ்த்துவதுஞ் செய்து
சாதகா சாரியரு மாக்கி வீடு
தருவிக்கு முலோகசிவ தருமிணியென் றிரண்டா
மாதலினா லதிகாரை யாஞ்சமய விசேட
நிருவாண மபிடேக மிவற்றடங்கு மன்றே.

(கொ-டு) உயர்பீசம் ஓதியுணர்ந்து ஒழுக்க நெறி இழுக்காநல்ல உத்தமர்க்கு நிறுத்திச் செய்து, இவர் தம்மை நீதியினால் நைமித்திக காமி யத்தின் நிரம்பு அதிகாரம் நிகழ்த்துவதும் செய்து அதிகாரையாம் சாதகா சாரியரும் ஆக்கி வீடுதருவிக்கும் உலோக (தருமிணி) சிவதருமிணி யென்றி ரண்டாம். ஆதலினால், இவற்று சமயம், விசேடம், நிருவாணம், அபிடேகம் அடங்கும் அன்றே.

(போ - ரை.) இனி உயர்ந்த சபீசதீக்கையாவது, மலபரி பாகத்தோடு கூடக்கற்றறிந்து ஒழுக்க வழியில் வழுவாது நிற்கும் ஆற்றல் மிக்குடைய உத்தமத்திலுத்தமாயினார்க்குச் செய்யப் படுவதாம். செய்யுங்கால், அதிகாரியினுடைய பக்குவத்தை யறிந்து அநுட்டிக்க வேண்டிய சமயாசாரகன்ம மாத்திரம் அநுட் டிக்கும்படி நிறுத்தி, உலக போகாநுபவத்திற்குரிய ஏனையகன் மங்களைச்சுத்தி செய்து அதாவது, அநுபவத்திற்கு வாவொட் டாமல் சிவாக்கினியால் கெடுத்து ஒழித்து, இவரை முறைமை

யில் நித்தியம், நைமித்திகம், காமிகம், என்னும் மூன்றினும் பேரதிகாரமுடையாராகச் செய்யப்படும். இவ்வாறு செய்தலால் இத்தீக்கைசாதிகார தீக்கை எனவும் பெயர் பெறும். இத்தீக்கைப் பேறுடையார் சாதகரும், ஆசாரியருமென இருதிறப்படுவர். அவ்வாறிருதிறப்படுதற்குக் காரணம் தீக்கையின் வேறுபாடே யாம். அவ்வேறுபாடாவது, இச்சபீச தீக்கை சமயம், விசேடம், நிருவாணம், அபிடேகமென நால்வகைப்பட்டு அவற்றுள் சமயம், விசேடம், நிருவாணம் மட்டுஞ் செய்யப் பெற்றவர் சாதகரும், அம்மூன்றுடன் அபிடேகமுஞ் செய்யப்பெற்றவர் ஆசாரியருமாவரென்பதேயாம். வீட்டினைத்தரும் இத்தீக்கையும், இல்லறமுடையாருக்குச் சிகையோடு கூடிச்செய்வதாகிய உலோக தருமிணி யென்றும், துறவறமுடையாருக்குச் சிகாச்சேதத்தோடு செய்வதாகிய சிவதருமிணி யென்றும் இருதிறப்படும். உலோக தருமிணியைப் பவுதிகமென்றும், சிவதருமிணியை நைட்டிகமென்றுங் கூறுவர். இவ்வாறுதலின் நிர்ப்பீசம், சபீசம் என்னும் இருவகைத் தீக்கையினுள் சமயம், விசேடம், நிருவாணம், அபிடேகம் என்னும் பேதமெல்லாம் அடங்கும் (எ - று)

சமயாசாரசுத்தியின்றிச் செய்யப்படும் நிருவாண தீக்கையும், அதற்கு அங்கமாய்ச் செய்யப்படுஞ் சமய விசேடங்களும் சபீச தீக்கையெனக் கொள்க. உத்தமத்திலுத்தமரென்று கூற வேண்டி நல்ல உத்தமர் என்றார். சிகை பிரமரந்திரத்தை மறைத்தலின் திரோதான ரூபமாகும்.

இவ்வாறு கூறிய வாற்றால் தீக்கை யென்பது, ஔத்திரி எனத் தொகையாலொன்றும், ஞானவதி, கிரியாவதி என வகையாலிரண்டும், ஞானவதி நிர்ப்பீசம், ஞானவதி சபீசம், கிரியாவதி நிர்ப்பீசம், கிரியாவதி சபீசம் என விரியால் நான்கு மாயாவாறு காண்க.

சமயா சாரகன்மமென்பது, சந்தியா வந்தன சிவபூசை முதலிய கருமங்கள்.

சாதிகார தீக்கையென்பது அதிகாரத்தோடு கூடின தீக்கை.

அபிடேகமென்பது, ஆசாரியனுதற்குரிய மந்திரக்கிரியைகளைக் கும்பத்திற் செய்து ஸ்நானஞ் செய்விப்பது.

பவுதிக தீக்கை என்பது, பவுதிகம் பூதத்தின் காரியமாதலால், பூத காரியமாகிய உலகத்தோடு கூடியிருக்கும்படி செய்யும் தீக்கை எனப்படும்.

நைட்டிக தீக்கை என்பது, நைட்டிகம் நிட்டையோடு கூடியது ஆதலால், நிட்டையோடு கூடியிருக்கும்படி செய்யும் தீக்கை எனப்படும்.

இவை மூன்று செய்யுளானும் குருவையதிட்டித்துச் செய்யும் சாதார தீக்கையானது நோக்க முதலியனவும் ஔத்திரியுமென இருவகைப்படு மெனவும், தனித்துச் செய்தலும் அங்கமாகச் செய்தலுமென நோக்க முதலியவற்றினியல்பும், ஔத்திரியின் பேதங்களாகிய சபீச நிர்ப்பீசங்களி னியல்புந் தொகுத்துக் கூறப்பட்டன. (௫)

தீக்கை செய்யும் ஆசிரியன் சிவம் எனவும், செய்யும் விதமா கிய அத்துவசுத்தி இவ்வாறெனவும் கூறுகின்றது.

அழிவிலாக் கிரியையினு ணுதல்சத்தி மத்தா
ணுதலத்து வாசுத்தி பண்ணிமல மகற்றி
யொழிவிலாச் சிவம்பிரகா சித்தற்கு ஞான
முதிப்பித்துற் பவந்துடைப்ப னரனொரு மூவர்க்கும்
வழுவிலா வழியாறு மந்திரங்கள் பதங்கள்
வன்னங்கள் புவனங்க டத்துவங்கள் கலைகள்
கழிவிலா துரைத்தமுறை யொன்றினொன்று வியாத்தி
கருதுகலை சத்தியின்கண் சத்திசிவன் கண்ணும்.

(கோ - ௫) அரன் ஒரு மூவர்க்கும் அழிவிலாச்சத்திமத்தாணுதல் கிரியையினுணுதல் மந்திரங்கள், பதங்கள், வன்னங்கள், புவனங்கள், தத்து வங்கள், கலைகள் ஆறும் வழுவிலா வழி உரைத்தமுறை ஒன்றினொன்று கழிவிலாது வியாத்தி. கருதுகலை சத்தியின்கண். சத்தி சிவன் கண்ணும். அத்துவாசுத்தி பண்ணி மலமகற்றி ஒழிவிலாச்சிவம் பிரகாசித்தற்கு ஞானம் உதிப்பித்து உற்பவம் துடைப்பன்.

(போ - ரை.) மேற்கூறியவாறு தீக்கையைச் சிவபெரு மானே குருமூர்த்தியை வாயிலாகக்கொண்டு நின்று செய்வன். தீக்கையைப் பெறும் மாணுக்கர் ஞானமார்க்கத்திற் குரியவரும், கிரியாமார்க்கத்திற் குரியவருமென இருதிறப்படுவர். அவ்விரு திறத்தவரும் உத்தமர், மத்திமர், அதமர் எனத்தனித்தனி முத்திறப்படுவர். அவருள், மேற் கூறியவாறு கற்றறிந்து ஒழுக்க நெறியில் நிற்பவர் உத்தமர். கற்றறிந்து ஒழுக்க நெறியில் நில்லாத வர் மத்திமர். கற்றறிதலும் ஒழுக்க நெறிநில்லாமையுமுடையர்

அதமர். ஒழுக்க நெறிநில்லார் என்பதற்குச் சரியையாதி ஒழுக்க மில்லார் என்பது பொருளேயன்றி, இழுக்க நெறியுடையாரென் பது பொருளன்று. இத்தகைய பக்குவர்க்கு அவரவர் பக்குவத் திற்கேற்ப ஞானதீக்கை, கிரியா தீக்கை என்னும் இரண்டினுள் ஒன்றை ஆசிரியர் செய்வர். எவ்வாறு செய்வரெனின், மந்திரங் கள், பதங்கள், வன்னங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள் என அறுவகைப்படுவதான குற்றமில்லாத ஆறத்துவாக்களையும் மந்திரம்பதத்திலும், பதம் வன்னத்திலும், வன்னம் புவனத்திலும், புவனம் தத்துவத்திலும், தத்துவம் கலையிலும் ஒடுங்க, நீக்க மின்றி ஒடுக்கி, அவற்றுள் முடிவாகக்கருதப்படும் கலையைத்திரோ தானசத்தியினும், அத்திரோதான சத்தியைச் சிவத்தினும் அடங்குமாறு ஒடுக்குவர். அவ்வாறு ஒடுக்குவதனால் பிறவிக் கேதுவாகிய மலத்தைக்கெடுத்து எங்கணும் வியாபகமாகிய சிவம் பிரகாசித்தற்கேதுவாகிய ஞானத்தைக் கொடுத்துப்பிறவியை ஒழிப்பர். (எ - று.)

கிரியை என்பது கிரியாவதியைக்குறித்தலின் ஆகுபெயர். சத்தி என்பது ஞானத்தைக் குறித்தது.

மேல் ௩ - வது செய்யுளில் ஔத்திரி, ஞானங்கிரியை என இரண்டு திறனும் என்றெடுத்து, இச் செய்யுளில் அழிவிலாக்கிரியையினாதல் சத்திமத்தாலாதல் என முடித்தமையின், இடையே கூறப்பட்டனவெல் லாம் ஞானவதி, கிரியாவதியாகிய இவ்விரண்டற்கும் பொதுவாமாறு காண்க.

மந்திர முதலிய அத்துவாக்களை வழி என்று கூறுவர். அவ்வழியும் உயிருக்கு இதம், அகிதம் என்னும் கன்மம் வருகின்ற வழி எனவும், உயிர் இறைவனை அடைதற்கு வழி எனவும் இருவகைப்படும். அவற்றுள் கன்மம் வரும்வழி என்பது எவ்வாறெனில்,

மந்திரங்களை உரத்துச் சொல்லல் மெல்லச்சொல்லல் உச்சரிப்பின் பேதம் ஆகிய இம்முறைமையில் எந்த மந்திரத்தை எவ்வாறு சொல்ல வேண்டுமோ அவ்வாறு சொல்லில் புண்ணியமும், மாறுபடச் சொல்லில் பாவமுமாம்.

பதங்களில் பிரிக்கக்கூடிய பதமாயின் பிரித்தும், பிரிக்கக்கூடாத பதமாயின் பிரியாமலும் இருப்பின் புண்ணியமும், இதற்கு மாறுபடின் பாவமுமாம்.

வன்னமென்பது அக்கரம். அவ்வக்கரங்களில் குறிலைக் குறிலாகவும், நெடிலை நெடிலாகவும், அளபெடையை அளபெடையாகவும் அந்தந்தத் தானங்களில் உச்சரிக்கில் புண்ணியமும், மாறுபடிற் பாவமுமாம்.

புவனங்களுக்குப் பதியாகிய தெய்வத்தைப் பூஜிக்கில் புண்ணியமும், பூஜியாது நிந்தை செய்யில் பாவமுமாம்.

தத்துவங்களாகிய ஞானேந்திரியம் கன்மேந்திரியம் அந்தக்கரணங்களினாலே பிறர்க்குச் செய்யும் இதம் புண்ணியம். அகிதம் பாவம். நல்வழியில் திரவியத்தைத்தேடிப் போகமநுபவிப்பது புண்ணியம். தீயவழியில் திரவியத்தைத் தேடிப் போகமநுபவிப்பது பாவம்.

பஞ்சகலைகளுக்கு அபிமானிகளான பஞ்ச சத்திகளுக்குப் பூஜை செய்யிற் புண்ணியம். பூஜை செய்யாதிருப்பது பாவம். இவ்வாறு மந்திர முதலிய ஆறின் வழியாலும் உயிர்க்குக் கன்மம் வருவதையறிக. பஞ்ச கலைகளுக்கு அபிமானிகளான பஞ்ச சத்திகளாவன:—நிவிர்த்தி கலைக்குக் கிரியா சத்தியும், பிரதிட்டா கலைக்கு ஞான சத்தியும், வித்தியா கலைக்கு இச்சா சத்தியும், சாந்தி கலைக்கு ஆதி சத்தியும், சாந்தியதீத கலைக்குப் பரா சத்தியும் அபிமானிகளாம்.

இனி, இந்த ஆறத்துவாக்களும் சொற்பிரபஞ்சம், பொருட்பிரபஞ்சமென இருவகைப்படும். அவற்றுள், மந்திரம், பதம், வன்னம் மூன்றும் சொற்பிரபஞ்சம். புவனம், தத்துவம், கலை மூன்றும் பொருட் பிரபஞ்சம். பிரபஞ்சமெல்லாம் சொல், பொருள் என்னும் இரண்டினுள் அடங்கும். அவற்றுள் சொல்லாவது, எழுத்தும் அவ்வெழுத்தாலாகிய பதமும் பதத்தாலாகிய சொல் (மந்திரமும்) என விரியும். பொருள், உடலும் உலகமும் அவற்றை ஆக்கும் சத்தியுமென மூவகைப்படும். அவற்றுள் உடல், இந்திரியம், அந்தக்கரண முதலிய தத்துவ வடிவாயிருக்கும். புவனம் பஞ்சபூத வடிவாயிருக்கும். சத்தி கலைவடிவாயிருக்கும். இவ்வாறு பிரபஞ்ச வடிவாயிருக்கிற சொல்லும், பொருளுமாகிய ஆறத்துவாக்களும் ஆணவ கேவலத்துட்கிடந்து அறிவு விளங்காத ஆன்மாக்கட்கு அறிவு விளங்குதற்கு வழியாய்த் தோன்றி அதனால் அறிவு விளங்கும். அவ்வறிவு விளக்கம் ஏகதேசமென்பதை உணர்ந்த பின்னர், இவ்வத்துவாக்கள் ஆறினையும் ஒன்றினொன்று அடங்க ஒடுக்கும் முறையினால் இறைவனை அடைதற்கும் வழியாயிற்று.

ஒன்றினொன்று ஒடுங்குதற்குக் காரணம், மந்திரமென்னும் சொல் பதத்தையின்றி யில்லாமையால் மந்திரம் பதத்தில் ஒடுங்கும். பதம் எழுத்தையின்றி யில்லாமையால் பதம் எழுத்தில் ஒடுங்கும். இம்மூன்றும் சொல்

ஆதலால் சொல் பொருளைக்குறித்தன்றி நில்லாமையால் அச்சொல் பொருளி லொடுங்கும். அப்பொருள் புவனம், தத்துவம், கலை ஆதலால் அவற்றுள் வெளிப்படையாகக் காணப்படும் புவனத்தில் முதற்கண் சொல் ஒடுங்கும். புவனம் தத்துவத்தையின்றி இல்லாமையால் புவனம் தத்துவத்திலொடுங் கும். தத்துவம் கலையையின்றித் தோன்றாமையால் தத்துவம் கலையிலொ டுங்கும். அதாவது பேச்சை நிறுத்தி, உலகத்தை வெறுத்து உடலைத்தான ன்றென அறிந்து அருளால் தன்னையுந் தலைவனையும் அறியும் முறையாம்.

கலை நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என ஐவகைப்பட்டுச் சத்திகலை என்றும், சத்தி அதிட்டித கலை யென்றும் ஒவ் வொன்றும் இருவகைப்படும். அவற்றுள்,

சத்திகலையாவது சத்தியின் அம்சமெனப் பொருள்படும். அவ்வம்சம் உயிருக்குப் பிரபஞ்ச விடுதலையை உண்டுபண்ணுங்கால் நிவிர்த்திகலை யென்றும், விடுதலைசெய்த பிரபஞ்சத்தை மீளப்பற்றாது விடுதலையை நிலைப் படுத்துங்கால் பிரதிட்டா கலையென்றும், விடுதலையடைந்த உயிருக்கு உண் மைப் பொருளை உணர்த்துங்கால் வித்தியாகலை யென்றும், உண்மைப் பொருளை உணர்ந்த உயிர் அப்பொருளில் அடங்கியிருக்கச் செய்யுங்கால் சாந்திகலை யென்றும், அவ்வாறடங்கின உயிர் அடங்கியிருக்கின்றோம் என் னும் போதமிறந்து அதீதப்படச் செய்யுங்கால் சாந்தியதீதகலையென்றும் திருவருட் சத்தியே செயல் வேறு பாட்டால் இவ்வாறு ஐவகைப்படும். இச் செயல் சுத்தாவத்தையில் உயிரறிவின்கண் செய்வது.

இனிச் சத்தி அதிட்டித கலையாவது, பிறிதொன்றின் வாயிலாகத் தொழிற் செய்யும் சத்தியின் அம்சமாம். அதாவது, திருவருட் சத்தி பிர மாவை வாயிலாகக்கொண்டு கேவலத்திலிருந்த ஆன்மாக்கட்கு அக்கேவலத் தை நிவிர்த்தித்துப் பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்குங்கால் நிவிர்த்திகலை யென்றும், தோற்றிய பிரபஞ்சத்தை விட்டுணுவின் வாயிலாய் நின்று நிலைப்படுத்துங்கால் பிரதிட்டா கலையென்றும், வேறொரு புவனத்தை யறிவிக்கு நிமித்தம் நிலைப்படுத்திய புவனத்தை உருத்திரன் வாயிலாய் நின்று அழிக்குங்கால் வித்தியாகலை என்றும், புவனத்திற்றங்கிப் போகங்களை யநுபவிக்குங்கால் கன்மத்திற்கேற்ற போகங்களில் அமைந்து அநுபவிக்கும்படி மகேசன் வாயிலாகச் செய்யுங்கால் சாந்திகலை யென் றும், அநுபவிக்கவேண்டிய போகப் பொருள்களை அநுபவிக்கும்படி சதா சிவர் வாயிலாகக் கூட்டுவிக்குங்கால் சாந்தியதீதகலை யென்றும் ஐவகைப் படும். இச்செயல் உயிரின் சகலாவத்தையில் தநு, கரண, புவன, போகங் களிடத்துச் செய்வது.

திரோதான சத்தியென்பது, மறைத்தற் சத்தி. அது, மேற்கூறிய மகேசன் வாயிலாய் நின்று செய்யும் சாந்திகலையாகிய சத்திக்கும், இப்பஞ்ச கலைகட்கும் ஆதாரமாகிய சத்திக்கும் பெயராம். மகேசன் வாயிலாக நிகழும் திரோதான சத்தி உயிர்க்குப் போகத்திலே அமையும்படி செய்வதென மேற்கூறியாயிற்று. இனிப் பஞ்சகலைகட்கும் ஆதாரமாகிய திரோதான சத்தியாவது, ஞான சொரூபமாகிய சிவசத்தி பஞ்சகலைகளாக மாறுதற் குரிய அவசர பேதமாம். (ரு)

நிவிர்த்தி, பிரதிட்டை என்னும் இரண்டு கலைகளுள் ஒடுங்குவனவாகிய ஏனைய அத்துவாக்களின் தொகை யிவையெனக் கூறுகின்றது.

மந்திரங்கள் முதலைந்துங் கலையைந்தின் வியாத்தி
மருவுமந் திரமிரண்டு பதங்க ளாலே
முந்தநிலை யெழுத்தொன்று புவன நூற்றெட்
டவனிதத் துவமொன்று நிவிர்த்தியயன் றெய்வம்
வந்திடுமந் திரமிரண்டு பதங்கள் மூவேழ்
வன்னங்க ளாலாறு புரமைம்பத் தாறு
தந்திடுந்தத் துவங்களிரு பத்து மூன்று
தரும்பிரதிட் டாகலைமா லதிதெய்வந் தானும்.

(கோ - டு) மந்திரங்கள் முதலைந்தும் கலையைந்தின் வியாத்தி. நிவிர்த்தி மந்திர மிரண்டு பதங்கள் நாலேழ் அந்த நிலை எழுத்து ஒன்று புவனம் நூற்றெட்டு அவனி தத்துவம் ஒன்று மருவும்; அயன் தெய்வம். பிரதிட்டாகலை வந்திடு மந்திரமிரண்டு பதங்கள் மூவேழ் வன்னங்கள் நாலாறு புரம் ஐம்பத்தாறு தந்திடுந் தத்துவங்கள் இருபத்து மூன்று தரும்; அதி தெய்வம் மால்தான் ஆம்.

(போ - ரை) மேற் கூறிய அத்துவாக்களுள், மந்திரம், பதம், வன்னம் மூன்றுஞ் சுத்தமாயாகாரியமாதலால், சுத்தாத்துவாவெனப்படும். தத்துவம், சுத்தமாயை அசுத்தமாயா காரியமாதலால் மிச்சிராத்துவா வெனப்படும். புவனம், சுத்தமாயை அசுத்தமாயை, பிரகிருதி மாயாகாரியமாதலால் சுத்தாத்துவா மிச்சிராத்துவா அசுத்தாத்துவா வெனப்படும். படவே, சுத்தம் மிச்சிரம் அசுத்தம் என்னும் மூவகை அத்துவாக்களும் மந்

திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம் என ஐந்தாய் விரியும். இவ்வைந்தத்துவாக்களும் ஒன்றினொன்றாக மேற்கூறிய வாறு நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகளுள் எவ்வாறு ஒடுங்கு மெனின், நிவிர்த்திகலையில் சத்தியோசாதம், இதயமாகிய மந்திர மிரண்டும், ஓம் நமோநம என்னும் பதமுதலாக மகாதேவ என் னும் பதமீறாக இருபத்தெட்டுப்பதங்களும், முடிவான க்ஷ கார அக்கரம் ஒன்றும், காலாக்கினி ருத்திரபுவன முதல் வீரபத்திரர் பத்திரகாளி புவனமீறாகப் புவனம் நூற்றெட்டும், பிருதிவி தத்து வம் ஒன்றும் ஆகிய இவைகள் மேற்கூறிய முறையே ஒன்றி னொன்றாக ஒடுங்கும். இந்த நிவிர்த்திகலைக்கு அதிதெய்வம் பிரமன். பிரதிட்டாகலையில் வாமதேவம், சிரசு ஆகிய மந்திர மிரண்டும், மகேசுவரமென்னும் பதமுதலாக அரூபின் என்னும் பதமீறாகப் பதங்களிருபத்தொன்றும், ள கார முதலாக டகார மீறாக எழுத்துக்கள் இருபத்துநான்கும், அமரேசாதி புவன முதல் சீ கண்ட புவன மீறாகப் புவனம் ஐம்பத்தாறும், அப்பு தத்துவமுதல் பிரகிருதியீறாகத் தத்துவங்களிருபத்துமூன்றும் ஒன்றினொன்றாக ஒடுங்கும். இப்பிரதிட்டாகலைக்கு அதிதெய்வம் விட்டுணு. (எ - று) (எ)

வித்தை, சாந்தி என்னும் இரண்டுகலைகளுள் ஒடுங்குவன வாகிய ஏனை யத்துவாக்களின் தொகை இவையெனக் கூறு கின்றது.

வித்தையின்மந் திரமிரண்டு பதநா லைந்து
விரவுமெழுத் தேழுபுர மிருபத் தேழு
தத்துவமு மோரேழு தங்குமதி தெய்வந்
தாவிலுருத் திரனுகுஞ் சாந்தி தன்னின்
வைத்தனமந் திரமிரண்டு பதங்கள்பதி னொன்று
வன்னமொரு மூன்றுபுரம் பதினெட் டாகு
முத்தமமாந் தத்துவமு மொருமூன் றாகு
முணரிலதி தேவதையு முயரீச னாமே.

(போ - ரை) வித்தியாகலையில் அகோரம், சிகை என்னும் மந்திரமிரண்டும், வியாபின் என்னும் பதமுதலாக தியானகாராயா என்னும் பதமீருகப் பதங்கள் இருபதும், ஞகாரமுதல் வகார மீருக அக்கரங்கள் ஏழும், வாமாதி புவனமுதல் அங்குட்ட ருத்தி ராந்தபுவன மீருகப் புவனம் இருபத்தேழும், புருடதத்துவம் முதல் மாயை யீருகத் தத்துவங்கள் ஏழும் ஒன்றினொன்ருக ஒடுங்கும். இவ்வித்தியாகலைக்கு அதிதெய்வம் முடிவில்லாத உருத்திரனும். சாந்திகலையில் தற்புருடம், கவசமாகிய மந்திர மிரண்டும், நித்திய யோகினே என்னும் பதமுதல் வியோம வியாபினே என்னும் பதமீருகப் பதங்கள் பதினென்றும், க்க, ஃக, க, என்னும் எழுத்து மூன்றும், வாமை புவனமுதல் சாதாக்கிய புவனமீருகப்புவனம் பதினெட்டும், சுத்தவித்தை, ஈசுவரம் சாதாக்கியம் ஆகிய தத்துவங்கள் மூன்றும் ஒன்றினொன்ருக ஒடுங்கும். இச்சாந்தி கலைக்கு அதிதெய்வம் மகேசுவரன் (எ-று)அ.

சாந்தியதீதகலையில் ஒடுங்குவனவாகிய ஏனைய அத்துவாக்களின் தொகை இவையெனக் கூறுகின்றது.

சாந்தியா தீதகலை தன்னின்மந் திரங்க
டாமூன்று பதமொன்றக் கரங்கள்பதி னாறு
வாய்ந்தபுர மூவைந்து தத்துவங்க ளிரண்டு
மருவுமதி தேவதையு மன்னுசதா சிவரா
மேய்ந்தமுறை மந்திரங்கள் பதினொன்று பதங்க
ளெண்பத்தொன் றக்கரங்க ளைம்பத்தொன் ருகு
மாய்ந்தபுர மிருநூற்ரூே டிருபத்து நாலா
மறிதருதத் துவமுப்பத் தாறுகலை யைந்தே.

(போ - ரை) சாந்தியதீதகலையில் ஈசானம், அத்திரம், மூலமந்திரமாகிய மந்திரங்கள் மூன்றும், ஓம் என்னும் பதம் ஒன்றும், அகாரம் முதல் அ: வரை அக்கரங்கள் பதினாறும், நிவிர்த்தி முதல் சாந்திய தீத மீருகப் புவனம் ஐந்தும், இந்திகை முதல் அநாசிருதை யீருகப் புவனம் பத்தும் ஆகப்புவனம்

பதினைந்தும், சத்தி தத்துவம், சிவதத்துவங்களாகிய தத்துவம் இரண்டும் ஒன்றினொன்றாக ஒடுங்கும். இச்சாந்தியதீதகலைக்கு அதிதெய்வம் சதாசிவதேவர். இவ்வாறு சத்தியோசாதம் முதலிய பதினொரு மந்திரங்களும், சிவாயநமோநம முதலிய எண்பத்தொரு பத மந்திரங்களும், க்ஷ காரம் முதலாகிய அக்கரம் ஐம்பத்தொன்றும், அனுசிருத புவனமுதல் புவனம் இருநூற்றிருபத்துநாலும், பிருதிவிமுதல் தத்துவம் முப்பத்தாறும், நிவிர்த்தி முதலிய கலை ஐந்தும் ஒடுங்கும் முறையில் வைத்துக்கண்டுகொள்க. (எ - று)

மருவுதல்—ஒடுங்குதல்.

மந்திர முதலிய ஆறுக்கும் கலையில் ஒடுக்கங் கூறியது, மந்திரம் பதத்திலும், பதம் வன்னத்திலும், வன்னம்புவனத்திலும், புவனம் தத்துவத்திலும், தத்துவம்கலையிலும் இவ்வாறு பரம்பரையில் ஒடுங்குதல் பற்றியே ஆதலின், மேல் ௬-வது செய்யுளில் ஒன்றினொன்றொடுங்கும் என்பதனோடு முரணாமையறிக.

மந்திர முதலிய ஆறத்துவாக்களும் வியாபகமாம். இன்றேல் எல்லா ஆன்மாக்களோடும் பொருந்துதல் கூடாது. ஆயினும், ஒன்றினொன்று மேலான வியாபகமாம். அவ்வாறின்றேல் உயர்ந்த வியாபகமாகிய கலையில் மந்திர முதலியன அடங்குமாறில்லை. அவ்வாறாயின், மேல் ௬ - வது செய்யுளில் "மந்திரங்கள் முதலேந்துங் கலையைந்தின் வியாத்தி" என ஒன்றினொன்றொடுங்குமாறு கூறியதனோடு இவ்விடத்து எல்லாம் வியாபகமென்றல் முரணாதோவெனின், முரணாது. எவ்வாறெனில், வியாத்தியென்றது, மேற் கூறியவாறு ஒன்றினொன்றொடுங்குவதான வியாபகமாதலின்றென்க. இவ்வாறு கூறியதன் கருத்தென்னை யெனின், ஏகதேச வியாபகமாகிய வியாப்பியத்திற்கு ஒடுக்கமும், அடக்கமாகிய வியாத்திக்குக் கேடுமே உரிமையாம். இது சூரியன் ஒளிமுன் வியாப்பியமாகிய கண்ணொளி ஒடுங்குதலும், வியாத்தியாகிய இருள் கெடுதலும் போலாம். ஆகலின், மேல் ௬ - வது செய்யுளில் வியாத்தி என்றதனால் கேடுசொல்லல் வேண்டும். இவ்விடத்து ஒடுங்குமென்றதனால் வியாப்பியம் சொல்லல் வேண்டும். இவ்வாறு சொல்லுங்கால் வியாத்தி என்றதனோடு வியாப்பியமென்றது முரணும். அவ்வாறு முரணாமல் வியாத்தி என்றது ஒன்றினொன்றொடுங்கும்வியாபகத்தையேகுறித்ததென்று கொள்ளுதற்பொருட்டு மருவுமென்றாரென்க.

பூரண வியாபகம், ஏகதேச வியாபகம், சம வியாபகமென வியாபகம் மூத்திறப்படும். அவற்றுள், ஏகதேச வியாபகத்தை வியாப்பியமென்றும், சம வியாபாகத்தை வியாத்தி என்றுங் கூறுவர்.

வியாப்பியம் பிறிதொன்றால் வியாபிக்கப்படுவது. வியாத்தி பிறிதொன்றினடங்கியிருப்பது. வியாபகம் பிறிதொன்றால் வியாபிக்கப்படுதலும், பிறிதொன்றின் அடங்குதலும் இன்றி உள்ளது. வியாபகத்திற்கு உவமை சூரியன். வியாப்பியத்திற்கு உவமை கண்ணொளி. வியாத்திக்கு உவமை இருள். இவ்விருள் கண்ணளவில் மறைத்தலால் சம வியாபகமெனப்பட்டது. இவ்வாறே பதி, பசு. பாசம் மூன்றினிடத்துங் கண்டு கொள்க.

சாந்தியதீதகலை என்றிருக்க வேண்டுவது சாந்தியாதீதகலை என ஓசை நிரப்புதற்பொருட்டு நீண்டு நின்றது.

இவை மூன்று செய்யுளானும் தீக்கைசெய்யுமிடத்து அத்துவாக்களாறும் ஒன்றிலொன்றடங்கு முறைமையறிந்து ஒடுக்குமாறு வகுத்துக்கூறப்பட்டது. (க)

கன்மங்கள் யாவும் அத்துவாவாகிய வழியால் வருதலின், அத்துவசுத்தியே சிறந்ததென்றும், இவ்வத்துவ சுத்தியால் ஆணவம், கன்மமாகிய ஏனைய மலங்களும் சுத்தியாமென்றுங் கூறுகின்றது.

மூன்றுதிறத் தணுக்கள்செயுங் கன்மங் கட்கு
 முன்னிலையா மூவிரண்டா மத்து வாவி
னான்றமுறை யவையருத்தி யறுத்துமல முதிர்வித்
 தரும்பருவ மடைதலுமே யாசா னாகித்
தோன்றிநுக ராதவகை முற்செய் கன்மத்
 துகளறுத்தங் கத்துவாத் துடக்கறவே சோதித்
தேன்றவுடற் கன்மமனு பவத்தினா லறுத்திங்
 கினிச்செய்கன்ம மூலமல ஞானத்தா விடிப்பன்.

(கோ - ௫) அணுக்கள் மூன்று திறத்துச் செயுங்கன்மங்கட்கு முன்னிலையாம் மூவிரண்டாம் அத்துவாவின் ஆன்ற முறை அவையருத்தி அறுத்து மலம் முதிர்வித்து அரும்பருவமடைதலுமே ஆசானாகித்தோன்றி, அத்துவாத்துடக்கு அறவே சோதித்து, அங்கு நுகராதவகை முன் செய்

கன்மத்துகள் அறுத்து, உடல் என்ற கன்மம் அனுபவத்தினல் அறுத்து, ஞானத்தால் மூலமலம் இங்கு இனிச்செய்கன்மம் இடிப்பன்.

(பொ - ரை.) மேற்கூறியவாறு இறைவன் குரு மூர்த்தியை ஆதாரமாய்க் கொண்டு நின்று செய்யும் தீக்கையில் ஆணவ மலம், கன்ம மலங்களைச்சுத்தி செய்யாதுமாயாமலமாகிய அத்துவ சுத்தியே செய்வனென அத்துவ சுத்தியைச் சிறந்தெடுத்துக் கூறியதென்னையெனின், ஆன்மாக்கள் மனம், வாக்குக், காய மென்னும் மூன்றினுலுஞ் செய்யப்படுங் கன்மங்களுக்கு முன்னிலையாய்ப்பற்றுக் கொடுத்து நிற்பது அத்துவாக்கள் ஆறுமேயாம். இவ்வத்துவாவாகிய வழியால் செய்த கன்மங்களைச் செய்த முறையானன்றி அக்கன்மங்கள் பக்குவமான முறையில் அநுபவிக்கும்படி இறைவன் செய்து பக்குவமான அந்தக்கன்மத்தை ஒழிப்பன். அவ்வாறு கன்மத்தை யநுபவிக்கச் செய்தலால் ஆணவமலத்தைத்தேயும்படி செய்து அவ்வாணவமலம் தேய்தலால் உண்டாகிற அருமையான பக்குவம்நோக்கி அவ்விறைவனே குருவடிவாய் எழுந்தருளிவந்து அத்துவசோதனை செய்து தன்னுடைய கிரியாசத்தி விருத்தியாகிய தீக்கையினுல் மாணக்கன் அநுபவிக்க வேண்டியதாய்ப் பக்குவப்படாமல் கட்டுப்பட்டிருக்கும் சஞ்சித கன்மத்தைச்சுத்தி செய்து அநுபவியாதபடி ஒழித்துப், பிராரத்த கன்மத்தை அநுபவிக்கும்படிசெய் தொழித்து, ஞான சத்தியினுல் அநாதியாகிய ஆணவமலத்தையும், வாதனைபற்றி நிகழும் ஆகாமியமலத்தையும் ஒளிமுன் இருள் போல ஒழிப்பன். (எ - று)

ஆணவமலமும், ஆகாமியமலமும் ஞானசத்தியால் ஒழியற்பாலன; சஞ்சிதகன்மமும், அதற்குப்பற்றுக் கொடுத்து நிற்கும் மாயாகாரியமென்னும் மலமும் கிரியாசத்தியாலொழியற்பாலன. பிராரத்த கன்மம் அநுபவத்தாலொழியற்பாலது. இவ்வாறுதலின், கிரியாசத்தி விருத்தியாகிய தீக்கையால் சஞ்சித கன்மத்துக்குப்பற்றுக் கோடாகிய அத்துவாக்களின் சுத்தியைக் கூறவே, அதனுல் ஞானம் பிறந்து, ஆணவமலமும், ஆகாமிய வினையும் கெடுமாதலின், கிரியாசத்திவிருத்தியால் சஞ்சிதமும் ஞானசத்தி விருத்தியால் ஆகாமியமும் ஆணவமுங் கெடுமென வகுத்துக்கூறின்

விரியுமென்றஞ்சி அத்துவசுத்தியின் மேல் வைத்து ஒரு முடிபாகக் கூறினார்.

இதனால் ஆணவமலம், கன்மமலங்கள் அத்துவாக்களிடமாகத் தொழிற்பட வேண்டுதலின் அத்துவ சுத்தியால் அவ்விருமலங்களுஞ் சுத்தியெய்துமாகலால், அத்துவசுத்தியே சிறந்தெடுத்துக் கூறியதென அறிக. சுத்தி என்பது இவ்விடத்தில் நீக்கம்.

கன்மாநுபவத்தினால் மல சத்தி எவ்வாறு கெடுமெனின்; கன்மபலன்களை அநுபவிக்கும்படி செய்தலால் இளைப்புத் தோன்றும். தோன்றவே, அவ்விளைப்பாலாகிய துன்பத்தின் நிவிர்த்தியை நாடும். அவ்வாறு நாடும் நாட்டம் மலசத்தியின் தேய்வைக் குறிக்குமாதலால், கன்மபலனை அநுபவிக்கும்படி செய்தல் மலசத்தி கெடுதற்கு உபாயமாயிற்று.

கன்மத்தை அருத்தியறுத்தலும், குருவாகத் தோன்றியறுத்தலும் ஆகிய இரண்டும் இறைவனுகிய ஒரு பொருள் வினையாதற்குரிய இயைபு தோன்ற, தோன்றியறுத்து என்பதனோடு அருத்தியறுத்து என்பதும் உடன் கூறினார். ஆன்றமுறை—பக்குவமானமுறை.

மலமுதிர்தலாவது, அம்மலத்தின் சத்தி தேய்தற்குரிய தநு, கரண, புவன, போகங்களாகிய துணைக்காரணங்களெல்லா வற்றோடுங்கூடிக் கன்மபலன்களை யநுபவித்தலால் வலிமை கெடுந்தன்மை யுடையதாதல்.

உயிர் பருவமடைதலாவது, அறிவிக்கும் பொருளை அறிவித்தவாறே அறியும் ஆற்றலுடையதாதல்.

அப்பக்குவம் எய்துதற்கருமை நோக்கி அரும்பருவமென்றார். அது, எய்துதற் கரிதென்பது வருஞ் செய்யுளிற் பெறப்படும்.

பருவமடைதலும் ஆசானுகித்தோன்றி என்றதனால், பருவமடையாதார்க்குத் தீக்கை செய்வதும், அடைந்தார்க்குத் தீக்கை செய்யாமையும் பழுதென்பது பெறப்படும்.

இச்செய்யுளால், அத்துவ சுத்தியானது சஞ்சித கன்மத்தை நீக்கி ஞானத்தை உதிக்கச்செய்து ஆணவத்தை நீக்கி ஆகாமியத்தையும் ஒழிக்கும் என அத்துவசுத்தியின் சிறப்புக் கூறப்பட்டது. (௧0)

முதலதிகாரணம் முடிந்தது.

—

இரண்டாம் அதிகரணம்.

மன்னு மருளால் உணர்த்தி என்பது.

புறச்சமயநெறிமுதல் படிமுறையால் மேம்பட்டுச்சைவத்தை அடைந்தவர்க்கு அத்துவ சுத்தி எய்துதற்குரிய பருவமுண்டா மெனவும் அச்சைவமாகிய தவநெறியும் சரியை முதல் நால்வகைப் படுமெனவும் கூறுகின்றது.

புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்.

(போ - ரை.) மேல் கன்ம நுகர்ச்சியால் அத்துவ சுத்தி எய்துதற்குரிய அரும் பருவம் உண்டாமெனக் கூறப்பட்டது. அவ்வரும் பருவம் எவ்வாறு உண்டாகுமெனின், உலோகாயதம், பௌத்தம், ஆருகதம், மீமாஞ்சகம், மாயாவாதம், பாஞ்சராத்திரம் என்னும் தூலமாகிய புறச்சமயங்களினின்று அவ்வாறொழுகியும், அவ்வொழுக்கத்தின் முதிர்ச்சியால் அப்புறச் சமயத்தினின்று நீங்கிச் சைவம், பாசுபதம், வாமம், பைரவம், மாவிரதம், காளாமுகம் என்னும் சூக்குமமாகிய அகச்சமயங்கள் ஆறிற் புகுந்து அந்நூல்வழியே ஒழுகியும், மனு முதலியவராற் சொன்ன தரும சாத்திரம் பதினெட்டின் வழியே சென்றொழுகியும், வேதத்திற் சொல்லப்பட்ட பிரமசரிய முதலான ஆச்சிரமம் நான்கின் நெறிகளில் வழுவாதொழுகியும், அநுட்டித்தற் கரிதாகிய பஞ்சாக்

கினி முதலியவற்றினின்று அரிய தவங்களைச் செய்தும், கற்பதற் கரிதாகிய கலைஞானங்கள் பலவற்றைப் பயின்றும், இருக்கு முதலிய நான்கு வேதங்களை ஓதியும், சிறப்பினையுடைய பதினெண் புராணங்களை ஓதியுணர்ந்தும், வேதாந்தமாகிய உபநிடதப்பொருளை மிக ஆராய்ந்து தெளிந்தும், இவ்வாறு படிமுறையாகப் பல பிறவி களினும் அப்பியாசம் பண்ணி அவைகள் முற்றுப் பெற்றால் சைவக் கூற்றின் முடிவாகிய சித்தாந்த சைவத்தை அடைவர். இவ்வாறு படிமுறையாலன்றி ஒருகாலத்து எல்லாம் பெறமுடியாது. முறை யே ஒன்றன்பின் ஒன்றாகப் பயின்று முடிவில் அடையப்படுகின்ற இச்சித்தாந்த சைவத்தினும், சரியை, கிரியை, யோகங்களை முறையாய் அநுட்டித்து முற்றிய பின் ஞானத்தைப் பெற்று, அந்த ஞானத்தால் சிவபெருமான் திருவடிகளைச் சேர்வர். (எ-று.)

சைவத்திறம் என்பது சைவக்கூற்றின் முடிபாகிய சித்தாந்த சைவத்தை. சென்றால் என்பது சேறலருமை விளக்கி நின்றது.

இச்செய்யுளால், மேற்கூறியவாறு ஞானத்தைப் பெறுதற்குரிய பருவ மடையும் முறை கூறுமுகத்தால், மன்னுமருள் என்பது, சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்குவகைப் படுமென்பதும், அச்சரியை யாதி களுக்கு வாயில் புறச்சமயநெறி நிற்றல் முதலியன வென்பதும் வகுத்துக் கூறப்பட்டன. (கக)

புறச்சமய நெறிமுதல் பலவேறு வகைப்பட்ட நெறிகளின் பயனாகிய முத்திகளின் இலக்கணமும் சைவ முத்தியினிலக்கண மும் இவையெனக் கூறுகின்றது.

இம்மையே யீரெட்டாண் டெய்தியெழி லாரு
மேந்திழையார் முத்தியென்று மிருஞ்சுவர்க்க முத்தி
யம்மையே யென்று முத்தி யைந்து கந்த
மறக்கெடுகை யென்றுமட்ட குணமுத்தி யென்று
மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தி யென்றும்
விவேகமுத்தி யென்றுந்தன் மெய்வடிவாஞ் சிவத்தைச்
செம்மையே பெறுகைமுத்தி யென்றுஞ்செப் புவர்கள்
சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிங் கியாமே.

(கோ - ௫) அம்மையே இருஞ்சுவர்க்கம் முத்தியென்றும், ஐந்து கந்தம் அறக் கெடுகை முத்தியென்றும் எனவும், இங்கே யாம் செப்புவது சிவனடியைச் சேருமுத்தி எனவுங்கூட்டுக.

(போ - ௱) சித்தாந்த சைவமல்லாத ஏனைச் சமய நூலாருக்கும் முத்திகளுள. அம் முத்திகள் படி முறையால் நில முதல் நாதமீறாகிய முப்பத்தாறு தத்துவங்களில் ஒவ்வொன்றில் நிலைபெறுவனவாம். அவை வருமாறு:—உலோகாயதன், இவ்வுலகமே உள்ளது. பரலோகமாகிய சுவர்க்க நரகமென்பதொன்றில்லை. இவ்வுலகத்தின்கண் ஸ்நான, போசன முதலிய சௌக்கியமே சுவர்க்கம். இவைகளின்றித் தரித்திரத்தினாலும் வியாதியினாலும் துன்பப்படுதலே நரகம். அழகினையுடைய பதினாறு ஆண்டுள்ள ஆபரணங்களணிந்த பெண்களுடனே கூடி இன்புறுதலே முத்தி எனக்கூறுவன். மீமாம்ச நூலார், வேதோக்தமான யாகாதி கன்மானுஷ்டானங்களைச்செய்து இந்தத் தேகம் நீங்கிய பின் மறுமையில் திவ்வியதேகத்தைப் பெற்றுப் பெரிய போகத்தை உடைத்தாகிய சுவர்க்கலோக போகமநுபவித்தலே முத்தி என்பர். பௌத்தன், ரூபம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் ஆகிய ஐவகைக் கந்தங்களும் முற்றக்கெடுதலே முத்தி என்பன். சைனனாகிய ஆருகதன், அனந்தஞானம், அனந்த தெரிசனம், அனந்தவீரியம், அனந்தசுகம், நிர்நாமம், நிர்க்கோத்திரம், நிராயுஸ்யம், சகலசம்யதாபாவம் ஆகிய எண் குணமுமடைதலே முத்தி என்பன். வைசேடிகர், ஆத்மஞானத்தினாலே சுக துக்கங்களும் அவற்றிற்கேதுவாகிய ஞானமும் நீங்க, மேன்மையாகப் பாடாணம்போல ஓரறிவும் அற்றிருப்பதே முத்தி என்பர். சாங்கியர், பிரகிருதிபுருஷ விவேகத்தைப் பண்ணி ஆன்மாவாகிய தான் பிரகிருதி விகாரங்களுக்கு அன்னியமாக, யான் எனதென்பதற நிற்பதே முத்தி என்பர். மாயாவாதி, மாயை பிரமங்களை விசாரித்து மாயையை நீக்குவதே முத்தி என்பர். பாஞ்சராத்திரிகள், மகாவிஷ்ணுவின் கிருபையினால் இத்தேகத்தினின்றும் நீங்கிச் சத்திய சொரூபமாகிய சுத்தசித்து ரூபியாய் விட்டுணுவுக்குரிய திவ்விய தேகத்தைப்பெற்றுச் சகல போகங்களுமமகா

விஷ்ணுவைப் போலவே நித்தியமாயுடைத்தாயிருக்கை முத்தி என்பர். சிவசமவாதி முதலிய சைவர்கள், சிவாநுக்கிரகத்தினாலே ஆணவ முதலிய மும்மலங்களும் நீங்கச் சத்தியமும் சுத்தமுமாகிய ஆன்மாவினிடத்து ஞானக்கிரியைகள் பிரகாசிக்கப்பெற்று, அந்த ஞானக்கிரியைகளின் பிரகாசத்தால் சருவஞ்ஞத்துவாதி ஆறு குணங்களும் விளங்கப்பெற்றுச் சிவசமமாயிருப்பதே முத்தி என்பர். இதுவும் சிவபிரானுடைய உண்மை நிலையை யறிந்து இன்புறாத நிலையாதலால் பத முத்தியேயாம். இவ்விடத்து வேதாகம நூலுண்மையின்படி யாம் கூறும் முத்தியாவது எது வெனின், ஆன்மாவும், சிவமும் அநாதியே பிரிப்பற்றுள்ளன. அப்பிரிப்பில்லாமை தோன்றாதபடி அநாதியே ஆணவமலம் ஆன்மாவின் அறிவைத்தடுத்திருப்பதால், அந்த மலவுபாதியினால் அசத்தியமாகிய போகங்களைச் சத்தியமென மயங்கி நின்று, சிவாநுக்கிரகத்தினால் அம்மயக்கம் நீங்கக் கண்ணினது காசம் நீங்கிய விடத்து அக்கண் காட்சியைப் பெற்றாற்போல, அம்மயக்கம் நீங்கியவிடத்துச் சிவனுடைய பிரிப்பில்லாமையை அநந்நியமாகநின்று கண்டு சிவானந்த பாவசத்தினாலே முப்பத்தாறு தத்துவங்களையுங்கடந்த சிவபெருமான் திருவடிகளை அடைதலே யாம். (எ - று)

திருவடி என்பது இறைவனுடைய சித்துத்தன்மை. இக்கருத்துப் பற்றியே " அடியெனுமதுவும் அருளெனுமதுவும் அறைந்திடில் நிர்க்குண நிறைவு" எனத்தாயுமானசுவாமிகள் அருளிச்செய்தனர்.

அடைதல் என்றதனால் வேறாகப்பிரிந்திருந்து அடைந்ததென்பது பொருளன்று. தன்னுடைய பிள்ளையானவன் வியாதியினாலே மிகவுந் துன்பப்பட்டுக் குணமானபொழுது இந்தப்பிள்ளையை இப்பொழுதே பெற்றேனென்பதுபோல, யான் எனதென்னும் போதத்தினால் சிவனோடு பிரிப்பின்றிநிற்றல் விளங்காதிருந்து அப்போத அறுதியில் அச்சிவாநுபவம் விளங்கினதை அடைந்ததென்று சொல்லியதென அறிக.

விவேக முத்தி என்பதனை இரட்டுற மொழிதலினால் முன்னர்ச் சாங்கியரும், பின்னர் மாயாவாதியும் கொள்ளப்பட்டனர். ஏந்திழை என்றவிடத்து ஐயுருபு தொக்கு நின்றது. ஆர்முத்தி என்பது ஆரும் முத்தி என விரிதலின் வினைத்தொகை. செம்மையே பெறுகை முத்தி யென்றும்

என்றவிடத்து உம்மையை எதிரது தழுவியதாக்கி இவ்விடத்துக் கூறாத சமய முத்திகளையும் இவற்றுடன் வைத்துக் கண்டுகொள்க. இம்முறையில் உரையில் பாஞ்சராத்திரமத முத்தி கூறப்பட்டது.

இச் செய்யுளால் புறச்சமய நெறிநிற்றல் முதலியவெல்லாம் சைவத்திறத்தடைதற்குப் படிமுறையால் வாயிலாமாறு அவற்றது பயன்கூறு முகத்தானே இனிது விளக்கப்பட்டது. அந்தந்தப் பயன்கள் அநுபவிக்கப்பட்டு மேற்சென்று சைவத்திறத்தடைந்து சிவபெருமான் திருவடியைக்கூடி அதன்மேல் அடைய வேண்டுவதொன்றின்மையால், அவையனைத்தும் சைவத்திறத்தடைதற்கு வாயிலாமாறு காண்க. (௧௨)

உண்மைச் சமயமும், அதனிலக்கணமும், உண்மை நூலும் இவையெனக் கூறுகின்றது.

ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்க
ளொன்றோடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னி
னிதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினா லிவையெல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூ
லாதலினா லிவையெல்லா மருமறையா கமத்தே
யடங்கியிடு மவையிரண்டு மரனடிக்கீ ழடங்கும்.

(பொ - ரை) மேற் கூறியவாறு பல சமயங்களும் அச்சமயப் பொருள்களை அறிதற்கேதுவாகிய பல நூல்களும் மாறுபட்டனவாகக் காணப்படுதலால் அவற்றுள் முதன்மையான சமயம் யாது? அதன் இலக்கணம் யாது? அச்சமயப் பொருளையுணர்த்தும் நூல் யாது? எனின், கண்ணில்லாதவர் பலர் கூடிக்கொண்டு யானையைக் கையாற்றடவித் தத்தமக்கெய்திய உறுப்புக்களினிலக்கணமே யானையினிலக்கணமெனச் சொல்லி முரண்பட்டவிடத்து, யானையினிலக்கணம் முழுதுங்கண்ட கண்ணுள்ளானொருவன் ஏனையோர் கூறும் இலக்கணங்களெல்லாம் தான் கண்ட இலக்கணங்களிலடங்கிய ஒவ்வோரிலக்கணமென்றும் அவ்விலக்கணங்களும் கொள்ளத்தக்கனவே என்றும் அறிவன். அது

போல, இந்தச் சமயம் பொருந்தும்; அந்தச் சமயம் பொருந் தாது என்னும் பிணக்கின்றிப் படிமுறையால் இச்சமயமனைத்தும் அங்கமாகத் தன்னிடத்தே காணப்பட்டு நின்றது எச்சமயமோ, அச்சமயமே முதன்மையான சமயமாம். அச்சமய சாத்திரமே சாத்திரமாம். ஏனைச் சமயங்களோடு பிணக்கின்மையே அதனி லக்கணமாம். அச்சாத்திரம் எதுவெனின், எல்லாப் பொருளையுஞ் சொல்வதே சாத்திரம் என்பதன் பொருளாதலால், அவ்வாறு எல்லாப் பொருளையுஞ் சொல்லுவனவாகிய முற்றறிவுடைய முதல்வனருளிச்செய்த வேதாகமங்களே அச்சாத்திரமாம். அவ் வேதாகமங்களில் தத்தம் சிற்றறிவிற் கெட்டியவாறு கூறப்படும் எல்லாச் சமய நூற்பொருள்களும் அடங்கிக் காணப்படும். காணப் படினும் அவ்வேதாகமங்களால் சிறந்தெடுத்துக் கூறப்படும் சமயமே உண்மையான சமயமாம். அவ்வுண்மைச் சமயம் சிவ பிரானையே தெய்வமெனக் கொள்ளுதலானும், அச்சமய சாத் திரத்தைப் பூருவபக்ஷம் பண்ணுவதற்கு வேறு சாத்திரமில்லாமை யானும், அவ்வுண்மைச் சமயம் சித்தாந்த சைவமெனக் கூறப் படும். அவ்வேதாகமமிரண்டும் இறைவன்றிருவருளாற் செய்யப் பட்டமையின் அவனருளிலடங்கும். (எ - று.) (௧௩)

உண்மை நூல்களாகிய வேதாகமங்களே முதனூலெனவும், ஏனைய நூல்கள் எல்லாம் வழி நூல், சார்பு நூல்களாய் முத னூலிலடங்கு மெனவுங் கூறுகின்றது.

அருமறையா கமமுதனூ லனைத்துமுரைக் கையி
    னளப்பரிதா மப்பொருளை யரனருளா லணுக்க
டருவர்கள்பின் றனித்தனியே தாமறிந்த வளவிற்
    றர்க்கமொடுத் தரங்களினாற் சமயஞ்சா தித்து
மிருதிபுரா ணங்கலைகண் மற்று மெல்லா
    மெய்ந்நூலின் வழிபுடையா மங்கம்வே தாங்கஞ்
சுருதிசிவா கமமொழியச் சொல்லுவதொன் றில்லை
    சொல்லுவார் தமக்கறையோ சொல்லொணாதே.

(கோ—டு.) முதல் நூல் அருமறையாகமம் அனைத்தும் உரைக்கையி னால் அளப்பரிதாம். அப்பொருளை அணுக்கள் அரனருளால் பின் தனித்

தனியே தாமறிந்த அளவில் தர்க்கமொடு உத்தரங்களினால் சாதித்துச் சமயம் தருவர்கள். மிருதி, புராணம், கலைகள், மற்றுமெல்லா மெய்ந்நூலின் வழி (ஆம்) அங்கம், வேதாங்கம் புடையாம்.

(போ—ரை) மேற்கூறிய நூலெனப்படுவனவெல்லாம் முதனூல், வழிநூல், சார்புநூல், பூர்வபக்கநூலெனப் பல வேறு வகைப்படும். அவற்றுள் முதனூலின் வழிநூலும், அவ்விரண்டின் சார்புநூலும், அம்மூன்றின் பூர்வபக்கநூலும் முறையே அடங்கும். ஆகவே, மேல்நூற்பொருளின் ஒவ்வொருபகுதியினையே எடுத்துக்கொண்டு கீழ்நூல்கள் கூறுதலின், அம்மேல் நூற்பொருளிருத்தல் நோக்கிக் கீழ்நூல்களும் மேன்மையுடையனவேயாம். வேறு வேறு கூறுவானேனெனின், முதனூலாகிய வேதாகமங்களில் அனைத்துங் கூறுகையால் அவ்வாறு கூறியுள்ள அளவிடுதற்கரிய உயர்ந்த பொருள்களை முழுவதும் உள்ளவாறுணர மாட்டாத உயிர்கள், முதல்வனருளால் அவ்வேதாகமங்களுள் சில பொருளைத் தத்தமறிவிற்கேற்பச் சமுத்திர கலச நயம் பற்றி எடுத்துக்கொண்டு சங்கை உத்தரங்களினால் சாதித்துத் தொகுத்தும் விரித்தும் சமயநூலாகச் செய்தனர். அவையெல்லாம் சைவமல்லாத ஏனைச்சமயநூல்களாதலின் அந்நூல்கள் பூருவபக்க நூலெனப்படும். மிருதி, புராணம், கலைகள், உபாகம முதலாயினவெல்லாம் அவ்வேதாகமப்பொருளை இனிது விளக்குதற்பொருட்டு அவற்றை உள்ளவாறுணர்ந்தோர் செய்த நூலாதலால் அந்நூல்கள் வழிநூலெனப்படும். காருடம், தக்ஷணம் முதலிய ஆகமாங்கங்களும், சிக்ஷை, கற்பசூத்திரம் முதலிய வேதாங்கங்களும், வேதாகமங்களை உள்ளவாறுணர்தற்குச்சார்பாகப்பக்கத்து நிகழ்தலின் சார்பு நூலெனப்படும். ஆதலால், வேதாகமங்களில் அடங்காத பொருளாக ஒன்றனை எடுத்துச் சொல்லும் நூலொன்றுமில்லை. உண்டென்று பிணங்கும் பேதையர்க்கு உத்தரஞ் சொல்லி அறிவுறுத்த இயலாது. (ஏ-று.)

சமுத்திர கலச நயம்—சமுத்திரத்திலுள்ள நீர்ப்பெருக்கில் கலசம் தன்னளவு கொள்ளுமாறு போல, வேதாகமங்களிலுள்ள பொருட்பெருக்கில் ஏனைச்சமயத்தார் தத்தமறிவிற் கெட்டியவாறு எடுத்துக்கொண்டு கூறு

தல். அவ்வாறெடுத்துக் கொண்டு கூறுதற்கும் அரனருளையின்றி முடியா தென்பதுணர்த்துதற்கு அரனருளால் என்றார். அவற்றை, அடுத்த செய்யுளில் "பிறநூல் திகழ் பூர்வம்" எனக்கூறுதலின், இச்செய்யுளில் பூருவபக்க நூலென வேறெடுத்துக் கொண்டு கூறாது விடுத்தனர். புடையாம் என்ற விடத்துள்ள ஆம் என்பதனை வழி என்ற விடத்துங் கூட்டுக. ஆகமாங்கம் என்பது அங்கம் எனத்தலைக்குறைந்தது. ஒன்றில்லை என்ற விடத்து ஒன்றும் இல்லை என்னும் பொருள்பட முற்றும்மை தொக்கு நின்றது. அறை என்பது உத்தரம்; அல்லது விடை.

மேலைச் செய்யுளில், எல்லாம் அருமறையாகமத்தே காணப்பட்டடங்கிடு மென்றதனை இச்செய்யுளால் பூருவபக்க நூலும் வழிநூலுஞ் சார்புநூலுமாக எல்லாம் அடங்குமென விளக்கினர். (௧௬.)

வேதம் பொது நூலெனவும், ஆகமம் சிறப்பு நூலெனவும், சித்தாந்த மெனவும் கூறுகின்றது.

வேத நூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்க
ளாதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டு
மாரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலா
நீதியினு லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூ
றிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்.

(கோ - டு) வேதநூல், சைவநூல் என்று இரண்டு ஆதி நூல்கள் அநாதி அமலன் தருநூல். வேறு உரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள். இரண்டுமே நூல். உலகர்க்கும் சத்தி நிபாதர்க்கும் நீதியினால் ஆரணம் சைவம் நிகழ்த்தியது. நீள்மறையின் ஒழிபொருள் வேதாந்தத்தீது இல்பொருள் கொண்டு உரைக்கும் சைவநூல். பொது நூல் அருஞ் சிறப்புநூலாம். பிறநூல் திகழ் பூர்வம். சிவாகமங்கள் சித்தாந்த மாகும்.

(போ - ரை) மேற்கூறிய நூல்களுள் வேதாகமங்களிரண்டும் எல்லாம் நூல்களுக்கும் முதனூலாகி அநாதிமுத்தனாகிய இறைவனாற்றரப்படு நூலாம. ஏனைய நூலெல்லாம் இவ்வேதாக

மங்களிரண்டினின்றும் விரிந்த நூல்களாதலின் இவ்வேதாக மங்களே நூலென்று உயர்த்துக் கூறப்படுவனவாம். முதல்வன் இருவேறுவகைப்பட நூல் செய்வானேனெனின், அவன் பெருங்கருணையாளனாதலின், நீதிநெறியில் நிற்கும் உலகோரும் ஞானநெறியில் நிற்கும் உயர்ந்தோரும் ஆகிய இருவரும் உய்தற் பொருட்டு வேதத்தையும், ஞானநெறியில் நிற்போர் மட்டும் உய்தற்பொருட்டு ஆகமத்தையும் அருளிச் செய்தனன். அன்றியும் வேதத்திற்கூறும் கருமகாண்டத்துள் சிவார்ச்சனை செய்க என்று கூறி, அதனைச் செய்யும் விதம் அவ்விடத்துக்கூறாமையால் அதனைக்கூறுதற்காகவும், ஞானகாண்டமாகிய உபநிடதம் பல கடவுட்கும் பாத்துவங் கூறுதலால், அப்பல கடவுளருள்ளும் சிவனொருவனுக்கே பாத்துவங் கூறுதற்காகவும் உபநிடதத்தின் சாரமாய் ஆகமத்தையருளிச் செய்தனன். இதனால், வேதம் சூத்திரமும் ஆகமம் அச்சூத்திரத்தின் விருத்தி உரையாகிய பாடியமும் போலாம். வேதம் உலகர்க்கும், ஞானாதிகாரிக்கும் உரித்தாதலின் பொதுவும், ஆகமம் ஞானாதிகாரிக்கே உரித்தாதலிற் சிறப்புமாம். அன்றியும், வேதம் பல கடவுளர்க்கும் பாத்துவங் கூறுதலால் பொது. ஆகமம் சிவபெருமானுக்கே பாத்துவங் கூறுதலால் சிறப்பு. இச்சிவாகமப் பொருட்கு வேறாய்வேதத்தின் பூருவபக்கப் பொருளைச் சொல்லும் நூல்களெல்லாம் மேற்கூறியவாறு பூருவபக்க நூலெனப்படும். வேதத்தின் முடிவான பொருளைச் சொல்லும் சிவாகமம் சித்தாந்தமெனப்படும். (எ - று)

இச்செய்யுளால் சிவாகமத்தின் சிறப்புக் கூறப்பட்டது. சிறப்பு— வேத வேதாந்தங்களின் சாரம். பிற நூல் திகழ்பூர்வம் என்றதற்கு, வேத வேதாந்தங்களின் பூர்வபக்கப் பொருள்களை சொல்லும் நூல்களெனக்கொள்ளாது வேத வேதாந்தங்களெனக் கொள்ளுதல், இரண்டும் ஆதி நூல்கள் அமலன்றருநூல் என்பது முதலியவாக்கியங்களோடு முரணுமாதலின் அது பொருந்தாது. இவை மூன்று செய்யுளானும் முதனூல், வழிநூல், சார்புநூல், பூருவபக்க நூல்களதியல்பு கூறுமுறையில், சைவத்திறத்தடைதற்கு ஏனைய சமயங்கள் படிமுறையில் வாயில் என்பது சாதிக்கப்பட்டது. (கூஙு)

சித்தாந்த நெறியில் நிற்போர்க்கு அந்தச்செனமத்திலேயே சிவபிரான் முத்தி தந்தருளுவரெனக் கூறுகின்றது.

சித்தாந்தத் தேசிவன்றன் றிருக்கடைக்கண் சேர்த்திச்
செநநமொன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை யறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்ப னென்று
மொழிந்திடவு முலகரெலா மூர்க்க ராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிதுவென்ன பிராந்தி.

(கோ - டு) செநநமொன்றிலே சிவன்றன் திருக்கடைக்கண் சேர்த்தி, (செநநமொன்றிலே) மலங்கழுவி, ஞானவாரிமடுத்து, ஆனந்தம் பொழிந்து, சீவன் முத்தராகவைத்து, ஆண்டுவரும் பிறப்பை அறுத்து, முத்தாந்தப்பாதமலர்க்கீழ் வைப்பன் என்று சித்தாந்தத்தே மொழிந்திடவும்.

(பொ - ரை) மேற்கூறிய சித்தாந்தமே முத்திக்கு நேர் வழியாம். சித்தாந்த நெறியில் நிற்கும் பக்குவான்மாக்களுக்கு எடுத்த செநநமொன்றிலேயே சிவபிரான் தமது காருண்யத்தால் குருமூர்த்தியாய் எழுந்தருளிவந்து திருக்கண் நோக்கம் முதலிய தீக்கை செய்து, மலத்தைப் போக்கி, ஞானசாகரத்தில் மூழ்குவித்து, சிவானந்தம்மேலிடச் செய்து சீவன் முத்தராக்கி, அப்பொழுதே மேல்வரும் பிறவியை ஒழித்து, முத்தி முடிவாகிய திருவடி மலர்க்கீழ் அடங்கி நிற்கச்செய்வன். இத்துணைப் பெருமை பொருந்திய சித்தாந்தநெறி வீடு பேற்றிற்கு நேர் வழி என உபமன்னியர் அகத்தியர் முதலிய உயர்ந்தோரெல்லாம் வாயுசங்கிதை, சிவகீதை முதலியவற்றுள் எடுத்தோதவும் உலகத்தார் அதனைத் தெளியமாட்டாது தூரபிமானங் கொண்டு தத்தமக்கு வேண்டியவாறே பித்தமுடிபாகிய பெரும்பித்தாற் பிதற்றி, பிதற்றிய அப்பாவத்தால் பெரிய கொடு நரகத்தில் வீழ்வர். ஈதென்ன மயக்கம். (எ - [illegible])

முத்தியந்தம் முத்தாந்தம் என மருவிற்று. ஔத்திரி ஆதி ஔத்திராதி என்றாற் போல். பித்தாந்தம்—பித்தமுடிபு; அதாவது பெரும் பித்து. (கசு)

முற்றுணர்வு முதலிய குணங்களையுடைய சிவபிரானுக்கு ஒரு செனனத்தில் முத்தியைத்தருதல் கூடுமெனவும், அக்குணங் கள் சிவபிரானிடத்துளவென்பதற்கு ஏதுக்கள் இவையெனவும் கூறுகின்றது.

இறைவனு வான்ஞான மெல்லா மெல்லா
முதன்மையனுக் கிரகமெல்லா மியல்புடையா னியம்பு
மறைகளா கமங்களினு னறிவெல்லாந் தோற்று
மரபின்வழி வருவோர்க்கும் வாரா தோர்க்கு
முறைமையினு லின்பத்துன் பங்கொடுத்த லாலே
முதன்மையெலா மறிந்துமுயங் கிரண்டு போகத்
திறமதனுல் வினையறுக்குஞ் செய்தி யாலே
சேருமனுக் கிரகமெலாங் காணுதுநாஞ் சிவற்கே.

(கொ - டு) எல்லாஞான எல்லா முதன்மை எல்லா அநுக்கிரகம சிவற்கே நாம் காணுதும் எனவும், இயல்புடையானிறைவனுவான் எனவுங் கூட்டுக.

(பொ - ரை.) ஆன்மாக்களுக்கு எடுத்த ஒரு சென்மத்தி லேயே முத்தியைத்தருதல் சிவபிரானுக்கு எவ்வாறு கூடுமெ னின், முற்றுணர்வும், முடிவிலாற்றலும், பேரருளுமாகிய மூன்று குணங்களும் சிவபிரானிடத்திலேயே காண்கின்றோம். அம்மூன் றும் இயல்பாகவுடைய வல்லவனுதலால் கூடும். அம்மூன்று குணங்களும் உடையனுமென்பது எவ்வாற்றாற் பெறப்படுமெ னின், வேதாகமங்களை அருளிச்செய்த ஏதுவினுல் முற்றுணர் வுடையனுதல் தெளியப்படும். எவ்வாறெனின், பலவேறுவகைப் பட்ட ஆன்மாக்களுக்கு வேண்டிய எல்லா விஷயங்களும் வேதா கமங்களில் காணப்படுகின்றன. அவ்வாறு சொல்வதற்கு முற் றுணர்வு இருந்தாலன்றி முடியாது. ஆதலால், முற்றுணர்வுடைய னுதல் தெளியப்படும். அவ்வேதாகமவழி நடப்போர்க்குச் சுகத்

தையும், நடவாதோர்க்குத் துக்கத்தையும் தருதலாகிய ஏதுவி ஞல் முடிவிலாற்றலுண் டென்பது தெளியப்படும். அவ்வாறு பொருந்திய சுக துக்கங்களை அநுபவிக்கும்படி செய்து, அதனுல் அச்சுகதுக்கங்களுக்குக் காரணமாகிய இருவினைகளை நீக்குகின்ற ஏதுவால் பேரருளுடையனென்பது தெளியப்படும். எனவே, இம்மூன்று குணங்களும் இயல்பாகவுடைய அம்முதல்வன் மேலைச்செய்யுளிற் கூறியவாறு செநநமொன்றிலே திருக்கடைக் கண்சேர்த்தி, ஞானவாரிமடுத்து, ஆனந்தம் பொழிதற்கும், அச் செநநமொன்றிலேதானே மலங்கழுவிச் சீவன் முத்தராக வைத் தாண்டு வரும்பிறப்பையறுத்தற்கும், பாதமலர்க்கீழ் வைத்தற் கும் வல்லவனுவான். (எ - று.)

இறைவன் என்பது இறுக்கப்படுபவனுதலின், வல்லவன் என்னும் பொருள் குறித்தது. வல்லவனுயிருந்தாலன்றி இறுக்கபடுந் தகுதியுடையனு கான்.

இச்செய்யுளால், பல செனனங்களிலு மாகாதவற்றையெல்லாம் ஒரு செனனத்திலே ஆகும்வண்ணஞ் செய்யுமாறு யாங்ஙனமென்பார்க்கு, முற் றுணர்வு முதலிய குணங்களையுடையனுதலின், அங்ஙனஞ்செய்தல் கூடு மென்று கூறிச், சித்தாந்தம் எடுத்த செனனத்தில் முத்திதரும் என மேற் கூறியது வலியுறுத்தப்பட்டது.

இவையிரண்டு செய்யுளானும் சைவத்திறத்தடைதலால் எடுத்த பிறவி யில் முடிவான முத்தியடைதல் கூடுமென அதன் சிறப்புக் கூறப்பட் டது. (கஎ)

சைவநெறியாகிய முத்திநெறி சரியை முதலிய நான்கு பே தப்படும் எனவும், அவற்றின்பயன் பதமுத்தி, பரமுத்தி என இரு வகைப்படும் எனவும் கூறுகின்றது.

சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கந்
தாதமார்க் கம்மென்றுஞ் சங்கரனை யடையு
நன்மார்க்க நாலவைதா ஞான யோக
நற் கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செய்வர்
சன்மார்க்க முத்திகள்சா லோக்கியசா மீப்பிய
சாரூப்பிய சாயுச்சிய மென்றுசதுர் விதமா
முன்மார்க்க ஞானத்தா லெய்து முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கு முத்திபத மென்பர்.

(கோ - ரு) சங்கரனை அடையும் நன்மார்க்கம் தாதமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்றும் நால். அவைதாம் நற் சரியை, கிரியா, யோக, ஞானமென நவிற்றுவதும் செய்வர். சன்மார்க்க முத்திகள் சாலோக்கிய, சாமீப்பிய, சாரூப்பிய, சாயுச்சியமென்று சதுர் விதமாம். மூன்றினுக்கு முத்திபதமென்பர். முன்ஞான மார்க்கத்தால் எய்து முத்திமுடிவென்பர்.

(பொ - ரை.) அவ்வாறு சிவபிரான் திருவடியை அடைதற்குரிய சைவநெறியாகிய நன்னெறியும், தாதமார்க்கம், சற்புத்திர மார்க்கம், தோழமார்க்கம், சன்மார்க்கமென நான்கு வகைப்படும். அவை முறையே சிவ சரியை, சிவ கிரியை, சிவ யோகம், சிவஞானம் என வழங்கப்படும். அந்த நன்மையாகிய மார்க்கத்திற்குப்பயன் முறையே சிவசாலோகம், சிவசாமீபம், சிவசாரூபம், சிவசாயுச்சியமென நான்கு வகைப்படும். அவற்றுள் சிவசரியை முதலிய மூன்றினாலும் அடைதற்குரிய சிவசாலோக முதலிய மூன்றனைப் பதமுத்தியாகிய அபாமுத்தி எனக்கூறுவர். முடிவான ஞான நெறியால் அடையும் சிவசாயுச்சியத்தைப் பரமுத்தி எனக் கூறுவர். (எ - று.)

சரியை முதலியவற்றின் விளக்கம் பின்னர்க் கூறப்படும்.

சாலோகம்—சிவபிரான் திருமேனி கொண்டெழுந்தருளியிருக்கும் உலகத்துள் எவ்விடத்தும் தடையின்றிச் சஞ்சரித்து அவ்வுலகபோகங்களை அநுபவித்து வாழ்தல்.

சாமீபம்—அவ்வுலக போகத்தை அநுபவித்தலோடு மைந்தர்க்குளதாகிய உரிமைபோலச் சிவபிரானுக்குச் சமீபமாக இருந்து அப்போகங்களை அநுபவித்து வாழ்தல்.

சாரூபம்—தோழர்க்குரிய உரிமைபோலச் சிவபிரான் கொண்டருளும் திருமேனிகளுள் ஒரு திருமேனியைப்பெற்று அத்திருமேனிக்குரிய ஆபரணமும், போகாநுபவமும் உடையராய் வாழ்தல்.

சாயுச்சியம்—சிவபிரான் திருவடியில் இரண்டறக் கலந்து நின்று நித்தியானந்தத்தை அநுபவித்து வாழ்தல்.

சாலோகமுதலியவற்றிற்குப் பொருள் இதுவே என்பது வருகின்ற செய்யுட்கள் நான்கானும் ஆசிரியர் தாமே மொழிபெயர்த்துரைக்கின்றவாற்றூற் காண்க. (௧அ)

தாச நெறியாகிய சரியையினிலக்கணமும், அதன் பயனும் இவையெனக் கூறுகின்றது.

தாதமார்க் கஞ்சாற்றிற் சங்கரன்றன் கோயிற்
றலமலகிட் டிலகுதிரு மெழுக்குஞ் சாத்திப்
போதுகளுங் கொய்துபூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதிறிரு விளக்கிட்கித் திருநந்த வனமுஞ்
செய்துதிரு வேடங்கண் டாலடியேன் செய்வ
தியாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியு
மியற்றுவதிச் சரியைசெய்வோ ரீசனுல கிருப்பர்.

(கோ - ௫.) தாத மார்க்கம் சாற்றில், சங்கரன்றன் கோயிற்றலம் அலகு இட்டு, இலகுதிரு மெழுக்கும் சாத்தி, தீது இல் திருவிளக்கிட்டு, திருநந்தவனமுஞ்செய்து, போதுகளும் கொய்து, பூந்தார்மாலை கண்ணி புனிதற்குப் பல சமைத்து, புகழ்ந்துபாடி, திருவேடங்கண்டால் அடியேன் செய்வது யாது பணியீர் என்று பணிந்து அவர் தம் பணியும் இயற்றுவது. இச்சரியை செய்வோர் ஈசன் உலகு இருப்பர்.

(பொ - ரை) மேற் கூறிய தாத மார்க்க முதலிய அந்த நான்கனுள், தாத மார்க்கமாகிய சரியையாவது யாதெனின், சிவ பிரான் திருமேனி கொண்டெழுந்தருளியிருக்கும் கோவிலில் அசுத்தத்தைப்போக்கி விளங்கும்படி திருமெழுக்கிட்டு, குற்ற மில்லாத திருவிளக்கிட்டு, அழகிய நந்தனவனங்கள் வைத்துப் புஷ்பங்களெடுத்துப் பொலிவாகிய மலரால் இண்டை முதலிய மாலைகள் அமைத்துச் சிவபிரான் திருமேனியில் அழகுறும் வண்ணம் சாத்தி, சிவபெருமானுடைய மேலான கீர்த்தியினை வாயார வாழ்த்தி, சிவனடியாருடைய திருவேடத்தைக் கண்ணுற்ற பொழுதே அடியேனால் செய்யத்தக்க அடித்தொண்டு யாது? அதனையருள வேண்டுமென்று வணங்கி, அவாருளிச் செய்யும் பணிவிடையும் செய்வதாம். இச்சரியை இந்திரியத் தொழி லாகிய புறத்தொழில் மாத்திரையானே சிவபிரான் உருவத்திரு மேனியைநோக்கி வழிபடுவதாதலால் இதனையநுட்டித்தோர் சிவ சாலோகமாகிய பத முத்தியைப் பெறுவர். (எ - று.)

மேலைச் செய்யுளிற் கூறிய சிவசாலோக மென்பதனை ஈசனுலகு என மொழிபெயர்த்துரைத்தவாறு காண்க. (கக)

புத்திர நெறியாகிய கிரியையினிலக்கணமும், அதன் பயனும் இவையெனக் கூறுகின்றது.

புத்திரமார்க் கம்புகலிற் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனமமுது முதல்கொண் டைந்து
சுத்தி செய்தா சனமூர்த்தி மூர்த்தி மானுஞ்
சோதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த
பத்தியினு லருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவினொடு மெரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலுமிக் கிரியையினை யியற்று வோர்க
ணின்மலன்ற னருகிருப்பர் நினையுங் காலே.

(கோ - டு.) பரிவினொடும் பரவிப்போற்றி நித்தலும் எரியில் வரு காரியமும் பண்ணி நினையுங்காலே இக்கிரியையினை யியற்றுவோர்கள் நின்மலன்றன் அருகு இருப்பர்.

(போ - ரை.) புத்திர நெறியாகிய கிரியையின் இலக்கணம் யாதெனின், புதிதாகிய வாசனையுடைய மலர்கள், தூபம், தீபம், திருமஞ்சனம், (ஜலம்) திருவமுது முதலிய பூஜைக்கு வேண்டிய யாவும் தேடி அமைத்துக்கொண்டு, பூதசுத்தி, ஆன்ம சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, லிங்க சுத்தி என்று சொல்லப் பட்ட ஐவகைச் சுத்திகள் செய்து, சிவாசனமூர்த்தி மூலமந்திரங் களினால் ஆசனமிட்டு, அவ்வாசனத்தில் மூர்த்தியை எழுந்தருளச் செய்து, அம்மூர்த்தியில் மூர்த்திமானாகிய சிவபெருமானைப் பாவனை செய்து வெளிப்படுத்தி, நிர்மலமாகிய மெய்யன்பினு லருச்சனை செய்து, விருப்பத்தோடு துதித்து நமஸ்கார முதலிய வழிபாடியற்றி, நித்தியாக்கினி காரியமும் செய்து முடிப்பதாம். நினையுமிடத்து இக்கிரியை இந்திரியங்களும் மனமும் கூடித் தொழிற்படுவதாகிய புறத்தொழில் அகத்தொழிலென்னுமிரண் டானும் சிவபிரானுடைய அருவுருவத்திருமேனியை வழிபடுவ தாதலின், இதனை அநுட்டித்தோர் சிவ சாமீபமாகிய பதமுத்தி யைப் பெறுவர். (எ - று.)

மேல் ௧௮-வது செய்யுளிற் கூறிய சிவசாமீபம் என்பதனை நின்மலன் றன் அருகு என மொழி பெயர்த்துரைத்தவாறு காண்க. (௨௦)

தோழ நெறியாகிய யோகத்தினிலக்கணமும், அதன் பயனும் இவை எனக் கூறுகின்றது.

சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டுஞ்
சலிப்பற்று முச்சதுர முதலாதா ரங்க
ளகமார்க்க மறிந்தவற்றி னரும்பொருள்க ளுணர்ந்தங்
கணைந்துபோய் மேலேறி யலர்மதிமண் டலத்தின்
முகமார்க்க வமுதுடல முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தன் முதலாக வினைக
ளுகமார்க்க வட்டாங்க யோக முற்று
முழத்தலுழந் தவர்சிவன்ற னுருவத்தைப் பெறுவர்.

(கோ - டு) சகமார்க்கம் உழத்தல், இரண்டும் தடுத்து வளி சலிப்பு அற்று, புலன் ஒடுக்கி, முச்சதுர முதல் ஆதாரங்கள் அகமார்க்கம் அறிந்து அவற்றி னரும்பொருள்களுணர்ந்து, அங்கு அணைந்துபோய் மேல் ஏறி, அலர்மதி மண்டலத்தின் முகமார்க்கம் அமுது உடலம் முட்டத்தேக்கி, முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக. வினைகள் உகமார்க்க அட்டாங்க யோகம் முற்றும் உழந்தவர் சிவன்றன் உருவத்தைப் பெறுவர்.

(பொ - ரை) தோழ மார்க்கமாகிய யோகநெறிப் பயிற்சியாவது யாதெனின், கீழ்நோக்கிச் செல்லும் வாயுவையும் மேல்நோக்கிச்செல்லும் வாயுவையும் அடக்கி, சுழுமுனை மார்க்கத்தில் பிராணவாயுவைச் செல்லும்படி நிறுத்தி, மனத்தை விடயங்களில் செல்லவொட்டாது திருப்பி, முக்கோணம், சதுரம் முதலிய அடையாளங்களையுடைய மூலாதாரம், சுவாதிட்டான முதலிய ஆறுதாரங்களிலுள்ள உயிர், மெய் என்னும் இருவகை அக்கரங்களின் கிரமத்தையுமுணர்ந்து, அவ்வாதாரங்களின் அரிய அதிதேவதைகளைத் தியானித்து, அவ்வாறுதாரங்களிலும் சிவனை வெளிப்படுத்துவதாக நிற்கும் அசபா சத்தி சிவசொரூபயாய் நிற்கும் முறையை நோக்கி, மூலாதாரமுதல் விநாயகர் முதலிய தேவதைகளைப் பொருந்தி, மேலாகிய பிரமரந்திரமளவும் அவ்வ சபை

யுடன் சென்றணைந்து அப்பிரமாந்திரத்தின் கண்ணதாகிய தாமரை முகையை மலரும்படி செய்து, அத்தாமரை மலரின் தாதுக்களின் நுனியிலுள்ள சந்திரமண்டலத்தை மூலாக்கினியினால் இளகப் பண்ணி, அம்மண்டல வழியாக ஒழுகும் அமிர்தத்தைத் தேகம் முழுதும் நிரப்பிப் பூரணப்பிரகாசத்தைத் தியானித்தல் முதலியனவாம். இது வினைகள் கெடுதற்கு வழியாகிய இயமம், நியமமுதலிய அட்டாங்க யோகமெனப்படும். இவ்வழிபாடு அகத்தொழில் மாத்திரையானே சிவபெருமானுடைய அருவத்திருமேனியிடத்து நிகழ்வதாதலின், இதனை முற்றும் அநுட்டித்தோர் சிவசாரூபமாகிய பத முத்தியைப் பெறுவர். (எ-று.)

மேல் கஅ-வது செய்யுளிற் கூறிய சிவசாரூபம் என்பதனைச் சிவன்றனுருவம் என மொழி பெயர்த்துரைத்தவாறு காண்க. உழந்தவர் என்றவிடத்து இவ்வியோகம் என்பது வருவித்துரைக்க.

வாயுவை யடக்குதலாவது—வாயுவானது எப்பொழுதும் வெளியே வருதலும், உள்ளே போதலுமாக இயங்கிக் கொண்டிருக்கும். வெளியே வருதல் இரேசகம். உள்ளே போதல் பூரகம். வெளியே வருதலை மேல் நோக்கிச் செல்லும் வாயுவென்றும், நிசுவாசமென்றுங் கூறுவர். உள்ளே செல்லுதலை கீழ் நோக்கிச் செல்லும் வாயுவென்றும், உசுவாசமென்றுங் கூறுவர். இவ்வாயுவை இவ்வாறு செல்லவொட்டாது தடுத்து அடக்குதலாகிய கும்பகமாவது சுழுமுனை நாடியின வழியாகப் புருவநடுவில் மனதோடுகூட நிறுத்திப் பழகுதலாம்.

ஆறாதாரங்களாவன—மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை என்பனவாம். மூலாதாரம் குதத்துக்கு இரண்டங்குலத்திற்கு மேல் இலிங்கத்திற்கு இரண்டங்குலத்திற்குக் கீழுள்ள இடம். இவ்விடத்தில் முக்கோண வடிவமிருக்கும். அவ்வடிவத்தில் நான்கிதழ்களையுடைய செந்தாமரையும் வ ஶ ஷ ஸ. என நான்கு அக்கரங்களும் இருப்பனவாம். இவ்வாதாரத்தில் விளங்குந் தேவதை விநாயகர். சுவாதிட்டானத்திற்குத் தானம் லிங்கமூலம். வடிவு ஆறுகோணம். அக்கோணத்தில் அநேக காந்தியினையுடைய ஆறிதழ்த் தாமரையிருக்கும். அத்தாமரையில், ம்ப ப ம ய ர ல என்னும் ஆறு அக்கரங்களிருக்கும். இவ்வாதாரத்தில் விளங்குந் தேவதை பிரமதேவர். மணிபூரகத்திற்குத் தானம் நாபி. வடிவு மூன்று வட்டம். இரத்தினப் பிரபை போன்ற பத்து இதழ்களையுடைய தாமரை அவ்விடத்திருக்கும். அதில், ண்ட ட ண த த்த த ந்த ந ப ப்ப எனப்பத்து அக்

கரங்களிருக்கும். இவ்வாதாரத்தில் விளங்குந் தேவதை விஷ்ணு. அனாக தத்திற்குத் தானம் இருதய கமலம். வடிவு முக்கோணம். இதில் பொன் போன்ற நிறத்தினையுடைய பன்னிரண்டு இதழ்த்தாமரை மலரிருக்கும். அதில், க க்க க ங்க ச ச்ச ஜ ஜ்ஜ ஞ ஞ ட ட்ட எனப் பன்னிரண்டு அக்கரங்களிருக்கும். இவ்வாதாரத்தில் விளங்குந் தேவதை உருத்திரன். விசுத்திக்குத் தானம் கண்டம். வடிவு அறுகோணம். இதில் வெண்மை நிறமுடைய பதினறிதழ்த் தாமரையிருக்கும். அதில், அ ஆ இ ஈ உ ஊ ரு ரூ லு லூ எ ஐ ஒ ஔ அம் அ: எனப்பதினறு அக்கரங்களிருக்கும். இவ்வாதாரத்தில் விளங்குந் தேவதை மகேசுவரன். ஆக்கினைக்குத்தானம் புருவநடு. இதில் இரண்டிதழ்களையுடைய செந்தாமரையிருக்கும். இதில், ள க்ஷ என இரண்டு அக்கரங்களிருக்கும். இதில், விளங்கும் அதி தேவதை சதாசிவர். இவ்வாறுதாரங்களையும் ஆதனமாகக் கொண்டு அவற்றிற்கு மேலாகிய பிரமரந்திரத்தில் ஆயிரம் இதழ்களையுடைய தாமரை மலரின் மேல் பரமசிவன் எழுந்தருளியிருப்பர்.

அசபையாவது—நாதவடிவாயிருக்கின்ற குண்டலினி சத்தி சொரூபம்.

அட்டாங்க யோகமாவது—இயமம், நியமம், ஆதனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எண்வகைப்படும். அவற்றுள்,

இயமமாவது—கொல்லாமை, உண்மை கூறல், களவு செய்யாமை, பிறர் பொருளை விரும்பாமை, இந்திரியங்களை விடயங்களிற் செல்லவொட்டாதடக்குதல் என்பனவாம்.

நியமமாவது—தவம், சுத்த முடைமை, தத்துவ நூலாராய்தல், பெற்றது கொண்டு மகிழ்தல், தெய்வம் வழிபடல் என்பனவாம்.

ஆதனமாவது—இருக்கும் முறைமையிற் பலவேறு வகைப்படும். அவற்றுள், சுகாதனம் ஒன்று. அதாவது, எவ்வாறிருந்தால் அநுசந்தானஞ் செய்வதற்குச் சுகமாயிருக்குமோ அவ்வாறிருத்தல்.

பிராணுயாமமாவது—பிராண வாயுவையடக்கல். அது மந்திர செபத்துடன் அடக்குதலும், மந்திர செபமின்றி அடக்குதலுமென இருவகைப்படும்.

பிரத்தியாகாரமாவது—மனத்தைப் புறத்துச் செல்லவொட்டாது அடக்குதல்.

தாரணையாவது—மனத்தை அகத்து ஓர் தானத்தில் நிறுத்துதல்.

தியானமாவது—மூர்த்தியின் சொரூபத்தை மனத்தால் பாவித்துச் சிந்தித்தல்.

சமாதியாவது—மூர்த்தியாகிய தோற்றமும், சிந்தித்தலாகிய தொழிலும், சிந்திக்கின்ற தானும் ஆகிய பேதங்களின்றி மூர்த்தியுந் தானும் இரண்டறக்கலந்து நிற்றல்.

இவ்வெட்டும் தோழநெறியென்ற யோகத்துள் அடங்கும். எவ்வாறெனின், வாயுவை யடக்கல் பிராணாயாமம். புலனொடுக்குதலாகிய மனவடக்கம் பிரத்தியாகாரம். சுழுமுனை மார்க்கத்திற் செலுத்துதல் தாரணை. ஆதாரங்களையும், அதிதெய்வங்களையும் அறிதல் தியானம். பிரமரந்திரத்தில் பூரணப் பிரகாசத்தைத் தியானித்தல் சமாதியாம். இயமம், நியமம், ஆதனம் மூன்றும் உடையார்க்கே இவ்வறு சந்தானங் கூடுமாதலால் அவற்றைக் கூறாராயினர். (உக)

சன்மார்க்கமாகிய ஞானத்தினிலக்கணமும், அதன் பயனும் இவையெனக் கூறுகின்றது.

சன்மார்க்கஞ் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்க டாம்பலவு முணர்ந்து
பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம்
பதிபசுபா சந்தெரித்துப் பரசிவனைக் காட்டு
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப்
பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் காணே.

(போ - ரை.) சன்மார்க்கமாகிய நன்னெறியாவது யாதெனில், எல்லாக் கலைஞானங்களும், புராணங்களும், வேத சிவாகமங்களிலுள்ள கரும காண்டங்களும், ஏனைச் சமய சாத்திரங்களும் ஆராய்ந்து, பல வழிப்படுகின்ற அவற்றின் பொருள்கள் யாவும் கீழெனக் கண்டுகழித்து, மேலாய பதி, பசு, பாசங்களின் தடத்த இலக்கணங்களையும், அவற்றுள் பசு பாசங்கள் நீங்கிய பதியின் சொரூப இலக்கணத்தையும் உணர்த்துவதாகிய ஞான சாத்திரங்களைத் தானாக ஓதியும், ஆசிரியனிடத்துக் கேட்டும், கேட்டவாறு சிந்தித்தும், சிந்தித்தலிற் காணப்படும் காண்பான் காட்சி, காணப்படும் பொருளாகிய சவிகற்ப ஞானத்தையுங்

கடந்து, அம்மூன்றுமின்றி அத்துவிதமாய் இயைந்த அகண்டா கார சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் மாட்டு நிருவி கற்ப ஞானத்தாற் செய்யும் வழிபாடாகும். இவ்வழிபாடு புறத் தொழில் அகத்தொழில் இரண்டுமின்றி அறிவுத்தொழில் மாத் திரையானே சிவபெருமானுடைய உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூன்று திருமேனிகட்கு மேலாகிய சொரூபத் திருமேனி யிடத்து நிகழ்வதாம். இதனை அநுட்டித்தோர் சிவசாயுச்சிய மாகிய பரமுத்தியைப் பெறுவர். (எ - று.)

மேல் ௧அ-வது செய்யுளிற் கூறிய சிவசாயுச்சியம் என்பதனை சிவ னைப் பெறுவர் என மொழிபெயர்த்துரைத்தவாறு காண்க. சொரூபத் திருமேனியினிடத்துச் செய்யும் வழிபாடு வருகின்ற செய்யுளில் ஞான நூல்தனை யோதல் என்பது முதலாக வகுத்துக் கூறப்படும். இவ்விடத்து வேதம் என்றது வேதஞ் சிவாகம மென்னுமிரண்டினுமுள்ள கருமகாண் டத்தை. சிவாகமமும் வேதம் என வழங்கப்படும். கீழுள்ளவற்றைக் கீழெனக் கண்டு கழித்தாலன்றி மேலுள்ளன பயன்படாவென்று கூறவேண்டிக் "கீழாக" என்றார். கழித்து என்பது சொல்லெச்சமாக வருவித்துரைக் கப்படும். பதிபசு பாசந் தெரித்தலாவது, அம்மூன்று பொருளையும் தடத்த லக்கணத்தில் வைத்து வகுத்துணர்த்துதல். பரசிவனைக் காட்டலாவது, அம் மூன்றனுள் பதிப்பொருள் ஏனைப்பாச பசுக்களுக்கு மேலாதலினிது விளங் கச் சொரூப லக்கணத்தின் வைத்துணர்த்துதல். இவ்விடத்து ஞானம் என்றது ஞான சாத்திரத்தைக் குறித்தது. தெரித்துக்காட்டு ஞான நூலென்றதனால், ஞானகாண்ட மெல்லாம், தூல அருந்ததி நியாயம்பற்றித் தடத்த லக்கணத்தை முன்னர் விளக்கிக்காட்டி, பின்னர்ச் சொரூப லக்க ணத்தை விளக்குமெனப்பட்டு இவ்வாறு இருபகுதியதாய் நிகழுமென்பதா யிற்று. நாடுதல்—சிந்தித்தல். நாடியெனவே, நாடுதற்கு வேண்டப்படும் ஓதல், கேட்டல்களும் உடன் கொள்ளப்படும். பின் மார்க்கச் சிவன் என் றவிடத்து மார்க்கம் இடைப்பிறவாலாதலின், பின் சிவன் என்பது பின்னிய சிவனெனப் பொருள் குறித்து வினைத்தொகையாயிற்று. பின்னுதல்— அத்துவிதமாய் இயைதல். நாடாவண்ணம் பின்னிய சிவன் என்றுரைக்க.

சன்மார்க்கம் என்பது சத்தியமுடைய நெறி எனப்படும். சரியை முதலிய அநுட்டானங்களும், அவற்றின் பயனாகிய சாலோகாதி பத முத்தி களும், அநித்தமாகையால் அசத்தியம். அநித்தமென்பது மேலானதில்லை என்பதைக் குறிக்கும். ஞானமும், அதனாற்பெறும் சிவசாயுச்சியமும்

மேலானதாலும், அதற்குமேலில்லாமையாலும் சத்தியம். ஆதலால், இந்த ஞான நெறிக்குச் சத்திய நெறி எனப் பெயராயிற்று.

சத்திய நெறியாகிய சன்மார்க்கத்தைச் சுருக்கிக் கூறுமிடத்து, எல்லாச் சாத்திரப் பொருள்களையும் உணர்ந்து, அப்பொருள்களெல்லாங் கீழெனக் கழித்து, ஞான சாத்திரப் பொருளை நாடி, சிவபிரான் திருவடியில் இரண்டறக் கலத்தல் என முடித்துக்கொள்க. மேல் இச்சரியை, இக்கிரியை என்றாற்போல இவ்விடத்தும் இஞ்ஞானப்பெருமை எனச் சுட்டு வருவித்துரைக்க.

இவை நான்கு செய்யுளானும், மேல் எடுத்துக்கொண்ட சரியை முதலிய நான்கிற்கும் இலக்கணங் கூறப்பட்டது. (௨௨)

ஞானத்தால் வழிபடுவதாகிய ஞான யாகமே முத்தியைத் தரும் எனவும் கன்ம முதலிய நான்கு யாகங்களும் போகத்தைத் தரும் எனவும் கூறுகின்றது.

ஞானநூ றனையோத லோது வித்த
    னற்பொருளைக் கேட்பித்த றன்கேட்ட னன்று
வீனமிலாப் பொருளதனைச் சிந்தித்த லைந்து
    மிறைவனடி யடைவிக்கு மெழின்ஞான பூசை
யூனமிலாக் கன்மங்க டபஞ்செபங்க டியான
    மொன்றுக்கொன் றுயருமிவை யூட்டுவது போக
மானவையான் மேலான ஞானத்தா லரனை
    யருச்சிப்பர் வீடெய்த வறிந்தோ ரெல்லாம்

(கோ - ரு.) ஊனம் இலா கன்மங்கள் தபம் செபங்கள் தியானம் இவை ஒன்றுக்கு ஒன்று உயரும். போகம் ஊட்டுவது. ஆனவையான் ஞான நூல்தனை யோதல், ஓதுவித்தல், நற்பொருளைக் கேட்பித்தல், நன்றாத்தான் கேட்டல், ஈனம் இலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும் எழில்ஞான பூசை. இறைவன் அடி அடைவிக்கும். வீடு எய்த அறிந்தோர் எல்லாம் மேலான ஞானத்தால் அரனை அருச்சிப்பர்.

(போ - ரை.) இறைவனை வழிபடுகின்ற முறை, சிவதருமோத்தரத்திற் கூறியவாறு கன்மயாகம், தவயாகம், செபயாகம், தியானயாகம், ஞானயாகம் என ஐவகைப்படும். யாகம் என்பது வழிபாடாம். அவற்றுள் குறைவில்லாத கன்ம யாகமாவது விடிய

ஐந்து நாழிகைக்குமுன் எழுந்திருந்து செய்யும் சிவ சிந்தனை முதலாகச் சிவபூஜை அக்கினி காரியம் ஈறுகிய செயல்களாம். தவயாகமாவது, சாந்திராயண விரத முதலியவற்றால் சரீரத்தை மெலிவித்தல். செபயாகமாவது, மந்திரங்களை வாசகம், ரகசியம், மானதம் என்னும் முறையில் தத்தம் தகுதிக்கேற்றவாறு செபித்தல். தியான யாகமாவது, இருதய முதலிய தானங்களில் சதாசிவன் முதலிய மூர்த்திகளின் திருமேனிகளைப் பாவித்துத் தியானிப்பது. இந்த நான்கு யாகங்களும் ஒன்றுக்கொன்று உயரும். உயர்தலாவது, பிரபஞ்சப் பற்றுநீக்கத்தைக் குறிப்பதாம். ஆயினும் பற்று நீக்கம் அறவே உண்டாகாமையால் அவ்வழிபாடுகள் போகத்தையே கொடுக்கும். போகம் என்பது சாலோகாதி பதமுத்தியாம். இனி ஞானயாகமாவது, ஞான சாத்திரத்தை முன்னுடு பின் மலைவற ஆசிரியனின்றிப் படித்தலும், தான் படித்தபடி பக்குவமுடைய பிறர்க்குப் படிப்பித்தலும், அச்சாத்திரத்துள்ள நன்மையாகிய பொருள்களைத் தமது மதிநுட்பத்தால் ஆராய்ந்து பிறர்க்குச் சொல்லுதலும், இவ்வாறு சொல்லினும் இது ஆராய்ச்சி அறிவேயன்றி யநுபவ அறிவாகாமையால், அவ்வநுபவ அறிவு விளங்கும் பொருட்டு ஞானசாரியனிடத்து அச்சாத்திரப் பொருளை உபதேச முறையிற் கேட்டலும், கேட்டவாறே குறைவில்லாத அப்பொருளைத் தனித்திருந்து சிந்தித்தலும் என ஐவகைப்படும். இவ்வாறு ஐவகைப்பட்ட அழகிய ஞான யாகம் ஒன்றுமே முத்தியைத்தரும். முத்தியடைய விரும்புவோர் யாவரும் மேம்பட்ட ஐவகையான இந்த ஞான யாகத்தினலேயே சிவபிரானை வழிபடக்கடவர். (எ - று)

தெளிதற்கும், நிட்டைக்கும் ஆசிரியன் உபதேசமேயன்றி நூல் வேண்டாமையான், நூலானுகற்பாலனவாகிய ஞான நூல் ஓதல், ஓதுவித்தல், கேட்பித்தல், கேட்டல், சிந்தித்தல் என்னும் ஐந்துமே ஞானயாகமெனப்பட்டது.

ஞானசாரியனிடத்துக் கேட்குமுன்னர்ப் பிறர்க்குச் சொல்லுதல் கூறியிருத்தலினல், சாத்திரப் பொருளைத் தன்னுடைய நுண்ணறிவால் அறிந்து சொல்லுதல் கூடும் எனவும், அநுபவ முண்டாதற்குரிய அநுசந்தானத்தை

ஆசிரியனிடத்து உபதேச முறையால் கேளாதவர் சொல்லாரெனவும் அறிக. உபதேசங்கேட்டு அநுபவம்வந்த பின்னர்ப் பிறர்க்கு உபதேச நெறியைச் சொல்லுங்கால் அச்செயல் நூற்கலப்பால் சிந்தனையுளடங்குமாதலின் அக் கேட்பித்தலை வேறு கூறாராயினர். அவ்வுபதேசத்தைச் சிந்தித்தலென்று கூறினமையினாலேயே, அநுபவம் வந்த பின்னர்ப் பிறர்க்கு உபதேசிக்கலா மென்பது பெறப்படும். அது சிந்தனையுளடங்குமாதலானன்றே, வருஞ் செய்யுளில் கேட்டலுக்குப்பின் கேட்பித்தல் கூறாது சிந்தித்தலே கூறப் பட்டதென்க.

சாந்திராயணமாவது—அமாவாசை முதல் பௌர்ணமி வரை, உண் ணும் அன்னத்தைப் பதினைந்து பங்காக்கி நாளொன்றுக்கு ஒவ்வொரு பங் காகக் குறைத்துண்ணலும், பௌர்ணமி முதல் அமாவாசை வரை அவ் வாறே கூட்டி உண்ணலுமாம்.

வாசகமாவது—பிறர்க்குக் கேட்கும்படி செபித்தல்.

ரகசியமாவது—தன் செவிக்குக் கேட்கும்படி செபித்தல்.

மானதமாவது—அக்கரங்களை மனத்தால் பாவித்தல். முன்னைய இரு செபங்களிலும் எண்ணிக்கைகூடும். மானதத்தில் எண்ணிக்கை கூடாது. (உரு)

உண்மை ஞானம் நான்கு வகைப்படும் எனவும், ஞானத்திற்கு வாராமல் ஓதல் முதலியவற்றினின்று சரீரம் நீங்கினவர் அடையும் கதி இதுவெனவும் கூறுகின்றது.

கேட்டலுடன் சிந்தித்த றெளித னிட்டை
 கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்
வீட்டையடைந் திடுவர்நிட்டை மேவி னோர்கண்
 மேவாது தப்பினவர் மேலாய பதங்கட்
கீட்டியபுண் ணியநாத ராகி யின்ப
 மினிதுநுகர்ந் தரனருளா லிந்தப் பார்மே
னாட்டியநற் குலத்தினில்வந் தவதரித்துக் குருவான்
 ஞானநிட்டை யடைந்தடைவர் நாதன் றாளே.

(கோ - ௫.) கிளக்கில் ஞானம் கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தலென ஈரிரண்டேயாம். நிட்டை மேவினோர்கள் வீட்டை அடைந்திடுவர் எனவும், நாதன் தாள் அடைவர் எனவுங் கூட்டுக.

(போ - ரை.) மேற்கூறிய ஞானயாகம் ஐந்தனுள் ஓதல், ஓதுவித்தல், கேட்பித்தலாகிய முன்னைய மூன்றும் ஆசிரியனை யின்றியும் நிகழ்வனவாதலின், ஆசிரியனால் அறிவுறுத்தும் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னும் நான்குமே உண்மை ஞான மெனப்படும். இந்நான்கினும் முறையே பழகி நிட்டை பொருந்தினவர் வீட்டினையடைவர். இந்நான்கினுள்வாராது தீக்கையில் அத்துவ சுத்தி பண்ணப்பட்டு ஓதல், ஓதுவித்தல், கேட்பித்தலாகிய மூன்றினும் நின்று சரீரம் நீங்கியவர்கள் சிவலோகாதிபத முத்திகளைப்பெற்று ஆண்டுள்ள இன்பத்தினை நன்கு அநுபவித்து முதல்வன் ஆணையால்' அங்கு நின்று நீங்கி இவ்வுலகத்தின்கண் உயர்ந்த குலத்திற் பிறந்து ஞானசாரியனை யடைந்து கேட்டல் முதலிய ஞான நெறியால் நிட்டையினைக்கூடி வீட்டினை அடைவர். இவ்வுலகத்திற்கு வராமல் சிவலோகத்தில் சிவபிரானே குருவாய் உபதேசிக்கக் கேட்டல் முதலிய ஞானத்தைப்பெற்று நிட்டையினால் வீட்டை அடையினுமடைவர். ஆதலின் இங்கு வருவரென்பது நியதமன்று. (எ - று.)

ஓதல், ஓதுவித்தல், கேட்பித்தல் முதலிய மூன்றினின்றார்க்கும் கேட்டல் முதலிய நான்கும் ஆசிரியனையின்றிக் கூடாவென்பதுணர்த்துதற் பொருட்டு "இந்தப் பார்மேனாட்டிய நற்குலத்தினில் வந்தவதரித்து என்றார். அவ்வளவே யன்றிப் பார்மேல் வருதல் நியதமன்றெனக்கொள்க. அடுத்துவருஞ் செய்யுளில் சரியை முதலியவற்றினின்றார் ஆண்டு "நாதனே முன்னிற்கின் நணுகுவர் நற்றாளே" எனக் கூறுதலானும் பார்மேல் வருதல் நியதமன்றென்பது துணியப்படும்.

இனி, மேவாது தப்பினவர் என்பதற்கு, கேட்டல் முதலிய மூன்றினின்று நிட்டை மேவாது தப்பினவர் என்றுரைப்பாருமுளர். கேட்ட பின்னர்க் கேட்க வேண்டாமையானும், சிந்தித்த பின்னர் நூல்வேண்டாமையானும், "குருவால் ஞான நிட்டை யடைந்தடைவர்" என்று கூறவேண்டா. இவ்வாறு கூறுதலினால் கேட்டுச் சிந்தித்து தெளிந்து நிட்டையடைவரென்பது பெறப்படும். அன்றியும், கேட்டல் முதலியவற்றினின்று தப்பினவர் சுத்த தத்துவ புவனங்களில் அபரமுத்தராக வசித்து அங்கிருந்தவாறே பரமுத்தியை யடைவரே யன்றி இவ்வுலகத்து மீளுதலில்லை. ஆதலின், கேட்டல் முதலியவற்றினின்று தப்பினவரை, சரியை முதலியவற்

றினின்று தப்பினவரோடொப்பவைத்துரைத்தல் சிறிதும் ஏலாமையானும் மேலைச்செய்யுளில் கேட்டல் சிந்தித்தலை உள்ளடக்கிய ஐந்தும் இறைவனடி யடைவிக்கும் எனக்கூறி யதனோடு "மேலாய பதங்கட்கீட்டிய புண்ணிய நாதராகி யின்புமினிது நுகர்ந்து" என்றது மூராணுதலானும் அவ்வுரை பொருந்தாமை யறிக.

மேலைச் செய்யுளில் ஐந்தும் இறைவனடி யடைவிக்கும் என்றதனால், ஐந்தில் ஒன்று குறையினும் இறைவனடி யடைவிக்காதெனப்பட்டு, ஓதல் முதலிய மூன்றினின்றவர் சரியை முதலிய மூன்றினின்றவரோடொப்பப் பத முத்தியைப் பெறுவரென்பது பொருந்துமாறு காண்க.

இவை யிரண்டு செய்யுளானும் ஞானமாவது, ஞானநூலோதல், ஓது வித்தல், கேட்பித்தல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என எழுவகைப்படுமென்பதும், அவற்றுள், ஓதல் முதலிய மூன்றும் உண்மை ஞானத்திற்கேதுவாகலின் பொதுவென்பதும், கேட்டல் முதலிய நான் கும் உண்மை ஞானமெனப்படுமாதலின் சிறப்பென்பதும், பொதுவிற் குரிய பயன் பத முத்தியும், சிறப்பிற்குரிய பயன் பரமுத்தியுமாம் என்ப தும் உணர்த்தப்பட்டன. (௨௪)

தானம் முதலியன பசு புண்ணியமெனவும், சரியை முதலிய மூன்றும் பதி புண்ணியமெனவும், இம்மூன்றும் ஞானத்தைப் பயப்பித்து முத்தியைத் தருமெனவும் கூறுகின்றது.

தானமியா கந்தீர்த்த மாச்சிரமந் தவங்கள்
சாந்திவிர தங்கன்ம யோகங்கள் சரித்தோ
ரீனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வ
ரீசனியோ கக்கிரியா சரியையினி னின்றோ
ரூனமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லா
மொடுங்கும்போ தரன்முனிலா தொழியினுற்ப வித்து
ஞானநெறி யடைந்தடைவர் சிவனை யங்கு
நாதனே முன்னிற்கி னணுகுவர்கற் றூளே.

(கோ - ௫.) ஈசன் சரியை, கிரியா, யோகினின் நின்றோர் எனவும், ஞானநெறியடைந்தே சிவனையடைவரெனவும், அங்கு நாதன் முன்னிற்கின் கற்றூளே நணுகுவர் எனவுங் கூட்டுக.

(போ - ரை.) வேதோக்தமான தருமநெறிகள் பல இருப் பினும், ஞானநெறியைச் சிறந்தெடுத்துக் கூறியது என்னையெ

னின், தானம் கொடுத்தல், யாகஞ்செய்தல், புண்ணிய தீர்த்தங்களாடல், பிரமசரிய முதலிய தத்தம் நிலைகளிற்றவுறாது நிற்றல் உண்டி சுருக்கல் முதலிய தபசுகள் செய்தல், பிராயச்சித்தங்கள் பண்ணல், விரதங்காத்தல், பிராணவாயுவை ரேசகாதி தொழில்களால் அடக்குவதாகிய கருமயோகஞ்செய்தல் ஆகிய இவையெல்லாம் பசு புண்ணியம். இவற்றை யநுட்டித்தோர் துன்பமின்றி இன்பமே மிகுந்திருக்கும் சுவர்க்க உலகத்தினைப்பொருந்தி அங்குள்ள போகங்களை யநுபவித்து விரைந்து மீளுவர். இவ்வாறு மேலேபோயும் மீளுதற்கேதுவாகிய அப்பசு புண்ணியம் போலல்லாத முதல்வன் விதித்த சரியை, கிரியை, யோகங்களாகிய சிவபுண்ணியங்களை விதி வழிநின்று அநுட்டித்தோர், உண்மைஞானத்தைப் பொருந்தாது ஓதல் முதலிய மூன்றினின்று தப்பினவரோடு ஒப்ப, சாலோகாதிபத முத்திகளில் நெடுங்காலந் தங்கி உலகமுழுதும் சங்காரப்படும்பொழுது போகத்தில் வைராக்கியம் பிறவாதிருப்பின் முதல்வன் குருமூர்த்தியாய்த் தோன்றி அநுக்கிரகஞ் செய்யமாட்டான்; அதனால் மீட்டும் செனனத்தை யடைந்து குருவருளால் ஞானநெறியைத் தலைப்பட்டு வீடடைவர். சாலோகாதிபத முத்தியில் இருந்தவாறே போகத்தில் வைராக்கியம் பிறக்குமாயின், அவ்விடத்திலேயே முதல்வன் குருமூர்த்தியாய்த்தோன்றி அருள்செய்வன். அவ்வாறு அருள்செய்யப்பெறின், ஞானநெறியைக் கூடிச் செனனத்தை எடாமலே முத்தியிற்கலப்பர். ஆதலால், தான முதலியன போலன்றி எவ்வாற்றானும் சரியையாதிகள் சாலோகாதிபத முத்தியைத்தந்து முடிவான முத்தியையும் தரும். (எ-று.)

இச்செய்யுளால் சரியை முதலியவற்றிற்குப் பயன் மேற்கூறிய சாலோக முதலிய பதமுத்தி மாத்திரைதானோ என்னும் ஆசங்கையை நீக்கிப் பதமுத்தியைத் தந்து பரமுத்தியையுந்தரும் எனக் கூறப்பட்டது. (உ௬.)

தானமும் சாமானியருக்குக் கொடாமல் சிவஞானிகளுக்குக் கொடுக்கில் முத்திக்கேதுவாமெனக் கூறுகின்றது.

சிவஞானச் செய லுடையோர் கையிற் றானந்
  திலமளவே செய்திடினு நிலமலைபோற் றிகழ்ந்து
பவமாயக் கடலினழுந் தாதவகை யெடுத்துப்
  பரபோகந் துய்ப்பித்துப் பாசத்தை யறுக்கத்
தவமாரும் பிறப்பொன்றிற் சாரப் பண்ணிச்
  சரியைகிரி யாயோகந் தன்னினுஞ்சா ராமே
நவமாகுந் தத்துவஞா னத்தை நல்கி
  நாதனடிக் கமலங்க ணணுகுவிக்குந் தானே.

(கோ - ரு.) சிவஞானச்செயல் உடையோர் கையின் தானம் திலம் அளவே செய்திடினும் நிலம் மலைபோல் திகழ்ந்து, பரபோகந் துய்ப்பித்து, தவம் ஆரும்பிறப்பு ஒன்றின் சாரப்பண்ணி, சரியை கிரியா யோகம் தன்னிலுஞ்சாராமே பவமாயக்கடலின் அழுந்தாதவகை எடுத்து பாசத்தை அறுக்க நவமாகும் தத்துவஞானத்தை நல்கியே நாதன் அடிக்கமலங்கள் கணுகுவிக்கும் தான்.

(போ - ரை.) சரியையாதிகளை அநுட்டிக்கும் விதி வழியின்றிச் சிறுத்தொண்டர் முதலாயினார்போன்று பத்தி வழியில் நின்று சிவஞானச் செயலுடைய ஞானிகள் கையில் தானமாய்க் கொடுத்த பொருள் சிறிதேயாயினும், அத்தானம் பூமியைப் போலும், மலையைப்போலும் விரிவாகி ஓங்குதலால் பதி புண்ணிய மெனப்படும். அப்புண்ணியமானது, அத்தானத்தைச் செய்த பத்தர், மேற்கூறியவாறு பசு புண்ணியத்திற்குரிய சுவர்க்கலோகங்களையடையாது, பதி புண்ணியத்திற்குரிய சிவசாலோகாதி பதங்களைப்பொருந்தி, ஆண்டுளவாகிய இன்பங்களை யநுபவித்து பின்னர் இவ்வுலகத்தில் தவஞ்செய்தற்குரிய உயர்ந்த குலத்தில் ஒரு பிறவியையடைந்து, சரியை, கிரியை, யோகங்களை ஏனையோர்க்குப்போலக் காலநீட்டிப்பும் அருமையுமின்றிச்செய்து சனன மரணமாகியகடலின்கண் அழுந்தாதவண்ணம் பாசத்தினைநீக்குதற்குரிய புதுமையாகிய உண்மைஞான நெறியினைப் பொருந்தி, முதல்வனது திருவடியாகிய வீட்டினை அடையும்படி செய்யும். ()

"சரியை கிரியாயோகந் தன்னினுஞ் சாராமே, என்றது அவை ஏனையோர்க்குப்போலக் காலநீட்டிப்பும் அருமையுமின்றி எளிதிற்கைகூடி முற்

றுப்பெறும் என்பதுபற்றியேயன்றி, சரியை கிரியா யோகங்களை அனுட்டிக்கமாட்டாரென்பதன்று. அநுட்டிக்கமாட்டாரென்று கூறின், "சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" என மேல் கக-வது செய்யுளிற்கூறியதனோடு முரணுமாதலின், அதனோடு முரணாதவண்ணம் இங்கே கூறியவாறு கொள்க. தன்னினும் என்றவிடத்து உம்மை சரியை முதலியவற்றின் சிறப்பையுணர்த்திற்று.

இவை நான்கு செய்யுளானும் ஞானநூல்தனையோதல் முதலிய ஐவகை வேள்வி செய்தோர் பெறும்பயன் பதமுத்தி, பரமுத்தி என்பதும், சரியை முதலிய மூன்றை அநுட்டித்தோர் பெறும்பயன் பதமுத்தியும், அதன் வாயிலாகப் பரமுத்தியுமாமென்பதும், சிவஞானிகட்குச் செய்யுந் தானப் பெருமை கூறுமுகத்தால் பத்தி நெறியினின்றோர் பெறும்பயன் சாலோகாதி பதங்களையடைந்து, பின்னர்ப்பரமுத்தியடைதலென்பதும்எனக்கூறு முறையில், எந்த நெறியில் நின்றோர்க்கும் முத்தியடைதற்கு ஞானநெறியாகிய சன்மார்க்கம் இன்றியமையாச் சிறப்பிற்றென்பது கூறப்பட்டது.

(உகூ.)

வீடு பேற்றிற்குச் சிறந்த சாதனம் ஞானமேயன்றிப் பிறிதில்லை எனக் கூறுகின்றது.

ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராண
நல்லவா கமஞ்சொல்ல வல்லவா மென்னு
மூனத்தா ரென்கடவ ரஞ்ஞா னத்தா
லுறுவதுதான் பந்தமுயர் மெய்ஞ்ஞா னத்தா
ஞனத்தா லதுபோவ தலர்கதிர்முன் னிருள்போ
லஞ்ஞானம் விடப்பந்த மறுமுத்தி யாகு
மீனத்தார் ஞானங்க ளல்லா ஞான
மிறைவனடி ஞானமே ஞான மென்பர்.

(கோ - டு) ஞானத்தாலே வீடு என்று எனவும், அஞ்ஞானத்தால் பந்தம் உறுவது தான் எனவும், அது அலர் கதிர் முன் இருள்போல் உயர் மெய்ஞ்ஞானந்தான் ஆனத்தால் போவது எனவுங் கூட்டுக.

(போ - ரை) மேற்கூறியவாற்றால் ஞானமல்லாத பிறவெல்லாம் ஞானத்தை உண்டுபண்ணுதற்குச் சாதனமென்றும், ஞானம் ஒன்றே வீடு பேற்றிற்குச் சிறந்த சாதனமென்றும்,

நான்கு வேதங்களும், பதினெண்புராணங்களும், இருபத்தெட்டுச் சிவாகமங்களுமாகிய பிரமாண நூல்களெல்லாம் துணிந்து கூறவும், அவற்றோடு பிணங்கி வீடுபேற்றிற்குத் தீக்கையே அமையும் ஐவகை வேள்வியே அமையும், பத்திநெறியே அமையும் என்று பிதற்றுவாரை எவ்வாற்றானும் அறிவுறுத்தித் திருப்பமுடியாது. ஞானமல்லாதனவெல்லாம் அஞ்ஞானமாதலின், அவர்க்கு அவ்வஞ்ஞானப்பகுதிகளாற் பந்தமுறுதலேயன்றி வீடுபேறடைதல் கூடாது. அவ்வஞ்ஞானங்களெல்லாம் விரிந்த ஒளிமுன் இருள் போல ஞானந்தோன்றக் கெட்டொழியும். ஒழியவே, அவ்வஞ்ஞானத்தாலாகிய பந்தம் நீங்கும். அப் பந்தம் நீங்கவே முத்தி நிலை கூடும். ஆகலின், ஞானமே முத்திக்குச் சிறந்த சாதனம். இந்த ஞானமும் பசுஞானம், பாசஞானம், பதிஞானம் என முத்திறப்படும். அவற்றுள், ஏனைச்சமயிகள் கூறும் ஞானங்களெல்லாம் பசுஞானம் பாசஞானங்களேயாம். இவ்விரண்டு ஞானங்களின் வேறாகிய முதல்வன் திருவடியை அடையச்செய்தலாகிய பதிஞானமே மேற்கூறிய உண்மை ஞானமாம். இவ்வாறு வேதாகமங்களை உணர்ந்தோர் கூறுவர். (எ-று)

வீடென்றே என்ற விடத்துள்ள ஏகாரம் ஞானத்தால் என்பதனோடு பொருந்தி, ஏனைய வீடுதராவெனப் பிரித்தமையானும், இறைவனடி ஞானமே என்றவிடத்துள்ள ஏகாரம் ஏனைய ஞானங்களைப் பிரித்தமையானும் பிரிநிலைக்கண் வந்தன. நல்லவாகமஞ்சொல்ல என்றவிடத்து சொல்லவும் எனச் சிறப்பும்மை விரித்துரைக்க. உறுவதுதான் என்றவிடத்தும், மெய்ஞ்ஞானந்தான் என்றவிடத்தும் உள்ள தான் இரண்டும் அசை. ஆனத்தால் என்பது ஆனவதனாலெனப் பொருள் குறித்தலின், ஆன் என்பதனுள் அகரமும், அத்தால் என்பதனுள் அன் சாரியையும் தொக்கு நின்றன. * பெற்றத்தாற் பெற்ற பயன் என்றாற்போல, ஆன என்பதன் பொருளாகிய ஆதல் என்பது உண்டாதலைக் குறித்தது.

இதனானே, ஞானமல்லாத ஏனையவெல்லாம் வீடுபேற்றிற்குச் சிறந்த சாதனமல்லவாதல் இனிது விளக்கி, ஞானமின்றியமையாச் சிறப்பிற்றென்பது வலியுறுத்தப்பட்டது.

---

* திருக்குறள் சுற்றந்தழால். செ. ச.

தீக்கை முதலியன அஞ்ஞானமெனக் கூறியதனால், அவற்றை அநுட்டிக்க வேண்டாமென்பது கருத்தன்று. ஞானம் வருவதற்காக அவை யாவும் அநுட்டிக்கற் பாலனவேயாம். இன்றேல் "அழிவிலாக்கிரியையினாதல் சத்திமத்தாலாதல் அத்துவாசுத்திபண்ணி மலமகற்றி, யொழிவிலாச் சிவம் பிரகாசித்தற்கு ஞானமுதிப்பித் துற்பவந்துடைப்பனரன்" என மேற் கூறிய ௬-வது செய்யுளோடு முரணுமாறறிக. அவ்வாறாயின், இவ்விடத்து அவற்றை அஞ்ஞானமெனக் கூறுவானேனெனின், அவை ஞானமே எனப் பிணங்குவார்க்கு ஞானமல்ல வென்பதுணர்த்துதற் பொருட்டு அஞ்ஞானச் சொல் உபயோகிக்கப்பட்டதென்க.

ஐவகை வேள்வியினுள் ஞானயாகம் ஒன்று. அதுவும் ஓதல் முதலியவாய் ஐவகைப்பட்டு இறைவனடியடைவிக்கு மெனமேலே கூறி, இவ்விடத்தில் ஐவகைவேள்வி முத்தியைத் தாராதென விலக்கியது முரணாகாதோ வெனின், ஆகாது. என்னை. ஞானவேள்வி ஐந்தனுள் உண்மை ஞானம நான்குங்கிடையா. கேட்டல் சிந்தித்தலென்னு மிரண்டு தானுள்ளன. அவ்விரண்டும் தெளிந்து நிட்டை கூடச் செய்து வீடு அடைவிக்கு மன்றிக் கேட்டுச் சிந்தித்த மாத்திரையில் வீடு கூடாமையின் விலக்கினாரென்க. எனவே, உண்மை ஞானம் நான்கனுள்ளுந் தெளிதலும் நிட்டையுமே உண்மைஞானமெனச் சிறப்பித்துக் கூறப்படுமென்றவாறாயிற்று. இது பற்றியே கேட்டல் முதலிய வற்றினின்று தப்பினவர்க்குப் பயன் அபர முத்தி யென மேல் உ௪-வது செய்யுளுரையில் கூறப்பட்டவாறும்.

"கேட்டலுடன் சிந்தித்தல்" என்னுஞ் செய்யுள் முதல் இது வரையும் உண்மை ஞானத்தினியல்பு, கேட்டல் முதலியன எனவும் அதன் பயன் வீடு எனவும் பொது வகையாற் கூறி, இனி, அந்த உண்மை ஞானத்தினியல்பும், அதன் பயனும் இது வெனச் சிறப்பு வகையாற் கூறுகின்றார். (உஎ.)

கேட்டலாகிய ஞானத்தின் இயல்பும், அதன் கண் நிகழும் அநுபவமும் இவையெனக் கூறுகின்றது.

சூரியகாந் தக்கல்லி னிடத்தே செய்ய
சுடர்தோன்றி யிடச்சோதி தோன்று மாபோ
லாரியனா மாசான்வந் தருளாற் றோன்ற
வடிஞான மான்மாவிற் றோன்றுந் தோன்றத்

தூரியனுஞ் சிவன்றானுந் தானுந் தோன்றுந்
 தொல்லுலக மெல்லாந்தன் னுள்ளே தோன்று
நேரியனாய்ப் பரியனுமா யுயிர்க்குயிரா யெங்கு
 நின்றநிலை யெல்லாமுன் னிகழ்ந்து தோன்றும்.

(கோ-டு) செய்ய சுடர் தோன்றி இட சூரிய காந்தக்கல்லின் இடத்தே சோதி (நிகழ்ந்து) தோன்றுமா போல் அருளான் ஆரியனும் ஆசான் வந்து தோன்ற ஆன்மாவின் அடிஞானம் (நிகழ்ந்து) தோன்றும். தோன்றத் தூரியனும் சிவன் (முன்னிகழ்ந்து) தோன்றும். (தன்னுள்ளே) தானும் (முன்னிகழ்ந்து)தோன்றும். தன்னுள்ளே தொல் உலக மெல்லாம்(முன்னிகழ்ந்து) தோன்றும். நேரியனாய் உயிர்க்குயிராய் (நின்றநிலை) பரியனுமாய் எங்கும் நின்ற நிலை எல்லாம் முன்னிகழ்ந்து தோன்றும்.

(போ-ரை.) மேற்கூறியவாறு உண்மை ஞானம் கேட்டல் முதலியனவாக நால்வகைப்படுமாகலான், அவற்றுள், கேட்டலும் அதன் கண் நிகழும் அநுபவமும் வருமாறு:—சூரிய சந்நிதிமாத்திரையானே சூரிய காந்தக்கல்லினிடத்து நெருப்பு விளங்கித் தோன்றுமாறுபோல, ஞான சாத்திரப் பொருளை உபதேச முறையால் சொல்லுந்தகுதியுடனே வந்து தோன்றும் ஞானாசிரியன் சந்நிதிமாத்திரையானே மாணாக்கனுக்குக் கேட்டலறிவு விளங்கித் தோன்றும். தோன்றவே முதல்வனாகிய பதியும், அப்பதியினுள்ளே பசுவும், அப்பசுவினுள்ளே பிரபஞ்சவடிவாயுள்ள பாசமும், பதி உயிர்க்குயிராய் அணுவோரண்டமாம்படி சிறிதாய் நின்ற நிலையும், எவற்றினும் வியாபகமாய் அண்டமோரணுவாம்படி பெரிதாய் எவ்விடத்தும் நின்றநிலையும், நிருவிகற்பமாய் விளங்கித் தோன்றும். (எ-று.)

அருளான் என்பது அருளொடு என்னும் பொருள் குறித்தலின், ஆன் உடனிகழ்ச்சிப் பொருட் கண் வந்தது. * "தூங்குகையானோங்கு நடைய" என்றாற்போல. இவ்விடத்து அருள் என்றது எற்புழிக் கோடல் என்னும் உத்தியால் ஞான சாத்திரப்பொருளை உபதேசித்தலையுணர்த்திற்று.

ஆசிரியன் நூற்பொருள் உரைக்கும் வழியால் அவ்வாசிரியனுடைய ஞானமே மாணாக்கனிடத்துச் சென்று தோன்றுவதே சந்நிதி மாத்திரை

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமையியல் சூ—௩௬.

யால் தோன்றும் ஞானம் என்பர். அது பொருந்தாது. எவ்வாறெனின், சடமாகிய கண்டப்பொருள் ஒன்றுடன் ஒன்று கூடும். சித்துப் பொருள் அவ்வாறு கூடாது. எதனுலெனின், சித்துப் பொருளாகிய உயிர் வியாபகப் பொருளாதலின், தானில்லாத இடமில்லையாதலால் கூடுமாறில்லை. சுவர்க்க முதலிய இடங்களில் போக்குவரத்தும், பலசரீரங்களைப் பற்றுதலும் உயிர்க்குண்டென்று கூறுங்கருத்தென்னையோவெனின், உயிர் வியாபகமாயினும் ஒன்றனைப்பற்றுங்கால் பிறிதொன்றினைப்பற்றாது. அதாவது. மண்ணுலகத்தைப் பற்றுங்கால் சுவர்க்க நரகங்களைப்பற்றாது. மண்ணுலகத்தும் ஓர் உடம்பைப்பற்றுங்கால் பிறிதோருடம்பைப் பற்றாது. ஓர் உடம்பைப் பற்றி நிற்குங்காலத்தும் ஒரு இந்திரியத்தைப் பற்றுங்கால் பிறிதொரு இந்திரியத்தைப்பற்றாது. ஆதலினுற்றான், உயிர் ஏகதேச வியாபகமெனப்பட்டது. போக்குவரத்துக்களாகிய இறப்புப் பிறப்பு என்பன ஒன்றை விடுதலும் பிறிதொன்றைப்பற்றுதலுமாகிய அவ்வளவேயாம். இத்தகைய உயிர் பிறிதோருயிரைக்கூடாது. கூடவேண்டுவது மின்று. இனி இறைவனுகிய சித்துப்பொருளோ எக்காலத்தும் உயிரோடு அத்துவிதமாய்க் கலந்திருக்கும். இருப்பினும் இறைவனைக் கூடுதலென்றது, பிறவற்றின் பற்றைவிட்டுக் கலந்திருத்தலை அறிதலேயாம். ஆதலால், சித்துப் பொருளுக்குக் கூடுதலில்லையென்பது சிவாகம நூற்றுணிபு. மலமாயாகன்மங்கள் வியாபகப் பொருளாயினும், ஆணவமலம் ஆன்ம அறிவைப்பற்றியும், மாயைகன்மங்கள் இறைவனுள் அடங்கியும் நிற்பனவாதலின், அவையும் ஒன்றுடன் கூடி நிற்பனவேயாம். ஆதலின், சடப்பொருளுக்குக் கூடுதலுண்டென்பது எவ்விடத்தும் பொருந்தும்.

இனி, சந்நிதி மாத்திரை யென்பதற்குப் பொருள்தான் என்னை யெனின், ஆசிரியன் கிருபையினுல் மாணக்கனுடைய அறிவு விளங்கித் தோன்றுதலாம். இக்கருத்துணர்த்துதற் பொருட்டே, ஆசான் வந்து தோன்ற ஆன்மாவிற்றேன்றும் என்றூர். ஞாயிற்றின் சந்நிதி மாத்திரையானே சூரியசாந்தக்கல்லினிடத்தே நெருப்பு விளங்கித் தோன்றுதலை உவமையாகக் கூறியதும் ஆசிரியன் ஞானமே மாணக்கனிடத்துச் சென்று பற்றுவது போலு மென்னும் ஆசங்கையை நீக்குதற் பொருட்டு. நேரியன்-சிறியன். பரியன்—பெரியன்.ஆதலால், அணுவோரண்டமாம்படி உயிர்க்குயிராய் நிற்றலும், அண்டமோரணுவாம்படி எங்கும் நிற்றலும் பெறப்படுமாறு காண்க. முன்னிகழ்ந்து என்பது சிவன் முதலியவற்றேடுஞ் சென்று பொருந்தும். அது கொண்டு கூட்டிற் காட்டப்பட்டது. முன்னிகழுந் தோற்றமாவது சவிகற்பத்துக்கு முன்னுக நிகழும் நிருவிகற்பத் தோற்றம். (உஅ.)

சிந்தித்தலாகிய ஞானத்தின் இயல்பும் அதன்கண் நிகழும் அநுபவமும் இவை எனக் கூறுகின்றது.

மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்தி நிபாத
மேவுதலு ஞானம்விளைந் தோர்குருவி னருளாற்
புக்கநுட்டித் தேநிட்டை புரிந்துளோர்கள்
பூதலத்திற் புகழ்சீவன் முத்த ராகித்
தக்கபிரி யாப்பிரிய மின்றி யோட்டிற்
றபநியத்திற் சமபுத்தி பண்ணிச்சங் கரனோ
டொக்கவுறைந் திவரவனை யவனிவரை விடாதே
யுடந்தையாய்ச் சிவன்றோற்ற மொன்றுமே காண்பர்.

(கோ - டு) பூதலத்தின் தக்கபிரியாப் பிரியம் இன்றி ஒட்டில் தபநியத்தில் சமபுத்திபண்ணி புகழ்சீவன் முத்தராகி அவன் இவரை இவர் அவனை விடாதே உடந்தையாய்ச் சங்கரனோடு ஒக்க உறைந்து சிவன் தோற்றம் ஒன்றுமே காண்பர்.

(பொ - ரை) பக்குவமுதிர்ச்சியால் தீவிரதரசத்திநிபாதம் பொருந்திய மாணுக்கருக்கு முற்கூறிய கேட்டலறிவு மந்தமாதன்றி முதிர்ந்து முறுகிவிளையும். அப்பொழுது அவர் தம் ஆசிரியராலாவது, தம்மோடொத்த ஒரு சாலை மாணுக்கருள் தம்மின் மூத்தாரொருவராலாவது, தான் கேட்டபொருளைச் சிந்திக்குமாறு அதன் முறையைச் சொல்லக்கேட்டு அப்பொருளின்கண் மனம் ஒருப்பட்டுச் சிந்தித்து நிட்டை கூடுதற்கண் ஆசை உடையராகப் பெறுவர். அவ்வாறு பெற்றால், இவ்வுலகின்கண் தக்க விருப்பு வெறுப்பின்றிச் சிந்தித்தற்றெழில் ஒன்றையே மேற்கொண்டு, ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்குவதாய், மற்றென்றிலும் பற்றின்றிப் புகழத்தக்க சீவன் முத்தரோடு ஒத்துப்பேரறிவாகிய சிவமும் சிற்றறிவாகியதாமும், ஆதித்தனொளியும் கண்ணொளியும் போல் அத்துவிதமாய்க் கலந்து நிற்றலால், அந்நிலையில் தாமொரு பொருள் உண்டென்றறியப்படாது சிவத்தோற்றம் ஒன்றுமே காணப்பெறுவர். காணப்பெறுதலாகிய அதுசவிகற்பமென்றுவது, நிருவிகற்பமென்றுவது சொல்லமுடியாத இடைநிலையாயிருக்கும். (எ-று)

மிக்கதொருபக்குவத்தின் மிகு சத்திநிபாத மேவுதலும் ஞானம் விளைந்து என்றதனால், தீவிரதரசத்திநிபாதம் பொருந்தாதவிடத்து அக் கேட்டலறிவு முறுகுதலின்றி மந்தமாக நிகழுமென்பதாயிற்று. விளைந்த வழி என்றிருக்கவேண்டுவது விளைந்து எனத்திரிந்து நின்றது. ஒரு சாலை மாணாக்கராய்த் தம்மின் மூத்தாரையுந்தழுவுதற்கு ஓர்குரு எனப் பொதுப்படக் கூறினார். நிட்டை புரிந்துளோர்கள் என்ற விடத்து புரிதல்—விரும்புதல். சீவன் முத்தராகி என்றவிடத்து ஆகி என்பது போல என்னும் உவமைப் பொருள் குறித்து நின்றது. *"ஆள்வாரிலி மாடாவேனோ" என்றாற்போல.

உடந்தையாய் உறைந்து காண்பர் என்றது "மழைபெய்து குள நிறைந்தது" என்றாற்போல உறைதலாற்காண்பர் எனக் காரண காரியப் பொருட்டாய் நின்றது. ஒன்றும் என்றவிடத்து உம்மை சிறப்பின்கண் வந்தது. அவ்விடத்துள்ள ஏகாரம் பிறவற்றைக் காணாரெனப் பிரித்தமையின் பிரிநிலை. ‡"அடைபவர் சிவமேயாகுமதுவன்றித் தோன்றுமென்ற கடனதேது. என்பதும், இச்சிந்தித்தல் நிலையெனக்கொள்க. அதன் கருத்தாவது, சிவஞானம் பெற்றபின் அதனைச் சிந்திக்குமுறையில் தன்னையுந் தலைவனையுங் காண்பன் என்பதாம். (உகூ)

தெளிதலாகிய ஞானத்தின் இயல்பும், அதன்கண் நிகழும் அநுபவமும் இவையெனக் கூறுகின்றது.

அறியாமை யறிவகற்றி யறிவி னுள்ளே
யறிவுதனை யருளினா லறியாதே யறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடுங்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயிற்
பிறியாத சிவன்றானே பிரிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெல்லாந் தானாய்த் தோன்றி
நெறியாலே யிவையெல்லா மல்ல வாகி
நின்றென்றுந் தோன்றிடுவ னிராதா ரனாயே.

---

* திருவாசகம், கோயின் மூத்ததிருப்பதிகம் செ-எ.

‡ "அடைபவர் சிவமேயாகு மதுவன்றித் தோன்று மென்ற, கடனதே தென்னின் முன்னங் கண்டிடார் தம்மை பின்னுந், தொடர் வரு மருளினாலுந் தோன்றுமா.காணா ராயி, னுடையவ ரடிசேர் ஞான முணர்தலின் றணைத லின்றே. சிவப்பிரகாசம், சூ-ம். ௧௦. செ-௯.

(கோ - டு.) அருளினால் அறியாமை அறிவு அகற்றி அறிவினுள்ளே அறிவுதனை அறியாதே அறிந்து குறியாதேகுறித்து குழைந்து அந்தக் கரணங்களோடும் கூடாதே வாடாதே இருப்பையாயின், பிறியாத சிவன்றானேபிரிந்து தோன்றி, பிரபஞ்ச பேதமெல்லாம் தானாய்த் தோன்றி, இவையெல்லாம் அல்லவாகி, நெறியாலே என்றும் நின்றே நிராதாரனாய்த் தோன்றிடுவன்.

(பொ - ரை) மேற் கூறியவாறு ஞானாசிரியன் திருவருளால் ஒன்றனையும் அறியாமையாகிய கேவலமும், உலகத்தையறிதலாகிய சகலமும் என்னும் இருவகைப் பாசங்களும் நீங்கி, முதல்வனை அறியும் முறையைத் தன்னறிவின் கண்ணே கேட்கு முறையிற் கேட்டுச் சிந்திக்கு முறையிற் சிந்தித்து அதன் பின்பு சிந்திக்கப்பட்ட பொருளினிடத்து அன்பு வைத்து, அந்தக் கரணங்களிற் சேராது அடங்கி நிற்கப்பெறுவரானால், தம்மோடு பிரிதலில்லாத முதல்வனியல்பு, முன்னர்க் கேட்டபொழுது பொருட்டன்மை பற்றி வேறாய்த் தோன்றி, பின்னர்ச் சிந்தித்த பொழுது உலக பேதமனைத்தினும் கலப்புப்பற்றி ஒன்றாய்த் தோன்றினும், தெளிந்த இப்பொழுது அவ்விரு தன்மையுமின்றி நேரியனும் பரியனுமாய தோர் முறைமையால் உடனாய் நிற்றல் பற்றி ஒன்றினும் பற்றிலனாய் எக்காலத்தும் எப்பொருளிடத்தும் நிறைந்து தோன்றும். (எ - று.)

தெளியும் முறையும் அதன் பயனும் இனிது விளங்குதற் பொருட்டு மேற் கூறி முடித்த கேட்டல் சிந்தித்தல்களையும் "அறியாதே யறிந்து, குறியாதே குறித்து" என அநுவதித்து உடன் கூறினார். தெளிதலைக் கூறும் இவ்விடத்து "கூடாதேவாடாதே" என்றதனால், வினைக் கேட்டல் சிந்தித்தல்களில் ஒரோவிடத்துக் கூடுதலும், வாடுதலும் நிகழுமென்பதாயிற்று. ஆதலினாற்றான், அக்கேட்டல் சிந்தித்தல்களில் இவ்வாறு இனிது விளங்கப்பெறாதாயிற்று. வாடுதல்—அந்தக்கரணங்களோடு கூடாதவிடத்து அதீதத்தைக்கூடி அறிவற்றிருத்தல். வாடாமை என்பது அந்தக் கரணங்களோடு கூடாது சிவஞானத்தால் தலைவனையும், தன்னையும் அறிந்து நிற்றலைக்குறிக்கும். இருப்பையாயின் என்றதனால் அவ்வாறிருத்தல் அருமை என்பது பெறப்படும்.

இச்செய்யுளின் முன் இரண்டடியினையே "பாதிவிருத்தத்தாலிப்பார் விருத்தமாகவுண்மை சாதித்தார்" எனத் தாயுமான சுவாமிகளும், "ஆறாறு தத்துவமு மாணவமும் வல்வினையும், நீறாகமுத்தி நிலை நிற்போர்க்குப், பேறாக,பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியிற்சித்தியிலே,ஓர்விருத்தப்பாதி போதும்." எனச் சிவபோக சாரநூலுடையாரும் அருளிச் செய்வாராயினர். அன்றியும், தாயுமான சுவாமிகள் "மௌனகுரு" என்னுந்தலைப்பின் கீழ் இச்செய்யுளின் நான்கு அடிகளையும் தாமருளிச் செய்த பாதி விருத்தத்திலடக்கி, தமக்கு உபதேசஞ் செய்யப்பட்டது சிவஞான சித்தியே என்பதனைப் பிற்பாதியால் விளக்கியருளுவாராயினர். அச்செய்யுள்வருமாறு:—* "ஐந்துவகையாகின்ற பூத முதலானதமு மடங்கவெளியாக வெளிசெய், தறியாமை யறிவாதிபிரிவாக வறிவார்களறிவாக நின்ற நிலையிற், சிந்தையற நில்லென்று சும்மாவிருத்திமேற் சின்மயானந்த வெள்ளந், தேக்கித்திளைத்து நானதுவாயிருக்க நீசெய் சித்ரமிக நன்றுகாண், எந்தைவடவாற் பரமகுரு வாழ்க வாழவருளிய நந்திமரபு வாழ்க, வென்றடியார் மனமகிழ வேதாகமத்துணிபிரண்டில்லை யொன்றென்னவே, வந்த குருவே வீறு சிவஞானசித்திநெறி மௌனோபதேச குருவே, மந்த்ர குருவே யோகதந்த்ர குருவே மூலன் மரபில் வருமௌன குருவே" என்பதாம். இச்செய்யுளுக்கும் சித்தியார்ச் செய்யுளுக்கு முள்ள சம்பந்தத்தைச் சிறிது காட்டுதும்:—

சித்தியார்	தாயுமானார்
"அருளினாலறியாமையறிவகற்றி"	"ஐந்துவகையாகின்ற... அறியாமை யறிவாதி பிரிவாக அறிவார்கள்"
"அறிவினுள்ளே யறிவுதனை யறியாதே யறிந்து"	"அறிவாகி நின்ற நிலையில்"
"குறியாதே குறித்தந்தக் கரணங்களோடுங்கூடாதே"	"சிந்தையற"
"வாடாதே"	"நில்லென்று"
"குழைந்திருப்பையாயில்"	"சும்மாவிருத்தி"
"பிறியாதசிவன்றானேபிரிந்து தோன்றிப்பிரபஞ்சபேதமெல்லாந் தானாய்த்தோன்றி"	"மேற்சின்மயானந்த வெள்ளந்தேக்கித்திளைத்து"
"யிவையெல்லாமல்லவாகி நெறியாலே நின்றென்றுந்தோன்றிடுவனிராதாரனாயே"	"நானதுவாயிருக்க..............."

* தாயுமானசுவாமிகள் பாடல், மௌனகுரு, சே-உ.

இனி, "வடஆல்பரமகுருவாழ்க" எனவும், "நந்திமரபு வாழ்க" எனவும் கூறியதனால், தாயுமானசுவாமிகட்குச் சைவசந்தான மரபில் வந்த பெரியாரே ஆசிரியரென்பதும், "சிவஞானசித்திநெறி மௌனோபதேச குரு" என்றதனால் இச்சிவஞானசித்தியாரிலுள்ள உண்மைப்பொருளினையே சநகாதிகட்குச் சிவபெருமான் தக்ஷிணாமூர்த்தியாக வீற்றிருந்து அருளியதுபோலச் சொல்லாமற் சொன்னாரென்பதும் பெறப்படுமாறு காண்க. (௩௦.)

நிட்டையாகிய ஞானத்தின் இயல்பும் அதன்கண் நிகழும் அநுபவமும் இவையெனக் கூறுகின்றது.

புண்ணியமே னோக்குவிக்கும் பாவங்கீழ் நாக்கும்
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தி னாலே
நண்ணியஞா னத்தினா லிரண்டினையு மறுத்து
ஞாலமொடு கீழ்மேலு நண்ணானாகி
யெண்ணுமிக லோகத்தே முத்திபெறு மிவன்றா
னெங்கெழிலென் ஞாயிறெமக் கென்றுகுறை வின்றிக்
கண்ணுதற னிறைவதனிற் கலந்து காயங்
கழிந்தக்கா லெங்குமாய்க் கருதரன்போ னிற்பன்.

(கோ-டு) கீழ் நாக்கும் பாவம். மேல் நோக்குவிக்கும் புண்ணியம். இரண்டினையும் புண்ணியனைப்பூசித்த புண்ணியத்தினாலே நண்ணிய ஞானத்தினால் அறுத்து, ஞாலமொடு கீழ்மேலும் நண்ணானாகி, இவன்றான் கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து, ஞாயிறு எங்கு எழிலென் எமக்கு என்று குறைவு இன்றி, எண்ணும் இகலோகத்தே முத்திபெறும். காயம் கழிந்தக்கால் எங்குமாய் கருது அரன்போல் நிற்பன்.

(போ-ரை) வியாபகமாகிய உயிர் அவ்வியாபகத் தன்மையை இழந்து ஏகதேசப்பட்டு நரகத்திற் சென்று துன்பம் அநுபவித்தற்குக் காரணமாகிய பாவத்தையும், சுவர்க்கத்திற் சென்று இன்பம் அநுபவித்தற்குக் காரணமாகிய புண்ணியத்தையும் பொருந்தும். புண்ணிய பாவமாகிய அவ்விரண்டும் ஏகதேசத்தன்மையில் கட்டுப்படுத்தும் தளையேயாதலின், அவ்விரண்டனையும் சிவபிரானை அர்ச்சித்தலாகிய ஞானநூல் ஓதல் முதல்

சிந்தித்தலாகிய ஞானபூசையின் பயனாய் நிகழ்ந்த தெளிதல் என்னும் அரத்தால் அறுத்து, அவ்வாறு அறுத்தலினால் பாவ புண்ணியமின்மையின், பூமி நரக சுவர்க்கங்களில் போக்குவர வாகிய ஏகதேசப்படுதல் இல்லையாய் ஒழிந்து, அஃதொழியவே, கரணங்களின் வயத்தராகாமல் இறைவனது வியாபகத்திற் கலந்து, சூரியன் எவ்விடத்து உதயமாயினும் அதனால் தமக்காவ தோர் பயனில்லை என்று அறிந்தவராய், எவ்வாற்றானும் குறை வின்மையை அடைந்து, கருதுகின்ற இப்பொழுதே சீவன் முத்த ராகி உடம்பு நீங்கப்பெறுங்கால் பெருங்காயமிருந்தெடுத்த கலத் தில் அவ்வாசனை தங்கியிருப்பது போல, சீவன்முத்தராயிருந்த காலத்தும் இடையிடையே வந்து தாக்கிக்கொண்டிருந்த வாசனா மலம் நீங்கி, அழுக்கு நீங்கியவிடத்து ஆடையினது வெண்மை ஆடை முழுதும் விளங்கினாற்போல, உடம்பு நீங்கிய பாமுத்தி நிலையில் தமது வியாபகம் முழுவதும் அறிவு விளங்கப்பெற்று முதல்வனோடு ஒத்து நிற்பர். (எ-று)

எங்குமாய் என்றது சிவனோடு சமமாதற்குரிய பொதுத்தருமம். எனவே, சிவனோடு சமமாதற்குரிய சிறப்புத் தருமம் இல்லையென்றவாறு யிற்று. அச்சிறப்புத்தருமம்—பஞ்சகிருத்தியஞ் செய்தல். தெளிந்தார்க்குக் கண்ணுதல்த னிறைவதனிற் கலந்து நிற்றற்கண் தடையின்மை இனிது விளக்கவேண்டித் தடையாவன புண்ணிய பாவங்களென்பதும், அவை, புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே நண்ணிய ஞானத்தினால் அறுக்கப்பட்டுப் போயிற்றென்பதும் உடன்கூறினார். சிவபிரான்றிருவரு ளிற் கலந்தார்க்குப் பண்டை ஏகதேச வுணர்வு கெட்டுப்போதலின் உடம்பின்கண் நிகழும் இன்பத்துன்பத்திற்கேதுவாகிய உற்பாதம் முதலிய வற்றை நோக்கி வரப்படுங் கவலையின்மையின், "எங்கெழிலென்ஞா றெமக்கென்று குறைவின்றி" என்றார். இக்கருத்துப்பற்றியே, * "தனக் குவமையில்லாதான்றாள் சேர்ந்தார்க் கல்லால்—மனக்கவலை மாற்றலரிது" என எதிர் மறை முகத்தாற் கூறியவாறும். உற்பாதம்—கேட்டையறிவிக் கும் முற்குறி. (௩௧)

---

* திருக்குறள், கடவுள்வாழ்த்து. செ-எ.

ஞானநிட்டையுடையோர் எத்தொழிலைச் செய்யினும், இறைவன்றிருவடியை விட்டுப் பிரியாரெனக் கூறுகின்றது.

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோ ருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன் றில்லை
சீலமிலை தவமில்லை விரதமொடாச் சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமல மில்லை
கோலமிலை புலனில்லை கரண மில்லை
குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருட னுன்மத்தர் பிசாசர்குண மருவிப்
பாடலினெ டாடலிவை பயின்றிடினும் பயில்வர்.

(போ - ரை) மேற்கூறிய ஞானநிட்டையினை உடைய சீவன் முத்தருக்கு இவ்வுலகத்தின்கண் நல்வினை தீவினைகளாகிய இருவினைகளும் இல்லை. வினைகளைச்செய்தாராயினும் ஒரு பலனை நாடுவதுமில்லை. பலனைக்கருதாது வினைகளைச் செய்யுங்காலத்தும் சமயாசாரங்கள், தவம், விரதம், ஆச்சிரம தருமம், தியானபாவனை கள், சித்தசஞ்சலம், தான்நிற்குஞ்சமயத்திற்கேற்ற வேடங்களைத் தரித்தல், விடயங்களை விடுதல் பற்றுதல், அந்தக்கரணங்களை அடக்கல், சத்துவகுணத்தில் மேம்பட்டிருக்கவேண்டுமென்ற நியமம், ஒரு குறியின்கண்ணே மனத்தை நிறுத்துதல், குலாசார தருமத்தில் ஒழுகுதலாகிய இவையாவுமில்லை. இவ்வாறொன்று மின்றிப் பாலரைப்போல இவையெல்லாம் செய்யாதிருப்பினு மிருப்பர். ஒருக்கால் செய்யினும் பித்தர்போல் நியதியின்றி நேர்ந்தவாறு செய்வர். அவ்வாறு செய்யுங்காலத்தும் பேய் பிடிக்கப்பட்டவன்போல் தேகத்தில் தான் என்னும் போதம் அற்றுச் சிவமேதானாக நின்று செய்வர். இதுவன்றிப் பரமானந்த மேலீட்டால் பாடலாடல்களைச் செய்திடினும் செய்வர். (எ-று)

பாலர் சில தொழிலைச் செய்யினும் பயன் கருதாது செய்வர். ஆதலால் அவ்வுவமை மாயாமல நீக்கத்தையும், பித்தர் விருப்பு வெறுப்பின்றி ஒரு தொழிலைச் செய்வராதலால், அவ்வுவமை கன்மமல நீக்கத்தையும், பேய்பிடியுண்டவன் தன்னைமறந்து தொழிற்செய்வனாதலால், அவ்வுவமை ஆணவமல நீக்கத்தையுங் குறித்தவாறறிக.

இவ்வாறன்றி மேலுணவு தேடாமைக்கும், வைதவரையும் வாழ்த்தினவரையும் பகுத்து நோக்காமைக்கும், பிறர் செய்யும் நன்மை தீமைகள் தம்மைத்தாக்காமைக்கும் முறையே பாலரும், உன்மத்தரும், பேய்பிடியுண்டவரும் உவமையாவரென்று கூறுவர். இச்செய்யுளினெடுத்துக் கொண்டது நன்மை முதலியன தானே தவிர்தலேயாம். அதனோடு பொருந்தாமையானும், * "பால ருன்மத்தர் பிசாசரிலெனவும்—உறங்கினோன்கை வெறும்பாக்கெனவும்—தானே தவிராதாஞல்" எனப் பிறவிடத்தும் தவிர்தல் மாத்திரைக்கே அவற்றை எடுத்துக் கூறப்படுதலானும் அவ்வுரை பொருந்தாமை காண்க. பாடலினோடாடலிவைபயிறல் பரமானந்த மேலீடு நோக்கி நிகழ்வதென்க. (௬௨).

இதுவுமது.

தேசமிடங் காலந்திக் காசனங்க ளின்றிச்
செய்வதொன்று போற்செய்யாச் செயலதனைச் செய்தங்
கூசல்படு மனமின்றி யுலாவ னிற்ற
லுறக்கமுணர் வுண்டிபட் டினியிருத்தல் கிடத்தன்
மாசதனிற் றூய்மையினின் வறுமை வாழ்வின்
வருத்தத்திற் றிருத்தத்தின் மைதுனத்திற் சினத்தி
னாசையினின் வெறுப்பினிவை யல்லாது மெல்லா
மடைந்தாலும் ஞானிகடா மரனடியை யகலார்.

(கோ - ௫) ஞானிகள்தாம் தேசம், இடம், காலம், திக்கு, ஆசனங்களின்றி, ஒன்றுசெய்வதுபோல் செய்யாச் செயலதனைச் செய்து, உலாவல் நிற்றல், உறக்கம்உணர்வு, உண்டிபட்டினி, இருத்தல்கிடத்தல், மாசதனின் தூய்மையினின், வறுமை வாழ்வின், வருத்தத்தின் திருத்தத்தின், மைதுனத்தின் சினத்தின், ஆசையினின் வெறுப்பின் இவையல்லாதும் எல்லாம் அடைந்தாலும் அங்கு ஊசல்படும் மனமின்றி அரன் அடியை அகலார்.

(போ - ரை) இன்னும் அச்சிவஞானிகள் ஓர்தேயம், ஓர் இடம், ஓர் காலம், ஓர்திக்கு, ஓர்ஆசனம் முதலிய நியமமின்றிச் செய்தற்கெளிய உலக காரியங்களை உலகர் செய்வது போல்,

* சங்கற்பநிராகரணம். செ-௨.

செய்தற்கரிய நிட்டை முதலியவற்றைச் செய்து, போக்குவரத்துக்கள், உறங்குதல் விழித்தல்கள், உண்ணுதல் உண்ணாமைகள், இருத்தல் கிடத்தல்கள், களங்கம் பரிசுத்தங்கள், வறுமை செல்வங்கள், துன்ப இன்பங்கள், புணர்ச்சி கோபங்கள், விருப்பு வெறுப்புக்களாகிய இவையாவுமின்றி, விகாரமுறுதற்கேதுவாகத் தம்முள் மாறுபட்ட பல தொழில்களைச் செய்தாராயினும், அவ்விடத்தே அவைபற்றிச் சிறிதும் விகாரப்படுதலின்றி முதல்வன் றிருவடியைவிட்டு நீங்கார். அவ்வாறு விகாரமான தொழில்களைச் செய்தும் முதல்வன்றிருவடியைவிட்டு நீங்காதிருத்தல் எது போலுமெனின், வாயுவானது வாசனையுடனே கூடியமிருதுவான தென்றலாகவும், இதற்குமாறான சூறாவளியாகவும் சரிக்கினும் ஆகாயத்தைவிட்டு நீங்காதது போலாம். (எ-று)

செய்யாச் செயல்—பிறர் செய்தற்கரிய செயல். அதனைச் செய்தற்கு வேறொரு நியதியும் வேண்டாவென்ப துணர்த்துதற் பொருட்டு, "தேச மிடங் காலந் திக்காசனங்களின்றி" என்றார். அடைந்தாலும் என்ற உம்மை விகாரஞ் செய்தலைக் குறித்த சிறப்பு. "உவர்தோன்றி வாழ்தொழில வாயினும் மயிலைதீஞ் சுவையுப்பிற் சிவணாதாங்கு" என்றவிடத்து தொழில வாயினும் என்றாற்போல. இதன் கருத்தாவது:—"மீன்கள் கடலிற் றோன்றி வாழும் தொழில்களையுடையவாயினும் இனிய சுவையைத் தரும் உப்போடு கூடாதவாறு" என்பதாம். இது உம்மைக்கு மாத்திரமின்றித் தொழில் பல செய்தும் அதனால் பந்தமுறாமைக்கும் உவமையாகும்.

இதனால், பிராரத்த கன்மம் நானாபேதமாகையால் ஞானிகளுட் சிலர் கோபமுடையவராகியும், சிலர் சாந்தமுடையவராகியும், சிலர் வைராக்கிய முடையவராகியும், சிலர் ஆசையுடையவராகியும், சிலர் போகாநுபவ முடையவராகியும் இருப்பாராதலின், சீவன் முத்தருடைய இலக்கணம் இவ்வாறுதானென்று வரையறுத்துக்கூற முடியாதென்பதறிக. (௩௩)

ஞானநிட்டையில் நிலைபெறுதார் அந்நிட்டையில் நிலைத்தற்குச் செய்யும் உபாயம் இதுவெனக் கூறுகின்றது.

இந்நிலைதா னில்லையே லெல்லா மீச

னிடத்தினி னு மீசனெல்லா விடத்தினி னு நின்ற

வந்நிலையை யறிந்தந்தக் கரணங்க ளடக்கி
யறிவதொரு குறிகுருவி னருளினு லறிந்து
மன்னுசிவன் றனையடைந்து நின்றவன்றனுலே
மருவுபசு கரணங்கள் சிவகரண மாகத்
துன்னியசாக் கிரமதனிற் றுரியா தீதந்
தோன்றமுயல் சிவாநுபவஞ் சுவாநுபூ திகமாம்.

(கோ - ரு.) இந்நிலைதான் இல்லையேல் ஈசன் எல்லா இடத்தினி னும் எல்லாம் ஈசனிடத்தினும் நின்ற அந்நிலையை அறிந்து, அந்தக்கரணங் களடக்கி, குருவினருளினுல் நின்று, அறிவது ஒருகுறி அறிந்து, அவன் றனுலேமன்னு சிவன்றனை அடைந்து, மருவுபசுகரணங்கள் சிவ கரண மாக, துன்னிய சாக்கிரமதனின் துரியாதீதம் தோன்ற முயல். சிவாநு பவம் சுவாநுபூதிகமாம்.

(போ - ரை.) மேற்கூறிய முறையானே அகம், புறம் என்னும் பேதமின்றி எவ்விடத்தும் ஏக நிலையாகக் கண்டு இறை வன் நிறைவில் அழுந்துவதாய நிட்டையினை மேவப்பெறுது பண்டைப் பழக்க வயத்தால் புறத்தே பிரபஞ்சம் காட்சிப்பட வருமாயின், அப்பிரபஞ்சத்தைக் காணும்பொழுதே இறைவன் அப்பிரபஞ்சத்திற்கு உள்ளும் புறமுமாய் நிற்கும் நிலைமையை உடையன் எனக் காணவேண்டும். அவ்வாறு காண்டல் கூடா தாயின், மனதிகளடக்கிக் குருவருளால் அகத்தே திரும்பி ஒரு குறியின்கண்ணே அறிவை நிறுத்தி இறைவனை அறிந்து, அவ்வா றறிகின்ற முறையில் நிலைபெற்ற அவ்வியல்பினை அறிந்து, அங் ஙனம் அறியுங்கால் அறியும் பசு கரணங்களெல்லாம் சிவகரணமா கப் பேணி, இவ்வாறு கருவிகளோடு தொழிற்பட்டு நிற்பதாகிய சகல சாக்கிரத்திற்றனே கருவி ஒன்றனேடுங் கூடாத நின்மல துரியாதீத நிலை கைகூடும்படி முயலவேண்டும். முயன்றால் சிவாநுபவத்தைத் தமதாகக் கொண்டு அநுபவிக்கலாம். (எ-று.)

அந்நிலையை அறிந்து என்றது, அண்டத்தில் உள்ளும் புறம்புமாய் நிற்கும் நிலையை அறிதலையெனவும், அறிவதொருகுறி குருவினருளினு லறிந்து என்றது, அவ்வறிவிற் கேதுவாய்ப் பிண்டத்தில் ஒரு குறியின்

வைத்தறிதலை யெனவும் உணர்க. எல்லாப் பொருளும் இறைவனிடத்தி லிருக்குமென்றல் உள்ளாதலையும், இறைவன் எல்லாப் பொருளினிடத்தும் இருப்பனென்றல் புறமாதலையுங் குறித்தவாறும். சிவன் என்பது சிவனியல்பைக் குறித்தலின் ஆகுபெயர். அகரச் சுட்டு வருவித்து உள்ளும் புறமுமாய் நின்ற அவ்வியல்பு என உரைக்க. முயல் என்பது முயல் வாயாக என்னும் பொருள் குறித்த முன்னிலையேவல்.

சிவாநுபவம், சுவாநுபூதிகம் என்பது, சிவனது அநுபவம் தனது அநுபவம் என விரிதலின், அவ்விடத்து ஆறும்வேற்றுமை யுருபு தொக்கு நின்றது. அவ்வுருபு, சிவனை அநுபவிப்பது, தான் அநுபவிப்பது என்னும் பொருள் குறித்தலின், முறையே செயப்படு பொருளினும், வினைமுதற் பொருளினும் வந்த காரகமாம். இது அமிழ்தவுண்டி, கடவுளருண்டி என்றவிடத்து அமிழ்தினதுவுண்டி கடவுளரதுவுண்டி என விரிந்து, ஆறுவது, அமிழ்தை யுண்ணுதல், கடவுளருண்ணுதல் எனப் பொருள் தருதல்போலாம். பயனும், அதனை யநுபவிக்குங் கருத்தாவும் தொழில் முதனிலையாதலின் காரகமாதல் காண்க. காரகம் தொழில்முதனிலை என்பது ௨௲ சூத்திரம், ௨௨-வது செய்யுளுரையிலுங் கூறப்பட்டது.

சுவாநுபூதி என்பது சுவ அநுபூதி எனப் பிரித்துரைக்கப்படும். சுவ என்னும் வடமொழிக்கு தன் என்பது பொருள்.

இச்செய்யுளால் அந்த ஞானநிட்டை மேவப் பெறுதார்க்கு அந்நிட்டை பெறுதற்குரிய உபாயங் கூறப்பட்டது. உபாயம்—ஈசன் எல்லாவிடத்தும் நின்ற நிலையும், எல்லாம் ஈசனிடத்து நின்ற நிலையும் அறிதல் முதலாயின. (௯௪.)

ஞானநிட்டையில் முயலுபவரின் பெருமை இதுவெனக் கூறுகின்றது.

சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்தவர்க ளுலகிற்
சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்க ளிவர்கள்
பாக்கியத்தைப் பகர்வதுவெ னிம்மையிலே யுயிரின்
பற்றறுத்துப் பரத்தையடை பராவுசிவ ரன்றே
வாக்குமுடி கவித்தரசாண் டவர்களரி வையரோ
டனுபவித்தங் கிருந்திடினு மகப்பற்றற் றிருப்பர்

நோக்கியிது புரியாதோர் புறப்பற்றற் றூது
நுழைவர்பிறப் பினின்வினைக ணுங்கி டாவே.

(கோ - டு.) அவர்கள் ஆக்குமுடி கவித்து அரசாண்டு எனவும், வினைகள் நுங்கிடாவே பிறப்பினின் நுழைவர் எனவுங் கூட்டுக.

(போ - ரை.) மேற்கூறியவாறு சாக்கிரத்தில் நின்று கொண்டே பசு கரணங்களெல்லாம் சிவகரணமாகக்காரணங் கடந்த துரியாதீதத்தைப் பயில்கின்றவர்கள் இவ்வுலகின்கண்ணே கருவிகளினின்றும் நீங்கி நிட்டை பொருந்தினவரோடொப்பச் சிறந்தவரே யாவர். இவர்கள் இந்நிலையை அடைவதற்கு முற் பிறவியிற் செய்த சிவ புண்ணியப் பேற்றை என்னென்று சொல்வது! இவ்வுலகத்தில் உயிர்ப்பற்று நீங்கிச் சிவத்தைப்பற்றி நிற்கையால் இவர்கள் சஞ்சரிக்கின்ற சிவமேயாவர். இத்தகையார் ஆக்கப்பட்ட முடியினை அணிந்து அரசு புரியினும், மகளிரோடு கூடி இன்புற்றிருந்திடினும் அகப்பற்று நீங்கினவரேயாவர். ஆதலின் உண்டு உடுத்துப் பூசி முடித்துச் செய்யுந் தொழிலொப்புமை பற்றி அவரை உலகத்தாரோடு வைத்தெண்ணக் கூடாது. ஆராய்ந்து இவ்வாறு அகப்பற்று நீங்காதோர் புறப்பற்று நீக்கமாகிய துறவு பூண்டாலும் வினைகள் கெடாது மேலும் வினை ஏறுதலால் பிறப்பினை அடைவர். (எ—று.)

பராவுதல்—சஞ்சரித்தல். உயிர்ப்பற்று—உயிர்க்குப் பற்றுக்கோடாகிய உடலை யானெனும் பற்று.

கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னும் நான்கும் உண்மை ஞானமாகும். அவற்றுள், கேட்டலை இச்சூத்திரத்தும் சிந்தித்தலை ௯-ஞ் சூத்திரத்தும், தெளிதலை ௧௦-ஞ் சூத்திரத்தும், நிட்டையை ௧௧-ஞ் சூத்திரத்தும் முறையே விரித்துக் கூறுகின்றார். ஆயினும், நான்கும் ஞானமாதல்பற்றி இச்சூத்திரத்தில் சிந்தித்தல் முதலியவற்றையும் கேட்டலுடன் வைத்து ஒருவாற்றாற் றெகுத்தோதினர். இவ்விடத்துத் தொகுத்துக் கூறுதலும், பின்னர் விரித்துக் கூறுதலுமாகிய வேற்றுமையுள்ளதால் கூறியதுகூற லன்மை யுணர்க. (௫௫.)

இரண்டாம் அதிகரணம் முடிந்தது.

மூன்றும் அதிகரணம்.

துன்னிய ஐம்புலவேடர் சுழலிற்பட்டுத் துணைவனையு
மறியாது துயருறுந் தொல்லுயிர்” என்பது.

சிவகரணமாய் நின்றவிடத்துச் சிவனைக் காணக் கூடுமன்றிக் கரணங் கடந்த விடத்துச் சிவனைக் காண்பமெனன்பது பொருந்தா தென்பாரை மறுத்துரைக்கின்றது.

கருவிகழிந் தாற்காணு ரொன்றுமெனிற் காணர்
காணுதார் கன்னிகைதான் காமரதங் காணுண்
மருவியிரு வரும்புணர வந்த வின்பம்
வாயினுற் பேசரிது மணந்தவர்தா முணர்வ
ருருவினுயிர் வடிவதுவு முணர்ந்திலர்காண் சிவனை
யுணராதா ருணர்வினு லுணர்வதுகற் பனைகா
ணருள்பெறினவ் விருவரையு மறிவிறந்தங் கறிவ
ரறியாரேற் பிறப்பும்விடா தாணவமு மறுதே.

(கோ - ரு.) மருவி இருவரும் புணரவந்த இன்பம் வாயினுற்பேச அரிது. மணந்தவர் தாம் உணர்வர். காமரதம் கன்னிகைதான் காணுள். அருள்பெறின் அவ்விருவரையும் அறிவு இறந்து அங்கு அறிவர். காணுதார் காணுர். அறியாரேல் உருவின் உயிர் வடிவதுவும் உணர்ந்திலர்காண். உணராதார் உணர்வினுல் சிவனை உணர்வது கற்பனைகாண். கருவிகழிந் தால் ஒன்றுங் காணுரெனின், பிறப்பும் விடாது ஆணவமும் அறுதே.

(போ - ரை.) தலைமகனும் தலைமகளும் கூடி அநுபவித்த இன்பம் வாக்காற்சொல்ல முடியாதாயினும், அநுபவித்த அவர் அறிவர். அவ்வின்பத்தினைப் பக்குவமில்லாத கன்னிகை அறியாள். அதுபோல, அதிதீவிரதர பக்குவர்கள் திருவருளைப்பெற்று விஷய அறிவு இறந்து தம்மையுந் தலைவனையும் அறிந்து மேற் கூறியவாறு இன்புறுவர். அறியமாட்டாத அபக்குவர் அவ்வின்

பத்தினை அறியார். அதனால், அவர்க்கு உணர்த்தும் வழியு மில்லை. எதனாலெனின், பல நிறங்களால் மயங்கித் தன்னொளி யிழந்த படிகம்போலக் கலையாதி மண்ணந்தமாகிய உருவால் மயங்கி ஆன்மசொரூபமாகிய தன்னை உணராமையாலென்க. அவ் வாறு பிரபஞ்சக்காட்சி, தன்னை யுணரவொட்டாது தடைசெய்யு மென்பதை உணராதார், பிரபஞ்சத்தை அறியும் கரணங்களைச் சிவகரணங்களாக மாற்றிச் சிவனையும் அறிவேமென்று கூறுவர். அக்கூற்று வெறும் பாவனையேயன்றிச் சிவனைக் கரணத்தாலறி தல் கூடாது. கரணங்கள் யாவுங் கடந்து அருளினால் சிவனை யறியப்பெறாராயின் கரணங்களாலுண்டாகிய பிரபஞ்சக்காட்சி நீங்காது; அக்காட்சி நீங்காத அதனால் பிறப்பிற்குக் காரணமா கிய ஆணவமலமும் அறாது. (எ—று.)

பசுகரணங்களைச் சிவகரணங்களாக மாற்றி அச் சிவகரணங்களாற் சிவனை யறிதல் கூடும் என்பவர் சிவசங்கிராந்தவாதிகள். சிவனருளா லன்றிச் சிவனையறிய முடியாதென அவர் மறுக்கப்பட்டார்.

அவ்வாறாயின், * "பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப்பாடிய தும், காலனை யன்றேவிக் கராக்கொண்ட, பாலன், மரணந் தவிர்த்தது வும் மற்றவர்க்கு நந்தங், கரணம் போலல்லாமை காண். என்பது முதலிய திருவாக்குக்களால் சிவகரணங்களாற் சிவனையறிதல் கூடுமென்பது பெறப் படவும், இவ்விடத்து அதனை மறுத்தது முரணாதோவெனின், சிவகரணங் களாலறியப்படுவது சிவனது தடத்த நிலையும், சிவனருளாலறியப்படுவது சிவனது சொரூப நிலையுமாதலின், இவ்விடத்தில் சொரூபநிலை சிவகரணங் களாலறியப்படாதென்றது பற்றி முரணாமைகாண்க. மேல் ௩௪-வது செய்யுளில், "பசு கரணங்களெல்லாம் சிவகரணமாக ஈசன் நின்ற நிலையை யறிந்து முயல்" என்றதனானும் இக்கருத்து வலியுறுத்தப்படும்.

நாயகன்நாயகிகள் அநுபவித்த இன்பம் சொல்ல முடியாதென்பதும், கன்னிகை காமரதங்காணாள் என்பதும், சிவாநுபவத்தைச் சொல்லமுடியா தென்பதற்கும், அபக்குவர்களுக்கு அறிவிக்க முடியாதென்பதற்கும், எடுத் துக்காட்டுவமையாயின. இவ்விடத்து உரு என்றது கலையாதி மண்ணந்த மாகிய கருவிக்கூட்டத்தை. உருவின் என்றவிடத்து இன் என்னும் ஐந் தாம் வேற்றுமை உருபு எதுப் பொருளைக் குறித்தது. வடிவது என்ற

---

* திருக்களிற்றுப் படியார், சே-கஉ.

விடத்து அது பகுதிப்பொருள் விகுதி. சிவனே என்றவிடத்து சிவனையும் என்னும் பொருள்பட உயர்வு சிறப்பும்மை தொக்கு நின்றது.

உணர்ந்திலர்காண், கற்பனைகாண் என்ற விடத்துள்ள காண் இரண்டும் கட்டுரைக் கண்வந்த அசைநிலை. கருவிகழிந்தால் என்றவிடத்து ஆல் அசை. ஒன்றுங் காணுரென்பது சிவனையின்றிப் பிறிதொன்றனையுங் காணுரென்பதாம்.

இச்செய்யுளால் பசுகரணங்கள் சிவகரணமாகப் பெற்றவர் அதன் மேலுங் கரணங்கடந்த அதீதத்தைச் செய்தற்கு அறிவு செல்லுதல் எவ்வாறு கூடும் என்னும் சிவ சங்கிராந்த வாதிகளை சிவகரணத்தால் சிவனை யறிவேனென்றல் கற்பனையென மறுக்கு முகத்தால் மூன்ருங்கூறு வலியுறுத்தப்பட்டது. (௩௬)

மூன்றும் அதிகரணம் முடிந்தது.

நான்காம் அதிகரணம்.

"அவரினீக்கி மலமகற்றித் தானுக்கி மலரடிக்கீழ் வைப்பன்." என்பது.

கரணங் கடத்தற்கு உபாயம் இதுவெனக் கூறுகின்றது.

பன்னிறங்க ளவைகாட்டும் படிகம்போ லுள்ளம்
பலபுலன்க ணிறங்காட்டும் பரிசு பார்த்திட்
டிந்நிறங்க ளென்னிறமன் றென்று தன்ற
னெழினிறங்கண் டருளிஞ லிந்நிறத்தின் வேருய்ப்
பொய்ந்நிறவைம் புலநிறங்கள் பொய்யெனமெய் கண்டான்
பொருந்திடுவன் சிவத்திஞெடும் போதான் பின்னை
முன்னிறைநீர் சிறைமுறிய முடுகி யோடி
முந்நீர்சேர்ந் தந்நீராய்ப் பின்னீங்கா முறைபோல்.

(கோ-டு.) தன்றன் எழில் நிறம் இந்நிறத்தின் வேருய் அருளினுல் கண்டு பொய்நிற ஐம்புல நிறங்கள் பொய்யென மெய்கண்டான் சிவத்தி

ளொடு பொருந்திடுவன். முன்னிறை சிறை நீர் முறிய முடுகி ஓடி முந்நீர் சேர்ந்து அந்நீராய்பின் நீங்கா முறைபோல் பின்னைப் போதான்.

(போ - ரை.) காணங்களில் நின்று ஆன்மா நீங்குமாறு எவ்வாறெனின், பளிங்கு, தன்னை அடுத்த பல நிறங்களினியல் பையே தன்னிடத்துக் காட்டி நிற்கும். இது அப்பளிங்கிற்குப் பொது வியல்பு. இதுபோல ஆன்மாவும் தன்னால் சாரப்பட்ட கருவிகளினியல்பே தன்னிடத்து விளங்க அதுவாய் நிற்கும். இது ஆன்மாவிற்குப் பொது வியல்பு. இப்பொது வியல்பினை முன்னர்ச் சிந்தித்தறிந்துகொண்டு பின்னர்ப் பல நிறங்களின் வேறுகப் படிகத்திற்குச்சிறப்பான ஒளி உளதாயினாற்போல, இப் பொது வியல்பைத் தன்னியல்பு அன்றென்றும், தன்னியல்பா கிய சிறப்பியல்பு இப்பொது வியல்பின் வேறாய் உண்டென்றும் அருளால் அறிந்து பொதுவியல்பாகிய அக்கருவி ஞானம் நீங்கும் படி தன்னியல்பாகிய உண்மையை உணர்ந்தால் அத்தன்னியல் பில் விளங்கித் தோன்றும் சிவத்தைப் பொருந்துவன். அவ்வாறு பொருந்தினவன் தடைப்பட்ட நீர் தடை நீங்கியவிடத்து விரைந் தோடிக் கடலின்கட்சென்று அக்கடல் நீராய் அடங்கிப் பின் மீளாதவாறுபோல, அக்கருவிக் கூட்டத்தில் மீளச்சேரான். ( )

கருவிகள் பிரபஞ்சக் காட்சியைத் தந்து அதனால் ஆணவ மலம் நீங்காதென மேலைச் செய்யுளில் கூறப்பட் டமையால், அக்கருவிகளினின் றும் நீங்கி அருள் பெறுதல் எவ்வாறு கூடுமென்று வருந்துவார்க்கு, ஆன் மாவின் பொதுவியல்பு சிறப்பியல்பை யுணர்தல் கருவிகளினின்று நீங்கு தற்கு உபாயம் என்று இச்செய்யுளாற் கூறினர்.

தடை நீங்கிய நீர் கடலில் சேர்வதற்குத் தடையொன்று மின்மை விளக்கவேண்டி, "முடுகியோடி" என்றார். (௩௭)

சிவத்தைப் பொருந்தினவன் காணங்களில் மீளவரினும் இழுக்கில்லை என்பாரை மறுத்துக் காணங்களோடு கூடில் சிவன் அறியப்படானென்றுகூறி "போதான்பின்னை" என மேலைச் செய் யுளிற் கூறியதை வலியுறுத்துகின்றது.

எங்குந்தா னென்னினுமெய்த வேண்டா
வெங்குமில னென்னின்வே றிறையு மல்ல
னங்கஞ்சே ருயிர்போல்வ னென்னி னங்கத்
தவயவங்கள் கண்போலக் காணு வான்மா
விங்குநா மியம்புந்தத் துவங்களின்வைத் தறிவ
திறைஞானந் தந்துதா ளீதல்சுட ரிழந்த
துங்கவிழிச் சோதியுமுட் சோதியும் பெற்றாற்போற்
சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே.

(கோ - ரு.) இங்கு ஆன்மா நாம் இயம்பும் தத்துவங்களின் வைத்து அறிவது.

(போ - ரை.) உயிருங் காரணங்களுமாகிய எல்லாஞ் சிவமேயாதலால் கருவிகளோடு கூடினநிலை இழுக்கில்லையெனின், எல்லாஞ் சிவமேயாயின் நாம் அவனையடைய வேண்டாம். எல்லாஞ் சிவமில்லையாயின் அவனது வியாபகத்திற்குக் குறையாய் முடியும் ஆதலால், இவ்விருவகையுமின்றி உடம்பின்கண் உயிர்போல எல்லாவற்றின் கண்ணும் இறைவன் கலந்து நிற்பன். உடம்பின்கண் உயிர் கலந்து நிற்பினும், கண்ணிந்திரியம் நீங்கிய ஏனைய செவி முதலிய நாலிந்திரியங்களும் தன்மாட்டு வந்த விடயங்களைமட்டும் அறியும். கண்ணிந்திரியம் தன்மாட்டு வராத விடயங்களையும் சென்றறியும். எல்லா இந்திரியங்களோடும் உயிர் கலந்து நின்றும் இந்திரியங்களின் தொழிலில் வேற்றுமை காணப்படுதல் போல, எவற்றுடனும் இறைவன் கலந்து நிற்பினும் ஆன்மாவினிடத்து விளங்கித் தோன்றுதலும், கருவிகளிடத்து விளங்கித் தோன்றாமையுமாகிய வேற்றுமை அறிந்து கொள்ளப்படும். ஆதலின், விடயங்களைவிட்டுத் திருவடிகளைப் பெறவேண்டும். அங்ஙனம் பெறுதல், ஒளியிழந்த கண் ஒளியிழத்தற் கேதுவாகிய மாசு நீங்கியவிடத்துத் தன்னொளியையும், தனக்குள்ளாய் நின்று செலுத்தும் ஆன்ம ஒளியையும் பெற்றாற் போலும். அவ்வாறு கருவிக் கூட்டங்களினின்று நீங்கிய ஆன்மாவிற்குத் தானும்,

தன்னறிவிற்குள்ளாய் நிற்கும் இறைவனும் விளங்கித் தோன்றுமாதலின், இறைவன் கருவிகளோடு கூடிய விடத்துத் தோன்றான். (எ-று)

ஆன்ம ஒளியைக் கண் பெறுதலாவது, ஆன்மாவின் அறிவு கண் வழியாக விளங்கப் பெறுதல்.

இறைவன் ஒப்ப நிற்பினும் ஏகதேசப் பொருள் ஏகதேசப் பொருளே; வியாபகப் பொருள் வியாபகப் பொருளே என்று கூறவேண்டி, இந்திரியங்களையும், ஆன்மாவையும் உவமையாக எடுத்துக்காட்டி அவ்வாறே ஆன்மாவினும் தத்துவத்தினும் வைத்தறிவது என்றார்.

நாம் என்னும் பிறரை உளப்படுத்திய தன்மை இவ்விடத்தில் இழித்தற் குறிப்புத்தோன்ற நீ என்னும் முன்னிலைக் கண் வந்தது. * "நாமரையாமத் தென்னோ வந்து வைகி நயந்ததுவே" என்றாற் போல.

அறிவது என்பது அறிந்து கொள்ளப்படும் என்னும் வியங்கோள்ப் பொருள் குறித்தது. † "கொள்ளப்படாது மறப்பது" என்றவிடத்து மறப்பது என்றாற் போல.

இங்கு என்பது போல என்னும் பொருள் குறித்தது. ஈதல் என்பது ஈயப்பெறுதலைக் குறித்தலின், ஆகுபெயர்.

ஒளி இழந்த என்றவிடத்து இழந்த என்பது, இழந்தன என்னும் பொருள்படும்படி, அன்சாரியை பெறாது அகர ஈறாய் நின்ற பலவறிசொல். அது, விழிகளையுணர்த்தி, பெற்றாற்போல் என்னும் பயனிலை கொண்டது. துங்கவிழிச்சோதி என்றது மாசு நீக்கத்தைக் குறித்தது. (௯௮)

சிவத்தைப் பொருந்தினவர் பழைய வாசனையால் கரணங்களைக்கூட நேரில் முன்னர் ஒன்பதாம் சூத்திரத்திற் கூறப்படும் உபாயத்தினால் வாசனையை நீக்கவேண்டுமெனக் கூறுகின்றது.

பாசபடு குட்டத்திற் கல்லினைவிட் டெறியப்
 படும்பொழுது நீங்கியது விடும்பொழுதிற் பரக்கு
மாசுபடு மலமாயை யருங்கன்ம மனைத்து
 மரனடியை யுணரும்போ தகலும்பின் னணுகு

* திருக்கோவையார், செ-௧௬௪.

† மேற்படி செ-௮௭.

நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதே தாங்கு
நினைவுடையோர் நின்றிடுவர் நிலையதுவே யாகி
யாசையொடு மங்குமிங்கு மாகியல மருவோ
ரரும்பாச மறுக்கும்வகை யருளின்வழி யுரைப்பாம்.

(கொ - டு.) நேசமொடும் திருவடிக்கீழ் நீங்காதே தாங்கும் நினைவுடையோர் நிலையதுவே யாகி நின்றிடுவர் எனவும், படுகுட்டத்தில் கல்லினை விட்டெறியப்படும் பொழுது நீங்கி அதுவிடும்பொழுதில் பரக்கும் பாசி எனவுங் கூட்டுக.

(போ - ரை.) சிவபெருமானிடத்து நீங்காத அன்போடு அச்சிவத்தைப்பொருந்தி, பொருந்தி நிற்கின்றோமென்ற நிலையினையுங் கடந்த அதீதத்தை அடைய விரும்புவோர் அச்சிவமாய் நிற்பர். ஓரோவிடத்துப் பாசி பொருந்திய தடாகத்தில் கல்லெறியும் போது பாசி நீங்கியும் கல்லெறியாத போது பாசி படர்ந்தும் காண்பதுபோல, சிவபெருமான் திருவடியை உணரும்போது மலமாயாகன்மங்கள் நீங்கியும், அத்திருவடியை உணராதபொழுது அச்சமயம் பார்த்து மலமாயா கன்மங்கள் வந்து தலைப்பட்டும் நிற்கும். அவ்வாறு மலமாயா கன்மங்கள் தலைப்பட்டு நிற்குமாயின், அந்நிலை பழைய வாசனைபற்றி நிகழ்வதாம். அவ்வாசனையால் சிவத்தினிடத்தும், கருவிகளிடத்தும் நிலைபெறாது சுழல்பவர், அவ்வாசனையைப் போக்கும் வண்ணம் முன்னர் ஒன்பதாம் சூத்திரத்திற் சொல்லப்படும் உபாயத்தைக் கடைப்பிடித்து, அநுட்டித்து அவ்வாசனையை நீக்கிக்கொள்ள வேண்டும். (எ-று)

இவை மூன்று செய்யுளானும், நாலாங் கூற்றுப் பொருள் வலியுறுத்தப்பட்டது.

இவ்வெட்டாஞ் சூத்திரத்துள், துயருறுந் தொல்லுயிரென்றதனுல் துயர் நீங்குதற்பொருட்டுப் பதியையடைய வேண்டுவது கடமையென மூன்றாமதிகாரணத்தானும், அடைதற்குச் சிறந்த சாதனம் ஞானமென இரண்டாமதிகாரணத்தானும், ஞானங் குருவால் வருமென முதலதிகாரணத்தானுங் கூறி, ஞானத்தைக் கேட்ட அறிவிற்குப் பயன் சிவரூபமென நான்காமதிகாரணத்தாற் கூறியவாறு காண்க.

குருவால் ஞானந்தோன்றுமெனவும், ஞானத்தின் பாகுபாடும், ஞானத்தால் ஐம்புலவேடரினின்று நீங்குதல் கூடுமெனவும், அங்ஙனம் நீங்குதலால் சிவரூபங்காட்சிப்படுமெனவும் கூறவேண்டு மென்னும் முறைபற்றி அதிகாரணம் அமைத்தனரென அறிந்து கொள்க. (௬௬)

நான்காமதிகரணம் முடிந்தது.

எட்டாஞ் சூத்திரம் முடிந்தது.

ஆகத் திருவிருத்தம் உ௬௬.

ஒன்பதாஞ் சூத்திரம்.

சாதிக்குமுறை.

மேலைச் சூத்திரத்தால் பதிப்பொருளை அடைவதே பேறு; அப்பேற்றிற்குச் சிறந்த சாதனம் ஞானம்; அந்த ஞானம் ஞானசிரியனால் உண்டாமென்றுணர்ந்த பின்னர், ஞானத்தை அநுட்டிக்கும் முறை எவ்வாறென்னும் ஆசங்கை நிகழுமன்றே; அந்நிகழ்ச்சிபற்றி அநுட்டிக்கும் முறையைக் கூறுதற்கு ஒன்பதாஞ் சூத்திரம் எழுந்தது.

அநுட்டிக்கும் முறை தெரியாத விடத்து அநுட்டிக்க முடியாதாதலின், அநுட்டிக்கு முறையை வகுத்து இச்சூத்திரத்தாற் கூறுகின்றார். அநுட்டித்தல்—சிந்தித்தல்.

பதிஞானத்தாற் சிவனையடைதல் கூடுமெனவும், அப்பதிஞானத்தில் நிலை பெறவொட்டாது செய்யும் வாசனையைக் கெடுக்கும் உபாயங்கள் இவையெனவும் சூத்திரப்பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது.

பாசஞா னத்தா லும் பசுஞானத் தா லும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே
நேசமொடு முள்ளத்தே நாடிப் பாத
நீழற்கீழ் நில்லாதே நீங்கிப் போதி
னுசைதரு மூலகமெலா மலகைத்தே ராமென்
றறிந்தகல வந்நிலையே யாகும் பின்னு
மோசைதரு மஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்க
வுள்ளத்தே புகுந்தளிப்ப னூனமெலா மோட.

(கோ—டு) பதிஞானத்தாலே உள்ளத்தே நாடி நேச மொடும் பாத நீழற்கீழ் எனவும், பின்னும் ஊனமெலாமோட ஓசைதரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க உள்ளத்தே புகுந்து அளிப்பன் எனவுங் கூட்டுக.

(பொ—ரை) கருவிகளோடுகூடி அறிவதாகிய பாசஞானத் தாலும், நான் பிரமமென்னும் பசு ஞானத்தாலும், எய்துதற்கரிய பரசிவனை அடையமுடியாது. அவ்விருஞானங்களாலும் அடைய முடியாத பரம்பரனை அவனது திருவடிஞானமாகிய பதிஞானம் ஒன்றானேதன்னறிவின் கண் வைத்தாராய்ந்து அன்புடன் அத் திருவடி நீழலின் கீழ் நீங்காதே தூங்கப்பெறவேண்டும். அங்ஙனம் நிற்கப்பெறாது பிரபஞ்சத்தை நாடவருமாயின், பற்றுச் செய்தற்கேதுவாகிய அப்பிரபஞ்சம் யாவும் கானற் சலத்தின் தன்மைபோல அசத்திய மெனக் கண்டு கழிப்பின் அந்நிலைகைகூடும். அங்ஙனம் பாசமுற்றும் நீங்கிய பின்னரும் பண்டைப் பயிற்சிவயத்தால் வாசனைபற்றிச் சலிப்பு உண்டாமாயின், சலியாதிருத்தற் பொருட்டு, பிரபஞ்ச நீக்கமும், சிவப்பேறுந் தருவதாகிய முத்தி பஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்கவேண்டும். அங்ஙனம் உச்சரிப்பின் முன் விளங்கித் தோன்றியவாறே உள்ளத்தின் கண் ஞானத்தை விளக்கிச் சிவமாகிய தன்னைத் தருவன். (எ-று.),

இவ்விடத்து ஊனம் என்றது வாதனை மலத்தை. நில்லாதே நீங்கிப் போதின் என்ற அநுவாதத்தால் நீங்காதே தூங்கப்பெறவேண்டுமென்பது விதிக்கப்பட்டதாயிற்று.

இச்செய்யுள் முதனூல் ஒன்பதாஞ் சூத்திரம் போல முக்கூற்றையு டையது. அவற்றுள்,

முதற்கூறு:—பாச ஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம் பரனைப் பதி ஞானத்தாலே நேசமொடு முள்ளத்தே நாடிப்பாத நீழற்கீழ் (நிற்க.)

இரண்டாங்கூறு—நில்லாதே நீங்கிப் போதி ஞசைதரு முலக மெலா மலகைத்தேரா மென்றறிந்தகல அந்நிலேயே யாகும்.

மூன்றாங்கூறு—பின்னும் ஓசைதரு மஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்க உள்ளத்தே புகுந்தளிப்ப னூனமெலா மோட. (க)

முதலதிகரணம்.

பாசஞானத்தாலும்......பாதநீழற்கீழ் (நிற்க-) என்பது.

பாசஞானம், பசுஞானம், பதிஞானங்களின் இலக்கணம் இவை எனக் கூறுகின்றது.

வேதசாத் திரமிருதி புராணகலை ஞானம்
விரும்பசபை வைகரியா தித்திறங்கண் மேலா
நாதமுடி வானவெல்லாம் பாச ஞானம்
நணுகியான் மாவிவைகீழ் நாட லாலே
காதலினா னன்பிரம மென்னு ஞானங்
கருதுபசு ஞானமிவ னுடலிற் கட்டுண்
டோதியுணர்ந் தொன்றொன்று வுணர்ந்திடலாற் பசுவா
மொன்றாகச் சிவனியல்பி னுணர்ந்திடுவன் காணே.

(கோ-டு) பாச ஞானம், வைகரியாதித்திறங்கள் வேதம் சாத்திரம் மிருதி புராணம் கலைஞானம் விரும்பு அசபை மேலாம் நாதமுடிவான வெல்லாம். கருது பசு ஞானம், நணுகி(ய), ஆன்மா இவை கீழ்நாடலாலே காதலினால் நான் பிரமமென்னும் ஞானம். எனவும், சிவன் இயல்பின் ஒன்றாக உணர்ந்திடுவன் எனவுங் கூட்டுக.

(பொ—ரை.) மேற்கூறிப் போந்த மூவகை ஞானங்களுள், பாசஞானமாவது:—வைகரி முதலிய வாக்கின் பகுதிய வாகிய வேத சாத்திர முதலிய கலைஞானங்களும், விரும்புகின்ற அசபை யுமாகிய சொற்பிரபஞ்சமும், நில முதல் நாத மீறாகிய பொருட் பிரபஞ்சமும் ஆகிய இரு வகைப் பிரபஞ்சங்களின் வாயிலாய் ஆன்மாவின் கண் நிகழும் ஏகதேசஞானமாம். கருதுகின்ற பசு ஞானமாவது—இப்பிரபஞ்சங்களைப் பொருந்திய ஆன்மா இவை யனைத்தும் தன் கீழடங்கிய தென்றறிந்து அவற்றினின்றும் நீங்கி மேம்பட்ட பொழுது அப்பிரபஞ்சமாகிய பாச நீக்கத்தால் அநா தியே பாசத்தினீங்கியிருக்கின்ற சிவனை ஒப்பேமென்று செருக் கால் சடுதியில் மதிக்கவருவதோர் சிவசமவாத ஞானமாம். கரு விகளினீங்கிய இந்த ஞானத்தை யுடைய பசுவைச் சிவனோடு சம மென்றதனால் இழுக்கென்னையெனில், இவ்வான்மா தூல சூக்கும காரணதேகங்களாற் கட்டுப்பட்டும், நூலுணர்வால் உணர்த்த உணர்ந்தும், ஒவ்வோரிந்திரியங்களால் ஒவ்வொரு விடயங்களை யுணர்ந்தும், இவ்வாறுணர்வதாகிய பாசத்தடை சிவ ஞானத் தால் இடையே நீங்கப் பெறுதலின் அவ்வான்மா ஆதிமுத்தனெ னப்படும். பதி, ஒருவனுணர்த்த உணர்தலின்றித் தானே முழு தும் ஒரு சேர அறிந்து அநாதியே பாசத்தடை நீங்கிய பேரறி வனாதலின் அநாதி முத்தனெனப்படும். ஆதலால், ஆதி முத்த னாகிய பசுவை அநாதி முத்தனாகிய பதியோடு சமமென்றல் கூடாது. இவ்வேற்றுமையைத் தெளிவாய் அறிந்து அப்பதி யினுள்ளடங்கி அப்பதி வாயிலாய் நிகழும் ஞானம் பதிஞான மாம். (எ—று.)

பசுத்துவமாகிய பாசம் நீங்கிய விடத்தும் நான் பிரமமென மதித்தல் பசுத்துவவாதனை பற்றியாதலால், அது பசு ஞானமெனப்பட்டது. நான் பிரமமென்னும் ஞானம் ஏகான்மவாதம் பற்றி நிகழும் ஞானமெனினுமாம்.

நாடி மேம்படுதலால், மேம்படுதலாகிய காரியத்தை நாடலால் என் னுங் காரணமாகவும், உணர்ந்து இடையே நீங்குதலால், இடையே நீங்கு தலாகிய காரியத்தை உணர்ந்திடலால் என்னுங் காரணமாகவும், இயல்

பாக வுணர்ந்து அநாதிமுத்தனுதலால், அநாதிமுத்தனென்னுங் காரியத்தை உணர்ந்திடுவன் என்னுங்காரணமாகவும், தத்துவக் கூட்டத்தால் ஏகதேச ஞானம் நிகழ்தலின் ஏக தேசஞானமாகிய காரியத்தை நாதமுடிவான வெல்லாம் என்னும் காரணமாகவும் உபசரித்தார்.

நணுகியான்மா என்றவிடத்து நணுகிய என்னும் பெயரெச்சத்து அகரம் தொக்கு நின்றது. தகுவரிய அன்பு என்பது "தகுவரியன்பு" என நின்றாற் போல.

பதி ஞானத்தின் இயல்பு எல்லாப் பொருளையும் ஒரு சேர அறிதலென்பது, ஒன்றாகச் சிவனியல்பி னுணர்ந்திடுவன் காணே என்றதனால் பெறப்பட்டது.

எனவே, பாசஞானத்தினியல்பு ஏகதேசமாயறிதலும், பசு ஞானத்தினியல்பு செருக்குற்றறிதலும், பதிஞானத்தினியல்பு ஒரு சேர அறிதலுமென அறிந்து கொள்க.

வேத சாத்திரங்களெல்லாம் பாச ஞான மெனக்கழிப்பின் ஞான நூல்தனை ஓதல் ஓது வித்தல் முதலியன ஞான பூசை யென மேற்கூறியதோடு முரணுதோவெனின், முரணாது. என்னை? அவ்வேத சாத்திரங்கள் பதி ஞானம் விளங்குதற்கு ஏது வாகப் பயன் படுதல் கூடும் ஆதலாலென்க. பசுஞானத்தைச் சடுதியில் மதிக்கவருவதோர் ஞானமென்றது, ஆன்மாத்தனித்து நில்லாமையை விளக்கி நின்றது. அதாவது, காணங் கடந்த விடத்துப் பதியிலழுந்த வேண்டும். அங்ஙனம் அழுந்தாது சீவன் தனித்து நிற்க முடியாது. நின்றதாக எண்ணுதலே யன்றி நிற்குமாறில்லை. அவ்வெண்ணமும் சடுதியில் மாறிக் கருவிகளோடு கூடுமென்றறிக. (உ.)

பாடாணவாதனுனமும், பேதவாதஞானமும் பசுஞானமேயெனவும், பதிஞானத்தாலன்றிப் பசுத்துவவாதனை நீங்காதெனவும் கூறுகின்றது.

கரணங்கள் கெடவிருக்கை முத்தியா மென்னிற்
கதியாகுஞ் சிலைமுட்டை கருமரத்தி னுயிர்கண்
மரணங்கொண் டிடவுறங்க மயங்கிமூர்ச் சிக்க
வாயுத்தம் பனைபண்ண வல்விடத்தை யடையச்

சரணங்கள் புகுநிழல்போற் றனையடையுஞ் சமாதி
தவிராது மலமிதுவும் பசுஞான மாகு
மரணங்க ளெரித்தவன்ற னடியையறி விறந்தங்
கறிந்திடீர் செறிந்ததுக ளகற்றி டீரே.

(கோ - டு.) கரணங்கள் கெட இருக்கை முத்தியாமென்னில், சினை முட்டை கருமரத்தின் உயிர்கள் (மருவக்) கதி ஆகும். சரணங்கள் புகு நிழல்போல் தனை அடையும் சமாதி (முத்தியாமென்னில்) மரணங்கொண் டிட வுறங்க மயங்கி மூர்ச்சிக்க வாயுத்தம்பனை பண்ண வவ்விடத்தை அடைய (கதி ஆகும்.) இதுவும் பசுஞானமாகும். அறிவு இறந்து அங்கு அரணங்கள் எரித்தவன்றன் அடியை அறிந்திடீர். செறிந்ததுகள் அகற் றிடீரே. மலம் தவிராது.

(போ - ரை.) மேற் கூறியவாறு நான் சிவம் என நிகழும் ஞானம் முத்தியாகாதாயினும், கரணங்களெல்லாம் கெடும்படி அவற்றினின்றும் ஆன்மா நீங்கப்பெறுதல் முத்தியாமெனின், மீனிற்றோன்றிய சினையினும், முட்டையினும், கருப்பாசயத்தி னும், மரத்தினும் உயிர்கள் பொருந்துங்கால் கரணமின்றி யிருத்த லின் அவையும் முத்தியாதல் வேண்டும். ஆகாமையின் இது பாடாணவாத ஞானமாம். பாடாணமென்பது கல். இனி, ஒரு வனுடைய நிழல் உச்சிப்போதின் கண் தன்னடியில் வந்து ஒடுங்கி னாற்போல, அறிவானது கரணங்களிற் செல்லாது ஆன்மாவாகிய தன்னிடத்து ஒடுங்கிநிற்பதே முத்தியெனின், பத்தாமவத்தை யாகிய மரணம், உறக்கம், மயக்கம், மூர்ச்சை, நஞ்சம் ஆகிய இவை பொருந்திய விடத்தும், பிராணவாயு இயங்காது தம்பித்த விடத்தும், அறிவானது கரணங்களிற் செல்லாது ஆன்மாவாகிய தன் மாட்டொடுங்கியிருத்தலால், அதுவும் முத்தியாதல் வேண் டும். ஆகாமையின் இது பேதவாத ஞானமாம். மேலைச்செய்யு ளிற் கூறிய சிவசமவாத ஞானமும் இச்செய்யுளில் மேற்கூறிய பாடாணவாத ஞானமுமன்றி இப்பேதவாத ஞானமும் ஆகிய இவையெல்லாம் பசுஞானங்களாம். இந்த ஞானங்களால் சிவ பிரானை அறிய முடியாதாதலால், முப்புரங்களையுமெரித்த சிவ

பிரானையும், ஆன்மாவாகிய தம்மையும், சிவஞானத்தால் அறியப் பெறுவீராக. அவ்வாறறிந்து உம்மைப் பந்தித்த மலத்தை நீக் கப்பெறுவீராக. மேற்கூறிய பசுஞானங்கட் கேதுவாகிய பசுத் துவவாதனையாகிய மலம் இச்சிவஞான முடையார்க்கன்றி நீங் காது. (எ-று)

இதுவும் என்ற உம்மை, சிவசமவாத ஞானம் பாடாணவாத ஞானமே யன்றி என இறந்தது தழுவிற்று. கதியாகும் என்பது, சொல்லெச்சமாக வருவித்த மருவ என்பதோடும், அடைய என்பதோடும் தனித்தனி சென் றியையும். மருவ என்பதும் அடைய என்பதும் செயவென்னும் வாய் பாட்டு வினையெச்சங்கள். மருவ என்பது உயிர்கள் என்றவிடத்துச் சொல்லெச்சமாக வருவிக்கப்பட்டது. முத்தியாமெனின் என்பதனைத் தனையடையுஞ்சமாதி என்பதனோடுங் கூட்டுக. சூரியனைக் காணப்பெறு தார்க்கு இருள் நீங்காதவாறு போல, சிவசமவாதஞானம், பாடாணவாத ஞானம், பேதவாத ஞானமுடையார் சிவனையறியப் பெறுமையின் அவர்க்கு மலம் நீங்காதென்பதாயிற்று.

பத்தவத்தைகளாவன:—ஒரு மகளிரைப் பார்த்தலாலுண்டாம் ஆசை, மனப்பற்று, அழகை வர்ணிக்கும் மனோவியாபாரம், தூங்காமை, உடம் பிளைத்தல், பிற விஷயங்களிற் பற்றில்லாமை, மானமில்லாமை, பித்துக் கொள்ளுதல், மூர்ச்சை, மரணம் என்பன.

மேல் அ. ஞ் சூத்திரம் கஉ-வது செய்யுளில் பரபக்கத்து முத்தியைக் கூறுமிடத்து கதியாகவேண்டும் மலந்தவிராது என்று கூறாமல், இவ் விடத்து அம்முத்தியைக்கூறி கதியாகவேண்டும் மலந்தவிராது என்றது, மேலைச்செய்யுளில் கருவிகளினின்று நீங்கிநிற்கும் ஒப்புமைபற்றி உயிர் சிவசமமாதற் கிழுக்கென்னை? என்னும் ஆசங்கையை நீக்கி, ஒவ்வொரு இந்திரியங்களால் ஒவ்வொரு விடயங்களை யுணர்ந்து இடையே நீங்குத லால் அவ்வுயிர் ஆதி முத்தனெனவும், சிவன் ஒன்றாக இயல்பின் உணர்ந் திடுவனாதலால் அநாதி முத்தனெனவும் படுமாதலின், சிவசமமாகாதென் றாற்போலப், பாடாணவாத ஞானம், பேதவாத ஞானம் என்னும் இவை முத்தியாகாதோ வென்னும் ஆசங்கையை நீக்கி, மேலைச்செய்யுளிற் கூறிய சிவசமவாத ஞானம்போல மலந்தவிராமையின் பசுஞானமாதலை வலியுறுத் தற்பொருட்டு என்க. ஞானத்தின் வகையினைக் கூறுமிவ்விடத்துக் கூறி னாரென்பது கருத்து. (கூ)

பதிஞானத்தாலன்றிப் பசுஞானம் பாசஞானங்களாற் சிவனை யறியக்கூடாமைக் கேது அவ்விரு ஞானங்களும் தானே பிரகாசித்தலும், பிறிதொன்றைப் பிரகாசப்படுத்தலும் இல்லாமை எனக் கூறுகின்றது.

சிவனையவன் றிருவடிஞா னத்தாற் சேரச்
செப்புவது செயல்வாக்குச் சிந்தை யெல்லா
மவனையணு காவென்று மாத லானு
மவனடியவ் வொளிஞான மாத லானு
மிவனுமியான் றுவக்குதிர மிறைச்சி மேதை
யென்புமச்சை சுக்கிலமோ விந்திரியக் கொத்தோ
வவமகல வெனையறியே னெனுமைய மகல
வடிகாட்டி யான்மாவைக் காட்ட லானும்.

(கோ - ரு.) சிந்தைவாக்குச் செயல் எல்லாம் அவனை என்றும் அணுகா ஆதலானும், இவனும் யான் துவக்கு உதிரம் இறைச்சி மேதை என்பு மச்சை சுக்கிலமோ இந்திரியக் கொத்தோ அவம் அகல எனை அறியேன் எனும் ஐயம் ஆதலானும், அவன் அடி ஞானம் அகல அவ்வொளி அடிகாட்டி ஆன்மாவைக் காட்டலானும், அவன் திருவடிஞானத்தால் சிவனைச் சேரச்செப்புவது.

(போ - ரை.) மேற்கூறிய பதிஞானம், பசுஞானம், பாசஞானமாகிய மூன்றனுள், மனவாக்குக் காயமுதலியன இறைவனை எக்காலத்தும் அணுகாமையால் அப்பொறிகள் வாயிலாய் ஏகதேசமாய் நிகழும் சுட்டுணர்வாகிய பாசஞானத்திற்குத் தானே பிரகாசித்தலும், பிறிதொன்றைப் பிரகாசப்படுத்துதலுமில்லை. ஆன்மாவும், தன்னைத், தோல் இரத்தம் முதலியனவோ என ஐயப்பட்டுக் குற்றங்கள் நீங்கும்படியாகத் தன் சொரூபத்தை உள்ளவாறறியாது நிற்றலால் அவ்வாறு நிற்கும் பசுஞானத்திற்கும் தானே பிரகாசித்தலும், பிறிதொன்றைப் பிரகாசப்படுத்துதலுமில்லை. ஆதலால், பாசஞானம் பசுஞானங்களால் பாசிவனை அறியமுடியாது. இறைவன் திருவடி ஞானமாகிய பதிஞானம்

மேற்கூறிய குற்றங்களின்றித் தானே பிரகாசித்தலும், தன்னையும் ஆன்மாவையும் அவ்வான்மாவிற்குப் பிரகாசப்படுத்துதலுமாய் நின்று எல்லாப் பொருளையும் இனிது விளக்குவதாம். அத்தன்மைத்தாகிய பதிஞானம் ஒன்றுனே அப்பதிப்பொருளை அறிய வேண்டும் என மேற்கொண்டது. (எ-று)

ஆன்மா தன் சொரூபத்தை உள்ளவாறறியாமையாவது—கருவிகளின் வேறுன சித்தெனவும், தனித்துநிற்கும் முதலன்றெனவும் உணராமையாம். (௪)

பசுஞானம், பாசஞானங்கட்குத் தானே பிரகாசித்தலும், பிறிதொன்றைப் பிரகாசப்படுத்துதலும் இல்லாமையை அநுபவத்தில் வைத்து விளக்குகின்றது.

கண்டிடுங்கண் டனைக்காணு கரணங் காணு
　　கரணங்க டமைக்காணு வுயிருங் காணு
வுண்டியம ருயிர்தானுந் தன்னைக் காணு
　　துயிர்க்குயிரா மொருவனையுங் காணு தாகுங்
கண்டசிவன் றனைக்காட்டி யுயிருங் காட்டிக்
　　கண்ணுகிக் கரணங்கள் காணு மனிற்பன்
கொண்டரனை யுளத்திற்கண் டடிகூடிற் பாசங்
　　கூடாது கூடிடினுங் குறித்தடியி னிறுத்தே.

(கோ - டு.) தனைக்காட்டி உயிருங்காட்டிக் கண்ட சிவன் எனக் கூட்டுக.

(போ - ரை.) மேற்கூறிய பசுஞான பாசஞானங்கட்குத் தானே பிரகாசித்தலும், பிறிதொன்றைப் பிரகாசப்படுத்தலுமில்லை என்றல் எவ்வாறு கூடுமெனின், பிறிதொரு பொருளை அந்தக்கரணங்களால் அறிகின்ற கண்ணானது தன்னியல்பையுங் காணமாட்டாது; தனக்கு முதலாகிய அந்தக் கரணங்களையுங் காணமாட்டாது. கண்ணை விளக்குகின்ற அவ்வந்தக் கரணங்களும் வித்தியா தத்துவங்களும் தம்மியல்பையும், தம்மை விளக்குவதாய் தமக்கு

முதலாய் நிற்கும் உயிரையுங் காண்மாட்டாவாம். அவைபோல, இன்பத்துன்பங்களை முதல்வன் உணர்த்த உணர்கின்ற ஆன்மாவும் தன்னியல்பையும், தனக்குயிராய் அறிவித்து நிற்கும் முதல்வனை யுங் காணமாட்டாது. ஆதலால் தற்சொரூபத்தையும் விளக்கி, ஆன்ம சொரூபத்தையும் விளங்கச் செய்து, இவ்வாறு விளக்கு வதற்கும், விளங்கச் செய்வதற்கும் தனக்கொரு துணையின்றி எல்லாவற்றையும் ஒரு சேர அறிந்து தானே பிரகாசித்தும், பிற வற்றைப் பிரகாசப் படுத்தியும் நிற்பது சிவஞானமாம். ஆதலால், பாசஞான பசுஞானங்களாற் காணாது அச்சிவ ஞானத்தைத் துணையாகக்கொண்டு முதல்வனை அச்சிவ ஞானமாகிய அறிவிற் காணப்பெற்று அவன்றிருவடியைக் கூடப் பெற்றால் பாசம் நீங் கும். நீங்கிய அப்பாசம் மீண்டும் கூடவரின் சிவ பாவனையை விடாது செய்து அவன்றிருவடி ஞானத்தால் அச்சிவபிரானைச் சேரல் வேண்டும். (எ-று.)

இதனால் கருவிகளாலாகிய பாச ஞானமும், தன்னை உள்ளவாறறியாத பசு ஞானமாகிய ஆன்ம ஞானம் தானே பிரகாசித்தல் அறவே இல்லையென வும், தனக்குள் அடங்கிய பொருளை விளக்குவதாயினும், தனக்கு மேற் பட்ட பொருளை விளக்காமையால் பிறிதொன்றைப் பிரகாசப் படுத்துதல் இல்லை யெனவுங் கூறியவாறறிக.

கரணங்காணா உயிருங்காணா என்றவிடத்து காணாது என்னும் பொருள்பட துவ்வீறு தொக்கு நின்றது. கண்டிடுதல் என்பது, இவ்வி டத்து அந்தக் கரணங்களால் கண் பிறபொருளைக் கண்டிடுதலைக்குறித்தது. உண்டியமர்தலென்பது சுகதுக்கங்களை யநுபவித்தல். அதுவும் முதல்வன் அறிவிக்க அறிதலைக் குறித்தது. இந்திரிய முதலியன, தம்மையும் உயிரை யுங் காணாமையை உயிர்கள், தம்மையும் முதல்வனையுங் காணாமைக்கு உவ மையாக எடுத்துக்காட்டுதலின் இஃது எடுத்துக் காட்டுவமை.

மேலைசெய்யுளில் " அடிகாட்டி ஆன்மாவைக் காட்டலானும் " என்ற தைச் சிவஞானத்தால் பாசம் நீங்குமென்று கூறுதற்கு இவ்விடத்துக் காட்டிக் கண்ட சிவன், என அநுவாதஞ் செய்துகொண்டார். கண்ணாகி என்பது துணையாகி என்னும் பொருள் குறித்தது.

* "சொன்ன சிவன் கண்ணு" என்றாற் போல. கரணங்கள் காணுமல் என்றவிடத்து மூன்றாம் வேற்றுமை ஆல் உருபு விரித்து கரணங்களாற் காணுமல் எனவுரைக்க.

பாச ஞானத்தைக் கரணங்கள் எனவும், பசுஞானத்தை உயிர் எனவும் சிவஞானத்தைச் சிவன் எனவும் அந்தந்தப் பொருள்மேல் வைத்து உபசரித்தார். பதிஞானம் பிரபஞ்ச வைராக்கியத்தாலுண்டாமெனக்கூறும இரண்டாமதிகரணத்திற்குத் தோற்றுவாய் செய்யவேண்டி "பாசங் கூடாது; கூடிடினுங் குறித்தடியினிறுத்தே" என்றார். (ரு)

முதலதிகரணம் முடிந்தது.

இரண்டாம் அதிகரணம்.

நில்லாதே நீங்கிப் போதின்............அந்
நிலையே யாகும் என்பது.

பதிஞானம் பிரபஞ்ச வைராக்கியத்தாலுண்டாமெனக் கூறுகின்றது.

குறித்தடியி னின்றட்ட குணமெட்டுச் சித்தி
 கோகநதன் முதல்வாழ்வு குலவுபத மெல்லாம்
வெறுத்துநெறி யறுவகையு மேலொடுகீ ழடங்க
 வெறும்பொயென நினைந்திருக்க மேலொடுகீ ழில்லா
னிறுத்துவதோர் குணமில்லான் றன்னையொரு வர்க்கு
 நினைப்பரியா னென்றுமிலா னேர்படவத் துள்ளே
பொறுப்பரிய பேரன்பை யருளியதன் வழியே
 புகுந்திடுவ னெங்குமிலாப் போகத்தைப் புரிந்தே.

---

* சிவஞான போதம், ருூம் சூம், உ-அ-ம், செ-க.

(கோ - டு.) அடியில் குறித்து நின்று எனவும், அறுவகை நெறியும் எனவும், உள்ளேவந்து நேர்பட எனவும், எங்கும் இலாப் போகத்தைப் புரிந்தே புகுந்திடுவன் எனவுங் கூட்டுக.

(பொ - ரை.) மேற்கூறிய பதிஞானம் எதனால் வருமெனின், குருவருளால் ஒரு குறியின்கண் உறைத்து நின்றுகொண்டு பைசாச பதத்திற்குரிய அட்டமாசித்தியை நோக்க எண்மடங் கேற்றமாகிய அட்டசித்தியையுடைய பிரமபத முதலிய திப்பிய மகளிரும் அதிவிசித்திரமாகிய மாடமாளிகையு முதலிய போக்கியப் பொருட் சிறப்புக்களான் அழகுபெற்ற பதங்களையுடைய எவ்வகைப்பட்ட புவனங்களும், அப்புவனங்களிலுள்ள போக்கியங்களும் முன்னரே அநுபவித்துக் கழித்தமையின் கக்கின சோறெனக்கண்டு அருவருத்துவிட்டு சுவரினுடைய வடிவைக் காணுங் காலத்து அதிலெழுதியிருக்குஞ் சித்திரம் காணப்படாதது போல, அறுவகை அத்துவாவுட்பட்ட பிரபஞ்சம் யாவும் மாயையாகிய காரண ரூபத்திலொடுங்கியிருக்கும் போது காணப்படாமையின் முழுப்பொய்யெனக்கண்டு, அவ்வாறு கண்ட காட்கி சலியாதிருக்கப் பெற்றால், அப்பிரபஞ்சத்திற்கு வேறாகியும், மேல்கீழ் இல்லாதாகியும், குறித்தறிவதொரு குணமில்லாததாகியும், பிரபஞ்ச நாட்டமுள்ள ஒருவராலும் உணரப்படாததாயும், ஒரு பற்றுமில்லாததாயும் உள்ள ஞான சொரூபம் அவ்வறிவின்கண் விளங்கித் தோன்றும். தோன்றவே அந்த ஞானத்தினிடத்து வறியார்க்கு நிதி வாய்த்துழிப்போலப் பொறுத்தற்கரிய பெருங்காதல் அதிகப்படும். அதிகப்படவே சிவபிரான் அவ்வன்பின் வழியாகப் புகுந்து எவ்விடத்து மறிதற்கரிய பேரின்பமயமாய் உயிரின்கண் விளங்கித் தோன்றுவன். (எ-று.)

மிக்க அன்பின் வழியாகப், பேரின்ப மயமாய் இறைவன் விளங்கித் தோன்றுவன் என்னும் இக்கருத்துப்பற்றியே, * "இன்பிலினி தென்றலின்றுண்டே லின்றுண்டா—மன்பினிலையே யது." என்றார் புடைநூலாசிரியரும்.

---

* திருவருட்பயன், இன்புறு நிலை, ௭-௧௦

இதன்கருத்து—"அன்பினது நிலையே தனக்கு நிலையாக உடையதாக லான், எல்லா இன்பங்களினும் இனிமை யுடைத்தென்று சிறப்பித்துச் சொல்லப்படும் பேரின்பமாவது அன்பு இப்பொழுது உண்டாயின் இப் பொழுதே யுள்ளதாம்" என்பது. † "ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே என்னுடை அன்பே" என்னும் ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் திருவாக்கும், அன்பினிடத்துச் சிவம் விளங்கித்தோன்று மென்னுங் கருத் தினை வலியுறுக்குமாறு காண்க.

கோகநதன் என்பது பிரம பதத்தைக் குறித்தலின் ஆகுபெயர். கோகநதன்—பிரமன். சித்திக் கோகநதன் என்றிருக்க வேண்டுவது சித்தி கோகநதன் என ஒற்றுமிகாது நின்றது வடநூன் முடிபு.

வாழ்வு குலவுபதம் என்பது, வாழ்வாலழகு பெற்ற பதமென்னும் பொருள் குறியாது, வாழ்வாகிய குணிக்குக் குணமாகிய திப்பியமகளிர் முதலிய பொருட் சிறப்புக்களாலழகுபெற்ற பதமென்னும் பொருள் குறித்தலின் ஒற்றுமை பற்றிக் குணம் குணியாக வுபசரிக்கப்பட்டது. பொருட் சிறப்புக்கள்—குணம். வாழ்வு—குணி. வாழ்வு வாழ்க்கை என் பன ஒரு பொருட் சொற்கள். அது குணியாதல், ‡ "வாழ்க்கை வழி யெஞ்சலெஞ்ஞான்றுமில்" என்பதனானுமறிக. (௯)

இரண்டாமதிகாரணம் முடிந்தது.

மூன்றும் அதிகரணம்.

ஓசைதரும் அஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்க உள்ளத்தே புகுந்தளிப்ப னூனமெலாமோட என்பது.

பிரபஞ்ச வைராக்கியம் நிலைப்பதற்குச் சிவோகம் பாவனை செய்ய வேண்டுமெனக் கூறுகின்றது.

---

† திருவாசகம், கோயிற்றிருப்பதிகம், செ-க.

‡ திருக்குறள், இல்வாழ்க்கை. செ-ச.

கண்டவிவை யல்லேனா னென்றகன்று காணாக்
கழிபரமு நானல்லே னெனக்கருதிக் கசிந்த
தொண்டினொடு முளத்தவன்றா னின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி
விண்டகலு மலங்களெல்லாங் கருடதியா னத்தால்
விடமொழியு மதுபோல விமலதையு மடையும்
பண்டைமறை களுமதுநா னானே னென்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே.

(கோ - ரு) கண்ட இவை நானல்லேனென்று, காணாக்கழிபரமும் நான் அல்லேன் என அகன்று, உளத்து அவன்றான் நின்ற கலப்பாலே கருதி கசிந்த தொண்டினொடும் சோகமெனப்பாவிக்க, கருடதியானத்தால் விடம் ஒழியுமது போல, வேறு இன்றித் தோன்றுவன். மலங்களெல்லாம் விண்டு அகலும். விமலதையும் அடையும்.

(போ - ரை.) உயிரானது தன்னை உடம்பென்றும், அவ்வுடம்பென்ற அறிவு நீங்கியவிடத்துப் பிரமமென்றும் இவ்வாறு விபரீதமாக உணரும். அவ்வாறுணராமல் சுட்டியறியப்பட்ட உடம்பு முதலியன தன்னின் வேறாதலால் தானன்று என்றும், சுட்டியறியப்படாது மேம்பட்டு நின்ற பதிப்பொருள் சுட்டியறியாது ஆதலின் அதுவும் நானன்று என்றும், இவ்வாறாதலின் பாசத்திற்கும், பிரமத்திற்கும் தான்வேறென்றுங் கண்டு, தன்னின் வேறாக அப்பாசத்தை மேற் கூறியவாறு சிவஞானத்தால் நீக்க வேண்டும். நீக்கி ஏனைப்பதிப் பொருள் பொருட்டன்மை பற்றித் தன்னின் வேறாயினும், கண்ணொளியும் ஆதித்தனொளியும் போலத் தான் வியாப்பியமாய் அடங்கியும், பதி வியாபகமாய் மேம்பட்டும் வேற்றுமையின்றி ஒற்றுமைப்பட நிற்றலையுணர்ந்து, அவ்வாறு நிற்கும் பதிப்பொருளிடத்துக் கலந்து நிற்றற்குரிய தனது கசிந்த தொண்டினையும், தன்னிடத்துப் பதிப்பொருள் கலந்திருத்தலையும் நோக்கி, முன்போல் முனைப்பின்றி அருள்

வழியில் நின்று சிவமே தானெனச் சிவோகம்பாவனை செய்ய வேண்டும். செய்யின் கருடபாவனை செய்யும் மாந்திரீகனுக்கு அக்கருடனேப அதி தெய்வம் பிரிப்பின்றித் தோன்றி விடத்தை நீக்கித் தெளிவு செய்யுமாறு போல, சிவபிரானும் அவ்வான்மாவிற் பிரிப்பின்றி அத்துவிதமாய்த் தோன்றி மலங்கள் முழுவதும் நீக்கிச் சுத்தமாகும்படி செய்வன். பழைய வேதாந்தமும் அது நான் ஆனேன் என்று பாவிக்கச் சொல்வது இச்சிவோகம்பாவனையையேயாம். (எ - று)

யாதானுமொன்றைப்பற்றி நிற்பதன்றித் தனித்து நிற்கமாட்டாத ஆன்மா பாசத்தை நீக்கியவிடத்துச் சிவோகமபாவனை செய்யவில்லையாயின் மீண்டும் பாசத்தைப்பற்றுமென்பது கருத்தெனவறிக.

இச்சிவோகம்பாவனை இன்றியமையாச் சிறப்பினையுடையதென்பதுணர்த்த வேண்டி, சாதிக்குமுறை கூறும் இச்சூத்திரத்தில் "மலங்களெல்லாம் விண்டகலும் விமலதையுமடையும்" எனப்பயனும் உடன்கூறினர். கழிபரமும் என்ற உம்மை பாசமேயன்றி என இறந்தது தழுவிற்று. முன்னர்ப்பரம் என்றெடுத்து, பின்னர் அவன் எனச்சுட்டுதல் திணை மயக்கம். பரம்—அஃறிணை. அவன்—உயர்திணை.

தொண்டாவது, சார்ந்ததன் வண்ணமாமியல்புடையவுயிர் மேம்பட்ட பரமும் நானல்லேன் எனக்கருதியவிடத்துக் கருவிகளினின்று நீங்கின நிலையில் நான் பிரமம் என முனைத்து நின்றவாறு போல முனைத்தலின்றி அப்பரம்பொருளின் அருளில் அடங்கி அதன் வழியாய் நிற்றல்.

தொண்டு, உலகத்தொண்டு சிவத்தொண்டு என இருவகைப்படும். அவற்றுள், உலகத்தொண்டு தற்போத முனைத்து நின்று செய்யப்படுவது. அதனை நீக்குதற்குக் கசிந்ததொண்டு எனத் தொண்டை விசேடித்தார். கசிதல்—தற்போத முனைப்பில்லாமை. சிவமும், ஆன்மாவும் பொருட்டன்மையால் வேறுபவிடத்தும் ஆன்மா சிவனைத் தானெனப் பாவித்தற்குரிய இயைபு இருவரிடத்தும் உண்டென்பதை விளக்கவேண்டி "கசிந்த தொண்டினொடு முளைத்தவன்றானின்ற கலப்பாலே" என்றார். எனவே, இறைவன் உயிரோடுகலந்து நிற்றலும், உயிர் இறைவனோடு கசிந்து நிற்றலும், சிவோகம் எனப்பாவித்தற்குரிய இயைபென உணர்க. இதனால், சிவம் உயிரோடு கலந்து நிற்றல் என்று முளதாயினும் உயிரினிடத்துக் கசிந்து நிற்றல் நிகழவில்லையாயின், விளங்கப்படானென்பதறிக. கருட

பாவனையை எடுத்துக்காட்டியதும், சிவமும் உயிரும் வேறாகவும், உயிர் சிவனைப்பாவித்தலால் சிவனாகுமோ என்னும் ஐயம் நீக்குதற்கு. எனவே, கருடன் நான் எனப்பாவிக்கும் அத்துவிதபாவனைக்கு மந்திரத்தினது ஆற்றலும், அவ்வாற்றல்வழி நின்று பாவிக்கும் மாந்திரீகனது ஆற்றலும் ஒருதலையான் வேண்டப்பட்டு நிலைபெறுமாறு போல, சிவம் நான் எனப் பாவித்து நிற்கும் அத்துவிதபாவனைக்கு இறைவன் கலப்பும், உயிரின் கசிவும் ஒரு தலையான் வேண்டப்படுமென்பது பெறப்படும். அதனால் கசிவு செய்தற்குரிய ஆன்மாவினது ஞானக்கிரியைகளும், கலத்தற்குரிய இறைவனது ஞானக்கிரியைகளும் சிவோகம்பாவனையிற் கேடின்றி நிலை பெறுமென்பதும் அருத்தாபத்தியாலுணர்ந்து கொள்க. ஈண்டு அருத்தாபத்தியாமாறு:—இருவருடைய ஞானக்கிரியைகளும் நிலைபெற்றாலன்றித் தொண்டு செய்தலும், கலந்து நிற்றலும் கூடாமையின் நிலைபெறுதலுண்டென்றுணர்வது. இக்கருத்துப்பற்றியே * "உன்றன் குலமிரண்டென் குலமிரண்டும் குறுகிடாவண்ண மின்பமாயென்பாற் கூத்தையுங்கொண்டதெப்படிதான்" என வியந்து கூறியதாமென்க. குலம்—ஞானக்கிரியை.

பதியும், ஆன்மாவும் இவ்வாறு பிரிப்பின்றி நிற்கும் அத்துவித நிலையையுணராது ஒரு பொருள் மற்றொரு பொருளாதல் எவ்விடத்துமில்லாமையால், அது நான் ஆனேன் என்னும் மகாவாக்கியத்திற்கு ஒன்று கெட்டுப்பிறிதொன்றாம் எனப்பரிணமவாதங் கூறுவர் ஒரு சாரார். இனி அம் மகாவாக்கியத்திற்கு அதுவென்றதும் நானென்றதும் விட்டுவிடாத இலக்கணையெனக் கொண்டு கேவலாத்துவிதம் கூறுவர் மற்றொருசாரார். விட்டுவிடாத இலக்கணையாவது, பிரம்மசாரியாய் மதுரையில் இருந்தவனே சந்நியாசியாய்க் காசியிலிருக்கின்றான் என்னுமிடத்து, ஆச்சிரமத்தையுட், இடத்தையும் தள்ளில் ஒருவனேயாதல் போல, ஜீவ உபாதி, ஈசுவர உபாதிகளைத்தள்ளினால் பிரமம் ஒன்றே எனக்கூறுதல். இவர் அத்துவிதச் சொல்லிற்கு இரண்டாவது பொருள் ஒன்றுமில்லையென்று கொண்டதால் கேவலாத்துவிதி எனப்பட்டார். ஒன்றுமில்லாத நிலை கேவலம். இனி அம்மகாவாக்கியத்திற்கு அது என்னும்பதி பல பேதப்படினும், அப்பேதமெல்லாம் ஆகுபெயரினால் ஒரு கடவுளையே குறிக்குமென்பர் பிறிதொரு சாரார். இவர் கடவுளின் வேறாகிய ஆன்மாவையும், பாசத்தையும் ஒப்புக்கொண்டு கடவுள் ஒன்றே என்பது அத்துவிதச்சொல்லின் பொருளெனக் கொண்டாராதலின் விசிட்டாத்துவிதி எனப்பட்டார். விசிட்டம்—விசேடண விசேடியத்தின் கூட்டம். விசே

* உலகுடைநாயனார், கழ்நெடிலடியாசிரிய விருத்தம். செ—ச,

டணம் பசுபாசங்கள். விசேடியம் விட்டுணு. விசிட்டம் நாராயணன். நாரம் விசேடணம். அயனன் விசேடியம். நாராயணனென்பதுவிசேடண விசேடியங்களின் கூட்டமாதல் காண்க. இவ்வாறு கூறுவாரெல்லாம் வேதாந்தத்திற் கூறும் அது நான் ஆனேன் என்னும் மகாவாக்கியத்தை யும், அவ்வாறுதற்குரிய சம்பந்தத்தைவிளக்கும் அத்துவிதச் சொல்லையும் பிரமாணமாகக் கொண்டுள்ளாராதலின், அவ்வாக்கியங்கட்கு அவர் கொண்ட பொருள்கள் உண்மையல்லவென்பதை உணர்த்துதற்குப் "பண்டை மறைகளுமதுநானானேனென்று பாவிக்கச்சொல்லுவது இப்பா வகத்தைக் காணே" என்றருளிச்செய்தவாறறிக.

ஆகவே, வேதாந்தமும் சித்தாந்தமும் உண்மையாய் நோக்குவார்க்கு அது வென்னும் பதிப்பொருளொன்றும், நானென்னும் பசுப்பொரு ளொன்றும் ஆக இருபொருளுண்டென்பதும், ஆனேன் என்றமையால் ஆகவொட்டாது தடைசெய்து நின்ற ஏனைப்பாசப் பொருள் பிரிக்கப்படு வது போல் அவ்விருபொருளும் பிரிக்கமுடியாதென்பதும், ஆதலால் பிரிக்கக்கூடிய பாசத்தைப்பிரித்துப் பிரிக்க முடியாத பதிப்பொருளைச், சார்ந்த பொருளின் தன்மையையடைதற்குரிய ஆன்மா தானாகப்பாவிக்கில் பதியேயாகுமென்பதும் நன்கு விளங்கும்.

இவ்விடத்துக் கருடன் என்றது கருடனுக்கதி தெய்வமாகிய மந்திர சொரூபத்தை.

இச்செய்யுளால், அடுத்த செய்யுளிற் கூறப்படும் திருவைந்தெழுத்தை விதிப்படி உச்சரிப்பவர்க்கு வேண்டப்படுவதாகிய சிவோகம்பாவனை கூறப் பட்டது. (எ)

சிவோகம்பாவனை நிலைப்பதற்குப் பஞ்சாக்கரத்தை விதிப் படி உச்சரிக்கவேண்டுமெனக் கூறுகின்றது.

அஞ்செழுத்தா லான்மாவை யரனுடைய பரிசு
மரனுருவு மஞ்செழுத்தா லமைந்தமையு மறிந்திட்
டஞ்செழுத்தா லங்ககர நியாசம் பண்ணி
யான்மாவி னஞ்செழுத்தா லிதயத் தர்ச்சித்
தஞ்செழுத்தாற் குண்டலியி னனலை யோம்பி
யணைவரிய கோதண்ட மணைந்தருளின் வழிநின்
றஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்கமதி யருக்க
னணையரவம் போற்றோன்று மான்மாவி லரனே.

(கோ - டு.) (ஆன்மா அரனுக்கு உடைமையாம் பரிசும்) ஆன்மாவை அரனுடைய பரிசும் அஞ்செழுத்தால் (அறிந்திட்டு), அரனுருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையும் அறிந்திட்டு, அங்ககரநியாசம் அஞ்செழுத்தாற்பண்ணி, இதயத்து ஆன்மாவின் அஞ்செழுத்தால் அர்ச்சித்து, குண்டலியின் அஞ்செழுத்தால் அனலை ஓம்பி எனவும், அரனே ஆன்மாவிற்றோன்றும் மதியருக்கன் அணையரவம் போல் எனவுங் கூட்டுக.

(பொ - ரை.) மேற்கூறியவாறு பதியினிடத்துத் தான் கசிந்த தொண்டினொடும், பதி தன்னிடத்துக் கலந்தும் இருக்கின்றதனால், சிவோகமெனப் பாவிக்குமிடத்து அப்பாவனை நிலைத்தற்காகத் தானாகிய ஆன்மா அரனுக்கு உடைமையாந் தன்மையும், ஆன்மாவை அரன் உடையனுமாய் நிற்கின்ற தன்மையும் ஐந்தெழுத்து ஓதும் முறையில் வைத்தறிந்து அவன் திருமேனியும் ஐந்தெழுத்தா லமைந்திருப்பதை யுணர்ந்து, அடியானும், உடையானுமாய் நிற்கின்ற அம்முறையே அங்க நியாச, கரநியாசங்களும் அவ்வைந்தெழுத்தாற் செய்துகொண்டு இருதயத்தில் ஆன்மாவில் ஐந்தெழுத்தால் இறைவனைப் பூஜித்து, உந்தியில் அவ்வைந்தெழுத்தால் ஓமஞ்செய்து, அணைதற்கரிய புருவநடுவைப் பொருந்தி இறைவன் திருமேனியைத் தியானித்து, அவனருள் வழியாக நின்று, அவ்வைந்தெழுத்தை மானதமாக உச்சரிக்க வேண்டும். இவ்வாறு சிவோகம்பாவனையும், ஐந்தெழுத்து மந்திரமும், அகத்தே செய்யும் பூசை, ஓமம், தியானம் என்னும் கிரியையும் ஆகிய இம்மூன்றானும் சலனமின்றி நின்றுகொண்டு அவ்வைந்தெழுத்தை உச்சரிக்கப் பெறுவார்க்குப் பசுபாசங்கள் போல, பாசஞான பசுஞானங்கட்கு விளங்கித் தோன்றாத அப்பதிப் பொருள், ஆன்மாவின் மாட்டு விளங்கித்தோன்றும். தோன்றுதல் எதுபோலுமெனின், நவக்கிரகங்களுள் ஏனைய கிரகங்கள் போலத் தனித்து விளங்காத இராகு கேதுக்கள் கிரகணகாலத்தில் சூரியசந்திரர் மாட்டுவிளங்கித் தோன்றுவது போலாம்.

(எ-று.)

ஆன்மாவை அரனுடைய பரிசும் என்றதிலுள்ள உம்மையால் ஆன்மா அரனுக்கு உடைமையாம் பரிசும் வருவிக்கப்பட்டது. அரனுருவும் என்ற

உம்மை உயர்வு சிறப்பு. அரனுருவு மஞ்செழுத்தாலமைந்தமையு மறிதல் இதயத்திலான்மாவில் அவ்வாறுகண்டு அருச்சித்தற் பொருட்டு. அஞ்செழுத்தால் அரனுருவம் அமைந்திருத்தலே உண்மை விளக்கத்திற் காண்க.

இனி, பரிசும், உருவும், அமைந்தமையும் என்னும் உம்மையை எண்ணும்மையாக்கி, அஞ்செழுத்தாலான்மாவை அரனுடைய பரிசும், அரனுருவும், அறிந்திட்டு எனப்பதச் சேதஞ்செய்து, ஆன்மாவையும், அரனுடைய பரிசாகிய திருவருளையும், சிவசொரூபத்தையும் அஞ்செழுத்தாலுணர்ந்து என்றும், அஞ்செழுத்தாலமைந்தமையும் அறிந்திட்டு என்பதற்கு, அமைந்த எனவும், மை எனவும் பிரித்து, மை என்பதற்கு மலம் எனப்பொருள் கொண்டு அமைந்தொழிந்த மலங்களையும் ஐந்தெழுத்தானுணர்ந்து என்றும், உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம் முதலியவற்றுள் ஓதியவாறுபற்றியுரைத்தலுமொன்று. அமைதல்—வேண்டாமை. * "கற்பனவுமினியமையும்" என்றாற்போல. இனியமையும் என்ற திருவாக்கிற்கு இனி வேண்டாம் என்பதே பொருளென்பது, "உற்றாரை யான் வேண்டேன், ஊர்வேண்டேன், பேர்வேண்டேன், கற்றாரை யான் வேண்டேன்" என முன்னர்க் கூறுதலாலும், "குற்றாலத்தமர்ந்துறையும் கூத்தாநின் குரைகழற்கே கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே" எனப் பின்னர்க் கூறுதலானும் துணியப்படும்.

இவ்விடத்து மலம் என்றது ஆணவதிரோதங்களை. இவை தீக்கையில் கழிந்தொழிந்தமைபற்றி ஐந்தெழுத்தாலறிந்து என வேறுவைத்தெண்ணப்பட்டன. அணைந்து தியானித்து என இருக்கவேண்டுவது அணைந்து என நின்றது.

விதிப்படி உச்சரிக்கவில்லையாயின் பயன்படாதென்ப துணர்த்த வேண்டி முதற் செய்யுளிற் கூறியதுமன்றி இவ்விடத்தும் விதிப்படி என்றார்.

விதியாவது, ஐந்தெழுத்தின் பொருள் சிகரம் முதலாக முறையே, சிவம், அருள், ஆன்மா, திரோதை, மலம் என ஐவகைப்படும்; இவற்றுள் மலம் திரோதையை நீக்கி ஆன்மா அருளால் சிவனுடன் கலக்கு முறையை உணர்த்துவதாய ஐந்தெழுத்து முறையாம். அஃதாவது யகரம் நடுநிற்க சிகரவகரங்கள் முறையே முன்னும் பின்னுமாய் நிற்றல். அது சிவோகம் பாவனையை உணர்த்துவதாம். அம்மந்திரத்தின் உச்சரிப்பு முறையைக் குருவினிடத்து உபதேச வாயிலாக அறிக.

---

* திருவாசகம், திருப்புலம்பல். செ. ௩.

பசு விளங்கித் தோன்றுதலாவது:—யான் இதனை அறிந்தேன், அறி கின்றிலேன் என்றவிடத்து, அறிந்தேன் அறிகின்றிலேனெனத் தன்னைப் பசு ஞானத்தாலுணர்தல். பாசம் விளங்கித் தோன்றுதலாவது:—இதனை எனக்கருவி வாயிலாய் உணர்தல்.

இச்செய்யுளால் சிவோகம்பாவனைக்கு வேண்டப்படும் மந்திரம் பஞ் சாக்கரமென்பதும், வேண்டப்படுங்கிரியை அகத்தே பூஜை, ஓமம், தியான முதலியன செய்தல் என்பதும் கூறப்பட்டவாறு அறிக. (அ)

பஞ்சாக்கரத்தால் இதயத்தில் இறைவனைப் பூசிக்கு முறை இவ்வாறு என வகுத்துக் கூறுகின்றது.

நாட்டுமித யந்தானு நாபியினி லடியாய்
ஞாலமுத றத்துவத்தா லெண்விர லளத்தாய்
மூட்டுமோ கினிசுத்த வித்தைமல ரெட்டாய்
முழுவிதழெட் டக்கரங்கண் முறைமையினி லுடைத்
காட்டுகம லாசனமே லீசர்சதா சிவமுந் [தாய்க்
கலாமூர்த்த மாமிவற்றின் கண்ணுகுஞ் சத்தி
வீட்டையருள் சிவன்மூர்த்தி மானுகிச் சத்தி
மேலாகி நிற்பனிந்த வினைவறிந்து போற்றே.

(கோ - ரை.) நாபியினில் ஞாலம் அடியாய் முதல் தத்துவத்தால் எண்விரல் நாளத்தாய் மூட்டு மோகினி சுத்தவித்தை மலரெட்டாய் முழு இதழ் எட்டு அக்கரங்கள் முறைமையினில் உடைத்தாய் ஈசர் சதாசிவமும் கலாமூர்த்தமாம். சத்தி இவற்றின் கண்ணுகும். நாட்டும இதய கமலந்தா னும் காட்டு ஆசனம். மேல் சத்தி மேலாகி வீட்டையருள் சிவன் மூர்த்தி மானுகி நிற்பன். இந்த வினைவு அறிந்துபோற்றே.

(போ - ரை.) மேற்கூறியவற்றுள் இதயத்தில் இறை வனைப் பூசிக்குமுறை எவ்வாறெனின், உந்தியில் பிருதிவி தத்துவம் கிழங்காகவும், ஏனைய அப்பு முதலிய இருபத்துமூன்று தத்து வங்களும் அவ்வுந்தியினின்று தோன்றி எண் விரலளவாயுள்ள தண்டாகிய நாளவடிவாகவும், பொருந்திய அசுத்தமாயையின் காரியமாகிய வித்தியா தத்துவங்கள் ஏழும், சுத்த தத்துவத்தில்

சுத்த வித்தை ஒன்றும் ஆக எட்டுத் தத்துவங்களும் எட்டு இதழ் வடிவாகவும், சிதைவில்லாத அவ்விதழ் எட்டும் பிரணவ முதலிய எட்டு அக்கரங்களையுடையதாகவும், ஈசுவரம், சதாசிவம் என்னும் இரண்டு தத்துவமும் அறுபத்துநான்கு பேதப்படுமாதலால், அறுபத்துநான்கு கேசரமாகிய பூந்தாது வடிவமாகவும், சத்தி தத்துவம் அக்கேசரங்களுக்குள்ளாகிய கொட்டையென்னும் பொகுட்டு வடிவமாகவும், அச்சத்தி தத்துவமே அப்பொகுட்டிற் காணப்படும் ஐம்பத்தொரு அக்கரமாகிய பீசவடிவாகவும் உடைய நாட்டப்படும் இருதய கமலம், விளங்கப்பெற்ற ஆசனமாம். அவ்வாசனத்தின்மேல் சத்தியே வடிவாகவும், அவ்வடிவத்தில் வீடு தருகின்றவனுகிய சிவபிரான் வடிவத்தை உடையவனுகவும் நிற்பன். இம்முறையை அறிந்து பூசிப்பாயாக. இவ்வாறு செய்யும் பூசை அந்தரியாக பூசை யெனப்படும். (எ-று.)

சிவதத்துவஞ் சத்தித்தத்துவங்கட்குத் தம்முள் வேறுபாடு சிறிதாதல் பற்றிச் சிவதத்துவத்தை வேறெண்ணுது சத்தி தத்துவத்துளடக்கிக் கூறினுர். சத்திமேலாகி என்றதனுல் சத்திமூர்த்தியென்பதும் பெறப்பட்டது. மூர்த்தி—வடிவம்.

மேல் இறைவன்வடிவம் ஐந்தெழுத்தெனக்கூறி, அதன்பின் ஆன்மாவில் அர்ச்சிக்க வேண்டுமென்று கூறி, இவ்விடத்துச் சத்திவடிவென்றதன் கருத்தென்னையெனின், இறைவனுக்கு ஐந்தெழுத்து தூலவடிவம்; ஆன்மா சூக்குமவடிவம்; சத்தி அதிசூக்குமவடிவம் என்பது அறிவித்தற்கு இவ்வாறு கூறினுர். ஐந்தெழுத்து தூலவடிவமாவது எவ்வாறெனின், அவ்வைந்தெழுத்தும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளையும் குறிக்கும். குறிக்கவே, பசு பாசங்களோடு கலந்திருக்கும் அந்நிலை இறைவனுக்குத் தூலம். அப்பசுபாசங்களுள் ஆன்மாவிற் கலந்து நிற்கும் இறைவன் நிலை சூக்குமம். சிற்சத்தியிற் கலந்து நிற்கும் இறைவன் நிலை அதிசூக்குமம். சத்தியினின்று பிரிந்து தோன்றுதல் இல்லையாதலால் அதற்குமேல் நிலையில்லை.

அண்டமோரணு வெனும்படி பெரிதாய்க் கரணங்களெல்லாங்கடந்து நின்ற அவ்விறைவனே, அணுவோரண்டமாம்படி சிறிதாய் ஆன்மாக்களுய்தற்பொருட்டு உடம்பினுள்ளும் அதிசூக்குமமாயிருக்கின்றுன். அதனையறிந்து அகத்தே பூசை செய்யாதவழிப்புறப் பூசையாற் பயனில்லையென்ப

துணர்த்த வேண்டி "இந்தவிளை வறிந்து போற்றே" என்றார். பூசை கூறவே தன்னினமுடித்தல் என்னும் உத்தியால், ஓமித்தல் தியானித்தல் களினும் இவ்வாறே உணர்ந்து செய்யப்படுமெனக் கொள்க. (கூ)

அந்தரியாக பூசைக்கு வேண்டிய பூசாதிரவியங்கள் சேகரிக்கும் முறை இதுவெனவும், இப்பூசை இன்றியமையாது வேண்டப்படுமெனவும் கூறுகின்றது.

அந்தரியா கந்தன்னை முத்திசா தனமா
வறைந்திடுவ ரதுதானு மான்மசுத்தி யாகுங்
கந்தமலர் புகையொளிமஞ் சனமமுது முதலாக்
கண்டனவெ லாமனத்தாற் கருதிக் கொண்டு
சிந்தைதனி லர்ச்சிக்கச் சிவனைஞா னத்தாற்
சிந்திக்கச் சிந்திக்கத் தர்ப்பணத்தை விளக்க
வந்திடுமவ் வொளிபோல மருவியர னுளத்தே
வரவரவந் திடுவன்பின் மலமான தறுமே.

(கோ - டு.) கந்தம், மலர், புகை, ஒளி, மஞ்சனம், அமுது முதலாக் கண்டன வெலாம் மனத்தால் கருதிக்கொண்டு சிந்தைதனில் சிவனை ஞானத்தால் அர்ச்சிக்கச் சிந்திக்கச் சிந்திக்க தர்ப்பணத்தை விளக்க வந்திடும் அவ்வொளிபோல, அரன் உளத்தே மருவி வர வர வந்திடுவன் பின் மலமானதறுமே. அதுதானும் ஆன்மசுத்தியாகும்- அந்தரியாகந்தன்னை முத்திசாதனமா அறைந்திடுவர்.

(போ - ரை.) மேற்கூறிய அந்தரியாக பூசை செய்யுமிடத்து, சந்தனம், புட்பம், தூபம், தீபம், திருமஞ்சனம், திருவமுது முதலிய பூசாதிரவியங்களெல்லாம் மனத்தால்கற்பித்துக்கொண்டு, அபிஷேகம், அலங்காரம், தூபம், தீபம், ஆராதனை, நைவேத்தியம் முதலியனவும் மனத்தாற்செய்து ஆன்மாவினிடத்தில் சிவனை ஞானத்தால் அர்ச்சித்தலும், ஓமித்தலும், தியானித்தலும் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யச் செய்யக் கண்ணாடிக்குப் பொடியிட்டு விளக்க விளக்க ஒளிமேலிட்டு மாசுநீங்குமாறு போல, அச்சிவம் உள்ளத்தில் மேலிட்டு மேலிட்டு விளங்கித் தோன்றும். தோன்றவே, பின்னர் மலம்பற்றறக்கழியும். அங்ஙனம் கழிதல்

ஆன்மசுத்திக்கு ஏதுவாகும். ஆதலால் இப்பூசையை முத்திசாதன மாக அறிக என்பர். (எ-று.)

ஆன்ம சுத்திக்கேதுவாகும் என்பதனை ஆன்ம சுத்தியாகும் என ஒற்றுமைப்பற்றிக் காரணத்தைக் காரியமாக உபசரித்தார். மல மறுதல் காரணம். ஆன்ம சுத்தி காரியம். அது தானும் என்றவிடத்து உம்மை சிறப்பு. கந்தமலர் புகையொளி மஞ்சன மமுது முதலாக் கண்டனவெலா மனத்தாற் கருதிக்கொண்டு சிந்தை தனிலர்ச்சிக்க என்ற அநுவாதத்தால், அவற்றை அங்ஙனங் கற்பித்துக்கொள்ள வேண்டுமென்பது பெறப்பட்டது. கருதிக்கொண்டு என்பது அநுவாதம்.

இந்த அந்தரியாக பூசையினையே, திருநாவுக்கரசு சுவாமிகள் "காயமே கோயிலாகக் கடிமனமடிமையாக, வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக, நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமையவாட்டிப், பூசனை யீசனுர்க்குப் போற்றவிக் காட்டினோமே" எனவும், "உடம்பெனு மனை யகத்து உள்ளமே தகழியாக, மடம்படு முணர் நெய்யட்டி யுயிரெனுந்திரி மயக்கி, யிடம்படு ஞானத்தீயா லெரிகொள விருந்து நோக்கிற், கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே" எனவும் தமிழ் மறையிற் கூறியருளிய தூஉ மென்க. சிந்திக்கச் சிந்திக்க என்றவற்றுள் முன்னையது ஓமித்தல் பின்னையது தியானித்தல்.

இவையிரண்டு செய்யுளானும் அந்தரியாக பூசை செய்யுமுறையும், அது சிவோகம் பாவனைக்கு ஒருதலையான் வேண்டப்படுமென்பதும் கூறப்பட்டன. (௧௦)

சிவோகம் பாவனைக்குப் புறப்பூசையும் அங்கமெனவும். அப் பூசை செய்யும் முறைமை இவ்வாறெனவும் கூறுகின்றது.

புறம்பேயு மரன்கழல்கள் பூசிக்க வேண்டிற்
 பூமரத்தின் கீழுதிர்ந்த போதுகளுங் கொண்டு
சிறந்தாருஞ் சீர்ச்சிவனை ஞானத்தா லங்குச்
 சிந்திக்கும் படியிங்குச் சிந்தித்துப் போற்றி
யறம்பாவங் கட்குநா மென்கடவே மென்று
 மாண்டவனைக் கண்டக்கா லகம்புறமென் றோதே
திறம்பாதே பணிசெய்து நிற்கை யன்றோ
 சீரடியார் தம்முடைய செய்தி தானே.

(கோ-டு.) சிறந்து ஆரும் சீர்ச்சிவனை ஞானத்தால் அங்குச் சிந்திக்கும்படி புறம்பேயும் இங்குச் சிந்தித்து, வேண்டின் பூமரத்தின் கீழ் உதிர்ந்த போதுகளுங் கொண்டு அரன்கழல்கள் போற்றிப் பூசிக்க; ஆண்டவனைக் கண்டக்கால் அறம் பாவங்கட்கு நாம் என் கடவே மென்றும், அகம் புறம் என்னுதே திறம்பாதே பணிசெய்து நிற்கையன்றே சீரடியார் தம்முடைய செய்திதானே.

(போ - ரை.) மேற் கூறியவாறு சிவபெருமானை அகத்துப் பூசித்தலே யன்றிப் புறத்துப் பூசித்தலும் அவனை அடைவதற்கு அங்கமாதலின், அப்புறப் பூசையினையும் செய்க. செய்யுங்கால், சிறந்து விளங்கும் புகழினையுடைய அம்முதல்வனை ஞானத்தால் அகத்து ஆன்மாவில் பூசித்ததுபோல, புறத்தே ஓருவடிவத்தில் இறைவனைச் சிந்தித்துப் பூசாதிரவியங்கள் வேண்டுமாயின், தான் வருந்துதலும், பிறரைவருத்துதலுமின்றி மரத்தின் கீழுதிர்ந்த பூக்களும், யாறு குளம் முதலியவற்றுள் உளதாகிய நீரும், யாசகமின்றி வந்த அமுது முதலியனவுங் கொண்டு அம்முதல்வன்றிருவடிகளைப் பூசிக்கக்கடவர். பூசிக்குங் காலத்து அகத்தாவது, புறத்தாவது ஒரு குறியின்கண் இறைவனைக் காணப் பெறுங்கால் அகம், புறம் என்னும் வேற்றுமையால் இவ்வுலகத்தார் போலப் பூசித்தலும், புண்ணிய பாவங்கட்கு யாம் என் செயக் கடவேமெனச் சிந்தித்தலும், அதுவேறு, இதுவேறு என்னும் வேற்றுமையுமின்றி, எவ்விடத்துஞ் சிவனையே பார்க்குந் தன்மையராய் எச்செயலும் அவனருள் வழியே செய்து நிற்றல் மெய்யடியார் செய்தியாகும். (எ-று.)

புறம்பேயும் என்னும் உம்மை அகத்தேயுமன்றி என இறந்தது தழுவிற்று. போதுகளும் என்னும் உம்மை, நீர் அமுது முதலியனவுமென எதிரது தழுவிற்று.

இச்செய்யுளால் புறப்பூசையும் சிவோகம் பாவனைக்கு அங்கமாதல் கூறப்பட்டது. (கக)

புறப்பூசை, அகப்பூசை இரண்டினுள்ளும் அகப்பூசையே விசேடமெனக் கூறுகின்றது.

இந்தனத்தி னெரிபாலி னெய்பழத்தி னிரத
மெள்ளின்க ணெண்ணெயும்போ லெங்குமுள னிறைவன்
வந்தனைசெய் தெவ்விடத்தும் வழிபடவே யருளு
மலமறுப்போ ரான்மாவின் மலரடிஞா னத்தாற்
சிந்தனைசெய் தர்ச்சிக்கச் சிவனுளத்தே தோன்றித்
தீயிரும்பைச் செய்வதுபோற் சீவன் றன்னைப்
பந்தனையை யறுத்துத்தா னாக்கித்தன் னுருவப்
பரப்பெல்லாங் கொடுபோந்து பதிப்பனிவன் பாலே.

(கோ - டு.) இறைவன் எங்கும் உளன் எவ்விடத்தும் வந்தனை செய்து வழிபடவே அருளும் எனவும், சிவன் உளத்தே தோன்றிப் பந்தனையை அறுத்து எனவும், இவன் பாலே பதிப்பன் எனவுங் கூட்டுக.

(பொ - ரை.) இறைவன் உலகத்தார்க்கு விறகினிடத்துத் தீப்போலச் சிறிதுந் தோன்றாது மறைந்து உடனாயும், மந்ததா மல பாகமுடைய சரியையாளர்க்குப் பாலில் நெய்போல ஒருவாற்றாற்றோன்றியும் தோன்றாது மறைந்து உடனாயும், மந்தமல பாகமுடைய கிரியையாளர்க்குப்பழத்தில் இரதம் போல உய்த்துணருமிடத்துத் தோன்றுவதாய் உடனாயும், தீவிர மலபாகமுடைய யோகிகளுக்கும், தீவிர தர மலபாகமுடைய ஞானிகளுக்கும் எள்ளின்கண் எண்ணெய் போல விளங்கித் தோன்றினும் பிரித்தறியப்படாது உடனாயும் நிற்பன். இவ்வாறு அகம் புறம் என்ற பிரிவின்றி இறைவன் எவ்விடத்துமுளனாதலால், மேற்கூறியவாறு அகத்தாதல் புறத்தாதல் எவ்விடத்து வழிபடினும் அநுக்கிரகிப்பனென்பதே தேற்றம். அவ்வாறாயினும், பண்டைப் பயிற்சி வயத்தால் வாதனாமலம் வந்து தாக்கப் பெறுவோர் அம்மலத்தை நீக்கும் பொருட்டு, அம்மலத்திற் கிருப்பிடமாகிய ஆன்மாவினிடத்தில், பதிஞானத்தால் சிவனை மேற்கூறியவாறு வழிபடுதலாகிய அகப்பூசை, அம்மலம் நீங்குதற்குரிய இயைபு நோக்கி விசேடமாதலின் ஒருதலையான் வேண்டப்படும். அவ்வாறு அகப்பூசை செய்யின், சிவன் ஆன்மாவினிடத்து விளங்கித்தோன்றி வாசனையைப் பற்றறத்துடைத்து இரும்பைத் தன் வண்ணமாக்குந் தீப்

போலச் சீவனைத் தன் வண்ணமாக்கித் தனது சர்வஞ்ஞத்துவாதி எண்குணங்களாகிய பேரானந்தப் பெருஞ் செல்வ முழுதும் இவ னுடையதாகச் செய்தருளுவன். (எ-று.)

எங்குமுளனிறைவன் என்றது எவ்விடத்தும் வழிபடவேயருளுதற் குரிய வியைபு விளங்குதற்கும், மலமறுப்போரென்றதும், தோன்றியறுத் தாக்கிப் பதிப்பனென்றதும், ஆன்மாவிற் சிந்தனை செய்தர்ச்சித்தற்குரிய விசேட வியைபு விளங்குதற்கும் ஏதுவாய் நின்றன. எனவே, எங்குமுள னாதலின் எவ்விடத்தும் வழிபடுக; மலமறுப்போராதலானும், தோன்றி யறுத்தாக்கிப் பதிப்பனாதலானும் அன்மாவிலர்ச்சிக்க என்ற வாறும்.

தன்னுருவப் பரப்பெல்லா மிஃன்பாலே பதிதலாவது, தீ இரும்பைத் தன் வண்ணமாகச் செய்வதுபோல, இறைவனுக்குரிய முற்றுணர்வு முத லிய எண் குணங்களும் படிகம்போலச் சார்ந்ததின் வண்ணமாமியல்புடைய ஆன்மாவுக்குரிய குணமாம்படி அத்துவித விசேடவகையானே இவன்மாட்டு விளங்கித் தோன்றுதல். அதுவே சிவானந்தமேலிடுதல். அர்ச்சிக்க என் பது அர்ச்சிக்க வேண்டும் என்னும் பொருள் குறித்தலின் வியங்கோள். மலமறுப்போர் அர்ச்சிக்க எனவும், இவன் பாலே பதிப்பன் எனவும் முடிபு வேறாகலின் பால் வழுவின்மை யுணர்க. அர்ச்சிக்க என்பதனை எச்சமாகக் கொண்டு பாடமோதுவார் உயர்திணைப்பலர் பாலும் ஆண்பாலும் மயங்கி பால் வழுவாதலையும் நோக்கிற்றிலர்.

ஆன்மாவினிடத்து அர்ச்சிக்க மலம் அறுமென மேல் பத்தாவது செய்யுளில் சொல்லிவிட்டபடியால், இவ்விடத்துச் சொல்லவேண்டுவ தின்று. ஆயினும் பாச நீக்கம், சிவப்பேறு என்னும் பயன் இரண்டனுள், ஆன்மாவிலர்ச்சித்தலால் பாச நீக்கம் உடையாருக்கே. தானுகித் தன்னு ருவப் பரப்பெல்லாங் கொடுபோந்து பதித்தலாகிய சிவப்பேறு உண்டா மென்பதறிவித்தற்காகக் கூறவேண்டாத அர்ச்சித்தல் பாச நீக்கத்தையும் இயைபுபற்றி இவ்விடத்துக் கூறினர். ஆதலின், இது வேண்டாதுகூறி வேண்டியது முடித்தலாம்.

இச்செய்யுளால், புறப்பூசையினும், அகப்பூசையானது சிவன் ஆன்மா வினிடத்து விளங்கித் தோன்றிச் சிவானந்த மேலிடச் செய்தலாகிய விசேடமுடையதென அவ்வகப் பூசையின் பெருமை கூறப்பட்டது.

என் குணங்களாவன:—தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற் கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல்,

பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பனவாம். இவற்றுள் தன் வயத்தனுதலை சுவதந்திரத்துவம் எனவும், தூய வுடம்பினனுதலை விசுத்ததேக மெனவும், இயற்கை யுணர்வினனுதலை நிராமயான்மா எனவும், முற்று முணர்தலை சர்வஞ்ஞத்துவ மெனவும், இயல்பாகவே பாசங்களினீங்குதலை அநாதிபோத மெனவும், பேரருளுடைமையை அலுப்த சத்தியெனவும், முடிவிலாற்றலுடைமையை அநந்தசத்தியெனவும், வரம்பிலின்பமுடைமையை திருப்தி எனவும் கூறுவர். இவ்வெண்குணங்களுடைய இறைவனைக் குணாதீதனென்று கூறுதல் எவ்வாறு பொருந்துமெனின், மாயையாகிய சடத்தின் குணமும், ஞானமாகிய சித்தின் குணமும் எனக் குணம் இருவகைப்படும். அவற்றுள் மாயையின் குணம், சாத்துவிகம், இராசதம், தாமதம் என முத்திறப்படும். இம்முக்குணங்களும் மாயாகாரியமாகிய தநுகரண புவன போகங்களிற் கட்டுப்பட்டிருக்கும் ஆன்மாவினிடத்து நிகழ்வனவாம். இம்முக்குணங்களுள், சாத்துவிகம், சாந்தத்தையும இன்பத்தையுந் தரும். இராசதம், பிரவிருத்தியையும் துன்பத்தையுந் தரும். தாமதம், மோகத்தையும் மூடத்தையுந் தரும். இவ்வாறு ஒன்றோடொன்று மாறுபடுகின்ற இம்முக்குணங்களும் பந்தஏதுவாம். இறைவன் மாயாரகிதனானதால் இம்முக்குணங்களையுங் கடந்தவனென்பது தோன்றக் குணாதீதனென்றது பொருந்தும். இவ்வாறன்றிக் குணாதீதனென்பதற்கு ஞானகுணமுமில்லாதவனென்பது பொருளன்று. ஞானகுணமில்லாதவனெனின் குணமில்லாத குணி இல்லை; ஆதலால் இறைவனும் இல்லையெனப்பட்டு நிரீச்சுரவாதமாகும். அன்றியும், ஒரு குணமுமில்லாதபொருள் வெறும் பாழெனப்பட்டு அப்பாழ் உயிர்களின் நன்மை தீமைகளை அறியுமென்றலும், அநுக்கிரகஞ் செய்யுமென்றலும் பொருந்தாதாய் முடியும். ஆதலால், ஞானகுணமுடையவனென்பதே தேற்றம்.

இனி அந்த ஞானகுணம் எட்டுவகைப்படுவானேனெனின், எட்டுத்தன்மை இறைவனுக்கு இன்றியமையாது வேண்டப்படுதலால் எட்டுவகைப்பட்டனவாம். எட்டுத் தன்மை வருமாறு:—உயிர்க்கு வினையின் பயனாகிய இன்பத்துன்பங்களை ஊட்டுவித்தற்கும், வினையொப்பு வந்தவர்க்கு முத்தி கொடுத்தற்கும், எண்ணியதை எண்ணியபடி இடையூறு புகுதாமல் முடிக்குந் தன்மையாகிய தன்வயமென்னுஞ் சுவதந்திரத்துவம் வேண்டப்படுவதாயிற்று. இவ்வாறு செய்யும் இறைவனுக்கு வடிவம் உருவமாயின் வியாபகமாய் எவற்றையும் அறிதல் கூடாது. ஆதலின், வியாபகமாய் எவற்றையும் அறியுந்தன்மையாகிய தூயவுடம்பென்னும் விசுத்ததேகம்

வேண்டப்படுவதாயிற்று, அதாவது சித்துருவென்ற படியாம். சித்துரு வாயினும் ஆன்மாவாகிய சித்துப்போல் அறிவிக்க அறியுமாயின் சுவதந்திர மாகிய தன்வயத்துக்கிழுக்காதலின் தானே அறியுந்தன்மையாகிய இயற்கை யுணர் வென்னும் நிராமயம் வேண்டப்படுவதாயிற்று. ஆமயம் என்பது துன்பம்; அது மலத்தைக் குறிக்கும். நிராமயம் என்பது மலமில்லாமை. மலமில்லாதிருப்பினும் மலம் நீங்கிய முத்தான்மாவைப்போல ஏகதேச அறிவுடையதாயின் பஞ்சகிருத்தியங் கூடாதாதலின் முற்று முணர்தலாகிய சர்வஞ்ஞத்துவம் வேண்டப்படுவதாயிற்று. சர்வஞ்ஞத்துவம் மலநீங்கிய முத்தான்மாவிடத்துக் காணப்படுதல் போலவாயின், இயற்கையுணர்வின னென்றல் பொருந்தாதாதலின், இயல்பாகவே பாசங்களினீங்குதலாகிய அநாதிபோதம் வேண்டப்படுவதாயிற்று. பாசமில்லாதிருப்பினும் அரு ளுடையனுயிருந்தாலன்றி அநுக்கிரகிக்க முடியாதாதலின் பேரருளுடை மை என்னும் அலுப்தசத்தி வேண்டப்படுவதாயிற்று. லுப்தம்—கொடாமை. அலுப்தசத்தி—கொடுக்குஞ் சத்தி. பேரருளுடைமை என்பது உயிர்கள் மாட்டுத் தோன்றும் அருள்போலன்றி எல்லா உயிர்க்கும் அஞ்ஞானப் பிணியை நீக்கும் அருளைக் குறித்தது. அருளுடையனுயினும் அளவிறந்த உயிர்களின் பொருட்டு அவரவர் கன்மத்துக்கேற்பப் பலவேறு தொழிற் செய்ய வேண்டுதலின் முடிவிலாற்றலென்னும் அநந்த சத்தி வேண்டப் படுவதாயிற்று. அநந்த சத்தி இருப்பினும் அதனுல் துன்பமில்லாமல் கொடுக்கக் கொடுக்கக் குறையாத பூரண இன்பமுடையவனுயிருந்தாலன்றி உயிர்களுக்கு ஆனந்த பூர்த்தி செய்தல் கூடாதாதலின் வரம்பிலின்பமென் னும் திருப்தி வேண்டப்படுவதாயிற்று.

இவ்வெண்குணங்களுள் இயற்கையுணர்வை இயல்பாகவே பாசங் களினீங்குதலினும், தூய உடம்பைப் பேரருளுடைமையினும் அடக்கி ஆறெனவுங் கூறுவர். இயல்பாகவே பாசநீக்கமிருப்பின் இயற்கையுணர் வுண்டாதலும், பேரருளுடைமை இருப்பின் ஞானத்திருமேனியிருத்த லுங் கூடுமாறு அறிக.

இனி இவ்வெண்குணங்களும் சத்து, சித்து, ஆனந்தம் என்னும் மூன்றனுள் அடங்கும். எவ்வாறெனின், எக்காலத்தும் ஒரு தன்மையா யிருக்கும் பொருள் சத்து. அதற்குத்தான் தன்வயமாந்தன்மை கூடும்.

ஆதலால், தன்வயம் சத்தி லடங்கும். வரம்பிலின்பம் ஆனந்தத்திலடங்கும். ஏனைய ஆறும் சித்திலடங்கும். இன்னும் விரிப்பிற் பெருகும். (௧௨)

மூன்றமதிகாணம் முடிந்தது.

ஒன்பதாஞ் சூத்திரம் முடிந்தது.

ஆகத்திருவிருத்தம். ௩0௩.

பயனியல்.

பத்தாஞ் சூத்திரம்.

பாச நீக்கம்.

மேல் ஏழாஞ் சூத்திரம் முதல் மூன்று சூத்திரத்தால் சாதன இயல் கேட்டபின்னர் இச்சாதனத்தாலுண்டாம் பயன்யாதோ வெனவும், அப் பயனை உடையார் தன்மையாதோ வெனவும் ஆசங்கை நிகழுமன்றே. அந்நிகழ்ச்சிபற்றிப் பயன், பாச நீக்கமும் சிவப்பேறுமென இருதிறப்படு மாதலின் அவற்றை இரண்டு சூத்திரத்தானும், பயனை உடையார் தன் மையை ஒரு சூத்திரத்தானும் ஆக மூன்று சூத்திரத்தால் பயனியல் கூறத் தொடங்குகின்றார்.

மேல் அடுத்துநின்ற ஒன்பதாஞ் சூத்திரத்தால் சாதனஞ்செய்யு முறை கூறினாராதலின், அவ்வாறு சாதித்தவருக்குண்டாம் பாசநீக்கத்தை வகுத்துக் கூறுதற்கெழுந்தது பத்தாஞ் சூத்திரம். மேலைச் சூத்திரத்தி லேயே பாசநீக்கமும், சிவப்பேறுங் கூறியிருக்க ஈண்டுங் கூறுதல் எற்றுக் கெனின், அவ்விடத்துச் சாதனம் செய்யுமுறையைக் கூறுங்கால் ஏனைய செயல்போலன்று இச்செயலென்பது தோன்றப் பயனும் தொகுத்து உடன்கூறினர். இவ்விடத்து அப்பயனை வகுத்துக் கூறுதற்குத் தொடங் கினரென அறிக.

ஏகனாய் நிற்றல், இறைபணி நிற்றல் என்னும் இருநிறத்தானும் மும்மலங்களும் நீங்குமெனச் சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது.

இவனுலகி லிதமகிதஞ் செய்த வெல்லா
மிதமகித மிவனுக்குச் செய்தார்பா லிசையு
மவனிவனாய் நின்றமுறை யேகனாகி
யரன்பணியி னின்றிடவு மகலுங் குற்றஞ்
சிவனுமிவன் செய்தியெல்லா மென்செய்தி யென்றுஞ்
செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்
பவமகல வுடனாகி நின்றுகொள்வன் பரிவாற்
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே.

(கோ - டு.) அவன் இவனாய் நின்றமுறை ஏகனாகி அரன் பணியின் நின்றிடவும் சிவனும் இவன் செய்தி எல்லாம் என்செய்தி என்றும், (உடனாகி நின்று கொள்வன்). இவனுக்குச் செய்தது எனக்குச்செய்த தென்றும் பவம் அகல உடனாகி நின்றுகொள்வன். பரிவால் பாதகத்தைச் செய்திடினும் (புண்ணியத்தைச் செய்திடினும்) பணி ஆக்கிவிடுமே. உலகில் இவனுக்கு இதம் அகிதஞ்செய்தார்பால் இவன் செய்த இதம் அகிதம் எல்லாம் இசையும். குற்றம் அகலும்.

(போ - ரை) மேலைச்சூத்திரத்துக் கூறியவாறு பதிஞானத்தாற் காணப்படும் இறைவன் பெத்த நிலையில் உடனாய் நிற்பினும் வேறு காணப்படுமாறின்றி ஆன்மாவேயாய் ஒற்றுமைப்பட்டு ஆன்மாவின் வழிநிற்பன். அம்முறைபோல மேலைச்செய்யுளிற் கூறியவாறு அகத்து இறைவனை வழிபடுதலானுண்டாம் இம் முத்திக் காலத்து அம்முதல்வனோடு ஆன்மா உடனின்றறியினும் ஆன்மாவாகிய தான் வேறு காணப்படாதவாறு அவ்விறைவனோடு ஒற்றுமைப்பட்டு நிற்கவும், அவன் அருள்வழியில் வழுவாது நிற்கவும் பெறவேண்டும். பெற்றால் அவ்விரண்டனுள் ஒற்றுமைப்பட்டு ஏகனாய் நிற்றலால் யான் எனதென்னுஞ் செருக்கறும்.

அச்செருக்கறுதலால் அவ்விறைவன் இவன் செய்யும் இதம், அகிதங்களெல்லாம் யான் செய்யும் இதம், அகிதங்களென உடனாய் நின்று ஏன்றுகொள்வன். அருள்வழி நிற்றலாகிய அரன் பணியில் நிற்றலால் இந்திரியங்களின் வசமாய் நிற்கும் பாதந்திரம் ஒழியும். ஒழியவே, இவனுக்கு இன்பத்துன்பம் அநுபவிக்கும்படி பிறர் செய்யும் இதம் அகிதங்களெல்லாம் அவ்விறைவன் தனக்கு அநுபவிக்குமாறு செய்தனவேயாமென இவன் பிறவி நீங்க உடனாய் நின்று ஏன்று கொள்வன். இவ்வாறு ஏகனாய் நிற்றல், இறை பணி நிற்றல் என்னும் இருதிறத்தினுள் ஏகனாய் நிற்றலால் அன்புடன் இவன் செய்யும் இதம் அகிதங்கள் வினையாய் முடியாமல் இறைவன் பணியாய் முடியும். இறை பணி நிற்றலால் இவனுக்கு இதம் அகிதம் செய்தாரிடத்து அவ் விதமகிதங்கள் செய்த அவ்வளவினன்றி மிகுதிப்படுதற்கு இவன் செய்த இதம் அகிதங்கள் துணைக்காரணமாய்ப் பொருந்தும். இவ்வாறு வினையும், வினைப்பயனின் அநுபவமும், இவனைப் பந்தப்படுத்தாது ஒழியவே வினைசெய்தலாலாகிய ஆகாமியமும் வினைப்பயனை அநுபவித்தலாலாகிய பிராரத்துவமும் ஒழிந்தனவாம். அவ்விருவினைகளும் ஒழியவே ஏனைச்சஞ்சித வினையும், மாயையும், ஆணவமுமாகிய குற்றங்கள் மூன்றும் இவனைப் பந்திக்க மாட்டாவாய் விட்டுப்போம். (எ-று.)

நின்றிடவும் என்பதனை, ஏகனாகி இறைபணியில் என்ற இரண்டிடத்துங்கூட்டி, செய்தியென்றும் செய்ததென்று மென்னு மெச்சங்களை, கொள்வனென்பதனோடுந்தனித்தனி கூட்டி, ஏகனாகி நின்றிடவும் சிவனுமிவன் செய்தியெல்லாமென் செய்தியென்றும் உடனாகி நின்றுகொள்வன் எனவும், இறைபணியில் நின்றிடவும் செய்ததெனக்கிவனுக்குச் செய்ததென்றும், பவமகல உடனாகி நின்று கொள்வன் எனவும் நிரனிறைப்பொருளாகக் கொள்க. உடனாகி நின்றுகொள்வன் என்பது மேலுங்கூட்டப்பட்டது. கொண்டு கூட்டுப்பார்க்க. அரன்பணியில் நின்றிடவும் என்ற உம்மை சிறப்பு. பாதகத்தைச்செய்திடினும் என்ற உம்மையால் புண்ணியத்தைச் செய்திடிற் பணியாக்கி விடுதல் கூறவேண்டாவாயிற்று. ஆதலால் அது வருவித்துரைக்கப்பட்டது.

இவன் செய்யும் இதம் அகிதங்கள் இவனுக்கு இதம் அகிதம் செய்தாரிடத்து அவ்விதமகிதங்கள் மிகுதியாதற்குத் துணைக்காரணமாய்ப் பொருந்தும் என்பது ஞானியினது ஆற்றலாற் பெறப்பட்டது. பின்னர் ௬-வது செய்யுளில் "அவர்தாஞ் செய்வினை தன்னுனலமுடனே பிறர்செய்வினை யூட்டி யொழிப்பானுய்." எனக்கூறுதலானும் இது துணியப்படும். அச்செய்யுளின் கருத்துமுணராது இவன்செய்த இதம் அகிதங்களே இவனுக்குச் செய்தாரிடத்துப் பொருந்தும் என்று சொல்லில், செய்த அவருடைய இதம் அகிதங்கள் எவ்வாருகுமென வினுபினுர்க்குவிடையின்மையும், அவரவர்வினையைஅவரவரே அநுபவிக்கவேண்டுமென்றநியதிதப்புதலும், சிவஞானச்செயலுடையோர் கையிற்றானந் திலமளவே செய்திடினும் அத்தானமே நிலமலைபோற் றிகழுமென்ருற்போல்வனவற்ருேடுமுரணுதலுமாகிய குற்றங்கள் உளவாமாறு காண்க.

உண்மையில் இவன் சிவமேயாதலால் உலகத்தார் பார்வைக்கு இவன் செய்தவையாகவும், அச்செயல் இதம் அகிதமாகவும் தோற்றப்படுவனவேயன்றி இவன் செய்ததில்லையென்றறிவிக்க வேண்டி "உலகில்" என்ருர். அவன் என்பதும் இவன் என்பதும் மகாவாக்கிய வழக்கு.

நின்றிடவும் என்பதனை மேற்கூறியவாறு ஈரிடத்துங் கூட்டி நிரனிறையாகக்கொண்டு கொள்வன் என்னும் பயனிலையோடு முடியாது, நின்றிடவும் அகலும் என முடிப்பாருமுளர். அவ்வாருயின், ஏனையன தம்முள் அடங்கிநின்று ஒருபொருள் மேல் வருவனவல்லவாய் முடிதலின் முதனூலோடொத்து ஒருபொருணுதலிய சூத்திரமாதற் கேலாமையறிக. இச்செய்யுள் முக்கூற்றையுடையது. அவற்றுள்,

முதற்கூறு:—அவனிவனுய் நின்ற முறை ஏகனுகி (நின்றிடவும்) சிவனும் இவன் செய்தி எல்லாம் என் செய்தி என்றும். (உடனுகி நின்று கொள்வன்)

இரண்டாங்கூறு:—அரன்பணியில் நின்றிடவும் இவனுக்குச்செய்தது எனக்குச் செய்ததென்றும் பவமகல உடனுகி நின்று கொள்வன். பரிவால் பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கிவிடுமே. உலகில் இவனுக்கு இதம் அகிதம் செய்தார்பால் இவன் செய்த இதம் அகிதமெல்லாம் இசையும்.

மூன்ருங்கூறு—குற்றம் அகலும்.

இவற்றுள் குற்றமகலும் என்பதை முதனூலில் வேறுகூருக வைத்தோதாது இருகூருகக் கூறினுர். இந்நூலில் அம்மூன்ருங் கூற்றைப் பதி

னொரான் சூத்திரத்தில் விரித்துக் கூறுகின்றாராதலின் இச்சூத்திரத்தில் இரண்டு கூறு கூறுகின்றார். (க)

முதலதிகரணம்.

அவனிவனாய்........என்செய்தி என்றும் என்பது.

ஏகனாகி நின்றாலன்றி யான் எனதென்னும் செருக்கறுத லில்லை எனக் கூறுகின்றது.

யான்செய்தேன் பிறர்செய்தா ரென்னதியா னென்னு
மிக்கோணை ஞானவெரி யால்வெதுப்பி நிமிர்த்துத்
தான்செவ்வே நின்றிடவத் தத்துவன்றா னேரே
தனையளித்து முன்னிற்கும் வினையொழித்திட் டோடு
நான்செய்தே னெனுமவர்க்குத் தானங் கின்றி
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்ம
முன்செய்யா ஞானந்தா னுதிப்பி னல்லா
லொருவருக்கும் யானெனதிங் கொழியா தன்றே.

(கோ - டு.) யான் என்னது எனவும், அத்தத்துவன்றான் தனை அளித்து நேரே முன்னிற்கும் எனவும், போகத்தை நண்ணுவிக்கும் கன்மம் பண்ணுவிக்கும் எனவுங் கூட்டுக.

(போ - ரை.) மேலைச் சூத்திரத் தோதியவாறு ஆன்மாவினிடத்து இறைவனை ஆராதிக்கு முறையில் காண்பானும், காட்சியும், காணப்படுபொருளுமாக நின்று அவ்விறைவனைத் தரிசித்தலே அமையும்; அதன் மேலும் ஏகனாய் நிற்க வேண்டுமென்று கூறுவானேனெனின், யான் செய்தேன், பிறர் செய்தார், யான், எனது என்னுஞ் செருக்கு விளைதற்கேதுவாகிய மலத்தினாலுண்டாம் அறிவின் கோணுதலை இறைவனோடு ஏகனாய் நிற்கும்

ஞானக்கினியினுற் காய்ச்சித் தீர்த்து, தான் இறைவன் அருள் வழி நிற்க, அவ்விறைவன் தனது சொரூபத்தை ஆன்மாவிற்கு விளக்கி நேராக வெளிப்பட்டுத்தோன்றுவன். அவ்வாறு தோன்று தலான் இவன் செய்யும் இதம் அகிதங்கள் இவனுக்கு வினையாகா மல் இறைபணியாகியும், அவ்விதமகிதங்களே, இவனுக்கு இதம் அகிதங்கள் செய்தவரிடத்து செய்த அவ்விதமகிதங்கள் செய்த அளவினன்றி மிகுதற்குத் துணைக்காரணமாகவும் ஆகும். மேற் கூறிய யான், எனதென்னுஞ் செருக்குடையாருக்கு முதல்வன் விளங்கித் தோன்றுதலின்றி அவர் செய்த கன்மத்திற் கீடாகப் போகத்தைப் புசிப்பித்து அங்ஙனம் புசிப்பிக்கு முறையில் மேல் ஆகாமிய வினையும் ஏறச் செய்வன். ஆதலால், மாயா கருவி களைப் பொருந்தி அறிகின்ற சிற்றறிவினின்றும் நீங்கி இறைவ ேனாடு ஏகமாய் நிற்கும் ஞானம் பெற்றாலன்றி யாவருக்கும் யான் எனது என்னுஞ் செருக்கறுதலில்லை. (எ-று.)

ஞான எரியால் என்னது யான் என்னுமிக்கோணை வெதுப்பி நிமிர்த்து என உடன் பாட்டாற்கூறி, வலியுறுத்தற்பொருட்டு ஞானந் தானுதிப்பினல்லான் யானென திங்கொழியாது என எதிர்மறையானுங் கூறினர். மலத்தைக் கோணையாகவுங் ஞானத்தை எரியாகவும் உருவகஞ் செய்ததும் மல நீக்கம் ஞானத்தையின்றி அமையாமை விளக்குதற் பொருட்டு. ஞானம் என்றது இவ்விடத்து ஏற்புழிக்கோடலால் ஏகனுகி நிற்கும் ஞானத்தைக்குறித்தது.

இதனனே, ஏகனுய் நின்றாலன்றி, யானெனதென்னுஞ் செருக்கறு தல், தானுக்கித் தன்னுருவப் பரப்பெல்லாங் கொடுபோந்து பதித்தல் முத லியன நிகழ்ந்து முத்தியைக் கூடுதல் செல்லாதென முதற்கூறு வலியுறுத் தப்பட்டது,

காண்பானுங் காட்சியுங் காணப்படு பொருளுமாக இறைவனைத்தரி சிக்குங்கால் மாயாகருவிகள் நீங்கப்பெறுதோவெனின், பெறாது. மாயா கருவிகள் சிவ கருவிகளாக மாறித் தரிசித்தலேயன்றி நீங்கினதில்லை. சிவ கருவி என்பது—சிவத்தின் வழிச்செல்லுங்கருவியாம். நீங்காமைக்கு ஏது வென்னையெனின், ஆணவமலம் நீங்கப்பெற்றும் அம்மலத்தின் வேரறுக்கப் படாமையேயாம். வேர் என்பது பற்றெனப்படும். மலம் அறியாமையைச்

செய்யும். பற்று செருக்கைச் செய்யும். அப்பற்றறுதி இறைவனைப்பற்றி ஏகனாய் நிற்றலினாலுண்டாம். இப்பற்றையே திருவானைக்காப் புராணத்தில் கச்சியப்ப முனிவர் "வன்மலவேர்" என்றருளினர். மலத்திற் கன்னியமாகப் பற்று என்பதொன்றுண்டென்பதை "அநாதியே மலத்தைப்பற்றுதல் உயிரின் வினையென," சிவஞான போதச் சிற்றுரை நான்காஞ் சூத்திரம் இரண்டாம் அதிகரணத் தினிறுதியில் மாதவச் சிவஞான யோகிகள் அருளியவாற்றானறிக. இக்கருத்துப்பற்றியே* "பற்றற்றகண்ணே பிறப்பறுக்கும்" எனவும், "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப் பற்றுக—பற்றுவிடற்கு" எனவும் அருளினர் தேவரும். (௨)

முதலதிகரணம் முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

அரன்பணியினின்றிடவும் .... இசையும்.

என்பது.

இறைபணியில் நின்றாலன்றி இந்திரியங்களின் வழிப்பட்டுச் செல்லும் பாதந்திரம் நீங்காதெனக் கூறுகின்றது.

இந்திரிய மெனைப்பற்றி நின்றேயென் வசத்தி
னிசையாதே தன்வசத்தே யெனையீர்ப்ப திவற்றைத்
தந்தவன்ற னாணைவழி நின்றிடலா லென்றுந்
தானறிந்திட் டிவற்றினெடுந் தனையுடையான் றாள்கள்
வந்தனைசெய் திவற்றின்வலி யருளினால் வாட்டி
வாட்டமின்றி யிருந்திடவும் வருஞ்செயல்க ளுண்டேன்
முந்தனுடைச் செயலென்று முடித்தொழுக வினைகண்
மூளாவங் காளாகி மீளா னன்றே.

(போ-ரை.) ஏகனாய் நிற்றலே அமையும்; அதன்மேலும் இறைபணியில் நிற்கவேண்டு மென்பானேன் எனின், உலகத்தில்

* திருக்குறள் துறவு செ- கூ, ௧௦.

தண்டத்தொழில் செய்யும் ஊர்க்காவல் செய்பவராயுள்ளார் பிழை செய்துள்ளாரைத் தம் எண்ணப்படி தண்டிக்கின்றனர். தண்டிப்பது தம்மை அவ்வாறு செய்யும்படி நியமித்திருக்கும் அரசனது ஆணைவழியேயாம். அவ்வரசன் ஆணையின்றி இவர் தாளுக ஒன்றும் செய்யமுடியாது. அவ்வுண்மையை யறிந்து அவ்வூர்க் காவலருக்கும் தமக்கும் இறைவனுகிய அவ்வரசனைச் சிநேகிக்கப்பெற்று அவன் கருத்தின்வழி நடக்க வல்லனுய விடத்து, அவர் அவ்வூர்க் காவலர்கீழ் அடங்குதலினின்றும் நீங்கி அக் காவலரையும் தம் ஆணைவழியில் அடங்கும்படி அரசனருளால் செய்துகொள்ள வல்ல சுதந்திரராவர். அதுபோல, வினைசெய்தமை பற்றி இறைவனுணையால் இந்திரியங்கள் என்னைக் கூடிநின்று எனக்குள் அடங்காமல் என்னைத் தம்முள்ளடக்கி நிற்குமென்றும், அவற்றை அவ்வாறு செய்விக்கும் இறைவனுணைவழி அவ்விந்திரியங்கள் நிற்றலால், அவற்றின் செயலை மாற்றுதற்குபாயம் யாமும் அவ்வாணைவழி நிற்றலென்றும் அறிந்து, அவ்விந்திரியங்களையும் தன்னையும் உடையாளுகிய அவ்விறைவனைக் கூடப்பெறின், அவ்விறைவன்றிருவருளால் அவ்விந்திரியங்களைத் தன்னுணைவழி அடக்கி நிறுத்திக்கொள்ள வல்லவனுவன். அவ்வாறு நின்றவிடத்தும் பண்டைப்பயிற்சி பற்றிச் சிலசமயம் அவ்விந்திரியங்களின் குறும்பு நிகழுமாயின், இந்திரியங்கட்கும் எனக்கும் கூடுகிற சுதந்திர மில்லாமையால் இந்திரியங்களையும் என்னையும் கூட்டுவித்த முதல்வன் செயலே என்று இறைபணியில் நிற்கவேண்டும். அவ்வாறு நிற்பின், அவ்விந்திரிய வழியாய்ப் புகுந்து பந்தப்படுத்தக்கூடிய வினைகள் பந்திக்கமாட்டாவாய் மடங்கி ஒழியும். அவ்வாறு அடிமைத்திறத்து நின்றவன் மீண்டும் இந்திரியங்களின் வழிப்படமாட்டான். (எ - று.)

இச்செய்யுள் இந்திரியங்களைப் பாடிகாவலராகவும், முதல்வனை அரசனுகவும், ஆன்மாவைப் பிழைசெய்தாராகவும் குறிப்பாக உருவகஞ்செய்யக் கிடந்தமையின் குறிப்புருவகம்.

இதனுல், ஏகனுகி நிற்பினும் நான் செய்தேன் என்னும் தன்பணி

மடங்கினுலன்றி வினையில் கட்டுப்படுதற்கேதுவாய் இந்திரியங்களின் வழிப் பட்டுச் செல்லும் அடிமைத் தன்மை நீங்காமையின், அது நீங்குதற்காகத் தன் செயலை யொழித்தற் பொருட்டு எச்செயலும் சிவன் செயலெனக் காணும் இறைபணி நிற்றலும் ஒருதலையான் வேண்டப்படுமென்பதுணர்த் தியவாறு.

தானறிந்திட்டு என்றவிடத்து தான் அசை. ஈர்ப்பது என்பது ஈர்த்த லென்னுந் தொழில்மேல் நின்றது.

ஈர்த்தல்—இழுத்தல். அஃது அடக்குதலைக் குறித்தது. என்றும் என்னும் உம்மை அவ்வீர்த்தலை மாற்ற உபாயம் யாமும் அவ்வாணைவழி நிற்றலென்றும் அறிந்து என எதிரது தழுவிற்று. இவற்றினுெடுந்தனை யுடையான் என்றது உடையானுதலின் முதல்வன் என்னும் பொருள் குறித்தலின் குறிப்பேதுவாய் நின்றபெயர். வந்தனைசெய்தல் என்பது இவ்விடத்து இறைபணியில் நிற்றலைக் குறித்தது. வருஞ்செயல்களுண் டேல் என்பது ஒருமைப் பன்மை மயக்கம். வருதல் ஒருமை. செயல்கள் பன்மை. வாட்டமின்றி யிருந்திடவும் வருஞ்செயல்களுண்டேல் முந்த னுடைச் செயலென்று முடித்தொழுகல், * "வேண்டத்தக்க தறிவோய் நீ வேண்டமுழுதுந் தருவோய் நீ, வேண்டுமயன்மாற் கரியோய் நீ, வேண்டி யென்னைப் பணிகொண்டாய், வேண்டி நீ யாதருள் செய்தா யானுமதுவே வேண்டினல்லால், வேண்டும் பரிசொன்றுண்டென்னி னதுவு முன்றன் விருப்பன்றே" என்ற திருவாக்கினுமறிக.

இறைபணி நிற்குங் காலத்தும் இந்திரியங்களின் குறும்பு நிகழுமாயின் அதுவும் இறைபணியெனக் கொள்ளின் அதன்மேலும் குறும்பு நிகழுமா யின் அவ்வாறே கொள்ள வேண்டுமென, மேலும் வரம்பின்றி ஓடுமாதலின் அக்குற்றம் நீங்கவேண்டி "ஆளாகி மீளான்" என்றுங் கூறினுர். கூறவே, இறைபணி நிற்பார்க்கு நிகழும் இந்திரியங்களின் குறும்பு சிறிது காலம் நிகழினும், பின்னர் நிகழாது மடங்கி ஒழியும் என்பதே தேற்றமென் றறிக. (ரு)

இறைபணி நிற்றல் இவ்வாறெனவும், இறைபணி நின்ருர் செயலை இறைவன் தன்செயலென என்று கொள்ளுதலும், பிறர் செயலை அவ்வாறேன்று கொள்ளாது அவர் செயலாகப் பயனநு பவிக்கச் செய்தலும் பற்றி இறைவன் நடுவுநிலைக்குக் குறையா காது எனவும் கூறுகின்றது.

---

* திருவாசகம், குழைத்தபத்து. செ-எ.

சலமிலனாய் ஞானத்தாற் றனையடைந்தார் தம்மைத்
தானாக்கித் தலைவனவர் தாஞ்செய்வினை தன்னா
னலமுடனே பிறர்செய்வினை யூட்டி யொழிப்பானாய்
நணுகாமல் வினையவரை நாடிக் காப்ப
னுலகினிலென் செயலெல்லா முன்விதியே நீயே
யுண்ணின்றுஞ் செய்வித்துஞ் செய்கின்றா யென்று
நிலவுவதோர் செயலெனக்கின் றுன்செயலே யென்று
நினைவார்க்கு வினைகளெல்லா நீங்குந் தானே.

(கோ - ு.) நீயே உள் நின்றும் (செய்கின்றாய்) உலகினில் நிலவுவதோர் செயல் எனக்கு இன்று. என் செயலெல்லாம் உன்விதியே என்றும், செய்வித்தும் செய்கின்றாய் உன் செயலே என்றும், நினைவார்க்கு வினைகளெல்லாம் நீங்குந்தானே. தலைவன் ஆய் ஞானத்தால் தனை அடைந்தார் தம்மை தானாக்கிக் காப்பன். நாடியும் அவரை நணுகாமல் வினை அவர் தாம் செய்வினை தன்னால் பிறர் செய்வினை நலமுடனே ஊட்டி ஒழிப்பானாய் சலம் இலன்.

(போ - ரை.) இறைபணி நிற்றல் எவ்வாறெனின், ஏகனாய் நின்ற நிலையில் நின்று நீங்கிச் சிலசமயம் தன்னால் புறத்துச் செயல் நிகழுமாயின், அப்பொழுது அவர் இறைவனை நோக்கி நீயே எனக்கு உள்நின்று செய்கின்றாயாதலின், உலகின்கண் எனக்கு விளங்குவதோர் செயலில்லை எனவும், என்னால் செய்யப்படும் இதம், அகிதங்களெல்லாம் நீ செய்யும் செயலே யெனவும், எனக்குப் பிறர் செய்யும் செயலெல்லாம் நீயே பிறரைக்கொண்டு செய்வித்தும் செய்கின்றாயாதலின் அவையும் நீ செய்யும் செயலே யன்றிப் பிறிதில்லை யெனவும், இவ்வாறு அவனருளையல்லது ஒன்றனையுங் கருதாராய் தம்மை இழந்துநிற்கப் பெறுதல். இறைபணியின் முறை இதுவேயாம். பணி என்பது செயல். இறைபணி என்பது எல்லாம் இறைவன் செயலாகக் காண்டல். இவ்வாறு நிற்கப் பெறுவாரிடத்து நான் செய்தேன் பிறர் செய்தாரென்று எண்ணுதலாகிய அஞ்ஞானமும், புண்ணிய பாவங்களாய்க் கட்டுப்படும் கன்மமும் பிரவேசிக்க மாட்டாவாய் ஒழிந்துவிடும்.

ஆதலால், சிவபெருமான் அத்தன்மையுடைய மெய்யுணர்வால் தன்னை அடைக்கலம் புகுந்தவரைத் தன்னைப் போலச் சுத்தனாகச் செய்து பாது காத்தலும், மந்திரவலியால் அடங்கி இரை நுகரப் பெறாது கிடக்கும் பாம்பு யாதேனும் ஓர் சமயம் வாய்த்தவிடத்து சும்மாகிடவாது தீண்டுமாறு போல, இறைபணி நிற்கும் அவரைச் சாரமாட்டாது ஒழிந்து கிடந்த ஆகாமிய வினை அவருக்கு இத மகிதங்களைப் பிறர்செய்த விடத்துச் செய்த அச் சம்பந்தம்பற்றி அவருடைய இதம் அகிதங்களுக்குத் துணையாய்ச் சென்று கூடு மாதலின், அவ்வாறு கூடும்படிசெய்து பிறர் செய்த அவற்றின் பலன்களை அவர் நல்வழிப்படுதற் பொருட்டு அதிகப்படுத்தி அவர்க்கு ஊட்டுதலுஞ் செய்வன். இங்ஙனம் முத்தர் செய்த வினையை அவருக்கு இறைபணியாக்கியும், பிறர் செய்த வினையை அவருக்கு வினையாக்கியும் செய்தல் இறைவனுக்குச் சலனமாகா தோவெனின், முத்தன் தன்னையே சார்ந்து நிற்றலினாலும், ஏனை யோர் அங்ஙனஞ் சாராது நிற்றலினாலும் அவரவர்க்குத்தக்கவாறு செய்தல் தகுதியாதலின் சலனமின்மை யறிக. (எ - று.)

பிறர்செய்த வினையை மிகுவித்து ஊட்டி ஒழித்தலே பிறரை வினை நணுகாமற் காப்பதெனக் கொள்க. பிறரை யங்ஙனம் ஊட்டுதலுங் கருணை யேயென்பதுணர்த்தவேண்டி ஊட்டி என்பதோடமையாது ஒழிப்பானு மென்றும், நலமுடனே என்றுங் கூறினர். எனவே, முத்தர் செய்யும் இதம் அகிதம் பிறர் செய்யும் இதத்தையும் அகிதத்தையும் மிகுவித்து அநுபவித் தொழியும்படி செய்யுமென்பதுணர்க.

இதனால் அரன் பணி நிற்கும் முத்தரைவினை நணுகாதெனக் கூறியது மன்றி, அரன்பணியில் நிற்றலாவது, உலகினிலென் செயலெல்லா முன் விதியே, நீயே யுண்ணின்றுஞ் செய்வித்துஞ் செய்கின்றாயென்றும், நிலவு வதோர் செயலெனக்கின்றுன் செயலேயென்றும் நினைதலே என்பது என விளக்கிக் கூறிய தூஉமாயிற்று.

இறைபணியில் நிற்பவர் பாதகத்தைச் செய்திடினும் அதனைப் பணி யாக்கிவிட்டு, இவர் செய்யும் இதமகிதங்களை இவருக்கு இதமகிதஞ் செய் தார் பாலிசையச் செய்தல் இறைவனுக்கு நடுவுநிலைமையாகாதென்பாரை நோக்கி, தன் செயலை யொழித்து இறைவனிடத்து அடைக்கலம்புகுந்த

வரைவினை நணுகாமற் காத்தலும், அங்ஙனமின்றித்தானெனை முனைத்து நின்று செய்பவர்க்கு அம்முனைப்புத் தீர்தற்பொருட்டு மிகுவித்து ஊட்டி யொழித்தலும் முறைமையாமெனக் கூறியவாறும். (௪)

எல்லாம் சிவன் செயலென்றெண்ணும் இறைபணியில் நில்லாதார் செய்யும் கிரியா யோகங்களால் பிறப்பு அறாதெனக்கூறுகின்றது.

நாடுகளிற் புக்குழன்றுங் காடுகளிற் சரித்து
நாகமுழை புக்கிருந்துந் தாகமுத றவிர்ந்து
நீடுபல காலங்க ணித்தரா யிருந்து
நின்மலஞா னத்தையில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பி
லேடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே
யெறிவிழியின் படுகடைக்கே கிடந்துமிறை ஞானங்
கூடுமவர் கூடரிய வீடுங் கூடிக்
குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே யிருப்பர்.

(கோ - ரு) நின்மல ஞானத்தை இல்லார் நாடுகளில் புக்கு உழன்றும் எனவும், இறை ஞானம் கூடுமவர் ஏடுதரும் மலர்க்குழலார் முலைத் தலைக்கே இடைக்கே எறிபடுவிழியின் கடைக்கே கிடந்தும் எனவுங் கூட்டுக.

(பொ - ரை) மேற் கூறியவாறு இறைபணியாகிய நின்மல ஞானமில்லாதவர் புண்ணிய தேயங்களிற் சென்று புண்ணிய தீர்த்தங்களில் ஆடியும், புண்ணியதலத்தைத் தரிசித்தும், வனத்திற் சென்று கிழங்கு, பழம் முதலியவற்றைப் புசித்தும், மலையினுள்ள குகையில் யோகத்திலிருந்தும், அந்த யோகப் பயிற்சி வலியினால் பசியினையும், நீர்வேட்கை முதலியவற்றையும் ஒழிந்தும், நெடுங்காலம் மரணமில்லாதிருந்தும், பிறப்பென்னுந் துன்பத்தினின்றும் நீங்கமாட்டார். அவ்விறை பணியில் நிற்போர் இதழ் பொருந்திய மாலையணிந்த கூந்தலையுடைய மங்கையர் கொங்கையிடம் தோயப்பெற்று இன்பம் அநுபவிக்கினும் பிறப்பினின்று நீங்கிப்பெறுதற் கரிய வீட்டினைப் பொருந்திச் சிவந்த குஞ்சித

பாதத்தின் கண் அடங்கி நிற்பர். ஆதலால், எத்துணை நன்மைகளும் இறைபணிக் கிணையாகா. எத்துணைத் தீமைகளும் இதன் பயனைக்கெடுக்க மாட்டாவாம். (எ-று.)

இதனானே, இறைபணியில் நிற்றலது ஆற்றல் கூறியவாறு. ஆற்றல்—எத்துணை நன்மைகளும் இறைபணிக்கியிணையாகாமையும், எத்துணைத் தீமைகளும் அதன் பயனைக் கெடுக்கமாட்டாமையுமாம்.

மேல் எட்டாஞ் சூத்திரம் கூறு. வது செய்யுளில் மங்கையரோடு கூடி இன்பம் நுகரினும் எனக்கூறியது நிற்போரது பெருமையை உணர்த்துதற்கும், இவ்விடத்தும் அவ்வாறு கூறியது நிற்பவரது தொண்டாகிய இறைபணி நிற்றலின் பெருமை உணர்த்துதற்கு மாதலின் கூறியது கூறலென்னுங் குற்றமாகாமையறிக. (ரு)

இறைபணியில் நின்றோர் இந்திரியங்களோடு கூடினும் பற்றற்றிருப்பரென்பதை உவமை முகத்தால் விளக்குகின்றது.

அங்கித்தம் பனைவல்லார்க் கனல்சுடா தாகு
மௌடதமந் திரமுடையார்க் கருவிடங்க ளேறா
வெங்கித்தைக் கன்மமெலாஞ் செய்தாலு ஞானிக்
கிருவினைகள் சென்றணையா முற்செய்வினை யிங்குத்
தங்கிப்போம் பாத்திரமுங் குலாலன்வினை தவிர்ந்த
சக்கரமுங் கந்தித்துச் சுழலு மாபோன்
மங்கிப்போய் வாதனையா லுழல்விக்கு மெல்லா
மலங்களும்பின் காயமொடு மாயு மன்றே.

(கோ - ரு.) ஞானிக்கு எங்கித்தை (நின்று) கன்மமெலாம் செய்தாலும் இருவினைகள் சென்றணையா. முன் செய்வினை மங்கிப்போய் வாதனையால் உழல்விக்கும். இங்குத் தங்கிப்போம் பாத்திரமுங் கந்தித்து குலாலன்வினை தவிர்ந்த சக்கரமும் சுழலுமா போல் எல்லா மலங்களும் பின்காயமொடு மாயும் அன்றே.

(பொ - ரை.) இந்திரியங்களோடு கூடி இன்பம் அநுபவித்த காலத்தும் அவ்வின்பமும், இந்திரியமும் தன்னைத் தாக்காமலும், அதனால் மேல்வினை ஏறாமலும் இறைவனைக் கூடி யிருப்ப

னென்றது என்னையெனின், சுடுதற்கேதுவாகிய அக்கினியை மந்திரத்தினால் தம்பனஞ் செய்ய வல்லவன் அவ்வாறு தம்பனஞ் செய்து அவ்வக்கினியில் மூழ்கிக்கிடப்பினும் அவனை அது சுடாத வாறு போலும், கொலை செய்தற்கேதுவாகிய விடங்களைத்தடுக்க வல்ல மந்திர மருந்துகளைப் பெற்றுடையான் அவற்றை உபயோ கப்படுத்திக் கொண்டு விடங்களை எல்லாம் நிறைய உண்ட போழ் தும் அவனை அவ்விடம் கொல்லாதவாறு போலும், விருப்பு, வெறுப்புக்கள் நிகழ்தற்கேது வாகிய இந்திரியங்களை மேற் கூறிய வாறு இறைபணியில் நின்று தன்னேவல் கேட்கும்படி அடக்க வல்ல ஞானிகள் எவ்விந்திரியங்களினின்று எத்தொழிலைச் செய் தாராயினும் அது பற்றி அவர் மாட்டு விருப்பு வெறுப்பு நிகழ்ந்து மேலைக்குவித்தாகிய சஞ்சிதமாதல் செல்லாது. ஏனைப் பிராரத்த வினையும் தனது செயலை நீத்த அவர் மாட்டுப் பொருந்தமாட்டா மல் அக்கினியினால் வெந்த ஆடை பார்வைக்கு வடிவம் போற்றோ ன்றினும், வடிவத்தின் தன்மையில்லாதது போலச் சத்தி கெட்டே போய் வாசனை மாத்திரையாய் நின்று சிறிது தாக்கும். அவ்வாறு தாக்குதலினால் மேல் ஆகாமியவினை ஏறுமாறில்லை. வாசனை மாத் திரையாய் நின்று பயனில்லாது போதல் எதுபோலுமெனின், காயமிருந்தொழிந்த பாத்திரத்தில் அவ்வாசனை கிடந்து வாசித் தும் ஒரு கறிக்கு உபயோகமில்லாதது போலவும், குயவனானவன் குடத்தை வனையுமளவும் சுழற்றிவிட்ட திகிரியானது வனைந்த பின்னரும் அச்சுழற்றுதலாகிய தன்வேகமுள்ள அளவும்சுழன்று, மற்றொரு குடத்தினை வனைதற்கு உபயோகமாதலில்லாமை போல வுமாம். காயவாசனை பாத்திரத்தோடு ஒழிதல் போலவும், சுழ ற்சியானது வேகம் நின்றவுடன் ஒழிதல் போலவும், வாதனை மாத்திரைக்குத் துணையாய் நின்ற ஏனையமலவாசனைகளும் தேகம் உள்ள அளவும் இருந்து தேகம் நீங்குங் காலத்து அதனுடன் நீங்கும். (எ—று.)

எங்கு என்பது எங்கித்தை எனமருவிற்று. அவ்விடத்து நின்று என்பது சொல்லெச்சமாக வருவித்துரைக்க. கந்தித்து என்பது வினை

யெச்சப் பொருள்தராது செய்வெண் மாத்திரையாய் நின்று கந்தித்தும், சுழன்றும் என்னும் பொருள் குறித்தது. எச்சமாய் நின்று எச்சப்பொருள் தராது செய்வெண் மாத்திரையாய் நிற்றல் *"பயர்ந்து காத்தழிக்கு மற்றைமூவர்" என்பதனுனுமறிக. மங்கி என்பதனேடமையாது போய் என்றது சத்தி கெட்டே போம் என்பதை வலியுறுத்தற்கு. உவமையாக எடுத்துக்காட்டிய காயவாசனையும், சக்கரச் சுழற்சியும் சத்தி கெட்டுப்போமென்பதை வலியுறுத்தற் பொருட்டேயாம். வாசனை தாக்காதிருத்தற்குக் கூறிய காயவுவமையும், திகிரி உவமையும் அவ்வாதனையின் வேற்றுமையை உணர்த்தி நின்றன. ஆதலால், மிகைபடக் கூறலாகிய குற்றமின்று. அவ் வேற்றுமை வருமாறு:—காயவாசனையானது தங்கியிருந்த பாத்திரம் உள்ள அளவும் அவ்வாசனை ஒரேவிதமாயிருத்தல் போல, இறைபணி நின்ற காலத்தும் தேகம் நீங்கும் வரையும் ஒரேவிதமாயிருக்கின்ற தீவிரவாதனையைக் குறிக்கும். திகிரி, முதற் கணத்திற் சுழலும் சுழற்சி மறு கணத்திலில்லாது அவ்வாறே கணந்தோறும் குறைந்து குறைந்து விரைவில் நின்றுவிடுவது போல, பிராரத்த வாதனை சிறிது சிறிதாகக் குறைந்துவருகின்ற மந்தவாதனையைக் குறிக்கும். அங்கிவுவமை புறத்துவிடயந்தாக்காமைக்கும், விடவுவமை விடய அநுபவந்தாக்காமைக்குமாம்.

இச்செய்யுள், முதற் செய்யுளில் ஒருவாற்ருல் வலியுறுத்தப்பட்ட "குற்றமகலும்" என்ற மூன்ருங் கூற்றை வருஞ் சூத்திரத்தில் சிவப்பேறு கூறும் இயைபுபற்றி எடுத்துக் கொண்டு தடைவிடைகளாற் சாதித்தற்குத் தோற்றுவாய் ஆயிற்று. (௬)

இரண்டாமதிகாரணம் முடிந்தது
பத்தாஞ்சூத்திரம் முடிந்தது.
ஆகத்திருவிருத்தம் ௯௦௬.

பதினொராஞ் சூத்திரம்.

சிவப்பேறு.

மேல் பத்தாஞ் சூத்திரத்தால் ஏகனுகி நிற்றல், இறைபணி நிற்றல் என்னும் இரண்டினுலும் பாச நீக்கம் கூறிய பின்னர், அவ்வாறு பாச

---

* திருவாசகம், திருச்சதகம். செ—௯௦.

நீக்கம் எய்திய ஆன்மாவிற்கு நிகழும் சிவாநுபவத்தில் அநுபவிக்கின்ற ஆன்மா, அநுபவம், அநுபவிக்கப்படும் பொருள் ஆகிய இம் மூன்றும் உண்டோ? இல்லையோ? என ஐயம் நிகழுமன்றே. அந்நிகழ்ச்சி பற்றி அம்மூன்றும் அத்துவிதமாய் உண்டு எனச்சிவப்பேறாகிய பயனை வகுத்துக் கூறுதற்கெழுந்தது பதினொராஞ் சூத்திரம். பத்தாஞ் சூத்திரத்தில் சிவப் பேறு தொகுத்துக்கூறி இச் சூத்திரத்தில் வகுத்துக் கூறுகின்றாரென்க.

சிவப்பேறு என்பதே முத்தி எனப்படும். முத்தி என்பது விடுதல். விடுதற்குச் செயப்படு பொருள் பாசமேயாயினும் சிவத்தைப்பற்றி நின்றே விட வேண்டுதலின், சிவப்பேறே தலைமையான முத்தியெனப்படுமாறு காண்க. அம்முத்தியும் பரமுத்தி, சீவன் முத்தி என இருதிறப்படும். பரமுத்தியாவது, பரனாகவே பேதமற நின்று பாசத்தை விடுதல். சீவன் முத்தியாவது, சீவனாகி நின்றும் சிவானுபவமேலீட்டால் பாசத்தை விடு தல். அதாவது, சீவத்தன்மையைச் செய்வதாகிய பாசத்தை இழந்து நிற்றல். இவ்விருவகை முத்தியினுள் பரமுத்தியை விதேக முத்தியென் றுங் கூறுவர். அப்பரமுத்திதான் முதற் கண் நிகழ்வது. அவ்வாறாயின், "காயமொடுமாயு மன்றே" "காயமொழிந்தாற் சுத்தனாகி" என இந்நூலிற் கூறுதலானும், இக்கருத்துத் தோன்றக்கூறும் பிறநூல்களானும், உடம்பு நீங்கிய பின்னர்ப்பரமுத்தி உண்டென்றுணரக் கிடக்கவும் அக்கருத்தொடு முரணாதோவெனின். முரணாது. என்னை? நீங்கிய உடம்பு ஆன்மாவிற் குத்தெரியாதவாறு போல உடம்பிருக்கும்பொழுதே அவ்வுடம்பைப்பற்றிய எண்ணம் சிறிதுமின்றிச்சாதனத்தில் உறைத்து நிற்கப்பெற்றால் உடம்பு தோன்றாது. அப்பொழுதே சிவம் தோன்றும். இந்நிலையே பரமுத்தி. ஆயினும், பிராரத்த கன்மத்தால் மீண்டும் உடம்பு தோன்றவரும். தோன் றுங்கால் முன்னர் நிகழ்ந்த சிவாநுபூதியைச் சிந்திக்கில் உடம்பு மறையும். இவ்வாறு உடம்பு தோன்றுதலும், மறைதலுமாகிய நிலை பிராரத்தம் உள்ள அளவும் நிகழும். ஆதலின், எக்காலத்தும் உடம்பு தோன்றாத பிராரத்த தேக ஒழிவு பரமுத்தி எனப்பட்டது. அப்பரமுத்தியாகிய சிவாநுபவ நிலையே சாதனத்தில் உறைத்து நிற்றலால் முதற் கண் விளங்குவதொன்றா தலின், பரமுத்தி முதற் கண் நிகழும் என்பதும் பொருந்துமாறு காண்க. இதனை இச்சூத்திரத்து முதற் செய்யுளில் "அந்நிலைமை இந்நிலையிலடைந்த முறையாலே" என்பதனானுமறிக. ஆதலால், பரமுத்தியாகிய சிவப்பேறு இப்பதினொராஞ் சூத்திரத்தாற் கூறுகின்றார் என்க.

இச்சூத்திரத்தாற் பரமுத்தியே கூறுகின்றாரென்பதை இதனுட் கூறு வதாகிய "எவ்விடத்தும்" என்றற்றொடக்கத்துச் செய்யுளை எடுத்துக் கொ

ண்டு பரமுத்தியில் உயிருக்கு விடயமாவது ஒன்றின்மையின் வழிநூலாசிரியர் எவ்விடத்து மென்றது அமையுமாறென்னை எனச்சிவஞானபோதச் சிற்றுரைபதினொராஞ் சூத்திரத்து முதலதிகரணத்தில் மாதவச் சிவஞான யோகிகள் அருளுமாற்றானுமறிக. அன்றியும் பன்னிரண்டாஞ் சூத்திரம் சீவன் முத்தனியல்பு கூறுகின்றது என்பதனாலேயே இச்சூத்திரத்திற் கூறுகின்ற முத்தி பர முத்தி என்பது தானே விளங்கும்.

இறைவன் அத்துவிதமாய் நின்றுபகரிக்கும் காட்டிக்காணு முபகாரத்தைச் சிந்தித்து அன்பு செய்தலினால் மலங்கள் நீங்கிச் சிவா நுபவம் உண்டாமெனச் சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது.

காயமொழிந் தாற்சுத்த னாகி யான்மாக்
 காட்டக்கண் டிடுந்தன்மை யுடைய கண்ணுக்
கேயுமுயிர் காட்டிக்கண் டிடுமா போல
 வீசனுயிர்க் குக்காட்டிக் கண்டிடுவ னித்தை
யாயுமறி வுடையனா யன்பு செய்ய
 வங்கிலைமை யிங்கிலையி லடைந்தமுறை யாலே
மாயமெலா நீங்கியரன் மலரடிக்கீ ழிருப்பன்
 மாறாத சிவா நுபவ மருவிக் கொண்டே.

(கொ—ரு) காட்டக் கண்டிடுந்தன்மையுடைய கண்ணுக்கு ஏயும் உயிர்காட்டிக் கண்டிடுமாபோல, உயிர்க்கு ஈசன் காட்டிக் கண்டிடுவன். காயம் ஒழிந்தால் சுத்தனாகி ஆன்மா இத்தை ஆயும் அறிவுடையனாய் என வும், மருவிக் கொண்டே இருப்பன் எனவுங் கூட்டுக.

(பொ—ரை) காட்டக் காணுந்தன்மையுடைய கண்ணுக்கு உருவத்தைக்காணும்படி காட்டியும் அதாவது அறிவித்தும், கண்ணோடு நின்று அவ்வுருவத்தைக்கண்டும், பொருந்திய உயிர் உபகரிப்பது போல, அவ்வுயிர்க்கு விடயத்தை அறியும்படி அறிவித்தும் உயிரோடு கூட நின்று விடயத்தை அறிந்தும் இறைவன் உபகரித்து வருவன். ஆதலான், எல்லாமலங்களும் பின் காய மொடு மாயுமென மேலைச்சூத்திரத்து இறுதியிற் கூறிய வாற்றான், காய மொழிந்த பின்னர் மும்மலங்களும் நீங்கப்பெற்றுச் சுத்தனா

தற்குரிய ஆன்மா, முதல்வன் அத்துவிதமாய் நின்று அறிவித்தும் அறிந்தும் வருகின்ற உபகாரமாகிய உரிமையை உறுதியாகப் பற்றி யறிந்து கொண்டு நிற்கப்பெற்றால், அவ்வாறுபகரிக்கும் உரிமையினையுடைய அம்முதல்வன்றிருவடிகளை அடையவேண்டுமென்னும் இச்சை இடையறாது நிகழும். அங்ஙனம் அறிவும் இச்சையும் பிறிதொன்றிற் சேரலின்றி அத்துவித நிலை ஒன்றே பற்றி முதல்வன் திருவடிக்கண் ஒருங்கு நிகழவே, காயமொழிந்தபின் மலம் நீங்கிச் சுத்தனாய் நிற்கும் முறைமையை காயத்தோடு நிற்கும் பொழுதே கைகூடப் பெறும். அவ்வாறு பெறுதலால், வினைக்கிரியையினையும், எல்லா மலங்களையும் இம்மைக்கண்ணே நீத்தொழித்து இறைவனுடைய அறிவிச்சைகளோடு ஆன்மாவாகிய தன்னுடைய அறிவிச்சைகள் ஒற்றுமைப்பட்டு அவ்விறைவனது செங்கமல மலர்போலும் திருவடியைக்கூடி மாறுபடாத சிவாநுபூதியே சுவாநுபூதியாய்க் கொண்டு வாழ்வன். (எ-று)

காணுமுபகாரத்தில் அத்துவித நிலை இனிது விளங்கும். எவ்வாறெனின், உயிர் ஒன்றனைக் காண்பதற்கு அதனை இறைவனுங் காண்டலே காணுமுபகாரம். அவ்வாறு காணுதல் உயிரின் வேறாய் நின்றால் கூடாது. ஆதலால், ஒன்றாய் நிற்றல் பெறப்படும். ஒன்றாகவே நிற்பின் இவனுக்காக அவன் காணுதலென்பது சித்திக்காது. ஆதலால், வேறாய் நிற்றல் பெறப்படும். இவ்வாறு ஒன்றாகவேனும், அல்லது வேறாக வேனும் நிற்பினும் இவனுக்காக இவன் செல்லுமிடமெல்லாஞ் சென்றுகாண்பனென்பது சித்திக்காமையின் ஒன்றாதற்கும் வேறாதற்கும் பொதுவாக உடனாய் நிற்றல் பெறப்படும. இவ்வாறு ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நிற்கும் நிலையே அத்துவிதமெனப்படும். இதனை விளக்குவதாகிய காணுமுபகார மாத்திரையே இச்சூத்திரத்திற் கூறப்புகுந்த ஆசிரியர், அக்காணுமுபகாரமானது காட்டுமுபகாரத்தின் பின்னாக நிகழுமென்பது இனிது விளங்குதற் பொருட்டு மேல் நிஞ்சூத்திரத்திற் கூறிப்போந்த காட்டுமுபகாரத்தையும் அநுவதித்து உடன் கூறினார். இச்சூத்திரத்திற்குக் காணுமுபகாரமாத்திரையே கூறுதல் கருத்தென்பது சிவஞானபோதமாகிய முதனூலில்* "உள்ளத்தைக் கண்டு காட்டல்" என்னுஞ் சூத்திரத்திற்கு "அவனுமவற்றது

* சிவஞானபோதம், கக்ம் சூ-ம்

விடயத்தை உணருமென்றது" எனக்காணு முபகாரமாத்திரையே எடுத்துக்கொண்டுரைத்த கண்ணழிப் புரையானு முணர்க. காட்டுமுபகார மாத்திரையேயன்றி, அதன் பின்னாக உடனின்று காணு முபகாரமும் உயிர்க்கு வேண்டப்படுமென்பது "எவ்விடத்தும" என்னும் இச்சூத்திரம் எ-வது செய்யுளிற் காட்டப்படும்.

சுத்தனாகி என்பது சுத்தனாவோன் என்னும் பொருள் குறித்தலின் ஆகி என்பது பெயர். அந்நிலை என்பதற்கு மேல் அ-ஞ்சூத்திரம் உஉ-வது செய்யுளிற் கூறப்பட்ட ஞானஞேயமொடு ஞாதிருவுநாடாவண்ணம் சிவனுடனும் பெற்றி நிலையெனவும், மலம்நீங்கியிருக்கின்ற சிவன்போலும் நிலையெனவும் உரைப்பாரு முளர். அகரச்சுட்டு மேல் அடுக்க நின்றதனையொழித்து வேறொன்றனைச் சுட்டுதல் செல்லாமை அவர் நோக்கிலர். இச்சூத்திரத்தில், மேலைச்சூத்திரத்திற் கூறாது விடுத்த குற்றமகலும் என்பதை விரித்துக் கூறுகின்றாராதலின் இச்செய்யுள் முக்கூற்றையுடையது. ஆயினும் முதனூல் முறைப்படி இச்சூத்திரத்தை இரண்டு கூறாக்கி, மேலைச்சூத்திரக்கூற்றை ஒரு கூறாகப் பிரித்தெண்ணாது முதற்செய்யுளுடன் தொகுத்து வைக்கப்பட்டிருக்கின்றது. அம்முக்கூற்றுள், மேலைச்சூத்திரத்தின் ஒழிபாகிய கூறு:—

காயமொழிந்தாற் சுத்தனாகி அந்நிலைமை இந்நிலையில் அடைந்த முறையாலே மாயமெலாம் நீங்கி.

இச்சூத்திரத்து முதற் கூறு:—ஆன்மா காட்டக் கண்டிடுந்தன்மையுடைய கண்ணுக்கு ஏயும் உயிர் காட்டிக் கண்டிடுமாபோல ஈசனுயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன்.

இரண்டாங்கூறு:—இத்தை ஆயும் அறிவுடையனாய் அன்பு செய்ய அரன்மலரடிக்கீழ் மாறாத சிவானுபவம் மருவிக்கொண்டே இருப்பன். (க)

சிவானுபவமுடைய முத்தருக்குச் சிவமேயன்றிப் பிற பொருள் தோன்றாதெனக் கூறுகின்றது.

பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பல்ஞான மஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானம் வயிந்தவத்தின் கலக்கந்
தருஞானம் போகஞா திருஞான ஞேயந்
தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகுக்

திருஞான மிவையெல்லாங் கடந்தசிவ ஞான
மாதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்.

(கோ - ௫) கலக்கந்தரு வயிந்தவத்தின் ஞான மெனவும், போகத் தங்கிய ஞாதிருஞான ஞேயஞானம் சங்கற்பனை ஞானமாகும் எனவும், இவையெல்லாங் கடந்த சிவஞானம் திருஞானமெனவுங் கூட்டுக.

(போ - ரை) மேற்கூறியவாறு அத்துவிதமாய் நின்று உபகரிக்கும் இறைவன் உரிமையை ஆயும் அறிவாகிய பரஞானத்தால் அச்சிவத்தை நோக்கி அன்பு செய்யப்பெற்றவர் அச்சிவம் ஒன்றனையே அறிந்து நிற்பரன்றிப் பிராரத்தவினை தாக்குதற்குரிய ஏனைப்பொருள்களை ஒரு சிறிதுங் காண்பாரல்லர். அப்பொருள்களைக் காணவரும் ஞானங்கள் கருவிகளோடு கூடி நின்றறியும் பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம் என்னும் சுட்டுணர்வின் பேதங்களாகிய அளவை ஞானங்களாம். குருவினிடத்துக் கேட்கும் சாத்திர ஞானமோவெனின், அது ஐயந்தருவதாய் நால்வகை வாக்கைப்பற்றி நிகழும் சுத்தமாயா காரியமாகிய சொல்லும் பொருளுமான ஞானமாம். அச்சாத்திரம் பலவேறு வகைப்பட விரிந்து கிடக்குமாதலால், இது சரியோ, அது சரியோ என்ற கலக்கமுண்டாகும். அக்கலக்கந் தீர்வதற்காக அப்பொருளை ஆராய்வதான சிந்தித்தல் ஞானமோவெனின், அது ஆராய்ச்சி ஞானமாம். சிந்தித்த பின்னர்த் தெளிவதாகிய சாதன ஞானமோவெனின், அது காண்பானும் காட்சியும் காணப்படு பொருளுமாகிய பேதஞானமேயன்றி அநுபூதி ஞானமன்று. ஆதலால், இவையனைத்திற்கும் மேலாய் இவ்விடத்திற் கூறப்பட்ட நிட்டையாகிய சிவஞானமொன்றே பதார்த்தங்களைப் பார்க்க வராத சிறப்புடைய ஞானமாம். இதனைப்பெற்ற சீவன் முத்தர் சிவமொன்றே கண்டிருப்பானன்றி ஏனைப்பதார்த்தங்களை நோக்கிப் பிராரத்தவாதனையிற் படுவாரல்லர். (எ-று)

இச்செய்யுளில் முதற்கண் "பரமே பார்த்திருப்பர்" என்றதனையே முடிந்தது முடித்தலென்னும் உத்தியால் "சிவமே கண்டிருப்பர்" என இறுதிக்கண் கூறினாராகலின் கூறியது கூறலன்மை யுணர்க. பரமே

சிவமே என்றவிடத்து ஏகாரம் ஏனைப்பதார்த்தங்களைப் பிரித்தமையின் பிரிநிலை. இவ்விடத்து அஞ்ஞானமென்றது சுட்டுணர்வைக் குறித்தது. கலக்கம்—ஐயம். கேட்டலறிவானது பின்னர்ச் சிந்தித்துத் தெளியும்படி ஐயத்தை விளைத்தலால் அதனைக் கலக்கந்தரு ஞானமென்றார். போகத் தங்கிய ஞானம் என்றது அக்கலக்கந்தரு ஞானம் போம்படி காண்பானும் காட்சியும் காணப்படு பொருளுமாகத் தங்கிய பேத ஞானம் என்பதாம். பரமே பார்த்திருப்பரென்றதனால் பிராரத்தத்தின் வாதனை பற்றறக்கழியு மென்பது சாதிக்கப்பட்டது. (உ)

திவ்விய தேகத்தோடு இருத்தலே முத்தி என்பாரை மறுத்துச் சிவாநுபவம் உடையவர்க்கு மாயாமலம் பற்றறக் கழியுமெனக் கூறுகின்றது.

அநாதியுட லொன்றினைவிட் டொன்றுபற்றிக் கன்மா
லாயழிந்து வருதலா லந்த மில்லை
யினாதியருள் பெற்றவர்க ணித்தவுரு வத்தைப்
பெற்றிருக்கை முத்தியெனிற் பெறும்பதமே யிதுவு
மினாதுநிலை யிதுதானுங் காய முண்டே
லிருங்கன்ம மாயைமல மெல்லா முண்டா
மனாதிதரு முடலாதி காரியத்தா லநாதி
மலமறுக்கு மருந்தற்று லுடன்மாயுங் காணே.

(கோ - ரு.) உடல் அநாதி ஒன்றினைவிட்டு ஒன்று பற்றிக் கன்மால் ஆய்ப் பின் அழிந்து வருதலால் அந்தம் இல்லை. ஆதி அருள் பெற்றவர்கள் நித்த உருவத்தைப் பெற்றிருக்கை முத்தி யெனில், காயம் உண்டேல் மாயை இருங்கன்மம் மலம் எல்லாம் உண்டாம். இதுதானும் இனாது நிலை. இதுவும் பதமே பெறும். மனாதிதரும் உடல் காரியத்தால் ஆதி.

(போ - ரை.) ஆன்மாக்களுக்கு அநாதியே கன்மத்தினால் நீரோட்டம் போலத் தொடர்ச்சியாய்த் தேகம் உண்டாகியும் அழிந்தும் வரும். ஆதலால் யாதேனும் ஒரு தேகம் இல்லாத நிலை இல்லை. அவ்வாறு ஒரு நிலை உண்டென்று கூறுதல் பொருந்தாது. ஆதலின் முதல்வனருளைப் பெற்றவிடத்தும் தோன்றியழியும் உடம்புபோலின்றி நித்தியமங்கள திப்பிய சரீரத்தைப்பெற்

றிருத்தலே முத்தியென்று உருவசிவ சமவாதிகள் கூறுவர். அவ்வாறாயின் உடம்பு உளதாகவே அதற்குக் காரணமாகிய மாயையும், அதன்கண் நிகழும் சுகதுக்க அநுபவங்கட்கு ஏதுவாகிய மிக்க கன்மமும், அக்கன்மத்தைக் கூட்டுவிப்பதாகிய ஆணவமும் ஆகிய அனைத்தும் விட்டு நீங்குதலில்லை. ஆதலின், அந்நிலையும் துன்பம்பயக்கும் நிலையேயாம். அதனை முத்தியென்று நூல்களிற் கூறுவதற்குத் தாற்பரியம் பதமுத்தி யென்பதேயாம். அன்றியும் இவ்வுடம்பு மனமுதலிய சூக்கும சரீரத்தினின்றும் தோன்றுதலினால் ஆதியேயாம்; அநாதியன்று. அதுவும் ஆன்மாவை அநாதியேபற்றி இருக்கின்ற ஆணவ மலமாகிய நோயைத் தீர்த்தற்கு மருந்தாகத் தோற்றுவதாம். ஆதலால், ஆணவ மலம் நீங்கியவிடத்து உடம்பு நீங்குவதேயன்றி மலம் நீங்கி அருள் பெற்ற முத்தியிலும் உடம்பு உண்டென்றல் பொருந்தாது. (எ-று)

சிவசமவாதம் உருவ சிவசமவாதம், அருவசிவசமவாதம் என இரு திறப்படும். உருவ சிவசமவாதமாவது, சிவனுடைய தடத்தத் திருமேனியைப்போல், சரீரத்தைப்பெற்று அதனால் சிவனோடு சமமாவேனென்பது. அருவ சிவசமமாவது சிவனுடைய சொரூபத் திருமேனியைப்போல், மல நீங்கிய நிலையில் தனக்கும் எண்குணமுடைமையும் பஞ்சகிருத்தியமுடைமையும் உளவெனக்கொண்டு சிவனோடு சமமாவேனென்பது.

கன்மமலமென்பது ஆன்மாவினாற் செய்யப்படும் நல்வினை தீவினைகள். இது அநாதி கேவலத்தினின்று சகலத்திற்கு வந்தது முதல் தொடர்ச்சியாய் நிகழும். சகலத்தில் முதற்கண் நிகழ்வதற்கும் ஓர் தொடர்ச்சி வேண்டப்படும். அதுவே மூலகன்மம் எனப்படும். அம்மூலகன்மமும் பலவேறு வகைப்பட நிகழ்ந்தாலன்றி அதுசம்பந்தமாகப் பின்னிகழும் கன்மம் பலவேறுவகைப்பட நிகழுமாறில்லை. அங்ஙனம் மூலகன்மம் பலவேறுவகைப்பட நிகழ்தற்கும் ஒருகாரணம் வேண்டப்படும். அது ஆணவ மலமறைப்பின் பேதமேயாம். ஆகவே, கன்மத்தைக் கூட்டுவிப்பது ஆணவ மலமென்பதறிக. இந்த ஆணவமலம் இயல்பாகவே கூடியிருத்தலால் அநாதியெனப்பட்டு அதனாற் கூட்டப்படும் கன்மமும், அக்கன்மத்தாற் கூட்டப்படும் மாயையும் அநாதியாமாறு கண்டுகொள்க.

இச்செய்யுள், ஆணவமலம் நீங்கி முத்திபெற்ற பின்னரும் மாயாகாரியமாகிய உடம்பு உண்டென்னும் உருவ சிவசமவாதிகளை மறுத்து, ஆணவ

மலம் நீங்கிய பின்னர் அதுகாரணமாக உண்டாகும் மாயாகாரியம் பற்றறக் கழியுமென்பது தடைவிடைகளாற் சாதிக்கப்பட்டது. (௩)

சிவாநுபவமுடையார்க்கு ஆணவமலம் பற்றறக் கழியும் என உவமை முகத்தால் கூறுகின்றது.

தெரிவரிய மெய்ஞ்ஞானஞ் சேர்ந்த வாறே
சிவம்பிரகா சிக்குமிங்கே சீவன்முத்த னாகு
முரியமல மௌடதத்தாற் றடுப்புண்ட விடமு
மொள்ளெரியி னொளிமுன்ன ரிருளுந் தேற்றின்
வருபரல்சேர் நீர்மருவு கலங்கலும்போ லாகி
மாயாதே தன்சத்தி மாய்ந்து காயந்
திரியுமள வும்முளதாய்ப் பின்பு காயஞ்
சேராத வகைதானுந் தேயு மன்றே.

(கோ - டு.) உரியமலம் மாயாதே தன் சத்திமாய்ந்து காயம் திரியும் அளவும் உளதாய் பின்பு காயஞ் சேராத வகைதானுந் தேயுமன்றே. தேற்றின் வருபரல் சேர்நீர் மருவு கலங்கலும், ஒள் எரியின் ஒளிமுன்னர் இருளும், ஔடதத்தால் தடுப்புண்ட விடமும் போலாகி.

(பொ - ரை.) மேற்கூறிய தெரிதற்கரிய பரஞானத்தைப் பெற்றபொழுதே சிவம் பிரகாசிக்கும். அப்பொழுதே சீவன்முத்தனுவன். சீவன்முத்தியாவது, சிவம்பிரகாசிக்கப் பெற்றும் பிராரத்த தேகத்தோடு கூடிய நிலையாம். தேகத்தோடு கூடியிருப்பினும் சகசமாகிய ஆணவமலம் தனது சத்திகெட்டு வாசனை மாத்திரையாய் உடம்பு உள்ள அளவும் நின்று உடம்பு நீங்குங்கால் பிறிதொரு பிறவிக்கேதுவின்றி அவ்வுடம்போடு பற்றறக்கழியும். மலமிருந்தும் அதன் செயலில்லாமற்போவது எவ்வாறெனின், தேற்றான்விரை சேரப்பெற்ற நீரில் அடங்கியிருக்கும் கலங்கல் யாதானும் ஒரு காரணத்தால் மேற்படினும் மீண்டும் அத்தேற்றான் விரை அடக்கிவிடும். அதுபோலப் பரஞானத்தால் அடங்கியிருக்கும் மலம் பண்டை வாசனையால் மேற்படினும் மீண்டும் அப்பரஞானம் அடக்கிவிடும். அடங்கியாவது மல மிருத்தலினல்

பிறிதொரு பிறவியைத்தராது கழியுமென்றல் எவ்வாறு கூடு மெனின், மிகுந்த அக்கினிப்பிரகாசத்தின் முன்னர் இருளில்லா ததுபோல் தேகம் நீங்கிய பின்னர் எப்பொழுதும் சிவம் பிரகா சிக்கப்பெறுவாதலின், அவரிடத்து மலம் பற்றறக் கழியும். கழியினும், அக்கினிப் பிரகாசம் இல்லாத விடத்து இருள் இருப் பது போல, ஏனைப் பெத்தரிடத்தில் மலமிருக்கும். அவ்வாறுயின் தேகத்தோடு கூடியிருக்கும்போதே சிவம் பிரகாசித்துவிட்டபடி யால் சீவன் முத்தி நிலையினும் மலம் அறவே யில்லையென்று சொல்லக்கூடாதோவெனின், கூடாது. எதனுலெனின், மருந்தி னுற்றடைப்பட்டிருக்கும் நஞ்சமானது மருந்தின் வலியின் குறை வை எதிர்பார்த்திருப்பதுபோல், சீவன் முத்தரிடத்துஞ் சிவபா வனையினின்றும் நழுவுதலை மலம் எதிர்பார்த்து அடங்கியிருக்கு மாதலினென்க. ஆதலால், சிவம் பிரகாசிக்கப்பெற்ற சீவன் முத்தி நிலையினும் எப்பொழுதும் சிவபாவனை செய்து தேகம் நீங்கப் பெற்றுல் மலம் பற்றறக்கழியும். (எ-று.)

மெஞ்ஞானஞ் சேர்ந்தவிடத்து தேற்றின் வருபரல்சேர் நீர் மருவு கலங்கல்போலும், சிவம் பிரகாசித்தவிடத்து ஒள்ளெரியி னெளிமுன்னர் இருள்போலும், சீவன்முத்தனுனவிடத்து ஔடதத்தாற் றடுப்புண்ட விடம் போலும் என எதிர் நிரனிறையாக வைத்துக் கண்டுகொள்க. விளக்கு முதலிய அற்ப எரியின் ஒளிகளை நீக்குதற்கு ஒள்ளெரி என விசேடித்தார். ஒள்ளெரி—மிச்க எரி. இச் செய்யுளால் ஞானம் பிரகா சித்தோர், சிவம் பிரகாசித்தோர், சீவன் முத்தராகிய மூவரிடத்தும் மலம் பற்றறக் கழியுமுறைமை கூறப்பட்டது. (ச)

ஆணவமலம் அநாதி யாதலால் பற்றறக் கழியாதென்பாரை மறுத்துப் பற்றறக் கழியுமென்பது வலியுறுத்தப்படுகின்றது.

ஆணவந்தா னநாதி யந்த மடையாதாகு
மடையினந்த வான்மாவு மழியுமெனிற் செம்பிற்
காணவுறுங் களிம்பிரத குளிகைபரி சிக்கக்
கழியுஞ்செம் புரு நிற்கக்கண்டோ மன்றே

தாணுவின்றன் கழலிணையத் தவிருமலந் தவிர்ந்தாற்
றன்சுத்த னாயிருக்கை முத்தியரன் றனைப்
பூணவேண் டுவதொன்று மில்லையெனி னருக்கன்
புகுதவிருள் போமடியிற் பொருந்தமலம் போமே.

(கோ—டு) இரத குளிகை பரிசிக்கச் செம்பில் காணலுறு களிம்பு கழியும் எனவும், மலம் தவிரும் எனவும், பொருந்தவே மலம் போம் எனவுங் கூட்டுக.

(போ - ரை.) முற்கூறிய ஆணவமலம் அநாதி நித்தமாதலால், முத்தியில் அது அழிவதில்லை. அழியுமாயின், அநாதி நித்தமாகிய ஆன்மாவும் அழியுமெனப்பட்டு இரு பொருளும் நித்தமென்பது இழுக்காய் முடியும். ஆதலின், முத்தி நிலையினும் சகசமாகிய ஆணவமலம் நீங்குமாறில்லை என்பர் பாடாண வாதசைவர். மலத்தோடு கூடி அறியாமையாய் அடங்கியிருத்தலின் பாடாணவாதி யெனப் பட்டார். பாடாணம் என்பது கல். அநாதியாகிய செம்பினிடத்து அநாதியாயுள்ள களிம்பு இரதகுளிகை பரிசித்த மாத்திரத்தில் நீங்கி அச் செம்பு பொன்னுருவாய் நிற்கக் காண்பது போல், இறைவன்றிருவடியாகிய மெய்ஞ்ஞானஞ் சார்ந்த மாத்திரையே உயிரோடு சகசமாய் நின்ற ஆணவமலம் நசிக்கும்; நசிக்கவே உயிர் ஆணவமலத்தின் வேறாய்ச் சிவமாய் நிற்றற்கு இழுக்கில்லையாதலின் அப் பாடாணவாத சைவர் மதம் பொருந்தாது. இனி மலம் நீங்கப் பெற்ற மாத்திரையே மெய்ஞ்ஞானம் சாரும். அதுவே முத்தி; மலம் நீங்கியபின் மேலும் திருவடியடைதல் வேண்டாமென்பர் பேதவாத சைவர். இவர் சிவனோடு கலவாமையின் பேதவாதி எனப்பட்டார். இருள் நீங்கிச் சூரியனொளி பிரகாசித்த விடத்தும் சூரியனொளியோடு கண்ணொளி கலந்தால் இருள் நீங்கும். கலவாது இமைகளால் மூடப் பெற்றிருப்பின் கண்ணுக்கு இருள் நீங்காதவாறு போல, ஆன்மாவின் அறிவுக்கு மெய்ஞ்ஞானம் பிரகாசித்து ஆன்மா இறைவனுடன் கலந்தால் மலம் பற்றறக் கழியும். இன்றேல் ஆன்மாவினிடத்து

மலம் பற்றறக் கழியாது; ஆதலால், அப் பேதவாத சைவர் மதமும் பொருந்தாது. (எ. று.) (ரு.)

அநாதியான ஆணவமலம் கெடுமென்பதற்கு வேறு உவமை கூறி, கெடினும் ஏனைப் பெத்தரிடத்திருத்தலினால் நித்தத்திற் கிழுக்கில்லை எனக் கூறுகின்றது.

நெல்லினுக்குத் தவிடுமிக ளநாதி யாயே
நெல்லைவிட்டு நீங்கும்வகை நின்றநிலை நிகழ்த்தீர்
சொல்லியிடிற் றுகளற்ற வரிசியின்பா லில்லை
தொக்கிருந்து மற்றொருநெற் றோன்றி டாவா
மெல்லவிவை விடுமறவே யிவைபோல வணுவை
மேவுமல முடல்கன்ம மநாதிவிட்டே நீங்கு
நல்லசிவ முத்தியின்கட் பெத்தான் மாவை
நணுகிநிற்கு மாதலா னைசமுமின் றாமே.

(கோ—டு) நெல்லினுக்கு அநாதியாயே (முளை) தவிடு உமிகள் நெல்லை விட்டு நீங்கும் வகை நின்ற நிலை நிகழ்த்தீர்; தொக்கிருந்து மற்றொரு நெல் தோன்றிடாவாம். சொல்லிபிடின் துகளற்ற அரிசியின் பால் இல்லை. மெல்ல இவை அறவே விடும். இவை போல அநாதி அணுவை மேவுமலம் உடல்கன்மம் நல்ல சிவமுத்தியின் கண் விட்டே நீங்கும்.

(போ – ரை) இரத குளிகை பரிசித்த செம்பிலும் களிம்பு தொக்கியிருக்கும். அதுபோலச் சிவம் பிரகாசித்த ஆன்மாவிடத்தும் மலந்தொக்கி நிற்கும். ஆதலால், அவ்வுவமையினால் மலம் அழிந்தும் ஆன்மா அழியாதென்று சாதித்தது பொருந்தாதெனின், அரிசியொடுஞ் சகசமாய் நின்ற முளை தவிடு உமிகள் அநாதியாயினும் அவ்வரிசியை விட்டுக் கெட்டொழிய அவ்வரிசி கேடின்றி நிலைபெறுதல் கண்டாம். இங்ஙனம் நீங்குமியல்பை யாராய்வீராக. முளையின் கேடு காணப்படவில்லையென்று சொல்லுமிடத்து, தவிடுமிகள் நீங்கிய அவ்வரிசியின் கண்ணும் முளையடங்கியிருக்குமேனும், வேறு நெல்லுத்

தோன்றுதற்குக் காரணமாதல் செல்லாமையால், தவிடுமிகளற்ற அவ்வரிசியின்கண் அம்முளையடங்கியிருக்குமென்றுசொல்லுதற்கு ஓரியைபின்றிச் சிலநாளில் மெல்ல மெல்ல நீங்கிவிடுமாதலின், அம்மூன்றும் இல்லையென்பதே தேற்றம். அது போல, அநாதியே உயிர்களோடு சகசமாய் நின்ற மும்மலங்களும் நன்மையாகிய சிவமுத்தியில் விட்டொழியுமென்றே கொள்க. விட்டொழியினும் ஏனைப் பெத்தரிடத்து இருத்தலால் அம் மலங்கள் நித்தப் பொருளாதற்கும் இழுக்கில்லை. (எ—று.)

துகள்—தவிடுமிகள். மாயை, உடலெனவுபசரிக்கப் பட்டது.

உண்மை விளக்கமென்னும் நூல், ௫௧-வது செய்யுளில் "இத்தை விளைவித்தல் மலம்" எனக் கூறி முத்தியினும் மலம் உண்டென்று சாதித்திருக்கவும், முத்தியில் மலம் நீங்குமென்றல் எவ்வாறு பொருந்துமெனின், துன்பத்தை விளைவிக்கும் மலம் இன்பத்தை விளைவிக்க மாட்டாது. இருள் ஒளியைச்செய்தலெக்காலத்து மில்லையாதலின், மலநீக்கமே இன்பத்தை விளைவிக்கும் என்பதை அவ்வாறு கூறினராகையால் மலம் நீங்குமென்றல் பொருந்தும் என்க. அச்செய்யுளில் இல்லையென்னும் உணர்விற்கு விடயமாய் மலம் நின்றவாறறிக. ஆயினும் இல்லையென்று கூறவேண்டிய மலத்தை உண்டென்று கருதும் வண்ணம் கூறியது பொருந்துமோவெனின், சுருக்கிக் கூறவேண்டிய இடங்களில் அவ்வாறு கூறுதல் நூல் வழக்காதலின் பொருந்தும். இதனை "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே பெடுப்பதூஉ மெல்லாம் மழை" என்னுந் திருக்குறளானு மறிக. மழை கெடுப்பதூஉம் என்பதற்கு மழையின்மை கெடுப்பதும் என்பது பொருளாதல் போல, மலம் இத்தை விளைவித்தல் என்பதற்கு மலமின்மை இத்தை விளைவித்தல் என்பது பொருளாதலறிக.

பெத்தான்மாவை நணுகி நிற்றலினால் மலம் நித்தமென்ற இதனானே சில ஆன்மாக்கள் நித்திய பெத்தராயிருப்பரோவெனின், அன்று. ஒவ்வொரு ஆன்மாக்களும் முத்தியடைதற்குரியனவேயாம். இதுபற்றிய சங்கையுத்தரங்களை இவ்விடத்து விரிப்பிற் பெருகும். "விண்டவர்கண் மூலமலம் வீற்றிவர மீளார், பண்டைமுறை நாடுடல் படைப்பு நிலையீறுங், கண்டனை பிழந்த உயிர்காரணனிடத்தே, யுண்டுலவிடாத கிழியுற்றபொருளொத்தே" என்னும் சிவதருமோத்தரச் செய்யுளானும் "பிறந்த நாண்

மேலும் பிறக்கு நாள் போலுந், துறந்தோர் துறப்போர் தொகை'' என்னும் திருவருட் பயனும், பிறவாற்றானும் உய்த்துணர்ந்து கொள்க.

சிவம் பிரகாசித்த விடத்தும் மலம் தொக்கி நிற்கும் என்பாரை மறுத்தற்கெழுந்த இச்செய்யுளில், மெய்ஞ்ஞானஞ் சேர்ந்த மாத்திரையே மலம் பற்றறக் கழியுமென்பாரையும் மறுக்கவேண்டி "மெல்ல இவை விடுமறவே'' என்றுங் கூறினர். கூறவே, மெய்ஞ்ஞானத்தால் மலம் சிறிது சிறிதாக நீங்கப்பெற்று சிவம் பூரணமாய்ப் பிரகாசித்த விடத்து மலம் பற்றறக் கழியுமென்பது கண்டுகொள்க. செய்யுளில் முளைகூறவில்லையாயினும் தவிடு உமிக்குரிய இனம்பற்றியும், உவமேயப் பொருளாகிய மலம் மூன்றென்பது பற்றியும் முளையுமுடன் வைத்து உரைசெய்யப்பட்டது. இரத குளிகை பரிசித்த செம்பு சுத்தமான பொன் என்பது காட்சியளவைக்கெய்தாமையின் அதில் களிம்பு தொக்கிருக்கு மென்பார்க்குக் காட்சியளவையின் வைத்துத் தொக்கு நிற்றல் செல்லாதென்பதுணர்த்துதற் பொருட்டு இல்லை யென்னும் உணர்வாகிய அநுபலத்தியாலறியப்படும் நெல்லுவமையைக் கூறினர். முளை உமி தவிடு நீங்கினமை காட்சியளவையின் வைத்தறியப்படுதலின் தொக்கிருக்கு மென்றல் செல்லாமையறிக. இவ்வுவமையால் மலம் அநாதி யென்பதும், அது அழியுமென்பதும், அதனால் ஆன்மா அழியாதென்பதும் ஒருங்கே வலியுறுத்தப்பட்டன.

இவையைந்து செய்யுளும் மேலைச் சூத்திரத்தின் "அகலுங் குற்றம்'' என்ற இறுதிக்கூற்றின் ஒழிபாய் சிவப்பேற்றோடு இயைபுபற்றி இவ்விடத்து வைக்கப்பட்டன. (சு)

முதலதிகரணம்.

ஆன்மா காட்டக் கண்டிடும்......கண்டிடுவன்என்பது.

அநாதி சம்பந்தமான ஆணவமலத்தினின்று முத்திக்காலத்து உயிர் நீங்குமாறுபோல, பெத்தமுத்தி இரண்டினும் இறைவனை விட்டு நீங்கி உயிர் தனித்து நிற்றல் இல்லையெனக் கூறுகின்றது.

எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தொன்றை
யறிந்தியற்றி யிடாவுயிர்க ளீசன் றானுஞ்
செவ்வினி னுளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து
சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்ப
னிவ்வுயிர்க டோற்றும்போ தவனையின்றித் தோற்றா
விவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கு
மவ்வுயிர்போ னின்றிடுவ னதலா
மரனடியை யகன்றுநிற்ப தெங்கே யாமே.

(கோ - டு.) எவ்விடத்தும் இறை அடியை இன்றி உயிர்கள் அமைந்து ஒன்றை யறிந்து இயற்றியிடா ஈசன்றானும் அம்முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கும் அவ்வுயிர்போல் இவ்வுயிர்கள் தோற்றும் போது அவனையின்றித் தோற்றா. இவற்றினுக்கு நின்றிடுவன். செவ்வினின் உளம் புகுந்து செய்தி எலாம் உணர்ந்து சேட்டிப்பித்து எங்குமாய்ச் செறிந்து நிற்பன். ஆதலால் நாம் அரனடியை அகன்று நிற்பது எங்கேயாமே.

(போரை.) மேற்கூறியவாறு அநாதியான ஆணவமலத்தினின்று நீங்குவது போல, அநாதியாகிய இறைவனை விட்டும் உயிர் நீங்குமோவெனின், எக்காலத்தும் இறைவனைவிட்டு உயிர் நீங்காது. எதனாலெனின், பெத்த முத்தி இரண்டினும் ஆன்மாக்கட்கு இறைவன் திருவடியையின்றி நின்று அறிவு செயல்கள் விளங்குதலும், விளங்கியபின் விடயத்திற் சென்று பற்றுதலுங் கூடாவாம். ஆகலான் அக்கரங்களை இயக்குதற் பொருட்டு அகாமாகிய நாதம் அவ்வக்கரங்களின் உடனிற்குமாறுபோல, ஆன்மாக்களுக்கு அறிவு செயல்கள் இறைவனையின்றி விளங்காமையின், அவை விளங்குதற் பொருட்டு இறைவன் அவ்வான்மாக்களோடு கலந்து நிற்பன். இது காட்டும் உபகாரம். அங்ஙனம் விளங்கிய அறிவு செயல்கள் விடயத்திற் சென்று பற்றுதற்பொருட்டு அவ்வுயிர்களை இறைவன் இடமாகக்கொண்டு உயிர்கள் செல்லும் வழி எல்லாம் இறைவன் அறிந்து செலுத்தி விடயங்களினும் உடனாகக் கலந்து நிற்பன். இது காணும் உபகாரம். ஆதலால், ஆணவமலத்தினின்றும் நீங்கி முத்தியில் உயிர் வேறு நிற்பதுபோல,

இறைவனைவிட்டு நீங்கித் தனித்து நிற்றல் பந்தமுத்தி இரண்டினு மில்லை. (எ-று.)

மலத்திற்கும் ஆன்மாவிற்குமுள்ள சம்பந்தம் அரிசிக்கும் உமிக்கும் போல அநாதி சையோகமாதலின், மலத்தினின்று ஆன்மா நீங்குமெனவும், இறைவனுக்கும் ஆன்மாவிற்குமுள்ள சம்பந்தம் குணகுணிகட்குப் போல அநாதி தாதான்மியமாதலின், இறைவனைவிட்டு ஆன்மா எக்காலத்தும் நீங்குமாறில்லையெனவும் அறிந்துகொள்க. குணகுணிவுவமை பிரிக்க முடியாமைக்கு மாத்திரங் கொள்க.

இச்செய்யுளுள் உயிர்கள் இயற்றியிடாவெனவும் ஈசன்றானும் எங்குமாய்ச் செறிந்து நிற்பனெனவும் கூறியது, ஆன்மாவினறிவு செயல்கள் விடயங்களை யநுபவிக்குமியல்பிற்கும், அமைந்து அறிந்திடாவெனவும் தோற்றும் போதவனையின்றித் தோற்றாதெனவும் ஈசனவ்வுயிர்போனின்றிடுவனெனவுங் கூறியது, அவ்வறிவு செயல்கள் விளங்குதற் கட்படுமியல்பிற்குமெனக் கொள்க. இடா என்பதை அறிந்து என்பதனோடுங் கூட்டுக. இவ்விருதிறத்துள், அறிவு செயல்கள் விளங்குதற்கு உயிரிற் கலந்து நின்று அவ்வறிவு செயல்களை விளக்கவேண்டுதலின் அங்ஙனம் விளக்குதல் காட்டுமுபகாரமெனவும், விடயங்களை யநுபவித்தற்கு உயிரை யதிட்டித்துக் கொண்டு சென்று விடயத்திற் கலந்து நிற்க வேண்டுதலின், அவ்வாறு நிற்றல் காணுமுபகாரமெனவு மறிந்து கொள்க.

உயிர் ஒன்றனை யநுபவித்தல் இறைவன் அவ்வநுபவிக்கப்படும் பொருளினிடத்தும் சென்று கலந்து நின்று செய்யும் காணுமுபகார மாத்திரத்தாலேயே கூடும். இவ்வாறன்றி, உயிரோடு கலந்து நின்று செய்யும் காட்டுமுபகார மாத்திரையினால் கூடாது. காட்டும் உபகாரமேயன்றிக் காணுமுபகாரமும் உயிர்க்கு வேண்டப்படுமென்பதைக் கண்ணொளியினிடத்துக் கலந்திருக்கின்ற விளக்கொளியில் வைத்தும் அறியலாம். அதாவது கண் ஒரு விடயத்தைக் காணவேண்டுமாயின், அக்கண்ணினிடத்திருக்கின்ற இருளை விளக்கொளி மாற்றுவதோடு பார்க்கப்படும் பொருளினிடத்தும் இருளை மாற்றல் வேண்டும். அவ்வாறின்றி, கண் விளக்கொளியோடு கூடினும் பொருள் இருளிலிருக்குமாயின் பொருளையறிய முடியாது. ஒளியோடுகூடிய பொருளை இருளோடுகூடிய கண்பார்க்கின்றதே எனின், அவ்விருளோடுகூடிய கண்ணொளி பொருளோடு கலந்திருக்கின்ற விளக்கொளியோடு சென்று கலந்து பொருளையறிவதேயன்றிப் பிறிதில்லையென அறிக. இதனால் கண்ணொளிக்குக் காணுந்தன்மையும், செல்லுந் தன்மை

யும் உண்டென்பதும், அவற்றுள், கண்ணோடுகூடிய இருள் காணுந்தன்மையைத் தடுக்குமே யன்றிச் செல்லுந்தன்மையைத் தடுக்காதாதலின், கண் இருளோடு கூடியிருப்பினும் ஒளியோடுகூடிய பொருளை அறிதல் கூடுமென்பதும் அறிக. காட்டுமுபகாரம் காணுமுபகாரம் என்னும் இவ்விரண்டும் வேண்டப்படும் என்னும் இக்கருத்துப்பற்றியே * "அறிவானுந் தானே யறிவிப்பான்றானே" என்றபின் "அறிவாயறிகின்றான்றானே" என்றருளிச் செய்தனர் காரைக்காலம்மையார். இதனுள் முன்னின்ற அறிதல் காட்டுமுபகாரமாகிய அறிவித்தற் கெனவும், பின் நின்ற அறிவாயறிதல் காணுமுபகாரமாகிய அநுபவித்தற்கெனவும் அறிந்து கொள்க.

இச்செய்யுளால், அநாதியே உடனின்ற ஆணவமலத்தைவிட்டு உயிர் நீங்குமாறுபோல, இறைவனோடு கூடினும் அவ்விறைவனையும் ஒரு சமயத்தில் விட்டு உயிர் நீங்குமோ என்னும் ஐயத்தை நீக்குதற்கு, பெத்த முத்தியிரண்டினும் இறைவன் விட்டு நீங்கான் என்னும் ஏதுவால் அவ்விறைவனைவிட்டு நீங்குமாறில்லை என்பது சாதிக்கப்பட்டது. (எ)

முதலதிகரணம் முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

இத்தை ஆயும் அறிவுடையனாய்... இருப்பன் என்பது.

இறைவன் அத்துவிதமாய் நின்று காட்டிக்காணு முபகாரத்தைச் செய்யினும் அவ்வாறு செய்கின்றானென்பதை அறிவுடைய பக்குவரேயன்றி அபக்குவர் அறியார் எனக் கூறுகின்றது.

எங்குந்தா னிறைந்துசிவ னின்றா னாகி
　　லெல்லாருங் காணவே வேண்டுந் தா னென்னி
னிங்குந்தா னந்தகருக் கிரவியிரு ளாகு
　　மீசனருட் கண்ணில்லார்க் கொளியாயே யிருளாம்

---

* அற்புதத்திருவந்தாதி. செ-௨0.

பங்கந்தா னெழும்பதுமம் பக்குவத்தை யடையப்
 பரிதியலர்த் திடுவதுபோல் பருவஞ்சே ருயிர்க்குத்
துங்கவரன் ஞானக்கண் கொடுத்தருளி னாலே
 சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே.

(கோ - டு.) சிவன் எங்குந்தான் நிறைந்து நின்றானாகில் எனவும், இரவி அந்தகருக்கு இருளாகும் எனவும், ஈசன் ஒளியாயே அருட்கண் இல்லார்க்கு இருளாம் எனவும், ஞானக்கண் அரன் துங்க அருளினாலே கொடுத்து எனவுங் கூட்டுக.

(பொ - ரை.) மேற்கூறியவாறு முதல்வன் எங்கும் நிறைந்து நின்று உபகரித்து வரின், யாவரும் அவன் அறியவில்லை எனின், இவ்விடத்து ஆதித்தன் எங்கும் விளக்கமாயிருப்பினும் அந்தகருக்கு அறியவாராது இருளாயிருப்பது போல, முதல்வன் உபகாரம் விளக்கமாயிருப்பினும் அருட்கண்ணுடையார்க்கன்றி ஏனையோர்க்கறியவாராது. சேற்றிற்றோன்றிய தாமரை மலர்களுள் பக்குவமுடைய தாமரைமலரைமட்டும் ஆதித்தன் விரியச்செய்தல் போல, அவ்வருட் கண்ணும் பக்குவமுடையார்க்கன்றிக் கிடைக்கப்பெறாது. பக்குவமுடையார்க்கும் அவ்வருட் கண் முதல்வன் பெருங்கருணையினால் கொடுக்கப்பெற வேண்டுமேயன்றித் தானே பெறமுடியாது. ஆதலால் முதல்வனருளால் அவ்வருட் கண்ணைப் பெற்றுடையார்க்கே அவ்விறைவன் அறிவிற் கறிவாய் நின்று உபகரித்து வரும் காணுமுபகாரமாகிய அத்துவித நிலை இனிது விளங்கும். (எ—று.)

இச்செய்யுளால், முதற் செய்யுளிற் கூறியவாறு அத்துவிதமாய் நின்று உபகரித்துவரும் உபகாரத்தை யறிதற்குரிமை பக்குவமுடையார்க்கேஉண்டென்பது கூறப்பட்டது.

இறைவன் எங்கும் விளங்கிக்கொண்டிருக்கவும் எல்லாரும் ஏன் காணவில்லை என்னும் கேள்விக்குச் சூரியனையும் அந்தகனையும் உவமையாகக் கூறினர். பக்குவமுடையார் காண்பர் என்பதற்குச் சூரியனையுந் தாமரையையும் உவமையாகக்கூறினர். முன்னர்க்கூறியவுவமையைவிட்டு வேறுவமை கூறியதன் கருத்தென்னையெனின், கண்ணொளி விளக்கமுடையா

ரும், அஃதில்லாத அந்தகரும் ஓரிடத்து ஒருங்கிருத்தல் நியதமன்று. விரிதற்குரிய தாமரையும், விரிதற்குரிமையில்லாத தாமரையும் ஓரிடத்து ஒருங்கிருத்தல் நியதம். ஆதலின், இறைவன் சந்நிதியில் பக்குவரும் அபக்குவரும் ஒருங்கிருத்தலைக் காட்டுதற்கு வேறுவமை கூறினரென அறிந்து கொள்க. (அ)

முத்தி நிலையை வேறு வேறு கூறும் ஈசுவர அவிகாரவாதி, பரிணாமவாதி, ஐக்கிய வாதிகளை மறுத்துரைக்கின்றது.

சென்றணையு நிழல்போலச் சிவனிற்ப னென்னிற்
சென்றணையு மவன்முதலி சிவத்தையணைந் தொன்றாய்
நின்றதுயிர் கெட்டென்னிற் கெட்டதணை வின்று
நின்றதேற் கேடில்லை யணைந்துகெட்ட தென்னிற்
பொன்றினதேன் முத்தியினைப் பெற்றவரார் புகனீ
பொன்றுகையே முத்தியெனிற் புருடனித்த னன்று
மொன்றியிடு நீரொடுநீர் சேர்ந்தாற்போ லென்னி
னொருபொருளா மதிபதியோ டுயிர்பொருளொன் றன்றே.

(கோ - டு.) உயிர்கெட்டு சிவத்தை அணைந்து ஒன்றாய் நின்றதென்னின் எனவும், நீரொடு நீர் சேர்ந்தாற் போல் ஒன்றியிடும் என்னின் எனவுங்கூட்டுக.

(பொ - ரை.) அருட்கண் இறைவன் கொடுக்கப் பெற்று அக்கண்ணிற்கு இறைவன் தோன்றுவானென்று கூறல்வேண்டாம். மாத்தின் நிழல் போல் முதல்வன் விகாரமின்றி நிற்ப அந்நிழலைச்சென்றணையும் வழிச் செல்வோரைப்போல் உயிர்களுக்குப் பருவம் வந்தவிடத்துத் தாமே ஞானக்கண்ணைப் பெற்று அம்முதல்வனைக் கூடுதல் அமையுமென ஈசுவர அவிகார வாதிகள் கூறுவர். இவ்வுவமையில் மாநிழலுக்கு வழிச்செல்வோரை அணையச் செய்யும் சுதந்திரமின்மையும், சென்றவருக்கு அணையுஞ் சுதந்திரமுண்மையுங் காணப்படுதல் போல, ஈசுவரனுக்குச் சுதந்திரமின்மையும், உயிருக்குச் சுதந்திர வுண்மையுங் காணப்படுதலின்

இது பொருந்தாது. இனி, பரிணமைவாதிகள் உயிர் கெட்டுக்கூடி முதல்வனடியில் ஒன்ருய்ப் போமென்பர். கெட்டபின் கூடுமாறின்று; கெடாது நின்று கூடுமெனின், கேடின்மையால் ஒன்ருதல் பெறப்படாது. கூடியபின் கெட்டதெனின், கெட்டவிடத்து முத்தியினைப் பெற்றவர் யாவரென்னும் வினவிற்கு விடையின்று. கேடேமுத்தியெனின், உயிர்நித்தமாதல் செல்லாது. ஆதலால் அவர் கூற்றும் வழுவாம். இனி ஐக்கியவாதிகள் நீரிலே நீர் சேர்ந்தாற்போல, உயிர் முதல்வன்றிருவடியைச் சேர்ந்து ஒன்ருமென்பர். உவமானப்பொருள் சமமானாற்போல, முதல்வனும் உயிரும் தம்முள் சமப்பொருளாதல் செல்லாமையின் அதுவும் பொருந்தாது. (எ—று.) (கூ.)

சிவ சமவாதி கூறும் முத்தியை மறுத்துரைக்கின்றது.

செம்பிரத குளிகையினுற் களிம்பற்றுப் பொன்னுய்ச்
செம்பொனுடன் சேருமலஞ் சிதைந்தாற் சிவ
னம்பனுடன் கூடுமெனிற் பொன்போ லல்ல
னற்குளிகை போல்வர னணுகுமலம் போக்கி
யம்பொனடிக் கீழ்வைப்ப னருங்களங்க மறுக்கு
மக்குளிகை தானும்பொன் னுகா தாகு
மும்பர்பிரா னுற்பத்தி யாதிகளுக் குரிய
னுயிர்தானுஞ் சிவாநுபவ மொன்றினுக்கு முரித்தே.

(கோ—டு) நற்குளிகை போல அரன் பொன் போல் அல்லன். அருங்களங்கம் அறுக்கும் அக்குளிகை பொன்ருனும் ஆகாது. உயிர்தானும் சிவாநுபவம் ஒன்றினுக்குமே உரித்து. உம்பர் பிரான் உற்பத்தியாதிகளுக்கு உரியனுகும். நணுதம் மலம் போக்கி அம்பொன் அடிக்கீழ் வைப்பன்.

(போ - ௳.ரு.) இனிச், சிவசமவாதிகள் செம்பினிடத்துக் களிம்புள்ள அளவும் பொன்னுடன் ஒத்து ஒன்ருதலில்லையாயினும், இரதகுளிகையினுல் களிம்பு நீங்கியவிடத்துச்செம்பு பொன்ருகி வனைப்பொன்னுடன் ஒத்து ஒன்ருமாறுபோல, மலம் நீங்கிய

விடத்து உயிர் சிவனோடு ஒத்து ஒன்றாகுமென்பர். களிம்பை நீக்கும் ஆற்றல் பொன்னுக்கு இல்லாமையால் அவ்வாற்றலை யுடைய இரத குளிகையை முதல்வனோடு ஒப்பிடுவதன்றிப் பொன்னை முதல்வனோடு ஒப்பிடுதல் இவ்விடத்துப் பொருந்தாது. அன்றியும், களிம்புநீங்கிய பொன், குளிகையைப்போல் பிறிதொரு செம்பிலுள்ள களிம்பை நீக்காது. அதுபோல மலம் நீங்கிய உயிர் சிவாநுபவத்திற்கு உரித்தாதலன்றி ஐந்தொழிற்கு உரித்தாதல் செல்லாது. முதல்வனே ஐந்தொழில் செய்தற்கு உரிமையுடையவனாவன். அம்முதல்வன் உயிர்களிடத்துப்பொருந்திய மலத்தைநீக்கிப் பொன்போலுந் தனது திருவடிக்கீழ் வைப்பன். இதனால் பொன்னுக்கு ஒப்பாகத் திருவடியைக் கூறினதேயன்றி இறைவனைக் கூறியதன்று. திருவடிக்கீழ் வைப்பன் என்றதனால் அடக்கி வைப்பனெனப்பட்டு அவன் செய்யும் ஐந்தொழிலை உயிர் செய்யமுடியாதென்பதும் விளங்கும். ஆதலால், சிவசமவாதம் கூறும் அவர் மதமும் அடாது. (எ - று.)

சிவாநுபவம் ஒன்றினுக்கும் என்னும் உம்மை முற்றும்மை. சிவாநுபவம் ஒன்றினுக்குமுரித்தேயென்ற இதனானே, சிவாநுபவத்திற்கு முரித்தன்று என்னும் சுத்தசைவர் மதமும் மறுக்கப்பட்டது. (௧௦)

இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள அந்தரங்கபேதங்களை எடுத்துக்காட்டி ஆன்மா இறைவனோடு சமமாகாதென்பதை வலியுறுத்துகின்றது.

சிவன்சீவ னென்றிரண்டுஞ் சித்தொன்று மென்னிற்
சிவனருட்சித் திவனருளைச் சேருஞ்சித் தவன்றான்
பவங்கெடு புத்திமுத்தி பண்ணுஞ்சித் தவற்றிற்
படியுஞ்சித் தறிவிக்கப் படுஞ்சித்து விவன்று
னவன்றானே யறியுஞ்சித் தாதலினா லிரண்டு
மணைந்தாலு மொன்றாகா தநந்நியமா யிருக்கு
மிவன்றானும் புத்தியுஞ்சித் திவனாமோ புத்தி
யிதுவசித்தென் றிடிலவனுக் கிவனுமசித் தாமே.

௱௦.

(கோ - டு) (இவன்) அவற்றிற் படியுஞ் சித்து. அவன் தானே யறியுஞ்சித்து. இவன்றான் அறிவிக்கப்படும் சித்து. இரண்டும் அணைந் தாலும் அநந்நியமாயிருக்கும். ஒன்றாகாது ஆதலினால்.

(போ - ரை) முதல்வனும் உயிரும் சித்துப்பொருளாத லால் ஒத்து ஒன்றுமென்பதே பொருந்தும். அவ்வாறன்றி உயிர் சிவாநுபவம் ஒன்றற்கே உரித்தென்று வேற்றுமைப்படுத்துக் கூறுதல் பொருந்தாதெனின், சிவன் அருளாகியசித்து. உயிர் அவ்வருளைச் சேரும் சித்து. சிவன்பிறப்பினைக் கெடுத்துப் போக மோட்சம்தரும்சித்து. உயிர் பிறப்புமுதலிய அவைகளில் அழுந் தும் சித்து. சிவன் தானே அறியுஞ்சித்து. உயிர் அறிவிக்க அறியுஞ்சித்து. இவ்வாறு சித்து இரண்டிற்கும் வேற்றுமை யிருப்பது எதுபோலுமெனின், கண்ணொளியும் சூரியனொளியும் போலவாம். எவ்வாறெனின், அவ்விரு ஒளிகளும் ஒளியென் கின்ற பொதுமையால் சமமாயிருப்பினும், கண்ணொளியானது சூரியனொளியின் துணையையின்றி ஒரு பொருளையுங் காணமாட் டாது. சூரியனொளி பிறிதொரு துணைவேண்டாது தானே விளக்கும். இவ்வாறே சிவனுக்கும் உயிருக்கும் தம்முள் அந்த ரங்கமாகிய தருமத்தின் வேற்றுமை பெரிதும் உண்மையால், சிவ னோடு உயிர் கூடிய விடத்தும் அத்துவிதமாய் (கலந்து) நிற்றலே யன்றி ஒன்றாய்ப் போமாறில்லை. அன்றியும் உயிரும், புத்தி தத்துவமும் உணரும் ஒப்புமைபற்றிச் சித்தெனக் கூறப்படினும், புத்திதத்துவம் உயிராகாதது போலவுமறிக. அப்புத்தி தத்துவம் சடமும் உயிர் சித்துமாகிய வேற்றுமையுடைமையால், ஒன் றாகாமை ஒக்கும். முதல்வனும் உயிரும் சித்தாதலின் ஒன்றாகு மென்பதே பொருந்துமெனின், உயிரும் ஏனைத்தத்துவங்களை நோக்கச் சித்தேயாயினும், முதல்வனை நோக்கச் சடமேயாம். ஆதலால் ஒன்றுமாறில்லை. (எ-று)

முதல்வனையின்றித் தொழிற்படாமைபற்றி உயிர் சடமெனப்பட்ட தேயன்றிப் பொருள்பற்றியன்று.

முத்திநிலையில் நீரும் நீரும்போல உயிர் சிவனோடு எல்லாவகையானும் ஒத்து ஒன்றாய் நிற்குமென்பர் ஐக்கியவாதிகள். எல்லாவகையானும் ஒத்து முதல்வனைப்போல் பஞ்சகிருத்தியஞ் செய்துகொண்டு வேறாய் நிற்குமென்பர் அருவசிவசமவாதிகள். இவையிரண்டு செய்யுளும் இவற்றிற்கு முற்செய்யுளிற் கூறப்பட்ட ஐக்கியவாதிகளை மறுத்ததோடு அருவசிவசமவாதிகளையும் அந்தரங்கமாகிய தருமத்தின் வேற்றுமைபற்றி மறுத்தவாறு காண்க. (கக)

ஈசுவர அவிகாரவாதி, பரிணாமவாதி, ஐக்கியவாதி, சிவசமவாதிகள் கூறும் ஆசங்கைகளை மறுத்து வேறு வேறுவமை எடுத்துக்காட்டிச் சித்தாந்தத்தை வலியுறுத்துகின்றது.

இரும்பைக்காந் தம்வலித்தாற் போலியைந்தங் குயிரை
　　யெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தா னாக்கி
யரும்பித்தின் தனத்தையன லழிப்பதுபோன் மலத்தை
　　யறுத்தமல னப்பணைந்த வுப்பேபோ லணைந்து
விரும்பிப்பொன் னினைக்குளிகை யொளிப்பதுபோ லடக்கி
　　மேளித்துத் தானெல்லாம் வேதிப்பா னாகிக்
கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
　　கட்டியையொத் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே.

(கோ - டு) காந்தம் இரும்பை வலித்தாற்போல், (அமலன்) அங்கு உயிரை இயைந்து, எரி இரும்பைச் செய்வதுபோல் அனல் இத்து அரும்பு இந்தனத்தை அழிப்பதுபோல் (அமலன்) இவனைத்தானாக்கி மலத்தை அறுத்து, அப்பு அணைந்த உப்பேபோல் விரும்பி அமலன் அணைந்து, குளிகை (மேளித்து) பொன்னினை ஒளிப்பதுபோல் தான் எல்லாம் மேளித்து வேதிப்பானாகி அடக்கி, கரும்பைத் தேனைப்பாலைக் கனியமுதைக்கண்டைக் கட்டியைக்கலந்தே ஒத்து (அமலன்) அந்த முத்தியினில் இருப்பன்.

(பொ - றை) ஈசுவர அவிகாரவாதிகள், இறைவன் விகாரமின்றி நிர் விகாரியாய் நிற்பன்; ஆதலால், மாநிழலுவமையை மறுத்தது செல்லாதென்பரெனின், காந்தமானது விகாரமின்றி நின்றே இரும்பை இழுப்பதும் கண்டாம். அதுபோல இறை

வனும் விகாரமின்றியே உயிரைத் தன்வழிப்படுத்தி நிற்பன். ஆதலின், மர நிழல் போலச்சிவன் இல்லையென்றது பற்றிச் சிவன் நிர்விகாரியாதற்கிழுக்கில்லை யென்க. பரிணாமவாதிகள் முத்தியில் இறைவனும் உயிரும் ஒன்றுமாதலால், கேடே முத்தியென்றதை மறுத்தது பொருந்தாதென்பரெனின், தீயானது இரும்பைக் கெடுக்காமல் தன் வண்ணமாக்கி அவ்விரும்பின்கண் உடன் றோன்றி நிற்கின்ற கறை மாத்திரம் கெடச்செய்யும். அதுபோல இறைவனும் உயிரைத் தன்வண்ணமாக்கி அவ்வுயிரின்கண் உடன் றோன்றி நின்ற மலமாத்திரம் கெடச்செய்வனாதலால், கெடுதல் முத்தியாகாது என்றதுபற்றி ஒன்றாதற்கிழுக்கில்லையென்க. ஐக்கிய வாதிகள் முத்தியில் உயிர் சிவனோடு சமமாதலால் நீரொடு நீர் சேர்ந்தாற்போலென்ற உவமையை மறுத்தது செல்லாதென்பரெனின், நீரொடு சேர்ந்த உப்பானது தன் சுவை முழுதும் அந்நீர்க்காக்கித் தன்னோடொப்பச் சமன் செய்து நிற்கும். அதுபோல விரும்பி உயிரைச்சேர்ந்த இறைவனும் தனக்குரிய எண்குணங்களையும் அவ்வுயிரின் கட்பதிப்பித்துத் தன்னோடு ஒப்பச் செய்து நிற்பன். ஆதலால், நீரொடு நீர் சேர்ந்தாற்போல் என்றதை மறுத்ததுபற்றிச் சிவசமமாதற்கிழுக்கில்லையென்க. சிவசமவாதிகள் உப்புடன்கூடிய நீர் உப்பாதல்போல, சிவனுடன் சேர்ந்த உயிர் சிவமாகிச் சிவன் செய்யும் பஞ்சகிருத்தியங்களைச் செய்யுமாதலின், உயிர் பஞ்சகிருத்தியஞ் செய்யாதென்றது பொருந்தாதென்பரெனின், இரதகுளிகை செம்பையுருக்கித் தன்னோடு கூட்டிப் பொன்னாகச் செய்தும் அக்குளிகை தன்னிடத்துள்ள பொன்னியல்பை அப்பொன்னுக்குக் காட்டாது தன்னுள் அடக்கி நிற்குமாறுபோல, இறைவன் உயிருக்கு எண்குணங்களெல்லாம் பதியச்செய்தும் பதிந்த அவ்வெண்குணங்களினியல்பு சிறிதுந்தோன்றாது அறிவிறந்து நிற்குமாறு தனது வியாபகத்துள்ளடக்கி நிற்குமாதலால், உம்பர்பிரான் ஒருவனே உற்பத்தியாதிகளுக்குரியனாதற் கிழுக்கில்லையென்க. சுத்தசைவர் அறிவிறந்து நிற்கும் முத்திநிலையில் அநுபவங்கூடாதாதலின், சிவாநு

பவத்திற்கு உரித்தென்றல் பொருந்தாதென்பரெனின், கருப்பஞ்சாறு, தேன், பால், கனி, இரதம், கற்கண்டு, சருக்கரை முதலிய சுவைப்பொருளெல்லாம் ஒன்றாகக் கலந்தவிடத்து உளதாகிய சுவை இத்தன்மைத்தெனப் பிரித்தரியவாராது. அதுபோல இறைவனும் பாமுத்தியில் உயிரோடு கலந்தவிடத்து இத்தன்மைத்தெனப் பிரித்தறிய முடியாத ஆனந்த சொரூபமாய் நிற்பனாதலால், அறிவிறந்து நிற்பன் என்பதுபற்றிச் சிவாநுபவத்திற்குரித்தாதற்கிழுக்கில்லையென்க. அறிவிறந்து நிற்றலென்பதற்குப் பிரித்தறியாது நிற்றலென்பது பொருளாம். (எ-று)

எட்டாஞ் சூத்திரத்தில் மலரடிக்கீழ்வைப்பன் என்றதை இச்செய்யுளில் நிர்விகாரியாய்த் தன்வண்ணமாகச் செய்து எனக் கூறினர். இது சிவரூபம். ஒன்பதாஞ்சூத்திரத்தில் பாதநிழற்கீழ் நிற்க என்றதை இச்செய்யுளில் தன்னேடொப்பச் செய்தெனக்கூறினர். இது சிவதரிசினம். பத்தாஞ்சூத்திரத்தில் ஏகனுகி நின்றிட என்றதை இச்செய்யுளில் உயிரினியல்பு சிறிதுந்தோன்றாது நிற்குமாறு அடக்கி நிற்குமெனக்கூறினர். இது சிவயோகம். இப்பதினோராஞ் சூத்திரத்தில் அரன்மலரடிக் கீழிருப்பன் என்றதை இச்செய்யுளில் பிரித்தறியவாராது ஆனந்த சொரூபமாய் நிற்பனெனக் கூறினர். இது சிவபோகம். இவ்வாறு நான்கு சூத்திரங்களுக்கும் பேதமுண்டென்பதை இச்செய்யுளிற் கூறியவாறுமாயிற்று. இன்னும் நிர் விகாரியாக்கல் நின்மலசாக்கிரம். தன்வண்ணமாகச்செய்தல் நின்மல சொப்பனம். தன்னேடொப்பச் செய்தல் நின்மல சுழுத்தி. அடங்கிநிற்கச்செய்தல் நின்மலதுரியம். ஆனந்தசொரூபமாய் நிற்கச்செய்தல் நின்மல துரியாதீதம் எனவும் அறிக.

இச்செய்யுளால் மதங்கத்துட் கூறப்படும் எழுவகை முத்திகளை வகுத்துக் கூறியதென்றுரைப்பாருமுளர். அவை வருமாறு:—இரும்பைக் காந்தம் வலித்தாற்போல் என்றதனுல் தனக்கொரு செயலின்றி இறைவன் செயல் வழிநிற்றலும், எரி இரும்பைச் செய்வதுபோல் என்றதனுல் இரும்பு அக்கினிரூபமாய் நின்று சுடுதற்றொழில் செய்வதுபோல் ஐந்தொழில் செய்து நிற்றலும், அரும்பித்திந்தனத்தை யனலழிப்பதுபோலென்றதனுல் பசு போதத்தைச் செய்யும் மலங்கெட்டு நிற்றலும், அப்பணைந்த உப்பேபோல் என்றதனுல் சிவபோகாநுபவமாய் நிற்றலும், பொன்னினைக்குளிகை யொளிப்பதுபோலடக்கி என்றதனுல் காண்பா

னும் காண்பதுவுமின்றிச் சிவபோகத்தை அநந்நியமாயநுபவித்து நிற்றலும், மேளித்து என்றதனல் காட்சியிறந்துநின்ற ஆன்மா குற்றமற இறைவ ஞேடு கலந்து நிற்றலும், தானெல்லாம் வேதிப்பாஞகி என்றதனல் அங்ஙனங் காட்சியிறந்து கலந்து ஆனந்தபரவசனய் நிற்றலும் என எழுவகை முத்தியுங்கண்டு கொள்க. இம்முத்தி எழுக்கும் கரும்பு, பால், கனி, தேன், கண்டு, கட்டி, அமுது என்னும் எழும் முறையே உவமையாமாறு காண்க. இவ்வாறு கூறப்பட்ட முத்தி எழினும் பேதமுளவாமாறுபோல, உவமையினும் பேதமுண்டு. அவை வருமாறு:—கரும்பில் கடினமான கோது மிகுதியும் மதுரமான ரசம் குறைந்தும், பாலிலே நீர்ச்சத்து மிகுந்தும் பால்ச்சத்து குறைந்தும், கனியிலே சொட்டையும் தோலும் மிகுந்தும் சார் குறைந்தும், தேனில் தித்திப்பும் புளிப்புமாகிய இருவகைரசமும், கண்டில் ரசமும் ரூபமும் ஒன்ருகிக் கடினமும், கட்டியில் மதுர ரசமாகிக் கடினமும், அமுதில் சுத்தமதுர ரசமும் வேற்றுமையாம்.

அரும்பித்து என்பது இத்தரும்பு என மாற்றி யுரைக்கப்படும். இத்து என்றவிடத்து இதனில் என்னும் பொருள்பட அன்சாரியையும், இல் உருபும் தொக்குநின்றன. இதனில் என்பது இரும்பினிடத்தில் என்றவாரும். அரும்புதல்—தோன்றுதல். அனலாலழிக்கப்படும் விறகோடொப்ப இரும்பினிடத்து நிற்பது கறையேயாதலின், அக்கறையை இந்தனமாக உருவகஞ் செய்தார். அமலன் அணேதல்—காரணம். தன்னேடொப்பச் செய்து நிற்றல்—காரியம். இக்காரியத்தை அணேந்து எனக் காரணமாக வுபசரித்தார். மேளித்தல்—கூட்டுதல். வேதிப்பாஞகி என்றவிடத்துச் சிறப்பும்மை விரித்துரைக்க. கலந்தவிடத்து என்றிருக்கவேண்டுவது கலந்து எனத் திரிந்துநின்றது.

அரும்பித்திந்தனத்தை யனலழிப்பதுபோல் என்பதற்கு மேற்கூறியவாறு உரைசெய்து இந்தனம் என்பதை உருவகமாக்காது, இயற்பெயர்ப் பொருளாகக்கொண்டு விறகின்மேல் வைத்துரைப்பாருமுளர். விறகை அக்கினி அழிக்குங் காலத்து அவ்விறகு அறவேகெட்டுப்போம். அதனேக் கறையாக உருவகஞ் செய்யின், கறை கெட்டு இரும்பு அக்கினிமயமாயிருக்கும். ஆதலால், விறகாகக் கொள்ளுதல் உயிரோடு சம்பந்தமாதற்குரிய உவமையாகாது. அன்றியும், அரும்பித்து என்பதனே அக்கினிக்கு விசேடணமாக்கி அரும்பித்து என்பதற்கு விறகினிடத்து முன் மறைந்து நின்ற அக்கினி எனப்பொருள் கொண்டார். அவ்வாறு கொள்ளுதற்கு அரும்பித்து என ஒரு சொல்லில்லேயாதலாலும் அவ்வுரை பொருந்தாதெனவறிக. அன்றியும், "தீயிரும்பைச் செய்வதுபோற் சீவன்றன்னேப் பந்

தலையை யறுத்துத் தானாக்கி" என அறுத்தல் ஆக்குதலிரண்டும் இரும் பின் மேல்வைத்தே மேல் கூஞ் சூத்திரம கஉ-வது செய்யுளிற் கூறிய ஆசிரியர்க்கு இவ்விடத்தும் அதுவே கருத்தாத லுணர்ந்துகொள்க.

மேளித்துத் தானெல்லாம் வேதிப்பானாகி அடக்கி என்று கூட்டாது, செய்யுளிருந்தவாறே கொள்ளின், ஏனையவற்றிற்கெல்லாம் உவமை தனித் தனி எடுத்துக்காட்டி மேளித்துத் தானெல்லாம் வேதிப்பானாகி என்ப தற்கு மட்டும் உவமை கூறாமை குன்றக்கூறலாய் முடியுமென்க. "எங்குந் தானிறைந்து சிவனின்றானாகில்" என்னுஞ் செய்யுள் முதல் இவை ஐந்து செய்யுளானும் முத்திநிலைபற்றிப் பிறர் கூறும் ஆசங்கைகளை மறுத்து முத்திநிலையினியல்பு இதுவெனச் சித்தாந்தங் கூறியவாறாம். (கஉ)

இரண்டாம் மதிகரணம் முடிந்தது.

பதினொராஞ் சூத்திரம் முடிந்தது.

ஆகத் திருவிருத்தம் கஉக.

பன்னிரண்டாம் சூத்திரம்.

சீவன் முத்தரியல்பு.

மேல் பத்தாஞ் சூத்திரத்தால் பாசநீக்கமும் பதினொராம் சூத்திரத் தால் சிவப்பேறும் கூறினமையால் அப்பயனைப் பெற்ற முத்தர் உடம்புள்ள அளவும் எவ்வாறிருப்பர் என்னும் ஆசங்கை நிகழுமன்றே? அந்நிகழ்ச்சிபற் றிச் சீவன் முத்திநிலையில் நிகழும் இயல்பினை வகுத்துக் கூறுதற்கு எழுந் தது பன்னிரண்டாம் சூத்திரம். மேல் ஆசங்கையின்மையின் இச் சூத் திரத்தோடு நூல் முடிகின்றது.

சீவன் முத்தரியல்பு இவ்வாறெனச் சூத்திரப்பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது.

செங்கமலத் தாளிணைகள் சேர லொட்டாத்
திரிமலங்க ளறுத்தீச னேசரொடுஞ் செறிந்திட்
டங்கவர்தந் திருவேட மாலயங்க ளெல்லா
மரனெனவே தொழுதிறைஞ்சி யாடிப் பாடி
யெங்குமியா மொருவர்க்கு மெளியோ மல்லோம்
யாவர்க்கு மேலானோ மென்றிறுமாப் பெய்தித்
திங்கண்முடி யாரடியா ரடியோ மென்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடை யோரே.

(போ - ரை.) மேற்கூறியவாறு சிவப்பேறெய்திய முத்தர்களுக்குக் கன்மத்துக்கீடான சரீரம் உள்ள அளவும் இறைவனது செந்தாமரை மலர்போலும் திருவடியை அடையவொட்டாது முன் அயர்த்தலைச் செய்து நின்று பின் பற்றறக்கழிந்த மும்மலங்கள், விளக்கற்றம் பார்க்கும் இருள்போல் அறிவற்றம் பார்த்து நிற்பனவாம். ஆதலால், அம்முத்தர் அவற்றை அஞ்சி நிட்டையினாற் பரிகரித்தும், அங்ஙனம் நிட்டை சாதித்தற்குத் துணையாகிய சிவபிரானுடைய மெய்யன்பரோடு பழகியும், அப் பழக்கம் நிலைபெறும்படி அவரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் சிவனெனக்கண்டு வழிபாடியற்றி ஆனந்த மேலீட்டால் ஆடல் பாடல்களைச் செய்தும், இப்பேறு பெறமாட்டாதவர் சிறுமையை நோக்கி எவ்விடத்துமுள்ள ஒருவருக்கும் எளியாராதலின்றித் திருவடியைக் கூடப் பெற்றமையால் யாவர்க்கும் மேலானோமென்று ஆனந்தமெய்தியும், பிறையினை யணிந்த திருமுடியையுடைய சிவபிரான்றிருவடியைக் கூடப் பெற்றாரது பெருமையைநோக்கி அவர்க்கு அடிமையென வாழுமியல்பினையும் உடையாராவர். இவர் சீவன் முத்தரெனப்படுவர். (எ-று.)

ஒட்டா என்னும் எதிர்மறைப் பெயரெச்சம் திரிமலங்கள் என்னும் ஏதுப்பெயர் கொண்டு முடிந்தது. அறிவற்றம் பார்த்துநிற்கும் திரிமலங்களாதலின் அவை அறுத்தற்கேதுவாய் ஏதுப்பெயராயினமை காண்க.

இச்செய்யுள் முதனூல் போல் முக்கூற்றை யுடையது. அவற்றுள்,

முதற்கூறு:—செங்கமலத்தாளிணைகள் சேரவொட்டாத் திரிமலங்க ளறுத்து.

இரண்டாங்கூறு:—ஈசனேசரொடும் செறிந்திட்டு.

மூன்றாங்கூறு.—அங்கவர்தம் திருவேடம் ஆலயங்களெல்லாம் அர னெனவே தொழுதிறைஞ்சி யாடிப்பாடி .... செய்தியுடையோரே.

இம்முக்கூற்றுள், செங்கமலத்தாளிணைகள் சேரவொட்டாது அயர்த் தலைச் செய்விக்கும் திரிமலங்கள், நீங்கியும் அறிவற்றம் பார்த்து நிற்பன வாதலால் அவற்றை நீக்கவேண்டுமென, அறிவற்றம் பார்த்து நிற்றலைத் திரிமலங்களென்னும் உடம்பொடு புணர்த்தோதி வலியுறுத்தினமையின் முதற்கூறு வேறு கூறாது விடுத்தனர். (க)

இரண்டா மதிகரணம்.

ஈசனேசரொடும் செறிந்திட்டு என்பது.

சிவன்முத்தன் சிவனடியாரிடத்து அன்புடையனாகவும் ஏனைய அறிவில்லாரிடத்து வெறுப்புடையனாகவும் இருக்க வேண்டுமெனக் கூறுகின்றது.

ஈசனுக்கன் பில்லா ரடியவர்க்கன் பில்லா
 ரெவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்குமன் பில்லார்
பேசுவதென் னறிவில்லாப் பிணங்களைநா மிணங்கிற்
 பிறப்பினிலு மிறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ
யாசையொடு மரனடியா ரடியாரை யடைந்திட்
 டவர்கரும முன்கரும மாகச்செய்து
கூசிமொழிந் தருண்ஞானக் குறியி னின்று
 கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே.

(கோ - ६.) நாம் பேசுவது என் நீ அரன் அடியார் அடியாரை அடைந்திட்டு அவர் கருமம் உன் கருமமாக அருள் ஞானக் குறியில் நின்று ஆசையொடுஞ் செய்து, அறிவில்லாப் பிணங்களை இணங்கில் பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர் விடு. கூசி மொழிந்து கும்பிட்டுத் தட்ட மிட்டுக் கூத்தாடித் திரியே.

(போ - ரை) காமுகனுவானொருவன் ஒரு பெண்ணிடத்து அன்புடையனாகில், அவ்வன்புடைமை, அப் பெண்ணினுடைய சுற்றத்தைக் கண்டவிடத்து நிகழும் அன்பினளவாகத் தெளியப் படும். அதுபோல, ஈசனுக் கன்புடையனாகில், அவ்வன்புடைமை அவனடியவரைக் கண்டவிடத்து நிகழும் அன்பினளவாகத் தெளி யப்படும். ஆதலால், அடியவரிடத்து அன்பில்லாதார் ஈசனிடத்தும் அன்பில்லாதவரே யாவர். அவர் ஈசனுக் கன்புடையவர் போல் ஒழுகுதல் நாடக மாத்திரையேயன்றிப் பிறிதில்லை. அன்றியும், ஈசன் எவ்வுயிரிடத்தும் உளனாதலால் அத்தொடர்பு பற்றி ஈசனுக் கன்புடையார் எவ்வுயிர்க்கும் அன்புடையராதல் கூடும். ஈசனி டத்து அன்பில்லாதவிடத்து எவ்வுயிரிடத்தும் அன்பில்லாதவரே யாவர். இவ்வாறு சிவனடியாரிடத்தும் ஈசனிடத்தும் ஏனைய உயிர்களிடத்தும் அன்பில்லாதார் தம்முயிர்க்கும் நிலைத்த இன் பத்தைச் செய்து கொள்ளாதவராதலின், அவரைப் பற்றி நாம் என்ன சொல்வது! காமம் மிகுதியுடையவர்க்கு அத்தொடர்புடை யாருடைய இணக்கம் அக்காமப் பயிரை வளர்க்கும் நீராதல் பற்றி அவ் விணக்கத்தில் மிகுந்த உவகையுண்டாவது போல, மாறாத சிவாநுபவ மருவிக் கொண்டு அரன்மலரடிக் கீழிருக்கப் பெற்ற நீ அவ்வநுபவத்தை வளர்க்குந் தன்மையராகிய அடியாரோடிண ங்கி அவர் பணியை உன் பணியாகவே அகங்கார முனைப்பின்றி உவகை மிகுதியுடன் செய்து, காமுகரல்லாதாரிணக்கம் காமப் பயிரைக் கெடுக்கும் களை யென்றெண்ணிக் காமுகர் வெறுப்பது போல, சிவாநுபவத்தைக் கெடுக்குந் தன்மையராகிய அறிவில் லாப் பிணம் போன்றவரோடு இணங்கில் பிறப் பிறப்பாகிய துன் பத்தை உண்டு பண்ணுவராதலின், அவ்விணக்கத்தின் கண் வெறுப்பு மிகுதியால் அதனை விட்டு நீங்கி, அடியாரது உயர்வும்,

உனது இழிவும் நோக்கி நாணி அடியாரிடத்துத் தாழ்ந்த மொழி கூறி உவகை மிகுதியால் கும்பிட்டுக் கை கொட்டிக் கூத்துமாடித் திரிவாயாக. (எ - று.)

அடியரென்பவர், சிவனடியாருக்கு அடியராவரென்பது தோன்ற அரனடியாரடியாரென்றார்.

சுவையின் பொருட்டு உண்ணப்படும் பால் பித்தத்தை நீக்கும் மருந்துமாதல் போல, இவ்வாறு செய்யும் அநுபவ நிலையானது, அநுபவமாய் ஆனந்தம் விளைத்தலேயன்றிச் சாதனமாய் அறிவற்றம் பார்த்து நிற்கும் மலம் அறுத்தலுஞ் செய்தலின் செய்கவென விதிமுகமாகக் கூறினார். முன் வருவனவற்றிற்கு மிஃதொக்கும். உயிர்களிடத்து அன்பில்லாதவர் தமக்கும் அன்பில்லாதவரென்ற இக் கருத்து *"அன்பிலாரெல்லாந் தமக்குரியர்" என்ற திருக்குறளோடு முரணுதோவெனின், தம் என்னுஞ் சொல்லுக்கு இவ்விடத்து உயிரும் குறளில் உடம்பும் ஆதலின் முரணாமை யறிக.

அடியவர்க் கன்பில்லார் ஈசனுக் கன்பில்லார் எவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்கு மன்பில்லார் என்ற இதன் எதிர்மறை முகத்தான், அடியவர்க் கன்புடையார் ஈசனுக்கன்புடையார், எவ்வுயிர்க்கு மன்புடையார், தமக்கு மன்புடையார் ஆவர் என, அடியவரிடத்து அன்புடையாரது பெருமையுங் கண்டு கொள்க. அடியவர் கருமம் தன் கருமமாகச் செய்தலும் தற்போத முனைத்து நின்று செய்யிற் குற்றமாமென்பதறிவிக்க வேண்டி அருண்ஞானக் குறியில் என்றார். கூசுதல் அவருயர்வும் தன்னிழிவும் நோக்கிநிகழ்வது. கும்பிடுதலும், தட்டமிடுதலுங், கூத்தாடுதலும் உவகை மிகுதியானிகழு மெய்ப்பாடு. மெய்ப்பாடு—குறிப்பை வெளிப்படுத்துந் தோற்றம். (உ)

இரண்டாமதிகரணம் முடிந்தது.

---

* திருக்குறள், அன்புடைமை. செ - உ.

மூன்றுமதிகரணம்.

அங்கவர்தம் திருவேடம் ஆலயங்களெல்லாம்
அரனெனவே தொழுதிறைஞ்சி ஆடிப்பாடி..........
.......................செய்தியுடையோரே. என்பது.

பாசப்பற்றுடையார் பற்றுவிடுதற்குச் சிவனடியாரைச் சிவ னெனவே துணிந்து வழிபடவேண்டுமெனக் கூறுகின்றது.

அறிவரியான் றனையறிய யாக்கை யாக்கி
யங்கங்கே யுயிர்க்குயிரா யறிவுகொடுத் தருளாற்
செறிதலினாற் றிருவேடஞ் சிவனுருவே யாகுஞ்
சிவோகம்பா விக்குமத்தாற் சிவனு மாவர்
குறியதனா லிதயத்தே யரனைக் கூடுங்
கொள்கையினா லரனவர் குறியொடுதா மழியு
நெறியதனாற் சிவமேயாய் நின்றிடுவ ரென்று
னேசத்தாற் றொழுதிடுநீ பாசத்தார் விடவே.

(கோ - டு.) பாசத்தார் விடவே நேசத்தால் நீ தொழுதிடு என்பதை முன்னாக வைத்துரைக்க.

(போ - ரை) மேற் கூறியவாறு அறிவில்லாதாருடைய இணக்கத்தை விடுதற்பொருட்டு யாதுசெய்ய வேண்டுமெனின், சிவனடியாரைச் சிவனெனவே தேறி அன்புடன் வழிபடல் வேண்டும். சிவனடியார் சிவமாவது எவ்வாறெனின், சிந்தனைக்கு அதீதனாகிய பரம்பொருள், உலகத்திலுள்ளார்தன்னை அறிதற் பொருட்டுத் திருநீறு கண்டிகை முதலிய திருவேடமாகிய தனது வடிவத்தைத்தன் அன்பர்க்குக்கொடுத்து எவ்விடத்தும்உயிர்க்குயி ராய் நின்று அவ்வன்பர் அறிவினை விளக்கி, அருளினால் அவரோடு கலத்தலால் அத்திருவேடமுடைய மெய்யன்பர் சிவமேயாவர்.

சிவோகம் பாவனையானும் அவர் சிவமேயாவர். இருதயத்தானத்தில் ஒரு குறியின்கண் வைத்து முதல்வனைக்கூடும் செயலானும் அவர் சிவமேயாவர். அவ்வாறு கூடுங்காலத்து, குறியும் குறிக்கின்றதாமுமின்றி நின்ற தன்மையானும் சிவமேயாவர். (எ-று)

சிவனடியார் சிவமாதல் தெளிந்துகொள்ளுதற்கு வேடமுதலியவற்றுள் ஒன்றிருப்பினும் அமையும் என்பதறிவிக்கவேண்டிச் சிவமாதலைத் திருவேடம், சிவோகம்பாவனை, இருதயத்தே அரனைக்கூடுங்கொள்கை, குறியொடு தாமழியும் நெறி ஆகிய ஒவ்வொன்றோடும் தனித்தனி கூட்டிக் கூறினர். திருவேடம் என்றவிடத்து அகரச்சுட்டு வருவித்து அத்திருவேடமுடையரென் றெடுத்துக் கொண்டுரைக்க. பாசத்தார் என்பது பாசத்தாரது இணக்கத்தைக் குறித்தலின் ஆகுபெயர். (கூ)

சிவாலயத்தைச் சிவனெனக்கண்டு வழிபடுமுறையை வகுத்துக் கூறுகின்றது.

திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே
யுருக்கோலி மந்திரத்தா லெனநினையு மவர்க்கு
முளனெங்கு மிலனிங்கு முளனென் பார்க்கும்
விருப்பாய வடிவாகி யிந்தனத்தி னெரிபோன்
மந்திரத்தில் வந்துதித்து மிகுஞ்சுரபிக் கெங்கு
முருக்காண வொண்ணாத பான்முலைப்பால் விம்மி
யொழுகுவது போல்வெளிப்பட் டருளுவனன் பர்க்கே.

(பொ-ரு.) திருக்கோயிலுள் இருக்கும் திருமேனி தன்னையே சிவனெனக் கண்டவர்க்கு சிவன் அங்கே உறைவன். மந்திரத்தால் உருக்கோலியென நினையுமவர்க்கும் உளன் எங்கும் இலன் இங்கும் உளன் என்பார்க்கும் இந்தனத்தின் எரிபோல் மந்திரத்தில் விருப்பாய வடிவாகி (அங்கே) வந்து உதித்தும், அன்பர்க்கே மிகும் உரு எங்குங்காண ஒண்ணாத பால் சுரபிக்கு முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல் (அங்கே) வெளிப்பட்டருளுவன்.

(போ-ரை.) மேற்கூறியவாறு சிவனடியாரை வழிபடுதலோடு சிவாலயத்தையும் சிவமெனக்கண்டு வழிபடவேண்டும்.

சிவாலய வழிபாடு நான்குவகைப்படும். அவை வருமாறு:—சிவாலயத்துள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்க முதலிய திருமேனிகளையே சிவம் வேறு இவ்வுருவம் வேறு என்னும் பேதமின்றிச் சிவம் எனக்கண்டு வழிபடுவர் சரியையாளர். இவர்க்குச் சிவபிரான் அத்திருமேனிகளில் வெளிப்படாது நின்று அருள் செய்வன். ஈசாநாதி மந்திரங்களினால் அருவப் பொருளாகிய சிவபிரான் சிவலிங்க முதலிய திருவுருக்கொண்டான் எனக்கருதி மந்திரக்கிரியையால் வழிபடுவர் கிரியையாளர். இவர்க்கு விறகைக் கடைந்தவிடத்துத்தோன்றும் அக்கினிபோல வருந்தி முயலுதலாற் சிவபிரான் அத்திருமேனிகளில் வெளிப்பட்டுத் தோன்றி யருள் செய்வன். உள்ளம் எங்கணும் இல்லமாக வாழும் சிவபிரான் இத்திருமேனியிலும் வீற்றிருந்து பூசைகொண்டருளுவனெனக் கருதிச் சத்தி சம்பந்தமான மந்திரங்களால் சிவலிங்க முதலிய திருமேனிகளை வழிபடுவர் யோகிகள். இவர்க்குக் கறந்தவிடத்துத் தோன்றும் பால்போல, இலகுவில் வெளிப்பட்டுத் தோன்றி அருள் செய்வன். கிரியையாளர், யோகிகள் இருவர்க்கும் வெளிப்பட்டுத் தோன்றினும் அப்போதப்போது தோன்றுவதே யன்றி எப்போதுந் தோன்றுவதில்லை. அவர்போல் ஏகதேசமாய் வழிபடாமல் நீங்காத அன்பினால் சிவலிங்க முதலிய திருமேனிகளைச் சிவமேயெனக்கண்டு வழிபடுவர் ஞானிகள். இவர்க்கு மேம்பட்ட பசுவின் வடிவமுழுதுங் காணப்படாத பால் தன் கன்றை நினைந்தமாத்திரையால் அதன் முலையில் விம்மி ஒழுகுவது போல், கருணை மிகுதியால் சிவபிரான் அவ்வன்பே தானாய் எப்போதும் அத்திருமேனிகளில் வெளிப்பட்டு நின்று அருள் செய்வன். ஆதலால், அவ்வுண்மையை யறிந்து அன்பின் வழியே வழிபடுக. (எ-று)

ஆதலான், அவ்வுண்மையையறிந்து அன்பின்வழியே வழிபடுக என்பது குறிப்பெச்சம். அங்கே என்பது உதித்தும் என்பதனோடும், வெளிப்பட்டருளுவன் என்பதனோடும் சென்றியையும். உருக்கோலி என்பது உருக்கோலினன் என்னும் பொருள் குறித்தலின் பெயர். உளன்

என்பது உள்ளம் என்னும் பொருள் குறித்தது. இலன் என்பது இல்ல மாகவுடையன் என்னும் பொருள் குறித்துக் காலங்காட்டாமையின் இல் என்னும் இடப்பெயரடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று. இங்கும் என்பது இத்திருமேனியிலும் என்னும் பொருள் குறித்தலின் உம்மை உள்ளத்திலேயன்றி என இறந்தது தழுவிற்று. யோகிகட்குக் கறக்க வொழுகும் பால்போல் என்பது செய்யுளிலில்லையாயினும் அன்பர்க்கு விம்மியொழுகுவதுபோல் என்றதனாற் பெறப்பட்டது. அன்பர் என்றது இவ்விடத்து ஞானிகளைக் குறித்தது. * "அன்பரொடுமரீஇ" என்ற விடத்துப்போல. சரியையாளர் முதலிய நால்வரும் அன்புடையரேனும், முறையே, மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிரதரமென நால்வகை வேறுபாட் டுடன் அவ்வன்பு நிகழ்தலின், இடைவிடாது அன்பு நிகழ்தற்குரியார், தீவிரதர அன்புடையராகிய ஞானிகளேயாதலின், ஞானியே அன்பரெனச் சிறப்பித்துக் கூறப்படுவரென்பதறிக. "அயரா அன்பின்" என்றார் சிவ ஞானபோதம் பதினொரூஞ் சூத்திரத்தில் ஸ்ரீ மெய்கண்டதேவரும் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனென வழிபடினும், திருவேடத் தை வழிபடுதல் அவ்வேடமுடையார் கருத்துச் சிவமாயிருத்தல் பற்றி எனவும், சிவாலயத்தை வழிபடுதல் வழிபடுபவர் கருத்துச் சிவமாயிருத்தல் பற்றியெனவும் அறிக.

இச்செய்யுளின் பொருளை,

"அருந்துணையை யடியார்த மல்லறீர்க்கு
மருமருந்தை யகன்ஞாலத் தகத்துட் டோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றுவிட்டு
வான்புலன்களகத் தடக்கி மடவாரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போகமாற்றிப்
பொதநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே."

எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த தேவாரமும் வலி யுறுத்தும். அது வருமாறு:—அருந்துணையை, அருமருந்தை, பெருந் துணையை, பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே என முடித்துக்கொள்க. துணை, சிறுதுணை பெருந்துணை என இருதிறப்

---

* சிவஞானபோதம் கஉ-ம் சூ-ம்

படும். இவை முறையே நீங்குந்துணை, நீங்காத்துணை எனவும் படும். துணையாவார், நீங்குமியல்பினர் நீங்காவியல்பினர் என இருதிறப்படுதலின், துணையும் அவ்வாறு இருதிறப்பட்டது. உலகத்தார் அனைவரும் நீங்கும் இயல்பினராதலின், அவரது துணை நீங்குந்துணை எனப்படும். ஆகலான் இத்துணையை ஞாலத்தகத்துட்டோன்றி வருந்துணை யென்றார். தோன்றி வருமென்றதனாலேயே நீங்குந் துணையாமாறு காண்க. முதல்வன் என்றும் நீங்காவியல்பினனாதலின், அவனது துணை நீங்காததுணை யெனப் படும். அந்த நீங்காததுணையாகிய பெருந்துணையும், மறைந்து துணையாதலும் வெளிப்பட்டுத் துணையாதலும் என இருதிறப்படும். அவற்றுள், மறைந்து துணையாதலை அருந்துணை யென்றும், வெளிப்பட்டுத்துணையாதலைப் பெருந்துணை என்றுங் கூறியருளினர். அடியாராவார், மந்திர முதலிய கிரியையால் வழிபடுவோரும், யோகத்தால் வழிபடுவோருமென இருதிறப்படுவர். இவ்விருவருக்கும் அவரவர் விரும்பியவாறு அப்போதப்போது வெளிப்பட்டுத் தோன்றுதலை அருமருந்தாக உருவகஞ்செய்தனர். மருந்தாவது, தன்னியற்கை வடிவமாறி அவரவர் விரும்பிய செந்தூரம், சூரணம் முதலிய வடிவாய் அப்போதப் போது வெளிப்பட்டுத் தோன்றுவது. அதுவும், வருந்தி முயலுதலாலும் எளிதில் முயலுதலாலும் தோன்றுவதாகும். ஆதலின், அருமருந்து என்றார். இங்ஙனந்தோன்றுவன அனைத்தும் இறைவனுடைய அருவம், அருவுருவம். உருவம் என்னும் பொதுநிலையேயாதலின், இந்நிலையினும் மேம்பட்ட சொரூபநிலையினை யறியும் ஞானநெறி நிற்போர்க்குச் சிவம் வெளிப்பட்டுத் தோன்றுதலை, பொது நீக்கித்தனை நினைய வல்லார்க்கென்றும் பெருந்துணை என்றார். நினைய என்றதனால், எக்காலத்தும் உடனாய் நிற்கவும் மலத்தின் சேட்டையால் மறத்தலால் வெளிப்பட்டுத் தோன்றவில்லை யென்பதும், வல்லார் என்றதனால் நினைத்தல் அஃதாவது உடனாய் நிற்றலையறிதல் சாமானியருக்குக் கூடாதென்பதும் பெறப்பட்டன. இவர் வல்லாரென்பது மேற் கூறப்பட்ட விசேடணங்களாலும் அறியப்படும். அஃதாவது, மனைவி முதலியோரை விடுதல் உலகத்தரிதென்பது தோன்ற அகல் ஞாலத்தகத்துட்டோன்றி வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு எனவும், விட்டு நீங்கினும் மனம் வேறொன்றனைப் பற்றி நின்றாலன்றி விடுதல் நிலைபெறாதென்பது தோன்ற யோக நெறியினைப்பற்றி நிற்றலைப்புணர்த்துவாராய், வான்புலன்களகத்தடக்கி யெனவும், அங்ஙனமாயினும், அந்நிலையினின்றும் மீளில் முன் விட்டவற்றைப் பற்றுமாதலின், அங்ஙனம் பற்றுதல் கூடாதென்பது தோன்ற போகமாற்றி எனவும், மீளுதலில்லாத நிலையைப் பற்றினாலன்றி உலகப்பற்று அறவே ஒழியாதாதலின், அந்நிலையைப்பற்ற

வேண்டு மென்பது தோன்றப் பொது நீக்கித்தனை நினைய எனவுங் கூறிய வாற்றால் இங்ஙனம் அறிபவர் வல்லாராதல் காண்க. போக வென்பது பொருளின் நீக்கத்தையும், மாற்றி யென்பது பற்று நீக்கத்தையுங் குறித்த வாறும்.

இவ்வாறு, கிரியை, யோகமென்னும் இரண்டில் நிற்கும் அடியார்க்கு அருமருந்தாதலும், ஞானநெறிநிற்கும் வல்லார்க்குப் பெருந்துணையாதலும் பெறப்படவே, அருந்துணையாதல் சரியையினையுடையோர்க் கென்பது பெறப்படும். படவே, திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனிதன்னைச் சிவனெனவே காணுஞ் சரியையாளர்க்குச் சிவனங்கே உறைவன் என்பதனை, அருந்துணையென்பதும், மந்திரத்தால் உருக்கோலினன் என நினையுங் கிரியையாளர்க்கும், உளனெங்கு மிலனிங்கும் உளனென்னும் யோகிகட்கும், இந்தனத்தினெரிபோலும் கறந்தவழித்தோன்றும் பால்போலுமென் பதனை, அடியார்தம் அல்லல் தீர்க்கும் அருமருந்தென்பதும், அன்பர்க்கு வெளிப்பட்டருளுவன் என்பதனை, பொது நீக்கித் தனைநினையவல்லார்க் கென்றும் பெருந்துணை யென்பதும் வலியுறுத்துமாறு காண்க. இன்னும் விரிப்பிற்பெருகும். ஆதலின் அஃதறிந்தடக்கிக்கொள்க. (௪)

ஞானிக்கு நால்வகை வழிபாடும் கூடுமெனவும், ஏனையோர்க்குத் தன்னிலைமைக்கு மேம்பட்ட வழிபாடு கூடாதெனவும், ஞானியே யாவர்க்கும் குருவாவன் எனவும், சிவாலயமும் சிவனடியாரும் அக்குருவின் வேறல்ல எனத்தேறி வழிபட வேண்டும் எனவும் கூறுகின்றது.

ஞானயோ கக்கிரியா சரியை நான்கு
நாதன்றன் பணிஞானி நாலினுக்கு முரிய
னூனமிலா யோகமுதன் மூன்றினுக்கு முரியன்
யோகிகிரி யாவான்று னெண்கிரியை யாதி
யானவிரண் டினுக்குரியன் சரியையினி னின்றோ
னச்சரியைக் கேயுரிய னகலினல் யார்க்கு
மீனமிலா ஞானகுரு வேகுருவு மிவனே
யீசனிவன் றனென்று மிறைஞ்சி யேத்தே.

(போ-ரை) மேலைச்செய்யுளிற் கூறியவாறு சிவாலயத்தை வழிபடுதல் அவரவர் கருத்துக் கேற்றவாறு உரித்தாயிருக்க, சரியையாளரைப்போல் ஞானியும் அச்சிவாலயத்தை வழிபடுவானோ னெனின், சரியைமுதல் நான்கும் இறைவனது உண்மைப்பணியாதலால் ஞானி நாலினுக்கும் உரியன். எதுபோலுமெனின், அகத்தொழில் செய்வார் புறத்தொழிற்கும் உரியராதல்போலாம். புறத்தொழில் செய்வோர் அகத்தொழிற்கு உரியரல்லாதது போல், யோகியானவன் குற்றமில்லாத யோகம் கிரியை சரியை ஆகிய மூன்றிற்கும், கிரியாவான் பிரகாசம் பொருந்திய கிரியை சரியை ஆகியஇரண்டிற்கும், சரியாவான் அச்சரியை ஒன்றிற்கும் உரியனுவன். ஆதலினுல், சரியை முதலிய அந்நால்வகைப் பாதத்தினிற்கும் மாணுக்கருக்கு உபதேசிக்கும் ஆசிரியரும் அவ்வாறேயாவர். அதாவது, ஞானகுரு எல்லா மாணுக்கருக்குங் குருவாவரென்பதும், ஏனைய குரு தன்னின் மேம்பட்ட மாணுக்கருக்குக் குருவாகாரென்பதுமாம். ஆதலால் ஞானகுருவே மேலான குருவென்றும், மேற்கூறிய சிவாலயங்களும் சிவனடியார்களும் இக்குருவேயென்றுந் துணிந்து குருவினுபகாரத்தைக் கருதிச் சிவாலயம் சிவனடியாராகிய அவ்விரண்டினுய் வழிபடுக. (எ-று)

மேலைச் செய்யுளிற் கூறியவாறு திருமேனிதன்னைச் சிவனெனவே காணுதற்கும், மந்திரத்தாலுருக்கோலினனெனக் காணுதற்கும், உள்ளமெங்கும் இல்லமாகவுடையவன் இங்குமுளனெனக் காணுதற்கும், வெளிப்பட்டருளுதற்குரிய அன்பராதற்கும் உரியார், முறையே சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நெறியினிற்போரென்ப தறிவிக்கவேண்டி, அக்கருத்துக்களை உள்ளடக்கிநிற்கும் ஞானமுதலியவற்றை யுடையாரது இயல்பின்மேல் வைத்துக்கூறினர். இயல்பாவது, நான்கிற்கும் ஞானி உரியன்; மூன்றிற்கு யோகி உரியன்; இரண்டிற்குக் கிரியாவான் உரியன்; ஒன்றற்கே சரியாவான் உரியன் என்பதாம். இதனுல், நால்வகை வழிபாட்டிற்கு ஞானியும், மூன்று முதலியவைக்கு முறையே ஏனைய மூவரும் உரியரென்பது கூறப்பட்டவாறும். சிவலிங்க முதலிய தாபரங்களையும், சிவனடியாரையும், திருவேடத்தையும், சிவனெனவே தேறி வழிபடவேண்டுமென்பது

மேலே பெறப்பட்டிருத்தலால், சரியை முதலிய நான்கிற்கும் உரியரைக் கூறும் இவ்விடத்து இறைஞ்சி ஏத்து என்பது கூறவேண்டுவதின்றாகவும், ஞானகுருவே குருவாதலின் இவனை வழிபடல் வேண்டும்; எடுத்துக் கொண்ட இத்தாபர சங்கமங்களும் இக்குருவடிவே எனத்தேறி வழிபடல் வேண்டுமெனக்கூறின் விரியுமாதலின், விரியாது ஒன்றற்குச் சொல்லப் பட்ட இலக்கணத்தை அதனைப் பெறுதற்குரிய மற்றொன்றுக்கும் மாட்டி விடுதலென்னும் மாட்டேற்றின் மேல்வைத்து ஞானகுருவினிடத்து வழி பாடு செய்யவேண்டுமென்ப துணர்ந்து கொள்ளுதற்பொருட்டு எடுத்துக் கொண்ட தாபர சங்கமங்களில் வைத்து, ஆகலினால் ஈசனிவனே யென்றி றைஞ்சி ஏத்தே என்பதனையும் இவ்விடத்து உடன் கூறினார். குருவே சிவலிங்கமுந் திருவேடமும் அடியாருமென வழிபட வேண்டுமாயின், குருவை வழிபடவேண்டுமென்பது சொல்லாமலே பெறப்படுமென்பது கருத்து.

திருவேட மாலயங்களெல்லாம் அரனெனவே தேறி ஞானி முதலிய நால்வரும் வழிபடுமுறையில் ஞானிக்கு நான்கு வழிபாட்டிலுமுரிமையுடை மையும், ஏனையோர்க்குத் தம்மிற் கீழ்ப்பட்டவற்றில் உரிமையுடைமையும், மேற்பட்டவற்றில் உரிமையின்மையும் விசேடமெனக் கூறியவாறுகாண்க.

ஈசனிவன் என்றவிடத்து இவன் என்பது ஈசனென்னும் பகுதிப் பொருளையே குறித்த விகுதி. இவ்விடத்து ஈசனென்றது திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனியை. ஈசன்றான் இவனேயென்றும் என்றவிடத்து உம்மையை எதிரது தழுவியதாக்கித் திருவேடமுமிவனே யென்றிறைஞ் சியேத்தெனவும் உரைத்துக்கொள்க. (ரு)

ஞானகுருவின் அருளாலன்றிச் சிவபிரான்றிருவடியை அடைதல் கூடாதெனக் கூறுகின்றது.

மந்திரத்தான் மருந்துகளால் வாய்த்தவியோ கத்தான்
மணியிரத குளிகையினான் மற்று மற்றுந்
தந்திரத்தே சொன்னமுறை செய்ய வேத
சகலகலை ஞானங்க டிரிகால ஞான
மந்தமிலா வணிமாதி ஞானங்க ளெல்லா
மடைந்திடுமா சானருளா லடிசேர் ஞானம்

வந்திடுமற் றென்றாலும் வாரா தாகு
மற்றவையு மவனருளான் மருவு மன்றே.

(போ - ரை) மந்திரங்களாலும், மருந்துகளாலும், சிறந்த யோகத்தாலும், மணியாகிய இரத குளிகையினாலும், இன்னும் வேறு வேறு சாத்திரங்களிலே கூறியவாறு செய்தலாலும் வருகின்ற சித்தி ஞானங்களும், வேதாகம முதலிய கலைஞானங்களும், மூன்று காலங்களையும் அறியும் ஞானங்களும், அளவில்லாத அணிமா முதலிய அட்டசித்திஞானங்களும் ஆகிய அனைத்தும் ஞானாசிரியன் இல்லாமலும் கூடும். சிவபெருமான் திருவடியை அடையும் ஞானம் ஞானாசிரியன் திருவருளால் கூடுவதேயன்றி வேறெவற்றானுங் கூடாது. அக்குருவருளால் மேற்கூறிய சித்தி முதலிய ஞானங்களுங் கூடும். ஆதலால், இக்குருவே ஈசன் என்று வழிபட்டுத்துதிக்க. (எ-று)

ஆதலால், இக்குருவே ஈசன் என்று வழிபட்டுத் துதிக்க என்பது குறிப்பெச்சம். ஞானகுருவே ஈசனெனத்தேறி வழிபடவேண்டுமென மேலைச்செய்யுளிற் கூறி, சிவஞானம் அக்குருவருளையின்றி அமையாதெனவும், அட்டசித்திகளும் அவனருளாலுண்டாகுமெனவும், அவ்வாறு வழிபடுதற்குரிய அக்குருவினது பெருமை இச்செய்யுளிற் கூறியவாறும். மற்றவையுமவனருளால் மருவும் என்றது, ஞானகுருவுக்குச் சித்தியை அருளுதல் கூடாதென்பதை நீக்குதற்பொருட்டு. ஞானி சித்தியை எதிர் பார்ப்பதில்லை. சித்திகள் ஞானியை எதிர்பார்க்கும். பார்க்கினும் இன்றியமையாக்காலத்தில் தற்போத முனைப்பின்றித் திருவருள் வயப்பட்டு நின்று உபயோகிப்பர். திருஞானசம்பந்தசுவாமிகள் முதலிய பெரியாரிடத்து நிகழ்ந்த சித்திகளனைத்தும் திருவருளை முன்னிட்டு நிகழ்ந்தவாறு காண்க. (௬)

ஞானகுருவை வழிபட்டார்க்கு உண்டாம் பயன் சிவமேயாதலெனக் கூறுகின்றது.

பரம்பிரம மிவனென்றும் பரசிவன்றா னென்றும்
பரஞான மிவனென்றும் பராபரன்றா னென்று

மரன்றருஞ்சீர் நிலையெல்லா மிவனே யென்று
மருட்குருவை வழிபடவே யவனிவன்றா னாயே
யிரங்கியவா ரணம்யாமை மீனண்டஞ் சினையை
யியல்பினொடும் பரிசித்து நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதா மாக்குமா போற்சிவமே யாக்கும்
பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந் தானே.

(கோ - டு) இரங்கிய வாரணம் யாமை மீன் இவை எனவும், சிவமே யாக்குந்தானே எனவுங் கூட்டுக.

(போ - ரை) சொரூப சிவமும், தடத்த சிவமும், பரஞானத்தையுடையாரும், சிவலிங்காதி மூர்த்தங்களும், சிவபக்தர் பொருட்டாக அப்போதப்போது வெளிப்பட்டருளி மறையும் மூர்த்தங்களும் ஆகிய எல்லாம் குருமூர்த்தமே எனத்தேறி ஞான குருவை வழிபடுக. அவ்வாறு வழிபடின், சிவபெருமான் இக்குருவை ஆவேசித்து நின்று கோழியானது தன் முட்டையைப் பரிசித்துக் காத்துச் சிசு உற்பத்தி செய்வதுபோல், மாணாக்கன் சிரசில் கையை வைத்தலாகிய பரிச தீட்சை செய்தும், ஆமையானது தன் முட்டையைக் கருதிச் சிசு உற்பத்தி செய்வதுபோல், சிந்தித்தலாகிய பாவனா தீட்சை செய்தும், மீனானது பார்வையினால் சிசு உற்பத்தி செய்வதுபோல், பார்த்தலாகிய சட்சு தீட்சை செய்தும் சிவமாகச் செய்தருளுவன். (எ-று)

ஞானகுருவை வழிபட்டார்க்கு வரும்பயன் சிவமேயாதல் என இச்செய்யுளிற் கூறியவாறும். பரம் பிரமம் என்றது சொரூப சிவத்தை எனவும், பரசிவன் என்றது தடத்த சிவத்தை எனவும், பரஞானம் என்றது ஆகுபெயரான் அதனை உடையாரை எனவும், பராபரன் என்றது லிங்கத்தாபர மூர்த்தத்தை எனவும், அரன்றருஞ்சீர் நிலை என்றது அறுபத்து மூன்று நாயன்மார் முதலிய சிவபத்தர் பொருட்டாக ஆண்டாண்டு வெளிப்பட்டருளி மறையும் மூர்த்தங்கள் எல்லாவற்றினையும் எனவுங் கொள்க.

வழிபாடு கூறும் இவ்விடத்து, பரஞானத்தையுடையாரும், பராபரனாகிய தாபர மூர்த்தங்களும், குருவடிவே என வழிபட வேண்டுமென்பது கூறவேண்டுதலின், அவ்வாறு கூறுதலோடு சொரூப சிவம் தடத்த சிவ முதலியவற்றையும் குருவென வழிபடல் வேண்டுமென்பதும் உடன் கூறினார். (எ)

மூன்றாமதிகரணம் முடிந்தது.

பன்னிரண்டாஞ் சூத்திரம் முடிந்தது.

ஆகத்திருவிருத்தம் ௧௨௮.

சிவஞானசித்தியார் சுபக்கம் உரையுடன் முற்றுப்பெற்றது.

மேய்கண்டதேவன் திருவடிவாழ்க.

சிவஞானயோகிகள் திருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

அத்துவப்படம்.

பெயருந் தொகையும்.

மந்திரம்.	பதம்.	வன்னம். (எழுத்து)	புவனம்.	தத்துவம்.	கலை. ௬.
௧௧.	௮௧.	௫௧.	௨௨௪.	௩௬.	௫.

மந்திர முதலிய ஐந்துங்கலையிலொடுங்கு முறை.

	மந்திரம்.	பதம்.	வன்னம்.	புவனம்	தத்துவம்.	அதிதெய்வம்.
நிவிர்த்தி	௨.	௨௮.	௧.	௧௦௮.	௧.	பிரமன்.
பிரதிட்டை	௨.	௨௧.	௨௪.	௫௬.	௨௩.	விட்டுணு.
வித்தை	௨.	௨௦.	௭.	௨௭.	௭.	ருத்திரன்.
சாந்தி	௨.	௧௧.	௩.	௧௮.	௩.	மகேசுவரன்.
சாந்தியதீதை	௩.	௧.	௧௬.	௧௫.	௨.	சதாசிவர்.
	௧௧.	௮௧.	௫௧.	௨௨௪.	௩௬.	

பஞ்சகலைகளும் சிற்சத்தியிலொடுங்கும். சிற் சத்தி சிவனிடத்தொடுங்கும்.

பாட்டு முதற்குறிப் பகராதி.

பாட்டு	பக்கம்
அ.	
அகலியை	௧௭௪
அங்கித்தம்	௪௪௬
அசித்தரு	௨௩௬
அசித்தெனி	௨௫௭
அஞ்செழுத்	௪௧௯
அண்டசஞ்	௨௨௮
அத்துவாழு	௪௦௯
அநாதியுட	௪௫௧
அநாதியே	௨௬
அந்தரி	௪௨௪
அந்நியமி	௬௧௩
அயனரி	௨௪௭
அயன்றனை	௪௧௬
அரசனுஞ்	௧௩௧
அரனடிக்	௧௫௯
அரன்விதி	௧௮௨
அரிசனம்	௨௬௬
அருந்தின்பத்	௨௬
அருமறை	௬௫௭
அருவமோ	௮௯
அருவவிகா	௨௫௩
அருவினிலு	௭௫
அருவுருவீ	௭௩
அருவுருவெ	௨௫௪
அருளதுச	௬௦௫
அருளினலா	௧௪
அருளினுலு	௧௩௬
அவ்வவ	௧௭௫
அவ்வுடனு	௨௪௩
அழிந்தபி	௫௩
அழிப்பிளை	௮௭
அழிவிலா	௬௪௧
அளவை	௧௩
அறிதருமு	௨௮௪
அறிந்திடுமோ	௨௯௩
அறிந்திடும்பி	௨௪௧
அறிபொரு	௬௧௬
அறியாமை	௬௮௫
அறிவதைவ	௨௬௯
அறிவரியான்	௪௭௩
அறிவிக்க	௬௨௩
அறிவிச்சை	௨௫௦
அறிவிலன	௨௮௯
அறிவுடல்	௨௭௫
அறிவுறும்	௬௦௩
அறுவகைச்	௯
அனைத்து	௯௨௨
அன்னியசாதி	௨௧
ஆ.	
ஆங்காரம்	௧௯௧
ஆணவங்	௪௫௪
ஆணையால	௧௩௧
ஆரண	௯௮
ஆவதா	௬௦௯
ஆன்மாவின்	௨௪௮
இ.	
இங்குநாஞ்	௧௫௫
இதமகி	௧௪௬
இந்தன	௪௨௭
இந்திரிய	௪௬௭
இந்நிலை	௬௯௨
இம்மையின்	௧௬௩
இம்மையே	௬௫௬
இயல்புகா	௪௮
இரந்தா	௧௯௯
இரும்பை	௪௩௭
இருவகை	௨௮௨
இருவினைச்செயல்க	௨௯௧
இருவினைச்செயல்காணி	௧௬௩
இருவினையனுதி	௧௭௧
இருவினையின்பத்	௧௬௬
இருவினையென்னை	௧௬௪
இவனுலகி	௪௬௨
இறுதியாங்	௮௪
இறைவனு	௬௩௨
இறைவனிங்	௧௪௪
இறைவனே	௨௯௫

பாட்டு.	பக்கம்.
இறைவன்	௩௦௦
ஈ.	
ஈசனுக்க	௪௭௩
ஈண்டுபக்	௩௧
உ.	
உடலியா	௨௭௩
உடலினி	௨௫௯
உடலின்வே	௨௩௯
உடல்விடா	௧௬௭
உடற்செயல்	௧௩௯
உணராத	௩௧௧
உணர்வண	௨௪௩
உதிப்பது	௪௭
உயிரவை	௮௧
உயிரினை	௨௫௮
உயிரினோ	௨௨
உயிரென	௨௩௬
உருமேனி	௧௦௮
உருவருள்	௯௯
உருவினி	௨௬௦
உருவினை	௨௯௦
உருவுயி	௨௫௩
உருவொடு	௧௩௧
உரைதரு	௩௩௦
உரைத்தவித்	௮௩
உலகமேயு	௩௦௨
உலகினிற்	௯௪
உலகினை	௧௦௦
உலகுடல்	௧௫௧
உலகெலா	௧௨௮
உள்ளது	௫௧
உள்ளுண	௬௮
எ.	
எங்குந்தானி	௪௬௧
எங்குந்தானெ	௪௦௦
எங்குந்தான்வி	௨௬௧
எல்லாமாய்	௨௧௮
எவ்விடத்து	௪௫௯
எழுமுடல்	௧௮௩
என்னுடல்	௨௭௧
என்னையிப்	௧௧
ஏ.	
ஏதுமொன்று	௨௬
ஐ.	
ஐந்துசாக்	௨௮௫
ஐந்துசுத்	௨௦௨
ஒ.	
ஒருகோட்ட	௭
ஒருபுல	௨௩௨
ஒருபொரு	௫௨
ஒருவனே	௧௨௪
ஒருவனோ	௪௫
ஒழுக்கமன்	௧௫௨
ஒன்றதாய	௨௧௯
ஒன்றதாயி	௧௧௮
ஒன்றென	௧௩௦
ஒன்றெனு	௩௧௭
ஒன்றொடொன்	௧௦௩
ஓ	
ஓசைநற்	௧௯௫
ஓதியுணர்	௩௩௯
ஓதுசம	௩௫௬
ஓரிடமழிய	௫௫
க	
கண்டபொருளை	௧௮
கண்டவிவை	௪௧௬
கண்டிடுங்	௪௧௧
கண்டுணர்	௨௭௬
கண்ணுதல்	௧௦௪
காரணங்கள்	௪௦௭
கருதுகாரண	௬௧
கருவிகழிந்	௩௯௬
கருவியாம	௨௪௫
கருவியாற்	௨௯௭
கருவியும்	௨௯௮
கருவினுள	௨௩௧
கற்றநூற்	௮௦

பாட்டு.	பக்கம்.
கா	
காண்டல் வாயின்	உ0
காண்பவன்	கருஎ
காயத்தினழிவு	ருரு
காயமொழி	சசஎ
காரணவனு	ருஎ
காரியகாரண	சுரு
காரியமென்ப	ருஅ
காலமேகடவு	ருசு
கு	
குணங்களை யி	உருக
குறிகள்வ	உ0௦
குறித்தடியி	சகரு
குறித்த தொன்	கூஎ
கே	
கேட்டலுடன்	ருஎச
கேவலசகல	உஅஎ
ச	
சகமார்	ருசுஎ
சங்கமங்	கஎஉ
சத்த சத்த	ருஉரு
சத்திதன்வடி	கககு
சத்திதானுதை	உகச
சத்திதான்பல	ககரு
சத்தியாய்	உகரு
சத்தியுஞ்	கஉசு
சத்தியேவடி	கூரு
சந்திரன்வ	உருசு
சந்நிதிகு	உருஉ
சலமில	சச0
சன்மார்க்கஞ்சகமா	ருசுரு
சன்மார்க்கஞ்சகலகலை	ருஎ0
சா	
சாக்கிரத்	ருகூச
சாக்கிரமு	உஅ0
சாந்தியா	ருசஎ
சார்பினிற்	ருக
சாற்றியப	ககூசு
சி	
சித்தமா	சகூ0
சித்தாந்த	ருசுக
சிவஞானச்	ருஎஅ
சிவஞ்சத்தித	உகரு
சிவஞ்சத்திநா	உக0
சிவனருவுரு	கஉஎ
சிவனையவ	சக0
சிவன்சீவ	சசுரு
சீ	
சீலமோவு	எகூ
சீவனுமிச்	ககூ
சு	
சுத்தத்	உ0க
சுத்தமாமா	உசுஉ
சுத்தமாம்	கக0
சுத்தமெய்	ருஉச
சூ	
சூக்குமங்	கஎஎ
சூக்குமதே	உசுசு
சூக்குமவாக்	சுகூ
சூக்குமவு	உருச
சூரியகாந்	ருஅக
செ	
செங்கமல	சஎஉ
செப்பினுய்	கஎரு
செம்பிரத	சசுச
செயல்களே	கசசு
செய்க்கிடுந்	கசசு
செய்தவர்	கசகூ
சென்றணையு	சசுரு
சொ	
சொன்னவித்	அசு
ஞா	
ஞாலமதின்	ருகூ0
ஞானத்தா	ருஎகூ
ஞானநூற்	ருஎஉ
ஞானமேயா	கஉ0
ஞானயோ	சஅக

பாட்டு.	பக்கம்.
த	
தத்துவஞ்	௯௬௨
தத்துவமெ	௨௦௬
தத்துவரூப	௨௦௪
தந்தைதாய்	௧௪௫
தனுகரண	௨௧௬
தன்மமோ	௧௬௬
தன்னியல்	௧௯௪
தா	
தாதமார்	௯௬௫
தாபரசங்	௧௫௮
தானஞ்செய்	௧௫௦
தானமியா	௯௭௬
தி	
திரவியமு	௧௪௮
திருக்கோயி	௪௭௭
தூ	
தூலமாமு	௧௮௦
தெ	
தெரிந்து	௯௦௪
தெரிவரிய	௪௫௯
தே	
தேசமிட	௯௬௧
தேவரினெ	௧௦௧
தோ	
தோற்பாவை	௨௬௬
தோற்றமு	௫௬
தோற்றுவித்	௮௨
ந	
நண்ணிடு	௬௦
நரர்களாய்	௧௭௨
நரர்பயி	௨௨௬
நற்செவி	௧௬௯
நா	
நாடுகளி	௪௪௨
நாட்டுமி	௪௨௨
நாயகன்	௧௦௪
நி	
நிகழ்ந்திடும்	௭௧
நிக்கிரகங்	௧௪௫
நித்தமா	௧௮௪
நியதிபின்	௧௮௬
நிலம்புன	௪௬
நெ	
நெல்லினுக்குத்	௪௫௬
ப	
பக்கமூன்றின்	௨௪
படைகொடு	௨௭௧
படைப்பாதி	௧௦௬
பண்டைநற்	௧௨
பந்தமும்	௬௫
பரஞானத்	௪௪௫
பரம்பிரம	௪௮௪
பரிதியை	௨௨௧
பலவிதமா	௯௯௫
பன்னக	௧௬௮
பன்னிற	௯௬௮
பா	
பாசஞா	௪௦௪
பாசிபடு	௪௦௧
பாலரொடு	௯௯௭
பாவிப்ப	௯௧௫
பி	
பிணத்தினே	௨௯௪
பு	
புகையா	௨௭
புண்ணிய	௯௮௮
புத்திமற்	௬௨
புத்திரமார்	௯௬௬
புந்தியை	௨௭௪
புருடனே	௨௭௭
புருடன்ற	௨௨௯
புறச்சமய	௯௫௨
புறம்பே	௪௨௫
பூ	
பூதஞசரீ	௧௬௬
பே	
பேரிழ	௧௯௭

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
பொ		**மி**	
பொறிபுலன்	உசுரு	மிக்கதொரு	ருஅச
பொன்மைநீ	கஉ௫	**மு**	
பொன்னணி	உஎஉ	மும்மலநெ	உஉச
போ		முற்செயல்	கசo
போகியா	கoஉ	**மூ**	
போதகாரி	உஉஉ	மூவகையணு	எரு
போதுநா	உஅ	மூன்றுதி	ருசசு
ம		மூன்றுபக்கம்	உ௫
மண்டனில்	ருகo	**மே**	
மண்ணினிற்	எஅ	மேலைக்கு	கசஉ
மண்ணுளே	கசு௫	**மொ**	
மண்புன	கககு	மொய்தரு	உoஅ
மந்திரங்	ருச௫	**யா**	
மந்திரத்	சஅரு	யாதொரு	க௫ச
மந்திரமத	ககக	யான்செ	சரு௫
மந்திரமத்து	ககo	**வ**	
மருத்துவ	ககுச	வண்டுக	கஎரு
மருவானந்	உசுஎ	வருங்குண	கஅஅ
மலமாயை	உஉஎ	**வா**	
மலமென	உஉo	வாக்கொ	ககுச
மறைகளீ	கசுo	வாயாதி	ககுச
மறையிஞ	கரு	வாழ்வெ	உஉகு
மனமதுதை	ககுஉ	**வி**	
மனமதுநி	க௫ரு	விச்சையி	கஅஎ
மன்னவன்	ருஉஅ	விதிப்படி	கஎஅ
மா		வித்தக	குo
		வித்தைகள்	எரு
மாசறுகாட்சி	கஎ	வித்தையி	ருசசு
மாயைதான்	சுக	வித்தையோ	கஉஉ
மாயையிற்	கஅசு	விந்துவின்	சுச
மாயையினுள்ள	சுo	**வே**	
மாயையின்கா	உஉசு	வேதசாத்	சo௫
மாயையின்வ	உசுச	வேதநூல்	ரு௫சு
மாயையே	உஉக	வேற்றுமைப்	சுசு
மாறியிவ்	கஎசு	**வை**	
மானுடப்	உருo	வைகரிசெ	சுசு

பாட்டு முதற்குறிப்பகராதி,
முற்றுப்பெற்றது.

விஷய அகராதி.

விஷயம். | பக்கம்.

அ.

அகரம் இன்னதென்பது ... கருக
அக்கரங்களின் அதிதெய்வம் ... உசஎ
அங்கம் ... க00
அசபை ... ருகூகூ
அசுத்த மாயா காரியத்தைத் தொகுத்துக் கூறல் ... எரு
அசுத்தமாயை பிரகிருதிமாயை அங்கியும், நிலம் முதலியன அங்கமும் எசு
அடியவரிடத்து அன்புடையாரது பெருமை ... சஎரு
அடியவர் கருமம் தன் கருமமாகச் செய்தலும் தற்போதம் முனைத்து நின்று செய்தல் குற்றம் ... சஎரு
அட்டாங்க யோகம் ... ருசுகூ
அதி சூக்கும சித்துசிவம் என்பது உசுச-ருஉரு
அத்துவாக்களும் அவை ஒடுங்குமுறையும் ருசக-ருசகூ
அத்துவ சுத்தியால் ஆணவமலங் கன்மமலங்களும் சுத்தியாகும் ருசகூ
அத்துவிதத்தின் உண்மைப்பொருள் ... ருகஅ
அத்துவிதத்தை, பாசத்தில் வைத்துக்காட்டாது பதி பசுவென்னு மிரண்டில் வைத்துக்காட்டியதன் கருத்து ... ருஉ0
அநுக்கிரகம் நிக்கிரகமிரண்டுங் கருணையே ... கசரு
அநுமானம் இரண்டு வகைப்படும் ... உ0
அநுமான இலக்கணம் ... கஅ
அநுமானத்திலடங்கும் பிரமாணங்கள் ... கஎ
அநுமானத்தில் நிகழும் குற்றம் அறுபத்தைந்து ... ருஉ-சச
அந்தக்கரணங்களைச் செலுத்தும் அக்கரங்கள் ... உசசு
அந்தரியாக பூஜையின் முறை சஉஉ-சஉச
அபரமுத்தர்களின் தனுகரணாதிகள் சுத்தமாயா காரியம் ... சுரு
அபேதமாகிப் பிறிதராதென்பதன் கருத்து ... உஎரு
அரசன் செயல் இறைவன் செயலைக்குறிப்பிப்பது ... கசுக
அருத்தாபத்திப் பிரமாணம் ... கசு
அருந்துணையை என்னும் தேவாரத்தின் கருத்து ... சஅ0
அவத்தைகளில் நிற்கும் தத்துவங்களும் அவத்தைக்குரிய தானங்களும் ... உஅ0
அறமும் சிவபெருமானிடத்து அன்பில்லாது செய்யின் பாவமாம் கருகூ
அன்பரெனச் சிறப்பித்துக் கூறப்படுபவர் ஞானியேயாகும் ... சஎகூ

விஷயம். பக்கம்

ஆ.

ஆகமம் அநுமானத்திலடங்காதென்பது ... ௧௭
ஆகமம் சிறப்புநூல்; சித்தாந்தம் ... ௩௫௯
ஆகமப் பிரமாண இலக்கணம் ... ௧௮
ஆகமம் மூன்றுகலையினையுடையது ... ௨௦
ஆகமம் வேதவேதாந்தங்களின் சாரம் ... ௩௬௦
ஆணவங்கன்மமென்னும் மலங்களை மாயாமலத்தால் நீக்குதற்கு உவமை ... ௧௮௩
ஆணவமல மாயாமலங்களின் வேற்றுமை ... ௨௨௨
ஆணவமலம் உயிர்க்குணமன்று ... ௨௨௩
ஆணவமலத்தினிலக்கணம் ... ௨௧௯
ஆணவமல வியாபகத்திற்கும், இறைவன் வியாபகத்திற்கும் வேற்றுமை ... ௨௨௦
ஆணவமலத்தின் காரியம் எழு வகைப்படும் ... ௨௨௦
ஆணவமலம் பற்றறக்கழியுமென்றற்குச் செம்புங்களிம்பும் உவமை ... ௪௫௪
ஆணவமலம் பற்றறக்கழியுமென்றற்கு அக்கினிப்பிரகாசமும் இருளும் உவமை ... ௪௫௩
ஆணவமலம் பற்றறக்கழியுமென்றற்கு நெல்லும் உமியும் உவமை ௪௫௬
ஆணவமலத்தைச் சார்ந்துநின்ற உயிர் அதனினின்று நீங்குமாறுபோலச் சிவனைச்சார்ந்த உயிர் சிவனைவிட்டு நீங்காதென்பதும் அதற்குக் காரணமும் ... ௪௬௦
ஆப்தனுதற்குரியவன் ... ௩௦
ஆரம்பவாதம் ... ௭௨
ஆருதாரம் ... ௩௬௮
ஆன்மாவிற்கும் சிவனுக்குமுள்ள சம்பந்தம் அநாதிதாதான்மியம் ௪௬௦
ஆன்மாவிற்கும் மலத்திற்கும் உள்ள சம்பந்தம் அநாதிசையோகம் ௪௬௦
ஆன்மா ஒன்றென்று வேதங்களில் கூறுவதின் கருத்து ... ௩௩௦
ஆன்மதத்துவம் போக்கிய காண்டம் ... ௨௦௨
ஆன்ம இலக்கணம் ... ௨௬௩
ஆன்மா, பதிபாசம் இரண்டனையும் அறியுமுகத்தால் தன்னையறியும் ௩௨௪
ஆன்மா இறைவனுக்குச் சூக்குமவடிவம் ... ௪௨௩
ஆன்மாவை அணுவென்பதின் கருத்து ... ௨௫௯
ஆன்மாவின் தடத்த இலக்கணம் ஐந்தவத்தை யுறுதல் ... ௨௪௪

விஷயம். பக்கம்.

ஆன்மா அநாதியே மலத்தில் மறைந்து நிற்குமென்பதைச் சாதித்தற்குக் கருவிகளைக்கூடி யறிதல் ஏதுவாகும் ... ௨௭௮

ஆன்மாவை விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென வகுத்தமைக்குக் காரணம் ... ௫௫௨

ஆன்மாசித்துப் பொருளாயினும் முதல்வனோடு சமமாகாது ... ௪௯௯

இ.

இந்திரியக்காட்சியி னிலக்கணம் ... ௨௦

இயல்பேது வென்பது சொற்களினிடத்துள்ள ஆற்றலும் வினையும் என இருவகைப்படும் ... ௨௯-௨௭

இருவினையொப்பு ... ௮௮

இலயமுதலிய பேதம் சத்தியிற் காணப்படுதலால் இறைவன் விகாரியாகான் ... ௧௨௪

இறைபணி நிற்றலின்முறை ... ௪௪௦

இறைபணி நிற்றலால் இந்திரியங்களின் வசமாய் நிற்கும் பரதந்திரம் ஒழியும். ஒழியவே இவனுக்குப் பிறர்செய்யும் இத மகிதங்களைத் தனக்குச் செய்ததாக இறைவன் ஏன்று கொள்வன் ... ௪௫௫

இறைபணி நிற்றலால் உண்டாம் ஆற்றல் ... ௪௪௫

இறைவன் எங்கும் விளங்கிக்கொண்டிருக்கவும் எல்லாரும் காணாமைக்குச் சூரியனும் அந்தகனும் உவமையாகும் ... ௪௯௨

இறைவனைப் பக்குவர் காண்பதற்குச் சூரியனும் தாமரையும் உவமையாகும் ... ௪௯௨

இறைவன் திருமேனி சத்தியேயாகும் ... ௯௯

இறைவன் திருமேனி சத்தியாதலின் அசிந்திதனே ... ௯௧

இறைவன், திருமேனி கொள்ளுதலாலுண்டாம் பயன் ... ௯௮

இறைவன் இலயபோக அதிகாரங்களால் துடக்குறுவானல்லன்... ௮௦

இறைவன் நிருவிகாரி என்பதற்குக் காந்தம் உவமையாகுமாதவின் மாநிழலுவமை பொருந்ாது ... ௪௯௭

இறைவன் றெழில் மறம், வீண், அன்னய மென்னும் குற்றங்களுள் படாது ... ௮௯

இறைவன் உயிருக்கு அறிவித்தலால் பந்தமடையான் ... ௫௦௦

இறைவன் நிராதாரமாய் நின்று தருதற்கு உவமை ... ௭௯

இறைவனுக்குத் தடத்தவடிவம் உருவும் அருவும் அருவுருவுமாம் ௮௯

இறைவன் முத்தொழில் செய்தலால் விகாரமுறான் ... ௮௨

விஷயம்.		பக்கம்.
இறைவன் அசிந்திதனென்பதற்குச் சுருதிவாக்கியம்	...	கOக
இறைவனுக்குப் பிரமன் முதலியோரும் பிரமன் முதலியோருக்கு இறைவனும் வேண்டப்படுதல் பற்றி ஒன்றை ஒன்று பற்றுதலென்னும் குற்றமாகாமை	...	ககச
இன்மையின்வகையும் உதாரணமும்	...	கரு

உ

உடம்பாட்டுச் சொல்லினிலக்கணம்	...	உஅ
உடம்பு, பூதவுடம்பு பூதசாரஉடம்பு யாதனுவுடம்பு என மூவகைப்படும். இவைமுறையே பூமிசுவர்க்கம் நரகங்களுக்குரியன		கசுஎ
உண்மைச் சமயமும் அதனிலக்கணமும்	...	௬௫௬
உபாங்கம்	...	கOO
உயிர் சிவசமமென்பதற்கு நீரோடு சேர்ந்த உப்பு உவமையாகும்		சசுஅ
உயிர்முதல்வினை நோக்கச் சடமென்பதன் கருத்து	...	சசுசு
உயிர் பருவமடைதலின் தன்மை	...	௬௫௧
உருவுண்டாயின் அருவும் அருவுருவு முண்டெனல்	...	கOஅ
உரையனுமானம்	...	உக
உலகம் அநாதியென்பதன் கருத்து	...	௫௫
உலகந்தோன்றி நின்றழிதலின் கடவுளுண்டு	...	சசு
உலகந்தோன்றி நின்றழியுமென்பதைச் சாதிக்குங் குறிப்பேது		சஎ
உவமைப்பிரமாணம்	...	கசு

எ.

எச்சமயத்தினின்று எத்தெய்வத்தை வழிபடினும் பலன்றருபவர் சிவபெருமானே யாவர்		க௫௬-க௫ச
எண்குணங்களிவையென்பதும், அவை சொரூப சிவனுக்கு இன்றியமையாது வேண்டப்படுமென்பதும்	...	சஉக
எண்குணங்களை அறுகுணங்களில் அடக்கிக் கூறுமுறை	...	கக
எதிர்மறைச் சொல்லினிலக்கணம்	...	உஅ
எழுவகை முத்தி	...	சசுக
என்னுடைய ஆன்மாவென்பதன் பொருள்	...	உஎச

ஏ

ஏகதேச மாதற்குக் காரணம் சிற்றுணர்வுஞ் சிறுசெயலும்	...	கஎ
ஏகனுய் நிற்றலால் யானென தென்னுஞ் செருக்கறும். அதனுல் இவன் செய்யு மிதமகிதங்களைத் தான் செய்ததாக இறைவன் என்றுகொள்வன்	...	ச௫உ
ஏது மூன்றின் பெயருமிலக்கணமும்	...	உசு

விஷயம்.	பக்கம்.
ஐ	
ஐந்து கோசம் ...	உசுஎ
ஐந்துகோசங்களினும் ஆன்மா நிற்கும் முறை ...	உசுகூ
ஐந்தொழில்களும் அருளே ...	அஎ
ஐதீகம் இன்னதென்பது ...	கசு
ஐயக்காட்சியினிலக்கணம் ...	ககூ
ஐவகை யாகம் ...	ஙஎஉ
ஐந்தெழுத்து இறைவனுக்குத்தூல வடிவம் ...	சஉங
ஐந்தொழிலுக்குச் சிவபெருமானே உரியன். சிவனுய் நிற்கு முயிர் உரிமையுடையதாகாது ...	சசுரு
ஐந்தொழிலுக்குஞ் சுதந்திரம் சிவபெருமானுக்கேயுண்டு. பிரமன் முதலியோருக்குச் சிவனருளால் செய்யும் உரிமையுண்டு ...	அச
ஐந்தொழில்களை மூன்று தொழில்களாக்கூறு முறை ...	அஅ
ஐந்தொழிலும், தூலம், சூக்குமம், அதிசூக்குமமென மூவகைப் படும் ...	உகூகூ
க.	
கரணங் கடத்தற்கு உபாயம் ...	ஙகூஅ
கருடபாவனை ...	சகஎ
கருதலனுமானம் ...	உகூ
கா.	
காட்சி முதலிய மூன்றினும் நிருவிகற்ப முதலிய நான்கும் சேருமாறு ...	ககூ
காட்சி நான்கு வகைப்படும் ...	உ0
காட்சியினிலக்கணம் ...	கஅ
காட்சியநுமானங்களில் அடங்கிடும் பொருளை ஆப்தவாக்கியங் கொண்டறியின் அது உரையளவை ஆகாது ...	கஅ
காட்டுமுபகாரம், அறிவித்தல்	சசஎ-சசு0
காணுமுபகாரம், அறிதல்	சசஎ-சசு0
காணுமுபகாரத்தில் அத்துவிதநிலை இனிதுவிளங்கும் ...	சசஅ
காமிகம் ...	ஙஙஅ
காரகமென்னும் தொழில் முதனிலை எட்டு வகைப்படும் ...	கருக
காரணம் ஒன்றாயும் சடமாயுமிருக்கும் ...	ருஅ

விஷயம்	பக்கம்.
காரண அவத்தை மூன்று வகைப்படும் ...	௨௮௭
காரியத்திற்கு மூன்று காரணம் இன்றியமையாது வேண்டப்படும் ...	௬௩
காரியம் பலவாயும் சடமாயுமிருக்கும் ...	௫௧

கி.

கிரியையினிலக்கணமும் பயனும் ...	௩௯௬

கு.

குருவே சிவாலயமும் சிவனடியாருமெனத் தேறி வழிபடல் வேண்டும் ...	௪௮௨
குளிகையினிடத்துப் பொன்னியல்பு உண்டு ...	௪௬௮
குறிப்புருவகம்	௧௨-௪௩௮

கே.

கேடுமுத்தி என்பதற்கு மலத்தின் கேடு முத்தி என்பது பொருள் ...	௪௬௮
கேட்டல் ஞானத்தினியல்பும் அநுபவமும் ...	௩௮௧
கேவலத்தில் சாக்கிர முதலிய ஐந்தவத்தை ...	௨௮௭
கேவலத்தில் உயிர்க்கு விருப்புவெறுப்புண்டு ...	௨௮௮

ச.

சகஜப்பிரமாணம் ...	௧௬
சகலத்தில் கீழாலவத்தை மத்தியாலவத்தை மேலாலவத்தை என மூன்றவத்தைகளுண்டு ...	௨௮௨
சகலத்தில் மத்தியாலவத்தையில் ஐந்தவத்தை உண்டு ...	௨௫௫
சஞ்சிதம் பக்குவமாகுமுறை ...	௧௪௧
சத்து மூவகைப்படும் ...	௩௦௭
சத்திநிபாதம் ...	௩௩௩
சத்தியின் சொரூபம் ஞானமே ...	௧௧௬
சத்தி இறைவனுக்கு அதிசூக்கும வடிவம் ...	௪௨௩
சத்தாதி தன்மாத்திரை வேறு சத்தாதி விடயம் வேறு ...	௧௯௯
சந்திரன் அருவுருவம் ...	௨௫௬
சமுத்திரகலச நயம் ...	௩௫௮
சமுதாயவாதம் ...	௭௨
சம்பவப் பிரமாணம் ...	௧௬

விஷயம்.		பக்கம்.
சரியையினிலக்கணமும் பயனும்	...	ருகூரு
சரீரம் ஐந்து	...	உகூகூ
சவிகற்பக் காட்சி	...	கக
சற்காரிய வாதத்தினியல்பு	...	கூ0
சா.		
சாக்கிர முதலிய ஐந்தவத்தை		உகூகூ-உகூஎ
சாங்கம்	...	க00
சாந்திராயண விரதம்	...	ருஎச
சாமு சித்தர்	...	கஉ
சி.		
சித்தாந்தமுத்தி சிவபெருமான் றிருவடியடைதல்	...	ருருரு
சித்தாந்தநெறி எடுத்த பிறவியிலேயே முத்தியைத்தரும்	...	ருகூக
சிந்தித்தல் ஞானத்தினியல்பும் அநுபவமும்	...	ருஅச
சிவகரணங்களால் அறியப்படுவது சிவனது தடத்தநிலை	...	ருகூஎ
சிவசமவாதம், உருவசிவசமவாதம், அருவசிவசமவாதமென இரு திறப்படும்	...	சருஉ
சிவதத்துவம் சிவனுக்குச் சுதந்திரவடிவம் என்பது உபசாரம்	...	கஉஉ
சிவதத்துவம் பிரேரக்காண்டமாய்ப் பிரேரிக்குமுறை		உ0உ-உ0ரு
சிவதத்துவங்களின் முற்பிற்பாட்டிற்குக் காலங்காரணமன்று, கலையித்திரி என்னும் சிவசத்தியே காரணம்	...	கட்ரு
சிவத்தின்பெயரே சிவதத்துவத்திற்குமாயிற்று	...	கஉக
சிவபெருமானே முத்தொழிற்கும் சுதந்திரமுடையவன்	...	அரு-அரு
சிவபெருமானை வழிபடுதற்குரிய இடங்கள்	...	கருஅ
சிவமாயும் சத்தியாயும் பதியாயும் நிற்கும் வேறுபாடு	...	கஉகூ
சிவரூப முதலிய நான்கும் நான்கு சூத்திரங்களிற் கூறப்பட்டமை		சகூகூ
சிவனடியார் சிவமேயாவர்	...	சஎஎ
சிவனருளானறியப்படுவது சிவனது சொரூபநிலை	...	ருகூஎ
சிவாநுபவமுடையார் சிவமேயன்றிப் பிறிதொன்றனையும் பாரார்		சரு0
சிவாலயத்தைச் சரியை முதலிய நான்கு நெறியில் நிற்போரும் வழிபடுமுறையும் அவர்க்குச் சிவன் வெளிப்பட்டு அருளு முறையும்	...	சஎஅ
சிவன் எங்கும் வியாபகமாய் நிற்பினும் உயிரினிடத்து விளங்கித்தோன்றுதலும் பாசத்தினிடத்து விளங்கித்தோன் றாமையுமாகிய வேற்றுமையுடையன்	...	ச00

விஷயம். பக்கம்.

சிவோகம் பாவனை செய்யுமுறை ... சகசு

சிறப்பியல்பு பொதுவியல்பினிலக்கணம் ... உக

சீ.

சீவன் முத்தன் சிவனடியாரிடத்து அன்புடையனுகவும் ஏனைய அறிவில்லாரிடத்து வெறுப்புடையனுகவும் இருக்க வேண்டும் ... சஎகூ

சீவன் இச்சாஞானக்கிரியை உடைமையால் சிவனேடு சமமாகான் ககக

சு.

சுத்தமாயை மலகன்மங்களோடு விரவாமை ... சுரு

சுருதி வாக்கியங்களை வலியுறுத்தும் புராணசரித்திரங்கள் ... க0க

சூ.

சூக்குமவாக்கினிலக்கணம் ... சுகூ

சூக்குமசித்து முத்திநிலையினிற்கும் ஆன்மா உசுச-கூஉரு

சூக்கும வுடம்பினின்று தூலவுடம்பு தோன்றும் ... கஎசு

சூக்குமதேகம் கன்மகாரணமாக வந்ததன்று; கேவலத்தி னின்று நீங்கி முத்தியடையும்வரை ஒன்றே ... கச0

சூசிகடாக நயம் ... உஉ

சே.

செபம் மூன்று வகைப்படும் ... கூஎச

செயப்படுபொருளும் வினைமுதலும் ஒன்ருமாறில்லை ... சகூ

ஞா.

ஞானம், கேட்டல் முதலியவாய் நால்வகைப்படும் ... கூஎச

ஞானத்தினிலக்கணமும் அதன் பயனும் ... கூஎ0

ஞான யாகம் ஐவகைப்படும் ... கூஎகூ

ஞானிசெய்யும் இதமகிதங்கள் இவனுக்குப் பிறர் செய்யுமீத மகிதங்கள் மீகுதிப்படுவதற்குத் துணைக்காரணமாய்ப் பொருந்தும் ... சகூகூ

ஞானி சித்தியை யெதிர்பார்ப்பதில்லை. ஞானியைச் சித்தி எதிர்பார்க்கும் ... சஅச

ஞானிக்குச் சரியை முதலிய நால்வகை வழிபாடுங் கூடும். ஏனையோர்க்குத் தன்னிலைக்கு மேம்பட்ட வழிபாடு கூடாது. ... சஅக

விஷயம். பக்கம்.

ஞானியே யாவர்க்குங் குருவாவன் ... சஅக
ஞானகாண்டமொன்றே தந்திரகலை, மந்திரகலை, உபதேச கலையென மூவகைப்படும் ... ௬௦
ஞானகுருவினருளாலன்றிச் சிவபெருமான் றிருவடியை யடைதல் கூடாது ... சஅ௬
ஞானகுருவினருளால் சித்திகளுங் கூடும் ... சஅச
ஞானகுருவை வழிபட்டார்க் குண்டாம் பயன் சிவமேயாதல் ... சஅ௫

த.

தத்துவங்களின் தோற்றம் ... கஅ௬-உ௦௦
தத்துவங்களொடுங்கு முறையும் ஒடுக்குங்கடவுளரும் ... உ௦௬
தத்துவங்கள் அகம் அகப்புறம் புறமென மூவகைப்படும் ... ககூச-ககூஅ
தத்துவமசி மகாவாக்கியப் பொருளினுண்மை ... சகஅ
தண்டித்தலுங் கருணையே யென்பதற்கு உவமை ... கச௫
தம்மையறியும் முறை ... உச௬
தருமுறையைத் தொகுத்துக் கூறுதல் ... ௬ச
தலைவனையறியுமுறை ... உச௬
தன்பொருட்டனுமானம் ... உச
தன்வேதனைக்காட்சியினிலக்கணம் ... உ௬

தா.

தாத்துவிகம் அறுபதும் அவற்றின் றோற்றமும் ... கக௬அ

தி.

திருவடியடைதலென்பதன் கருத்து ... ௬௫௫

தீ.

தீக்கையின் வேறுபாடு ... ௬௬௫-௬சக

து.

துடக்குறுதற்குக் காரணம் விருப்பு வெறுப்பு ... ௬எ

தூ.

தூலசித்து பெத்த நிலையினின்ற உயிர் ... உ௬ச-௬உ௫

தெ.

தெளிதல் ஞானத்தினியல்பும் அநுபவமும் ... ௬அ௫

விஷயம். பக்கம்.

தொ.

தொண்டின் வகையுமிலக்கணமும் ... ௪௧௭

ந.

நவந்தருபேதமும் அதற்குதாரணமும் ௨௦௯-௨௧௨

நி.

நிட்டை ஞானத்தினியல்பும் அநுபவமும் ... ௬௮௮

நிட்டையில் நிலைபெறுதார் நிலைத்தற்குச் செய்யும் உபாயம் ... ௬௯௨

நிட்டையுடையார் எத்தொழிலைச் செய்யினும் திருவடியை விட்டு நீங்கார் ௬௯௦-௬௯௧

நிட்டையுடையார் பெருமை ... ௬௯௫

நிருவிகற்பக்காட்சியினிலக்கணம் ... ௧௯

நிவிருத்தி முதலிய கலைகள் சத்திகலை சத்தியதிட்டிதகலையென இருவகைப்படும் ... ௬௪௮

நினைவுணர்வு சவிகற்பக்காட்சியாகாது ... ௧௯

நின்மல சாக்கிர முதலிய ஐந்துங் கூறப்பட்டமை ... ௪௬௯

ப.

பக்கமூன்றின் பெயருமிலக்கணமும் ... ௨௫

பசுஞானத்திற்குப் பசுவிளங்கித்தோன்றுதல் ... ௪௨௨

பசுஞானமாவது ஆன்மாகருவியின் வேறென்றறிதல் ... ௨௪௬

பசுஞானமாவது தற்போத முனைப்பால் நான் பிரமமென்றல் ... ௪௦௬

பஞ்சாக்கரத்தின் பொருளுஞ் செபிக்குமுறையும் ... ௪௨௧

பஞ்சீகரணம் ... ௧௯௭

பதிஞானமாவது எல்லாப் பொருளையு மொருசேர அறிதல் ... ௪௦௬

பதிஞானம் பிரபஞ்ச வைராக்கியத்தாலுண்டாம் ... ௪௧௬

பதிபசுபாச மூன்றுங்கடலாகிய ஆகாயமும் நீரும் உப்பும்போலும் ௬௨௪

பதிபசுபாச மூன்றும் சூரியனொளியுங் கண்ணொளியும் இருளும் போலும் ... ௬௨௬

பதியைப் பாசமறியாது ... ௬௨௨

பத்தவத்தை ... ௪௦௯

பரசரீரம், குணசரீரம் கஞ்சுகசரீரம் காரணசரீரமென மூவகைப்படும் ௨௬௫

பரமுத்தி, முதற்கண் உடம்புள்ளபோதே நிகழும் ... ௪௪௬

பரிணமத்தின் வகைகள் ... ௬௬

பலவாயுஞ் சித்தாயுமிருப்பது காரியமாகாது ... ௫௯

விஷயம். பக்கம்.

பா.

பாசஞானம் வேதசாத்திரங்களாலுங் கருவிகளாலும் ஆன்மாவினிடத்து நிகழுமறிவு ... ௪௦௬
பாசப்பற்றுடையார்பற்று விடுதற்குச் சிவனடியாரைச் சிவனென வழிபடல் வேண்டும் ... ௪௭௬
பாசஞானத்திற்குப் பாசம் விளங்கித்தோன்றுதல் ... ௪௨௨
பாசத்தைப் பதியறியாது ... ௩௨௨
பாசம் ஐந்தனையும் மூன்றிலடக்குமுறை ... ௨௨௭
பாசஞான பசுஞானங்கட்குத்தானே பிரகாசித்தலும் பிறிதொன்றைத் பிரகாசப்படுத்துதலுமில்லை ...௪௧௦-௪௧௧
பாடாண வாதஞானம் பசுஞானமே ... ௪௦௭
பாதிவிருத்தமும் தாயுமானசுவாமிகள் பாடலும் ... ௩௮௮
பாரிசேடப் பிரமாணம் ... ௧௬
பாவமுஞ் சிவபெருமானிடத்து அன்புகாரணமாகச் செய்யின் அறமாம் ... ௧௫௯

பி.

பிரத்தியங்கம் ... ௧௦௦
பிராகிருதர் ... ௧௨
பிராமாணிய மென்பதன்பொருள் ... ௨௧
பிராமாணிய மாகாமை ... ௨௧
பிராமாணியமும் பிறிதொன்றானறியப்படு மென்பர்தார்க்கிகர் ... ௨௨
பிராமாணிய மாகாமை பிறிதொன்றானறியப்படும். பிராமாணியமான அறிவைப் பிராமாணியமென அவ்வறிவே யறியும் ... ௨௨
பிரித்தறிய முடியாத நிலையில் ஒன்றாதலும் வேறாதலும் உடனுதலும் உளவாமாறு ... ௩௧௭
பிறர் பொருட்டனுமானம் ... ௨௪

பு.

புண்ணியங்களின் வேறுபாடு ... ௧௫௬
புண்ணியப்பலனைப் புசிப்பித்துத் தீர்த்தல் மல நிவிருத்தியின் பொருட்டு ... ௧௬௩
புறப்பூசை செய்யுமுறை ... ௪௨௫

பூ.

பூர்வக்காட்சி யனுமானம் ... ௨௯

விஷயம். பக்கம்.

பே.

பேதவாதஞானம் பசுஞானமே ... ௪௦௭
பேதாபேதம் ... ௨௫௦

பை.

பைசந்தி வாக்கினிலக்கணம் ... ௬௯

போ.

பொதுவியல்பி னிலக்கணம் ... ௨௧
பொருளினியல்பு பொதுச்சிறப்பென இரண்டு வகைப்படும் ... ௨௦

ம.

மங்கலவாழ்த்தில் நூற்பொருளும் இறைவனுடைய அறுவகைக் குணங்களுங்காட்டல் ... ௧௦
மத்திமை வாக்கினிலக்கணம் ... ௬௮
மரங்களினின்று முதிர்ந்த இலை முதலியன அம்மரத்திலொடுங்கித் தோன்றவேண்டுமென்பார்க்கு விடை ... ௬௦
மல கன்மநோயைத்தீர்க்கு மருந்து தூலசூக்கும வுடம்புகளும் இன்பத்துன்பங்களும் ௧௬௫-௧௮௯
மலம் முதிர்தல் ... ௯௫௧
மனமானது மனமென்றுஞ் சித்தமென்று மிருவகைப்படும் ... ௧௧௯

மா.

மாநுடப்பிறவியரிது. உத்தமநாட்டில் உத்தமசாதியிற் பிறத்தலதனினுமரிது. சைவசமயச் சார்பான பிறவியதனினுமரிது. சித்தாந்த சைவத்தைச்சார்ந்த பிறவி மிக அரிது ௨௨௮-௨௨௯
மாநுடப்பிறவியை இறைவன் தந்தது அவனை வழிபடுதற்பொருட்டு ... ௨௯௦
மாயை முதற்காரணமென்பது ... ௫௯
மாயையினிலக்கணம் ௧௮௪-௧௮௫
மாயையே மறைக்குமென்பாரை மறுத்தல் ... ௨௨௧
மானதக்காட்சியி னிலக்கணம் ... ௨௨

மு.

முதல்வனோடு குளிகையை யொப்பிடுவதன்றிப் பொன்னை யொப்பிடுதல் பொருந்தாது ... ௪௬௫
மும்மலங்களும் பந்தப்படுத்துமுறையில் வேற்றுமைப்படும் ... ௨௨௫

விஷயம். பக்கம்.

மும்மலங்களும் முளை தவிடு உமிப்போலும் ... ௨௨௪
முத்தியென்பதன் பொருளும் வகையும் ... ௪௪௯
முத்தியில் ஆணவமலம் அறவே நீங்கும். நீங்கினும் ஏனைப் பெத்தரிடத்திருத்தலால் நித்தத்திற்கிழுக்கில்லை ... ௪௫௭
முயற்சியானது பிராரத்த அநுபவத்திற்குத் துணையாயும் சஞ்சிதம் பக்குவமாதற்குத் துணையாயும் இருவகைப்பட நிகழும் ௧௪௧
முயற்சியின் பயன் முன் வினைப்பயனை யநுபவிக்கச் செய்தலும் மேல்வினைக்கு வித்தாதலுமாம் ... ௧௬௭
முயற்சி இறைவன் கட்டளை யாகும் ௧௫௧-௧
முயற்சியானது யான் செய்தேனென்னுங் கருத்து வகையால் மேல்வினைக்கு வித்தாகும் ...

மூ

மூலகன்மம், விருப்பு வெறுப்பு ...

யோ

யோகக்காட்சி யினிலக்கணம் ...
யோகத்தினிலக்கணமும் பயனும் ...

வ

வறுமையாலுண்டாஞ் சிறுமை நீங்குதற்குபாயம் ... ௨௬௪

வா

வாக்குக்களையின்றிச் சவிகற்ப அறிவு எவர்க்கும் நிகழாது ... ௭௪
வாக்கு நான்கும் பஞ்சகலையைச்சார்ந்து பஞ்சதத்துவத்திலிருக்கும் ... ௭௨
வாழ்விளைாகிய மையல் நீங்குதற்குபாயம் ௨௬௧-௨௬௪

வி

விகாரப்படுதற்குக்காரணம் பரதந்திரம் ... ௯௭
விநாயகரை மும்மதத்தனென்பதுபற்றிய சங்கையுத்தரங்கள்... ௮
விசிட்டாத்துவித மென்பதன் பொருள் ... ௪௧௯
விட்டுவிடாத இலக்கணை ... ௪௧௯
விவர்த்தனவாதம் ... ௭௨
விபரீதக்சாட்சியிலக்கணம் ... ௧௯

விஷயம். பக்கம்.

வித்தியாதத்துவம் போக்கிய காண்டம் ... ௨0௨

விளக்கொளி அவ்விளக்கின் சூக்குமவடிவமேயன்றிக் குண மன்று ... ௨௬0

வினையால்உடலும் உடலால் வினையும் ... ௯௩௯

வினைமூன்றினிலக்கணமும் உதாரணமும் ... ௧௪௩

வினையைக் கருணை காரணமாக இறைவன் என்று பயன்றருவன்... ௧௪௪

வினைகெட்டுப் பலன்றருமென்றல் கூடாது ... ௧௪௬

வினையானது செய்தவர் மனத்திற் கிடந்து பலன்றருமென்றல் பொருந்தாது ... ௧௪௯

ப்பலனை இறைவன் தருதல் கடமை ... ௧௫0

ப்பலனைக் கூட்டுவித்தல் இறைவன் கடமை யாதற்கு ஏது... ௧௫௧

வீ

றிற்குச் சிறந்த சாதனம் ஞானமே ... ௩௭௯

வே

ஆகம மெனப்படும் ... ௩0

பொது நூல் ... ௩௫௯

டாது கூறி வேண்டியது முடித்தல் ... ௪௨௮

வேதாகமம் முதனூல் ... ௩௫௭

வேதாந்தமுஞ் சிந்தாந்தமும் முப்பொருளுணர்த்தும் ... ௪௧௯

வை

வைசரி வாக்கினிலக்கணம் ... ௬௭

அருஞ்சொற்பொருளகராதி.

அ. — பக்கம்.

அசேதனம்-செயப்படுபொருள் ௪௯
அதிட்டானம்-நிலைக்களம் ௧௨௩
அதிட்டித்தல்-வாயிலாகக்கோடல் ௧௧௧
அநு-தொடர்ச்சி ௨௨௬
அநிருவசனம்-உறுதியாய்ச் சொல்லப்படாதது ௩௧௬
அந்நுவயம்-உடம்பாடு ௨௬
அமைதல்-வேண்டாமை ௪௨௧
அயர்வு-இளைப்பு ௮௧
அரு-சூக்குமம் ௭௫-௭௬
அருமை-இன்மை ௨௬௪
அன்று-அறிந்தபோது ௧௧௯
அன்றுதல்-மாறுபடுதல் ௯௪

ஆ.

ஆகம்-உடம்பு ௧௧௪
ஆகி-போல ௩௮௫
ஆதாரம்-அதிகரணம் ௮௫-௧௨௧
ஆதிசத்தி-திரோதானசத்தி ௧௧௨
ஆப்தன்-உண்மையுரைப்போன் ௩௦
ஆறுசென்றவியர்-வழிச்சேரலாலுண்டாம் வியர்வை ௨௩
ஆற்றுதல்-ஊக்குதல் ௧௯௭

இ.

இரந்தரம்-வெளி ௧௯௯
இருமை-இரண்டு ௧௨௪
இலேசு-சிறுபான்மையான விதி ௮௦
இழவு-வறுமை ௧௩௭
இன்று-இப்பெத்தகாலத்து ௧௮௧

உ.

உந்துதல்-பொருந்துதல் ௨௮௬
உபதேசகலை-ஞானகாண்டம் ௩௦
உயிரவை-உயிரோடுங் கூடியவுலகம் ௮௧
உய்த்திடும்-தோற்றுவிக்கும் ௧௪௬

ஏ.

ஏது-எதற்கு ௮௧

பக்கம்.

ஐயமில் பிராணவாயு-ஐயமில்லையாதற்கேது வாகிய பிராணவாயு ௬௭

ஓ.

ஓர்த்தல்-ஆராய்தல் ௯

க.

கதி-ஞானம் ௧௮௨
கண்-அறிவு ௮௦

கா.

காரகம்-தொழில் முதனிலை ௧௫௨ ௧௯௨-௩௯௪

ச.

சபக்கம்-திருட்டாந்தத்திற்கிடம் ௨௫
சயித்துரு-உண்டுபண்ணுதல் ௨௦
சவிகற்பம்-விகற்பத்தோடு கூடியது ௧௯

சா.

சாக்காடு-இழிவு ௯௩௭
சாதி-ஒன்றுபோலுள்ள பல பொருட்குப் பொதுவாயதோர் தன்மை ௨௨
சாமுசித்தர்-முற்சென்மத்தில் சாதனம் முற்றுப்பெற்றவர் ௧௨
சார்ந்தபோது-சார்தற்கேதுவாகிய காலம் ௧௮௯
சால-அமைதற்பொருட்டு ௧௮௯

சி.

சித்தம்-சித்திக்கப்பட்டது ௧௩௯
சிவகரணம்-சிவத்தின்வழிச் செல்லுங்கரணம் ௪௩௬

சீ.

சீர்-உவமஉருபு ௫௫
சீலம்-தன்மை ௭௯

சு.

சுதத்துவம்-தன்னாலறியப்படுவது ௨௨

செ.	பக்கம்.
செய்யாச்செயல்—செய்தற்கரிய செயல்	௩௯௨
ஜ.	
ஜம்-தோன்றுதல்	௧௦௩
த.	
தந்திரம்-ஆகமம்	௧௧௨
தந்திரகலை-கிரியாகாண்டம்	௩௦
தமம்-பலவற்றுளொன்றைக் குறிப்பது	௭௪
தரம்-இரண்டனுளொன்றைக் குறிப்பது	௭௪
தி.	
திரோதானகரி-திரோதானத்தைச் செய்வது	௨௨௭
து.	
துரை-மிகுதிப்பாடு	௧௬௩
ந.	
நன்மை-உபாயம்	௧௧௯
நி.	
நித்தியம்-நாடோறுஞ் செய்ய வேண்டிய கிரியை	௩௩௮
நிலைசெயல்-நிற்றல்	௮௦
நீ.	
நீர்மை-இயல்பு	௧௪௬
நை.	
நைமித்திகம்-கிரகணகால முதலிய விசேட காலங்களில் செய்யுங்கிரியை	௩௩௮
ப.	
பக்கம்-ஐயுற்றுத் துணியும் பொருளுக்கிடம்	௨௫
பங்கம்-சேறு	௧௦௧
படைப்புமூலம்-படைப்பாதி	௧௧௪
பயத்தல்-படைத்தல்	௧௧௪
பரத்துவம்-பிறிதொன்றா னறியப்படுவது	௨௨
பரிணமம்-ஒன்று பிறிதொன்றாய் மாறுதல்	௬௬
பரிக்கிரகம்-வைப்பு	௭௨

பா.	பக்கம்.
பாய்தல்-பரத்தல்	௧௦௪
பாவி-வரக்கடவது	௧௨௦
பி.	
பிணி-துன்பம்	௧௩௭
பிராகிருதர்-மூடர்	௧௨
பிரேரகம்-செலுத்துதல்	௨௦௩
பிரேரித்தல்-செலுத்துதல்	௧௧௧
பு.	
புத்திமற்காரியம்-புத்திமானது காரியம்	௬௩
புந்தி-சவிகற்ப வுணர்வு	௬௮
புரிதல்-விரும்புதல்	௩௮௫
புரைத்தல்-உயர்தல்	௮௪
பே.	
பேறு-செல்வம்	௧௩௭
பொ.	
பொய்-விபரீதம்	௬௭
ம.	
மந்திரகலை-உபாசனாகாண்டம்	௩௦
மூ.	
மூப்பு-உயர்வு	௧௩௭
மை.	
மை-மலம்	௪௨௧
வ.	
வன்னம்-படிக நிறம்	௧௨௫
வா.	
வாகு-அழகு	௨௪௧
வி.	
விபக்கம்-திருட்டாந்தமில்லாத இடம்	௨௫
விருத்தி-ஆடை கூடாரமாதல்	௭௨
வெ.	
வெதிரேகம்-எதிர்மறை	௨௬
வை.	
வைநைகர்-நித்த அநித்த வேறுபாடுணர்ந்து அநித்தத்தை வெறுத்து நித்தத்தை நாடும் வினையர்	௧௨

மத அகராதி.

அநேகேசுவரவாதம்.

சத்திபலவாதலின் சத்தனும் பலவாகும் ... ௧௧௫

ஆருகதம்.

அனந்தஞான முதலிய எண்குண மடைதல் முத்தி ... ௧௫௪

ஈசுவர அவிகாரவாதம்.

முதல்வன் விகாரமின்றி நிற்பப் பக்குவமுடைய வுயிர்தானே முதல்வனைக்கூடும் ... ௪௬௯

உலகாயதம்.

உலகம் நிலைத்திருத்தலேயன்றித் தோன்றுதலு மழிதலுமில்லை ௪௮

உலகத்திற்குத் தோன்றியழிதல் இயல்பு ... ௪௧

பூதங்களே செயப்படுபொருளும் கருத்தாவுமாகும் ... ௫௦

இன்பத்துன்பங்கள் இயல்பு; வினையின் பயனன்று ... ௧௯௫

இன்பத்துன்பங்களுக்குக் காரணம் முயற்சியேயாகும் ... ௧௯௬

உலகத் தோற்றத்திற்குப் பூதங்களே காரணம் ... ௧௮௫

இவ்வுலகத்தில் துன்பம் அனுபவித்தல் நரகம்; ஸ்நானபோஷன முதலிய சுகம் அனுபவித்தல் சுவர்க்கம்; பெண்களுடன் கூடி இன்பம் அனுபவித்தல் முத்தி. ... ௯௫௪

ஐக்கியவாதம்.

ஆன்மா முதல்வன் போல் வியாபகப்பொருள் ... ௨௬௧

ஆன்மா முதல்வன்போல் வியாபக அறிவுடையதாயினும் மாயா காரியத்தால் அவ்வறிவு தடைப்பட்டது ... ௧௬௨

ஆணவமலமென்பதொன்றில்லை ... ௧௬௯

நீரொடுநீர் சேர்ந்தாற்போல் முதல்வனுடன் ஒத்தொன்றாதல் முத்தி ௪௬௪

கவுளமதம்.

ஆன்மா அருவம் ... ௨௫௪

சத்தப் பிரமவாதம்.

வாக்குக்களாகிய நாதம் பிரமம் ... ௭௨

சமணம்.

உள்ளது மில்லது மானது தோன்றும் ... ௫௨
அணுக்களின் கூட்டமே உலகம் ... ௭௨
ஆன்மா உடம்பளவாக நிறைந்து நிற்கும் ... ௨௯௧

சாங்கியம்.

மாயையே தன் காரியத்தைத் தோற்றுவிக்கும். கருத்தாவேண்டாம் ௯௨
உலகத் தோற்றத்திற்குப் பிரகிருதியே காரணம் ... ௧௮௫
ஆன்மா அறிவுமாத்திரமாயிருக்கும் ... ௨௫௧
ஆன்ம சன்னிதியில் கரணங்கட்கு அறிவிச்சை செயல்களுண்டு ௨௫௧
ஆன்ம சன்னிதியில் காந்தத்தின் முன் இரும்புபோல் கரணந் தொழிற்படும் ... ௨௫௨
பிரகிருதி புருட விவேகத்தால் பிரகிருதி விகாரங்கட்கு அன்னிய மாதல் முத்தி ... ௩௫௪

சிவசங்கிராந்த வாதம்.

சிவகரணங்களால் சிவனையறிதல் கூடும் ... ௩௧௭

சிவசமவாதம்.

சீவனும் இச்சாஞானக் கிரியையுடையனுதலின் சிவசமமாகும் ௪௪௧
மலம்நீங்கிய உயிரினறிவால் சிவனை யறியக்கூடும் ... ௪௪௯
மலம் நீங்கிய நிலையில் சர்வஞ்ஞத்துவாதி குணங்கள் விளங்கப் பெற்றுச் சிவசமமா யிருத்தல் முத்தி (அருவசிவசமவாதம்) ௩௫௫
திவ்வியதேகத்தோடு சிவசமமாயிருத்தல்முத்தி (உருவசிவசமவாதம்) ௪௫௧
களிம்பு நீங்கப்பெற்ற செம்பு பொன்னுடன் ஒத்து ஒன்றுதல் போல மல நீங்கிய உயிர் சிவனோடு ஒத்து ஒன்றுகும் ... ௪௯௪

சிவபேதவாதம்.

இலயசிவம் போகசிவம் அதிகாரசிவமெனக் கூறப்படுதலின் சிவனொருவனே யென்றல் பொருந்ாது ... ௧௨௫

சிவாத்துவிதம்.

உலகத்திற்கு முதற்காரணம் சிற்சத்தி ... ௧௮௫

சுத்த சைவம்.

முத்திநிலையில் உயிர் அறிவிறந்து நிற்குமாதலின் சிவாநுபவங் கூடாது ...௪௯௫-௪௯௮

சௌத்திராந்திகம்.

ஒன்றன் கேட்டில் பிறிதொன்று தோன்றும் ... ௫௧
காரியந் தோன்றுங்கால் காரணங்கெடும் ... ௧௮௫
அணுக்களே உலகத்திற்கு முதற்காரணம் ... ௫௭

தார்க்கீகம்.

அணுக்களே உலகமாய்த்தோன்றி நின்றழியும் ... ௫௭
அணுக்களைக் காரியமென்றல் கூடாது ... ௫௮
உள்ளதுதோன்றுமென்றதனால் உலகம் அழிபொருளென்றல் பொருந்தாது ... ௬௧
அணுக்களின் கூட்டத்தால் இடையே உலகந்தோன்றியதென ஆரம்பவாதங்கூறுதல் ... ௭௨

நையாயிகம்.

காரணம் நித்தம் காரியம் அநித்தம் ... ௭௫

பரிணாமவாதம்.

பிரமப்பொருளே சீவனென வேறுபட்டுத்தோன்றும் ... ௨௫௦
முத்தியில் உயிர்கெட்டு ஒன்றாய்ப்போம் ... ௪௯௯

பாஞ்சராத்திரம்.

காத்தற்றொழில்விட்டுணுவுக்குச் சுதந்திரம் ... ௮௯
ஆன்மா பரமாணுரூபம் ... ௨௫௮
விட்டுணுவிற்குரிய திவ்விய தேகத்தைப்பெற்று விட்டுணுவைப்போல் எல்லாப்போகங்களும் உடைத்தாயிருத்தல் முத்தி ... ௯௫௫

பாதஞ்சலம்.

ஆன்மா அருவப்பொருள் ... ௨௫௯

பாடாண வாதசைவம்.

மூத்திநிலையில் சகசமான ஆணவமலம் நீங்குமாறில்லை ... சருரு

பேதவாத சைவம்

மலம்நீங்க மெய்ஞ்ஞானஞ்சார்தலே முத்தி; அதன்மேலுந் திருவடியடைதல் வேண்டாம் ... சருரு

பௌத்தம்.

பஞ்சகந்தங்கெடுதல் முத்தி ... ௱ருச

பௌராணிகம்.

சிருட்டி முதலிய முத்தொழிற்கும் பிரமன் முதலிய மூவருந் தனித்தனி சுதந்திரர் ... அ௱

ஆன்மா உருவப்பொருள் ... உரு௱

மாத்துமிகம்.

இல்லது முள்ளது மல்லாதது தோன்றும் ... ருக

மாயை சூனியப்பொருள் ... கஅரு

மாயாவாதம்.

பிரமத்தினிடத்தில் விவர்த்தனமாக உலகந்தோன்றும் ... எஉ

அருவமாகிய மாயையினின்று உருவந்தோன்றுது ... எசு

மாயை அநிருவசனப்பொருள் ... கஅரு

மாயை பிரமங்களை விசாரித்து மாயையை நீக்குதல்முத்தி ... ௱ருச

மிருதிநூலார்.

ஆன்மா இதயத்தானத்தில் மிகச் சிறியதாயிருக்கும் ... உசுக

மீமாம்சகம்.

உடலழியுமன்றி உலகமழியாது ... ரு௱

வேதத்தில் விதிவாக்கியமட்டும் பிரமாணமாகும். ஏனைய பிரமாணமாகா. உபசாரம் ... ருச

உலகம் ஒருசேர அழியாது ... ருரு

காலமே கடவுளாகும் ... ருசு

கன்மந்தானே பலன்றரும் இறைவன்வேண்டாம் ... கச௱

சுவர்க்க போகாநுபவமே முத்தி ... ௱ருச

வைசேடிகம்.

உலகத்திற்குக் காரணம் பரமாணு ... கஅரு

ஆன்மா சடப்பொருள் ... உருஎ

ஆன்மஞானத்தால் சுகதுக்கங்களும் அவற்றிற்கேதுவாகிய ஞானமும் நீங்கப்பாடாணம் போலறிவற்றிருத்தல் முத்தி ... ௱ருச

மேற்கோளகராதி.

பக்கம்.

இ

த்தினத்திரயம் ௬௫
லக்குடை நாயனர் ௪௧௮

காரைக்கர்லம்மையார்.

அறிவானுந்தானே ௪௬௧

சிவஞானபோதம்.

லத்துளதாம் ௪௬
தோற்றமும் ஈறும் உள்ளதன் ௪௮
இல்லா அருவாகி ௨௬௪
சொன்ன சிவன் ௪௧௩
உள்ளத்தைக் கண்டு ௪௪௮
அன்பரொடு மரீஇ ௪௭௯
அயரா அன்பின் ௪௭௯

சிவஞானயோகிகள் பிரபந்தம்.

செம்புறு களிம்பென ௧௭0

சிவப்பிரகாசம்.

அடைபவர் ௩௮௫
சிந்தைநினே ௧௯0

சிற்றம்பல நாடிகள்'

சுத்தக் கருவிகளைங் ௨௮௬

தாயுமானசுவாமிகள்.

சிவன் செயலாலே ௧௪௨
அடியெனுமதுவும் ௩௫௫
ஐந்து வகையாகின்ற ௩௮௭

திரிகடுகம்.

வாளைமீனுள்ள ௨௭

பக்கம்.

திருக்களிற்றுப்படியார்.

பாலை நெய்தல் ௩௯௭

திருக்குறள்.

அன்போடியைந்த ௧௨
குடிபொன்றி ௪௬
பெற்றத்தாற் ௫௪
அகரமுதல ௧௩௧
முயற்சி திருவினை ௧௩௭
உற்றவன்றீர்ப் ௧௮௩
அன்பிலாரெல் ௨௬௫, ௪௭௫
வாழ்க்கைவழி ௪௧௫
பற்றற்றே கண்ணே ௫௩௭

திருக்கோவையார்,

கொள்ளப்படாது ௪௬
ஷை ௪0௧
நாமரையாமத்து ௪0௧

திருவருட்பயன்.

இன்பிலினிதென்ற ௫௧௪

திருவாசகம்.

விச்சதின்றி ௧௪0
துரைமாண்ட ௧௬௩
கற்பனவுமினி ௪௨௧
ஆள்வாரிலி ௩௮௫
ஈறிலாப்பதங்கள் ௪௧௫
வேண்டத்தக்க ௪௩௯
பயந்து காத் ௪௪௫

திருவானைக்கா புராணம்.

இரண்டெனும் ௧௭0
வன்மலவேர் ௪௩௭

	பக்கம்.
துகளறுபோதம்.	
நீடுபராசத்தி	ககஎ
தேவாரம்.	
எக்கையாரவ	கூகூ
செல்வர் வாழ்தில்லை	உகூரு
மாட்டைத்தேடி	உகூரு
ஐயனேயரனே	உகூரு
காயமே கோயிலாக	சஉரு
உடம்பெனுமனை	சஉரு
அருந்துணையை	சஏக
தொல்காப்பியம்.	
காலமுலகம்	எ0
நோயுமின்பமும் (பொருளதி-பொருளியல் உ)	கூஅ
ஐயுங்கண்ணுமல்லா	ருச-உகூஏ
வினையே செய்வது	கருஉ
ஊசியொடு குயின்ற	கசகூ
மஃகான் புள்ளி	ககூஉ

	பக்.
நன்னூல்.	
வினைசார்பின	உ
முன்னோர்	கரு
நாலடியார்.	
உறற்பால	உகூச
பட்டினத்தடிகள்.	
இருவாதனையற்	கஎ0
பரபக்கம்.	
நூலுரைத்தானொரு	கஎ
பெரியபுராணம்.	
அன்றினர்புர	கூச
போற்றிப் பஃறொடை.	
நல்வினைக்கண்	கஎ0

பிழை திருத்தம்.

க்கம்.	வரி.	பிழை.		திருத்தம்.
௪	௧௩	மூன்று வகைகளும்	...	மூன்றுவமைகளும்.
௧௪	௧௯	மருளாலாம்	...	மருளெலாம்.
௧௭	௧௩	ஆகமும்	...	ஆகமமும்.
௪௧	௨௯	கூடிய	...	கூடி.
௫௦	௫	நாசம	...	நாசம்.
௫௬	௧௪	காலேசுவர வாதிகள்	...	காலேசுவரவாதிகள் கொள் கைபற்றி.
௬௬	௩௪	மூன்றின	...	மூன்றின்.
௬௭	௩௫	புதிந்	...	புந்தி.
௬௮	௨	எற்புளி	...	ஏற்புளி.
௭௨	௧௮	என்று	...	என்னு.
௭௫	௧௧	அபேதமாம்	...	அபேதமாகும்.
௯௨	௧௩	என்றது	...	என்பது.
௯௬	௩௪	உவமை	...	உம்மை.
௧௦௦	௨	கொள்ளப்படும்	...	கொள்ளப்படும்.
...	௨௧	உகு	...	உலகு.
௪௦௧	௫	உலகதி	...	உலகம்.
௧௦௧	௬	சுரும்	...	சுருதி.
...	௩௦	விளை	...	விளைவு.
...	௩௧	சிவனைத்தவே	...	சிவனைத்தேவ.
...	௩௨	வுன்	...	ரின்.
௪௦௨	௨௪	லதவு	...	லதுவு.
௧௦௬	௨௦	நடன	...	ஊன நடன.
...	௨௫	பாசநீங்கிய	...	பாசத்தை நீக்கும்.
௧௦௭	௧௫	வெதாகமம்	...	வேதாகமம்.
௧௦௮	௫	அசிந்தனன்றே	...	அசிந்த்ன்.
௧௧௧	௧௮	உத்தியாக	...	உத்தியோக.
௧௧௪	௭	மேண்டுவென்ருகுமே	...	வேண்டுமென்ருகுமே.
...	௨௨	அமைச்சர்	...	அமைச்சர்.
௧௩௧	௮	ஒரு பொருளைத்	...	ஒரு பொருளைச்.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.		திருத்தம்.
௧௪௨	௫	துண்ர்	...	துணர்.
௧௪௪	௧௨	கூடும	...	கூடும்.
௧௪௫	௮	செயவது	...	செய்வது.
௧௪௭	௨௭	பலத்தை	...	பலத்தை.
௧௬௪	௧௫	மருந்தும்	...	மருந்து.
௧௭௯	௨௨	வுடம்மை	...	வுடம்பை.
௧௮௧	௩	கொள்ளான்	...	கொள்ளாது.
௧௮௨	௨௮	கட்ப்படு	...	கட்படு.
௧௯௧	௮	சித்தத்தெளியதாய்	...	சித்தந்தெளியாதாய்.
௧௯௨	௧௧	ரப்படும்	...	றப்படும்.
௨௦௧	௧௬	விறைற்	...	விதனுற்.
௨௦௩	௧௫	துரு	...	திரு.
,,	...	சயித்துரு	...	சயித்திரு.
௨௧௨	௨௬	திகுமேணி	...	திருமேனி.
,,	௨௭	திவிமேனி	...	திருமேனி.
௨௪௦	௩	அறியுந	...	அறியுந்.
௨௪௭	௧௪	கருவியாக	...	கருவிகளாக.
,,	௧௩	இழுக்கப்படுதல்	...	இழுத்தல்.
௨௫௨	௧௬	முன்னுரும்	...	முன்னிரும்.
௨௫௨	௧௭	முன்னித	...	முன்னுத.
௨௭௧	௮	யிவை	...	விவை.
௨௯௧	௫	என்றதறகு	...	என்றதற்கு.
௩௦௪	௧௧	விரித்திடும்	...	விரிந்திடும்.
௩௦௮	௬	போலாம்,	...	போலாம்.
௩௫௪	௨௪	மேன்மை	...	மெய்மை.
௩௬௨	௧௭	அநுக்கிரகம்	...	அநுக்கிரகம்.
௩௭௧	௨௮	இடைப்பிறவா	...	இடைப்பிறவா.
௩௮௧	௧௪	ஞானம	...	ஞானம்.
௩௮௪	௧௮	ன்றி	...	லின்றி
௪௧௨	௧௭	ஞானம்	...	ஞானமும்.
௪௨௬	௨௨	வேற்றுமைய்	...	வேற்றுமையு.
௪௩௩	௩௨	துறைக்கப்ப்ட்டது	...	துரைக்கப்பட்ட
௪௬௬	௧௩	கண்ணெளியும்	...	கண்ணொளியும்.
௪௬௯	௧	க-ம் அதி.	...	உ-ம் அதி.
௪௭௭	௨௭	உதிக்தும்	...	உதித்தும்.
௪௭௯	௨௩	பற்றுவிட்டு	...	பற்றும்விட்டு.
௪௮௦	௨௨	வெளிபட்டு	...	வெளிப்பட்டு.